AR
901

பேரறிஞர் அண்ணாவின் பேருரைகள்

பதிப்பாசிரியர் : ம. நடராசன், M.A., MOIF.,

பேரறிஞர் அண்ணாவின் பேருரைகள்

தொகுதி - 4

பதிப்பாசிரியர் :

ம. நடராசன்

பல்லடம் மாணிக்கம்
தமிழ் நூல் காப்பகம்
திருமுதுகுன்றம்.

வெளியீடு :
தமிழ் அரசி பதிப்பகம்,
84, டி.டி.கே.சாலை,
ஆழ்வார் பேட்டை,
சென்னை - 600 018

பேரறிஞர் அண்ணாவின் பேருரைகள்

பதிப்பாசிரியர் : ம. நடராசன், எம்.ஏ.

முதற்பதிப்பு : ஆகஸ்டு, 2000

பக்கங்கள் : 272

விலை ரூ. : 175

அச்சுக்கோப்பு : மதர்போர்டு
சென்னை - 600 014.

Perarignar Annavin Peruraigal

Editor : M. Natarajan, M.A.

First Edition : August, 2000

Pages : 272

Price Rs. : 175

தமிழ் நூல் காப்பகம்
00950
தமிழ் நகர், விருத்தாசலம் - 606 001.

உள்ளடக்கம்

நான் தருகின்றேன் 1000 கோடிக்குத் திட்டம்	-	9
ஒட்டுமாஞ்செடி	-	30
இராஜ்யசபையில் அண்ணா	-	50
தேசீய ஒருமைப்பாடு	-	106
உணர்ச்சி வெள்ளம்	-	173
புன்னகை	-	217

என்னுரை

'தமிழுக்குத் தொண்டு செய்து சிறைக்குச் சென்றோன், தலைசிறந்த பேச்சு வல்லோன், தமிழ் வீரன், தமர் என்றும் தான் என்றும் நினைப்பதன்றித் தமிழ்நாட்டின் நலத்தினுக்கே உயிர் உடல்கள் அமைக என இரவு பகல் உழைக்கும் மேலோன்' என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுத்தும் பேச்சும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைத் தட்டியெழுப்பி ஒருசேர அணிதிரட்டின. தமிழ் மக்கள் தங்கள் நிலையுணர தந்தை பெரியார் வகுத்துத் தந்த பாதையில் பேரறிஞர் அண்ணா பீடுநடை போட்டார்.

இன்று இடதுசாரி இயக்கங்களில் ஈடுபட்டிருப்பவர் களில் பலர் தொடக்கக் காலத்தில் பேரறிஞர் அண்ணாவின் பேச்சாலும் எழுத்தாலும் கவரப்பட்டவர்கள்.

இருள் காட்டைக் கிழித்தெறிந்து பகலவன் உதித்தது போலத் தமிழ்நாட்டின் அறியாமை நீக்கியவர் பேரறிஞர் அண்ணா. தமிழ் மக்களின் மனங்களில் படிந்திருந்த அழுக்கைப் போக்கியவர் அண்ணா என்றார் திரு.வி.க. ஆண்டாண்டுக் காலமாய் அடிமைப்பட்டுக் கிடந்த தமிழ்மக்கள் விழிப்பெய்தி மொழி உணர்வும் இன உணர்வும் பெறச் செய்தவர். தமிழ் மக்களைப் பிணைத்திருந்த சாதி, மதம், மூடநம்பிக்கை, பெண்ணடிமைத்தனம் முதலிய விலங்குகளை உடைத்தெறிந்தவர்.

இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சிமொழி இந்தி என்று பறைசாற்றித் தமிழ்மொழி மீது ஆதிக்கம் செய்ய முற்பட்டதை எதிர்த்துத் 'தமிழ் நாட்டில் இந்திக்கு இடமில்லை' என்று சட்டமியற்றித் தமிழைக் காத்த பெருமை அறிஞர் அண்ணாவையே சேரும். சமஸ்கிருத மேலாண்மை எந்த வடிவத்திலும் தமிழரை ஆளுமை செய்துவிடக்கூடாது என்பதிலே கண்ணுங் கருத்துமாய் இருந்தவர்.

வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்பதை வெற்று முழக்கம் எனக் கருதிய காங்கிரஸ் ஆட்சியாளருக்கு எதிராக அறிஞர் அண்ணா அவர்கள் பல சான்றுகளை அடுக்கடுக்காய் எடுத்துக் கூறித் தம் கருத்தை நிலை நாட்டியவர். மொழி, இன உணர்வற்ற காங்கிரசுக்காரர்களை ஆட்சிக்கட்டிலிலிருந்து அகற்ற பேரறிஞர் அண்ணா தம் நாவன்மையால் எதிர்க்கட்சிகளை ஓரணி திரட்டி வெற்றி பெற்றார்.

பேரறிஞர் அண்ணாவின் பேச்சால் கவரப்பட்டவர் ஒருசாரார்; எழுத்தால் கவரப்பட்டவர் இன்னொரு சாரார்; கலைத் திறனால் கவரப்பட்டவர் பிறிதொரு சாரார்; மனித நேயத்தால் மதிப்புற்றோர் மற்றொரு சாரார்.

இவ்வாறு பேரறிஞர் அண்ணா பல்வேறு பரிமாணங் களைக் கொண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

இமயமலையின் நெற்றியிலே கொடி பொறித்த மூவேந்தர் பரம்பரை, இன்று கோழைகளாகவும் மோழைகளாகவும் வாழ்ந்து வருவதைக் கண்டு வருந்திய பேரறிஞர் அண்ணா தமிழ் மக்கள் உணர்வுபெற்றுக் காளைகளாகவும் களிறுக ளாகவும் வாழ வழிகாட்டினார்.

தமிழ் மக்களின் நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி அயராது பாடுபட்ட பெருந்தகையாளர்.

உருவந்தான் குள்ளம், பார்வையிலோ குறும்பு, கவலை யில்லாத் தோற்றம், நெற்றி விரிந்தது, மார்பு பரந்தது, பற்கள் கறைபடிந்தவை, நறுக்கப்பட்ட மீசை, நகை தவழும் முகம், சீவாத தலை, சிறிதளவு வெளிவந்த தொப்பை, இவர்தான் அண்ணா. இவரா இப்படி தமிழிலும் ஆங்கிலத்திலும் மக்கள் மனங்கவரும்படி உரை நிகழ்த்துகிறார் என்று வியப்புற்றனர்.

கிரேக்கம் டெமஸ்தனிசையும் இத்தாலி சிசரோவையும் இங்கிலாந்து எட்மன் பர்க்கையும் அமெரிக்கா இங்கர்சாலை யும் சிறந்த பேச்சாளர்களாக உலகுக்குத் தந்தன. அவ் வரிசையில் பேரறிஞர் அண்ணா நமக்கும் கிடைத்தார். தமிழகம் பெற்ற தவப்பயன் அது.

பேரறிஞர் அண்ணாவின் உரைகள் தமிழகத்தில் பெரும் கருத்துப் புரட்சியை உருவாக்கின. தமிழ்நாட்டின் மூலை

முடுக்கெல்லாம் சென்று சலியாது பேசினார். சட்டமன்றமும் நாடாளுமன்றமும் இவர் பேச்சைக் கேட்டு மலைத்தன.

பொதுக்கூட்டங்கள், மாநாடுகள், இலக்கிய மன்றங்கள் முதலியவற்றில் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரைகள் உரிமைப் பெட்டகங்கள், உணர்வூட்டும் நெருப்புத் துண்டங்கள்.

'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்'.

என்ற திருக்குறளுக்கு உரையெழுதிய புலவர் குழந்தை அவர்கள், அக்குறளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் பேரறிஞர் அண்ணா என்று சுட்டியுள்ளார்.

அண்ணா அவர்கள் சொல்வல்லராகவும், சோர்விலராகவும், அஞ்சா நெஞ்சராகவும் வாழ்ந்தவர். அடுக்கடுக்காய் இன்னல் வந்தபோதும் அயராது பாடுபட்டவர்.

அவரது தீர்க்கதரிசனம் இன்று மெய்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதற்கு ஓர் உதாரணத்தைச் சொல்லலாம்:

இந்தியா சுதந்திரம் பெற்று ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. சுதந்திர தினப் பொன்விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். ஆனாலும் மதத்தாலும், மொழியாலும், சாதியின் பேராலும் எங்கும் சண்டையும் சச்சரவும். இவை தவிர்க்கப்பட சுயநிர்ணய உரிமை வேண்டும் என்று அப்போது பேசப்பட்டது. ஆனால், அன்றைய ஆட்சியாளர்கள் இதனைக் கண்டுகொள்ளவில்லை. இதே சுயநிர்ணய உரிமையைப் பற்றி அண்ணா பேச ஆரம்பித்ததும் எழுந்த கூக்குரல் எண்ணிலடங்கா.

சுயநிர்ணய உரிமையைப் பற்றி அண்ணாவின் கருத்துக்களைப் பார்க்கும் முன் பிற கட்சிகள் கருத்து என்னவாக இருந்தது என்பதை பார்ப்போம்:

'இந்தியாவில் வாழும் பல்வேறு தேசிய இனங்கள் அவர்கள் விரும்பும் சுதந்திரத் தனியரசை நிறுவிக்கொள்ள தேவையான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் (மக்கள் யுத்தம் - Peoples war 9-8-1942) என்று கம்யூனிஸ்ட் கட்சியும்,

'காங்கிரஸ் தனித்தனி தேசிய இனங்களுடைய சுயநிர்ணய உரிமைகளை ஏற்றுக்கொண்டு விட்டது' (நேரு, 5-8-1945, ஸ்ரீநகர்) என்று காங்கிரஸ் கட்சி சார்பாக நேருவும்,

இதற்கெல்லாம் முன்பாக நீதிக் கட்சி 'பூரண மாகாண சுயாட்சி (1927) தமிழ்நாடு தமிழருக்கே (1939) திராவிட நாடு திராவிடருக்கே (1946) என்று வலியுறுத்தியும் பேசி - எழுதிய போது எழாத கூச்சல் -

அண்ணா அவர்கள் சுயநிர்ணய உரிமையைப் பற்றி பேசியதும் கம்யூனிஸ்ட்களும் காங்கிரசும் முறையே 1942லும், 1945லும் தாங்கள் என்ன பேசினோம் என்பதை மறந்து கூக்குரல் இட்டனர்.

இதற்கு அண்ணா அளித்த பதில்: "நான் திராவிடவழி வந்தவன்; என்னைத் திராவிடன் என்று கூறிக்கொள்வதில் பெருமைப் படுகிறேன். இவ்வாறு கூறிக்கொள்வதால் இந்தியாவின் பிற இனத்தவர்களுக்கு எதிராக இருப்பவன் எனப் பொருள் படாது. நாங்கள் விழைவது அனைத்தும் சுயநிர்யண உரிமையேயாகும். திராவிட இனவழி வந்த எங்களுக்குச் சுயநிர்ணய உரிமை வேண்டும்" என்று கூறியதுடன், —

இதே பிரச்னை பற்றி மாநிலங்களவையில் பேசும்போது, "இந்திய பாதுகாப்புச் சட்டம் ஒரு நாட்டு மக்களுடைய இதயங்களுக்கு காவலாக இருக்க முடியாது; ஒரு நாட்டு மக்களுக்கு சிறைக்காவலனாக மட்டுமே இருக்க முடியும். **மனம் வெதும்பிய அதிருப்தி நிலை மறைவிடம் செல்லும். அதனை எந்த சட்ட முயற்சியும் ஒன்றும் செய்துவிட முடியாது.** பல லட்சக்கணக்கான மக்களின் மனதிலே கிடக்கும் அதிருப்தியைத் தாக்கி ஒழிக்கும் முறையை, அரசியல் தத்துவ முறை இன்னும் கண்டுபிடிக்கவில்லை. இந்த சட்ட முயற்சியினால் உண்மை, உண்மையான மனம் வெதும்பும் அதிருப்தியை நீங்கள் மறைவிடத்துக்கு துரத்துகிறீர்கள். உங்களிடம் அதிகாரம் இருக்கிறது செய்து கொள்ளுங்கள். ஆனால் சட்டத்தின் மூலம் அடக்குமுறை நடத்தி வலிவும் ஆதிக்கமும் தேடிக்கொண்ட எந்த சர்க்காரும் எங்கு சென்றன? விளைவு என்ன? என்பதை நினைவில் கொள்ளுங்கள்" என்று எடுத்து வைத்த வாதம் மாநில சுயநிர்ணய உரிமைக்கு மட்டுமல்ல; எல்லா நிகழ்வுகளுக்கும் இன்றும் - என்றும் பொருந்துவனவாக அமைந்துள்ளதே இது அண்ணாவின் தீர்க்க தரிசனம் அன்றி வேறென்ன?

இந்நூலில் இடம்பெற்ற பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரைகள் குடியரசு, விடுதலை, திராவிட நாடு, மாலைமணி (டி.எம்.பார்த்தசாரதி), நம்நாடு முதலிய இதழ்களில் வெளி வந்துள்ளன.

அண்ணாவின் உரைகள் அடங்கிய இத்தொகுப்பு நம்நாடு, திராவிட நாடு ஆகிய இதழ்களிலிருந்து எடுத்துத் தொகுக்கப் பெற்றுள்ளன. அவை முறையே அரசியல் - பகுதி *1*, பகுதி *2*, கலை இலக்கியம், சமூகம் என்று மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளன.

வரலாற்று ஆவணங்களாக விளங்கும் பேரறிஞர் அண்ணாவின் உரைகள் முழுமையும் தொகுக்கப்பெற்று நூல் வடிவம் பெறவேண்டும். அதன் முன்னோடியாக இத்தொகுப்பு இப்போது வெளிவந்துள்ளது. இம்முயற்சி மேலும் தொடர வேண்டும் என்பது என் அவா.

இந்தத் தொகுப்புப் பணிக்கு உறுதுணையாக அமைந்த என் இனிய நண்பர் திரு. தனபால், திரு. தமிழரசன் ஆகியோருக்கு என் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது
என்பது அன்றைய மொழி!
அரிது அரிது அண்ணாவாய்ப் பிறத்தல் அரிது
என்பது இன்றைய மொழி!

— ம. நடராசன்

தமிழ் நூல் காப்பகம்
தமிழ் நகர், விருத்தாசலம் - 606 001.

நான் தருகின்றேன் 1000 கோடிக்குத் திட்டம்

திட்டக் குழுவில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கும் பொருட்டு அனைத்துக் கட்சிகளுக்கும் ஆளும் கட்சியினர் அன்பழைப்பு விடுத்திருப்பதானது வரவேற்கத்தக்க ஒன்றாகும். அன்பழைப்புக்குப் பின்னால் பொதிந்து கிடக்கும் நோக்கம் உள்ளபடியே பாராட்டப்பட வேண்டியதாகும். எந்தக் கட்சியினராக இருந்தாலும் அந்த நோக்கத்தினைப் புறக்கணிக்க முடியாது.

இன்றைய அரசியல் அமைப்பில் திட்டம் என்பதானது பெருமளவுக்கானதோர் முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது. திட்டத்தின் அளவு பெரிதாக பெரிதாக, நம்முடைய நம்பிக்கைகள் வளர்ந்து கொண்டே போவதானது இயற்கையானதாகும். எனவே திட்டத்தினைத் தொடர்ந்து மதிப்பிட்டுப் பார்க்கவேண்டியது இன்றியமையாததாகிறது. கூடுமான வரையில் கட்டுப்பாடுகளை ஓரளவு தளர்த்திக் கொள்ள வேண்டும். பல்வேறுபட்ட நிலையிலும், புதிய உருவம் தரக்கூடிய மாதிரியாகவும், கூடுதலான ஏற்பாடுகள் செய்யக்கூடிய முறையிலும், திருத்தி அமைக்கக்கூடிய வகையிலும் நகல் திட்டத்தின் அமைப்பு இருக்கவேண்டும்.

இத்துறையில், ஆளும் கட்சியினருடன் ஒத்துழைப்பு என்பதானது திட்டங்களை உருவாக்கவும், அதனை நிறைவேற்றவும் சுறுசுறுப்பான முறையிலும், அனுதாபத்துடனும் இருக்கும் என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முதற்கண் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே என்னுடைய கட்சி மனப்பூர்வமான ஒத்துழைப்பினை அளிக்க முன்வருகிறது.

பல்வேறுபட்ட அரசியல் கட்சிகளின் அடிப்படைக் கொள்கைகளில் மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன என்பதை இத்தருணத்தில் நாம் நினைவில் கொள்ளவேண்டும். என்றாலும், குறிப்பிடத்தக்க அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் நாங்கள் அரசியல் கட்சியினரால் உருவாக்கப்பட்டி ருக்கும் திட்டத்தின் வரையளவுக்குட்பட்ட விதத்தில்தான் எங்களுடைய ஆலோசனைகளை எடுத்துக்கூறுவதாக இருக்க முடியும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், ஆளும் கட்சியினரால் கையாளப்பட்டுவரும் பொருளாதாரக் கொள்கையானது ஒரு கலப்படமான பொருளாதாரத் திட்டம் என்றுதான் கூறவேண்டும். மேலும் இத்திட்டத்தின் அடிப்படையாக அமைந்துள்ள அரசியல் - பொருளாதாரத் தத்துவத்தைக் கூறுவதென்றால் "சோஷலிச மாதிரி" என்று தான் சொல்ல வேண்டும். தி.மு.கழகம் குழப்பமற்ற, ஒரு திட்டவட்டமான தத்துவார்த்தத்தையே விரும்புகிறது.

அரசியல், பொருளாதார, சமூகக் கொள்கைகளைத் திருத்தியமைக்கவோ, கலந்துரையாடவோ திட்டக்குழுவின் அமைப்பு முறையில் வழிவகைகள் இல்லாத நிலையில்தான் இருக்கிறது.

நாங்கள் செய்யக் கூடியதெல்லாம் அதிகமான அளவில் நன்மைகளைப் பெறவும், சுமுகமான முறையில் திட்டங்கள் நிறைவேற்றுவதற்கான முறையிலும் உதவியாகத்தான் இருக்க முடியும். ஆனால் திட்டக்குழுவின் நிர்வாக இயந்திரம் முற்றிலும் ஆளுங்கட்சியினரால் உருவாக்கப்பட்டதேயாகும்.

எனவே தி.மு.கழகத்தினர் வழங்க இருக்கும் ஆலோசனைகள், குறிப்பிடும் குறைபாடுகள் அல்லது ஏனைய கட்சியினரால் வழங்கப்படும் ஆலோசனைகள் அனைத்தும் ஆளும் கட்சியினர் கடைப்பிடித்துவரும் கலப்படமான பொருளாதாரத் திட்டத்தால் அதனுடைய உண்மையான தத்துவார்த்தங்களைப் புரிந்து கொள்ள முடியாத நிலை இயற்கையாகவே அமைந்து கிடக்கிறது. மக்களின் எதிர்காலம், அவர்களின் முன்னேற்றம் ஆகியவைகளை உருவாக்க திட்டம் இன்றியமையாத ஒரு தேவை என்ற ஒரு உணர்வுதான் பொதுவான ஒரு அடிப்படையாக அமைந்திருக்கிறது.

மாநிலத்தின் திட்டங்கள் அனைத்தும் உயிரோட்டம் அற்ற முறையில் அனைத்தும் இருக்கிறது என்பதனைத் திட்டம் ஒன்றினை உருவாக்க முயற்சிப்பவர்கள் உணரத் தவறிவிட்டனர் என்ற

கருத்தினை மறந்துவிடுவதற்கில்லை. அதனால் கிடைக்கக்கூடிய ஒரு சில பலனும் மத்திய அமைச்சரவையினரால் உருவாக்கப்பட்டுள்ள திட்டக்குழுவின் மூலமாகத்தான் பெறமுடிகிறது.

மாநிலத்தின் முயற்சி ஓரளவிற்கு உண்டு என்ற உண்மை ஒருபுறம் இருந்தாலும் பெரிய அளவிற்கான திட்டங்கள் தீட்டும் அதிகாரம் அனைத்தும் மத்திய ஆட்சியாளரிடத்தில்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட திட்டங்களை ஏற்று நிறைவேற்றுவதற்கு மத்திய சர்க்காரைத் தூண்டுவதற்கு மாநில ஆட்சியினருக்கு வசதியாக இருக்கிறது.

எனவே, மாநிலத் திட்டங்களானது, அதன் போக்கிலேயே முக்கியத்துவம் பெற்றதோர் நிர்வாக அமைப்பினைக் கொண்டதாகவே இருக்கிறது.

நிறைவேற்றப்பட்ட இரண்டு திட்டங்களிலும் பெரும் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட ஆளுங்கட்சி மூன்றாவது திட்டத்தையும் நிறைவேற்றக்கூடிய பேராற்றல் தமக்கிருப்பதாக நம்பிக்கொண்டிருப்பது இயற்கையின் பாற்பட்டதாகும். மேலும் அதன் மூலம் உருவாக்கப்பட்ட பலன்கள் அனைத்தும் அனைவராலும் விரும்பி ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையில் அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இரண்டு திட்டங்களும் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை என்ற பேருண்மையை ஏனைய அரசியல் கட்சிகள் மறந்துவிடக் கூடாது. மறந்துவிடுவதற்கும் இல்லை. குறைபாடுகளை நாம் உணரும்போது, நம்முடைய முயற்சிகளைச் சரிப்படுத்திக் கொள்ள மேலே கூறிய உண்மைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று ஆளுங்கட்சியினரை வற்புறுத்தவேண்டிய அவசியத்தில் நாம் இருக்கிறோம்.

மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் தேசிய வருமானத்தை உயர்த்துவதே முடியுந்தருவாயில் உள்ள இரண்டாவது திட்டத்தின் முதலாவதான தலையாய அடிப்படை நோக்கம் என்று கூறப்பட்டது.

இந்த நோக்கம் தவறுடையது என்று யாரும் கூறுவதற் கில்லை. ஆனால் புதியதோர் திட்டத்தைச் செயல்படுத்த முற்படும்போது, நடைமுறையில் ஏற்கெனவே உருவான உருப்படியான பலனை நாம் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். வாழ்க்கைத் தரத்தில் நாம் முன்னேற்றம் கண்டுள்ளோமா?

தேசிய வருமானம், தனி நபர் வருவாய் ஆகியவை உயர்ந்திருக்கிறது என்பது உண்மையே. ஆனால் வாழ்க்கைச்

செலவினங்கள் அதிகப்பட்டுவிட்டதினால், தனிநபர் வருமானத்தின் மூலம் ஏற்பட்ட பலன் முற்றிலும் பயனற்றுப் போய்விட்டது.

இந்தப் பேருண்மையைக் கருத்தில்கொண்டு, மூன்றாவது திட்டத்தை உருவாக்கும் தருணத்திலும், அதனுடைய நடைமுறைக் காலத்திலும், விலைவாசி உயர்வுகளைக் கட்டுப்படுத்தி மக்கள் வாழ்க்கைத் தரத்தைச் சீர்செய்யக்கூடிய வகையில் இணைந்திருக்க வேண்டும்.

பணவீக்கம், பற்றாக்குறை நிதி நிலை ஆகிய இரண்டும் ஆபத்தான கட்டங்கள் என்று பொருளாதார மேதைகள் சுட்டிக்காட்டி இருக்கின்றனர். அந்நியச் செலாவணிப் பிரச்சினை மிகவும் தொல்லைகளுக்கிடையே ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

ஆனால், இவைகளைக் கட்டுப்படுத்தவோ, திருத்தியமைக்க வோ நம்முடைய வரையளவுக்கு அப்பாற்பட்ட மத்திய அரசின் கடமை.

அவ்வப்போது ஏற்படக்கூடிய அதிர்ச்சிகள், நன்மை, தீமை ஆகியவைகளை மட்டும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படலாம்.

எனவேதான், மாநிலத் திட்டத்திற்கான அளவினங்கள், அமைப்பு முறைகள் இன்னபிற அனைத்தும் உருவாக்கக்கூடிய அடிப்படை அதிகாரத்தை மத்திய அரசு பெற்றிருக்கிறது.

அடிப்படைத் தொழிற்சாலைகள், கனரகத் தொழிற்சாலைகள் இரண்டும் முக்கியத்துவம் பெற்றதோர் தீவிரமான தொழில் வளர்ச்சித் திட்டத்தின் இரண்டாவது நோக்கமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

அடிப்படைத் தொழிற்சாலைகளும், கனரக தொழில்களும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. ஏனெனில் அவைகள்தான் பொருளாரச் சீரமைப்புக்கு பல்வேறு துணைத் தொழில்கள் தோன்றுவதற்கு மூலகாரணமாய் அமைந்திருக்கிறது.

இதுகுறித்து கடந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டு வந்திருக்கிறது. மிகப் பிரமாண்ட மானவை என்று பண்டித நேருவால் வர்ணிக்கப்படும் அனைத்தும், ஏனைய மாநிலங்களைப் புறக்கணிக்கும் வகையில் ஒரு குறிப்பிட்ட பகுதியிலேயே உருவாக்கப்பட்டிருக்கிறது.

பெரிய தொழிற்சாலைகள் என்ற பட்டியலின் வரிசையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது மாநிலத்திற்கு ரூ. 76 லட்சம் தான் ஒதுக்கப்பட்டது.

மத்திய சர்க்கார் நிர்வாகத்தின் கீழ் ஐம்பது கோடி ரூபாயில் நெய்வேலித் திட்டம் இருக்கிறது என்று கூறி புகலிடம் தேடிக் கொள்வதோடு அத்துடன் மன நிறைவு கொள்கிறோம்.

ஆனால் பல்வேறு அரசியல் கட்சிகள் வற்புறுத்தியும் கூட அடிப்படை தொழில்களுக்கும், கனரகத் தொழிற்சாலைகளுக்கும் வேண்டிய தேவையான பொருள்கள் இன்றுவரை பயன்படுத்தப் படாமலேயே இருக்கிறது.

எனவே இந்த மாநிலத்தில் அடிப்படை, கனரகத் தொழிற்சாலைகள் வளருவதற்கான முறையில் சுறுசுறுப்பாக கவனம் செலுத்துவதோடு கருணையும் காட்டி போதுமான நிதி ஒதுக்கவேண்டும்.

பல்வேறு மாநிலத்திலும் தொழிற் வளர்ச்சியில் காட்டப்பட்டு வந்த பேதம் மக்கள் மத்தியில் கசப்புணர்ச்சியை வளர்த்து விட்டிருக்கிறது என்பது தற்போது நன்கு உணரப்பட்டு வருகிறது. ஏற்றத் தாழ்வுகளை சரி செய்யும் பொருட்டு கட்சிகளின் கோரிக்கைகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டுவிட்டன.

எனவே இந்த மாநிலம் உறுதியான உள்ளத்துடனும், திடமான முயற்சியுடனும் தங்களது பலமான கோரிக்கையை மத்திய சர்க்காருக்கு முன்வைக்க வேண்டும்.

நாட்டின் சரிசமமான வளர்ச்சியை உணர்ந்து அவைகளுக்கு உறுதியளிக்கும் முறையில் முயற்சி எடுத்துக் கொள்கின்ற தன்மையில், தொழிற்சாலைகள் முறையான வகையில் பகிர்ந்தளிக்கவேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

தொழில் வளர்ச்சிக் குறைவுக்கு நிலக்கரி பற்றாக்குறை என்று காரணம் காட்டப்படுகிறது. இந்த வாதத்திற்கு ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை.

தீர்க்க தரிசனத்தோடு துணிவான முறையில் திட்டமிடுவார் களானால் இயற்கைச் செல்வங்களைத் தேடிப் பிடிப்பதோடல் லாமல் இயற்கைச் சக்திகளையும் வென்று தன் வயப்படுத்தி ஆக்க வேலைகளுக்கும் பயன்படுத்தி மிகுந்த பலனைக் காணலாம்.

இயற்கை வளங்கள் குறைந்து காணப்படும் நாடுகள் அனைத்தும் வியக்கத்தக்க முறையில் தொழில் மயமாக்கப் பட்டிருக்கிறது. ஜப்பான் நாடு அதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

புனரமைப்பிற்கான அனைத்துத் துறையிலும் நாட்டங் கொண்டு முயற்சி எடுக்கப்பட்டு வரும்போது துவக்கத்திற்கான சில

வசதிக் குறைவுகளைச் சுட்டிக்காட்டுவதானது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

"தேசியக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்போனால் அந்தந்தப் பகுதியிலிருந்து கிடைக்கக்கூடிய இயற்கை வளங்களைக் கொண்டு கூடுமானவரையில் அபிவிருத்தி காணுவதே திட்டத்தின் பலன் தரக்கூடிய நோக்கமாக இருக்கவேண்டும்."

"தேசிய திட்டக் குழுவினர் இந்த முறையில் விஞ்ஞான ரீதியில் தொழில்களைப் பரவலாகத் திட்டமிட்டு நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் உற்பத்திப் பொருள்களை உண்டாக்கக்கூடிய தொழில்களை ஒழுங்கான முறையில் நடத்திச் செல்லவேண்டும். எந்தப் பகுதியிலும் கிடைக்கக்கூடிய வளங்கள் அபிவிருத்தி யடையாத நிலை ஏற்படக் கூடாது."

"இதன் மூலமாக வசதிகள் கொண்ட ஒவ்வொரு பகுதியிலும் உள்ளூரில் உள்ள தொழிலாளர்களுக்கும் தேவையான வேலை வாய்ப்புத் தேடித் தரமுடியும். உள்நாட்டு வளர்ச்சிக்குத் தேவைப்படும் பணிகளுக்கு அந்தந்தப் பகுதியில் உள்ள தொழி லாளர் வர்க்கம் முதல் உரிமை பெற்றவர்களாக இருக்கின்றனர்.

உள்நாட்டில் கிடைக்கக்கூடிய வளங்கள், உள் நாட்டுத் தேவைகள், உள்நாட்டு வாய்ப்புகள் ஆகியவைகளைக் கூர்ந்து கவனித்துப் பார்த்துத் தக்கமுறையில் துரிதமாகப் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் நிர்வாக இயந்திரம் உருப்படியான வகையில் செயல்படுமானால் எந்த மாநிலம் அல்லது ராஜ்யம் அல்லது பிராந்தியம் பற்றாக்குறையானது என்றும் எந்த மாநிலம் மிதமிஞ்சியது என்றும் நிர்வாக அதிகாரிகள் திட்டவட்டமாக நிர்ணயிக்க ஏதுவாக இருக்கும்."

"அப்படி நிர்ணயிக்கப்பட்ட பின்னர் பொது நிதியிலிருந்து பற்றாக்குறைப் பகுதிகளைச் சரிசெய்ய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். அல்லது மிதமிஞ்சிய பகுதிகளில் இருந்து கிடைக்கக்கூடிய இலாபத்தை ஒவ்வொரு துறையிலும் பொதுவான நன்மையை உத்தேசித்து பயன்படுத்தப்பட வேண்டும்" என்று பேராசிரியர் கேடிஷா. சுட்டிக்காட்டியிருக்கிறார்.

மேற்கண்ட ஆலோசனை நடைமுறைக்கு ஏற்றுக்கொள்ளப் படுமானால், தொழில்துறையில் முன்னோடியாக உள்ள மாநிலங்கள் பொது நிதியிலிருந்து அதிகத் தொகை பெறுவதைக் காட்டிலும், தொழில் துறையில் மிகவும் பின்தங்கியுள்ள இந்த மாநிலம் பொதுநிதியிலிருந்து அதிகத் தொகை பெறுவதற்கு உரிமை கொண்டதாக இருக்கும்.

எனவே, பொதுத்துறையில் சேலம் உருக்கு, அலுமினியத் தொழிற்சாலைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

இதனைச் சார்ந்த வேறு பல தொழிற்சாலைகள் தொடங்குவதற்கும் போதுமான வாய்ப்புகள் இருக்கின்றன.

உதாரணத்திற்கு, கிடைக்கக்கூடிய கணிசமான மாங்கனீஸ் தாதுப்பொருளை ஏற்றுமதி செய்வதைக் காட்டிலும் அதனை ஏன் பயன்படுத்தக்கூடாது என்பதில் நம்முடைய கவனத்தை அதிகம் செலுத்தலாம்.

திட்டமிடப்பட்டுள்ள சேலம் உருக்குத் தொழிற்சாலை, ஏனைய மாநிலங்களில் முழு அளவில் இயங்கிவரும் உருக்குத் தொழிற்சாலைகளின் மாதிரி சிறிய அளவினதாகவே இருக்கும் என்ற எண்ணம் பலருடைய உள்ளத்தில் இருக்கிறது. இந்த எண்ணத்தைப் போக்கி, வேறு பல தொழில்களுக்குத் தேவையான இரும்பு உற்பத்தியை உற்பத்தி செய்ய முடியும் என்ற எண்ணத்தை உள்ளத்தில் கொண்டு மாநில சர்க்கார் பெரிய அளவில் திட்டம் தீட்டவேண்டும்.

சேலம் உருக்கைப் பயன்படுத்தி பொருள்களைக் கொண்டு செல்லும் இரயில்வே பெட்டிகளைத் தயாரிக்க முடியும்.

எண்ணெய் வாய்ப்புக்கான ஆராய்ச்சிகளும் காவேரிப் படுகையில் நடத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இதுபோன்ற திட்டங்கள் நிறைவேற காலதாமதமாகும் என்றாலும் மனப்பூர்வமான துவக்க வேலைகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் இந்த மாநிலத்தில் விரிவானதோர் நிலவள ஆராய்ச்சியும் போதுமான அளவில் மேற்கொள்ள வேண்டும்.

போக்குவரத்துத் துரிதமாக முன்னேறியிருப்பதால், மோட்டார் சாதனங்களுக்குப் பாடிகட்டும் தொழிற்சாலைகள் இந்த மாநிலத்தில் குறைந்தது ஆறு இடங்களிலாவது மேற்கொள்ளலாம்.

இந்த மாநிலத்தில் கால்நடைகளில் இருந்து கிடைக்கும் துணைப் பொருள்களிலிருந்து உருவாக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலைகள் அதாவது இறைச்சி தோல். தோல் சாமான்கள், ரோமங்களிலிருந்து தயாரிக்கப்படும் பொருள்கள், கம்பளம், எலும்பு, பால், தசைகள், மிருகங்களின் குளம்பு அல்லது கொம்புகள் ஆகிய தொழிற்சாலைகள் பெரிய அளவில் பொதுத்துறையில் உருவாக்கப்பட வேண்டும்.

கைக்கெடியாரம் செய்தல், விஞ்ஞான சாதனங்களுக்குரிய மெல்லிய நுணுக்கமான சாதனங்கள் தயாரித்தல், விளையாட்டுப்

பொருள்கள், தையல் இயந்திரங்கள், மின்சாரப் பொருள்கள். இன்னும் இவைபோன்ற சிறு ரக தொழிற்சாலைகள் நிறுவத் திட்டமிடப்பட வேண்டும்.

இதுபோன்ற சிறு ரக தொழிற்சாலைகளின் நடைமுறையை அறிந்துவர ஜப்பானுக்கும், ஸ்விட்சர்லாந்து நாட்டுக்கும் மாநில சர்க்கார் குழு ஒன்றை அனுப்பி வைக்கவேண்டும்.

முந்திரியிலிருந்து கிடைக்கக்கூடிய துணைப் பொருள்களைப் பிளாஸ்டிக் தொழிலுக்குப் பயன்படக் கூடிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பார்த்து அவைகளை அபிவிருத்தி செய்யவேண்டும்.

மூலிகைகள் கிடைக்கக்கூடிய இடங்களில் மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறுவக்கூடிய சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

இரண்டாவது ஐந்தாண்டு நகல் திட்டத்தில் காகிதத் தொழிற்சாலை துவங்குவதற்கான இன்றியமையாத அவசரத் தேவை குறித்தும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் திட்டம் உருப்படியான பலனைத்தரவில்லை. நீலகிரி மலைப்பிராந்தியத்தி லிருந்து கிடைக்கக்கூடிய மரப்பட்டை, மூங்கில் ஆகியவைகளைக் கொண்டும், தஞ்சையில் உள்ள சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கக்கூடிய துணைப் பொருள்களைக் கொண்டும் இந்த இரண்டு பிராந்தியங்களிலும் காகித தொழிற்சாலைகள் நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

ஜிப்சம் என்ற ஒருவகை கனிப்பொருள் அளவில் கணிசமாகக் கிடைக்கிறது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் மிகுந்து காணப்படும் இந்தக் கனிப்பொருளை முறையாகவும், இலாபந்தரக் கூடிய வகையிலும் பயன்படுத்தி அந்தகிகா அமிலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும் நிறுவலாம்.

சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் சர்க்கரைப் பாகில் இருந்து கணிசமான அளவில் மின்சார இயக்கத்தை உண்டாக்கக்கூடிய ஒருவித சாராயம் உற்பத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

இதுகுறித்து இரண்டு பிரச்னைகள் எழுகின்றன. பொதுவாக அவைகள் பெரிதும் தடையாகவே இருக்கின்றன. ஒன்று இவைகளுக்குத் தேவையான இயந்திரங்கள் இறக்குமதி செய்வதில் உள்ள தொல்லைகள், மற்றொன்று இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான தொழில் நுணுக்கம் ஆகியவை களாகும்.

ஆனால் இந்தத் தொல்லைகளுக்கு உடனடியாகப் பரிகாரம் தேடத் தவறிவிட்டால், ஏற்கனவே தொழில் துறையில் முன்னேறியுள்ள ஏனைய மாநிலங்களைக் காட்டிலும் இந்த மாநிலம் மிகவும் பிற்போக்கான நிலைக்குப் போய்விடும். எனவே மாநில சர்க்கார், மத்திய சர்க்காரிலிருந்து கிடைக்கக்கூடிய பதில்களைப் பதிவு செய்வதில் மட்டும் மனநிறைவு கொள்ளாமல், இந்த மாநிலத்திற்குத் தேவையான பொருள்களைப் பெறுவதில் உள்ள இறக்குமதி கட்டுப்பாட்டு விதிகளைத் தளர்த்துவதற்கான விதிமுறைகளை வலியுறுத்த வேண்டும். வேற்று நாட்டுத் தொழில் நுணுக்க நிபுணர்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கு நாம் வெட்கப்படத் தேவையில்லை. குறிப்பாக ஜப்பான் மற்றும் தொழில் நுணுக்கத்தில் முன்னேறியுள்ள ஏனைய நாட்டுத் தொழில் நுணுக்க வல்லுனர்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

நீண்டகாலத் திட்டத்தில் கடினமான உழைப்பின்மூலம் சொந்தத்தில் நம்முடைய தொழில் நுணுக்க வல்லுனர்களை உற்பத்திச் செய்வது என்பது எவ்வளவு சாத்தியமானதாக இருந்தாலும் அதன் காரணமாக ஏற்படக்கூடிய காலதாமதத்தின் மூலம் வேகமாக வளர்ச்சி அடைந்துவரும் நம்முடைய மாநிலத்தின் தொழிலபிவிருத்தியின் எதிர்காலத்தையும், முன்னேற்றத்தையும் தளர்த்தெறிந்துவிடக் கூடியதாக இருக்கக் கூடாது.

இதுகுறித்து தூதுவரலுவலகத்தின் மட்டத்தின் பல்வேறு நட்புறவு நாடுகளின் துணையை நாடிப் பெறவேண்டும்.

இந்த மாநிலத்தில் போதுமான மக்கள் சக்தியைப் பயன்படுத்தக்கூடிய நிலையில் கைத்தறித் தொழில்கள் இருந்தும், இன்னும் அவைகள் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றன.

உதவி, தள்ளுபடி இன்னும் இதுபோன்ற அனைத்தும் இன்னும் நம்பிக்கை அளிக்கக்கூடிய நிலையிலேயே இருக்கிறது. இத்தொழிலை நிலைநிறுத்தக்கூடிய தேவைகள் என்ன என்பதைப் பார்க்கவேண்டும். மிகவும் பலம் வாய்ந்த வியாபாரப் பெருக்குடைய நிறுவனங்களின் தேவைகளுக்கான கைத்தறித்துணிகள் கிடைப்பதற் கான உத்தரவாதம் இருக்கவேண்டும்.

நம்முடைய ஏற்றுமதி தேவையான அளவுக்குத் தற்போது இல்லை. அவ்வப்போது ஏற்படக்கூடிய அதிர்ச்சிகளினாலும், இக்கட்டுகளினாலும் இத்தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டி ருக்கிறது. அமெரிக்கர்களுக்குத் தேவையான கைத்தறி ஆடைகள் எதிர்காலத்தில் நம்பிக்கையூட்டுவனவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. பெருமளவில் அந்த நாட்டின் தேவை

யிருப்பதால், இந்தத் தொழில் மாநில ரீதியில் மேற்கொள்ளப் படுமேயானால் இத்தொழிலுக்கு நல்லதோர் எதிர்காலம் இருக்கிறது என்று எண்ணம் எழுவது இயற்கையின் பாற்பட்டதாகும். உற்பத்தியைப் பொறுத்தவரையில் தனிப்பட்டவர்களிடத்திலும் அல்லது கூட்டுறவு நிறுவனங்களிடத்திலும் ஒப்படைக்கப் பட்டாலும், அவைகளை ஏற்றுமதி செய்யும் பொறுப்பு முழுவதும் மாநில சர்க்காரின் தலையாய கடமையாக இருக்கவேண்டும்.

கைத்தறி ஆடைகளை மாநில சர்க்காரே பெருமளவில் வாங்கி அவைகளை ஏற்றுமதி செய்யவேண்டும்.

தங்களுடைய சொந்த விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றிக் கொள்கின்ற தன்மையில் ஏற்றுமதியானது தனிப்பட்டவர்கள் வசம் ஒப்படைக்கக் கூடாது.

ஒரு பயனுள்ள காரியத்திற்குப் பல இலட்சக்கணக்கானவர் களைப் பயன்படுத்திக் கொள்கின்ற முறையில் கைத்தறித் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் காவலனாக சர்க்கார் இருக்கவேண்டும்.

கூட்டுறவு ஸ்தாபனங்கள் அமைத்தல், அவர்களுக்குத் தேவையான குடியிருப்பு வசதிகளைத் தேடித் தருதல் இன்னும் இதுபோன்ற வேலைகள் அனைத்தும் மேற்கொள்ளுவதானது சர்க்காரின் வள்ளல் தன்மையை எடுத்துக்காட்டுவதாக அமையும். தற்போது தேவைப்படக் கூடியது என்னவென்றால், கைத்தறித் தொழில் நிலையானதாகவும், இலாபம் தரத்தக்கனவாகவும் அமையவேண்டும் என்பதேயாகும்.

உப்பு, இரசாயன உப்பு இன்னும் இதுபோன்ற வகையறாக்களின் ஏற்றுமதிச் சூழ்நிலைகள் அனைத்தும் எதிர்காலதில் மிகவும் நம்பிக்கையூட்டவனவாக இருக்கிறது. தூத்துக்குடி மட்டுமன்றி வேதாரண்யம், சூனாம்பேடு இன்னும் இதுபோன்ற எண்ணற்ற இடங்கள் இத்தொழில் நல்முறையில் வளருவதற்கான சாத்தியக்கூறுகள் மிகுந்து காணப்படுகிறது. இத்தொழிலுக்கு மக்கள் சக்தி அதிகம் தேவைப்படக்கூடிய நிலையில் இருக்கிறது. எனவே சர்க்கார் பொதுத்துறையில் உப்பு உற்பத்திக்கான விளைநிலங்களை அதிகம் கொண்டு வருவதற்குப் போதுமான வாய்ப்பு இருக்கிறது.

பல்வேறு விதமான எண்ணெய் வகையறாக்கள், காய்கறி வகைகள், தாவரப் பொருள்கள் ஆகியவைகள் உற்பத்தி செய்யவேண்டும். ஏற்கெனவே உற்பத்தி செய்யப்பட்ட இடங்களில் அதிகமான உற்பத்தியைப் பெருக்கவேண்டும்.

தற்போது தனிப்பட்டோர் ஆதிக்கத்திலிருக்கும் பீடித் தொழில்களை பொதுத்துறையின் கீழ் கொண்டுவர வேண்டும்.

உதகமண்டலத்தில் கச்சா பிலிம் தயாரிக்கும் திட்டம் மக்களிடத்தே நம்பிக்கையளிக்கக் கூடியதாக இருக்கிறது. ஆனால் இன்னும் அது நிறைவேற்றப்படாமலேயே இருக்கிறது.

முக்கியத்துவம் பெற்றுவரும் பிலிம் தொழிலை நாம் புறக்கணிக்க முடியாது.

கலை, கலாச்சாரத் தொழில்களைவிட பிலிம் தொழில் மிகவும் பெரிய தொழில்களாகத் திகழ்கிறது.

கோடிக்கணக்கான ரூபாய்கள் முடங்கிக் கிடக்கும் இத்தொழிலில் பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கின்றனர்.

பிலிம் தொழில் மெல்ல ஆனால் உறுதியான முறையில் அன்னிய நாட்டு வாணிபத்தில் இடம் பெற்றிருக்கிறது. எனவே அத்தகைய நல்வாய்ப்பினைச் சாதகமாக்கிக் கொண்டு சர்க்கார் அந்த வாணிபத்தினைப் பெருக்க முன்வரவேண்டும். இத்தொழில் பற்றிய செய்திகளைத் திரட்டி தொழில் நுணுக்கப் பயிற்சி அளிப்பதற்கான வழிவகை காணும்பொருட்டு வெளிநாடுகளில் சர்க்கார் கண்காணிப்பாளர்களை நியமிக்கவேண்டும்.

வளர்ந்துவரும் இத்தொழிலில் கிடைக்கும் கிராமத்தில் சர்க்கார் பங்குபெற சினிமாத் தொழிலை தேசீய உடைமையாக்குவ தோடு, ஸ்டுடியோக்களையும் தாமே எடுத்து நடத்த முன்வர வேண்டும்.

சர்க்கார் பிலிம் மட்டுமின்றி இத்தொழிலுக்கு வேறு பலவிதமான துணைக்கருவிகளும் தேவைப்படுகின்றன. எனவே இவைகளைப் பெறுவதற்கு அன்னிய வாணிபத்தில் பெரும் பொருளைச் செலவழிக்கும் கணிசமான தொகையைச் சர்க்காரே இத் துணைக்கருவிகளை தயாரிக்க முற்படுமேயானால் பெருமளவு சேமிக்கலாம்.

இத்தொழிலுக்குத் தேவைப்படும் நவீன கருவிகளின் தரம், தன்மை ஆகியவைகள் குறித்து சர்க்கார் ஆலோசனை வழங்குவதை விட சர்க்காரே இத்துணைக் கருவிகளை உற்பத்தி செய்ய முற்பட்டால் தரமான கருவிகளை நல்ல முறையில் உற்பத்தி செய்யலாம்.

நவீன விஞ்ஞான சாதனங்கள் தடையின்றி கிடைக்குமானால் நம்முடைய கலைஞர்கள் மேல்நாட்டுக் கலைஞர்களுடன்

போட்டியிட முடியும் என்பதோடு உலக நாட்டு வாணிபச் சந்தையில் படத்தொழில் சம்பந்தப்பட்ட நம்முடைய வாணிபத்தை நல்ல முறையில் பலப்படுத்த முடியும்.

தோல் சம்பந்தப்பட்ட தொழிலைப் பொறுத்த வரையில் சென்னை முதலிடம் பெற்றிருக்கிறது. ஆனால் சீரான முறையில் முயற்சிக்கப்படுமானால் தற்போது பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படும் தோலை இங்கேயே தேக்கிவைத்து பெருமளவில் மக்கள் சக்தியையும் பயன்படுத்தி இலாபம் தரக்கூடிய தொழிலாக மாற்றி அமைக்க முடியும்.

கம்பள ஏற்றுமதியும் கவனம் செலுத்தவேண்டிய மற்றொரு பொருளாகும். மிகப் பழைய முறைகளைக் கையாள்வோரிடத்தில் இந்தத் தொழில் தற்போது இருந்துவருவதால் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கிறது. தொழில் நுணுக்க ஆலோசனைகள் அவர்களுக்கு வழங்கப்படுவதாகச் சொல்லப்படு கிறது. என்றாலும் உருப்படியான மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை. ஏற்றுமதிப் பொருளாக இருக்கின்ற காரணத்தால் இது விஷயத்தில் அதிகமான கவனம் செலுத்தவேண்டும்.

இந்தத் தொழிலுக்கும் இன்னும் இதுபோன்ற ஏனைய தொழில்களுக்கும் மாநில சர்க்கார் உதவி வழங்குகிறது என்றாலும் இன்னும் அதிகப்படியான பயன் கிடைக்கவேண்டுமானால் கிடைத்துவரும் நிதி உதவிகள் ஏதோ அடையாளமாக அளிக்கின்ற தன்மையில் இல்லாமல் மனப்பூர்வமான முயற்சிகள் முழு அளவில் எடுத்துக்கொள்ள வேண்டும். பத்துப் பதினைந்து ஆண்டுகளில் அதிக வருவாய் அளிக்கத்தக்க வகையில் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

மிகப் பலவற்றை அடைவதற்கு ஒரு சிலவற்றையாவது நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். சிலவற்றை அடைவதற்கு பலவற்றை நாம் நோக்கிப் பார்க்கவேண்டும்.

இப்பிரச்சினைகளை நிபுணர் குழு ஒன்று ஆராய்ந்து பார்த்து இந்த மாநிலத்தின் தனிச்சிறப்பாக விளங்கத்தக்க வகையில் ஒரு தொழிற்சாலை அமைக்கக்கூடிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த தொழிற்சாலைக்கு மாநில சர்க்கார் போதுமான நிதியுதவியளிக்க முன்வரவேண்டும்.

எல்லாப் பிரச்னைகளையும் பரிசீலிப்பது என்பதுதான் இன்றைய நடைமுறையாக இருக்கிறது. ஆனால் அவையனைத்தும் ஒரு குறிப்பிட்ட மட்டத்தோடு நின்று விடுகிறது.

சாதாரணமானதன்றி திட்டமிட்டபடி பட்டியலில் இடம்பெற தங்களுக்கேற்ற வகையில் பல்வேறு விதமான தொழிற்சாலைகளை சின்னஞ்சிறிய நாடுகள் பல உருவாக்கியிருக் கின்றன. எனவேதான் அந்த நாடுகள் அனைத்தும் வெகுவாக முன்னேற்றம் கண்டிருக்கிறது. கடிகாரத் தொழிலில் சிறந்து விளங்கும் ஸ்விட்சர்லாந்தும், பால்பண்ணைத் தொழிலில் புகழ்பெற்று விளங்கும் டென்மார்க்கும் அளவில் சிறியது என்றாலும் பலம் பொருந்திய இந்த நாடுகள் மிகப்பெரிய தங்கள் தொழிலின் மூலம் உலக நாடுகளின் வாணிபச் சந்தையைப் பெருமளவில் கைப்பற்றியிருக்கின்றன.

தோட்டங்களில் உற்பத்தியாகும் காப்பி, தேயிலை, ரப்பர், வாசனைத் திரவியங்கள் ஆகியவைகள் அன்னியச் செலாவணியை ஈட்டித் தரத்தக்கனவாக இருக்கிறது. ஆனால் அவைகள் அனைத்தும் தனிப்பட்டோர் ஆதிக்கத்தில் இருந்து வருகிறது. அவைகள் நல்ல வரி தரக்கூடிய நிறுவனங்களாகவே சர்க்கார் கருதிக் கொண்டி ருக்கிறது.

இந்தப் பொருள்கள் அனைத்துக்கும் ஏற்றுமதிக்கான நல்லதோர் எதிர்காலம் இருப்பதால், தனியார்துறை ஆதிக்கத்தை ஒழித்துக்கட்டி நல்லதோர் திட்டத்தின் மூலம் மாநில சர்க்கார் நிர்வாகத்துக்குக் கொண்டுவர வேண்டும்.

ஆனால், திட்டங்களை உருவாக்கவும், நிறைவேற்றவும் அதிகாரம் பெற்றிருக்கும் கட்சி தனியார் துறையின் இன்றியமையாத தேவையில் பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளனர். ஏனைய கட்சியினர் இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

இன்றைய தினம் பெருமளவில் விவசாயத்தையே நம்பிக் கொண்டிருக்கிற காரணத்தால், இந்த மாநிலத்தைத் துரிதமாகத் தொழில் மயமாக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயத்தையே பெருமளவில் நம்பிக்கொண்டிருக்கும் நிலைமை மாறி தொழில்துறை விரிவான முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டாலொழிய எந்த நாடும் முன்னேற்றமடைய முடியாது.

ஆனால் விவசாயத்தையே சுழன்று கொண்டிருக்கும் பொருளாதார நிலைமை மாற்றமடைவதற்கு நீண்டதோர் காலம் பிடிக்கும்போது முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் விவசாயம் மட்டுமே பெரியதோர் தொழில் வளமாக வளர்ச்சியடைந்துள்ள போது, இங்கே மட்டும் எல்லாவிதமான நடைமுறை உபயோகத் திற்கும் அது ஒரு பரம்பரை பாத்யதையாக இருந்து வருகிறது.

இத்துறையில் அதிக நாட்டம் செலுத்தப்பட்டது. ஆனால் கருத்து வேறுபாடுகளும், எதிரிடையான எண்ணங்களும் உருவானதால் முன்னேற்றத்தின் வேகம் தடைபட்டுவிட்டது.

நாட்டின் உணவுப் பற்றாக்குறையை நிறைவு செய்வதே இரண்டு திட்டங்களின் முக்கிய நோக்கமாக இருந்தது. பெருந்தொகை செலவழிக்கப்பட்டது, திட்டங்கள் பல உருவாக்கப்பட்டன. ஆனால் பத்தாண்டுகள் கழித்தும் கூட பழைய நெருக்கடியும் புதிய ஆபத்துக்களும் உணவுக்கட்டத்தை முற்றுகையிட்டுக் கொண்டே இருக்கிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்க மாநில சர்க்கார் மனப்பூர்வமான முயற்சிகள் எடுத்துக்கொண்டு வெற்றிபெற்று விட்டதாக அறிவிக்கின்றனர். ஆனால் விவசாயம் தொடர்புள்ள அடிப்படைக் கொள்கைகளைப் பொறுத்தவரையில் ஒரே சீரான துணிவான நடவடிக்கைகள் ஏதும் சர்க்கார் மேற்கொள்ளவில்லை.

மிகச் சாதாரணமான நில உச்சவரம்பு இத்துணை ஆண்டுகளாக அரசியல் பேச்சுக்குரியதாகவே இருக்கிறது. நில உச்சவரம்புதான் செய்யப்பட வேண்டியதோர் மிகக் குறைந்தபட்ச நடவடிக்கையாக பொருளாதார நிபுணர்களும் தத்துவமேதைகளும் ஒருசேர சுட்டிக்காட்டியிருக்கின்றனர். எனினும் நில உச்சவரம்பு சட்டமானது இன்னும் அது தனது உண்மை உருவத்தை அடையவில்லை.

இந்தச் சிறு சட்டத்தை உருவாக்க காலவரையின்றிய இந்தக் காலதாமதம் அவர்களது முன்னேற்பாடான திட்டத்தின் பிரதிபிம்பமாகத் திகழ்கிறது என்பதை அறிவிப்பதற்குப் போதுமான எடுத்துக்காட்டாகவே அமைந்திருக்கிறது.

புரட்சிகரமானதோர் மாற்றங்கள் வெடித்துக் கிளம்புவதற்கான வழிவகைகள் நம்பிக்கையூட்டுவனவாக இருக்கிறது.

அதனுடைய வலிவும் பொலிவும் தகர்த்தெறியப்பட்டாலும் இன்றைய நிலையில் கூட இந்தச் சட்டம் விவசாயத்துறை சீரமைப்பிற்கான திட்டங்கள் தீட்டுவதற்கு இன்றியமையாத ஒரு தேவையாக இருக்கிறது.

"உழுபவனுக்கே நிலம்" என்ற வார்த்தை திரைமறைவுக்குத் துரத்தப்பட்டுவிட்டது. பங்கீட்டுக்கு ஏற்றதோர் தீவிரமான திட்டம் என்று சொல்லக்கூடிய நிலைமாறி அதிக உற்பத்தி செய்யவேண்டும் என்று வற்வுறுத்தப்படுகிறது.

நிலவளம், முயற்சி ஆகியவைகளைப் பொறுத்தே உற்பத்திப் பெருக்கம் இருக்கிறது. முறைகள் மாற்றத்திற்கேற்ப முயற்சியின் மூலம் மட்டும் பல்வேறு பயனை அடையலாம்.

உற்பத்திப் பெருக்கத்திற்கு இயந்திர சாதனம் கொண்ட விவசாயம் நல்லதோர் முறை என்று பேசப்பட்டு வந்தாலும் தொழில் நுணுக்கம் தெரியாத தொழிலாளர்களும், விவசாயிகளும் மிகுதியாக இருக்கும் இந்த மாநிலத்தில் இந்த முறை சாத்தியமானதல்ல. தலைமுறை காலமாக விவசாயத்துறையில் ஈடுபாடு கொண்டுள்ளவர்களின் தொகை கணிசமான அளவிற்கு இருக்கிறது.

பெருவாரியான விவசாயத் தொழிலாளர்கள் இந்த மாநிலத்தில் மட்டும் ஆண்டொன்றுக்கு 115 நாட்கள் வேலையின்றி கஷ்டப்படுகின்றனர் என்றும், அத்துடன் அவர்கள் பெறும் ஆண்டு வருமானம் இந்தியாவில் ஏனைய மாநிலங்களைக் காட்டிலும் குறைவாக இருக்கிறது என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

எனவே இந்தப் பிரச்சினை இரண்டு உண்மைகளை உள்ளடக்கியிருக்கிறது.

உற்பத்தியையும் பெருக்க வேண்டும். அதே நேரத்தில் விவசாயியின் வருமானத்தையும் உயர்த்தவேண்டும்.

உபயோகிப்பவர்களை எந்த வழியிலும் பாதிக்காத வகையில் இதைச் செய்தாகவேண்டும். சிக்கல் நிறைந்த பிரச்சினைதான் என்றாலும் உபசாரமான வார்த்தைகள் தேவையில்லா ஒன்று. மேலும் குழப்பமான எண்ணங்கள் மேலும் விபரீதத்தையே உண்டாக்கும்.

அரசியல் உலகத்தில் உள்ள முக்கியஸ்தர்கள் அவ்வப்போது இதுபற்றி வழங்கிவரும் கருத்துக்கள் எத்தகைய குழப்பமான நிலைமை நிலவிவருகிறது என்பதையே காட்டுகிறது.

நில உச்சவரம்பு சட்டத்தோடு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் துவக்கவேண்டும்.

பல இலட்சக்கணக்கானவர்கள் உள்ளத்தில் குறைந்தது அமைதியான ஆர்வத்தை உண்டாக்குவதற்குப் பயன்படும்.

வாழ்க்கைத்தரம் சாதாரண மனிதன் சக்திக்கு எட்டிய வகையில் இருக்கச் செய்ய அத்தியாவசியத் தேவைப் பொருள்களின் விலைவாசிகள் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளதாக இருக்க வேண்டும் என்ற பிரச்சினை ஆளும் கட்சியினர், அரசியல்வாதிகள், பொருளாதார நிபுணர்கள், விவசாயிகள், அத்தியாவசியப்

00350
நகர், விருத்தாசலம் - 6060

பொருள்களைப் பயன்படுத்துவோர்களின் பிரதிநிதிகள் ஆகிய அனைவருடையவும் கருத்தோட்டமாக இருக்கவேண்டும்.

நம்பிக்கைக்கு ஒவ்வாத வகையில் உற்பத்திப் பெருகிவிட்ட தாகச் சொல்லப்படுகிறது. அதே நேரத்தில் உணவுப் பண்டங்களின் விலைவாசிகளும் உயர்ந்துவிட்டன.

இந்தத் தத்துவம் வியக்கத்தக்கது மட்டுமல்லாமல் ஆபத்தானதுமகூட.

இத்தகு வருந்தத்தக்க நிலைமைக்கு மத்திய சர்க்கார் எந்த அளவுக்குப் பொறுப்பானது என்பதை கண்டுபிடித்தாக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

மத்திய சர்க்காரின் கட்டுப்பாடோ அல்லது ஆய்வுரைகளோ ஏதுமின்றி, விலைவாசிகளின் உயர்வைத் தடுக்க வழிவகைகள் காண மாநில சர்க்கார் உரிமைபெற்றிருக்க வேண்டும்.

மத்திய சர்க்கார் அளவுக்கு மீறிய செல்வாக்கையும், அதிகாரங்களையும் கொண்ட ஒரு உயர்ந்ததோர் அங்கமாக இருக்கின்ற காரணத்தால், தேவைக்கான மனு போடுகின்றபோது அதுவும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குக் கேட்கப்பட்டால் உணவுத் தானியங்களைக் கொள்முதல் செய்யவேண்டும்.

எனவே உணவுத்துறையைப் பொறுத்தவரையில் எப்படியிருந் தாலும் மத்திய சர்க்கார் தலையீடு இன்றி சுயஉரிமை இருக்க வேண்டும்.

நிலவளத்தைப் பொறுத்து உணவு உற்பத்தி இருக்கின்ற காரணத்தால் நிலத்தை வளமாக்குவதற்குண்டான வழித்துறைகளை கூர்ந்து கவனித்துப் பார்த்துக் கட்டுப்படுத்த வேண்டும்.

நீர்ப்பாசனம், உரவகைகள், விதைகள், இன்னும் இதுபோன்ற வைகள் விவசாயத்திற்கு இன்றியமையாத தேவைகளாகும். ஆனால் இவைகளைப் பொறுத்த வரையில் கூட வினிநோகிக்கக்கூடிய அதிகாரத்தை மாநில சர்க்கார் பெற்றிருக்கவில்லை. அல்லது அதிலும் பல்வேறுவிதமான தொல்லைகள், இடுக்கண்கள் மாநில சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிறது.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மாநில சர்க்காரால் நிர்மாணிக்கப்பட்டாலும், துவக்க காலத்தில் கூட மத்திய சர்க்காரின் துணையும் உதவியும் தேவைப்படுகிறது.

சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதில் மாநில சர்க்கார் தாராளமான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

ஏரிகளையே நாம் அதிகம் நம்பிக்கொண்டிருக்கிற காரணத்தால், ஏரிகளைப் பழுதுபார்க்கவும், ஆழப்படுத்தவுமான காரியங்களுக்காகச் செலவழிக்கப்படும் தொகை கணிசமான அளவிற்கு உயர்த்தப்பட வேண்டும். வேலைமுறைகளையும் துரிதப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

மதிப்பீடுகள் தயாரிக்கவும், அனுமதி வழங்கவும், அனுமதி வழங்கப்பட்டவைகள் நிறைவேற்றப்படுவதிலும் ஏற்படும் காலதாமதம் கிராம மக்களின் அளவு கடந்த பொறுமையைச் சோதிக்கும் தன்மையிலேயே இருக்கிறது. மாநில சர்க்கார் அதனுடைய வேலைமுறைகளைத் தீவிரப்படுத்த வேண்டும்.

மாநிலத்தில் உள்ள 23,000 ஏரிகளில் 4,000 ஏரிகள் தான் இதுவரை கவனிக்கப்பட்டிருக்கின்றன.

இன்னும் பல ஏரிகள் கவனிக்கவேண்டிய நிலையில் உள்ளன. மேலும் இத்துறையில் வழக்கமாக நடைபெறுவதைப் போன்றில்லாமல் அவசரகாலத் திட்டமாகக் கருத்தில்கொண்டு வேலைமுறைகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

ஏரிகள் மட்டுமின்றி நீர்ப்பாசனக் கால்வாய்களும் உடனடியாகக் கவனிக்கத்தக்க நிலையில் உள்ளன.

இந்த வேலைகளை நிறைவேற்ற இராணுவத்தினரின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த வேலைகளுக்கு பிரத்தியேகமான இயந்திரங்களைத் தேவையை வற்புறுத்திப் பெற்றுப் பயன்படுத்த வேண்டும்.

அப்படி இருந்தபோதிலும் சிறுநீர்ப்பாசன திட்டத்தின் இலட்சியத்தை நாம் அடையக்கூடும். கிருஷ்ணா, கோதாவரி, கிருஷ்ணா - பெண்ணாறு போன்ற மாநிலங்களின் நீர்ப்பாசன திட்டம் கேரள மாநிலத்தில் உள்ள ஆறுகளின் தண்ணீரைக் கொண்டு வருதல் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டா லொழிய நாம் திக்கற்றவர்களாகி விடுவோம்.

பிரத்தியேகமான இந்தத் திட்டங்களை உருவாக்க, தொழில் நுணுக்கம் பெற்ற பிரத்தியேகமான நிபுணர் குழு ஒன்றினை அமைக்கவேண்டும்.

ஏற்கனவே அதிகப்படியான வேலைகளில் ஈடுபட்டுள்ள நிர்வாக இயந்திரத்திடம் இந்தப் பிரச்சினையை ஒப்படைப்பதானது காலதாமதத்தையே உண்டாக்கும்.

மாநிலத் தண்ணீர்த் திட்டங்களைப் பிராந்தியக் குழு ஒன்றிடத்தில் ஒப்படைப்பதே கண்ணுக்குப் புலப்படும் சிறந்த

வழியாகும். மேலும் முடிந்தால் பலதரப்பட்டவர்கள் கொண்ட குழு ஒன்றினை நியமிக்கலாம்.

மூன்றாவது திட்டத்தில் இதற்கு முதலிடம் அளிக்கவேண்டும்.

அண்டை நாடுகளின் மாநில முதல்வர்கள் உதவி புரிவதாக ஏற்கனவே வாக்களித்துள்ளதால் இந்தத் திட்டத்தைத் தீட்டுவதில் எவ்வித காலதாமதமும் கூடாது.

மாநில சர்க்கார் இதை வற்புறுத்தி இதற்காக நிதி ஒதுக்குவதற்கான வழிவகைகளைக் காணவேண்டும்.

விஞ்ஞான உதவியின் மூலம் பாலைவனங்களையும், காடுகளையும் வளமுள்ள விளைநிலங்களாக மாற்றுகின்ற நாடுகளை நாம் பார்க்கும்போது, தண்ணீர் பயனற்றுப் போகும் கோதாவரி, கிருஷ்ணா போன்ற ஆறுகளின் மிதமிஞ்சிய தண்ணீரை நாம் கொண்டு வருவதென்பது நம்முடைய சக்திக்கப்பாற்பட்டது என்று நாம் சிறிதும் எண்ணக்கூடாது.

தண்ணீர் ஆவியாக மாறி வீணாவதைப் பற்றி அடிக்கடி பேசப்படுகிறதே தவிர அதனைத் தடுக்க முற்படவில்லை.

கட்டுப்பாடுகள் பெருமளவு அதிகாரிகளின் பயிற்சிக்கு விடப்பட்டிருக்கிறது. இத்தகைய பிரச்சினைகளும், கிராம புனர்வாழ்வு, குடிசைத் தொழில்கள், சமூக முன்னேற்றம், எல்லாம் வட்டார வளர்ச்சி துறையின் பொறுப்பில் இருக்கின்றன. செலவிடப்படும் தொகைகளுக்கு ஏற்ற பலனை ஈடாக காண முடியவில்லை. மேலும் இந்தத் துறை அரசியலுக்கு ஆட்பட்டிருப்பதும் மறுக்க இயலாது.

பொது மக்களின் கவனத்தை ஈர்த்து, அவர்களின் ஆதரவைத் திரட்ட, இத்துறைக்கான வழிகளைத் திட்டக்குழு ஆராயவேண்டும். இந்த வட்டார வளர்ச்சித் துறை நாளுக்கு நாள் சிறப்பைப் பெற்று வருகிறது.

மேலும், சாலை அமைப்பு, நில மீட்பு, புறம்போக்குகளைப் பயன்படுத்துதல் போன்ற காரியங்களை மேற்கொள்ள ஒரு 'நிலப்படையை' அமைப்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. இதில் கட்டாயப்படுத்துவதோ, வற்புறுத்துவதோ தேவையற்றது. மாநில அரசு முகாம்களை அமைத்து, அதற்கான செலவுகளை ஏற்று, படையைத் திரட்டவேண்டும். இதன்மூலம் ஓரளவிற்கு வேலையில்லாத திண்டாட்டத்தையும் போக்க முடியும். விரைவாக முன்னேறவும் வழி ஏற்படும்.

இந்த யோசனைகளுக்கு ஆதாரமாக புள்ளி விவரங்கள் தரப்படவில்லை என்பது உண்மை. அதனால் புள்ளி விவரங்கள் தேவையில்லை என்பதல்ல. சீராக சரியான புள்ளி விவரங்களைப் பதவியிலிருப்பவர்கள் பெற வழி இருப்பது சாதாரணமாக புலப்படும் உண்மை.

அந்தப் புள்ளி விவரங்களை நன்னோக்குடன் தரப்பட்ட யோசனைகளைக் கேலி செய்வதற்குப் பயன்படுத்தாமல், துவக்க நேரத்தில் ஏற்படக்கூடிய இன்னல்களையும் பொருட்படுத்தாமல் நல்ல திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

இதற்காக ஆலோசனைக் குழுக்களை அமைத்து, குறிப்பிட்ட திட்டங்களை ஆட்சியிலிருப்பவர்களும், நிபுணர்களும் கலந்து பேசி முடிவுகளை மேற்கொள்ள முனையவேண்டும்.

இரண்டு முக்கியமான விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும்.

திட்டங்களின் நோக்கம் நன்மையை அடிப்படையாகக் கொண்டவை என்கிற உணர்வு ஏற்படும்போது, மக்களிடையே ஆர்வம் எழும். இலாபமே நோக்கம் என்கிற எண்ணம் தொழிலாளரிடம் ஏற்படுமானால், உற்சாகம் குறையும். எனவே இலாபத்தைப் பகிர்ந்துகொள்ளும் ஒரு திட்டத்தை சில துறைகளிலாகிலும் மேற்கொள்ளவேண்டும். நியாய அடிப்படையில் சம பங்கு கிடைக்கும் போது உற்பத்திக்கு, புது வேகம் ஏற்படும்.

திட்டங்களை உருவாக்கியவர்கள் பொருளாதார ஏற்றத் தாழ்வைப் போக்கி, சீரான வருமானத்தை உண்டாக்க முனைந்தனர். ஆனால், இன்றுவரை இதில் போதிய வெற்றி காணப்படவில்லை.

மற்றொரு முக்கிய விஷயம் இவ்வளவு பெரிய திட்டத்திற்கு எப்படி தேவையான பணத்தைத் திரட்டப் போகிறோம் என்பதாகும். ஏற்கனவே வரிக்கொடுமை, அதிலும் மறைமுக வரியின் மூலம், மக்களை அடியோடு வாட்டியிருக்கிறது. எனவே, மேலும் வரிகளை உயர்த்துவது விரும்பத்தக்கதல்ல. சமுதாயத்தில் மேல் தளத்திலிருப்பவர்களிடம் குவிந்திருக்கும் பணத்தைத் திரட்டும் வழிகளை நாம் கொள்ளவேண்டும். இவை மக்கள் திட்டங்கள் என்கிற உணர்வு ஏற்படும்போதே, மக்களிடம் உற்சாகம் ஏற்படும். மக்களுக்கு அந்த விரும்பத்தக்க எண்ணம் தொடர்புள்ள துறைகளில் ஏற்படவேண்டும்.

பெரிய நகரங்களில் உருவாக்கப்பட்ட திட்டங்களையும் ஆராய்ந்து மேற்கொள்ள வேண்டும். சேரி ஒழிப்புத் திட்டங்களை

மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும்.

மக்களிடம் உற்சாகத்தை ஏற்படுத்துவது மிக மிக அவசியம். ஏன் என்றால் எந்தத் திட்டமும், தனி மனிதனை மையமாகக் கொண்டே உருவாக்கப்பட்டதாகும். அத்துடன் புதிய முற்போக்குத் திட்டங்களைத் துணிவுடன் செயல்படுத்த வேண்டும்.

சூரியனின் சக்தி வீணாவதைத் தடுக்கவேண்டும். இதைப்பற்றி ஆராய்ந்தவர்கள் பல உபயோகரமான யோசனைகளை கூறியிருக்கின்றனர். இதுவரை சூரிய அடுப்பு மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மேலும் முயன்று செய்ய ஏராளமாக இருக்கின்றன. சூரிய சக்தியைப் பயன்படுத்த ஒரு நிபுணர் குழு முற்படவேண்டும்.

சிறு அணைகள், சிறு தேக்கங்கள், போன்றவைகள் பற்றிய போதிய அக்கறை செலுத்தவில்லை. பெரும்பாலும் எல்லா மாவட்டத்திலும் இந்த திட்டங்களை மேற்கொள்ள வசதிகள் இருக்கின்றன. அவை மகத்தானவைகளாக இல்லாமலிருக்கலாம். ஆனால் அவை நீர்பாசன வசதியை உறுதியாக ஏற்படுத்தித் தரும்.

பல ஆண்டுகளாக அரசினரிடம் வாளாயிருக்கும் பாலாறு திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

குழாய் கிணறுகள், 'ஆர்டீசன்' கிணறுகள் பரவலாக ஏற்பட வேண்டும்.

வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாறு திட்டம், செங்கற்பட்டில் வேகவதி திட்டம், மதுரையில் ஆலாங்குளம் திட்டம், குடகனாறு திட்டம், சீயாறு திட்டம், இப்படி பல திட்டங்களைப் பற்றி பல ஆண்டுகளாக பேசப்பட்டு வருகிறது. இந்தத் திட்டங்களை அமுலாக்கவேண்டும்.

மூன்றாவது திட்டத்தில் வாய்ப்புள்ள இடங்களில் தண்ணீரைத் தேக்கி நீர்பாசனத்திற்குப் பயன்படுத்த வழிகளைக் காணவேண்டும். இதிலிருந்து, மாநில அரசு, மாற்றாந்தாய் நிலையைத் மாற்றி, நியாயமான பங்கைப் பெற்று, புறக்கணிப்பு நிலையை தவிர்த்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறது என்றே கருதவேண்டியிருக்கிறது. பதவியிலிருப்பவர்கள் விழிப்புடன் இம்மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு உழைத்தாலன்றி, உரிய பங்கைப் பெற இயலாது. கெஞ்சிக் கேட்பதன் மூலம் பலன் ஏற்படாது. கோரிக்கைகளை வற்புறுத்தவேண்டும், பிச்சையின் மூலம் வெற்றியைத் தேட முடியாது.

அடிப்படைத் தொழில்கள், பெரிய துறைமுகங்கள், அணுசக்தி தயாரிப்பு போன்ற திட்டங்களுக்குப் பெரிய தொகைகள் ஒதுக்கியாக வேண்டும். மாநிலத்துறையின் கீழ் அமையக் கூடிய திட்டங்களுக்கும் பெரிய தொகைகள் தேவைப்படுகின்றன.

எனவே கேட்கப்பட்டிருக்கும் தொகை, போதுமானதென்று கருத இடமில்லை.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறைந்தது 1000 கோடி ரூபாய் முதலீடு செய்யும் அளவிற்கு மத்திய, மாநில திட்டங்களை ஆராயவேண்டும் என்று அரசினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதுவரை நீடித்துவந்த புறக்கணிப்புக்கும், பின்தங்கிய நிலைமையையும், நினைவில் கொள்ளும்போது, இந்தத் தொகையைக் கேட்பது நியாயத்திற்குப் புறம்பானதென்றோ, பேராசையானதென்றோ எண்ணவும் இடமில்லை.

திட்டக்குழு இரண்டு மூன்று முறை கூடிவிட்டால் மட்டும் பிரச்சினைகளைத் தீர்த்துவிட இயலாது. அவ்வப்போது கூடவேண்டும். ஆலோசனைக் குழுக்களும், நிபுணர்களும் கூடி திட்டங்களை ஆராய்ந்து உருவாக்க வேண்டும். இதுதான் ஆளும் கட்சியின் நோக்கமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

திட்டம் தொடர்ந்துகொண்டே இருக்கும் ஒன்றாகும். கூடிக் கலந்து பேசி, கட்சிகளின் ஆதரவையும், நல்லெண்ணத்தையும் பெறுவது புதிய வலிவையும், உணர்வையும் ஏற்படுத்தும்.

எவ்விதக் குறைபாடும் இல்லாமல் தனிப்பட்ட ஒரு கட்சி மட்டுமே திட்டங்களை உருவாக்குவது விரும்பத்தக்கதல்ல.

அத்துடன், யோசனைகளை கூறியவர்களை அடிக்கடி கூட்டி, திட்டங்களின் நடைமுறைகளை மதிப்பிடவும், தக்க தேவையான பரிந்துரைகளைக் கூறவும் வாய்ப்பிருக்க வேண்டும்.

திட்டங்களை உருவாக்குவது துவக்கம் - பிறப்பிற்கு ஒத்தது - ஆனால் பிறந்த குழந்தையைச் சீராக, முறையாக, வளர்ப்பதில் தான் பல நன்மைகள் அடங்கியிருக்கின்றன.

- முதல் பதிப்பு: 1961, வெளியீடு: மக்கள் பதிப்பகம், சென்னை - 1.

ஒட்டுமாஞ்செடி

அன்புள்ள தோழர்களே!

பல நாட்களுக்குப் பின்னர் கூடியிருக்கிறோம். இக்கூட்டம் நமது நோக்கத்தைத் தெரிவிக்கக் கூடிய கூட்டமாகும், மழையோ பலமாகப் பெய்கிறது; வந்திருக்கும் கூட்டமோ ஏராளம்; பேச இருப்போரும் பலர். பல மாவட்டங்களிலிருந்தும் வந்துள்ள தோழர்கள், இயக்கத்தின் முக்கிய பணியிலே ஈடுபட்டுள்ளவர்கள், அவர்கள் யாவரும் பேச இருக்கிறார்கள். மழை பலமாகப் பெய்து கொண்டிருக்கிறது; பலர் பேச வேண்டும், சற்று சங்கடமான நிலைதான். அடாத மழை பெய்கிறது; அளவற்ற கூட்டம். தாய்மார்களும் தவிக்கின்றனர் மழையால். நின்று கொண்டேயிருக்கின்றீர்கள்; சங்கடம் தான். ஆனாலும் சமாளிக்கிறீர்கள். இது போன்ற நிலைதான் நாட்டிலே சிலகாலம் கழகத்தின் வேலைகள் செயலற்றுக் கிடந்து, சங்கடமான நிலை ஏற்பட்டது; சரி செய்தோம். திராவிட முன்னேற்ற கழகம் தோன்றியது. புதிய அமைப்பு ஏற்பட்டுவிட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரால் ஏன் ஏற்பட்டது. எதற்காக ஏற்படுத்தப்பட்டது என்பதை விளக்கும் கூட்டமே இது.

நானா காரணம்?

நான் தான் காரணம் இந்த நிலைக்கு - ஏற்பாட்டிற்கு- என்று கூறுவர் சிலர். நான் பேசுகிறேன் இப்போது; நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்; பலத்த மழை கொட்டிக் கொண்டிருக்கிறது. இப்போது; நனைகிறீர்கள். இதற்கு நானா பொறுப்பாளி? நானா மழையை வரவேற்கிறேன்; வருவித்தேன், இல்லை! மழை வரவும்,

அதனால் சங்கட நிலை ஏற்படவும் இன்று, இப்போது நான் எப்படிப் பொறுப்பாளியல்லவோ, அப்படிதான், கழகத்தில் ஏற்பட்ட மந்த நிலைக்கும் நான் பொறுப்பாளியல்ல. மழைக்கு நான் பொறுப்பாளியல்ல வென்றாலும், என்ன ஏசுவர் கூட்டத்திற்கு வந்துள்ள மக்கள், தாய்மார்கள்? "என்னப்பா அந்த அண்ணாதுரை கூட்டத்திற்குப் போனேன், ஒரே மழை, நன்றாக நனைந்துவிட்டேன். நீர் சொட்டச் சொட்டக் கேட்டுக் கொண்டிருந்தேன்" என்றுதான் பேசுவர்.

கூறியது குற்றமா?

நான் என்ன செய்துவிட்டேன்; தலைவர் தவறினார் கொள்கையினின்றும், பகுத்தறிவுப் பாதையினின்றும். தவறு என்று மனதார நம்பினேன்; தெரிவித்தது குற்றமா? கூடாது என்று கருதினேன்; கருதியது குற்றமா? கருத்தைத் தெரிவித்தேன் காரணத்தோடு; வேதனையை வெளிப்படுத்தினேன்; வெளிப்படுத்தியது குற்றமா? கொள்கையைக் கூறுவது குற்றமா? கூறுங்கள் தோழர்களே!

நான் மட்டுமல்ல; என் போன்ற பல தோழர்கள் பல தாய்மார்கள், பல கழகங்கள், பாட்டாளி மக்கள், தொழிலாளித் தோழர்கள், பட்டி தொட்டி எங்கும் உள்ளோர் கூறினர்; கூடாது இந்த ஏற்பாடு; திருமணம் என்ற பேச்சை விட்டு விடுங்கள், என்று.

பெரியார் திருமணம் என்ற செய்தி கேட்டதும் அழுதவன் நான், ஆயாசம் கொண்டவன் நான், அதுமட்டுமல்ல, ஒதுங்கி விடுகிறேன் என்று எண்ணத்தை, கருத்தைத் தெரிவித்தவன் நான். பேதம், பிளவு, மனத்தாங்கல், மோதுதல் கூடாது, நல்லதன்று என்று கருதும் போக்கு, மனப்பண்பு படைத்தவன் நான். எனவே என் வரையில் பெருந்தன்மையாகக் கட்சிப்பணியிலிருந்து விலகுவது நல்லது என்று முடிவு கட்டியிருந்தேன்.

என் போன்ற பல தோழர்கள் பெரியாரை, பெரியார் போக்கை, அவர் திருமண ஏற்பாட்டை ஏற்கவில்லை என்பதுமல்ல, கண்டித்தனர்; கதறினர்; வேண்டாம் என்று வேதனை நிறைந்த உள்ளத்தோடு.

நான் மனதார தீமை என்று கருதிய ஒன்றை, நல்லதல்ல என்று தெரிந்த ஒன்றை, பகுத்தறிவுக்குப் புறம்பானது என்று பாமரரும் ஒப்பும் ஒன்றைத் தெரிவித்தது குற்றமா?

மனப்புண் ஆறவில்லை!

பெரியார் சமாதானம் சொல்லிவிட்டார், என் சொந்த விஷயம்; எதிர்ப்போர், சுயநலமிகள்; சதிக்கூட்டத்தினர் என்று. மனப்புண் ஆறவில்லை மக்களுக்கு அப்படிப்பட்ட தலைவருடன் கலந்து பணியாற்ற மாட்டோம் என்று கூறினர். செவி சாய்க்கவில்லை, தலைவர் விலகுவார் என எதிர்பார்த்தனர்; விலகவுமில்லை தலைவர். அவரோடு சேர்ந்து பணிபுரிய முடியாத நிலையிலுள்ள மிகப் பெரும்பான்மையினர், கழக முக்கியஸ்தர்கள், கூடிப் பேசினர்; ஒரு முடிவு செய்தனர்; அந்த முடிவு தான் "திராவிட முன்னேற்றக் கழகத்" தோற்றம்.

போட்டிக் கழகமல்ல!

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது; திராவிட கழகத்திற்குப் போட்டியாக அல்ல, அதே கொள்கைப் பாதையில் தான், திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளின் மீதே தான், திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. அடிப்படைக் கொள்கையில், கருத்துக்களில் மாறுதல், மோதுதல் எதுவும் கிடையாது. சமுதாயத் துறையிலே சீர்திருத்தம், பொருளாதாரத்துறையிலே சமதர்மக் குறிக்கோள், அரசியலில் வடநாட்டு ஏகாதிபத்தியத்தினின்றும் விடுதலை, ஆகிய கொள்கைகள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடு களாகும்.

வேலை செய்ய மனம் ஒப்பவில்லை

கொள்கைக்கே புறம்பாக, ஜனநாயகத்திற்கே அப்பாற்பட்டுத் தமது போக்கிலேயே சென்று கொண்டிருக்கிறார், பெரியார். அவர் தலைமையில் வேலை செய்ய மனம் ஒப்பவில்லை; செயலாற்றும் வகை கிடையாது என்ற நிலை ஏற்பட்டு விட்டது. அவர் வகுத்த பாதையிலிருந்து அவரே தவறிவிட்டார்; தடுமாறி விட்டார். தவறு என்று எடுத்துக் காட்டினோம்; நாம் மட்டுமா? நாட்டு மக்கள் அனைவரும். இயக்கம் பெரிது; இயக்கத்தின் கொள்கைகள் மிக மிகப்பெரிது; கொள்கையை விட்டுக் கொடுக்க மாட்டோம்; கொள்கைக்கு இழுக்கு வர விடமாட்டோம்; தவறு செய்தது தலைவரேயானாலும் கண்டித்திடத் தயங்கோம்; என்ற குரல், நாடெங்கும் கேட்டது; தலைவர் தம் வழியே செல்கிறார்; தவறை உணராது; சரியென்று சாதித்துக் கொண்டு; திராவிடர் கழகம் மூன்று மாத காலமாகச் செயலற்றுக் கிடந்தது.

கழகம் கொள்கையில் வழுவாது

திராவிடர் கழகம் எதற்காகப் பாடுபட்டதோ, எவருடைய நன்மைக்காக, எந்த சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக உழைத்ததோ, அதே மக்களுக்காக, ஏழை எளியவர்களை ஏழ்மையிலிருந்து விடுவிக்க, தாழ்ந்த மக்களை உயர்ந்தோராக்க, வாழ வழியற்ற மக்களுக்கு வாழ்க்கைப் பாதை வகுத்துக் கொடுக்க, இல்லாமையை இல்லாததாக்க, கொடுமையை ஒழித்துக் கட்ட "எல்லோரும் ஓர் குலம்" என்ற ஏற்பாட்டை வகுக்க, ஏற்படுத்தப் பட்டதோ, அதே கொள்கை வழி நின்று, குறிக்கோளைப் புறக்கணிக்காது பாடுபட்டு வரும் திராவிட முன்னேற்றக் கழகம்.

கொள்கைக்காகவே விலகினோம்

கொள்கை பிடிக்காமலோ, கோணல் புத்தி படைத்தோ, அல்ல நாங்கள் விலகியது, வெளியேறியது; கொள்கை வேண்டும், அதுவும் நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும்; நாடும் மக்களும் நலம் பெறும் முறையில் கொள்கைக்குக் குந்தகம் விளைவிக்கும் காரியத்திற்குப் பக்கபலமாக இருந்து, பணியாற்ற முடியாது; என்ற நிர்ப்பந்த நிலையிலே தான் விலகினோம், விலக நேரிட்டது. பெருந்தன்மை வேண்டும் என்ற ஒரே காரணத்தினால்தான் மோதலைத் தவிர்த்து, கழகத்தைக் கைப்பற்றும் பணியை விடுத்து விலகினோம், அதுமட்டுமல்லாமல், தலைவர் எல்லோர் மீதும் நம்பிக்கையில்லை, நம்ப முடியாது, என்று வேறு கூறியிருக்கிறார். சோம்பேறிகள், செயலாற்ற முடியாத சிறுவர் கூட்டம்; உழைக்கத் தெரியாதவர்கள், என்று குற்றம் சாட்டியிருக்கிறார்! யாரைப் பார்த்து? உழைத்து உழைத்துக் கட்சியைக் கழகத்தை உருவாக்கிய உண்மைத் தொண்டர்களை, நிர்வாக உறுப்பினர்களை, தம் வாழ்வையும் பாழ்படுத்திக் கொண்ட இளைஞர்களைப் பார்த்து!

திறத்தைக் காட்டுவோம்!

ஒரு குடும்பத் தலைவன் சதா தன் மக்களில் சிலரைப் பார்த்து, "நீ சோம்பேறி, வேலைக்கு லாயக்கற்றவன், வீணன், என்று தூற்றிக் கொண்டே இருந்தால், மகன் நிலை என்னவாகும்? உண்மையிலேயே உழைக்கும் மகன் உள்ளம் உடைந்து தானே போவான். அது மட்டுமா? சற்று விவேகமும் ரோஷமும் படைத்த மைந்தன் வீட்டை விட்டு வெளியேறி, தொழில் புரிந்து தன் நிலையைப் பலப்படுத்தி, தகப்பனைக் கூப்பிட்டுப் "பார் அப்பா! வீணன், வேலைக்கு லாயக்கற்றவன், சோம்பேறி என்று கூறினீரே, பாரும் எனது திறத்தை, செயலாற்ற விடவில்லை நீர். சதா எல்லாவற்றையும்

தூக்கிப் போட்டுக் கொண்டு எங்களை எரிச்சலோடு ஏசினீர். பாரும் எமது வேலையை, வேலையின் திறத்தை, வெற்றியை" என்றுதானே கூறுவான்? காட்டுவான்.

அது போலவே தான் நாமும் நம்மை மதியாத, இகழ்ந்த, தூற்றின, துச்சமென மதித்த, தலைவரின் தலைமையை விட்டு வெளியேறித் தனிக் குடித்தனம், தனி முகாம், தனிக்கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்திருக்கிறோம். நாம் உழைத்து உருவாக்குவோம் இந்தக் கழகத்தை.

சுவீகாரப் பிள்ளை

நான் தான் அவரோடு பலத்த கருத்து வேற்றுமை கொண்டேன் என்றும், அவரைப் பிடிக்கவேயில்லை என்றும் பேசுவது தவறு, உண்மைக்கு புறம்பானது. எனக்கு அவரோடு தொடர்பு ஏற்பட்டது 1935-ம் ஆண்டில், நான் அப்போது பி.ஏ. ஹானர்ஸ் பரிட்சை எழுதியிருந்தேன். பரிட்சை முடிவு தெரியாத நேரம் அது. அப்போது கோவைக்கடுத்த திருப்பூரில் ஓர் வாலிபர் மாநாடு நடந்தது. அங்குதான் பெரியாரும் நானும் முதலில் சந்தித்தோம். அவரிடம் எனக்குப் பற்றும் பாசமும் ஏற்பட்டது.

அவரது சீர்திருத்தக் கருத்துக்கள் எனக்குப் பெரிதும் பிடித்தன. பெரியார் என்னைப் பார்த்து "என்ன செய்கிறாய்" என்று கேட்டார். 'படிக்கிறேன், பரிட்சை எழுதியிருக்கிறேன்' என்றேன். 'உத்தியோகம் பார்க்கப் போகிறாயா?' என்றார். "இல்லை. உத்தியோகம் பார்க்க விருப்பமில்லை, பொது வாழ்க்கையில் ஈடுபட விருப்பம்" என்று பதிலளித்தேன். அன்று முதல் அவர் எனது தலைவர் ஆனார். நான் அவருக்குச் சுவீகாரப் புத்திரனாகி விட்டேன். பொது வாழ்வில் அன்றிலிருந்து இன்றுவரை சுவீகாரப் பிள்ளைதான் நான் அவரது குடும்பத்தாருக்கு! இன்றும் கூட அந்தத் தொடர்பு விடவில்லை எனக்கும் அவருக்கும். ஏன்? அவருடைய அண்ணார் பிள்ளை சம்பத் என்னுடைய சுவீகாரப் பிள்ளை. இப்போது 14 வருடங்கள் அவரோடு பழகினேன். 14 வருடங்களாகப் பொதுவாழ்வில் இருக்கின்றேன்.

நான் அறிந்த ஒரே தலைவர், ஒரே கட்சி!

இத்தனை ஆண்டுகளிலும் நான் அறிந்த தலைவர், தெரிந்த தலைவர், பார்த்த தலைவர் இவர் ஒருவர்தான். வேறு தலைவரின் தலைமையில் நான் வேலை செய்ததும் கிடையாது, செய்யவும் மனம் வந்ததில்லை, வராது. அதே காரணத்தினால்தான், இன்றுகூட,

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கூடத் தலைவரை ஏற்படுத்த வில்லை; அவசியம் என்று கருதவில்லை. இருதய பூர்வமான தலைவர், இருதயத்திலே குடியேறிய தலைவர், நமக்கெல்லாம் அப்பொழுது நல்வழி காட்டிய பெரியார் அமர்ந்த பீடத்தை, தலைவர் பதவியை, நாற்காலியை காலியாகவே வைத்திருக்கிறோம். அந்த பீடத்திலே, நாற்காலியிலே வேறு ஆட்களை அமர்த்தவோ, அல்லது நாங்களே, அல்லது நானே அமரவோ விரும்பவில்லை.

பகையுணர்ச்சி நமக்குக் கிடையாது

நான் மிக மிகத் தெளிவாகக் கூறிவிடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் எந்த விதத்திலும் திராவிடர் கழகத்திற்கு எதிரானதல்ல, எதிர் நோக்கம் கொண்டதுமல்ல. கொள்கை ஒன்றே, கோட்பாடும் ஒன்றே. அங்கிருந்தவரில் பெரும்பாலோர்தான் இங்கு இருக்கின்றனர். குடும்பத் தலைவரின் போக்குப் பிடிக்காத காரணத்தால், மக்கள் வேறு மனையில் வசிக்கும் பண்பினைப்போல, தன்மையைப் போல, பகையுணர்ச்சி சற்றும் கிடையாது நமக்கு.

இக்கூட்டத்தின் இடையே மழை பொழிந்து சற்று சங்கடத்தைத் தருவதுபோல, இடை இடையே சிறு சிறு தூறல்கள் தூறலாம்; நம்மிடையே அது வார்த்தை வடிவிலே வரலாம்; விசாரப் படாதீர்கள். அதுவும் அந்தப் பக்கமிருந்துதான் வரலாம். இப்பக்கமிருந்து நிச்சயம் உண்டாகாது.

மோதுதல் வீண் வேலை

பெரியார்தான் எங்களை மறந்தார். உதாசீனம் செய்தார், உதாவாக்கரைகள் என்று கூறினார், மனம் நோகும்படி பேசினார், எழுதினார். நடந்தார், நடந்துகொண்டிருக்கிறார். நாம் அவரோடு மேலும் மேலும் போராடவோ, மோதவோ போவதில்லை. விவேகமில்லை என்று கருதுவதால், வீண் வேலை என்று நினைப்பதால்.

எனக்கு விளைவு தெரியாதா?

அவர் போக்கைக் கண்டித்ததால் என்ன திடீர் லாபம் ஏற்பட்டு விட்டது. எனக்கோ, அல்லது என்னோடு நிற்கும் நண்பர்களுக்கோ? ஒன்றுமில்லை! எனக்குத் தெரியாதா? யார் என்ன கூறுவர் என்பது. எனக்குத் தெரியும். பெரியாரைக் கண்டிப்பதால் சிலர் ஏசுவர், சிலர் தூற்றுவர் பற்பல விதமாக. நேற்றுவரை அறிஞன் என்று போற்றப்பட்டானே இன்று என்ன அறிந்தான் இவன்?

என்று கேலி செய்யும் கூட்டம் கிளம்பும் என்பது தெரியும். நான் எழுதிய சினிமாக் கதையைப் பற்பல விதமாகப் புகழ்ந்தவர்களும், என்னப்பா, அதிலே இருக்கிறது? என்று நையாண்டி செய்வர் என்பதும் தெரியும். நேற்றுவரை எனது 'கம்பரசத்தை' இனிப்பாகக் கருதியிருந்தோர், இன்று பழைய காடியாகக் கருதுவோராகக் கிளம்புவர் என்பதும் அறிவேன். நான் ரேடியோவில், ஆங்கிலத்தில், பாரதியார் பற்றிப் பல நாள் முன்னரே பேசியிருக்கிறேன். "மக்கள் கவி பாரதி" என்ற தலைப்பிலே; ஆங்கிலத்திலே அப்போது போற்றினர். "ஆகா எங்கள் அண்ணாவைப் பார் உண்மைப் பாரதியாரைப் படம் பிடித்துக் காட்டுகிறான்" என்று போற்றினர். இன்றோ, "பார், பார் பயல் பாரதி விழாவிலே கலந்துகொண்டு காங்கிரசுக்கு நல்ல பிள்ளையாகிறான்" என்று தூற்றுவர் என்றும் தெரியும். தெரிந்தும் கடமையுணர்ச்சி, மனிதப் பண்பு ஆகியவை என்னைப் பெரியார் திருமணத்தைத் தகாதது என்று கூறிட வைத்தன.

எனக்கு எதிலே குறை ஏற்பட்டது?

எனது பீடத்தைக் காலி செய்து விட்டு வந்து விட்டேன் அங்கிருந்து நானாகவே. நான் விரும்பினால், விரும்பியிருந்தால், அங்கேயே இருந்திருக்கலாம், எல்லாவகை விருந்துகளோடும். என் நிலை என்ன அங்கே சாமானியமானதா? எளிதில் கிடைக்கக் கூடியதா? இல்லையே! அவர் அங்கே கடவுள் நிலையில் இருக்கிறாரென்றால், நான் தானே அர்ச்சகன்! அவர் தம்பிரான் என்றால், நான்தானே கட்டளைத் தம்பிரான்! அவர் தலைவர், நான் தளபதி! என்றுதான் போற்றப்பட்டேன். புகழப்பட்டேன். இன்று அவரது "வாழ்க்கைத் துணை நலம்" ஆன மணியம்மையும் கூட எனக்குத்தான் மற்ற எவரையும் விட அதிக மரியாதை, வரவேற்பு காட்டியிருக்கிறார். பெரியார் எழுதுவதாகக் கூறின டிரஸ்டிலும் என் பெயர் தானே முதலில் இருந்திருக்கும்! நான் என்ன இவ்வளவு விருதையும் புகழையும் கெடுத்துக் கொள்ள பித்தனா? வறட்டு ஜம்பம் பேசி, கழகத்தில் புகழ் வாழ்வைக் கெடுத்துக் கொள்ள நான் என்ன வெறியனா? அல்லது இதை விட்டு வேறு வேலை தேட குமாரசாமி ராஜாவிடம் ஏதாவது அப்ளிகேஷன் போட்டிருக் கிறேனா? அதுவும் இல்லையே! எனக்கு என்ன லாபம் ஏற்படும் என்று அவரைக் கண்டிக்க வேண்டும்? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்!

பெரியாரோடு மாறுபட்ட கருத்துக் கொண்டவன் என்று கூறப்படுகிறது. சிற்சில விஷயங்களிலே நான் மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்தாலும், நெடுநாட்களாகவே சில கருத்து வேறுபாடுகள் இருந்து வந்தாலும் அவைகளைப் பற்றி நான் கவலைப்படவில்லை. முடிந்த அளவு ஒத்துழைத்தே வந்திருக்கிறேன். முடியாத காலத்தில் மிக மிகக் கண்ணியமாக ஒதுங்கியே இருந்திருக்கிறேன். பெரியார் காலம் வரை அவர் வழிப்படியே நடக்கும் கழகம், பிறகு பார்த்துக் கொள்வோம், என்ற போக்கைக் கொண்டிருந்தவன்.

கண்டித்தவரில் முன்னோடும் பிள்ளை குருசாமியே!

சில தோழர்கள் இந்தத் திருமண விஷயத்தைக் கேட்டபோதே பெரிதும் ஆத்திரமும் ஆவேசமும் கொண்டனர்; துடிதுடித்தனர். உடனே அப்படிச் செய்ய வேண்டும், இப்படிச் செய்ய வேண்டும் என்று ஆவல் கொண்டனர். இதில் முக்கிய பங்கு கொண்டு முதல்வராய்த் திகழ்ந்தவர் தோழர் எஸ். குருசாமி அவர்கள் தான். அவர் கூறினார் என்னிடம், அண்ணா நாம் சும்மா இருக்கக் கூடாது. உடனே ஒரு கண்டனக் கூட்டம் சென்னையில் போட்டே தீர்க்க வேண்டும். கூட்டம் போடுங்கள். நானே தலைமை வகித்து நடத்துகிறேன், என்று வீர முழக்கமிட்டார்.

இதனைத் தடுத்து நிறுத்தியது நான் தான். அவ்விதம் ஆத்திரப்பட வேண்டாம், வேண்டுகோள் விடுப்போம்; விளைவைப் பொறுத்திருந்து பார்ப்போம் என்று சமாதானப்படுத்தினேன்.

ஈரோடு மாநாடே காட்டும்!

தூத்துக்குடி மாநாட்டைக் கண்டவர்கள், ஈரோடு மாநாட்டையும் காணத்தானே நேர்ந்தது. தூத்துக்குடி மாநாடு முடிந்ததும் என்ன பேச்சு நடந்தது. நாட்டிலே சிலரிடமாவது? தூத்துக்குடி மாநாட்டுக்கு அண்ணாதுரை வரவில்லை, ஒழிந்தான் இதோடு. கழகத்தை விட்டு மட்டுமல்ல, பொதுவாழ்க்கையே அவனுக்கு இனிக் கிடையாது. அஸ்தமித்து விட்டது பொதுவாழ்வு என்று எக்காளமிட்டனர். அது மட்டுமா? தனியாக அவன் வந்தால் அவன் வாழ்க்கையே முடிந்து விடும், என்ற நிலைதான் என்று கூட பேசப்பட்டதாம். அப்படிப்பட்ட நிலை வெகு விரைவிலே மாறி எனக்காகப் பெரியாராலேயே, பெரியாரின் ஊரிலேயே, ஈரோடு நகரத்திலேயே, மாபெரும் மாநாடு எனது தலைமையில் நடத்தப்பட்டது. அடையும் ஆறுதல் நேரத்திலே இந்த வரவேற்புப் பத்திரம் அவர் கண்களில் படாமலா போகும்! அப்படி அவரால் அன்பாக நடத்தப்பட்டு வந்த நான் இல்லை! திரும்பிப் பார்த்தால் சம்பத்து இல்லை! கும்பகோணம் போனால் வரவேற்கக் குடந்தை தோழர் கே.கே. நீலமேகம் இல்லை! திருச்சியிலே பராங்குசமு

மில்லை! மதுரையிலே முத்து இல்லை! விருதுநகர் ஆசைத்தம்பி, தூத்துக்குடி நீதிமாணிக்கம், கே.வி.கே.சாமி முதலானோர் காணோம். நம் பக்கம் கோவில்பட்டி வள்ளிமுத்து, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, சென்னையிலே நடராஜன், கோவிந்தசாமி முதலிய யாருமே நம்மை விட்டு ஏகினர்; என்ன உழைப்பு! உறுதி படைத்தோர்கள்! இவர்கள் இல்லையே என்ற ஏக்கம் பெரியாருக்கு வராமலா போகும்! வந்தே தீரும்! அப்போது அவர் மகிழ்ச்சி அடைவாரா! அவர் வேண்டுமானால் நடிக்கலாம், மகிழ்ச்சியோடு இருப்பதாகக் காட்டிக் கொள்ளலாம் பிறர் முன். பலர் என்னைக் கூறுவர் நான் மிக நன்றாக நடிக்கிறேன் என்று. இதெல்லாம் நான் ஐயாவிடம், பெரியாரிடம் கற்ற பாடத்திலே ஒரு சிறு பகுதி, ஐயா மிக மிக நன்றாக நடிப்பார் மகிழ்ச்சியோடு இருப்பது போல, உண்மையில் மகிழ்ச்சி இருக்காது. இருக்க முடியாது, மனித உள்ளம் படைத்த எவராலும் இயலாது.

சோம்பேறித் தனத்தின் விளைவா?

திராவிட முன்னேற்றக் கழகத்தில் பணியாற்றத் தொடங்கி யிருக்கிறோம். நான் மிகவும் சோம்பேறி, பெரியார் போல் உழைக்க முடியாது என்று கூறுகிறார்கள். நான் ஒப்புக் கொள்ளுகிறேன். பெரியார் போல உழைக்க முடியாது என்று ஏன்? அவருக்கு உழைக்க சக்தி, போதுமான வசதியிருக்கின்றன. அவ்வளவு வசதியும், சக்தியும் பெற்றவனல்ல நான் என்பது மட்டுமல்ல. பெரியார் போல உழைப்பதே தவறு, கூடாது, தேவையற்றது என்ற கருத்துடையவன் நான்; அது ஜனநாயகத்திற்கு ஏற்றதல்ல; முரண்பட்டது என்ற கருத்தும் கொண்டவன். ஒரே மனிதர் தானே எல்லாப் பொறுப்பையும் வகிப்பது தவறு. பிறருக்கும் சந்தர்ப்பம், வசதியளிக்க வேண்டியது கடமை என்ற போக்கைக் கொண்டவன். சோம்பேறி என்று கூறுவதுதான் எனக்கும் பொருந்துமா? என்று பாருங்கள். எட்டு ஆண்டுகளாக நான் ஒரு வார இதழ் 'திராவிட நாடு' நடத்தி வருகிறேன். காஞ்சியிலிருந்து இதனை நான் ஒருவனே நடத்தி வருகிறேன். இது சோம்பேறித்தனத்தின் விளைவா? என்று கேட்கிறேன். இந்த பத்திரிகையிலே ஒரிரு பக்கங்களைத் தவிர, மற்றவை யாவும் என்னாலேயே எழுதப்படுபவை. இதுவும் சோம்பேறித்தனத்தின் விளைவா? மாலைமணி சென்னையிலும், திராவிட நாடு காஞ்சியிலும் நடக்கின்றன. மாலைமணி தினசரிப் பத்திரிகை. இரண்டுக்கும் நான் ஆசிரியர் வேலை பார்க்கிறேன். சோம்பேறித்தனத்தின் விளைவா?

இடையிலே பல பகுத்தறிவுப் பிரசார நாடகங்கள் எழுதியிருக்கிறேன். சோம்பேறித்தனத்தின் விளைவா? சில நாடகங்களில் நானே வேஷம் போட்டு நடித்திருக்கிறேன். சோம்பேறித்தனத்தின் விளைவா? இரண்டு சினிமா கதைகள் எழுதியிருக்கிறேன், சோம்பேறித்தனத்தின் விளைவா? பத்துப் பதினைந்து புத்தகங்கள் வேறு வெளிவந்திருக்கின்றன; சோம்பேறித்தனம் தான் காரணமா? இதனிடையே பல முறை பல பிரசாரக் கூட்டங்களுக்கும் போயிருக்கிறேன், சோம்பேறித்தனத்தின் விளைவா? இல்லையென்பது தானே பதில்! எதற்காக இதனைக் கூறுகிறேன், சோம்பேறி என்று எண்ண வேண்டாம், காரியமாற்றும் திறன் உண்டு. சக்தி இருக்கிறது; என்பதைக் காட்டத்தான். வேலை செய்யும் திறமையும், ஆற்றலும், ஆர்வமும் நிச்சயம் உண்டு. சமீபத்தில் தோழர் குருசாமி அவர்கள், இளைஞர் - முதியோர் பற்றி ஆராய்ச்சி நடத்தி கிழவர்கள் திறமையைப் பற்றி பெரிதும் எழுதியிருக்கிறார்கள். நான் என்ன துள்ளி விளையாடும் பள்ளிப் பருவத்துப் பாலகனா? அல்லவே, நாற்பது வயதை அடைந்தவன் தான். இளைஞனின் துடிதுடிப்பும், கிழவரின் பொறுமையும் காரியமாற்றும் கருத்தும் ஒருங்கே கொண்ட வயதுதான். நாற்பதைக் கடந்தவன் ஐம்பதுக்கு உட்பட்டவன், அதாவது இந்த பத்து ஆண்டைத்தான், இளமைக்கும் முதுமைக்கும் இடையேயுள்ள காலம் என்று கூறுவர். பெரியார் தமது சுயமரியாதைக் கோட்பாட்டை இந்தப் பத்து ஆண்டுகளில்தான்; அதாவது நாற்பதுக்கும் ஐம்பதுக்கும் இடையே தான், அமைத்தார் என்னாலும் செய்ய முடியும், முறைப்படி அவசியத்திற்கேற்ற வகையில்.

எந்த நலம் கெட்டுவிட்டது?

மற்றொரு காரணம் கூறப்படுகிறது. அதாவது நான் சுயநலத்துக்காகவே இந்த ஏற்பாட்டை எதிர்க்கிறேன் என்று எனக்குத் திராவிடர் கழகத்திலே இருந்தபோது, எந்த நலம் கெட்டு விட்டது? ஒன்றும் கெடவில்லையே! நாடகம் எழுதாதே என்று தடுத்தாரா தலைவர். இல்லையே! சினிமாவுக்குக் கதை எழுதாதே என்று கண்டித்தாரா பெரியார், என்றாவது? கிடையாதே! சுயநலமாயிருந்தால் எனக்கு அங்கு இருப்பதால் என்ன கெட்டு விட்டது? ஒன்றும் கெடவில்லையே! சிற்சில சமயம் தலைவர் போக்குப் பிடிக்காது இருந்திருக்கலாம். அவர் கருத்துகள் எனக்குப் பொருத்தமற்றதாகத் தோன்றியிருக்கலாம். அப்போதெல்லாம் கூட முடிந்தவரை ஒத்துழைக்கத் தான் செய்தேன்; சிற்சில சமயம்

நாசுக்காக பெருந்தன்மையாக ஒதுங்கியுமிருந்தேன். அரசியல் துறவறம் பூண்டுமிருந்தேன் சில காலம். இன்று காரணமின்றி தூற்றப்படுகிறேன்! கவலையில்லை; நேற்று நம்மை புகழ்ந்தவர் தானே, அவர்! இன்றுகூட என் மனக்கண் முன்னே ஒரு காட்சி ஓடி வந்து நிற்கிறது. ஈரோட்டிலே விடுதலை காரியாலயத்தில் நான் வேலைப் பார்த்துக் கொண்டிருந்த காலம் அது; அப்போது விடுதலையில் சென்னை கார்ப்பரேஷன் பற்றி ஒரு தலையங்கம் தீட்டினேன். "ரிப்பன் மண்டபத்து மகான்கள்" என்பது அதன் தலைப்பு. அன்று மாலை நான் ஈரோட்டில் பெரியாரின் மூன்றடுக்கு மாளிகையில், கடைசி மாடியில் உலவிக் கொண்டிருந்த நேரத்தில் பெரியார் மூன்று மாடிகளையும் கஷ்டத்துடன் படியேறி, கடந்து வந்து, என் முதுகைத் தட்டி அண்ணாதுரை! உன் தலையங்கம் ரொம்ப நன்றாயிருந்தது. எனக்கு மிகவும் சந்தோஷம் என்று வெகுவாக பாராட்டினார். இதைக் கேட்ட நான் 'இதற்காக ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு மாடி ஏறி வரவேண்டும்? நான் சாப்பிடக் கீழே வரும்போது சிரமமின்றிக் கூறியிருக்கலாமே இதனை என்று தெரிவித்தேன். அதற்குப் பெரியார், 'என் மனதில் நல்லெண்ணம் தோன்றியது. சந்தோஷப்பட்டடேன். அதை உடனே கூறிவிட வேண்டுமென்று நினைத்தேன். ஏனென்றால் நான் பிறரைப் புகழ்ந்து பேசிப்பழக்கப்பட்டவனல்ல, ஆகவே உடனே சொல்லி விடவேண்டுமென்று வந்து சொல்லிவிட்டேன்" என்று சொன்னார். இந்த ஒரு சம்பவம் போதுமே எனக்கு ஆயுள் பூராவும், அவரிடம் திட்டு வாங்கினாலும் பரவாயில்லையே. புகழ்ந்த பிறகுதானே திட்டுகிறார். முதலிலிருந்து கடைசிவரை திட்டு வாங்கிக் கொண்டு, இன்னும் இருந்து கொண்டிருக்கிறார்களே, அதைவிட நான் மேல். லாப நஷ்ட கணக்குப் போட்டுப் பார்த்தேன். அவர் புகழ்ந்தது அதிகம், இகழ்ந்தது கொஞ்சம். எனவேதான் அவர் திட்டுவதைப் பற்றிக் கவலைப்படவில்லை. நான் அவரிடம் வெளிப்படையாக கொஞ்சம் அதிருப்தி தெரிவித்தது கோவை மாநாட்டில் தான். நான் கேட்டேன் திருவண்ணாமலையில் ஆச்சாரியாரைச் சந்தித்துப் பேசிய இரகசியம் என்ன? கூறுங்கள் என்று வெளிப்படையாக கேட்டேன். இதைக் கூட நான் கேட்க முதலில் விரும்பவில்லை. ஆனால் நாட்டு நிகழ்ச்சிகள் என்னைக் கேட்கும்படி வைத்துவிட்டன. என்னைக் கண்ட பலர், ஏனப்பா! முன் ஆச்சாரியர் வந்தபோது கறுப்புக் கொடி பிடித்தீர். ஜெயிலுக்கும் போனீர்கள். இப்பொழுது என்ன உங்கள் தலைவர் இரகசியமாக சந்திக்கிறார் திருவண்ணாமலையில், என்று கேலி செய்தனர். நையாண்டி செய்தனர். நகைப்புக்கு இடமாக இருந்தது நிலைமை, இந்த

நிலைமை தெளிவுபட, அதற்குப் பின் நான் அவரைச் சந்தித்தது அந்த மாநாட்டில்தான். திருவண்ணாமலையில் என்ன இரகசியம் பேசினீர்கள் என்று கேட்டேன். அதோடு நிற்கவில்லை, நடந்ததைச் சொல்வது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் கெடுதி என்று தோன்றினால், சொல்லத் தேவையில்லை, சொல்ல வேண்டாம் என்றும் அன்று, அங்கு, தெரிவித்திருக்கிறேன். சொல்லும்படி வற்புறுத்தவில்லை என்றும் கூறினேன்.

அறைகூவல் விடுத்துப் பார்க்கட்டும்

கோவையிலே பெரியார் பின்னர், தான் ஏதோ தீவிர திட்டத்தில் இறங்கப் போவதாகவும் தன்னைத் தானே முதல் பலியாக்கிக் கொள்ளப்போவதாகவும் தெரிவித்தார். இதைக் கேட்ட நான் பயந்தே போனேன். ஏன் அவர் பலியாக வேண்டும், கூடாதே, என்று நினைத்தேன். ஆனால் சமீபத்தில் பெரியார் திருச்சியில் பேசிய பேச்சைப் பார்த்தவுடன் எனக்கு அன்று இருந்த பயம் நீங்கி விட்டது. நான் இன்னும் 10 ஆண்டுகளாவது வாழ விரும்புகிறேன். அதற்காகத்தான் நான் திருணம் என்கின்ற பேரால் ஒரு ஏற்பாடு, எனது வாழ்க்கைக்குத் துணை ஏற்படுத்திக் கொண்டேன் என்று பேசினார். அவர் நன்றாக வாழட்டும்! சீனக்கிழவரைப் போல, பர்மிய நாட்டு வயோதிகரைப் போல், துருக்கி நாட்டு பெரியாரைப் போல் வாழட்டும்! இன்னும் காந்தியார் வாழ விரும்பியபடி 125 வயது வரையில் வாழட்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரும் பணியைக் கண்களால் காணட்டும். அவர் கொள்கை, திட்டம், நம்மால் நல்ல முறையில் நிறைவேற்றப்படுகிறதைக் கண்டு களிக்கட்டும்! தவறு இருந்தால் திருத்தட்டும்! போகும் பாதை தவறு என்றால் சுட்டிக் காட்டட்டும்! ஆனால் வேலை செய்வதைத் தடுக்க வேண்டாம், பகை உணர்ச்சியை வளர்க்க வேண்டாம், திராவிடர் கழகத்துக்கும் - திராவிட முன்னேற்ற கழகத்துக்குமிடையே! நீங்கள் எப்படி வேலை செய்கிறீர்கள் என்று ஒரு அறைகூவல் (Challenge) விடுத்து விட்டு அவர் தம் வழி நடந்து கொண்டு போகட்டும்!

சமதர்ம பூங்கா

திராவிடர் கழகமாகட்டும், திராவிட முன்னேற்ற கழகமாகட்டும், படை வரிசை வேறு வேறு என்றாலும் கொள்கை ஒன்றுதான், கோட்பாடு ஒன்றுதான்; திட்டமும் வேறு வேறு அல்ல, என்ற நிலை இருந்தே தீரும். படைவரிசை இரண்டுபட்டுவிட்டது என்று எக்காளமிடும் வைதீகபுரிகளும், வடநாட்டு ஏகாதிபத்தியத் துக்கும் சம்மட்டியாக விளங்க வேண்டும் இரு கழகங்களும். இரு

திக்குகளிலுமிருந்தும் வடநாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழித்து வைதீகக் காட்டை அழித்து சமதர்மப் பூங்காவாகத் திராவிடத்தைச் செழிக்கச் செய்தல் வேண்டும்.

அதிலே எந்த கழகமும் பூங்கா அமைத்தாலும் அதில் பூக்கும் புஷ்பங்கள், காய்கள் கனிகள் திராவிடத்தின் எழுச்சியை, மலர்ச்சியை, மகிழ்ச்சியைத்தான் குறிக்கும். இரு பூங்காவும் தேவை. ஒன்றோடொன்று பகைக்கத் தேவையில்லை. அவசியமுமில்லை. எது புஷ்பித்தாலும் மாலையாகப் போவது திராவிடத்துக்குத்தான் என்ற நல்லெண்ணம் வேண்டும். அதை விட்டு நள்ளிரவிலே பூங்காவின் வேலி தாண்டி பாத்தியை அழிக்கும் வேலிதாண்டிகள் வளரக் கூடாது.

கொள்கையைப் பரப்புவதே பணி

இப்போது மழை வந்தது. சிறிது நேரம் சங்கடமாகத்தான் இருந்தது. இப்போது மழை நின்றிருக்கிறது. மழை பெய்ததற்கு முன்பு இருந்த வெப்பம் மாறி குளிர்ந்த காற்று வீசுகிறது. மெல்லிய மேகம் பரவி அழகளிக்கிறது.

மழை பெய்து நின்று கறுத்த வானம் வெளுத்திருப்பது போல இன்று புதுக் கழகம் அமைத்து முன்னேற்ற வேகத்துடன் மோதுதல் இன்றிப் பணியாற்றப் புறப்பட்டு விட்டன.

கொள்கையைப் பரப்புவதே நமது முதல் பணி. பகைமை உணர்ச்சியை அடியோடு விட்டொழிக்க வேண்டும். நான் உண்மையிலேயே கூறுகிறேன், நமது எழுத்தாளர் எவரும் கடுமையான நடையில் தாக்குவதைக் குறைத்து விட வேண்டும். இதனால் நமக்கு லாபமில்லை. பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள அத்தனை பேருக்கும் நஷ்டந்தான். திராவிடர் கழகத்தை நாம் தாக்கி, முன்னேற்றக் கழகத்தை அவர்கள் தாக்கி, அவர்கள் லாபத்துக்காகத் தான் வேலை செய்கிறார்கள் என்று நாம் கூற, இல்லை! இல்லை! அவர்கள் தான் சுயநலமிகள், லாப வேட்டைக்காரர்கள் என்று அவர்கள் ஏச, மக்கள் இவர்களுக்கும் லாபம்தான் குறிக்கோள், அவர்களுக்கும் லாபம்தான் குறிக்கோள் என்று கருதும் நிலை ஏற்பட்டு விடும். எனவேதான் கூறுகிறேன்.

நம்மிடையே பகையுணர்ச்சி கூடாது. இதே சமயத்தில் கொள்கையை விட்டுக் கொடுக்கவும் கூடாது. பிரிவினை, பொருளாதாரச் சீரழிவிலிருந்து மீட்சி, பழைமையிலிருந்து விடுதலை ஆகிய லட்சியங்களுக்காகவே உழைக்க வேண்டும்.

பாதை தவறிய தலைவரைப் புறக்கணித்தோம்

இவ்வளவு பேசுகிறாயே பேதம் கூடாது, பிளவு கூடாது என்று! ஏன் நீங்கள் அங்கிருந்தே பணியாற்றக் கூடாது? விலகுவானேன்? வேறு கட்சி அமைப்பானேன்? என்று கேட்கத் தோன்றும். கேள்வி சரிதான். பாதை தவறிய தலைவரைப் புறக்கணித்தோம். தவறை தவறுதான் என்று எடுத்துரைத்தோம். அவரோடிருந்து பணியாற்ற முடியாத நிலைமையிலிருக்கிறோம். எவரிடமும் நம்பிக்கையில்லை என்ற இழி சொல்லையும், உதவாக்கரைகள் என்ற பழியையும், தூற்றலையும், ஏசுதலையும் சுமக்கும் பெரும்பாரம், பெருஞ்சுமை ஏற்பட்டு விட்டது. இவைகளைத் தாங்கிக் கொண்டு அவரோடு ஒத்து வேலை செய்வது முடியாத காரியம். ஆகவே, விலகினோம் பெருந்தன்மையோடு வேறு அமைப்பில் பணியாற்றுகிறோம், லட்சியத்தை நிறைவேற்ற.

பொறாமை கிடையாது

எந்த அளவுக்கு வேலையைக் குறைத்துக் கொள்ளலாமோ அந்த அளவுக்குக் குறைத்துக் கொள்ளப் பிரியப்படுபவன் நான். அதுவே எனது சுபாவம். அப்படிப்பட்ட நான் விலகி, வேறு கட்சியில் தொண்டாற்றத் தொடங்கியிருக்கிறேன். காரணம், எனது நண்பர்கள், கழகத்தில் முக்கிய பங்கு கொண்டு தொண்டாற்றும் பெரும்பாலோர் பொது வாழ்விலேயே சலிப்புற்று, பொது வாழ்வையே விட்டு விலகும் அளவுக்குச் சென்றனர்.

பெரியாரின் திருமண ஏற்பாட்டைக் கண்டித்து 250 கழகங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றின, வேலை செய்ய முடியாது அவரோடு என்று! நிர்வாக அங்கத்தினர்களில் மிகப் பெரும்பான்மையோர் அவரோடு ஒத்துழைக்க முடியாது எனக் கூறிவிட்டனர். எல்லாப் பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் அவரோடு ஒத்துழையாமை செய்தனர். கழகப் பத்திரிகைகள் யாவும் அவரை ஆதரிக்கவில்லை.

பெரியாருக்கு வலது கை இடது கை என இருந்தவர் - பெரியாரின் முன்னோடிகள், பின்னே சென்றவர்கள் - உறவினர்களிலும் உற்றாராக இருந்தவர்கள் - உழைத்தவர்கள், உள்ளப் பண்பு மிக்கவர்கள், உற்சாகமுள்ளவர்கள், உணர்ச்சிமிக்க வர்கள், ஊருக்குத் தெரிந்தவர்கள், இவர்கள் யாவரும் பிரிந்தனர் அவரை விட்டு! அவரோடு ஒத்துழைக்கவில்லை. காரணம் அவர் திருமண விஷயந்தான். மணியம்மையைப் பெரியார் திருமணம் செய்து கொண்ட விஷயம் திராவிட கழகம் இதுவரை சொல்லிவந்த

கொள்கைகளுக்கு விரோதமாய் இருக்கிறது. திராவிடர் தலைகளைக் குனியவைக்கும்படி செய்திருக்கிறது என்பதைத் தவிர, இவ் விஷயத்தால் எனக்கோ மற்ற யாருக்கோ பொறாமை கிடையாது. நான் ஏன் இதில் பொறாமைப்பட வேண்டும்?

பெரியாரை மணந்துகொள்ள மனுப்போட்ட பெண்ணா நான், பொறாமைப்பட!

சம்பத்துக்குப் பரிந்துபேச அவசியமில்லை

பெரியாருக்குச் சொந்தமான குடும்பச் சொத்துக்கள் இத்திருமணத்தின் காரணமாக சம்பத்துக்கே வராமல் போய்விடும். சம்பத்துக்காக நான் பரிந்து பேசுகிறேன், பெரியார் மீது துவேஷப் பிரசாரம் செய்கிறேன் என்று கூறுகிறார்களாம். உங்களுக்கு நான் ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். பெரியார் சொத்து விவரம் அதன் ஏற்பாடு உங்களில் பலருக்குத் தெரியாது. எனவேதான், அவர்களால் பேச முடிகிறது இதுபோல. சட்ட நுணுக்கம் தெரியாதவனல்ல சம்பத்து! சொத்து விஷயத்தில் ஆசை இருந்தால் சம்பத்து மணியம்மையிடம் நயமாகப் பேசிப் பணம் வாங்கிக் கொள்ளத் தெரியாதா? சென்று பேசமுடியாத நிலையிலே இருக்கிறாரா அம்மையார்? சம்பத்தின் சின்னம்மாதானே. இப்போது அவரைச் சந்தோஷப்படுத்தி சலுகைகள் பெறத்தெரியாதவனா?

பின் ஏன் குடும்பத்தை, வீட்டை விட்டு வெளியேறினான். அப்போது அவன்தான் விடுதலையின் மானேஜர். பெரியாரின் திருமணச் செய்தி கேட்ட அன்று, 18, 20 வயது சுலோச்சனா சென்னை, பெரியார் வீட்டிலிருந்து தனது ஒன்றரை வயதுக் குழந்தையோடு தன்னந்தனியாக வெளியேறி ஈரோடு சென்றார்கள். மணியம்மை உள்ளே புகுந்தார். மருமகள் வெளியேறுகிறார். தேவையா? பெரியாரின் திருமணத்தால், அவருடைய குடும்பத் தினரும், உறவினரும் தலை குனிந்தனர். திராவிடர் கழகத்தினர் சகலரும் தலை குனிந்து தேம்பி அழுதனர். இந்த வெட்கக் கேட்டைத் தாங்க முடியவில்லை. மாற்றார் மனமகிழும் நிலை வந்தது. கல்கி போன்ற பத்திரிகைகள் கேலியும், கிண்டலும் செய்யுமளவுக்குச் சென்றனர். திராவிடர் கழகம் தன்னாலே அழிந்துவிடும் என்று கேலிச் சித்திரம் தீட்டுமளவுக்குக் கொண்டு போய் விட்டது. இந்த நிலை வேண்டாம் என்றுதான் இப்போது திராவிடர் முன்னேற்றக் கழகம் தனியாய், பெரியார் வகுத்துச் சென்ற பாதையில் தீவிரமாய்ச் செல்ல முனைந்திருக்கிறது. இன்னும் அவருக்கும் எனக்கும் உள்ள பற்று, பாசம் அகலவில்லை; என்னை விடவில்லை; விட்டகுறை, தொட்டகுறை போகவில்லை; நான்

கேட்கிறேன், தோழர்களே! எது முக்கியம் நமக்கு? லட்சியமா? பெரியாரா, லட்சியம் தேவை. பெரியாரல்ல என்ற முடிவு செய்தோம். பிரச்சனை முடிந்தது. இதோ நம் கண்முன் வடநாட்டு ஏகாதிபத்தியம், மக்களை பாழ்படுத்தும் பாசிசம், பதுங்கிப் பாய நினைக்கும் பழைமை இவைகள் தான் ஒழிய வேண்டும்.

மொழிப் பிரச்னைக்கு முடிவுகாண வேண்டாமா?

தற்போது நம்மால் வெறுத்து ஒதுக்கப்பட்ட இந்தி, டெல்லி அரசியல் நிர்ணயசபையிலே, அரசியல் திட்டத்திலே முக்கிய அங்கமாக ஏற்பட்டுவிட்டது. நிலைமை என்ன இப்போது? இந்தி கூடாது என்று கூறினோம். குற்றமென்று கைது செய்தனர். இனி அரசியல் திட்டத்துக்கே விரோதி. நாட்டுக்கே துரோகி என்று குற்றஞ்சாட்டக் கூடும். அந்த நிலையிலே வடநாட்டு ஏகாதிபத்தியம் தன்னைத்தான் பலப்படுத்திக் கொண்டு முன்னேறுகிறது. மூன்று மொழிகளை நாம் சுமக்க வேண்டிய பெரும்பாரம் நமக்கு ஏற்பட்டு விட்டது. இந்தி நுழைவுக்குப் புதிய பலம், புதிய பாதுகாப்புத் தரப்பட்டு விட்டது. டெல்லி சர்க்காரால். இங்குள்ள மக்களின் நிலையை, நாட்டத்தை நாம் அறிவிக்க வேண்டும் அரசாங்கத்துக்கு.

அறிவுப் புரட்சிக்கு எதிர்ப் புரட்சி!

மற்றோர் புறம் பழமையும் வைதீகமும் காலட்சேபம் கதர்ப் பிரசங்கம் என்ற முறையிலே நாட்டிலே தமது பிடியைப் பலப்படுத்திக் கொள்ள வேலை செய்து வருகின்றன. சனிக்கிழமை “ஹிந்து” பத்திரிகையை எடுத்துப் பாருங்கள்! எத்தனையெத்தனை கதாப் பிரசங்கங்கள், காலட்சேபங்கள், பழமைக்குப் பக்கபலம் தேட, வைதீகத்தை வாழ வைக்க! அறிவுப் புரட்சிக்கு எதிர் புரட்சி செய்கின்றன! சாமேத விளக்கம், அதர்வண விளக்கம், உபநிஷத்து உபன்யாசம், கீதாஉபதேசம், தேவார திருவாசக பாராயணங்கள், நாயன்மார் ஆழ்வார் புராணங்கள் இப்படிப் பழமை தனது பிடியைப் பலமாக இறுக்கிக் கொண்டு போகிறது. இந்த நாட்டுப் பாசிசம் இதற்குப் பக்கபலமாக நிற்கிறது. பழமையும் பாசிசமும் ஒன்றோடொன்று இணைந்து பகுத்தறிவுப் பாசறையைப் பாழ்படுத்தித் தவிடுபொடியாக்கத் திட்டமிடுகின்றன. நிலைமையை நன்கு பயன்படுத்தத் திட்டமிடுகின்றன. இந்த நிலையிலே நாம் பொறுப்புணர்ச்சியோடு இலட்சிய நோக்கோடு நடந்து கொள்ள வேண்டும். நாம் புரியும் பிரச்சாரம் பத்திரிகைகளிலே வராது, பழமைக்கு ஆதரவுதேடும் பணியில் அவைகள் முனைந்துள்ளன என்ற காரணத்தால், நம்மிடையிலே கலகம் என்றால் விளம்பரம்

செய்வர் பத்தி பத்தியாக! நேற்று நடந்த நிர்வாகக் கமிட்டி உறுப்பினர் கூட்டத்தைப் பற்றி 'இந்து' பத்திரிகை வெளியிட்ட முறையைப் பாருங்கள். Split in Dravida kazhagam திராவிடர் கழகத்திலே பிளவு என்று தலைப்புக் கொடுத்துச் சேதி போடுகிறது. நிர்வாக உறுப்பினர் கூட்டம் என்று சொன்னால் கமிட்டிக் கூட்டம் போட என்று போட்டுக் காட்டுகிறது. பேதம், பிளவு அதிகமாக வழி வகுக்கிறது. திராவிட முன்னேற்ற கழகம் தோன்றியது என்ற சேதி போதும் என்றேன். போட்டதா அப்படியே? இல்லை! இது ஒரு சிறு 'சாம்பிள்' மாதிரி. நான் பெரியாரை குறை கூறினால் பத்தியாக ஆறுகாலம் தலைப்புடன் வரும். பெரியார் என்னை ஏசினால் பக்கம் பக்கமாக வரும். ஏன்? இருவரையும் பொதுமக்கள் முன் அயோக்கியர்கள், சுயநலமிகள் என்று எண்ணும்படி செய்யத்தான். இதனால் யாருக்கு லாபம்? என்பது எங்களுக்குத் தெரியாதா? நாங்கள் என்ன, புராணங்கள் படிக்காதவர்களா? "குருக்ஷேத்திரம்" ஏற்பட்டால், கண்ணனுக்குத்தான் லாபம் என்பது எப்படி எங்களுக்குத் தெரியாமல் போய்விடும்! மோதுதல் யாருக்குப் பயன்படும் என்பது தெரிந்துதான் செயலாற்றுகிறோம். தனியாக, தனி அமைப்பின் கீழ்.

ஓயமாட்டோம் உழைப்போம்!

பழமையும் பாசிசமும் முறியடிக்கப்படும் வரை ஓய மாட்டோம், உழைப்போம், உருவான பலனைக் காண்போம். அப்போது பெரியார் "பயல்கள் பரவாயில்லை" உருவான வேலைதான் செய்கிறார்கள் என்று உள்ளம் மகிழும் நிலை வரத்தான் போகிறது.

தூத்துக்குடி மாநாட்டுக்கு நான் போகவில்லை, ஒரு கேள்வித்தாள் சென்றது பெரியாருக்கு. "அண்ணா ஏன் வரவில்லை என்று." அதற்குப் பெரியார், "முத்தன் ஏன் வரவில்லை, அப்புறம் எம்.எஸ். சுப்புலட்சுமி ஏன் வரவில்லை, சுந்தராம்பாள் ஏன் வரவில்லை, என்று கேட்பீர்கள் போலிருக்கிறதே" என்று அலட்சியமாகப் பதிலளித்தார். அதற்குப் பிறகு ஈரோடு மாநாட்டிலே "அண்ணா வந்திருக்கிறார், மகனிடம் பெட்டிச் சாவியைக் கொடுத்து விடுகிறேன்" என்று கூறும் நிலை வரத்தான் செய்தது. அவர் "சாவியைக் கொடுத்தேன்" என்று கூறினார். அந்தச்சாவி எந்தப் பூட்டுக்கும் பொருந்தாத சாவி. எனவே அது எந்தக் காரியத்துக்கும் உபயோகப்படவில்லை. ஆனாலும் தூத்துக்குடி மாறி ஈரோடு வந்ததுபோல இன்றுள்ள நிலைமாறத் தான் போகிறது என்ற உறுதியோடு, உற்சாகத்தோடு பணிபுரிவோம்.

நாட்டிலே ஆற்றி வந்த நல்லறிவுப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து நடத்துவோம்! பாசிசப் பழமையையும் நாட்டை பாழ்படுத்தும் சக்திகளையும் எதிர்த்துப் போராடுவோம். நாட்டிலே இன்று 144 ஏராளம். புத்தகங்கள் பறிமுதல்! அச்சகங்களுக்கு ஜாமீன் தொகை ஓயவில்லை. குறையவில்லை. நேற்றுக் கூட நான் எழுதிய 'லட்சிய வரலாறு' என்ற புத்தகத்தைப் பற்றிப் போலீஸார் அது என்ன? இது என்ன? என்று கேள்விமாரி பொழிந்தவண்ணம் இருந்தனர். வடநாட்டுப் பாசிசத்தை ஒழிக்கப் பாடுபடும் திராவிட மக்களைப் பழமைப் பிடியினின்றும் விடுபட விரும்பும் பகுத்தறிவுவாதிகளை என்னவேண்டுமானாலும் செய்யலாம் என்று சர்க்கார் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு புத்தகமாகப் பறிமுதல் செய்து கொண்டே போகிறார்கள். அடக்கு முறையை வீசிக் கொண்டே இருக்கிறார்கள். இவ்விஷயமாக வெகு சீக்கிரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தக்கதொரு நடவடிக்கையிலே ஈடுபடப் போகிறது. சர்க்கார் காணத்தான் போகிறார்கள்! சர்க்கார் பறிமுதல் செய்த புத்தகம் பகிரங்கமாக விற்பனை செய்யப்படும் சைனா பஜாரில்!

இரண்யன் நாடகம் ஆடுக!

'இலட்சிய வரலாறு 6 அணா' 'இராவண காவியம் ரூ6' 'ஆரியமாயை 6 அணா' 'ஆசைத்தம்பி புத்தகம் நாலணா' என்று தொண்டர்கள் விலை கூறுவதைக் கேட்கத் தான் போகிறோம். இலட்சிய வரலாறு புத்தகம் இப்போது கிடைக்காது. எப்பொழுதோ விற்றுத் தீர்ந்துவிட்டதால் இலட்சிய வரலாறு" என்று கூறப்படும். முகப்பிலே மட்டும் "இலட்சிய வரலாறு" என்று இருக்கலாம். உள்ளே காலி காகிதம் வைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் விற்பர் இலட்சிய வரலாறு என்று கூறி, பறிமுதல் செய்யப்பட்ட புத்தகங்கள் அனைத்தும் இப்படித்தான் விற்கப்படப் போகின்றன! அப்போது இந்த சர்க்கார், என்ன செய்யப் போகிறது, எப்படி நடவடிக்கை எடுக்கப் போகிறது, எப்படி விளையாடப் போகிறது. பொதுமக்களும், பார்க்கத்தான் போகிறார்கள். இதே போல் நமது இயக்க நாடகங்கள் தடை செய்யப்படுகின்றன சர்க்காரால். தகாத செயல்கள்தான் இதுவும். தடை செய்யப்பட்ட நாடகங்களில் முதலாவதான, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இயற்றிய இரணியன் அல்லது இணையற்ற வீரன் என்பது.

திராவிட முன்னேற்றக் கழக முக்கியஸ்தர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். மன்றாடிக் கேட்கிறேன். அவர்களின் முக்கிய வேலை, முதல்வேலை இந்த நாடகத்தை ஆங்காங்கு பொதுமக்கள்

முன் நடத்திக் காட்டும் திட்டம் வகுக்கும்படி. இதற்கு நீங்கள் தயாரா? எத்தனைபேர் கை தூக்கிக் காட்டுங்கள் (கூட்டத்தினர் பெரும்பாலோர் கைகளும் உயர்ந்திருந்தன) எல்லோரும் கை தூக்கி விட்டீர்களே! இத்தனை பேரும் சென்றால் சர்க்கார் சிறையிலே இடமிருக்காதே! நமக்கும் திராவிடர் கழகத்துக்கும் பிளவு இல்லை, ஆனால் போட்டி உண்டு. போட்டி உணர்ச்சி உண்டு. தீவிரத்திலே அதாவது ஆங்கிலத்தில் கூறப்படும் Sportsmanship போட்டி உணர்ச்சி காரியம், ஆற்றும் திறமையிலே வேண்டும். இது கண்ணியத்தின் பெயரால், நாகரீகத்தின் பெயரால், நல்லறிவின் அடிப்படையில் ஏற்பட வேண்டும்.

புதுக்கழகம் ஒட்டுமாஞ்செடி

பகை உணர்ச்சியை வளர்த்து எதிரிகளுக்கு இடம் கொடுத்து ஏமாளிகளாகத் தேவையில்லை! நான் முன்னர் குறிப்பிட்டபடி 'கல்கி' பத்திரிகை, என்ன தைரியமாக எவ்வளவு சந்தோஷமாக தீட்டியது காங்கிரசுக்கு எதிராக ஒரு கட்சியும் இல்லையென்று! இந்து மகாசபைக்கு ஒரு வேலையும் இல்லை; கம்யூனிஸ்டுகள் கலகக்காரர்கள், சமதர்மிகள் வெற்றி பெறமாட்டார்கள், திராவிட கழகத்தினர் தன்னாலேயே அழிந்து விடுவர் என்று ஆருடம் கூறியது. இது ஆத்திரத்தின் மீது காட்டப்பட்ட ஆருடம். ஆசையின் விளைவு அப்பனே! இதை விட்டு விடு. மரம் அழியவில்லை அதிலிருந்து ஒட்டுமாஞ்செடி தோன்றியிருக்கிறது. இதை வெட்டிவிடமுடியாது. நான் திராவிட நாடு ஆரம்பித்த நேரத்திலே குடந்தையிலே ஒரு கூட்டத்தில் பேசினேன். அப்போது எனக்கு ஒரு கேள்வித்தாள் தரப்பட்டது. கேள்வி என்ன தெரியுமா "குடியரசு" இருக்க நீ ஏன் திராவிடநாடு ஆரம்பிக்கிறாய் என்று கேட்கப்பட்டது. நான் பதில் கூறினேன். 'குடியரசு, இருக்கிறது அதே கருத்தை எடுத்துக்கூற ஒரு ஒட்டுமாஞ்செடி முளைத்திருக்கிறது காஞ்சீபுரத்தில், அதே கொள்கைகளைப் பரப்ப.

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு ஒட்டுமாஞ்செடி தான். மண்வளம் ஏராளம். அதே பூமி, நீர்பாய்ச்சி, பதப்படுத்த, பாத்திகட்ட முன்னிற்போர் பலர். ஒட்டுமாஞ்செடி பூத்துக் காய்த்து கனிகுலுங்கும் நாள் விரைவில் வந்தே தீரும்! இதனால் ஒட்டுமாஞ்செடி மாமரத்துக்கு விரோதமல்ல. திராவிட கழகத்துக்கு முரணானது அல்ல. ஒத்த கருத்துக் கொண்டதே, ஒட்டுமாஞ்செடி!

பெரியார் அளித்த பயிற்சி

நம்மிடம் பணம் இல்லை. "இந்தப் பயல்களிடம் பணம் ஏது, கொஞ்ச நாட்களுக்குக் கூச்சல் போட்டு அடங்கி விடுவார்கள். பணம் இல்லாமல் என்ன செய்ய முடியும்?" என்று பேசப்படுகிறதாம். அதே நேரத்தில் பணம் சம்பாதிக்கிறான், சினிமாவுக்கு கதை எழுதுகிறான், நாடகமாடுகிறான் நல்ல பணம் சம்பாதிக்கிறான், என்று தூற்றப்படுகிறேன் நான்! இந்த இருவகைப் பேச்சுக்களையும் காணும் போதும், நான் உண்மையிலேயே மகிழ்கிறேன். நம்மிடம் பணம் இல்லை கட்சி நடத்த, ஆனாலும்வழி வகை இருக்கிறது. பணம் சம்பாதிக்க முடியும் என்ற நம்பிக்கை தோன்றுகிறது. நான் சம்பாதித்தது உண்மையோ, பொய்யோ அதுபற்றிக் கவலையின்றி அதை அப்படியே ஏற்று, அந்த வழியைக் கடைப்பிடித்தேனும் பணம் சம்பாதித்துக் கட்சி நடத்தலாம் என்ற தைரியம் பிறக்கிறது. பணம் என்பது ஒரு சாதனமே ஒழிய அது சகல காரியங்களுக்கும் அத்தியாவசியமான ஒன்றல்ல. இருந்தே தீர வேண்டும், எல்லா காரியங்களுக்கும் என்ற நிர்ப்பந்தம் தேவையில்லை. நமது உழைப்பின் மூலம், உறுதியின் மூலம் எவ்வளவோ பணத் தேவையைத் தவிர்க்கலாம். குறைக்க முடியும்.

முக்கியமாக, முதல் வேலையாக எழுத்துரிமை, பேச்சுரிமை எதையும் அடக்கும் சர்க்கார் போக்கை எதிர்த்து போரிட திராவிட முன்னேற்றக் கழகம் முன்னணிப்படை வரிசை அமைக்க வேண்டும். அதில் பங்குகொள்ள சமதர்மத் தோழர்களை, வாருங்கள் என்று வரவேற்கிறேன், கம்யூனிஸ்டுகளை ஒத்துழையுங்கள் என்று கூப்பிடுகிறேன்.

"பேச்சுரிமையைப் பறிக்காதே. புத்தகங்களை பறிமுதல் செய்யாதே என்று போரிடுவோம்! பெரியாரே! நீரளித்த பயிற்சி பக்குவம் பெற்ற நாங்கள் உம் வழியே சர்க்காரை எதிர்த்து சிறைச்சாலை செல்லத்தான் வேண்டுகோள் விடுக்கிறோம், துவக்க நாளாகிய இன்றே!

இன்றைய திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாவிலே இத்தனை பெருங்கூட்டமாகக் கூடி மழையையும் பொருட் படுத்தா மல், நின்று பேராதரவு தந்த பெருமக்களே! உங்களுக்கு எனது நன்றி. துவக்க விழாவிலே நான் உங்களுக்கு விடுக்கும் வேண்டுகோள். எழுத்துரிமை பேச்சுரிமை தூக்க வாரீர் என்ற போர்ப்பரணிதான். விரைவில் அந்த நாள் வந்தே தீரும். காத்திருங்கள் அழைப்பு விரைவில் வரும்.

- 1953 - மதிமன்றம், சென்னை - 1.

இராஜ்ய சபையில் அண்ணா

மாநிலங்கள் அவையில்

துணைத் தலைவர் அவர்களே,

வரி மசோதா (லோக் சபை) மற்றொரு சபையிலே விவாதிக்கப்பட்டது; இப்போது இந்த அவையில் விவாதிக்கப்பட்டு வருகிறது - இப்புறமும் எதிர்ப்புறமும் உள்ள உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய நல்ல பல யோசனைகளை நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

மக்களுக்கு இந்த முறையிலே வரிவிதிக்கப்படுவது ஒருவருக்கும் திருப்தி அளிக்கவில்லை என்பது விவாதத்தைக் கேட்டதிலிருந்து தெரிகிறது.

புதிய வரிகளுக்கான காரணங்கள் என்னென்ன காட்டிடினும் இந்த அவையிலுள்ளவர்களிலே எந்தப் பகுதியினரும் சரி, வெளியே உள்ள பொதுமக்களில் எந்தப் பிரிவினரும் சரி, புதிய வரிச்சுமையைத் தாங்கத் தயாராக இல்லை. மேலும் மத்திய துரைத்தனத்தாரின் இந்தப் புதிய வரிச்சுமைக்கு முன்பு இரயில்வே அமைச்சு வரி விதித்திருக்கிறது. இதைத் துரத்திக்கொண்டு இராஜ்ய சர்க்கார்களும் புதிய வரிகளைப் போடப் போகிறார்கள். எனவே, வரி மசோதாவைப் பார்க்கும் போது உடனே ஏற்படுகிற எண்ணம் என்னவென்றால், தற்போதுள்ள சர்க்கார், தங்களின் தோல்விகளால் திகைத்துப்போய், பொதுமக்களைத் தேவையற்ற பளுவைச் சுமக்கும்படி கேட்கிறது என்பதுதான். தற்போதுள்ள சர்க்கார், தனது

தோல்விகளுக்கும் தனது செய்கையாலும், செய்யத் தவறியவை யாலும் ஏற்பட்ட கேடுகளுக்கும் சமாதான விளக்கம் தர இயலவில்லை, ஒன்றுதான் கூற முடிகிறது. திட்டம் நிறைவேற்றப்பட வேண்டியிருப்பதால் ஒவ்வொரு பளுவையும் மக்கள் சுமக்க வேண்டுமென்பதுதான். இவர்களின் திட்டத்தின் தன்மை என்ன, திட்டம் சமதர்ம அடிப்படையில் இருக்கப் போகிறதா அல்லது வேறு விதமாகவா என்று ஆய்வாளர்கள் கேட்டால், இவர்கள், 'நாங்கள் மிக நல்லவர்கள். இங்கொரு துண்டும் அங்கொரு துண்டுமாக எடுத்து, அவைகளை ஒன்றாகக் கலந்து, ஒரு கலப்புப் பொருளாதாரத் திட்டம் தயாரிக்கிறோம்' என்கிறார்கள்.

துணைத்தலைவர் அவர்களே! கலப்படம் ஒரு குற்றம் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். நிதிமந்திரி, கலப்படக் குற்றத்தைக் கோபத்துடன் கண்டித்துப் பேசினார் லோக்சபையிலே. கலப்படம் செய்யும் குற்றவாளிகளைக் கண்டு பிடித்தால், அவர்களைச் சவுக்காலடிப்பது மட்டுமல்லாமல்...

மொரார்ஜி தேசாய் : நான் அதைச் சொல்லவில்லை. அவர்களைச் சவுக்காலடிக்க வேண்டுமென்று யோசனை கூறப்பட்டது.

சி.என்.ஏ.: ஆகவே, நிதிமந்திரி, அவர்களைத் தண்டிக்கவும் இஷ்டப்படவில்லை! என்றாலும், கலப்படம் ஒரு குற்றம், பொருளாதாரத் தத்துவக் கலப்படம் எத்தகைய குற்றம் என்றால், அதற்கான வினையை இக்கால மக்கள் மட்டுமல்லாமல் வருங்கால மக்களும் அனுபவித்தாக வேண்டும், அத்தகைய குற்றம். எனவே, இன்றைய சர்க்கார், பொருளாதாரத் தத்துவ அடிப்படையிலே தமது கொள்கையை வகுத்துக்கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். ஆனால், அவர்கள் எந்தப் பொருளாதாரத் தத்துவத்துக்கும் புதிய வியாக்கியானம் வேண்டும் என்கிறார்கள். அவர்களுக்குச் சாதகமாக இருக்கும்போது பழைய வியாக்கியானத்தை எடுத்துக் கொள்கிறார்கள். சாதகமாக இல்லாதபோது, 'நாங்கள் தத்துவத்திலே மூழ்கிவிடுபவர்கள் அல்ல, நாங்கள் செயல் முறையில் நாட்டம் உள்ளவர்கள்' என்று கூறிவிடுகிறார்கள். தொல்லை அவ்வளவும் எதனால் ஏற்படுகிறது என்றால், இந்தச் சர்க்காருக்கு ஒரு தத்துவம் இல்லை, பொருளாதார லட்சியம் இல்லை, நாட்டிலே பணியாற்றுகிற ஒவ்வோர் அரசியல் கட்சியிலிருந்தும் புகழ்தரும் இலட்சியங்களைக் களவாடிக் கொள்ள விரும்புகிறார்கள், பொது உடைமைக் கட்சியிடமிருந்து, சுதந்தரக் கட்சியிடமிருந்து, மற்றைய எல்லாக் கட்சிகளிடமிருந்து கருத்துக்களைக் களவாடிக் கொள்ள

விரும்புகிறார்கள். இங்கு வேறு எந்த அரசியல் கட்சியும் இருக்கத் தேவையில்லை. ஏனெனில், 'நாங்கள் சமதர்மவாதிகளாகவும் இருக்கிறோம். எம்மிடம் கூட்டுப் பொருளாதாரத் தத்துவம் இருக்கிறது' என்கிறார்கள்.' எனவே, இன்றைய சர்க்காருடைய கொள்கையின் அடிப்படையில் காணப்படும் பொருளாதாரத் தத்துவம் பற்றிய திட்டவட்டமான விளக்கம் தரப்படுமானால், மற்ற கட்சிகள் தமக்குரிய தத்துவங்களை எடுத்து வைக்க முடியும். கனம் புபேஷ் குப்தா எடுத்துக் காட்டினார். காங்கிரசில் இரண்டு கோஷ்டிகள் உள்ளன. ஒரு கோஷ்டி வலதுசாரி பக்கம் வலிக்கிறது. மற்றொரு கோஷ்டி இடது பக்கம் இழுக்கிறது என்று கம்யூனிஸ்டு கட்சி வலதுசாரிக் கோஷ்யை வெளியேற்ற, (காங்கிரசில் உள்ள) இடதுசாரிக் கோஷ்டிக்கு உதவி செய்யும் என்று திட்டவட்டமாகக் கூறினார். துரதிருஷ்டவசமாக, புபேஷ் குப்தா அவர்கள், இன்றைய நிதி அமைச்சரை, வலதுசாரிக் கோஷ்டியில் சேர்த்துப் பேசினார். வெளியேற்றப்பட வேண்டிய கோஷ்டியில்.

வரிவிதிப்புக் கொள்கையின்கீழ் எத்தகைய தத்துவம் காணப்படினும், நேர்முகவரி, மறைமுகவரி இவைகளிலே செய்யப்பட்டுள்ள மாறுதலால் மொத்தத்தில் 71.7 கோடி ரூபாய் ஒரு முழு வருடத்தில் வருவாய் கிடைக்கிறது. இதிலே 44.5 கோடி ரூபாய் மறைமுக வரியாகவும், 27.2 கோடி நேர்முக வரியாகவும் பெறப்பட இருக்கிறது. இந்த ஏற்பாடுகளால், வருவாய் வர இருக்கிறது என்று துன்டம் கண்டும் துணுக்குறாத முறையிலே ஒருவிதமாக மகிழ்ச்சியுடன் நிதி அமைச்சர் கூறுகிறார். தாங்கமுடியாத வரியைச் செலுத்தும்படி கேட்கும்போது, வற்புறுத்தப்படும்போது மக்கள் அடைகிற உணர்ச்சிகளை அவர் உணரவில்லை, வேதாந்தி போலப் பேசுகிறார். பணம் படைத்தோர், மேலும் மேலும் அதிக அளவு வரி செலுத்த வேண்டும். ஏழைகள், இவை மூலம் முன்னேற்றத்தை அதிகமாகப்பெற வேண்டும். இது எமது சமதர்ம அரசுக் கொள்கையின் ஒரு பகுதியாகும் என்கிறார். இந்த இரண்டு அம்சங்களையும் நிதி அமைச்சர் மெய்ப்பித்துக் காட்ட வேண்டுமென்று பெரிதும் விரும்புகிறேன். பணக்காரர் வரிப் பளுவின் அதிகமான பாகத்தை ஏற்றுக்கொள்ளும் முறையிலும், அதன் பலன்களை ஏழைகள் அதிக அளவில் பெறும் தன்மையிலுமா, நிதி அமைச்சர் தமது வரிக்கொள்கையை வகுத்துக் கொண்டிருக்கிறார்? மந்திரி சபையின் மற்றோர் உறுப்பினர் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர் கூறியுள்ள ஒரு கருத்தை - அதனைக் கண்டனம் என்றே கூறலாம் - எடுத்துரைக்க விரும்புகிறேன். இந்திய சர்க்கார் கையாண்டு வருகிற வருவாய் வரிவிதிப்புக் கொள்கை

காரணமாக, ரூபாயின் மதிப்பு குறைந்துகொண்டு வருகிறது. நூற்றுக்குத் தொண்ணூற்று ஐந்து மக்கள் இழுத்துப் பறித்துக் கொண்டு வாழும் நிலையிலும் அதற்கும் மட்டமாகவும் இருக்கிறார்கள். 'அதிகமான செல்வம் குறிப்பிட்ட சிலரிடம் போய் முடங்கிக் கொள்கிறது' என்று அவர் கூறியிருக்கிறார். இப்புறத்தில் உள்ள உறுப்பினர்கள் ரூபாயின் மதிப்பு கீழே விழுந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால், முழுத் தகவல்களும் தெரியாது, இவர்களுக்கு என்று சொல்லி விடுவார்கள். ஆனால் நான் இலாக்கா இல்லாத மந்திரி தில்லியை விட்டு வெளியேறுகிறேன், ஏனெனில், இங்கு வேங்கைகள் உலாவுகின்றன என்று கூறிவிட்டுச் சென்ற கனம் டிடி. கிருஷ்ணமாச்சாரியாரின் கருத்தை எடுத்துக் கூறினேன், வேங்கையைத் துரத்தி அடித்து விட்டார்கள் என்று நம்புகிறேன், அல்லது கெட்டிக்கப்பட்ட துப்பாக்கியுடன் அவர் மீண்டும் இங்கு வந்திருக்கக்கூடும். எது எப்படி இருப்பினும், ரூபாயின் மதிப்பு குறைந்துகொண்டு வருகிறது என்று பொறுப்புமிக்க பதவியில் உள்ள டிடி கிருஷ்ணமாச்சாரியார் கூறியுள்ளார். பொறுப்பு மிக்கவர் என்று எதனால் கூறுகிறேன் என்றால், அவரிடம் எந்த இலாகாவும் ஒப்படைக்கப்படவில்லை, எனவே, எல்லா இலாகாவும் அவருடையதே என்பதனால், ரூபாயின் மதிப்பு வீழ்ந்திருப்பதற்கு யார் குற்றம் சாட்டப்படவேண்டியவர்கள்? எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்களா? ஆளுங்கட்சி உறுப்பினர்கள், திட்டங்களை உருவாக்கும்போது, மரியாதைக்குக் கூட எங்களைக் கலந்தாலோசிப்பதில்லை. செல்வவான்களின் பணத்தையும், ஏழைகளின் ஓட்டுகளையும் அதிகாரக் குரலில் கேட்டுப் பெறும் அரசியல் கட்சியினால் நடத்தப்பட்டு வரும் தேசிய சர்க்கார் 15 ஆண்டுகள் இருந்தும் ரூபாயின் மதிப்பு வீழ்ந்து வருகிறது. 100க்கு 95 மக்கள் இழுத்துப் பறித்துக்கொண்டு கிடக்கிறார்கள். டிடி. கிருஷ்ணமாச்சாரியார் எடுத்துக் காட்டும் நிலைமை இருக்கிறது. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முற்றுப்பெற்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நடுவிலே இருக்கும் இந்த நிலையில், மந்திரிசபை உறுப்பினராக உள்ளவரின் கண்டனம் இப்படி இருக்கிறது. 100க்கு 95 பேர் இழுத்துப் பறித்துக் கொண்டுள்ள இந்த நேரந்தானா, மக்களுக்கு வரி போடுவதற்கு ஏற்ற நேரம்? அதிலும் மறைமுக வரிகள்! மற்றும் ஒரு புள்ளி விவரம் சர்க்கார் அமைத்த தேசிய ஆய்வுக்குழு கூறியிருப்பது. 270 இலட்சம் மக்களுக்கு ஒரு நாளைக்கெல்லாம் ஒரு மணி நேரந்தான் வேலை கிடைக்கிறது. 200 இலட்சம் மக்களுக்கு இரண்டு மணி நேரம், 450 இலட்சம் மக்களுக்கு 4 மணி நேரம் வேலை கிடைக்கிறது, மற்ற

நேரத்தில் வேலை இல்லை. கோடி கோடியாகப் பணத்தைச் செலவழிக்கிறோம் - மக்களிடமிருந்து பெற்ற பணம் - கடனாகவும் உதவித் தொகையாகவும் வெளியே இருந்து பெற்ற பணம் - பதினைந்து வருடச் சுயராஜ்யத்துக்குப் பிறகு, பன்னிரெண்டு வருடத் திட்ட வேலைக்குப் பிறகு, 270 லட்சம் மக்களுக்கு ஒரு நாளைக்கு ஒரே ஒரு மணி நேரந்தான் வேலை கிடைக்கிறது. திட்டங்களுக்காக மக்களைக் கசக்கிப் பிழிந்த பிறகு திட்டங்களுக்காக இவ்வளவு தொகை செலவிட்டான பிறகு இந்த நிலை இருக்கக் காரணம் என்ன? என்ன விளக்கம் இதற்கு?

மற்றொரு நிலைமை என்னவென்றால், நமது வெளிநாட்டு இருப்புக் கரைந்துவிட்டது, ஏற்றுமதி விழுந்து விட்டது. வெளிநாடுகள் தரக்கூடிய உதவித் தொகையில் வெட்டு விழும்போல் தெரிகிறது. மறைமுக வரிகள் வளர்ந்தபடி உள்ளன. விலைகள் ஏறியபடி உள்ளன. நேர்முக வரியைச் செலுத்தாமல் நழுவி விடுகிறார்கள். கறுப்புப் பணம் பெருகிக் கொண்டு வருகிறது. 118 கோடி ரூபாய் வருமான வரி நிலுவை இருப்பதாகக் கூறப்படுகிறது. 'ஏன் இவ்வளவு பெரிய தொகை வசூலிக்கப்படாமல் இருக்கிறது?' என்று நிதி அமைச்சரைக் கேட்கிறேன். திட்டங்களுக்காக வரி செலுத்தி வரவேண்டும் என்று, மக்களிடம் எந்தத் துணிச்சலில் கூறுகிறார்? 118 கோடி ரூபாய் வருமான வரி நிலுவை இருக்கிறதே, அவர்களிடம் காட்டுவதுதானே கண்டிப்பு! இந்த 118 கோடி ரூபாயில் ஒரு பாதியையாவது இவர் அக்கறை எடுத்துக்கொண்டு, கண்டிப்பான முறைகளைக் கையாண்டு வசூலித்திருப்பாரானால், மக்களுக்கு வரி போடவேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காதே! ஆனால் அவர் துண்டு விழுவதைச் சரிக்கட்ட வரி போடுபவரல்ல! பாதுஷா போலக் கூறுகிறாரே. 71 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கப் போகிறது என்ற அவருக்கு வரி வசூலிக்கும் கலெக்டர் மனப்பான்மை இருக்கிறதேயன்றி, இந்தப் பெரிய துணைக் கண்டத்து வளர்ச்சியைக் காண விரும்பும் அதிகாரியின் மனப்பான்மை இல்லை. அதனால்தான் எனது நண்பர் புபேஷ் குப்தா, இவர்களின் பொருளாதாரத் திட்டங்களின் அடிப்படையில் உள்ள அரசியல் தத்துவம் என்ன என்று அறிந்துகொள்ள விரும்பினார். எனவே, நான் சாட்ட விரும்பும் முதல் குற்றச்சாட்டு, இதுவே. உங்களிடம் எந்தத் திட்டவட்டமான அரசியல் தத்துவமும் இல்லாததால் நீங்கள் குருட்டாம்போக்கிலே, நாட்டை முட்டுச் சந்துகளிலே இழுத்துக் கொண்டு செல்கிறீர்கள்! ஆகவே, இந்த வரி விதிப்புகளால் ஏற்படக் கூடிய விளைவுகள் என்ன என்று கூடத் தெரிய முடியவில்லை. வரியும், வரி அதிகரிப்பதும் சுபீட்சத்தின்

அறிகுறி என்று அவர்கள் பேசிக்கொண்டு போகிறார்கள். சுபீட்சத்தின் அறிகுறி என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் யாருடைய சுபீட்சம் என்பதற்குப் பதில் அளித்தீர்களா? மக்களின் எந்தச் சாராரின் சுபீட்சம்? அதற்குப் பதில் அளிக்கப்படவில்லை. எனவே, மறைமுக வரிகள், குறிப்பாக அடிப்படையில் மிகத் தேவைப்படும் பண்டங்களின் மீது விதிக்கப்பட்டுள்ள வரிகளை வரி மசோதா, லோக்சபையில் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், நீக்கி விடவேண்டும். நிதி அமைச்சர் வேதாந்த மனப்பான்மை கொண்டவர் என்று புகழப்படுகிறார். ஆளுங்கட்சி உறுப்பினர்களின் கண்டனங்களை அவர் கணக்கிலெடுத்துக் கொண்டிருப்பாரானால், ஒருவரும் இந்தப் புதிய வரிகளை ஆதரிக்கவில்லை என்பதை அறிந்துகொள்ள முடியும். கட்சி கொடுத்த கொறடாவினால் ஓட்டுகள் சாதகமாகக் கிடைத்தன. கட்டுப்பாட்டுக்குப் பணிந்து ஆதரவு அளித்தனர். எனவே, அவர் இந்த வரிகளை விதிக்க தர்மம் இடம் தரவில்லை. எனவே அவர், அவருடைய ஆளுங்கட்சி உறுப்பினர்களே சொல்லியுள்ள கண்டனத்திற்கு மதிப்பளிப்பாரானால் அவர் இந்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, எந்த வேதாந்தத்தை அவர் மணந்து கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறதோ, அதற்கே கூட பெரிய மதிப்பு அளித்தவராகத் திகழ்வார். துணைத்தலைவர் அவர்களே! இந்தச் சந்தர்ப்பத்தில், இந்நாட்டிலே விசித்திரமான எங்கும் காணாத விந்தையான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜனநாயகம் பற்றிச் சிறிதளவு கூற விரும்புகிறேன். இப்புறத்தில் உள்ள உறுப்பினர்கள் போலவே கோபதாபமாகத்தான், இரு சபைகளிலும் உள்ள ஆளுங்கட்சி உறுப்பினர்கள் புதிய வரி ஏற்பாடுகளைக் கண்டித்துப் பேசினர், ஆனால் வெளியே சென்றாலோ, இன்றைய சர்க்காரை அவர்கள் ஆதரித்துத் தீரவேண்டியது இருக்கிறது. கொறடா கொடுக்கப்படுகிறது. அதனால் சர்க்காருக்குச் சாதகமாக 'ஓட்' அளிக்கிறார்கள். இந்த மாதம், விரைவில், கம்யூனிஸ்டுக் கட்சி, ஜனசங்கம், சுதந்தரக் கட்சி நான் எந்தக் கட்சியில் இருப்பதைப் பெருமையானதாகக் கருதுகிறேனோ, அந்தக் கட்சியும் நாங்கள் எல்லோரும் தனித்தனியாக, வரிப்பளுவைக் கண்டித்து, கண்டனக் கூட்டங்கள் நடத்த இருக்கிறோம். மக்களிடம் சென்று இந்த வரிவிதிப்பு நடைமுறைக்கு ஏற்றதல்ல, ஏற்கனவே வறுமையால் வதைபடும் மக்களை இந்த வரிகள் மேலும் வாட்டி எடுக்கும் என்று நாங்கள் பேசும் போது, இதே காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தாம் முன் வந்து, சர்க்காரைப் பாதுகாக்க ஆதரவுப் பிரசாரம் செய்யப் போகிறார்கள். ஆனால், மக்கள் உங்கள்

வார்த்தைகளை ஏற்றுக்கொள்வார்கள் என்று எண்ணாதீர்கள். சர்க்காரை ஆதரிக்க இந்தச் சபைக்கு வெளியே என்ன பேசப்படு கிறது என்பதை மட்டுமல்ல, சபையிலே என்ன சொல்லப்படுகிறது என்பதையும் அவர்கள் படிக்கிறார்கள். எனவே தான், ஆளுங்கட்சி உறுப்பினர்கள், நிதி அமைச்சர் விதித்துள்ள மறைமுக வரிகளைச் சரியான முறையிலும், துணிவுடனும் கண்டித்தது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். நிதி அமைச்சர், திரும்பிப் பார்த்து, ஆனால் எனக்குப் பணம் வேண்டுமே! என்று கேட்கக் கூடும். பணம் பெற நான் கூறக்கூடிய வழிகளிலே ஒன்று, வருமான வரி நிலுவையை வசூலிப்பது. ஏமாற்றுபவர்களைக் கண்டு பிடியுங்கள்! நிர்வாகத்தில் உள்ள ஓட்டைகளை அடையுங்கள்! என் நண்பர் புபேஷ் குப்தா சொன்னவற்றை எல்லாம் நான் மறுபடியும் கூறத் தேவையில்லை. உங்களால் ஜீரணிக்க முடியாமல் போகக்கூடும்... ஆனால், இப்போது உள்ள அமைப்பு முறையின்படியே கூடப் பல்வேறு இலாக்காக் களிலே சிக்கனம் ஏற்படுத்தினால் நிர்வாக அமைப்புகளிலே உள்ள சந்து பொந்துகளை அடைத்துச் சீர்படுத்தினால், நிர்வாகத்தை நடத்திச் செல்லக்கூடப் பணம் கிடைக்கும். ஆனால், இப்போது இந்தப் பகுதியில் உள்ள நாங்கள், நிர்வாக அமைப்பு முறைகேடாக இருக்கிறது, இலஞ்ச ஊழல், பதவி தருவதில் சலுகை போன்ற வைகள் உள்ளன என்று எடுத்துச் சொன்னாலும் மந்திரிசபை உறுப்பினர்கள் 'நிரூபித்துக் காட்டு' என்று கூறுகிறார்கள்.

ஹைதராபாத் சிக்கனக்குழு, இலஞ்சப் புகாரை மெய்ப்பித்துக் காட்டுவது கடினம் என்று அடிக்கடி கூறுகிறது. அதனாலேயே புகார் எழுகிற போதெல்லாம் விசாரணை நடத்தத் துளிகூடத் தயக்கம் காட்டக் கூடாது என்று... ஏற்படுகிறது... என்று குறிப்பிட்டிருக்கிறது என்றாலும், இன்றைய சர்க்கார் மேற் கொண்டுள்ள போக்கு எப்படி இருக்கிறது? முந்திரா ஊழல் நடவடிக்கையின்போது, குற்றம் செய்தவர் என்று காட்டப்பட்ட, இந்திய சர்க்கார் அதிகாரி ஒருவர்... எச்.எம்.படேல் என்பவர், நர்மதாப் பள்ளத்தாக்குக் கார்ப்பரேஷனில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார். பத்திரிகையில் பார்த்தேன். தற்காலிகப் பதவிதான். அந்தச் சபையில் இதுகுறித்துக் கேள்வி கேட்கப்பட்ட போது, பிரதம மந்திரி எழுந்திருந்து...

புபேஷ் குப்தா : இரண்டு வருஷங்களுக்குப் பிறகு, அவருக்குப் பத்மவிபூஷன் பட்டம் கொடுப்பார்கள்...!

சி.என்.ஏ.: ஏன் மந்திரி சபையிலேயே இடம் கிடைக்கக் கூடும். லோக் சபையில் கேட்கப்பட்டபோது பிரதம மந்திரி எழுந்திருந்து தமக்கு அது குறித்துத் தெரியாது என்று பதிலளித்தார். அவர்

அவ்விதம் சொன்னது கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஏனெனில், அவர் ஆமாம், யார் நியமிக்கப்பட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்... என் ஒப்புதலும் அதற்கு உண்டு என்று கூறி இருந்திருப்பாரானால் நான் திடுக்கிட்டுப் போயிருப்பேன். நல்ல வேளையாக, எனக்கு அது தெரியாது என்று அவர் பதில் அளித்தார். இராஜ்ய சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் உள்ள தொடர்பு இப்படித்தான் இருக்கிறது. நாடெங்கிலுமிருந்து அறிவாளர்களைத் திரட்டிக் கொண்டு வந்து தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழி காட்டுங்கள் என்று கேட்கிறீர்கள். முதலில் உங்கள் சர்க்காரிலே ஒருமைப்பாடு ஏற்படுத்துங்கள்! ஏன் அவர் வேலைக்கு அமர்த்தப்பட்டார்? எப்படி அமர்த்தப்பட்டார்? என்பது எனக்குத் தெரியாது என்று கூறுகிற ஒரு பிரதம மந்திரி இருக்கிறார். இது பற்றிப் படிக்கும்போது மக்களுடைய தீர்ப்பு என்னவாக இருக்கும்? முந்திரா ஊழல் பிரச்சினையில், இந்த அதிகாரி பிணைக்கப் பட்டிருந்தார் என்பது மக்களுக்குத் தெரியும். அப்படிப்பட்டவர் பசையுள்ள ஒரு வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார் என்று பத்திரிகைகளில் படித்தால், மக்கள் என்ன சொல்லுவார்கள்? உங்களுடைய சமதர்மப் பேச்சு, சமதர்ம தத்துவம் கிடக்கட்டும். (இந்த நியமனம் பற்றி) மக்கள் என்ன பேசுவார்கள்? அதனால்தான், நிர்வாகத்தில் உள்ள ஓட்டைகள் அடைக்கப்பட வேண்டும் என்கிறேன், ஓட்டைகளை அடைக்க வேண்டும் என்கிறேன், ஓட்டைகளை அடைக்க வேண்டுமென்றால் உண்மையான, நிரந்தரமான மாறுதல் நிர்வாக அமைப்பில் ஏற்பட்டாக வேண்டும்.

நிர்வாகத்தில் என்ன சீரமைப்புச் செய்ய வேண்டும் என்பது பற்றி ஆய்வுரை கூற அழைக்கப்பட்ட கோர்வாலா, தமது அறிக்கையில் வருமான வரிமுறை பற்றிக் குறிப்பிடுகையில், இதுபோலக் கூறியுள்ளார்.

"வருமான வரித்துறையைப் பொறுத்தவரையில், பொதுமக்கள் முறையிடுவது என்னவென்றால், சாமானியர்களைக் காரணமின்றித் தொல்லைப்படுத்துகிறார்கள். ஆனால் பல இலட்சக்கணக்கில் வரி கொடுக்காமல் ஏமாற்றித் திரிபவர்கள் தப்பித்துக் கொண்டு விடுகிறார்கள்" என்பதுதான். வருமான வரி விசாரணைக் குழுவினால் சரியான எந்தப் பலனையும் பெற்றளிக்க முடியவில்லை. துளிகூடக் கவலையின்றி, மிகத்துணிகரமான, வரி ஏமாற்றும் பேர்வழிகள், தங்கள் நடவடிக்கைகளை நடத்திக் கொண்டு போகிறார்கள். இதைக் காணும் போது, மிகுதியும் செல்வாக்குள்ள செல்வவான்களுடன் மோதிக்கொள்ள நேரிடும்போது, இந்தச் சர்க்காரின் கையாலாகாத்தனந்தான்

தெரிகிறது என்ற நம்பிக்கை மிகப் பரவலாக இருக்கிறது. கையாலாகாத்தனம் என்ற வார்த்தையை, நான் அவ்வளவு கடுமையான வார்த்தையைக் கூற ஒருமுறைக்கு இருமுறை யோசித்து இருப்பேன். ஆனால், பொது நிர்வாகச் சீரமைப்புக் காண வழி கூறும்படி சர்க்காராலேயே அழைக்கப்பட்ட காரணத்தால் கோர்வாலா அவர்கள் சர்க்காரின் கையாலாகாத் தன்மை என்று கூறுகிறார். உங்கள் சர்க்கார் கையாலாகாதது என்று கூறியிருக்கும் போது, கோடி கோடியாகப் பணம் தரும்படி நீங்கள் எந்த யோகிக்கியதையின் பேரில் கேட்கிறீர்கள் என்று மந்திரிசபை யினரைக் கேட்கலாமல்லவா? எனவே, நிர்வாக அமைப்பிலே இன்னும் சற்று உயிர்ப்புச் சக்தி, செயலாற்றும் திறன் ஏற்பட வேண்டும் என்று நம்புகிறேன்.

இதோ மற்றொரு கண்டனம், இது வர்த்தகத் துறை அமைச்சுப் பற்றியது.

பெரிய வணிக முதலாளிகளின் விருப்பத்துக்கு இசைவு தருவதிலே வணிகத்துறை அமைச்சு மிகவும் கெட்ட பெயர் எடுத்துக் கொள்ளும் அளவுக்கு நடந்து கொண்டிருக்கிறது.

வேங்கைகள் உலவுகின்றன என்று டி.டி.கிருஷ்ணமாச்சாரி சொன்னது ஒரு வேளை இதை எண்ணித்தான் போலும்! வேங்கைகள் வெளியே உலாவுகின்றன என்ற முடிவுக்கு அவர் எப்படி வந்தார் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை, துணிந்து யூகமாகச் சொல்வதானால், வர்த்தகத்துறை அமைச்சராக அவரே முன்பு இருந்ததால், அவருக்கு அப்படிப்பட்ட விசித்திரமான அனுபவம் ஏற்பட்டிருக்கக்கூடும். எது எப்படி இருப்பினும், வணிகக் கோமான்களுக்கு லைசென்சுகள் வழங்குவதிலே வணிகத்துறை அமைச்சு கெட்ட பெயர் எடுத்திருக்கிறது.

இவைகளெல்லாம் திருத்தப்பட்டால், எனக்கு முன்பு பேசியவர் குறிப்பிட்ட மக்களின் ஆர்வமான ஆதரவு திட்டத்துக்குக் கிடைக்கக்கூடும். ஆனால், வரிகள் ஏறிக்கொண்டே போவதையும், விலைகள் ஏறிக்கொண்டிருப்பதையும், வேலை இல்லாத் திண்டாட்டத்தின் அளவு பெரிது பெரிதாக வளர்ந்து கொண்டு போவதையும், வாழ்க்கைத் தேவைகளைக்கூட, இன்றுள்ள அரசாங்க அமைப்பினால் தர இயலாத நிலை இருப்பதையும் காணும் போது, திட்டங்களில் ஆர்வம் காட்ட மக்கள் முன் வருவார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? சர்க்காருடைய வரிவிதிப்புக் கொள்கையிலே இந்த அமிசம் சரி, அந்த அமிசம் சரி என்று ஆதரித்துச் சிலர் கூறுகிறார்கள்.

இந்தியாவிலிருந்து திராவிட நாடு பிரிய வேண்டும் என்று வற்புறுத்தும் கட்சியைச் சேர்ந்தவன் நான் என்றாலும், நீங்கள் தொழில் வளர்ச்சிக்காகத் திட்டமிட்ட முறை இருக்கிறதே, அது இந்தத் துணைக் கண்டத்திலே பெறக்கூடிய முழு அளவு செல்வ வளர்ச்சியைப் பெறத்தக்க விதமாக இல்லை என்பதையும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். பொருளாதாரச் செயல்முறைகள் ஒரு சீராக அமையவில்லை, மிகுந்த காலதாமதத்துக்குப் பிறகுதான்...

புபேஷ் குப்தா: திராவிட நாட்டை விட்டு விடுங்கள் இந்திய குடி அரசில் ஒரு பகுதியாக இருந்து, தமிழ்நாடு அதிக தொழில் திட்டங்கள் பெற நாம் ஒன்று பட்டுப் போராடுவோம். அந்த ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்வோம் - அந்த ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொள்கிறீரா?

சி.என்.ஏ.: என்னுடன் இருக்க வேண்டுமென ஆவலாக இருப்பதற்காக நான் புபேஷ் குப்தாவுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். ஆனால், எனது இலட்சியத்தை விட்டுக்கொடுத்துவிட்டு அவரைக் கூட்டாளியாக்கிக் கொள்ள நான் விரும்பவில்லை.

நீண்டகால தாமதத்துக்குப் பிறகுதான், சர்க்கார், தமது தொழில் வளர்ச்சித் திட்டம் ஒரு சீரானதாக இல்லை என்பதை உணர்ந்து கொண்டார்கள். இப்போது அவர்கள் ஒரு பொருளாதாரப் பிரச்சினை பற்றி பேசுகிறார்கள். அடிப்படையில் பல அரசியல் தத்துவங்கள் உள்ளன. அதுபற்றிப் பேசுவார்கள், அந்தத் தத்துவங்களின் பொருளை, முழுவதும் வெளியே காட்டிப் பேசுவதில்லை. பிரதேசப் பொருளாதாரச் சீரமைப்பு என்பது பற்றிப் பேசுகிறார்கள். சில பிரதேசங்கள் பொருளாதாரத்தில் மிகுதியான வளர்ச்சி அடைந்துள்ளன. சில பகுதிகள் முன்னேற்றம் அடைய வில்லை. எனவே, தொழில் வளர்ச்சியைப் பொறுத்தமட்டில், நாட்டிலே புறக்கணிக்கப்பட்டுப் போன பகுதிகளில் விசேஷ கவனம் செலுத்துவது இனி இந்திய சர்க்காரின் கொள்கையாக இருக்கும் என்கிறார்கள். ஆகவே, திட்டமிட்டுக் கொண்டிருந்த 12 ஆண்டுகளும் நீங்கள் தவறான முறையிலே திட்டமிட்டுக் கொண்டு இருந்தீர்கள். ஒரு சீராகப் பொருளாதார வளர்ச்சித் திட்டம் போடாமலிருந்திருக்கிறீர்கள்.

முன்பொருநாள், திருமதி தேவகி கோபிதாஸ் வளர்ச்சித் திட்டங்களிலே கேரளம் எப்படிப் புறக்கணிக்கப்பட்டு வரப்படுகிறது என்பதைத் தெளிவாக எடுத்துக்கூறிக் கொண்டு வந்தபோது, திட்டம் தீட்டப்படும்போது, கேரளத்தின் தனித்தன்மைகள், தனியான இயல்புகள் ஆகியவற்றைக் கவனத்தில்

கொண்டு, பரிகாரம் தேடவேண்டும். இல்லையேல், இந்திய யூனியன் வளர்ச்சிக்கு அது ஒரு முள்போல் இருக்கும், இந்திய யூனியன் வளர்ச்சி பாதிக்கப்படும் என்று கூறினார். இந்தக் கருத்துரை, இந்தியா ஒன்று பிரிக்கப்படாதது என்ற நம்பிக்கை கொண்டவரிட மிருந்து வெளி வருகிறது. கேரளத்தின் தனித்தன்மைகள், தனிஇயல்புகள் ஆகியவற்றைக் கவனிக்காவிட்டால், கேரளம் முள்போல இருக்கும் என்கிறார்.

சாலமன்: காங்கிரசுக்குள்ளே கூடத் திராவிடக் கழக ஆட்கள் இருக்கிறார்கள்.

சி.என்.ஏ.: காங்கிரசிலே, திராவிடக் கழக மனப்பான்மை கொண்டவர்கள் இருக்கக்கூடும். ஆனால் நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன்...

சாலமன்: நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தான் குறிப்பிடுகிறேன்...

துணைத்தலைவர்: மேலும் எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ள விரும்புகிறீர்கள்?

சி.என்.ஏ.: மேலும் ஓர் ஐந்து நிமிடங்கள் எடுத்துக் கொள்ள அனுமதியுங்கள். திருமதி அவர்களே! இந்திய யூனியனுக்கு ஒரு முள்ளாக இருக்கும் என்று அம்மையார் குறிப்பிட்டதைச் சொல்லிக் கொண்டிருந்தேன். துணைத்தலைவர் அவர்களே! இதில் கவனம் செலுத்தும்படி, தங்கள் மூலமாகப் புபேஷ் குப்தா அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அம்மையார் இந்திய யூனியனுடைய வளர்ச்சிக்கு ஒரு முள் போலிருக்கும் என்று கூறுகிறார்கள். முட்களை என்ன செய்கிறோம்? வெளியே எடுத்து விடுகிறோம். அதுதான் நாம் செய்வது. அரசியல் அமைப்பிலாயினும் சரி, உடலில் ஆகிலும் சரி, முள் இருப்பின், அந்த முள்ளை வெளியே எடுத்து விடுகிறோம்.

புபேஷ் குப்தா: என்ன சொன்னீர்கள்? நான் கவனிக்க வில்லை...

சி.என்.ஏ.: உங்களுடன் இதுபற்றி விவாதித்துக் கொண்டிருக்க எனக்கு நேரம் இல்லை, பிறகு விவாதிக்கலாம். எனவே, திருமதி அவர்களே! இந்திய ஒருமைப்பாட்டிலே நம்பிக்கை கொண்டவர் களாக இருப்பினும், தாம் வாழும் பகுதியில் தொழில் துறையிலே கட்டுப்பாடான வளர்ச்சி ஏற்படவில்லை என்றால், இந்திய ஒருமைப்பாடு எனும் பிரச்சினை தீர்க்கப்பட்டதாகக் கருதுவதற் கில்லை என்று எண்ணுகிறார்கள்.

புபேஷ் குப்தா: தமிழ் நாட்டிலே உள்ள ஜனநாயக இயக்கத்தை உங்கள் பிரிவினை இயக்கம் வலிவற்றதாக்கி விடும் என்று நான் நினைக்கிறேன். தமிழ் நாட்டுக் கோரிக்கையையும் அது கெடுத்துவிடும். நீங்கள் விரும்புவது கிடையாது -

துணைத்தலைவர்: நீங்கள் பேசி முடியுங்கள்.

சி.என்.ஏ.: புபேஷ் குப்தாவின் ஆலோசனைக்கு நான் மிகுந்த கவனம் செலுத்துகிறேன். எவ்வளவுக்கெவ்வளவு ஜனநாயக முறையில் இருக்க முடியுமோ அப்படி இருக்க முயல்கிறோம். ஆனால், அதே போல நடந்து கொள்ளும் என்று நான் கம்யூனிஸ்டுக் கட்சியிடம் எதிர்பார்க்கவில்லை.

புபேஷ் குப்தா: நாங்கள் முழுக்க முழுக்க ஜனநாயகவாதிகள். உங்கள் யோசனையை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். நல்ல யோசனை யாரிடமிருந்து வந்தாலும் ஏற்றுக் கொள்வதிலே தவறில்லை. ஆனால், என் யோசனையை ஏற்றுக்கொண்டு, திராவிட நாடு முழக்கத்தை இந்தியாவிலிருந்து பிரிவது என்ற கோஷத்தை விட்டு விடுவீரா? துணைத்தலைவர் அவர்களே, நான் அவருடைய யோசனையை ஏற்றுக் கொண்டிருக்கிறேன்.

துணைத்தலைவர்: காலம் மிகவும் குறைவாக இருக்கிறது. தயவுசெய்து முடித்துக் கொள்ளுங்கள்.

மொரார்ஜி தேசாய்: அடிக்கடி எழுந்திருந்து, மற்றவர்களின் நேரத்தைப் புபேஷ் குப்தா எடுத்துக் கொள்கிறார். அவர் தமது நேரத்தைச் செலவிட்டுவிட்டார். ஏன் அடிக்கடி எழுந்து நிற்கிறார்?

புபேஷ் குப்தா: தி.மு.க. ஸ்லோகங்களில் அவருக்கு மிகுதியாக அனுதாபம் இருப்பதுபோல் தெரிகிறது.

சி.என்.ஏ.: துணைத்தலைவர் அவர்களே! நேரம் போதவில்லை. இல்லையென்றால், இதுபற்றி விவாதித்துக் கொண்டே போகலாம். ஆனால் பிரச்சினைகளை இம்மாதிரியான முறையில் தீர்த்துவிட முடியும் என்று நான் கருதவில்லை. பிரதேச ஏற்றத்தாழ்வு இருக்கிறது என்பது பற்றி எல்லா அரசியல் கட்சியினரிடமும் மனக்குறை உண்மையிலேயே இருக்கிறது என்பதை விளக்கிக் காட்ட முற்படுகிறேன். இதனை நான் எடுத்துக்காட்டுவது, பிரிவினைக்காக அல்ல, ஒரு சீரான பொருளாதார வளர்ச்சி இல்லாததால் நாட்டிலே மொத்தத்தில் கிடைக்கக்கூடிய செல்வ வளர்ச்சி கிடைக்கவில்லை என்பதை எடுத்துக் காட்ட இதனைக் கூறுகிறேன். அது தான் என்னுடைய குறி. பிரிவினைக்காக வேறு பல காரணங்கள் இருக்கின்றன. ஆனால்,

அவை பற்றிப் பேசிப் பேச்சை வேறு திசை கொண்டுசெல்ல விரும்பவில்லை. ஓர் அங்கத்தினர் அப்படித் திசை தவறிச் சென்று, என்னைச் சிலோன் போய்ப் பிரச்சாரம் செய்யும்படி கூட விந்தையாகக் கூறி இருக்கிறார்! அவருக்கு என்னிடம் அதிகமான பற்றும் பாசமும் இருக்கிறதா, அல்லது சிலோன் நாட்டிடம் பற்றுப்பாசம் இருக்கிறதா? என்று தெரியவில்லை. எப்படி இருப்பினும், அவர், தாம் ஒரு திராவிடர் என்பதை ஒப்புக் கொண்டார். நான் பேச்சின் திசையைத் திருப்பிவிடப் போவதில்லை. ஆனால், திட்டவட்டமாக ஒன்று கூறுவேன். எரிகுண்டு, இழி மொழி எதுவும் என்னை நான் ஏற்றுக் கொண்டுள்ள புனிதப் பணியிலிருந்து தடுத்து நிறுத்தப் போவதில்லை. அதுகுறித்துப் பேரப் பேச்சுக்கு இடமே இல்லை. எனவே, நான் பேச்சின் திசையைத் திருப்பப் போவதில்லை. பிரதேச ஏற்றத் தாழ்வுப் பிரச்சினைக்கு வருவோம். பிரதேச ஏற்றத் தாழ்வு இருக்கிறது என்பதற்குப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் படி ஒரு சுவையான தகவல் தருகிறேன், வருமானவரி நிலுவைகளைப் பற்றிக் குறிப்பிட்டேன். இராஜ்யவாரியாக அல்லது வட்டார வாரியாக அந்தத் தகவல் தரப்பட்டிருக்கிறது. பம்பாய் நகரம் (1) பம்பாய் நகரம், (2) மத்திய பம்பாய் சேர்ந்து 36 கோடி ரூபாய் நிலுவை, மேற்கு வங்கம், கல்கத்தா நகரம் உட்பட 43 கோடி ரூபாய் நிலுவை! எனவே, மிகப் பெருந்தொகை நிலுவையாக உள்ள அந்த இரண்டு பிரதேசங்களின் பேரிலும் நிதி அமைச்சர் தமது துப்பாக்கியைத் திருப்ப வேண்டும்.

புபேஷ் குப்தா: மேற்கு வங்கத்தில் பெரிய முதலாளிகள் இருக்கிறார்கள். சாந்தி பிரசாத் ஜெயின் என்பவர், சமீபத்தில் 60 இலட்ச ரூபாய் விலையில் ஒரு வீடு வாங்கினார்.

சி.என்.ஏ.: மேற்கு வங்கத்தில் உள்ள முதலில், பெரும் பகுதி வெளியிடத்திலிருந்து வந்தது. பொருளாதார ஏற்றத்தாழ்வு, இராஜ்யத்துக்கு இராஜ்யம் உள்ள விவசாயத் துறை வருமானப் புள்ளி விவரத்தைப் பார்த்தால் கூடப் புரியும். 1958 - 59ஆம் ஆண்டில் சென்னையில் எங்களுக்கு 34.33 கோடி ரூபாயும் கிடைத்தது. உத்தரப்பிரதேசத்துக்கு 1.46 கோடி ரூபாயும், மேற்கு வங்கத்துக்க 4.27 கோடி ரூபாயும் கிடைத்துள்ளன. உத்தரப் பிரதேசமோ, மேற்கு வங்கமோ வளம் கொழிக்கும் செல்வப் பூமியாவதை நான் குறைகூறவில்லை. ஆனால், திட்டங்களை நிறைவேற்றியதில் முறைகேடான, சீரற்ற பொருளாதார ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படாமலிருந்திருந்தால், விவசாயத்துறையில், உத்தரப் பிரதேசத்தை விட மிக அதிகமான வருவாய் நாங்கள் பெற்றிருக்க முடியும்.

இப்போது கூட எங்களுக்கு ஒரு பக்ரா - நங்கல் இல்லை. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும் அதிகம் இல்லை. என்றாலும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலே தான், ஏக்கர் ஒன்றுக்கு அதிகமான விளைச்சல் ஆகிறது.

எஸ். சென்னாரெட்டி: உங்களுக்குக் குந்தா திட்டம் இருக்கிறது.

சி.என்.ஏ.: அது பாசனத்துக்காக இருப்பதைவிட, மின்சார உற்பத்திக்காகத்தான் பெரிதும் இருக்கிறது. அத்தகைய உதவிகளின்றி எமது விவசாய உற்பத்தி வளர்ச்சி அடைந்திருக்கிறது. அப்படிப்பட்ட கடுமையாக உழைக்கத்தக்க புத்தி கூர்மையுள்ள விஷயங்களை ஆராய்ந்து அறிந்து கொள்ளும் பக்குவம் உள்ள உழவர்கள் இங்கு இருக்கும் போது, விவசாயத்துறைக்கான திட்டம் தீட்டியபோது, தெற்குப் பகுதிமீது பார்வை சென்றிருக்க வேண்டாமா? தெற்கே, மீன்பிடித் தொழிலை வளர்ச்சி அடையச் செய்திருக்கலாம். போக்குவரத்துச் சாதனத் துறையிலே வளர்ச்சி கண்டிருக்கலாம்... எத்தனையோ உள்ளன செய்வதற்கு, எவ்வளவோ வாய்ப்புகள் உள்ளன. வாய்ப்புகளைப் பயன்படுத்தத் தவறிவிட்டது மட்டுமல்லாமல், பிரச்சனையை எடுத்தாலே, பிரச்சினையைத் தள்ளிப்போட முற்பட்டார்கள். அப்படிப்பட்ட பிரச்சினைகளை எழுப்பிய போது எங்கு மூலப் பொருள்கள் கிடைக்கின்றனவோ, அங்கு தான் தொழில் திட்டம் அமைக்க முடியும். அதுதான் கண்டிப்பான பொருளாதாரத் தத்துவம் என்று கூறிக் கொண்டு வந்தார்கள். ஆனால், இப்போதுதான், இனிப் பிரதேச ஏற்றத் தாழ்வினை ஒழித்தாக வேண்டும் என்ற கொள்கையை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள், சபையினர் அறிந்து கொள்வதற்காக ஒன்று கூறுகிறேன். இதுபோன்றதொரு பிரச்சினை இத்தாலியில் எழுந்தது. வட இத்தாலியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தெற்கு இத்தாலி தொழில் வளர்ச்சியில் மிகவும் பிற்போக்காக இருந்தது. இத்தாலிய சர்க்கார் அறிவுத் தெளிவும் துணிவும் மிக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டார்கள், தெற்கு இத்தாலிக்கு எனத் தனியான திட்டங்கள் வகுத்தார்கள். இத்தாலியின் தெற்குப் பாகத்தை வளமாக்க, உதவித் தொகை கடனுதவி ஆகிய சலுகைகளை வழங்கினார்கள். நான் உங்களை வசீகரமான பாதை வழியே அழைத்துச் செல்வதாக எண்ணாதீர்கள். அவ்வழியே சென்று, திரும்பிப் பார்த்து நாங்கள் இத்தாலி கையாண்ட முறைகளை முன்மாதிரியாகக் கொள்கிறோம் என்று கூறப்பார்க்காதீர்கள். நீங்கள் அந்த முறையைப் பின்பற்றக்கூடும். அந்த முறையைப் பின்பற்ற வேண்டாம் என்று நான் உங்களுக்குக் கூறவில்லை.

பின்பற்றி நடவுங்கள். ஆனால், அதனால் சமாதானமாகி, எனது அரசியல் கட்சி தனது அரசியல் தத்துவத்தைவிட்டுக் கொடுத்து விடும் என்று நான் உத்தரவாதம் தரமுடியாது, தரத்தேவையில்லை, தரமாட்டேன். அதனுடைய தத்துவம், பேரப்பேச்சு, சலுகைகள் பெறுவது போன்றவைகளிலிருந்து முற்றிலும் வேறானது. தெற்குப் பகுதியின் பொருளாதாரத்தைச் சரியானபடி கவனித்திருந்தால் இந்நேரம் செல்வத்தை மிகுதியாக உற்பத்தி செய்திருக்க முடியும் என்பதை மட்டுமே நான் சுட்டிக் காட்டுகிறேன். உலகிலேயே மிகச் சிறந்ததொரு கடலோரம் தெற்கே இருப்பது. துறைமுகங்கள் நிரம்பப் பயன்பட்டுக் கொண்டு வருபவை, பயன்படாமலிருப்பவை உள்ளன. என் மதிப்பு மிக்க நண்பர் தாயாபாய் படேல் கோபத்துக்கு வரமாட்டார் என்று நம்புகிறேன். அவருக்குக் கண்டலாத் துறைமுகம் கிடைத்துவிட்டது. எமக்கோ இன்னமும் தூத்துக்குடி துறைமுகம் அமைக்கப்பட்டாகவில்லை. வணிகர் சங்கக் கூட்டத்தில் பேசும்போது எங்கள் இராஜ்ய தொழில் மந்திரி, இரண்டு நாட்களுக்கு முன்பு திட்டங்களை ஏற்றுக் கொள்வதாகக் கூறிவிட்டால் போதாது, இந்திய சர்க்கார் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் காரியத்தை விரைவுபடுத்த வேண்டும் என்று கூறி இருக்கிறார். எனவே, பொருளாதாரச் சீரமைப்பு நாடெங்கும் ஏற்பட்டிருக்குமானால், குறிப்பாகப் புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கும் தெற்குப் பகுதியில் ஏற்பட்டிருக்குமானால், வரி செலுத்தும்படி அமுல் செய்யும் போது அவ்வளவு கடினமாகத் தோன்றாமல் இருந்திருக்கும். நான் இந்தப் பிரச்சினையில், வரி செலுத்தும் முறை பற்றி மட்டுமே இப்போது கூறுகிறேன். தன் பிரதேசத்துக்காகக் கூட அல்ல, வேறு பிரதேச வளர்ச்சிக்காகத் தன்மீது வரி சுமத்தப்படுகிறது என்று தெற்கு உணருகிறது, உணருவதால், வரிக்கொடுமை இரட்டிப்பு மடங்காகத் தெரிகிறது. எனவே, நிதி அமைச்சருக்கும் அவர் மூலம் மற்ற அமைச்சர்களுக்கும் எமது வேண்டுகோள் என்னவென்றால், செல்வ வளர்ச்சி அதிகப்படவும், வரிவிதிப்புக் குறையவும் ஏற்றவிதமாகத் தென்னகத்தைப் பொருளாதாரத் துறையில் எப்படித் திருத்தி அமைப்பது, சீர்படுத்துவது என்பதுபற்றி வழி காண வேண்டும் என்பதாகும்.

ஆளுங்கட்சியினர் மற்றொரு தவறான கருத்து ஏற்படச் செய்து வருகின்றனர். இப்போது இலாபத்தைப் பங்கிடுவதுபற்றி, பிரித்துக் கொடுப்பது பற்றிப் பேசாதீர்கள். உற்பத்தியைப் பெருக்குங்கள். உற்பத்தியே உமது கடமை. எனவே, மேலும் மேலும் உற்பத்தியைப் பெருக்குங்கள். பகிர்ந்து கொள்ளுவதுபற்றி இப்போது பேசாதீர்கள். ஏனெனில் பகிர்ந்துகொள்வது என்பது,

உற்பத்தி முடிந்த பிறகுதான் இயலும் என்று பேசுகிறார்கள். பொருளாதாரப் பாடப் புத்தகங்களிலேதான். முதல் அத்தியாயம் உற்பத்தி, இரண்டாவது அத்தியாயம் விநியோகம் என்று இருக்கும் என்பதைக் கூற விரும்புகிறேன். ஆனால் நடைமுறையிலே, உற்பத்தி செய்து கொண்டிருக்கும்போதே விநியோகமும் நடந்து கொண்டுதானிருக்கும். உற்பத்தி செய்து முடித்துவிட்டு, எல்லாவற்றையும் குவியலாக ஓர் இடத்தில் கொட்டி வைத்தான பிறகு ஒரு நல்ல நாளில் இனி விநியோகிக்கலாம் என்று நாம் கூறுவதில்லை. பொருளாதார நடவடிக்கைகள் அந்த முறையிலே செயல்பட்டுக் கொண்டில்லை. பொருளாதாரப் பாடப்புத்தகங்கள் எழுதட்டுமே, அது முறையாகக் கொள்ளப்படுகிறது. எனவே, ஆளுங்கட்சியினர் அத்தகைய சொத்தைக் காரணத்தைக் காட்டக் கூடாது. இந்தப் புறத்திலுள்ள நாங்கள், உற்பத்தி செய்யப்படுவது, சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்று கூறுகிறோம். பண்டங்கள், சரியான முறையிலே விநியோகமாகியிருந்தால், செல்வம் சரியானபடி பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தால் நமது நாட்டில், இவ்வளவு வறுமை இருந்திருக்காது. வறுமை எந்த அளவு இருக்கிறது என்றால், அனாதைகளாக உள்ள முதியவர்களுக்கு எங்கள் இராஜ்யத்தில் உதவித் தொகை தரப்பட வேண்டி ஏற்பட்டிருக்கிறது எனது இராஜ்ய சர்க்கார் அப்படி ஓர் ஏற்பாடு மேற்கொண்டிருப்பது எனக்கு மகிழ்ச்சி தருகிறது என்றாலும், அது எங்கள் பகுதியிலே உள்ள தரித்திரத்தைக் காட்டும் குறியாக இருப்பதனையும் கூறவேண்டி இருக்கிறது. இத்துணை செல்வம் உற்பத்தி செய்யப்பட்ட பிறகும், இவ்வளவு வறுமை இருக்கக் காரணம் என்ன? காரணம் என்னவென்றால், பகிர்ந்தளிக்கும் பிரச்சினை மீது சரியான முறையில் அக்கறை செலுத்தப்படவில்லை. ஆகவேதான், செல்வம் வளருகிறது, புதிய புதிய கடிலா கார்களும் புதிய மாளிகைகளும் புதிய புதிய தொழிலகங்களும் காண்கிறோம். சர்க்காருக்கே தேவைப்படும் அளவு சிமிட்டி கிடைக்காதபோது, தனிப்பட்ட கன்டிராக்டர்களுக்கு எவ்வளவு அளவுக்கு வேண்டுமானாலும் சிமிட்டி கிடைப்பது தமக்குத் தூக்கி வாரிப் போடுவதாக இருக்கிறது எனப் பிரதமமந்திரி பேசியதாக அன்றொரு நாள் பத்திரிகையில் பார்த்தேன். கள்ள மார்க்கட்டு, கறுப்புப் பணம்... என்ற இரண்டு வார்த்தைகள் புழக்கத்திலிருக்கிறதே. இந்த நிலை இந்தத் தேசிய சர்க்காருக்கு அவமானகரமானது என்று கூற விரும்புகிறேன் - அவமானகரம் என்ற பதம் மிகக் கடினமானதோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. இந்தப் பதங்களை மிகச் சாதாரணமாக நாம்

உபயோகப்படுத்துகிறோம். எந்தப் பண்டத்தைப் பற்றியாவது பேச்சு எழும்போது, அங்காடியில் என்ன விலை? கள்ள மார்க்கட்டில் என்ன விலை? என்று கேட்கிறோம். இரும்புச் சாமான் கள்ளமார்க்கட்டில் என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்பது தமக்கு மிக நன்றாகத் தெரியும் என்று மந்திரி சபையினர் ஒருவர் பேசியதாகப் பத்திரிகையிலே பார்த்தேன் - திடுக்கிட்டுப் போனேன். சொன்னவர் இப்போதுள்ள இரும்பு மந்திரி அல்ல. எனவே, கள்ள மார்க்கெட் இருப்பது சர்க்காருக்கே தெரியும். கள்ளமார்க்கட்டு எப்படி நடத்தப்படுகிறது என்பது தெரியும். ஆனால் அந்தக் கள்ளமார்க்கெட்டுக்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கூண்டில் கொண்டு வந்து நிறுத்தினால், தேர்தல்களில் தீர்த்துக்கட்டி விடுவார்கள் என்பதும் சர்க்காருக்குத் தெரிகிறது. ஆகவேதான், கள்ளமார்க்கெட்டுக் கொட்டம் அடிக்கவிடப்பட்டிருக்கிறது. கள்ளமார்க்கெட்டு இருக்கும்போது, கறுப்புப் பணம் உண்டாகிறது. இந்தக் கறுப்புப் பணத்தைத் தொழிலுக்கு முதலாகப் போட முடிவதில்லை. தனிப்பட்ட ஓர் அமைப்புக்குத் தொழிலிலே இலாபம் வெளிப்படையாகக் கிடைத்தால், அந்தப் பணத்தை வேறு வியாபாரத்தில் கொண்டுவந்து போடலாம். ஆனால், கணக்கிலே காட்டப்படமுடியாத கறுப்புப்பணம் கிடைக்குமானால், அதனைத் தொழிலிலே கொண்டு போய்ப் போட முடியாது. ஆகவே அந்தப் பணம் டம்பாச்சாரி வாழ்வுக்குச் செலவாகிறது. இத்தகைய டம்பாச்சாரி போக்கைத் தடுக்க வேண்டும் என்றுதான் அந்த நிதிமந்திரி, செலவு வரி விதித்தார். ஆனால், இன்றுள்ள நிதி மந்திரி, டம்பாச்சாரி செலவு மட்டுப்பட்டு விட்டது என்பதாலோ, அல்லது டம்பாச்சாரிப் போக்கு நல்லது என்பதாலோ செலவு வரியை எடுத்துவிட்டார். அதனால் அதிகமான வருவாய் கிடைக்காமல் இருந்திருக்கலாம். 77 இலட்ச ரூபாய்தான் கிடைத்ததாகத் தெரிகிறது. பத்திரிகைச் செய்திகளிலிருந்து. ஆனால் தொகை எந்த அளவாக இருப்பினும், அந்த வரிக்கு அடிப்படையாக அமைந்திருந்த சமுதாயக் கருத்து முக்கியமானது. எனினும், அந்த வரியை இவர் நீக்கிவிட்டார். அதற்கு மாறாக, கிரசின், தீப்பெட்டி, புகையிலை இவைகள்மீது உள்ள வரிகளை மேலும் மேலும் அதிகமாக்கி இருக்கிறார். அன்று நிதி அமைச்சர், லோக் சபையிலே...

துணைத் தலைவர்: ஐந்து நிமிடம் வேண்டுமெனக் கேட்டீர்கள். ஆனால் பத்து நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொண்டு விட்டீர்கள்.

சி.என்.ஏ.: இன்னும் ஓரிரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

துணைத்தலைவர்: தயவுசெய்து முடித்து விடுங்கள். ஏனெனில், குறுகிய கால அளவே இருக்கிறது.

சி.என்.ஏ.: அன்று லோக் சபையில் நிதி அமைச்சர் ஒரு தீப்பெட்டியை எடுத்துக்காட்டி, இதோ வத்திப்பெட்டி. இதனை நியாயமான விலைக்கு வாங்கி இருக்கிறேன் என்று கூறினார். இப்போது போய் வாங்கும்படி நான் அவரைக் கேட்டுக்கொள்ளு கிறேன். இப்போது வத்திப் பெட்டியின் விலையும் ஏறிவிட்டது. ஏனெனில் கான்யூட் மன்னனைப் போல, நிதி அமைச்சர் விலைகள் ஏறாது என்று கூறினார் என்றாலும், கான்யூட் மன்னர் கூறியதான கடலலை ஓயவில்லை, விலைகளும் நிதி மந்திரியாரின் பேச்சினால் ஏறாமல் நின்று விடவில்லை. எந்தெந்தச் சமயத்தில் வரி போடப் படுகிறதோ, அப்போதெல்லாம் விலைகள் ஏறிவிடத்தான் செய்யும். விலைவாசி ஏற்றத்தை இந்தச் சர்க்கார் கட்டுப்படுத்த முடிந்தாலாகிலும், புதிய வரிகளுக்கு அதனைக் காரணமாகக் காட்ட முடியாவிட்டாலும், மறைமுக வரி போடப்படுவதற்கு மன்னிக்கும் படிக் கேட்டுக் கொள்ள வசதியாகவாவது இருந்திருக்கும். எனவே, இந்த வரி மசோதா, ஒரு கசக்கிப் பிழியும் திட்டமாகும். கம்பளி நெய்வதற்காக ஆடுகளின் ரோமத்தை வெட்டி எடுக்கிறார்கள். புரிகிறது, ஆனால் நீங்கள் மக்களைக் கசக்கிப் பிழிகிறீர்கள், ஏழைகளைக் கசக்கிப் பிழிகிறீர்கள். திட்டத்தின் பெயரால் ஏழைகளைக் கசக்கிப் பிழிகிறீர்கள். அதனால் மக்கள் திட்டத்தையே மிரட்சியுடன் பார்க்கச் செய்து விட்டீர்கள். மக்கள் திட்டம் வேண்டும் என்கிறார்கள். ஆனால் திட்டம் காரணமாகத்தான் இந்த வரிகளெல்லாம் போடவேண்டி இருக்கிறது என்று நீங்கள் கூறும்போது, மக்கள் வரிகளை மட்டும் கண்டிக்கவில்லை, திட்டத்தின் அவசியம் பற்றியே சந்தேகப்படத் தொடங்குகிறார்கள். எனவே, ஒரு விதத்தில் எந்தத் திட்டத்துக்கு நீங்கள் கட்டுப்பட்டிருக்கிறீர்களோ அதே திட்ட ஏற்பாட்டையே நீங்கள் குலைத்துவிடவும் செய்கிறீர்கள். வாதங்கள், இடையிடையே புள்ளி விவரங்களை வைத்து அடைத்த மறுப்புரைகள் ஆகியவற்றை நீட்டி முழக்க வேண்டாம். வறுமையில் நெளியும் மக்கள், அவர்கள் படும்பாடு. வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவைகளைக் கருத்தில் கொள்ளுங்கள் என்று நிதி அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். வரி செலுத்தக் கூடிய சக்தியின் கடைசிக் கட்டம் வந்தாகிவிட்டது. எனவே மறைமுகவரிகளை, அத்தியாவசியப் பண்டங்களின்மீது விதிக்கப்பட்டுள்ள மறைமுக வரிகளை நீக்கிவிட்டு, வேறு இடத்திலிருந்து பணம் தேடிக் கொள்ள முற்படுங்கள். இந்த வரிகள் எல்லாம் நீக்கப்பட்டுவிட்டாலும்

அவருக்கு நிரம்ப வருவாய் கிடைக்க இருக்கிறது என்று உறுதி கூறுவேன். ஏனெனில், எப்போது வரவு செலவுத் திட்டத்தைக் கொடுத்தாலும், வருவாய் வரக்கூடியது என்று தரப்படும் புள்ளியைக் குறைவாகவே தருவது வாடிக்கை, பிறகு சபையிலே மந்திரவாதிபோல் எழுந்து நின்று நான் 23 கோடிதான் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் 32 கோடி கிடைத்தது என்று பேசுவார். ஆகவே, இத்தகைய மறைமுக வரிகளுக்கு அவசியம் இல்லை, மக்களைக் கசக்கிப் பிழியவேண்டியதில்லை என்று கூறுகிறேன்.

●●●

அவைத் தலைவர் அவர்களே!

என் சார்பாகவும், நான் சார்ந்திருக்கப் பெருமைப்படும் தி.மு.க.வின் சார்பாகவும் உள்துறை அமைச்சர் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரிக்கிறேன். அரசாங்கத்திற்கு அளவற்ற அதிகாரங்களை பாராளுமன்றங்கள் வழங்குவது அபூர்வமான தாகும். நாட்டின் கௌரவத்தையும், சுதந்திரத்தையும், சுய ஆட்சியையும், காப்பாற்றுகின்ற ஒரு பெரும் உன்னத இலட்சியத் திற்காக நாடே ஒன்று திரண்டு எழும்போது கோஷ்டி, அரசியல் வேறுபாடுகள் மறைந்து போய்விடுகின்றன என்பதற்குச் சிறந்த உதாரணம் எல்லாக் கட்சிகளும் இணைந்து அரசாங்கத்திற்கு அசாதாரண அதிகாரங்களைத் தரும் செயலாகும்!

ஐயா, வேலூர் மத்திய சிறையிலுள்ள ஓர் அறையில் நான் அடைப்பட்டு கிடக்கும்போது சீன ஆக்ரமிப்புச் செயல்பற்றிய செய்தியைப் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது இயற்கை யாகவே ஆளும் கட்சிமீது சிறிது ஆத்திரம் கொண்டிருந்தேன்.

ஆனால், என்னுடைய சிறை வாழ்வின் மிகக் கொடுமையான நாட்கள் கடைசி நாலைந்து நாட்கள் தான். அப்போது தான் சீன ஆக்ரமிப்புப் பற்றிய செய்தியையும், சீன ஆக்ரமிப்பாளர்கள் அலையலையாக வந்து எல்லையைத் தாண்டியதையும், நமது போர் வீரர்கள் வீரச்சமர் புரிந்தாலும் சில இடங்களையும், சில பல காவல் நிலையங்களையும் விட்டுவிட வேண்டிய நிலைமையையும் பற்றிய செய்திகளைப் படித்தேன்.

சூழ்நிலை பற்றி விரிந்த விளக்கங்கள் தருவதற்கு இது நேரமில்லை. தீர்மானத்தைப் பற்றி விவாதிப்பதற்கு இது நேரமில்லைதான். உள்துறை அமைச்சர் கொண்டு வந்த

இத்தீர்மானம் விவாதிப்பதற்கோ, சொற்போர் புரிவதற்கோ உரியதல்ல என்று நான் கருதுகிறேன்.

நமது எல்லைப் பகுதிகளிலுள்ள ஆக்ரமிப்பாளர்களை அடித்துத் துரத்தும் ஒரு மகோன்னதக் கடமைக்கு நம்மைத் தத்தம் செய்து சூள் உரைக்க இன்று நாம் கூடியுள்ளோம்!

எனவேதான், கடந்த திங்கள் 24ஆம் நாள் நான் விடுதலை யடைந்ததுமே, நான் சார்ந்திருக்கப் பெருமைப்படும் தி.மு.கழகத்தின் சார்பில் ஓர் அறிக்கை வெளியிட்டேன். அந்த அறிக்கையின்படி தி.மு.கழகம் தன் செயற்திட்டங்களை ஒத்திவைக்கும் என்றும், ஆக்ரமிப்பாளரை விரட்டும் இந்திய அரசினருக்கு ஆதரவாக தனது சக்தி முழுவதையும் தரும் என்றும் அறிவித்திருந்தேன்.

இங்கே ஓர் ஆக்ரமிப்பாளன் நுழைந்து விட்டான். யாரும் இதில் சந்தேகப்படத் தேவையில்லை. ஆக்ரமிப்பாளனின் குறிக்கோள் எதுவாக இருந்தாலும் நமது குறிக்கோள் மிகமிகத் தெளிவானது.

நாம் நாட்டின் கௌரவத்தைப் பாதுகாக்க விரும்புகிறோம். அதேபோன்று ஜனநாயகத்தின் பயனையும், கவுரவத்தையும் பாதுகாக்க விரும்புகிறோம்.

இந்தப் பெரிய சச்சரவுக்கான காரணங்களை இந்த நேரத்தில் கிளப்புவது வழக்கமல்ல.

எனினும், நான் இதை வெறும் எல்லை மீறலாகக் கருதவில்லை, வெறும் ஆக்ரமிப்பாகவும் கருதவில்லை. தெரிந்தோ, தெரியாமலோ நாம் இப்போது ஒரு தத்துவப் போராட்டத்தில் இறங்கியிருப்பதாக நான் கருதுகிறேன்.

இன்றைக்கு உலகம் இரண்டு முகாம்களாகப் பிரிந்திருக்கிறது. ஒன்று ஜனநாயக முகாம், இன்னொன்றை ஜனநாயகமற்ற முகாம் - என்று கூறுவேன். அந்த முகாமில் உள்ள நாடுகளின் பெயரை நான் சொல்லப் போவதில்லை. எனினும், ஜனநாயகமற்ற முகாம் என்று மட்டும் இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒத்துப்போகும் தத்துவம் இருப்பது நமக்கெல்லாம் தெரியும். ஜனநாயகம் அதனுடன் மாறுபட்ட அரசாங்கங்களோடு ஒத்துப்போவதுபோல், நெருக்கடி நிலை வரும் போது மாறுபட்ட அமைப்புடைய அரசாங்கங்களைவிட அதிகமான பலம் உள்ளது என்பதைக் காட்ட முடியாவிட்டாலும், அந்த அரசாங்கத்தைப் போல் ஜனநாயக அரசும் பலம் படைத்ததுதான் என்பதை நிரூபித்தாக வேண்டும்.

எனவேதான், ஜனநாயக அமைப்புகள், தங்கள் அரசியல் வேற்றுமைகளை மறந்து பூசல்களைக் கூடப் பின்னணியில் வைத்துவிட்டு, ஒன்று சேர்ந்து முன் வந்து ஒரே குரலில் "ஆக்ரமிப்புத் தோற்கடிப்பப்பட வேண்டும், சீனர்கள் அவர்கள் எல்லைக்குள் விரட்டியடிக்கப்பட வேண்டும்" - என முழங்குகின்றன.

சீன ஆக்ரமிப்புச் செய்தி என்னைப் போன்ற மனிதர்களை அதிரச்செய்யும் விதத்தில் இருந்தன. என்னைப் போன்ற மனிதன் என்று கூறுகின்றபோது இதுபோன்ற பெருமைமிக்க சபைகளிலே முன்பு பேசும் வாய்ப்பைப் பெறாததைக் குறித்துத்தான் சொல்கிறேன்.

நான் சாமானியர்களின் பிரதிநிதி!

இந்த நாட்டை ஆக்ரமிக்க யாருக்கும் தைரியம் வராது என்றே நாமெல்லாம் நினைத்து வந்திருக்கிறோம். ஏனெனில், நமது கூட்டுசேராக் கொள்கையையும், நடுநிலைக் கொள்கையையும் உலகில் உள்ள அறிவாற்றல் நிரம்பிய நாடுகளெல்லாம் பாராட்டியுள்ளன. இந்தியாவின் பிரதமர் சீன - இந்திய நட்புரிமையை வலியுறுத்தும் போதெல்லாம் நாம் மேலும் நம்பிக்கையோடிருந்தோம்.

சீனாவின் நலத்துக்குப் போராடியவர் இந்தியப் பிரதமர். நண்பர்களற்ற நிலையில் சீனா இருந்தபோதும் ஐ.நா.சபையிலும், அகில உலக அரங்குகளிலும், இந்தச் சபையிலும், பாராளுமன்றத்திலும் கூடச் சீனாவின் சுதந்திரத்திற்காகப் பரிந்து வாதாடினவர் ஒரே ஒருவர் பண்டித நேருதான்!

அவர் ஒருவர்தான் ஐ.நா.வில் சீனாவை அனுமதிக்க வேண்டுமென வாதாடியவர். எனவே, நாம் மிக உறுதியாக நம்பினோம். இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையில் எந்த மோதலும் ஏற்படாது என்று!

பாண்டுங் மாநாட்டு உணர்வைச் சீனாவின் மனதில் பண்டிதர் ஏற்றியிருப்பார் என்று நாம் நினைத்தோம். பாண்டுங் மாநாட்டு உணர்வு சீன நெஞ்சங்களில் குடியேறியிருக்கும் என நம்பினோம். எனவே, சீனர்களின் எல்லை மீறலையும் ஆக்ரமிப்பையும் பற்றிக் கேட்ட மாத்திரத்திலே சிறிது அதிர்ச்சி அடைந்தோம்.

என்னைப்போல் அதிர்ச்சியடையாத கட்சிகளும் இந்தச் சபையிலும் பாராளுமன்றத்திலும் இருந்தன - என்பதை நான் உணர்கிறேன் - அந்தக் கட்சியினர் அடிக்கடி "நமது அரசாங்கத்தின் நடுநிலைக் கொள்கை - கூட்டுச் சேராக் கொள்கை - இராணுவக் கூட்டுக்கெதிரான கொள்கை நமது நாட்டை மகிழ்ச்சி மணம் கமழும் நாடாக்காது, அபாயம் விளையும் பூமியாக்கும்" - என்று கூறி வந்தனர். அவர்கள் இப்போது எழுந்து இதுவரை தாங்கள் நடக்கும் என்று பயந்தது நடந்துவிட்டதாகக் கூறினார்கள். அந்தக் கூற்றிலே கூடப் பொறுப்புணர்ச்சியும் தன்னடக்கமும் இருந்தன.

இந்த அவையில் 3 அல்லது 4 நாட்களாக நடைபெற்றுவரும் விவாதங்களும், உணர்ச்சியுள்ள பேச்சுக்களும் நமது பொறுப் புணர்ச்சியைக் காட்டுகின்றன. இவை பெருந்தன்மை மிக்க ஜனநாயக சபைகளில்தான் காணப்படும்.

இவையெல்லாவற்றையும் விடப் பிரதமர் முன் வந்து பாதுகாப்பில் முன் எச்சரிக்கையில்லாமல் இருந்ததற்கும், அதற்கு யார் பொறுப்பு என்பது பற்றியும் தக்க காலத்தில் விசாரிக்கப் போவதாகவும் தெரிவித்தாரே! அந்தத் தைரியமான அறிவிப்புத்தான் மிகவும் பெருமைப்படத்தக்கது.

இதைப்பற்றி விசாரணை நடத்தக் கட்டளையிடுவது என்பது மிகப்பெரிய தைரியசாலிகளுக்குத்தான் வரும்!

எதிர்க்கட்சிகள் என்ற முறையில் பண்டித ஜவஹர்லால் நேருவிடம் நமக்குக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். நிர்வாகத் தலைவர், காங்கிரஸ் தலைவர் என்ற முறையிலும் அவரிடம் கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

ஆனால் அவர்தான் இந்தப் பூபாகத்தின் பாதுகாவலன் என்பதிலும், இந்த நாட்டை உயிர்த்தெழச் செய்தவர் என்பதிலும், சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய சீரிய இலட்சியங் களின் களஞ்சியம் என்பதிலும் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

எனவேதான் நம்மில் சிலர் கூறிய யோசனைகளைப் பெருந்தன்மையான உணர்வுடன் சந்திக்க, அந்த ஜனநாயகத் தலைவர் பாதிவழி இறங்கி வந்து ஏற்றுக்கொண்டார்.

அவசியம் போர் முயற்சிகளைப் பலப்படுத்தவேண்டும் என்பதை நாம் உணரவேண்டும். சீன ஆக்ரமிப்பிற்கான உள் நோக்கத்தை நாம் கண்டு பிடிக்கவேண்டும்.

எல்லைப் பிரச்சினையைப் பற்றிக் கூடிப்பேச இந்த நாடு தயாராக இருக்கும்போது எல்லையில் ஏன் சீனநாடு போரிட வேண்டும்?

அலையலையாக வந்து தவாங் அருகில் சில பல இடங்களைப் பிடித்துக் கொண்டு, போர் முகாம்களை அமைத்துக்கொண்டு

தவாங்கைப் பாசறை வீடாக்கி மேலும் பெரியதொரு பாய்ச்சலுக்கு ஏன் சீனர் தயாராக வேண்டும்? சீனம் சினம் கொள்ளும்படி இந்த நாடு எந்தச் செயலைச் செய்தது? உத்திரப்பிரதேசத்திற்கருகில் கூடத் தங்கள் எல்லை இருப்பதாக ஏன் சீனர்கள் எண்ணவேண்டும்?

சீனரின் இந்தச் செயலுக்கான உள் நோக்கைக் கவனிக்கும் போது, நான் முன்பே சொன்னது போல் இது ஒரு தத்துவப் போராட்டம் என்று தோன்றுகிறது.

நமது கூட்டுச் சேராக் கொள்கையும் பலவீனமெனப் பொருள் கொள்கின்றனர் சீனர்! நமக்கு நண்பர்களே இல்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள். பஞ்ச சீலத்தை நாம் மேற்கொண்டிருப்பதால் நம்மால் சண்டைபோட இயலாது என்று நினைக்கிறார்கள். தவறான இலக்கண அறிவு படைத்தவர்கள் சீனர்கள் - என்று நான் கூறுவேன்!

நாம் சண்டையிட மாட்டோம் என்றுதான் தொடர்ந்து கூறி வந்திருக்கிறோம். இப்படி நாம் கூறியதற்குப் பொருள் நம்மால் சண்டையிட முடியாது - என்பதல்ல!

அழிவற்ற புகழ்சார்ந்த மலைச்சாரலில் நமது போர் மறவர்கள் தங்கள் உயிரை விட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நமது பாராட்டுதல்களும் வணக்கமும் உரித்தாகுக.

அங்கே இப்போது தாக்கும் சக்திபெற்ற வீரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூலம் சீனர்களுக்கு "நாங்கள் சண்டையிட மாட்டோம் என்றால் சண்டையிட முடியாது என்ற பொருளல்ல" - என்ற பாடத்தைப் புகட்டுவோம்.

எனவே, மேன்மேலும் ஆயுதங்கள் போர் வீரர்களுக்குத் தரப்படவேண்டும். எல்லையில் போராடும் இராணுவத்திற்காதரவாக நாடே திரண்டு நிற்க வேண்டும்! யுத்த காலத்தில், போர்க்களத்தைப் போலவே உள்நாட்டுத் துறையும் மிக முக்கியமானது.

இன்றைய தினம் மக்கள் மனதில் குறிப்பிடத்தக்க உறுதியும், தெளிவும் ஏற்பட்டிருப்பதைக் காணலாம். துணிச்சல் நிறைந்த போர் வீரர்களிடம் தான் இத்தகைய உணர்வு இருக்க முடியும்.

மக்கள் தம் உணர்வையும், செல்வத்தையும் அள்ளியள்ளித் தருகின்றனர். இது மட்டும் போதுமா என்று நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இந்தப் போர் மாதக் கணக்கிலோ வருடக் கணக்கிலோ நடைபெறும் போர் அல்ல என்றும், இது நீண்ட காலப்போர் என்றும் பண்டிதர் கூறியிருக்கிறார்.

இது நீண்டகாலப் போராக இருக்குமானால் நம்முடைய கொள்கைகளை அதற்கேற்றபடி அமைத்துக்கொள்ள வேண்டாமா? சீனா போர்ப் பிரகடனம் செய்ய எண்ணும் வேளையிலாவது அதைச் செய்வது சரியல்லவா?

இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையில் போரே இல்லை என்றும், இந்திய - சீன மக்களின் நட்பு குலைக்கப்படவில்லை என்றும், சீனர்கள் தங்கள் எல்லையைப் பிடித்துக் கொண்டார்கள், அல்ல - என்றும் சீனர்கள் இப்போதும் தவறான பிரசாரம் செய்கிறார்கள்.

போர்க்களத் தாக்குதலைவிடப் பயங்கரமான முறையில் சமாதானப் பிரச்சாரத் தாக்குதலைச் சீனர்கள் நடத்துகிறார்கள். நாட்டின் வளங்களை எவ்வளவு தூரம், எப்படி, எங்கு பயன்படுத்த வேண்டும் என்பதுபற்றி நம் மனதில் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும்.

நாட்டிலுள்ள கீழ்மட்டத்தில் இருப்போர் ஆனாலும்? மேல்மட்டத்தில் இருப்போரானாலும் முன் வந்து உதவிகளையும் நன்கொடைகளையும் அளித்துள்ளனர்.

ஏழை மனிதன் முன்வந்து வாரி வழங்கும்போது, சிற்றரசர்கள் தரும் நன்கொடை மிகக் குறைவாய் உள்ளது.

எனவே, சிற்றரசர்களுக்குத் தரும் உதவித் தொகையை ஓராண்டுக்காகிலும் குறைத்துப் பாதுகாப்பு நிதிக்கு அளிக்க வேண்டும். ஓராண்டுக்காகிலும் இதைச் செய்தால்தான் தரவாரியாக ஒவ்வொருவரும் தியாகம் செய்யத் தயாராக வேண்டும் என்பதைச் சாதாரணமான மனிதன் உணர்ந்து கொள்ள முடியும்.

ஆனந்த் சந்த் (இமாசலப் பிரதேசம்) : முழுத் தொகையையும் குறைத்துவிட்டால், வசதியேதும் அற்றவர்கள் எப்படி வாழ்வார்கள்?

ஓர் உறுப்பினர்: அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க வேண்டும்!

சி.என்.ஏ: சிற்றரசர்கள் நிலை அவ்வளவு மோசமாகப் போய்விட்டதென்றால், நாம் கண்டிப்பாக அவர்களுக்கு உதவுவோம்!

ஆனந்த் சந்த்: மிகவும் நன்றி!

சி.என்.ஏ.: இந்தச் சபையிலிருந்து சிற்றரசர்களுக்கு வேண்டுகோள் விடப்படுமானால், எனது நண்பர் குறை கூறியது போல் அவர்கள் கூறமாட்டார்கள். ஏனெனில், சிற்றரசர்கள்

பெயரளவுக்கு மட்டும் முடிசூட்டிக் கொண்டவர்கள் அல்லர். அவர்கள் இயல்பில் நடத்தையில் சிற்றரசர்களாகவும், பெருமகனாக வும் இருக்க வேண்டும்!

நாடு முழுவதும் இத்தகைய பேரபாயத்தை எதிர்நோக்கி இருக்கும்போது அவர்களால் தமது உதவித் தொகையைக் கொடுக்காமலிருக்க முடியாது.

இப்போதைய போர் நீண்ட போராக இருக்குமானால் நான் இன்னொரு யோசனையும் கூற விரும்புகிறேன். நமது வீரர்களுக்கு ஆயுத உதவி அளிக்க எந்த வழி வகையைப் பின்பற்ற வேண்டும் என்பதை நாம் ஆராய வேண்டும். போர் முனை பெரிதாகி இன்னும் போர் நீடிக்குமென்றால், அவ்வளவு காலம் எப்படி நம் வீரர்களுக்கு ஆயுத உதவி அளிக்கப் போகிறோம்? எவ்வகையான ஆயுதங்களை அவர்களுக்கு அளிக்கப் போகிறோம்?

பிரதம மந்திரி நேற்றைய தினம் கூறினார்கள். ஆயுதங்கள் வேகமாக உற்பத்தி செய்யப்படுவதாக, தொழிற்சாலைகள் வேலை முழுமூச்சுடன் நடப்பதாகவும்! தானே இயங்கும் ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படுவதாகவும் கூறினார்.

நாம் இப்படி உற்பத்தி செய்துகொண்டிருக்கும் போது சீனா கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்காது என்பதை நாம் உணரவேண்டும். உள்ளபடியே அவர்கள் ஏராளமான ஆயுதங்களை உற்பத்தி செய்கிறார்கள்!

அவர்கள் இரும்புத் திரைக்குப் பின்னால் இருக்கும் காரணத்தால் அவர்களுடைய உண்மையான பலம் நமக்குத் தெரியாது. அவர்களின் மறைந்துள்ள சக்தியும் நமக்குத் தெரியாது, அவர்களுக்கு மறைந்துதவும் நண்பர்கள் யார் என்றும் நமக்குத் தெரியாது.

எனவே, நாம் உதவத் துடிக்கும் 40க்கு அதிகமான நாடுகளின் நல்லெண்ணத்தை நாம் பெற வேண்டும்! அதற்குக் குந்தகம் விளைவிப்பதாக நமது கூட்டுச் சேராக் கொள்கை இருக்காவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த நாட்டிற்காகத்தான் கூட்டுச்சேராக் கொள்கையே தவிர, கூட்டுச்சேராக் கொள்கைக்காக நாடு இல்லை.

கூட்டுச்சேராக் கொள்கை, கொள்கை அளவில் குறைகூற முடியாத ஒன்றாகும். நடைமுறையில் அக்கொள்கையைக் கடைப்பிடிக்கும்போது உலகின் வல்லரசு நாடுகள் சிலவற்றின் மனதில் கடும் சந்தேகத்தைத் தோற்றுவித்து விட்டது.

கூட்டுச்சேராக் கொள்கை என்பது போர்வை - மிகவும் சௌகரியமான போக்கு - என்று சில நாடுகள் நினைக்கின்றன. அப்படி நினைப்பதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு!

யாரோ ஒருவர் கூறினார் - அவர் பெயர் எனக்கு நினைவில்லை. நமது கூட்டுச்சேராக் கொள்கை என்பது உலகின் இரு முகாம்களிலிருந்து உதவி பெறும் ஒரு கொள்கை - அல்லது ஒரு வழி - என்று அவர் கூறினார். இதுதான் கூட்டுசேராக் கொள்கையின் நடைமுறைப் பயன்.

கூட்டுச்சேராக் கொள்கையின் அடிப்படைத் தத்துவத்தை ஐ.நா. போன்ற சபைகளிலிருக்கும் நமது பிரதிநிதிகள் சரியாக எடுத்துக்கூறி வல்லரசுகளின் மனதைக் கவரத் தவறிவிட்டார்கள். அவர்கள் பெயரை நான் சொல்ல விரும்பவில்லை.

கடந்த பத்துப் பதினைந்து வருடங்களாக நம்முடைய செயல்களும், சொற்களும் நம்மீது சந்தேகத்தைத் தோற்றுவித்திருக் கின்றன. எனவே, கூட்டுச்சேராக் கொள்கையைத் தப்பு அபிப்பிராயம் எழாதபடி விளக்கக் கூடியவர்களை ஐ.நா. சபைக்கு அனுப்ப வேண்டும் என்று அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்வேன். இந்த நபர்களைத்தான் அனுப்ப வேண்டும் என்றோ, இவர்களை அனுப்பக்கூடாது என்றோ நான் கூற விரும்பவில்லை. யார் அனுப்பப்பட வேண்டும் - யாரை அனுப்பக்கூடாது - என்பது நாட்டிற்கு நன்றாகத் தெரியும். யாரை அனுப்ப வேண்டும் என்பதைவிட யாரை அனுப்பக்கூடாது என்று நாட்டினருக்கு மிக நன்றாகத் தெரியும்!

கூட்டுச்சேராக் கொள்கை - என்பது கொள்கை அளவில் சரியாக இருந்தாலும், அதில் சிலநேரம் விட்டுக் கொடுக்கும் தன்மை இருக்கவேண்டும். கூட்டுச்சேராக் கொள்கையைக் கடைப் பிடிப்பதில் என்ன வழிகாட்டுதல் நமக்கு இருக்கிறது? அகராதி கூறுகிறது, கூட்டுச்சேருவது நல்லது என்று! மோட்டார் கார்களில் பழக்கமுள்ளவர்களுக்கு நன்றாகத் தெரியும். கூட்டு சக்தி (அலைமண்ட் சாதனம்) இல்லையென்றால், கார் நகராது. எனவே கூட்டுச்சேராக் கொள்கை என்பது எதிர்மறைச் செயலாகும். அது நமது முன்னேற்றத்தைத் தடுக்கக் கூடாது. கூட்டுச்சேராக் கொள்கை மூலம் இராணுவக் கூட்டணிக்கு நாம் இழுத்துச் செல்லப்படவோ, இடம் பெறவோ மாட்டோம் என்றால் அதை என்னால் புரிந்து கொள்ளவும் பாராட்டவும் முடிகிறது.

எந்த இராணுவ ஒப்பந்தத்திலும் இந்தியா இழுக்கப் படுவதை நான் விரும்பவில்லை.

எனவே, எல்லா ஜனநாயக சக்திகளும் ஒன்று திரள வேண்டும் என்று நான் கூற விழைகிறேன்.

நமது நாட்டிற்கு உதவத் துடிக்கும் நாற்பதுக்கு மேற்பட்ட நாடுகளுக்கு நல்லெண்ணத் தூதுக்குழு ஒன்றை அனுப்ப வேண்டும் என நான் கருதுகிறேன்.

அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற நம் மீது நட்புரிமை கொண்டாடும் நாடுகளுக்கு அக்குழு சென்று ஆயுத உதவி பெறும் அணி (Arms Aid Consortium) யை நிறுவ வேண்டும்.

நமக்குத் தேவைப்படும் எல்லா ஆயுதங்களுக்கும் நாம் விலை கொடுக்க இயலாது. சீனர்கள் மேலும் மேலும் ஆக்ரமிக்கும்போது நாம் மேன்மேலும் ஆயுதங்களை உற்பத்தி செய்துதான் உபயோகிக்க வேண்டும் என்றும் நான் கருதவில்லை.

எனவே, ஆயுத உதவி பெறும் அணி அமைக்கப்பட வேண்டும். அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற நாடுகளுக்கு நல்லெண்ணத் தூதுக்குழு அமைக்கப்பட வேண்டும். அந்தத் தூதுக்குழுவில் ஆளும் கட்சியினர் மட்டுமல்ல, எதிர்க்கட்சியினரும் இடம் பெறவேண்டும்.

இதன் மூலம் சர்க்காரின் கொள்கையை ஆளும் கட்சி மட்டுமல்ல - நாட்டிலுள்ள எல்லா எதிர்க்கட்சிகளும் கடைப்பிடிப்பதில் உற்சாகமாயுள்ளன - என்பதை உலகிற்குக் காட்ட முடியும் என்பதால் இதைக் கூறுகிறேன்.

நம்மீது ஆதரவெண்ணம் கொண்டிருக்கும் பிறநாடுகளி லிருந்தும் தொண்டர் படை திரட்டப்படலாம் - எனக் கருதுகிறேன். இதில் தவறுமில்லை, இழுக்குமில்லை!

நம்முடைய சமர்க்களங்களில் வேற்று நாட்டு வீரர்கள்தான் போரிடவேண்டும் என்று நான் கூறவில்லை!

ஜனநாயகத்திற்காகத் தங்கள் இன்னுயிர் தருகின்ற மக்கள் எங்குமிருக்கிறார்கள் - என்பதை உலகம் உணர வேண்டும் என்ற எண்ணத்திலேயே இதைக் கூறுகிறேன்.

எனவே, நான் கூறியபடி இந்த நல்லெண்ண தூதுக்குழு ஜனநாயக நாடுகளுக்குச் சென்று நிதி சேர்த்து, ஆயுதங்கள் சேர்த்து, தொண்டர்கள் சேர்த்து அனுப்ப வேண்டும் - என விரும்புகிறேன்.

இதன் மூலம் நமது நடுநிலைக் கொள்கை எதிர்மறையான தல்ல, நமது கூட்டுச் சேராக் கொள்கை எதிர் மறையானதல்ல என்பதைச் சீனா உணரவேண்டும்.

நமது நியாயமான நடைமுறை ஜனநாயக நாடுகளின் மனதில் நல்லெண்ணத்தைத் தோற்றுவித்திருக்கிறது என்பதையும் உணர்த்தவேண்டும். நம் விருப்பத்திற்கேற்றபடி அகில உலகின் நல்லெண்ணத்தைப் பெறமுடியும் என்பதையும் காட்டவேண்டும். ஆளும்கட்சியின் சிந்தனைக்குச் சில யோசனைகளை இதுவரை சொன்னேன்!"

விலைவாசி கட்டுப்படுத்தப்படும் என்று அரசாங்கத் தரப்பிலிருந்து வந்த உறுதிமொழி கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். விலைவாசியைக் கட்டுப்படுத்துவதுதான் உள்துறைப் பாதுகாப்புக்குத் தேவையானதாகும்.

அத்தியாவசியப் பண்டங்களின் விலை உயரும்போது, மக்களுக்கு அவை கிடைக்காமற் போகும்போதுதான் போர் பற்றிப் பீதி அடைகிறார்கள் மக்கள்.

அரசாங்கம் முன்வந்து விலைவாசிகளைக் கட்டுப்படுத்து வோம் என்றால் உள்துறை மிகவும் பலமடைந்ததாக இருக்கும்.

உணவுத் துறையைப் பொறுத்தமட்டில், உணவு தானிய கையிருப்புப் போதுமான அளவு இருக்கிறது என்று உணவு அமைச்சர் உறுதி அளித்தார். கையிருப்பைவிட உற்பத்தி முக்கியமானது. உணவு உற்பத்தி பெருக வேண்டும். அதற்காகத் திரு. டி.டி.கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்கள் கூறியுள்ள சீரிய யோசனைகளைக் கவனிக்க வேண்டும்.

போர்க் காலத்துக்கேற்ற முறையில், சமாதான காலத்துக்கென அமைந்துள்ள பொருளாதார யந்திர முறையைத் திருத்தி அமைக்கும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

பொருளாதார இயக்குநர் அமைப்பு ஒன்று நிறுவப்பட வேண்டும் என்று விரும்புகிறேன்.

சமாதானக் காலப் பொருளாதாரம், வளத்தின் அடிப்படையில் அமைவது; போர்க்காலப் பொருளாதாரம் பற்றாக்குறையின் அடிப்படையில் அமைவது. எனவே, பொருளாதார இயக்குநர் அமைப்பு ஒன்று நிறுவப்பட்டு, போர்க்காலத்திலும் கூடச் சமாதான காலப் பொருளாதாரச் செழிப்பு ஏற்படுத்த வேண்டும் என்று கூற விரும்புகிறேன்.

இந்த விஷயங்களைக் கவனிக்கும்போது ஆளும் கட்சி எதிர்க்கட்சிகளையும் நம்பிக்கைக்கு உரியனவாக்கிக் கொள்ள வேண்டும்.

பாதுகாப்புக் கமிட்டிகளைப் பற்றி நான் கூறவில்லை வேறுபட்ட எதிர்க்கட்சிகளுக்கிடையேயும் ஆளும் கட்சிக்கிடையேயும் நல்ல தொடர்பு ஏற்பட வேண்டும் என்ற பொருளில் கூறுகிறேன்.

எந்த யோசனையும் வரவேற்கப்பட வேண்டும். எந்த நன்கொடையும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் அந்தக் கட்சி அல்லது இந்தக் கட்சிதான் சீனாவை எதிர்க்கிறது என்றில்லாமல், ஒரே கட்டுப்பாடான பேரணியாக நாம் திரண்டு சீனத் தாக்குதலைச் சந்திக்கலாம்!

கருத்து வேறுபாட்டு அடிப்படையில் பேச நான் விரும்பவில்லை. ஓர் உறுப்பினர் கருத்து வேறுபாடுள்ள பிரச்சினையைத் துவக்கிவிட்டார். திபெத்தியர்கள் பிரச்சினையில் நாம் நடந்தது தவறில்லை என்றார் அவர். நான் அவருடன் மாறுபடுகிறேன்.

திபெத், பூடான், சிக்கிம், நேபாளம் ஆகிய நாடுகளில் நமக்கு அக்கறை உண்டு! ஏனெனில், இயற்கையாக அவை இந்தியாவின் எல்லை மாநிலங்கள்.

மஞ்சள் அபாயம் பற்றிய தகவல்களை வரலாற்று ஏடுகளில் காணலாம். ஆண் வம்சங்கள் ஆண்ட போதானாலும் சரி, சன் - யாட் - சென்னின் புரட்சிக் காலமானாலும் சரி சீனா மஞ்சள் அபாயமாக மாறி - உலகம் முழுவதையும் பயமுறுத்தியது.

உள்ளபடியே அங்கே இப்போது மஞ்சளுடன் சிவப்பும் கலந்திருக்கலாம். இந்தக் கலவையால் என்ன வண்ணம் வரும் என்று எனக்குத் தெரியாது. ஆனால், மஞ்சள் அபாயம் பற்றி எல்லோரும் அறிந்திருக்கிறார்கள்.

சீனா எப்போதெல்லாம் பலம் பெறுகிறதோ, அப்போதெல்லாம் தனது எல்லையைப் பெருக்கவே முனைந்திருக்கிறது.

திபெத் நிகழ்ச்சிக்குப் பின் சீனாவின் மிக உயர்ந்த பதவி படைத்தவர் பேசிய பேச்சொன்றைப் படித்தேன். திபெத் சீனாவுக்குச் சொந்தம் - என்று கூறுவதற்குப் பதிலாக, ஒரு விசித்திர வாதத்தைக் கூறினார். "திபெத் சீனாவுக்குச் சொந்தம். பூடானும், சிக்கிமும், லடாக்கும் திபெத்துக்குச் சொந்தம். எனவே, பூடானியர்களும், சிக்கிமியர்களும், திபெத்தியர்களும், லடாக்கியர்களும் தாயகமான சீனாவுக்குள் சேர வேண்டும்" என்றார்.

இந்தத் தத்துவம் நடைமுறைப் படுத்தப்படுமானால் இது நீண்டதொரு தகராறு என்பது மட்டுமல்ல; நீண்ட காலப் போருக்கு வழி வகுப்பதாகும். எனவே, எல்லா விளைவுகளுக்கும் தயாராக வேண்டும். ஜனநாயக நாடுகளை நம் அணிக்குக் கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும். அந்த நாடுகள் அவ்விதம் அணி சேரும் என்று நான் நம்புகிறேன்.

பத்திரிகைகள் போர் விளம்பரத்திற்கு இலவச இடம் தரவேண்டும் என்று செய்தித்துறை அமைச்சர் கனம் கோபால் ரெட்டி விடுத்த வேண்டுகோளைப் படித்தேன்.

மந்திரி எவ்வளவு இடம் விரும்புகிறாரோ அவ்வளவு இடம் தர எனது கட்சி சார்பான நாளிதழ்களில் கிழமை இதழ்களில் ஏற்பாடு செய்கிறேன். இதைக் கூறும்போது, செய்தி ஒலிபரப்பு அமைச்சர் வானொலி பிரச்சாரத்தைச் சமாதான முறையிலிருந்து போர்க்கால முறைக்கு மாற்ற வேண்டும் எனவும் கூற விரும்புகிறேன்.

எதிரிகளின் பிரச்சாரத்தைச் சரியான முறையில் முறியடிக்கும் பாசறையாக வானொலி விளங்க வேண்டும்.

பல்வேறுபட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களை ஏன் ரேடியோவில் சொற்பொழிவாற்றும்படி கூறக் கூடாது? தாம் சந்திக்கவிருக்கும் சமர்க்கள அபாயம் பற்றிப் பேசப் போர்வீரர்களை வானொலி ஏன் அழைக்கக் கூடாது? நன்கொடை அளித்தவர்களை வானொலியில் பேசச் செய்து, பிறரையும் தரும்படி அவர்கள் ஏன் தூண்டக்கூடாது?

பிரச்சாரம் என்பது மிகச் சிறந்த ஆயுதம், அதை நல்லமுறையில் ஜனநாயக நாடுகளைவிட ஜனநாயகமற்ற நாடுகள் பயன்படுத்துகின்றன.

எங்கள் கட்சிக்குரிய பத்திரிகைகளில் இலவச இடம் ஒதுக்க நான் தயாராக இருக்கிறேன். எங்கள் கட்சிக்கு இரண்டு, மூன்று நாளிதழ்களும், பத்து, பதினைந்து வார இதழ்களும் இருக்கின்றன.

பிரச்சாரம் வேகமான முறையில் இயங்க வேண்டும். பிற கட்சிகளுக்கும் உரிய இடம் தரப்படவேண்டும். அப்படிச் செய்வதின் மூலம் நாட்டைக் காத்துச் சீனரை விரட்டுவதில் நாம் ஒரே குறிக்கோள் கொண்ட மக்கள் என்பதை உணரச் செய்ய வேண்டும்.

மேலும், இந்த சபையின் நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

உள்துறையமைச்சர் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரிப்பதில் தி.மு.கழகத்தின் பெயரையும் பதிவு செய்கிறேன்.

நாட்டின் எதிர்காலத்தையும், கௌரவத்தையும், பாதுகாப்பையும் காப்பாற்றும் இந்தப் போரின் பெருமைக்குரிய அணிவகுப்புப் பெயர்ப் பட்டியலில் தி.மு.கழகத்தின் பெயரைப் பொறிக்கிறேன்.

- இராஜ்யசபை பேச்சு, 12.11.62

தம்பி,

பழக்கடைக்குச் செல்பவன், முழம் என்ன விலை என்று கேட்க மாட்டான். துணிக்கடை சென்று படி என்ன விலை என்று கேட்க மாட்டான், சராசரி அறிவுள்ளவன்.

ஆடை அணி அணிந்துகொண்டு ஆற்றிலே இறங்குபவன், சேற்றினை எடுத்துச் சந்தனமாகப் பூசிக் கொள்பவனுக்கு, அண்ணன், வேறென்ன! திருக்குறள் படிப்பவன் பெரிய திருவடியின் வாலின் நீளம் எவ்வளவு என்பதனை அறிய, அந்த நூலைத் துருவித் துருவிப் பார்த்திடுவானா? தென்னை ஏறித் தேன் கதலி தேடுபவன் உண்டா?

உன் அண்ணனுக்கு, என்ன அளவற்ற ஆற்றலோ! அகிலத்தில் எவருக்கும் இல்லாத அறிவாற்றல் கொண்டவனோ? என்று எவரேனும் கேட்டிடும்போது, தம்பி, இதனை எண்ணிக்கொள், எனக்குத் தெரிந்தது குறைவு, ஆனால் அதிலே தெளிவு மிகுதியும் இருக்கவேண்டும் என்பதிலே நான் நிரம்ப அக்கறைகொண்டவன்; ஆர்வம் உள்ளவன்; எதையும் செய்திட வல்லேன் என்ற இறுமாப்புக் கொள்பவன் அல்ல; எதை எப்படிச் செய்தால் என்ன என்று அக்கறையற்று நடப்பவன் அல்ல.

பழக்கடை செல்வேன், முழம் என்ன விலை என்று கேட்கமாட்டேன். துணிக்கடை போனால் படி எட்டணாவா என்று கேட்டு, ஏமாளியாக மாட்டேன். தேன் கதலி தேடித் தென்னை ஏற மாட்டேன்.

எதை எதை எங்கெங்கு பெற முடியும் என்ற தெளிவுடன் பணியாற்றுவேன்.

புதுடில்லி சென்றிருந்தேன்; கம்பளிப் போர்வைக்குள்தான் இருந்தேன் - கொட்டும் குளிர் அங்கு இப்போது.

அதே டில்லியில் முன்பு சென்றிருந்தபோது சட்டை கூடப் போட முடியவில்லை - அவ்வளவு வெப்பம்!

அண்ணாதுரை அடியோடு மாறிவிட்டான் - ஒரே கம்பளி மயம் இப்போது - என்று யாராவது பேசினால் - நகைச்சுவைக்காக என்று கருதிக்கொண்டு பேசினால்கூட - கருத்தற்றவன் என்றுதான் பேசுபவர் பற்றி அறிவுலகம் கூறும். நான் அறிந்த உலகத்திலே இதற்குத்தான் அபாரமான மதிப்பு என்று எவரேனும் சொல்ல முனைந்தால், “சபாஷ் தம்பி! வெளுத்து வாங்கு!” என்று கூறிவிட்டு, வேறு வேலை பார்ப்பவன் நான்.

சென்ற பொதுக்குழுவின்போது நான் விளக்கிக் காட்டியது போல, தி.மு.கழகத்துக்கு மிகப் பெரிய - அது தோன்றிய நாளிலிருந்து ஏற்படாத விதமான நெருக்கடி ஏற்படுத்த, நாசமாக்க, பலத்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

திராவிட நாடு கேட்பது - அரசியல் சட்டத்துக்கு விரோத மானது என்று ஏற்படுத்த, அரசியல் சட்டம் திருத்தப்படுகிறது.

இது, அரசியல் சட்டத்துக்கு ஏற்படும் பதினாறாவது திருத்தம்.

ஆங்கில மொழி நீடித்திருக்கச் செய்வதற்காக ஒரு திருத்தம் அரசியல் சட்டத்தில் செய்யப்பட இருந்தது; பண்டித நேரு உறுதி அளித்திருந்தார்; ஆனால் இப்போதுள்ள சூழ்நிலையில் கசப்புணர்ச்சி ஏற்படக் கூடாது என்பதனால், கருத்து வேறுபாட்டுணர்ச்சியைக் கிளப்பத்தக்க பிரச்சினையைப் புகுத்த வேண்டாம் என்ற காரணம் காட்டி, வந்திருக்க வேண்டிய திருத்தத்தை நிறுத்தி வைத்து விட்டார்கள்.

ஆனால், பேச்சு உரிமையைப் பறிக்கும் 16ஆம் திருத்தம், பல கருத்து வேற்றுமைகளைக் கிளறிவிடத் தக்கது என்று தெரிந்திருந்தும், கொண்டு வந்து விட்டனர்.

அந்தப் பிரச்சினை பற்றி இராஜ்ய சபையில் நான் பேசியதைத் தமிழாக்கித் தந்துள்ளேன்.

அதிலே, பழம் டஜன் என்ன விலை என்ற முறைதான் இருக்கும்; முழம் என்ன விலை என்று இருக்காது!

அப்படியா கேட்பது - கூடை என்ன விலை என்றல்லவா கேட்டிருக்க வேண்டும் என்று கூறுபவர் இருப்பர் உலகிலே. பலர் பலவிதம்! கூடை என்ன? அம்பாரம் என்ன விலை என்றுகூடக் கேட்கட்டும்; நான் தடுக்கவில்லை! ஆனால், பழக்கடை சென்று, முழம் என்ன விலை என்று கேட்க வேண்டும் என்று மட்டும் சொல்லாதிருந்தால் போதும் - சொல்பவர்கள் சரியாகத்தான் இருக்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்படும்.

தம்பி! பேச்சைப் படித்துப் பார்!!

பேச்சுரிமைக்காக வாதாடி இருக்கிறேன்.

இராஜ்யங்களுக்கும், இன்றைய அரசியல் சட்ட திட்டத்தின் படியே, அரசுரிமை (Sovereignty) உண்டு என்று எடுத்துக்காட்டி இருக்கிறேன். பிரசாரத்தைப் பிரசாரத்தால்தான் எதிர்க்க வேண்டும் - சட்டத்தின் பாதுகாப்புத் தேடிக்கொண்டு அல்ல என்று எடுத்துச் சொல்லி இருக்கிறேன்.

பிரிவினை கேட்கும் பேச்சு உரிமைக்காகப் பேசியிருக்கிறேன்!

பலே! பலே! அகப்பட்டுக் கொண்டான் உங்கள் அண்ணாதுரை! பார்த்தீர்களா, பிரிவினைக்கான பேச்சு உரிமைதான் கேட்டிருக்கிறேன், பிரிவினை அல்ல!! - என்று பேசுவதை, வெறுங் குரலொலி - வெறுங்குரலொலி அல்ல - வெறுப்புக் கொண்டவரின் குரலொலி என்று கருதிக் கொள்கிறேன்.

இராஜ்ய சபையில் நடைபெற்ற விவாதம், பேச்சு உரிமை தரும் அரசியல் சட்டதிட்ட விதியைத் திருத்துவதற்கான மசோதா பற்றி! பழக்கடை! முழம் என்ன விலை என்று கேட்கவில்லை!!

என்ன பேசினேன் என்பதை, நீயே படித்துப்பார், தம்பி! ஆனால், ஒரு நிபந்தனை. சர்க்காரின் இந்தப் போக்குப் பற்றிக் கோபம் கொந்தளித்தாலும் நீக்கிக் கொள்ள வேண்டும் - கசப்புணர்ச்சி மேலிட்டாலும் போக்கிக் கொள்ள வேண்டும்; இதை விவாதப் பிரச்சினையாக்கி, பொதுமக்களிடம் சென்று முறையிடத் தேவையில்லை. கொழும்பு மாநாட்டு ஏற்பாடு என்பது அடியோடு போர் நீக்கிவிட்ட நிலையல்ல; சமாதானம் நிலைத்துவிட்டது என்றும் பொருள் அல்ல. ஆகவே, உன் தூய்மை மீது நம்பிக்கை வைத்து, நான் கொடுத்துள்ள வாக்குறுதி, காப்பாற்றப்பட்டாக வேண்டும் - சமாதானம் நிலை நாட்டப்படுகிற வரையில், நாம் சச்சரவு மனப்பான்மை ஒரு துளியும் கொள்ளக்கூடாது; நமது ஆதரவு அன்று போல் இன்றும் உண்டு - சீனனை விரட்ட.

இந்த உறுதியைத் துளியும் குறைத்தக்கொள்ளாமல், பிரச்சினையைக் கவனித்துப் புரிந்துகொள்.

வம்புக்கு இழுப்பதுபோல, கிளறிவிடுபவர்கள் கேட்பார்கள் - என்ன செய்யப் போகிறீர்கள்? என்று. இப்போது, நாங்கள் போர் ஆதரவு முயற்சிக்கு எமது ஒத்துழைப்பைத் தந்து வருகிறோம்! போர்க்கோலம் நீக்கப்பட்டு, அமைதியும் மகிழ்ச்சியும் அரசோச்சும் காலம் ஏற்படுகிற வரையில் எம்க்குள்ள பணி அதுதான் என்று கூறுங்கள்!

அண்ணன்

அண்ணாதுரை

இராஜ்ஜிய சபையில்

சமரசம் பேசுவதற்காகச் சீன ஆக்ரமிப்பாளருடன் மேஜைமுன் அமர நமது விருப்பத்தையும், சம்மதத்தையும் தெரிவித்தான உடனே, எதிரியை அல்ல - ஓர் இலட்சியத்துக்காகப் பணியாற்றுபவனை அழிக்க சர்க்காருக்கு ஒரு புதிய சட்ட ஆயுதத்தைத் தருவதற்காக, அரசியல் சட்டத்துக்குக் கொண்டு வரப்படும் ஒரு திருத்தம்பற்றி நாம் இன்று விவாதித்துக் கொண்டிருப்பது வேதனையுள்ள விசித்திரம் போலும்! மன்றத்தின் இரண்டு தரப்புகளிலிருந்தும் கூறப்பட்ட பல கருத்துரைகளை நான் மிகுந்த அக்கறையுடன் கேட்டுக் கொண்டிருந்தேன். சட்டத்தைத் துணைக்கொண்டு அடக்கிவிட நீங்கள் முயற்சிக்கும் அந்த இலட்சிய எண்ணத்தைப் புகுத்தியவன் என்ற முறையில், என் நோக்கத்தை மீண்டும் விளக்க அல்ல, ஆனால் எமது கோரிக்கை குறித்து ஏற்பட்டுள்ள சில தப்பர்த்தங்களைப் போக்க, அந்த இலட்சியம் பற்றிய விளக்கத்தையும் வரலாற்றையும் எடுத்துக்கூற விரும்புகிறேன். கனம் உறுப்பினர் ஒருவர் பிசோ கேட்டதைக் கண்டு, அல்லது அதைத் தொடர்ந்து, திராவிடஸ்தான் கேட்கப்படுகிறது என்று கூறினார். உண்மை அதற்கு வெகு தூரத்தில் இருக்கிறது. சுதந்திரம் வந்த பிறகு இப்படிப்பட்ட பிரிவினை உணர்ச்சிகள் கிளம்பின என்று மற்றோர் உறுப்பினர் கூறினார். இது உண்மைக்கு நெருங்கி வருவதாகும். ஆனால் உண்மை இது அல்ல. தி.மு.கழகம் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்த அமைப்பு, திராவிடர் கழகம், சுதந்தரத்துக்கு மிக நீண்ட காலத்துக்கு முன்பே இருந்து வந்திருக்கிறது. எதிர்கால அரசியல் முறை அமைப்புப் பற்றிச் சர்ச்சைகள், பிரச்சினைகள், கொள்கைகள் எழுந்தபோது, திராவிடர் கழகம் - அந்த அமைப்பின் பொதுச் செயலாளனாக நான் இருந்திருக்கிறேன். தென்னகத்துக்கு ஓர் அரசியல் ஏற்பாடு பற்றித் திட்டம் அறிவித்தது. அதனுடைய தொடர்பாகத்தான், திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வளர்ந்த திராவிட முன்னேற்றக் கழகம் அந்த இலட்சியத்தை எடுத்து விளக்கிக் கொண்டு வருகிறது. எனவே, இது ஆளுங்கட்சியின் செயல்கள் அல்லது செயலாற்றாத தன்மை ஆகியவைகளைப் பொறுத்ததாக அமையவில்லை. நாட்டின் வேறு இடங்களிலே உள்ள இதுபோன்ற, அல்லது இதைவிடப் பயங்கரமான எந்தப் பிரச்சினைகளுக்கும் இதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. பிரச்சினையின் மீது பாய்வதற்கு முன்பு, கனம். உறுப்பினர்கள் பிரச்சினையை அலசியாவது பார்க்க வேண்டுமென நான் விரும்புகிறேன்.

இரண்டாவதாக, ஓர் ஆக்ரமிப்பாளனைச் சந்தித்துச் சமரசம் பேசச் சம்மதத்தைத் தெரிவித்த சீக்கிரத்தில், பெருமைமிக்க நாட்டு மக்கள் என்ற முறையில், எங்கள் பிரசாரத்தைத் தடைபோட்டு நிறுத்துவதற்கு முன்பு, எங்களைப் புரிந்துகொள்ளவாவது முயற்சிக்கக் கூடாதா என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாங்கள் என்ன அவ்வளவு தாழ்ந்து போய்விட்டவர்களா, அரசியல் அரங்கத்திலே எங்களைத் தீண்டப்படாதவர்கள் போல நடத்துவதற்கு? எங்கள் கோரிக்கை மிக முக்கியமானதல்லவா - நீங்கள் எங்கள் மனதைத் திருப்திப் படுத்தவும், மக்கள் ஒத்துக்கொள்ளக்கூடிய முறையை மேற்கொள்ளவும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டாமா? காரண காரிய விளக்கங்களைக் கேட்க ஒருப்பாடாதவர்களா நாங்கள்? அந்த முயற்சி செய்து பார்த்தீர்களா? இந்த மன்றத்தில் இதுதான் என் முறையீடு. கட்சித் தொடர்புகள் பற்றிய கவலையின்றி, இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இந்த அம்சம் பற்றித் தங்கள் சீரிய கவனத்தைச் செலுத்த வேண்டுகிறேன் - எங்களைக் கலந்து பேசிக் கருத்தறிந்தார்களா? - பிரச்சினையை அலசிப பார்க்க, ஆளுங்கட்சி சிரமம் எடுத்துக் கொண்டதா? நான் ஆளுங்கட்சி என்று ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், எதிர்க்கட்சிகள் பலவும் பிரச்சினையை அலசிப் பார்க்க முயற்சி எடுத்துக்கொண்டன. அதனால் இன்று காலையில், ஓர் உறுப்பினர், இந்தப் பிரச்சினையில் கம்யூனிஸ்டு கட்சி எங்களுடன் நேசத் தொடர்பு கொண்டிருந்தது என்று சொன்னார். எங்கள் கொள்கையை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் கேட்டபோது, முடியாது என்று கம்யூனிஸ்டு கட்சி கூறியது - பெருமைபடத்தக்க விதத்தில் துணிவுடன் கூறிற்று. இலட்சியங்களுக்கும், தேர்தல் தொடர்புகள், உடன்பாடுகள் ஆகியவற்றுக்கும் சம்பந்தம் இல்லை. எனவே, நாங்கள் கம்யூனிஸ்டு கட்சியையோ, வேறு கட்சிகளையோ கொள்கை அடிப்படை வைத்து அல்ல, அரசியல் நேசத் தொடர்புகள் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் அணுகி இருந்திருக்கிறோம். இப்போதுகூட, இன்றுகூட, சென்னை மேயர் தேர்தல் சம்பந்தமாக, சென்னை காங்கிரஸ் கட்சியும் தி.மு.கழகமும் ஓர் ஏற்பாட்டில் இணைந்து உள்ளன. இந்த மன்றம் இதை அறிய அக்கறை காட்டும் என்று எண்ணுகிறேன். எனவே, அரசியல் நேசத் தொடர்பு என்பது ஒரு விஷயம். தேர்தல் நேசத் தொடர்பு என்பது மற்றொன்று; இலட்சியம், முற்றிலும் வேறான விஷயமாகும்.

கோபார்கடே (மராட்டா) : அப்படியானால், காங்கிரசே. பிளந்து போவதை ஆதரிக்கிறது!

சி.என்.ஏ.: அதனால்தான் சொல்லுகிறேன், தேர்தல் நேசத் தொடர்பு என்றால் இலட்சியத்தை இழந்துவிட்டதாகப் பொருள் இல்லை என்று. தன் இலட்சியத்தைக் காத்திடும் வலிவு சென்னைக் காங்கிரசுக்கு இருக்கிறது. காங்கிரஸ் இலட்சியத்திலே சென்னை முதலமைச்சருக்கு வலிவான நம்பிக்கை இருக்கிறது. நமது விவாதங்களில் சென்னை காங்கிரஸ் பற்றியோ, முதலமைச்சர் பற்றியோ தப்பான வியாக்கியானங்கள் கொள்வதை நான் விரும்பவில்லை. தம்முடைய இலட்சியங்களை விட்டுக் கொடுக்காமலேயே, தேர்தல் நேசத் தொடர்புகள் கொள்ள முடியும் என்பதைக் குறிப்பிடவே இதைச் சொல்கிறேன். ஆனால், நான் இலட்சியத்தை உணர வேண்டும், அலசிப் பார்க்க வேண்டும், ஆய்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது இந்த மசோதா, இந்தியாவுடைய அரசுரிமையையும் பிரதேச ஒற்றுமையையும் பாதுகாக்க, நிலைநிறுத்த கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த அரசுரிமைக்கு என்ன ஆபத்து வந்திருக்கிறது? எனக்குத் தெரியாது - எனக்குத் தெரிவிக்கவும் இல்லை. ஒரு சமயம் சட்ட மந்திரி - புதிய சட்டம் ஏதாவது தயாரித்துக் கொண்டிருப்பார் போலிருக்கிறது. அதனால்தான் சபையில் இல்லை - அவர் இங்கு இருந்திருப்பாரானால், திரும்பிப் பார்த்துச் சொல்லுவார்; நாட்டிலே பிளவுச் சக்திகள் உள்ளனவே, அறியாயா? இந்தக் காரியத்துக்காகவே தேசிய ஒருமைப்பாடு கமிட்டி அமைத்தோமே, அறியாயா? தேசிய ஒருமைப்பாடு கமிட்டி கூறிய யோசனைகளை ஒட்டியே நடவடிக்கை எடுத்திருக்கிறோம், தெரியாதா? என்றெல்லாம் கேட்டிருப்பார். துணைத்தலைவர் அவர்களே! தேசிய ஒருமைப்பாட்டுக் கமிட்டி திறமைமிக்க டாக்டர் சர்.சி.பி.இராமசாமி ஐயர் தலைமையில் அமைக்கப்பட்டதை நான் நன்றாக அறிந்திருக்கிறேன் - இந்தியாவின் வல்லமையுடையது அல்லது அரசுரிமை, பிரதேச ஒற்றுமை என்பனவற்றில் திட்டமான நம்பிக்கையுடன் பரிந்து போரிடத்தக்க வீரர்! எந்த அளவு நம்பிக்கைகொண்ட வீரர் என்றால், திருவிதாங்கூர் திவான் என்ற முறையில், திருவாங்கூர் தனி சுதந்தர நாடு ஆகிவிட்டதாகப் பிரகடனம் செய்தவர்! பாகிஸ்தானுடன் ஒப்பந்தம் செய்துகொண்டதாக அறிவித்தவர்!! இன்று காங்கிரசின் அதிர்ஷ்டம், அவர் கூட்டுச் சேராக் கொள்கையினர்! எனவே, அவரை நீங்கள், கமிட்டித் தலைவர் ஆக்கிக் கொண்டீர்கள். இந்தக் கமிட்டி எவ்விதம் பணியாற்றிற்று என்பதை அலசிப்பார்க்கும் படி. இந்த மன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். தேசிய ஒருமைப்பாட்டினை எப்படி ஏற்படுத்துவது என்பதற்கான வழி

கூறும்படி இந்தக் கமிட்டி பணிக்கப்பட்டது - பிரிவினைப் பிரசாரத்தை ஒடுக்கிவிட மட்டும் அல்ல. தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தச் சிறந்தவழி என்ன என்பதனைக் கண்டறியும் வேலை அதற்குத் தரப்பட்டது; ஆக்கவேலைக்காக அது தந்த யோசனைகள் யாவை? ஆக்க வேலைக்கான திட்டங்கள் யாவை - தேசிய ஒருமைப்பாடு கமிட்டியினுடைய யோசனைகளிலிருந்து பிறந்துள்ள தடைச்சட்டம் தவிர! துணைத்தலைவர் அவர்களே! தேசிய ஒருமைப்பாடு கமிட்டி, இந்தியா முழுவதும் உலா வந்தது - எங்கள் மாநிலத்துக்கும் வரவேண்டுமென்ற மரியாதை காட்டிற்று. பல்வேறு அரசியல் கருத்தினர்களைக் கண்டு கருத்தறிந்தது; ஆனால் தி.மு.கழகத்தினரைப் பார்க்க இயலவில்லை. ஏனெனில், அதற்கிடையில் எங்களுக்கு எங்கள் மாநில அரசு, வேலூர் மத்திய சிறையிலே அறைகள் கொடுத்துவிட்டது! எங்களைச் சந்திக்காத தற்கு, கமிட்டி கூறிய காரணம் இதுதான். ஆனால் அப்போது தேசிய ஒருமைப்பாட்டு கமிட்டி, எங்கள் நோக்கத்தைத் தெரிந்துகொள்ளும் ஆர்வம் கொண்டிருந்தால், தொடர்பு கொள்ள வேண்டுமென்று விரும்பி இருந்தால், எங்கள் அமைப்புச் செயலாளர் என்.வி.நடராசன் ஜெயிலுக்கு வெளியேதான் இருந்தார்; மனோகரன் எம்.பி. வெளியில்தான் இருந்தார். இராசாராம் எம்.பி. வெளியில் இருந்தார்.இவர்களில் யாராவது ஒருவரைக் கண்டிருக்க முடியும். டாக்டர் இராமசாமி ஐயர் ஜெயிலுக்கு வந்து எங்களைப் பார்த்திருக்க வேண்டும் என்று நான் கூறமாட்டேன் - மற்றவர்களை ஜெயிலுக்கு அனுப்பி அனுபவம் பெற்றவர் அவர்; ஜெயிலுக்கு அவர் போனதில்லை! ஆகவே, அவர் நெடுந்தொலைவு கடந்து ஜெயிலுக்கு வந்து எங்களைப் பார்க்க வேண்டும் என்று நான் எதிர்பார்க்க வில்லை. நாங்கள் சாமானியர்கள். அப்படிப்பட்ட பெரியவர்களைக் கொண்ட கமிட்டி அத்தகைய தாராளத்தனம் காட்டியிருக்க வேண்டும் என விரும்பவில்லை; ஆனால் வெளியே இருந்த சிலருடன் தொடர்பு கொள்ளச் சிரமம் எடுத்துக் கொண்டிருக்க லாம்! மன்றத்திலுள்ள ஒவ்வோர் உறுப்பினரையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன் - ஒரு கணம் எங்கள் கோரிக்கையின் பயங்கரத் தன்மை - அதன் ஆபத்தான விளைவுகள் - ஆகியவை பற்றி மறந்து விடுங்கள் - தயவு செய்து இதற்குப் பதில் கூறுங்கள் - எனக்கு வார்த்தைகள் கூட வேண்டாம் - இலேசான புன்னகை - மகிழ்ச்சியுடன் கண் சிமிட்டல் - நேசப் பான்மையுடன் தலையை அசைத்தல், இவை போதும் - சாதாரண மரியாதைக்காக, மக்களாட்சி முறையின் நாகரிகத் தன்மைக்காகவாவது எங்கள் கட்சியினருடன் இந்தக் கமிட்டி தொடர்பு கொண்டிருந்திருக்க

வேண்டாமா! இல்லை! அவர்கள் அதைச் செய்யவில்லை! ஆனால் அவர்கள் ஓர் அறிக்கை தந்தனர். இந்த மசோதாவின் விளக்கத்திலும், நோக்கத்திலும் தேசிய ஒருமைப்பாட்டுக் கமிட்டியின் யோசனையை முற்றிலும் ஒட்டியே மசோதா வருவதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, மசோதாவின் பிறப்பே, முற்றிலும் மக்களாட்சி முறைக்கு மாறானது. இந்தக் கருத்தை உங்கள் முன் வைக்கவே, உமது பொறுமையைப் பாதிக்கும் தொல்லையைத் தர நேரிட்டது.

நான், மற்றொரு விஷயத்துக்கு வருகிறேன். திராவிடஸ்தான் கோரிக்கை ஆபத்தானது என்கிறார்கள் - தவறாக ஆளுங்கட்சிப் பிரமுகர்கள் பலர், சில மாதங்களுக்கு முன்புகூட, நாங்கள் என்ன கேட்கிறோம் என்பது தங்களுக்குப் புரியவே இல்லை என்று கூறிக்கொண்டு வந்துள்ளனர். அவர்கள் புரிந்துகொள்ளவில்லை! ஆனால் இது ஆபத்து தரத்தக்கது என்றுமட்டும் புரிந்திருக்கிறது! இது எப்படிப் பகுத்தறிவாகும்! தத்துவ சாஸ்திர அறிவாகும்! அரசியலாகும்! எனக்குப் புரியவில்லை! இந்த மன்றத்திலேயோ, அந்த மன்றத்திலேயோ - எனக்குத் திட்டவட்டமாகத் தெரியவில்லை. உள்துறை அமைச்சர் சொல்லியிருக்கிறார், கட்டுக்கு அடங்காது போனால், குறிப்பிட்ட எல்லையை மீறிப்போனால், பிரிவினை சம்பந்தமான எல்லாப் பிரசாரமும் ஒடுக்கப்படும் என்று. ஒருவரும் அதற்கு விளக்கம் அளிக்கும்படி கேட்கவில்லை. ஏனெனில், சட்டத்தை மீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டாலோ, வன்முறைச் செயலில் ஈடுபட்டாலோ, பிரிவினைப் பிரசாரம் தடுக்கப்பட்டுவிடும் என்று எண்ணிக்கொண்டார்கள். இது சில மாதங்களுக்கு முன்பு, உள்துறை அமைச்சர் பேசியது. இந்த இடைக்காலத்திலே என்ன நேரிட்டு விட்டது? நாங்கள் என்ன மண்டை ஓடுகளையும் தலைகளையும் வேட்டையாடிப் பெறுபவர்கள் ஆகிவிட்டோமா, ஏதாவது சட்டத்தை மீறிய நடவடிக்கைகளிலே ஈடுபட்டு விட்டோமா? இல்லை! மாறாக, சீன ஆக்ரமிப்பு ஏற்பட்ட உடன் தங்கு தடையற்ற, உள் உணர்ச்சியுடன் கூடிய ஒத்துழைப்பைத் தந்தோம், போர் ஆதரவு முயற்சிக்கு. சட்ட மந்திரி இப்போது இங்கு இல்லாதது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன்...

ஓர் உறுப்பினர்: அவருடைய துணை மந்திரி இங்கு இருக்கிறார்.

சி.என்.ஏ.: ஏனெனில், எங்கள் கட்சியின் தலைவர், அந்த மன்றத்திலே இதே கருத்தைப் பற்றிக் கூறியபோது, சட்ட மந்திரி எழுந்து நின்றார் - புன்னகையுடன் அல்ல - கடுமையான

பார்வையுடன் - கரங்களைக் கெம்பீரமாக அசைத்தபடி சொன்னார், அதெல்லாம் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தினால் ஏற்பட்ட நிலைமை என்று. சட்ட மந்திரி என்ற நிலையில், சட்டத்துக்குக் கர்த்தா என்ற முறையில், சட்டத்துக்கு உள்ள வீரியம் பற்றித் தூக்கிப் பேசும் உரிமை பெற்றவர் அவர்; ஆனால் சட்டத்தின் சக்தியைப் பெரிதாக்கிப் பேசும் ஆர்வத்தில், அவர் தமது மனதிலிருந்து சாதாரண மரியாதை காட்டும் உணர்ச்சியைத் துரத்தி அடித்துவிட்டார்! தி.மு.கழகத்துக்குச் சட்ட மந்திரி நல்வார்த்தை கூறிச் சிபாரிசு செய்ய வேண்டும் என்று நான் விரும்பவில்லை. மக்களுடைய நல்லாதரவு நிரம்ப நாங்கள் பெற்றிருக்கிறோம். சட்ட மந்திரியின் நல்லுணர்வு சிபாரிசு ஒன்றும் அதனை மேலும் வலுவுள்ளதாக்கி விட முடியாது! மற்றும் ஒன்று கூறுகிறேன். சட்டத்தின் சக்தியை உயர்த்திக் காட்ட வேண்டும் என்ற ஆர்வத்தில், அவர் மற்றொரு முக்கியமான விஷயத்தை மறந்து விட்டார். இன்று காணப்படும் ஒருமித்த நோக்கம், தேசிய ஆர்வம் எல்லாம் இந்தியப் பிரதமருடைய திறமையாலும், அவர் கொண்டுள்ள மேலான எண்ணங்களாலும் ஏற்பட்டவை. சட்டங்களைவிட வலிவு மிக்கது, அது. சட்டங்கள் தடுக்க, திருத்த உள்ளவை. இதைச் செய்யாதே! அதைச் செய்யாதே! என்று கூறுகிறது சட்டம். கட்சித் தொடர்புகளைக் கடந்து, பல இலட்சக்கணக்கான மக்களின் மனதைத் தன் வயப்படுத்தும் பிரதமரின் திறமைக்கு உள்ளது போன்ற வலிவு சட்டத்துக்குக் கிடையாது. சட்டத்தின் வலிவை வலியுறுத்திக் காட்டும் ஆர்வத்தில் சட்ட மந்திரி, எதற்காகப் பிரதம மந்திரியின் செல்வாக்கைக் குறைத்து மதிப்பிட்டு விட்டார் என்று எனக்குப் புரியவில்லை! இன்று காணப்படும் கூடிப் பணியாற்றும் ஆர்வம், பண்டித ஜவஹர்லால் நேருவின் வசீகரிக்கும் தன்மையாலும் ஜனநாயகப் பண்பாட்டுணர்ச்சியாலும் விளைந்திருக்கிறது என்பதையாவது அவர் சொல்லியிருக்கலாம். மந்திரி சபைக்குள்ளே என்ன நடக்கிறது என்பது எனக்குத் தெரியாது. வெளியார் எவராவது, சட்ட மந்திரியின் உரையைப் படித்தால், என்ன எண்ணம் ஏற்படும்? நாட்டிலே அமைதி இருக்கிறது! எதனால்? இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தினால்!! இல்லையானால், அனைவரும் தேச விரோதிகளாவர், தேச பக்தி அற்றவர்களாவர். தொல்லை கிளம்பியிருக்கும்! இப்படி எண்ணுவர். அடித்துப் பேச முற்படும்போது, அளவு பொருத்தம் பார்த்துப் பேசும்படி சட்ட மந்திரியை வேண்டிக் கொள்கிறேன். அது நிற்க. இந்தியப் பாதுகாப்புச் சட்டம், ஒரு நாட்டு மக்களுடைய இதயங்களுக்குப் பாதுகாவலனாக இருக்க முடியாது; ஒரு நாட்டு

மக்களுக்குச் சிறைக் காவலனாக மட்டுமே இருக்க முடியும். எனவே, போர் ஆதரவு முயற்சிக்கு தங்கு தடையற்ற உதவி தர தி.மு.க. முன்வந்தது என்றால், நான் அதற்காகச் சர்க்காரிடமிருந்து நன்னடத்தைச் சீட்டுப் பெற எதிர்பார்க்கவில்லை; பதிலுக்கு நல்லெண்ணம் அளிக்கப்பட வேண்டும் என்றுகூட விரும்பவில்லை. ஆனால் எதற்காக இதை எடுத்துக் கூறுகிறேன் என்றால், இதிலிருந்து எழுந்துள்ள ஓர் இயற்கையான எண்ணம், தானாக எழுந்துள்ள ஓர் உள் உணர்ச்சி உங்களுக்குப் புலப்படவில்லையா? அந்த உணர்ச்சி காலத்தால் இயற்கையாக வளரச் செய்திட வேண்டாமா? இந்த மசோதா, அதற்கான உரமா? இது அந்த உணர்ச்சியை அழிக்கக் கூடியது, எரிச்சலூட்டுவது என் இந்த உள் உணர்ச்சி, இயற்கையான முழு வளர்ச்சி பெற்று, பூத்திடச் செய்யக் கூடாது? இந்த மசோதாவுக்கு என்ன அவசரம் வந்தது? ஏன் இவ்வளவு அவசரப் படுகிறீர்கள். அதுதான் நான் குறிப்பாகக் கேட்பது இதை உங்களுக்கு உணர்த்துவதற்காகத்தான், போர் ஆதரவு முயற்சிக்கு நாங்கள் ஆதரவு அளித்ததைக் குறிப்பிட்டேன். நான் முன்பு சொன்னபடி, நாங்கள் சாமானியர்கள்; ஆனால் 34 லட்சம் வாக்காளர்களின் பிரதிநிதிகள் எந்த 50 இலட்சம் வாக்காளர்கள் எங்கள் இராஜ்யத்தில் காங்கிரசை ஆளும் கட்சி ஆக்கியிருக்கிறார்களோ, அங்கு ஐம்பது இலட்சத்துக்கும் முப்பது இலட்சத்துக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறித்து நான் அதிகம் வாதாடத் தேவையில்லை என்று நம்புகிறேன். இந்த மன்றத்தின் முன் உறுதி கூறுகிறேன் - எங்கள் முன்னேற்றத்துக்கு அழிவு தேடாதிருந்தால், சட்டத் துணையுடன் அடக்கி அழிக்கும் முறைகளைக் கொண்டு வராதிருந்தால், நாங்கள் தான் சென்னையில், அடுத்து வரப்போகும் ஆளுங்கட்சி உறுதி அளிக்கிறேன். மத்திய அமைச்சரவையினராம், கனம் சி.சுப்ரமணியம், தமது கோவைப் பேச்சிலே, அன்பழைப்பே விடுத்திருக்கிறார் - “பிரிவினையை விட்டு விடுங்கள்; நீங்கள் மந்திரிசபை அமைப்பதை தான் வரவேற்கிறேன்” என்று அப்படிப்பட்ட ஒரு கட்சிக்குத்தான், நீங்கள் சாதாரண மரியாதை உணர்ச்சி காட்ட ஜனநாயக நாகரிக உணர்ச்சி காட்ட மறுத்திருக்கிறீர்கள் - தேசிய ஒருமைப்பாட்டுக் கமிட்டி முன்பு எங்கள் நோக்கத்தை எடுத்துரைக்கும் வாய்ப்பு அளிக்கவுமில்லை; எங்களை உங்கள் நம்பிக்கைக்கு உரியவர் களாக்கிக் கொள்ளவுமில்லை.

கம்யூனிஸ்டு கட்சித் தலைவர், என் மதிப்பு மிக்க நண்பர் புபேஷ் குப்தா ஒரு யோசனை கூறினார் - அவர்களை (தி.மு.க.வை) எதிர்த்துப் பிரசாரம் செய்ய ஏன், எல்லா ஜனநாயக சக்திகளும்,

தேசிய சக்திகளும் ஒன்றுபடக் கூடாது என்று கேட்டார். நான் அதை வரவேற்கிறேன், மக்கள் என் கருத்தை ஏற்றுக்கொள் கிறார்களா, உங்கள் கருத்தை ஏற்றுக்கொள்கிறார்களா என்பதைக் கண்டறிய விரும்புகிறேன். ஏன் அப்படிப்பட்ட தீரமிக்க போட்டியிலிருந்து ஓடிவிடுகிறீர்கள்! புபேஷ் குப்தாவை இதையும் கவனிக்கும்படி கேட்டுக் கொள்வேன். எங்களை எதிர்த்துப் பிரசாரம் செய்வதற்கு முன்பு, எங்களுக்கு மனமாற்றம் ஏற்படுத்த முயற்சி எடுத்துக் கொள்வது நல்ல அரசியல் முறை அல்லவா?

புபேஷ் குப்தா : அதுதான் நான் சொன்னது. நான் முயற்சிக்கிறேன்.

சி.என்.ஏ.: புபேஷ் குப்தாவுக்கு என் நன்றி. ஆனால் எங்கள் மனதை மாற்ற அவர் மேற்கொண்டுள்ள முறை பலனளிக்க வில்லையோ, அல்லது அவர விரும்புகிற அளவு, அது செய்யப்பட வில்லையோ, என்னவோ தெரியவில்லை - பலன் காணோம். ஆனால் இந்த மன்றத்தைக் கேட்டுக் கொள்வேன் - எல்லாக் கட்சி உறுப்பினர்களையும் கொண்ட கலந்தாலோசிக்கும் கமிட்டி அமைத்து எம்முடன் விவாதிக்க வேண்டும் என்று சர்க்காருக்கு யோசனை கூறுங்கள். தவறு எம்மிடம் என்றால் திருத்துங்கள். உங்களிடம் தக்க காரணம் காட்ட இருந்தால் எங்கள் மனதை மாற்றுங்கள். அதை விட்டுவிட்டு, எங்களை வற்புறுத்துகிறீர்கள்! சட்ட விற்பன்னர்கள் நிரம்பியுள்ள இந்த மன்றத்தில் நான் விளக்கத் தேவையில்லை. சட்டத்தைக் கொண்டு வற்புறுத்துவது, கடை கெட்ட வாதிடும் முறையாகும்! பொதுமக்களின் கருத்து எனும் சந்தையில் இரண்டு கருத்துகள் போட்டியிடுகின்றன என்றால், அதிலே ஒரு கருத்துக்குத் தடை போடுகிறீர்கள் என்றால், ஒரு கருத்துக்குப் பின்பலமாகச் சட்டத்தை நிறுத்துகிறீர்கள் என்றால், கருத்துப் போர் நடத்துவதிலிருந்து நழுவிவிடுகிறீர்கள் என்றுதான் பொருள்படும். திருச்செங்கோடு இடைத் தேர்தல் காலம் வரையில் எங்கள் இராஜ்ய காங்கிரசார் வெளியிட்டுக் கொண்டிருந்த கருத்து என்ன? அவர்கள் சொன்னார்கள் - இந்த மன்றத்தில்கூட அது திரும்பவும் கூறப்பட்டது - நான் தன்னந்தனியன், ஒரே ஒருவன் என்றார்! பசி நிறைந்த பார்வை, எனக்கு என்றார்! என் பசி போக்கும் உணவு அளிக்கவில்லை, இவர்கள்!! நான் தனியன் என்று அவர் சொன்னார். மற்றோர் உறுப்பினர் எங்களுக்குக் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகியவைகளில் பிடிப்பு இல்லை என்று பேசினார். அந்த உடன் பிறப்பாளர் இராஜ்யங்களிலுள்ளவர்களின் மனதை மாற்றி விட்டதாகவோ, மகிழ்ச்சி தரத்தக்க அளவுள்ள ஆதரவைப் பெற்றுவிட்டதாகவோ நான் எப்போதும் பாத்தியதை

கொண்டாடியது இல்லை. நான் குறிப்பிடுவது, நான் இந்த விஷயத்தைக் குறிப்பிடும்போது, அந்த மொழிவாரி இராஜ்யங் களிலும் அதே உணர்ச்சி ஏற்படும் என்பதுதான். நான் என்ன எண்ணுகிறேனோ அதனை அப்படியே வால்டேரில், ஹைதராபாத் தில், மைசூரில் அல்லது திருவனந்தபுரத்தில் எண்ணுகிறார்கள் என்று நான் உரிமை கொண்டாடியதில்லை. நான் இந்த இடங்களுக்கெல்லாம் செல்லவுமில்லை. ஹைதராபாத்தில் நான் ஒரு கூட்டத்திலும் பேசியதுமில்லை. பேச மைசூருக்கு நான் சென்றதில்லை. அங்கெல்லாம் என்னைப் போக ஏன் அனுமதிக்கக் கூடாது - என்னோடு நீங்களும் ஏன் வரக்கூடாது? நான் போட்டிப் பந்தய உணர்ச்சியுடன் ஒரு யோசனை கூடக் கூறுகிறேன். எல்லாக் கட்சியினரும் கொண்ட, கலந்தாலோசிக்கும் கமிட்டி அமைப்போம் - எல்லோருமாக நாடு சுற்றி வருவோம் - நாட்டுக்கு என்ன தேவை என்பதைக் கண்டறிவோமே! மனம் மாறும்படி செய்யுங்கள். பிறகு, நான் கேட்பது நினைத்துக்கூடப் பார்க்கத் தகாதது என்று சொல்லுங்கள். ஆனால் இந்த மசோதாவைக் கொண்டு வராதீர்கள். கொண்டுவந்து வைத்துக்கொண்டு, இந்த மசோதா பற்றி என்ன செய்யப் போகிறாய் என்று கேட்காதீர்கள். என் நண்பர் புபேஷ் குப்தா சொன்னார், நாங்கள் தலைமறைவாகி விடுவோம் என்று. நாங்கள் எப்போதும் வெளியில் உலவுபவர்கள்! தலைமறைவாகிவிட உத்தேசம் இல்லை. ஆனால் மனம் வெதும்பிய அதிருப்தி மறைவிடம் செல்லும்.

புபேஷ் குப்தா: அதுதான் நான் சொன்னது.

சி.என்ஏ.: மனம் வெதும்பிய அதிருப்தி நிலை, மறைவிடம் செல்லும்; அதனை எந்தச் சட்ட முயற்சியும் ஒன்றும் செய்துவிட முடியாது. பல இலட்சக்கணக்கான மக்களின் மனதிலே கிடக்கும் அதிருப்தியைத் தாக்கி ஒழிக்கும் முறையை, அரசியல் தத்துவமுறை இன்னும் கண்டு பிடித்ததில்லை. எனவே, இந்தச் சட்ட முயற்சியினால், உண்மையான, மனம் வெதும்பும் அதிருப்தியை நீங்கள் மறைவிடத்துக்குத் துரத்துகிறீர்கள்.

நான் குறிப்பிட விரும்பும் மற்றொரு விஷயம் இருக்கிறது. எங்கள் கோரிக்கை, வல்லமையுடைமைக்கு, அரசுரிமைக்கு ஆபத்து விளைவிக்கிறது என்று எதனால் கருதுகிறீர்கள்? எப்படி? இதற்குப் பதில் அளிக்குமுன்பு, அரசுரிமை என்றால் என்ன என்பது பற்றி நாம் தெளிவுகொள்ள வேண்டும். அரசுரிமை என்று கூறுகிறோமே, என்ன எண்ணிக் கொண்டு அதுபோலக் கூறுகிறோம். அரசியல் சட்டத்தின் பாயிரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, அரசியல்

அரசுரிமை மக்களிடம் இருக்கிறது என்று. சட்டப்படி உள்ள வல்லமையுடைமை அல்லது அரசுரிமைக் கூட்டாட்சியின் மத்திய அமைப்பிலும் கூட்டாட்சியில் அமையும் இராஜ்ய அரசு அமைப்பிலும் பிரித்துத் தரப்பட்டிருக்கிறது. ஏன், எங்கள் திட்டத்தை, அரசுரிமை பெற்ற இராஜ்ய அமைப்புகள், மேலும் பலன் தரத்தக்க அரசுரிமை பெறுவதற்கான முயற்சி என்று நீங்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது! அந்த முறையிலே கருதினால் என்ன? திராவிடஸ்தான் கேட்ட உடனே அரசுரிமையின் வேர் வெட்டப்படுகிறது என்று நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்? அரசுரிமை முழுவதும் ஒரு குறிப்பிட்ட அமைப்பிலே மட்டுமே இல்லையே. கூட்டாட்சி முறையல்லவா கொண்டிருக்கிறோம். பல அரசியல் தத்துவவாதிகள் சுட்டிக்காட்டியுள்ளபடி, இந்தியா மிகப்பெரிய அளவுள்ளது; சொல்லப் போனால் அதனை ஒரு துணைக்கண்டம் என்றே வர்ணித்திருக்கிறார்கள்; பல்வேறு விதமான மனப்பான்மைகள், பல்வேறான பாரம்பரிய உணர்ச்சிகள் - வரலாறு வெவ்வேறு வகையினதாக - இருப்பதனால்தான் இங்கு இருப்புக்கூடு போன்ற ஓரரசு முறை இருக்க முடியாது என்பதால், அரசியல் சட்ட திட்டம் வகுத்தவர்கள், ஓரரசு முறை அமைக்காமல் கூட்டாட்சிமுறை அமைத்தனர். எனக்குள்ள குறை என்னவென்றால் - அதற்கு ஆதரவாக, பிரஜா சோஷியலிஸ்டு உறுப்பினர் குருபாத சுவாமியும் மற்றவர்களும் கூறியுள்ளனர் - இந்தப் பதின்மூன்று ஆண்டுகளாகக் கூட்டாட்சி முறையை நடத்திவந்த விதம், இராஜ்யங்களின் மனம் முறியும்படியாக அமைந்து விட்டது என்பதாகும். அவர்கள் உணருகிறார்கள் - அவர்கள் என் பக்கம் துணைநிற்காமல் இருக்கலாம் - வேக வேகமாக இராஜ்யங்கள் மானியம் பெறுகிற மன்றங்களாக ஆகிக்கொண்டு வருகின்றன என்று உணருகிறார்கள். தாம், பின்னணிக்குத் தள்ளப்பட்டுப் போனதாக அவர்களுக்கு ஓர் உணர்வு இருக்கிறது; எனவே, அதிகாரம் அதிகம் பெற வேண்டும் என்ற எண்ணம் இயல்பாக எழுகிறது. இத்துடன் பிரதேச வளர்ச்சியிலே வேற்றுமையும் இணைகிறது; மொழிப் பிரச்சினை பற்றிய சிக்கலும் சேருகிறது; அந்நிலையில், என் போன்றவர்களுக்கு ஏமாற்றம் ஏற்படுவதும் பிரிவினைப் பற்றி எண்ணுவதும், இயற்கைக்கு மாறானதென்று கருதுகிறீர்களா! எங்களைச் சந்திக்க, பாதி வழி வாருங்கள், வந்து சொல்லுங்கள், இது வரையில்தான் செல்லலாம், இதற்குமேல் போகக்கூடாது என்று கூறுங்கள். ஆனால், பாதி வழி வந்து எம்மிடம் அதுபோலக் கூறும்போது எங்களால் அல்ல! இராஜ்யங்களுக்குக் குந்தகம் விளையும்படியான முறையில் அரசியல் சட்டதிட்டத்தை நடத்திச் சென்றதால்

உண்டாகி விட்டிருக்கிற சிக்கல்களுக்குத் தகுந்த சமாதானம் சொல்ல வேண்டும். நிலக்கரிச் சுரங்கம் சம்பந்தமாக, மேற்கு வங்காள சர்க்காரும் மத்திய சர்க்காரும் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போக வேண்டி ஏற்படவில்லையா? சட்ட மந்திரி, மேற்கு வங்கத்திலிருந்து வந்திருக்கிறார். வங்காளிகள் முழு திருப்தி அடைந்துள்ளனரா? அவர்கள் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்கள் என்ற முறையில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு இருப்பார்கள். என் நண்பர் புபேஷ் குப்தா, கம்யூனிஸ்டு கொள்கையினராக இல்லாதிருந்திருப்பின், மேற்கு வங்க உரிமைக்காக வாதாடுவதில் முதல்வராக இருந்திருப்பார். வங்காளிகளிடம் உள்ள தேசிய உணர்ச்சிக்கு நான் தலை வணங்குகிறேன்.

புபேஷ் குப்தா : இங்கு நான் உரிமைக்காகப் போராடினேன். டாக்டர் பி.சி.ராய் அவர்கள் அதை அறிந்திருக்கிறார்.

சி.என்.ஏ.: ஆனால் போரிலே தோல்வி ஏற்பட்டுவிட்டது, வருந்துகிறேன். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இராஜ்யங்கள் மேலும் மேலும் மனம் உடைந்த நிலைக்குச் செல்கின்றன; அரசியல் சட்ட திட்டத்தைத் திரும்ப ஆராய வேண்டும்; அரசியல் சட்டதிட்டம் பற்றிய புதிய மதிப்பீடு பெற வேண்டும் என்று மத்திய சர்க்கார் நினைக்க வேண்டும் என்ற கோரிக்கையை (இராஜ்யங்கள்) வலியுறுத்துகின்றன. இதிலே என் கருத்துக்கு ஏற்ப நினைத்தபொழுது மந்திரி சபையிலிருந்து வெளியேறவும், மீண்டும் நுழையவும் சக்தி பெற்ற ஒரு பிரமுகரின் ஆதரவு இருக்கிறது - பொருளாதார - பாதுகாப்புத் துறை இணைப்பு மந்திரி கனம் டிடிகிருஷ்ணமாச்சாரியாரைக் குறிப்பிடுகிறேன். மறைந்த பெரியவர் பெரோஸ் காந்தியின் பெயரால் புதுடில்லியில் அமைந்துள்ள ஒரு மன்றத்தில் 1962 செப்டம்பர் 8இல் பேசும்போது, அவர் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அரசியல் சட்டத் திட்டத்தைப் பற்றிப் பரிசீலனை நடத்தவேண்டும் என்ற விதியைப் புகுத்தத் தவறிவிட்டது குறித்துப் பேசினார் - அரசியல் சட்ட திட்டம் தீட்டியவர்களில் ஒருவர் என்ற முறையில், அதுமட்டுமல்ல இதற்காகப் பொதுமக்களின் கருத்துத் திரண்டெழ வேண்டும் என்றும் குறிப்பிட்டார். பொதுமக்களின் கருத்துகளைப் பாதுகாப்பவர்களில் ஒருவன் என்று என்னைக் கருதி என்னோடு வாருங்கள். இராஜ்யங்களின் மனப்பான்மை என்ன என்பதைக் கண்டறியலாம். ஆளுங்கட்சியைச் சேர்ந்த எந்த உறுப்பினருக்கும் தொல்லையை வருவிக்க நான் விரும்பவில்லை. யாருடைய பெயரையும் குறிப்பிடாமல் சொல்லுகிறேன். சென்னையில் ஆளுங்கட்சியில் உள்ளவர்களிலே பலர் இந்தியா ஒன்று.

பிரிக்கப்பட முடியாதது என்று ஆணையிட்டுச் சொல்லக்கூடும். இந்தியாவின் அரசுரிமை மீதும் பிரதேச ஒற்றுமையின் மீதும் ஆணையிடக் கூடும். ஆனால் அவர்களின் ஏற்பாடுகளில் ஒன்று உதாசீனப்படுத்தப்பட்டால் அவர்கள் குறிப்பிடும் திட்டங்களிலே ஏதாவதொன்று எடுத்துக் கொள்ளப்படவில்லை என்றால், அவர்களுக்குத் தேவையான தொகை அவர்களுக்கென ஒதுக்கப்பட வில்லை என்றால், அப்போதெல்லாம் அவர்கள் என்னைப் பற்றிய நினைவு பெறுகிறார்கள்! இதனால் தான் அண்ணாதுரை பிரிவினை கேட்கிறான் என்கிறார்கள். சேலத்துக்கு எஃகு ஆலை இல்லை என்று மறுத்துவிடுங்கள். அங்கு நான் கிளம்புகிறேன்! தூத்துக்குடி அபிவிருத்தி கிடையாது என்று மறுத்துப் பாருங்கள்; தி.மு.க. அங்கு தோன்றுகிறது. எனவே, கூட்டாட்சி முறையை ஓரரசு முறையாக்கும் முயற்சிக்குக் கிளம்பியுள்ள எதிர்ப்பின் ஈட்டிமுனை, தி.மு.க. என்று கொள்ளவேண்டும். பாராளுமன்றத்தின் பெரியவர்கள் நீங்கள்! ஏன் இந்தப் பிரச்சினையைக் காட்டுக்கு அழைத்துச் செல்கிறீர்கள்? அரசியல் அரங்கிலே மேலான இடத்துக்குப் பிரச்சினையை உயர்த்துங்கள்; கூட்டாட்சியை உண்மையான கூட்டாட்சி ஆக்குங்கள்.

சில உறுப்பினர்கள் திரும்பி என்னைக் கேட்பார்கள். ஆனால் நீ, பிரிவினை பற்றி அல்லவா பேசி வருகிறாய் என்று நினைத்துக்கூடப் பார்க்கக் கூடாதது அது என்றார் புபேஷ் குப்தா. மற்றவர்கள் அறிந்திராவிட்டாலுங்கூட, சோவியத் அரசியல் சட்ட திட்டம் புபேஷ் குப்தாவுக்குத் தெரிந்திருக்க வேண்டும். பிரிந்து போகும் உரிமையை அது அளிக்கிறது; ஆனால் அதனால் அரசுரிமைக்கு ஆபத்து வந்துவிட்டது என்று குய்யோ முறையோ என்று கூச்சலிட்டுக் கொண்டில்லை. புபேஷ் குப்தா சோவியத் யூனியனிலிருந்து கெட்டவைகளைத்தான் கொள்கிறார் போலும்; நல்லவைகள் அல்ல. பிரிவினை கேட்டதுமே அரசுரிமைக்கு ஆபத்து வரும் என்பது இல்லை என்று அவருக்கு நான் கூற விரும்புகிறேன்.

அதுமட்டும் அல்ல. எங்கள் பிரிவினைப் பிரசாரம், அரசுரிமைக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியது என்று வைத்துக் கொண்டே பார்த்தாலும், சர்க்காரை நடத்திச் செல்லும் ஒரு ஜனநாயகக் கட்சி என்ன செய்ய முயற்சிக்கவேண்டும்? அது மக்களிடம் சென்றிருக்க வேண்டாமா? அரசுரிமை மக்களிடம் இருக்கிறது என்று கூறவில்லையா? மக்கள்தான் அரசியல் சட்டதிட்டத்தை ஏற்படுத்தினார்கள். அரசியல் உரிமைகளின் பிறப்பிடமான மக்களிடம்தான், நீங்கள் சென்று முறையிட வேண்டும். நான், நம்பிக்கையுடன் மக்களை அணுகிச் செல்கிறேன்.

பொதுமக்களுக்கு விஷய விளக்கம் அளித்து, என்னை எதிர்த்துப் பிரசாரம் செய்யும் திறமை, ஆற்றல் எமக்கு உண்டு என்று ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அவர்களின் சர்க்காருக்குக் கூறக் கேட்டுக் கொள்ளுகிறேன். உங்கள் உரிமையை ஏன் விட்டுக் கொடுத்து விடுகிறீர்கள்? ஆளுங்கட்சி உறுப்பினர்கள் என்ற முறையிலும், பொதுத் தொண்டாற்றும் பொறுப்பு மிக்கவர்கள் என்ற முறையிலும், நீங்கள் சர்க்காருக்கு "எங்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலே குறுக்கே நிற்க வேண்டாம். அண்ணாதுரை பிரிவினைக்கான பிரசாரம் நடத்துகிறான் என்றால், அதன் ஆபத்தான தன்மையை நாங்கள் நன்றாக உணர்ந்திருக்கிறோம். நாங்கள் மக்களைச் சந்தித்து, அந்தப் பிரசாரத்தின் விஷம் நிறைந்த தன்மையை, மக்கள் உணரும்படி செய்வோம்," என்று யோசனை கூற வேண்டும். ஜனநாயகவாதி என்ற முறையில் சாமானியர்களுக்கு ஓரளவு மதிப்பளிக்க வேண்டும் என்று இந்த மன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். சாதாரண மக்களை யார் வேண்டுமானாலும் ஏய்த்துவிட முடியும் என்று நினைக்காதீர்கள். சாமானியன் நிரம்பப் படித்தவனாக இல்லாதிருக்கலாம் - சிறப்பாகச் சட்ட அறிவு பெறாதவனாக இருக்கலாம் - ஆனால் வளமான பொது அறிவு பெற்றிருக்கிறான். வெண்ணெய் எது சுண்ணாம்பு எது என்ற வித்தியாசம் கண்டறிய அவனுக்குத் தெரியும். நீங்கள் இந்த மசோதாவைக் கொண்டு வருகிறீர்கள் என்றால், நாட்டு மக்கள் அவ்வளவு பேர்களுடைய பொது அறிவுத் திறனிலும் நம்பிக்கை இல்லை என்ற தீர்மானம் நிறைவேற்றுகிறீர்கள் என்று ஆகும்! பிரச்சினையை ஏன் பொதுமக்களுக்கு விட்டுவிடக் கூடாது? நானும் விரல்விட்டு எண்ணக்கூடிய என் கட்சியினர் சிலரும் சேர்ந்துகொண்டு பொதுமக்களை ஏய்த்து விட முடியும், தவறான வழியில் அழைத்துச் செல்ல முடியும் என்று கருதாதீர்கள். சட்ட மந்திரி, மற்றொரு மன்றத்தில், பள்ளிச் சிறார்களை மட்டும் மகிழ வைக்கும் ஒரு காரணம் காட்டினார்...

கனம். ராமரெட்டி: தவறான முறை செல்லும் தத்துவ வாதம்?

சி.என்.ஏ.: என்னுடையதா?

கனம். ராமி ரெட்டி: உம்முடைய தத்துவ வாதம் தவறான வழி அழைத்துச் செல்லக்கூடியது...

கனம். அக்பர் அலிகான்: இந்தியாவின் வரலாற்றில் வகுப்புவாத உணர்ச்சிகள் எந்த முறையிலே வேலை செய்தன,

வகுப்புவாத உணர்ச்சியாலும் வகுப்புவாதத்தின் பேரால் வெளியிடப்பட்ட முறையீடுகளாலும் மக்கள் எப்படி வசப்படுத்தப் பட்டு இழுத்துச் செல்லப்பட்டார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும் என்று நான் அண்ணாதுரையைக் கேட்டுக் கொள்கிறேன்.

கனம். சந்தோஷ் குமார் பாசு: இந்த விஷயத்தை நேர்த்தியான முறையிலே எடுத்துப் பேசிக் கொண்டு வருகிற அண்ணாதுரையை நான் மற்றும் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். மத்திய சர்க்காருக்கு அளவுகடந்த அதிகாரம் இருக்கிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற கூச்சல் கிளம்பிய பிறகு தான், பாகிஸ்தானுக்கான கூச்சல் கிளப்பப்பட்டது என்பது உண்மையல்லவா?

சி.என்.ஏ.: துணைத்தலைவர் அவர்களே! நான் சொல்ல வேண்டியவைகளை விளக்கியான பிறகு, தாங்கள் அருள் கூர்ந்து, எனக்கு மேலும் பேசச் சிறிது நேரம் தந்தால் இதற்குப் பதில் அளிக்க முயற்சிக்கிறேன்.

துணைத் தலைவர்: இன்னும் சிறிது நேரம் எடுத்துக் கொள்ளலாம்.

சி.என்.ஏ.: அரசுரிமை மக்களிடம் இருக்கிற வரையில், எந்தப் பிரச்சனைக்கும் தீர்ப்பளிக்க வேண்டிய தகுதி மிக்க அதிகாரம் படைத்தவர்கள் மக்களாகத் தான் இருக்க வேண்டும் என்பது பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன். நான் எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்தபடி, கூட்டாட்சி அமைப்பு முறை ஒரு குறிப்பிட்ட அளவு கெடுக்கப்பட்டுப் போயிருக்கிற காரணத்தினால் ஓரரசு முறைக்குச் சென்று கொண்டிருப்பதனால், பிரிவினைக்கான கோரிக்கையை, மற்ற இராஜ்யங்களிடையே ஏற்பட்டுள்ள அதிருப்தியுடன் சேர்த்துப் பார்த்துக் கவனிக்க வேண்டும் என்று கூறுகிறேன். எங்கள் பிரசாரம் ஆபத்தானது என்று வைத்துக் கொண்டு பார்ப்பதானாலுங் கூட ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எங்களை எதிர்ப் பிரசாரத்தால் சமாளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறிக்கொண்டி ருந்தேன். அவர்கள் இந்தத் தமது உரிமையை விட்டுக் கொடுப்பதாக இருந்தாலும், இந்த உரிமையையும் சர்க்காருக்கு, நிர்வாகத் துறையினருக்கு விட்டு விடுவதாக இருந்தாலும், எங்களை எதிர்த்துப் பிரசாரம் செய்து சமாளிக்க, அடிப்படை உரிமைகளைக் குறைக்க வேண்டியது அவசியந்தானா என்பது பற்றி யோசித்துப் பார்க்கும்படி, இந்த மன்றத்து உறுப்பினர்களை வேண்டிக் கேட்டுக் கொள்வேன். இந்த மன்றம் அது பற்றி யோசிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அடிப்படை உரிமைகள் கட்டுக்கடங்கக் கூடாதவை அல்ல என்பதை நான் தெரிந்திருக்கிறேன். நன்றாக அறிந்திருக்கிறேன் - கட்டுத்திட்டங்கள் உள்ளன.

கனம். அக்பர் அலிகான்: மிக உண்மை.

சி.என்.ஏ.: பார்லிமெண்டுக்கு, அந்த உரிமைகளைக் கட்டுப்படுத்த எல்லாவித அதிகாரமும் உண்டு. இவை எளிதாக உணர்ந்துகொள்ளத்தக்க விஷயங்கள். இவைகளைப் புரிந்துகொள்ள அதிகச் சிரமப்பட வேண்டியதில்லை. ஆனால், முக்கியத்துவம் வாய்ந்தவை கட்டுத்திட்டங்கள் அல்ல, உரிமைகள் தான் என்பதைப் புரிந்துகொள்ளச் சிறிதளவு சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டும்! ஆகவேதான், நமது அரசியல் சட்டத் திட்டத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உரிமைகளுக்கு விதிக்கப்படும் கட்டுத்திட்டங்கள் தக்க காரணங்களுக்காக இருக்க வேண்டும் என்று இந்தக் கட்டுத் திட்டத்துக்குத் தக்க காரணம் இல்லை என்பது என் பணிவான முறையீடாகும். - தக்க காரணம் இல்லை என்றால், முதலாவதாக, நீங்கள் பிரச்சினையை அலசிப் பார்க்கவில்லை; இரண்டாவதாக, எங்களைப் புரிந்து கொள்ள முயற்சிக்கவில்லை; மூன்றாவதாக நீங்கள் எமக்கு மாற்றுத் திட்டங்களைத் தரவில்லை; நாலாவதாக மக்களை நீங்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாகக் கொள்ளவில்லை! சட்டத்துறை முறைப்படி இல்லாதிருக்கக்கூடும். ஆனால் அரசியல்துறை முறைப்படி நீங்கள் புகுத்தும் கட்டுத் திட்டத்துக்குப் போதுமான காரணம் இல்லை.

அடிப்படை உரிமைகளைப் பற்றிப் பேசும்போது, சட்ட மந்திரி அந்த மன்றத்தில் வேடிக்கையான ஒரு வாதம் செய்தார் என்பது பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன். அடிப்படை உரிமைகளை முழுவதும் அப்படியே பயன்படுத்துவதாக இருந்தால், அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்தியே சிலர் சீனர்களையே வரவேற்றிருப்பார்கள் என்று கூறினர் ஆளுங்கட்சியினர், குறிப்பாக மேற்கு வங்கத்தைச் சேர்ந்தவர்கள் கொள்ளக்கூடிய சில உணர்ச்சிகளையும் அவர் சேர்த்துக் கொண்டு பேசினார். நான் அதுபற்றிக் கவலைகொள்ளத் தேவை இல்லை. ஆனால் சட்ட மந்திரியாகட்டும், வேறெந்த மந்திரிதானாகட்டும், பொருள்களை அறிந்து தீர்ப்பளிக்கும் திறமை பொதுமக்களுக்கு உண்டு என்பதை ஏன் குறைத்து மதிப்பிட வேண்டும் - இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேடை மீதேறி எவராவது, 'நாங்கள் சீனர்களை வரவேற்கிறோம் என்று பேசினால், மக்கள் பார்த்துக்கொண்டு சும்மாவா இருப்பார்கள்! இல்லை! நமது மக்கள், அரசியல்

சட்டதிட்டத்தின் பகுதிகளும் விதிகளும் கற்றறியாது இருக்கலாம். ஆனால், நன்மைக்கும் தீமைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ளும் திறம் இருக்கிறது. அதனால்தான் விடுதலைப் போராட்டத்துக்கான அழைப்பு வந்ததும், வலிவு மிக்க ஏகாதிபத்தியம் புகுத்திய அடிமைத்தனம் அவ்வளவு இருந்தபோதிலும், மக்கள் முன்னணியில் வந்து நிற்கத் தயாராக இருந்தனர்! பொது மக்களிடம் உள்ள நம்பிக்கையைக் குறைத்தக் கொள்ளாதீர்கள்.

அடிப்படை உரிமைகளைப் பொறுத்தவரையில், அந்த மன்றத்தில், சட்ட மந்திரி பேசியது, உண்மைக்கு வெகுதூரம் அப்பாற்பட்டது மட்டுமல்ல, ஆழ்ந்த யோசனை கொண்டதுமல்ல. ஆனால் நான் சொல்லிக் கொண்டு வந்தது போல, கட்டுத் திட்டங்களைப் புகுத்தலாம், பார்லிமென்ட்டுக்குக் கட்டுத்திட்டம் புகுத்தும் அதிகாரம் இருக்கிறது. ஆனால் இந்தக் கட்டுத்திட்டங்க ளெல்லாம், கட்டுத்திட்டங்கள் போட்டே ஆகவேண்டும் என்று வலியுறுத்திக் காட்டத்தக்க அசாதாரண நிலைமைகள் ஏற்பட்டுள்ளனவா என்பதைக் கவனித்தே போடப்படவேண்டும். மோதிலால் நேரு கமிட்டியில் என்று நினைக்கிறேன், *1928*, பண்டித ஜவஹர்லால் நேரு சொன்னார் மிகத் தெளிவாக: நாம் நமது அடிப்படை உரிமைகளைப் பெறவேண்டும என்பது மட்டுமல்ல, அந்த உரிமைகளை எந்த நிலைமை காரணமாகவும் நீக்கிவிட மாட்டோம் என்று நமது மக்களுக்கு உறுதி அளிக்க வேண்டும் என்று கூறினார். இங்கே தயைகூர்ந்து என் வார்த்தைகளை நன்கு கவனியுங்கள். துணைத்தலைவர் அவர்களே! தங்கள் மூலமாக, மன்றத்து உறுப்பினர்களையும் இந்த வார்த்தைகளை நன்கு கவனித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன் - எந்த நிலமை காரணமாகவும் அதற்குப் பிறகு நாம் வலிவற்றவர்கள் ஆகிவிட்டிருக்கக் கூடும். அதை என்னால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் இந்தக் கட்டுத்திட்டம் விதிக்கவேண்டிய அளவுக்கு ஏதேனும் அசாதாரண நிலைமையாவது எழும்பி இருக்கிறதா? இல்லை இப்போது தி.மு.க. சட்ட எல்லைகளை மீறாமல் இருந்திருக்கலாம். ஆனால் விஷமம் செய்யும் தன்மை, ஆபத்து விளைவிக்கும் தன்மை இருக்கிறது. அந்த தன்மையை இரும்புக் கரம் கொண்டு ஒழித்துக் கட்டியாக வேண்டும் என்று வாதங்கள் எடுத்துக் கூறப்பட்டன. இந்தத் தன்மை என்ற வார்த்தை பற்றிச் சட்ட விற்பன்னர்கள் தரும் இடம் என்ன, கொள்ளும் பொருள் என்ன என்பது பற்றி எல்லாம் பேச எனக்கு நேரம் இல்லை என்று கருதுகிறேன். ஆனால் இதனைக் கூறுவேன் - மிகச் சிறந்த சட்ட விற்பன்னர்களில் ஒருவர், ஜஸ்டிஸ் பதஞ்சலி சாஸ்திரி

கூறியிருக்கிறார்: சில விஷக் கிளைகளைத் தழைத்து வளரக் கூட விட்டு வைக்கலாம்; அவைகளை எடுத்துப் போடும் முயற்சியில் தருவையே வெட்டி வீழ்த்தி, உயிர்ப்புச் சக்தியையே நாசமாக்குவதை விட' - என்று அடிப்படை உரிமைகள் பற்றியும், அதற்குப் போடப் படும் கட்டுத்திட்டம் பற்றியும் எடுத்துக் கூறப்பட்ட நீதிமானின் கருத்துகளிலே அது ஒன்றாகும். அமெரிக்காவில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்புகள் பலப்பல இருக்கின்றன. நாம் அவைகளுக்குக் கட்டுப்பட வேண்டியதில்லை. ஆனால் ஜனநாயக நாடுகளில் கருத்து முற்போக்கு, தாராளத் தன்மை எவ்விதம் உள்ளது என்பதை அவை எடுத்துக் காட்டுகின்றன. ஒரு காலத்தில் நியூயார்க்கில் என்று கருதுகிறேன். ஆசிரியர்களாக விரும்புபவர்கள், அரசியல் சட்டத்திட்டத்துக்கும், அரசியல் அமைப்புகளும் 'பக்தி விசுவாசம்' காட்டும் ஆணை எடுத்துக்கொண்டாக வேண்டும் என்று ஒரு புதிய சட்டம் கொண்டு வரப்பட்டபோது, நியூயார்க் கவர்னர் அத்தகைய முறையில் அடிப்படை உரிமையைக் கட்டுப்படுத்திக் குறைப்பது தேவையற்றது என்று கூறி, சட்டத்தைத் தடுத்துவிட்டார். ஆசிரியர் கடமை பாடம் போதிப்பது, அவருடைய நம்பிக்கைகளை, உணர்ச்சிகளை எடுத்துக் காட்டுவது அல்ல என்று அவர் வாதிட்டார். மற்ற ஜனநாயக நாடுகளிலே வளர்க்கப்பட்டுள்ள, முற்போக்கான தாராளத் தன்மையுள்ள பாரம்பரியத்தைப் பின்பற்ற வேண்டும். அதற்கு ஏற்பவாவது நமது சிந்தனைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக, "எங்களுக்கு அழித்து விடும் வலிவு இருக்கிறது. எந்த எதிர்க்கட்சியையும் அழிக்கும் வலிவு! இன்று தி.மு.க.; நாளைக்கு கம்யூனிஸ்டு கட்சி; மறுநாள் ஜன சங்கம் - என்று கூறுவதானால், நான் கூறுகிறேன், உங்களிடம் அதிகாரம் இருக்கிறது. செய்து கொள்ளுங்கள்! ஆனால், சட்டத்தின் மூலம் அடக்குமுறை நடத்தி, வலிவும் ஆதிக்கமும் தேடிக் கொண்ட எந்தச் சர்க்காரும் எங்கு சென்றன, விளைவு என்ன என்பதை நினைவில் கொள்ளுங்கள்; நான் கவனப்படுத்தத் தேவையில்லை. இன்று கூடப் பார்த்தோம், மன்றத்தின் இந்தப் பகுதியிலே புபேஷ் குப்தா, தி.மு.கழகத்தை மட்டுமல்ல, ஜனசங்கத்தையும் எதிர்த்துச் சமாளிக்க வேண்டும். அது வகுப்புவாத அமைப்பு என்று அவர்கள் கருதுவ தால் என்றார். பிரஜா சோஷியலிஸ்டுகள், தி.மு.கழகத்தை விட அதிக ஆபத்தானது கம்யூனிஸ்டு கட்சி என்று கூறினர். எனவே, நாம் வசதியாகக் கிடைத்து விடுகிறோம் - எதிர்க்கட்சிகளாக உள்ள நாம்-

கனம். யாஜி: இந்தியாவில் பிரிவினை வேண்டும் என்று வாதிடுகிற எந்தக் கட்சிக்கும் பொருந்தக் கூடியது அது - அது கம்யூனிஸ்டு கட்சியாக இருந்தாலும் சரி, தி.மு.கழகமானாலும் சரி.

புபேஷ் குப்தா: அவர் தான், திரு. யாஜி! துணைத்தலைவர் அவர்களே! நாம் எல்லோரும் சேர்ந்து யாரையாவது எதிர்த்துச் சமாளிக்க வேண்டும் என்றால், அது, திரு. யாஜியைத்தான்.

கனம். ஏ.கே.சென் (சட்ட மந்திரி): துணைத் தலைவர் அவர்களே! நான் இந்த அனுமதி இந்திய பாதுகாப்புச் சட்ட விதிகளால் ஏற்பட்டது என்று சொன்னதாகச் சொல்லப்பட்டது. நான் அப்படிச் சொல்லவில்லை. ஓரளவுக்கு, அப்படி என்று நான் சொன்னேன். தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்காகத் தான் அந்த விதிகள் ஏற்பட்டுள்ளன. நான் தி.மு.கழகத்துக்காக என்றோ மற்ற யாருக்காகவேனும் என்றோ சொல்லவில்லை. ஓரளவுக்கு, இந்திய பாதுகாப்புச் சட்டம் இந்த அமைதிக்குக் காரணம் என்று சொன்னேன். இதில் என்ன தவறு?

சி.என்.ஏ.: நான் எதைக் குறை கூறினேன் என்றால். அவ்விதமான கருத்துரை, பரிவுகாட்டும் உணர்ச்சியல்ல என்பது பற்றித்தான் நான் குறை கூறினேன்.

எ.கே.சென்.: குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க விரும்பு பவர்கள் இருக்கிறார்கள்; தவறான நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் இருக்கிறார்கள்; நாம் அதனைக் காணாமல் கண்களை மூடிக்கொள்ள முடியுமா? ஆனால் கனம் உறுப்பினர், அதனைத் தமது தலைக்குப் பொருந்தும் குல்லாய் என்று கொள்ளத் தேவையில்லை. நான் அவரையோ, அவருடைய கட்சியையோ குறிப்பிடவில்லை.

துணைத் தலைவர்: அண்ணாதுரை! நீங்கள் மேலாகப் பேசுங்கள். இப்போது விளக்கம் ஏற்பட்டுவிட்டது என்று நம்புகிறேன்.

சி.என்.ஏ.: ஆளுங்கட்சி பேச்சுரிமையைக் கட்டுப்படுத்தும் போக்கிலே சுவைகொள்ளும்படி செய்துவிட்டால் இன்று அது தி.மு.கழகத்தைக் குறியாகக் கொண்டிருக்கலாம். ஆனால் நாளை மற்றக் கட்சிகளின் மீதும் குறி பார்க்கப்படும் என்பதை மறுக்க உத்தரவாதம் என்ன இருக்கிறது? அதற்காக ஆளுங்கட்சி வாதாடத் தேவையில்லை; நாமே அதற்கான விதமாக வாதாடிக் கொள்கிறோம். கம்யூனிஸ்டுகளை ஒடுக்க வேண்டுமென பிரஜாசோஷியலிஸ்டு வாதிடுகிறது! ஜனசங்கத்தை ஒடுக்க வேண்டுமென கம்யூனிஸ்டு கட்சி வாதிடுகிறது! இது அதிகப்பட அதிகப்பட ஆளுங்கட்சிக்குக் கொண்டாட்டந்தான்! எனவே, மன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன் - அடிப்படை உரிமைகளைக் குறைக்கும் பிரச்சினை என்ற முறையில் இதனைக்

கவனித்துப் பார்க்கவேண்டும். ஆளுங்கட்சி உறுப்பினர்கள், எங்கள் பிரசாரத்தைத் திடமாக எதிர்த்துப் பிரசாரம் செய்யத் தங்களால் முடியும் என்பதையாவது எடுத்துச் சொல்லட்டும். எங்களை எதிர்த்துப் பிரசாரம் செய்து சமாளிக்க முன் வரட்டும், எங்களுக்கு மனமாற்றம் ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ள முன்வரட்டும் - அந்தக் காரணத்துக்காக, இந்த மசோதாவை முழுவதும் அவர்கள் எதிர்க்க வேண்டும். ஏனெனில் என் நண்பர் புபேஷ் குப்தா சொன்னார், கொள்கை அளவில் இந்த மசோதாவை ஒத்துக் கொள்வதாக, மற்றொரு நண்பர் குருபாதசாமி இதன் மொத்த நோக்கத்தை ஒத்துக்கொள்வதாகச் சொன்னார்...

புபேஷ் குப்தா: மொத்தமான அரசியல் நோக்கம்...

சி.என்.ஏ.: அதன் பொருள் என்னவென்றால், இவர்கள் உரிமைக்குப் போடப்படும் கட்டுத்திட்டங்களின் விளைவுகள்பற்றி உணருகிறார்கள் என்பதுதான். எனவே, இப்படிப்பட்ட சட்டத்தின் விளைவுகள் பற்றி - அது எந்தக் கட்சியின் மீது ஏவப்படுகிறதோ அதுபற்றி அல்ல கருதிப் பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்களிடத்திலேயும் மக்களிடத்திலேயும், ஆளுங்கட்சி யினருக்கு நம்பிக்கை இருக்குமானால், ஜனநாயக சமூகத்தில், எண்ண, எடுத்துரைக்க இருக்கும் உரிமை குறைக்கப்படக்கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது.

"மிக முக்கியமான விஷயங்களில் உண்மையைக் கண்டறிவ தும், அதனை எடுத்துரைப்பதும், சமூகத்துக்கும் சர்க்காருக்கும் உள்ள மிக முக்கியமான நோக்கமாகும். தங்கு தடையற்ற விதமாக விவாதித்துப் பேசும் முறை மூலமாகவே இது சாத்தியமாகும். பாகியாட் கூறுகிறபடி, ஏதாவதொரு பக்கத்தில் வன்முறை துணையாக்கப்படுகிறதோ அப்போது, அது உண்மையின் பக்கம் துணைநிற்கிறதா, பொய்யின் பக்கம் துணை நிற்கிறதா என்பது அறுதியிட்டுக் கூற முடியாததாகி விடுகிறது. கருத்துப் போரில் உண்மை இயற்கையாகப் பெறவேண்டிய சாதகங்களை எல்லாம் இழந்துவிடுகிறது.

வன்முறை மூலம் அமைதியை ஏற்படுத்தாதீர்கள். இதய மொழி பேசி நட்புறவு எழச் செய்யுங்கள் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, அடிப்படை உரிமைகளின் சார்பில் நிற்கும்படி ஆளுங்கட்சி உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன் - பொது மக்களுக்குக் கருத்து விளக்கம் அளிக்க உங்களுக்கு உள்ள உரிமையை நிலைநிறுத்திக் கொள்ளுங்கள் - கருத்து வேற்றுமைகளை எடுத்துரைக்கும் உரிமை, எண்ணும் உரிமை

இல்லாது செய்திடச் சட்டத்தின் துணையைத் தேடுவதற்குப் பதிலாக!

கடைசியாக, எனக்குத் தவறான வழியில் செல்லும் தத்துவ சாஸ்திர முறை இருப்பதாக, ராமி ரெட்டி அவர்கள் சொன்னார் களே...

ராமி ரெட்டி: தவறான வழிக்கு அழைத்துச் செல்லும் வாதமுறை.

சி.என்.ஏ.: எந்த உறுப்பினரும், தவறான வழியில் அழைத்துச் செல்வதற்கு இணங்கிடக் கூடாது! யாரையும் தவறான வழியில் அழைத்துச் செல்லும் திறமை எனக்கு இல்லை. ஒருவேளை, என்னுடைய தத்துவ சாஸ்திர முறையே தவறானது என்று சொல்லுகிறாரோ என்று நினைத்தேன் - ஏனெனில் அந்த முறை அப்பழுக்கற்றதாக, எனக்கு இருக்கவேண்டும் என்பதிலே நான் மெத்தக் கவலை கொள்பவன். நான் மற்றவர்களைத் தவறான வழியில் அழைத்துச் செல்பவன் என்று கூறப்பட்ட புகாருக்கு, நான் சொல்ல விரும்புவது, மக்களைத் தவறான வழியில் இழுத்துச் செல்லும் வலிவுமிக்கவன் அல்ல நான்!

சாரோகி: துணைத்தலைவர் அவர்களே! கனம் அங்கத்தினர். அவருடைய இராஜ்ய மக்களைத் தவறான வழியில் அழைத்துச் சென்றுகொண்டிருக்கிறார். அதனால்தான் இந்த மசோதா நிறைவேற்றப்பட இருக்கிறது.

ஒருவர்: மக்களைத் தவறான வழியில் கொண்டு செல்வீர்கள் என்பதுதான், உள்ள பயம்.

அக்பர் அலிகான்: வகுப்புவாதக் காரணங்கள் பற்றி...

துணைத் தலைவர்: சரி, அண்ணாதுரை, தயவுசெய்து பேச்சை முடித்துவிடுங்கள். நீங்கள் ராஜ்ய மக்களைத் தவறான வழியில் அழைத்துச் செல்வதாகவும், அதற்காகத்தான் இந்தச் சட்டம் தேவைப்படுகிறது என்றும் சொன்னார்.

சாரோகி: மக்களுடைய எண்ணங்களையும் உணர்ச்சிகளை யும் தூண்டிவிட்டு விடுகிறீர்கள்; அவர்கள் அதற்கேற்ப ஆடுகிறார் கள். அதற்காகத்தான் இந்த மசோதா சட்டமாக்கப் படுகிறது.

துணைத் தலைவர்: அவர்களும் ஆடிவிட நேரிடுமோ என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

சி.என்.ஏ.: துணைத்தலைவர் அவர்களே! இந்த அறிவிப்பு, சென்னை காங்கிரசாருக்கு உள்ள திறமையை, ஆற்றலைக் குறைத்து மதிப்பிடுவதாகிறது.

சந்தோஷ் குமார் பாசு: என் நண்பர் சொன்னார், வன்முறை வலிவை உபயோகிக்காதீர்கள் என்றார். இந்தச் சட்டம், வன்முறை வலிவைப் புகுத்தும், உங்கள் கொள்கையைத் திணிக்காதபடி செய்ய. ஆனால் தி.மு.க. வன்முறை வலிவை அறவே நீக்கிவிட்டதா? அல்லது அந்தப் போக்கினருடன் தொடர்பற்று இருக்கிறதா? நீங்கள் எப்போதும் வன்முறை வலிவை நீக்கியிருந்திருக்கிறீர்களா?

சி.என்.ஏ.: நிச்சயமாக! பலமுறை நாங்கள் அறிவித்திருக் கிறோம். நாங்கள் சட்டதிட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்ளும் கட்சியினர் என்று.

பாசு: இரயில்வே ஸ்டேஷன்களையும் - பெயர்ப் பலகைகளையும் கொளுத்தியிருந்தாலுங்கூட...

சி.என்.ஏ.: ஸ்டேஷன்களை அல்ல, அரசியல் சட்டத்தை! என் மதிப்பு மிக்க நண்பர், திராவிடர் கழக நடவடிக்கைகளைத் திராவிட முன்னேற்றக் கழக நடவடிக்கைகள் என்று தப்பாகக் கருதிக் கொள்கிறார். தொல்லை இதுதான். மன்றத்துக்கு இதனை நான் கூறுகிறேன். இந்த மசோதாவினால், நீங்கள் தி.மு.கழகத்தைத் தேர்தலில் ஈடுபட ஒட்டாமல் தடுத்து விடலாம். ஆனால் திராவிடர் கழகம் தேர்தலுக்கு நிற்கும் கட்சி அல்ல; ஆகவே, இந்தச் சட்டம் அவர்களைப் பாதிக்கப் போவதில்லை.

பாசு: எங்களுக்குள்ள கவலை, தி.க.வா, தி.மு.கா.வா என்பதல்ல. சட்டம் பற்றித்தான் நாங்கள் கருதுகிறோம் - அது எல்லோருக்கும் பிரயோகிக்கப்படக் கூடியது.

வாஜ்பாய்: ஆனால், தி.க.காங்கிரசுக்குக் கூட்டாளி என்று நம்புகிறேன்.

சி.என்.ஏ: அது பற்றி யோசிக்க வேண்டியது, காங்கிரஸ்கட்சி. என் குறிப்பு இதுதான். துணைத்தலைவர் அவர்களே! ஆளுங்கட்சி உறுப்பினர்கள், இந்த மசோதா தேவையற்றது, ஜனநாயகத்துக்கு விரோதமானது, அடிப்படை உரிமையை வெட்டி வீழ்த்துவது என்பதை - நான் அரசியல் சட்டத்தில் உள்ள அடிப்படை உரிமை பற்றிச் சொல்லவில்லை - காங்கிரசாருக்கு உள்ள அடிப்படை உரிமைபற்றிச் சொல்லுகிறேன். இந்தப் பிரச்சினையிலே அவர்கள் பங்குபெற்றவராக இல்லை, அவர்களை விலகி நிற்கும்படி சொல்லப்பட்டு விடுகிறது. இந்த மசோதா சொல்லுகிறது, "அண்ணாதுரையை எதிர்த்துச் சமாளித்தாக வேண்டும்; நீங்கள் அதிலே தோற்றுப்போய் விட்டீர்கள். எனவே நான் வருகிறேன் - வரவிடுங்கள்!" என்று சொல்லுகிறது! நான் மெத்த மதிப்பு

வைத்திருக்கிறேன், சென்னைக் காங்கிரசாரிடம். ஆனால் இது, சென்னைக் காங்கிரசாரின் திறமையிலும், ஆற்றலிலும் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றுவது போன்ற மசோதா. நான் மதிக்கிறேன், நீங்கள் அவர்களுடைய முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுகிறீர்கள். அதுதான் தொல்லை. எதிர்த்துப் பிரசாரம் செய்து சமாளிக்கும் திறமை அவர்களுக்கு இல்லை என்று நீங்கள் நினைப்பதாகத் தெரிகிறது. வருந்தத்தக்க நிலைமை இதுதான். ஆகவேதான் ஆளுங்கட்சி உறுப்பினர்களை வேண்டுகிறேன், சர்க்காருக்குச் சொல்லுங்கள்" நாங்கள் இருக்கிறோம், வீரமிக்க திடகாத்திரர்கள்! பிளவுப் போக்குகளை எதிர்த்துப் போராட! அண்ணாதுரையை கவனித்துக் கொள்கிறோம், எங்களை விடுங்கள்! அவன் நோஞ்சான் ஒரு பார்வை போதும், அழுத்தமான ஒரு வார்த்தை போதும், அந்தப் பயலைப் பொசுக்கித்தள்ள" - என்று சொல்லுங்கள். உங்கள் கட்சிக்கும், உங்கள் சர்க்காருக்கும் இதுபோலச் சொல்லி, இந்த மசோதாவை திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள். இல்லையென்றால், இது சட்டப் புத்தகத்தில் ஏறிவிட்டால், இப்போது மட்டுமல்ல என்றென்றைக்கும் கருதுவர். இந்தியாவிலே ஒரு நிலைமை ஏற்பட்டது, அப்போது ஒரு சிறு கட்சியினரைச் சமாளிக்க - அல்லது, என் நண்பர் புபேஷ்குப்தாவின் வார்த்தைகளை பயன்படுத்துவதானால், ஒரு தன்னந்தனி ஆளைச் சமாளிக்க - இந்திய அரசியல் சட்டத்துக்கே திருத்தம் கொண்டு வரவேண்டி நேரிட்டது என்பர்.

புபேஷ் குப்தா: இல்லை,' இல்லை, நான் அதைச் சொல்லவில்லை.

அக்பர் அலிகான்: அண்ணாதுரைக்கு நான் உறுதியாகச் சொல்லுவேன் - ஒரு தனி ஆளுக்காகவோ, ஒரு தனிக் கட்சிக்காகவோ, இது கொண்டுவரப் படுவதல்ல. பிரிவினைத் தன்மைகள் எங்கு இருந்தாலும், பஞ்சாபில், சென்னையில், நாட்டில் வேறு எந்தப் பகுதியிலிருந்தாலும், அதனை எதிர்த்துத்தான் இந்த மசோதா - அதுவும் கடந்த 30 ஆண்டுகளாக உள்ள வகுப்புவாதத் தன்மைகள், வகுப்புவாத உணர்ச்சிகள் இவைகளையும் கவனத்தில் வைத்துச் செய்யப்படுவது.

புபேஷ் குப்தா: துணைத்தலைவர் அவர்களே! நான் அவரைத் தனி ஆள், ஒண்டி ஆள் என்று சொல்லவில்லை.

சி.என்.ஏ.: நான் அவருடைய சொற்களை நன்றியுடன் பெற்றுக் கொண்டேன், கண்டித்து அல்ல. கனம். அக்பர்அலிகான் சொன்னது பற்றிக் கூறுகிறேன் - அவர் தமது வாதத்தைக் கூறும்

போது அவருக்கு இருந்த தயக்கத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. - நான் இதைச் சொல்வேன், இந்த மசோதா தி.மு.க. மீது மட்டுமல்ல மற்றும் சிலர் மீதும் குறிபார்த்துத்தான் வருகிறது. நான் எந்தக் கட்சியில் இருக்கிறேனோ, அது சம்பந்தப்பட்ட மட்டில் நான் கருத்துச் செலுத்துகிறேன். வேறு பிரதிநிதிகள் இருந்தால், அவர்களும் இதுபோலப் பேசியிருப்பார்கள். ஆனால் சுயநலத்துக் காக இத்தகைய இலட்சியத்தை மூழ்கடித்துக் கொண்டவர்கள் இருப்பார்களானால், அவர்கள் பற்றி நான் கருதத் தேவையில்லை. தி.மு.கழகத்தின் நோக்கத்தை எடுத்துக் காட்டுவது தான் என் நோக்கம். வேறு பலர் மீதும் குறிபார்க்கக் கூடும். ஆனால் நாளிதழ்கள், கிழமை இதழ்களை நீங்கள் பார்ப்பீர்களானால், அரசியல் மேடைப் பேச்சுக்களைக் கேட்கச் சென்றால், அவர்கள் "கேடு கெட்ட தி.மு.க." பற்றித்தான் சுட்டிக்காட்டிக் கொண்டிருப்பதைக் காணலாம். ஆகவே, தி.மு.கழகத்தைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டுவதனால், குற்றச்சாட்டுகளில் சிலவற்றுக்கு நான் பதிலளித்தேன்.

கடைசியாக, மசோதாவைக் கொண்டு வந்தவரை ஜனநாயகத்தின் பேரால், அரசியல் நாகரிக உணர்ச்சியின் பேரால் கேட்டுக் கொள்கிறேன். தீமையை விலக்கிக் கொள்ளும் திறமை மக்களுக்கு உண்டு என்பதிலே தளராத நம்பிக்கை கொண்டு, இந்த மசோதாவை விட்டுவிடுங்கள். அதற்கு இசைவு தர இயலவில்லை யானால், நெருக்கடி நேரத்தை எண்ணி இதை ஒத்திப்போடவாவது செய்யும்படி அவரைக் கேட்டுக்கொள்கிறேன். - ஏனெனில் கருத்து வேற்றுமைகளுள்ள பிரச்சினைகளைப் பின்னணியில் வைத்திருக்க வேண்டும். அவை பற்றி இப்போது பேசிக் கொண்டிருப்பது கூடாது. இந்த மசோதா கொண்டு வருபவர், இந்த வேண்டு கோளையும் ஏற்றுக் கொள்ள இயலவில்லை என்றால், துணைத்தலைவர் அவர்களே! ஆளுங்கட்சியுடைய, முறைகள், நடவடிக்கை மசோதா இவற்றினுக்கு என் கண்டன எதிர்ப்பைப் பதிவு செய்திட அனுமதி கொடுங்கள்.

தேசீய ஒருமைப்பாடு

சி. சுப்பிரமணியம் தொடக்க உரை

உதவி சபாநாயகர் அவர்களே

நவம்பர் 11-ந் தேதியன்று இந்தத் தேசீய இணைப்பைப் பற்றிய ஒரு அறிக்கை இங்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு முன்பும், இது சம்பந்தப்பட்ட இன்னொரு அறிக்கை இந்தச் சபை முன்னாலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ராஜ்ய முதன்மந்திரிகள் மகாநாடு நடைபெற்று, அதிலே தேசீய இணைப்பைப் பற்றிய பல்வேறு விஷயங்கள் விவாதிக்கப்பட்டு, அந்தக் கூட்டத்தின் அறிக்கை இந்த சபையின் முன்பு முதலிலே சமர்ப்பிக்கப்பட்டது. அதையொட்டி இன்னொரு விரிவான மகாநாடு டெல்லியிலே நடைபெற்றது. அந்த மகாநாட்டின் அறிக்கைதான் இப்பொழுது இங்கே வைக்கப் பட்டுள்ளது. ஆகவே, நாம் இதைப் பற்றி விவாதிக்கும்பொழுது, இந்த இரண்டு அறிக்கைகளையும் மனதிலே கொண்டு விவாதிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுமட்டுமல்ல.

இந்த மகாநாடுகள் கூடுவதற்கு அடிப்படையாக இருந்தது இன்னொரு கமிட்டி. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, இந்தத் தேசீய இணைப்பு விஷயங்களைப் பற்றிப் பரிசீலனை செய்வதற்கு, திருமதி இந்திரா காந்தியின் தலைமையின் கீழ் ஒரு குழுவை அமைத்தது. அந்தக் குழுத் தொடர்ந்து பல விஷயங்களைப் பற்றிப் பரிசீலனை செய்து, சில சிபாரிசுகள் செய்தது. முதன் மந்திரிகள் எல்லோரும் கூடி அவைகளைப் பற்றி ஆலோசிக்க வேண்டும், அதற்குப் பிற்பாடு விரிவானதொரு மகாநாடு கூட்ட

வேண்டுமென்கிற ஆலோசனையை அந்தக் கமிட்டி கூறியது. அந்த அடிப்படையில்தான் முதன்மந்திரிகள் மகாநாடு நடைபெற்றது. இப்பொழுது இரண்டாவது விரிவான மகாநாடு டெல்லியிலே பல்வேறு தேசீயக் கட்சிகளையும், கல்வித் துறை நிபுணர்களையும், இன்னும் தேசீயத் தலைவர்களைக் கொண்டும் நடைபெற்றது.

இணைப்பு முயற்சி எதற்கு?

இந்த மாதிரி தேசீய இணைப்பைப் பற்றிக் கவனம் செலுத்தி, அதைப் பற்றி விவாதிக்க மகாநாடுகள் நடத்துவதற்கு என்ன காரணம் என்பதைப் பற்றிப் பல பேரிடையே பலவிதமான கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. கருத்து வேறுபாடுகள் மட்டுமல்லாமல், சில இடங்களிலே குழப்பமும் கூட ஏற்பட்டிருக்கிறது. ஏதோ நம்முடைய நாட்டிலே தேசீய ஒற்றுமை முழுவதும் சீர்குலைந்து விட்டது, அப்பேர்ப்பட்ட சீர்குலைவைத் தவிர்ப்பதற்காக இந்த மகாநாடு ஏற்படுத்தப்பட்டது என்று ஒரு சிலர் கருதினார்கள்.

அவ்வாறு, அடிப்படையிலேயே சீர்குலைவு ஏற்படக் கூடிய நிலையில், இந்த மகாநாடு கூட்டப்பட்டதா அல்லது ஆங்காங்கு தோன்றக்கூடிய சிறு சிறு பிரிவினைச் சக்திகள், பிளவுச் சக்திகள், வேற்றுமை சக்திகள், பிற்போக்குச் சக்திகள் இவைகளைத் தடுத்து, நாட்டிலே இன்னும் முன்னேறிச் செல்வதற்கான சக்திகளை வளர்ப்பதற்காக ஏற்பட்டதா என்பதைப்பற்றி நாம் முதலிலே கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

அவ்வாறு கவனம் செலுத்த வேண்டுமென்றால், இதற்குப் பின்னணியாக இருக்கும் பல்வேறு விஷயங்களை, நாம் கவனிக்க வேண்டும். அதிலும், முக்கியமாக, நாடு சுதந்திரம் பெற்றதற்குப் பிற்பாடு, நாம் எடுத்திருக்கக்கூடிய பல்வேறு தேசீய இணைப்பு நடவடிக்கைகளைக் கவனித்து, அவைகள் எந்த முறையில் ஏற்பட்டன. அவைகளில் எத்தனைக் குற்றம் குறைகள் ஏற்பட்டி ருக்கின்றன. அவைகளில் ஏதாவது சீர்திருத்த வேண்டியவையாக இருக்கின்றனவா என்பதை ஆலோசித்துப் பார்த்து, அவைகளில் அடிப்படையாக எந்த விதமான தவறும் இல்லை. குறையும் இல்லை. ஆனால் மேலோடியாகச் சிறு சிக்கல்கள், சங்கடங்கள் தோன்றி இருக்கின்றன என்றால், அவைகளை எப்படித் தவிர்ப்பது என்பதை யோசிக்க வேண்டும்.

நான் ஒன்றைத்தான் சொல்லிக் கொள்கின்றேன். என்னுடைய கருத்திலே, இம்மாதிரி அடிப்படையாக இருக்கும் முறையிலே

ஏற்பட்டிருக்கக்கூடிய சிக்கல்கள் இல்லை. அதற்குப் பதிலாக, இந்தப் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குள்ளாக, நாம் சுதந்திரம் பெற்றதற்குப் பிற்பாடு, பல சாதனைகளை, தேசிய ஒற்றுமையை உறுதிப்படுத்துவதற்கு எடுத்துக்காட்டாக ஏற்பட்டிருக்கின்றன என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து.

அதைப்பற்றித்தான் முதலில் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் அவ்வாறு உறுதி இல்லையென்றால், ஏதோ மேலோடியாக வெடிப்புகள் ஏற்பட்டிருப்பது அல்ல. கட்டிடத்தின் அஸ்திவாரமே ஆட்டம் கண்டிருக்கிறது என்றால், அதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் வேறு. ஆனால், மேலாகச் சிறு பிளவு ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் வேறு, ஆகையால்தான். இன்றைக்கு ஓரளவு ஆராயவேண்டிய அவசியம் என்ற முறையிலே சில கருத்துக்களை இந்தச் சபை முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

முதன்முதலிலே, நமக்குச் சுதந்திரம் வந்த காலத்திலே, நாட்டிலே ஒரு பிரிவினை ஏற்பட்டது நம் எல்லோருக்கும் தெரியும். அந்தப் பிரிவினையின் காரணமாக நாட்டிலே ஏற்பட்ட நிகழ்ச்சிகள், ஏற்பட்ட கலவரங்கள், குழப்பங்கள், சிக்கல்கள் எல்லாம் நமக்கு நன்கு தெரியும். இவைகளையெல்லாம் நாம் நல்ல முறையிலே சமாளித்து, அப்பொழுது ஏற்பட்ட கலகத்தை அடக்கியது மட்டுமல்ல, குழப்பமான நிலைமையையும் சீர்படுத்தி, லட்சக் கணக்கான மக்களுக்கு, நாடு பெயர்ந்து இங்கு வந்திருந்தவர்களுக்கு ஒரு புதிய வாழ்வைக் கொடுத்து. அப்பொழுது ஏற்பட்ட பல பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், அந்தப் பிரச்சினைகளில் பல தீர்க்கப்பட்டிருந் தாலுங்கூட, பிரிவினையின் காரணமாக ஏற்பட்ட சில சிக்கல்கள் இன்னும் இருக்கின்றன. தொடர்ந்து நாம் முன்னேற்றப் பாதையிலே செல்லக்கூடியதைப் பாதிக்கக்கூடிய முறையிலே அந்தச் சிக்கல்கள் இயங்கி வருகின்றன என்பதை நாம் பார்க்கிறோம். நமக்கும் பாகிஸ்தானுக்கும் இருக்கக்கூடிய உறவு, பல சிக்கல்களை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது. அந்தத் தொடர்பு நல்ல முறையில், சிநேக முறையில் ஏற்படாமல், இன்னும் அடிக்கடி பல சச்சரவுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய வகையில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கக் கூடிய காரணத்தினால், இன்றைக்கு அந்தப் பிரிவினையின் காரணமாக சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டாலும்கூட, இன்னும் சில பிரச்சினைகள் தொடர்ந்து நம்மைப் பீடித்துக் கொண்டிருக்கின்றன என்பதைத்தான் நாம்

மனதிலே கொள்ள வேண்டும். அதையும் தொடர்ந்து தீர்த்து வைக்க வேண்டியது நம்முடைய கடமை.

அதற்காகத்தான் நம்முடைய தேசியத் தலைவர்கள் அந்தப் பிரிவினையினால் ஏற்பட்ட சிக்கல்களை விடுவிப்பதற்கு இன்னும் தொடர்ந்து முயற்சி செய்தும் கூட, அதிலே வெற்றி காணாத முறையில் பல சங்கடங்கள் தொடர்ந்து இருந்து வருகின்றன. அவ்வப்போது நமக்கும் பாகிஸ்தானுக்கும் இருக்கக்கூடிய உறவு, உடனடியாக இருக்கக் கூடிய உறவு மட்டுமல்ல, உலக அரங்கில் கூட அதன் பிரதிபலிப்புகள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதை அவ்வப்போது காண்கிறோம்.

அது ஒருபுறமிருக்க, நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையிலே பல முக்கியமான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு அதன் காரணமாக நாட்டினுடைய ஒற்றுமை உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடிப்படைச் சாதனைகள்

முதன் முதலாக நாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை, சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் தலைமையின் கீழ் நம் நாட்டிலேயிருந்து பல்வேறு சிற்றரசுகளை நம்முடைய அரசியலமைப்பின் கீழ் கொண்டுவந்தது. ஒரு நாடு என்கிற முறையிலே ஒரு அரசியலமைப்பின் கீழ் கொண்டுவந்தது உலகத்திலேயே, உலக வரலாற்றிலேயே மிகச் சிறந்த சாதனை என்று எல்லோராலும் போற்றக்கூடியதாக இருக்கிறது. பிரித்தவர்களை எப்பொழுதும் வரலாற்றில் பெரிதுபடுத்துவதில்லை. இணைத்தவர் கள் தான் உலக வரலாற்றிலே உயர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார் கள். அப்படி இணைக்கும் சக்தியாக, இணைக்கக்கூடிய ஒரு பெரும் ஆற்றலைப் பெற்றவராக விளங்கினார் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள். அவர்களது திறமையின் காரணமாக, அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக, 500-க்கு மேல் இருந்த சிற்றரசுகள் நம்முடைய நாட்டின் அரசியலமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு, ஒரு நாடு, ஒரு அரசியலமைப்பு என்ற முறையிலே ஏற்பாடு செய்யப்பட்டது முதலிலே நாம் சாதித்த காரியங்களிலே பெரிய காரியம் என்பதை நாம் மனதிலே கொள்ளவேண்டும். இப்பொழுது நாம் அதை ஓரளவு மறந்துவிடுகிறோம். சிற்றரசுகள் இருந்ததெல்லாங்கூட நம் கவனத்தில் இருப்பதில்லை.

ஆனால், அன்றைக்கு, அந்தச் சூழ்நிலையில், அந்நிய ஆட்சியிலிருந்து நாம் விடுபட்ட நேரத்தில், 500-க்கு மேற்பட்ட

சிற்றரசுகளுக்குப் பூரண சுதந்திர வாழ்க்கை உண்டு என்று அவர்களை விட்டுவிட்டுச் சென்றதற்குப் பிற்பாடு, அவர்களை ஒன்றுப்படுத்தினோம் - அதுவும் சமாதான முறையில் ஒன்று படுத்தினோம். எந்தவிதமான சீர்குலைவும் நம் நாட்டிலே ஏற்படாமல், சமாதான முறையில் நாம் அதைச் சாதித்தோம். ஏதோ ஒரு பகுதியில் ஒரு சிறு போலீஸ் நடவடிக்கை, இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. அதுவும் ஒரு சிறு காலத்திற் குள்ளாக முடிந்து விட்டது. ஆனால், பொதுவாக சமாதான முறையில், சமுதாயத்தில் எந்தச் சீர்குலைவும் இதன் காரணமாக ஏற்பட்டு விடாமல், அந்தப் பகுதிகளெல்லாம் ஒன்றாக இணைக்கப்பட்டது மாபெரும் சாதனை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அவ்வாறு செய்தது நமதுமுதல் சாதனையாகும்.

இரண்டாவது சாதனை, இந்த நாட்டினுடைய நிர்வாகத்தை ஒன்றாக இணைத்தது. வெள்ளைக்காரர்கள் ஆட்சி இங்கு இருந்தவரையில். அவர்களுடைய ஆட்சியின் கீழும் நிர்வாக அமைப்பில் இணைப்பு இருந்தது. ஆனால், அவர்கள் வெளியே சென்றபோது அந்த நிர்வாக அமைப்பு ஓரளவு முன்பு இருந்த பிரகாரம் இருக்க முடியவில்லை. ஆகவே, அப்பொழுது உள்நாட்டு மந்திரியாக இருந்த சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் தான் இந்த நிர்வாக அமைப்பையும் சீர்படுத்தி, அகில இந்திய ரீதியில் இந்த அமைப்பை வைத்துக்கொண்டு, இணைக்கப்பட்ட ஒரு நிர்வாக அமைப்பாக இருக்கவேண்டுமென்று பல நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டார்கள். அப்பொழுது அதற்குப் பக்க பலமாக, சட்டம் கூடக் கிடையாது. சட்டம் இயற்றாமலேயே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, அதன் மூலமாக இந்த நிர்வாக அமைப்பை ஒன்றுபடுத்தக்கூடிய நிலைமையிலே அவர்கள் சீர்படுத்தினார் என்பதைப் பார்க்கும்போது, இந்த இரண்டு துறைகளிலேயும் திரு. படேல் அவர்கள் சாதித்தவை உலக வரலாற்றிலேயே முக்கிய இடம் பெறக்கூடிய நிகழ்ச்சிகள், சாதனைகள் என்பதைத்தான் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

அதற்கடுத்தபடியாக நான் கூற விரும்புவது நமது இராணுவ அமைப்பைப் பற்றி. தேசீய இராணுவம் ஒன்றை அமைத்து, அது அரசியலில் கலந்துகொள்ளாத முறையில், அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் அளவுக்கு இராணுவ அமைப்பு ஏற்படுத்தி, இராணுவத்தைத் தேசீய ஒற்றுமைக்கு ஏற்றதொன்றாக அமைத்துக் கொண்டது நாம் அடுத்தப் படியாகச் சாதித்த சாதனையாகும். சுதந்திரம் பெற்றவுடனே, உடனடியாக நாம் இதிலே வெற்றிபெற்ற காரணத்தால்தான், மற்றவர்கள் எதிர்பார்த்ததுபோல

நம் நாட்டிலே குழப்பம் ஏற்படாமல், உள்நாட்டுக் கலவரங்கள் ஏற்பட்டுவிடாமல், அமைதியான முறையிலே நாம் பல காரியங்களைத் தொடர்ந்து சாதிக்க முடிந்தது.

பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, முதலிலே எடுத்துக்கொண்ட அந்த நடவடிக்கைகள் தான் அடிப்படைச் சாதனைகளாக அமைந்திருக்கின்றன என்பது தான் எல்லோருடை கருத்தும் ஆகும். இந்த அடிப்படையில்தான் மற்றவைகளை யெல்லாம் நாம் செய்ய முடிந்தது. ஆகவே, நமக்குச் சுதந்திரம் கிடைத்ததற்குப் பிற்பாடு, அந்நியப் பிடிப்பு நீங்கினதற்குப் பிற்பாடு, அவிழ்த்து விடப்பட்ட நெல்லிக்காய் மூட்டைபோல், ஒவ்வொரு பக்கம் ஓடிவிடாமல், ஒன்றுபட்ட அமைப்பிலே, ஒன்றுபட்ட இந்தியாவாக இருப்பதற்கு, இந்த மூன்று சாதனைகள் தான் நமக்குச் சாதகமாக இருந்தன, துணையாக இருந்தன என்று நான் மறுபடியும் வலியுறுத்திச்சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அரசியல் அமைப்பு

இந்தச் சாதனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடிய நேரத்திலே, எப்பேர்ப்பட்ட அரசியலமைப்பு நமக்கு இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் ஆலோசனை செய்ய ஆரம்பித்து, 26-1-1950 விருந்து புதிய அரசியல் சட்டமும் இந்தியா முழுவதற்கும் பொருந்தக்கூடிய ஒரு அரசியல் சட்டமாக அமுலாகியது, அடுத்த படியாக ஏற்பட்ட பெரிய சாதனை. அதுவும் 1947ல் சுதந்திரம் பெற்று 1949க்குள்ளாக, இரண்டு ஆண்டு காலத்தில், அந்தச் சட்டத்தை நாம் நிறைவேற்றியது, உலகத்திலேயே வேறு எந்தக் காலத்திலும் எந்தநாட்டிலும் ஏற்படாத ஒரு மாபெரும் சாதனை என்பதை நாம் மனதிலே கொள்ள வேண்டும்.

உலகத்திலேயே முதன் முறையாக, நாற்பது கோடி ஜனத்தொகை கொண்ட ஒரு மனித சமுதாயத்திற்கு, ஜனநாயக அடிப்படையில் ஒரு அரசியல் அமைப்பை, இவ்வளவு சீக்கிரத்தில் ஏற்படுத்திக்கொண்டது, உண்மையிலேயே நாம் எல்லோரும் பெருமைப்படக்கூடிய விஷயமாகும். இந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும், ஏன், அமெரிக்காவிலுங்கூட, இதுபோன்று காலனி ஆட்சியை ஒழித்துவிட்டு விடுதலை அடைந்த பிற்பாடு, ஒரு அரசியல் அமைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்குப் பல ஆண்டுகள் பிடித்தன. ஆனால் இந்தியாவோ, எத்தனையோ சங்கடங்கள், சுதேச சமஸ்தானங்களில் சிக்கல்கள் எல்லாம் இருந்தபோதிலும், மிகக் குறுகிய காலத்திற்குள்ளாகவே அரசியல் அமைப்புச் சட்டத்தை

ஏற்படுத்திக் கொண்டது. அது என்றைக்குமே நாம் எல்லோருமே பெருமைப்படக் கூடியது ஆகும்.

இந்த அரசியல் அமைப்பில் ஆங்காங்கு திருத்தங்கள் ஏற்பட்டாலுங்கூட, பொதுவாக நாட்டினுடைய அமைப்பை நிலை நிறுத்துவதற்கு ஸ்டில்ப்ரேம் (Steelframe) என்று சொல்வார்களே அதுபோல, இந்த அரசியல் அமைப்புச் சட்டம் அமைந்திருக்கிறது. அதுவும்கூட உலகமெல்லாம் போற்றக்கூடிய அளவில், ஜனநாயகக் கொள்கைகள் எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டு அமைந்தி ருக்கிறது. வேறு எந்த நாடும் கண்டிராத அளவில், வயது வந்த ஆண் பெண் எல்லோருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது. படித்தவர்களானாலும், படிக்காதவர்களானாலும், பணக்காரர் களானாலும், ஏழைகளானாலும் இந்த நாட்டில் பிறந்தவர்கள் 21 வயதை அடைந்தவுடன், ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் வோட்டு அளிக்க உரிமை உண்டு என்று அளிக்கப்பட்ட சுதந்திரம் நம்முடைய மிகப்பெரிய சாதனைகளில் மற்றொன்றாகும்.

வயது வந்தவர்களுக்கெல்லாம் வோட்டுரிமை என்றவுடன் அது எப்படிச் சரியான முறையில் நடக்கும் என்று பலர் சந்தேகப்பட்டார்கள். 1950-ம் வருஷத்தில் அரசியல் அமைப்பு அமுலுக்கு வந்தது. 1952-ல் முதல் தேர்தல் அதற்கு பின் நடந்திருக்கிறது. 1957-லே இரண்டாவது தேர்தலும் நடந்து விட்டது. அந்த இரண்டு தேர்தல்களிலும், மிக அமைதியான முறையில், தேர்தலை மிக நன்றாக நடத்திக் காட்டியிருக்கிறார்கள், நம் மக்கள். கோடிக்கணக்கான மக்கள் பங்கெடுத்துக் கொண்ட அந்தத் தேர்தல்கள் எவ்வளவு அமைதியான முறையில், நேர்மையான முறையில், வெகு சீக்கிரத்திலே நடந்திருக்கின்றன என்பதைப் பற்றி அப்போது இங்கே வந்திருந்த வெளிநாட்டு நிபுணர்களே பாராட்டியிருக்கிறார்கள். இந்த அடிப்படையில் மூன்றாவது தேர்தலும் நடக்கவிருக்கிறது.

இன்னொன்றையும் நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். ஜனநாயக அடிப்படையில் அரசியல் அமைப்பை வகுத்துக் கொண்டபோது, பெடரல் அமைப்பு முறையாக நம் நாட்டு நிர்வாகம் இருக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. நாடு முழுவதற்குமாக ஒரு அரசாங்கம், ஒரு மூலையில், இந்தப் பெரிய நாட்டுக்கு - இந்தப் பெரிய ஜனப்பகுதிக்கு, பல்வேறு பழக்க வழக்கங்கள், மொழிகள் கொண்ட ஜனங்களுக்கு - இருப்பது என்பது, யூனிடரி கவர்ன்மெண்ட் என்ற முறையில் அமைப்பது

சரியாக இருக்காது என்று முடிவுக்கு வந்து, இது பெடரல் அரசாங்கமாக - சமஷ்டி அரசாங்கமாக இருக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அந்த அந்தப் பகுதி மக்கள் அவரவர் களுடைய உரிமையைப் பெற்று, அவர்களே வளம் செய்து கொள்வதற்குப் பயன்படும் என்று இந்த முடிவு செய்யப்பட்டது.

இந்த அடிப்படையில், ஆரம்ப காலத்தில் ராஜ்யங்களை, ஏ, பி என்று பிரித்திருந்தோம். அதற்குப் பிற்பாடு இதே ராஜ்யங்களை மொழிவாரியாகப் பிரிக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப்பட்டது. மொழிவழி ராஜ்யங்களை அமைத்ததால் 'ஏ' ஸ்டேட், 'பி' ஸ்டேட் என்கிற நிலைமை எல்லாம் மாறி, எல்லா ராஜ்யங்களும் ஒரேவிதமான தகுதியைப் பெற்றிருக்கின்றன. இவையெல்லாம் ஒரே அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் இயங்கி வருகின்றன.

இதோடு மட்டுமல்ல. நீதி நிர்வாகத்திலும், கீழ் கோர்ட்டி லிருந்து ஹைக்கோர்ட், சுப்ரீம்கோர்ட் வரை, நீதி நிர்வாகத்தை, நிர்வாக அமைப்பில் இருந்து தனியாகப் பிரித்து இயங்கச் செய்திருக்கிறோம். இதன் காரணமாக நீதிஸ்தலங்கள் இன்றைய தினம் சுதந்தரமாக இயங்குகின்றன. நிர்வாகத்தில் ஏதாவது கோளாறு ஏற்பட்டாலும் நீதிஸ்தலங்களில் அதை நிவர்த்தி செய்து கொள்ள வசதி இருக்கிறது.

இவ்வளவு சீக்கிரமாக இவையாவற்றையும் அமைத்துக் கொண்டு நாம் செயல்படுவதற்கு நாமே பெருமை பட வேண்டும்.

மொழிப் பிரச்சினை

அதற்கு அடுத்தபடியாக மொழிப் பிரச்சினை. நம்முடைய தேசம் பல மொழிகள் பேசுகின்ற தேசம் என்பதை நாம் முதலில் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். பல மொழிகள் பேசுகின்ற மக்கள் அத்தனை பேரும் ஒரு நாட்டிலே சேர்ந்து இயங்கி வருகிறபோது, மொழிப்பிரச்சினை ஒரு சிக்கலாகவே இருந்து வருகிறது. அந்நியர்கள் ஆண்டபோது ஆங்கிலமொழியை ஆட்சிமொழியாக வைத்து ஆண்டுவிட்டுப் போய்விட்டார்கள். ஆனால் நாம் விடுதலை பெற்ற பிறகு, நமக்கென்று ஒரு பொதுமொழி வேண்டும் என்ற கருத்து பரவலாக இருந்தது. அந்தப் பொதுமொழி ஏற்படும் வரை - 1965ம் ஆண்டு வரை - ஆங்கிலமே நிர்வாக மொழியாக இருந்து விடட்டும் என்று, சமயோசிதமாக அரசியல் அமைப்பை வகுத்த போது, திரு. என். கோபால்சாமி ஐயங்கார் ஒரு திட்டத்தை வகுத்துக் கொடுத்தார்.

நாம் சுதந்திரம் பெற்ற பிறகு, பல்வேறு பகுதி மக்களும், பல மொழி பேசக்கூடிய மக்களும் ஓர் அரசின் கீழ் இருக்க வேண்டுமென்றால், எல்லோருக்கும் பொதுவான மொழி ஒன்று இருக்க வேண்டும் என்று எண்ணப்பட்டது. எல்லாவற்றையும் யோசித்த பொழுது அரசியல் அமைப்புச் சட்டத்தை வகுத்துக் கொண்டபோது, 1965-ம் ஆண்டு வரையில் ஆங்கிலமே நிர்வாக மொழியாக இருக்கட்டும் என்று தீர்மானித்தோம். அப்படி முடிவு எடுத்த காலத்தில் இருந்த சூழ்நிலையை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அப்போது இருந்த சூழ்நிலை, அந்நிய மொழிபோய் நம் நாட்டு மொழி ஒன்று நமக்குப் பொதுமொழியாக அமைய வேண்டும் என்பதுதான். இந்தக் கருத்து பரவலாக இருந்து வந்தது. அந்தச் சமயத்தில் சமயோசிதமாக, ஆங்கிலமே 1965-ம் ஆண்டு வரையில் நிர்வாக மொழியாக இருந்து வரட்டும் என்று முடிவு எடுத்ததற்கு முக்கியமானவராக இருந்தவர் தமிழ்நாட்டை சேர்ந்த திரு. என்.கோபாலசாமி ஐயங்கார் அவர்கள்தான். அது குறித்து நாம் பெருமைப்படுகிறோம்.

1965-ம் ஆண்டு வரையிலும் தொடர்ந்து ஆங்கிலமே நீடித்திருக்க வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. அவர்களுடைய முயற்சியின் காரணமாகத்தான். அவர்களுடைய சாமர்த்தியம், அறிவின் காரணமாகத்தான் இந்தத் திட்டம் அன்றைக்கு வகுக்கப்பட்டு, ஒருவரைத் தவிர, எல்லோராலும் அன்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

நிர்வாக மொழியாக 1965-ல் இந்தி வரவேண்டுமென்று முடிவு செய்யப்பட்ட அந்தக் காலத்திலேயே மற்ற மொழிகளைப் பற்றியும் ஆலோசித்து, ஒரு மொழி மட்டும் தேசிய மொழி என்று இல்லாது, எல்லா இந்திய மொழிகளும் தேசிய மொழிகள் என்ற முறையில், அவைகளில் முக்கியமான 14 மொழிகளை அரசியல் சட்டத்திலேயே தேசிய மொழிகள் என்று குறிப்பிட்டிருக்கிறோம். அப்போது அந்த முறையில் மொழிப்பிரச்னைக்குத் தீர்வு காண முற்பட்டோம்.

அதற்குப் பிற்பாடு, இதனை எந்த முறையில் அமுல்படுத்துவது என்பதற்காகவும், ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை, ஒரு மொழிக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. அவ்வாறு ஒரு மொழிக் கமிஷன் நியமிக்கப்பட்டு இதுபற்றிப் பரிசீலனை செய்யும் போது, 1965-க்குப் பிறகு, இந்தி ஆங்கிலத்திற்குப் பதிலாக நிர்வாக மொழியாக வரவேண்டுமென்று முடிவு எடுத்துச் சட்டத்திலேயே இடம் பெற்றிருந்த போதிலும் கூட, அதனால் பல சிக்கல்கள் ஏற்படும் என்ற காரணத்தால் மீண்டும் புனராலோசனை செய்து அதை மாற்றி, 1965-க்குப் பிற்பாடும் ஆங்கில மொழியும் தொடர்ந்து நிர்வாக மொழியாக இருந்துவரும் என்ற முடிவை எடுத்திருக்கிறோம்.

இன்றைக்கு நாட்டிலே இருக்கக்கூடிய நிலைமையை உத்தேசித்தே, அந்த முடிவை எடுப்பதற்கு எதிராக பல்வேறு வாதங்கள், கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டிருந்தபோதிலுங்கூட, தொடர்ந்து ஆங்கிலம் நீடிப்பது எத்தனை காலத்திற்கு அவசியமோ அத்தனை காலத்திற்கு தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற முடிவும் எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குச் சட்ட உருவம் கொடுக்க வேண்டும் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இன்னொரு முக்கியமான விஷயமும் அப்போது ஒப்புக் கொள்ளப்பட்டது. எந்த கால அளவிற்கு தொடர்ந்து ஆங்கிலம் இருக்க வேண்டுமென்பதைப் பற்றி யார் முடிவு செய்வது என்பது பற்றியும், எல்லோராலும் ஒப்புக்கொள்ளக்கூடிய கருத்து ஏற்பட்டிருக்கிறது. அது என்னவென்றால், இந்தக் கால அளவை நிர்ணயிக்கக்கூடியவர்கள் இந்தி பேசுகின்றவர்கள் அல்ல. இந்தி பேசாத மக்கள்தான். ஆங்கிலத்தை விட்டு விடலாமா? கூடாதா என்பது பற்றி முடிவு செய்யக் கூடிய பொறுப்பும் அதிகாரமும், இந்தி பேசாத மக்களிடந்தான் இருக்க வேண்டுமென்ற அந்தக் கருத்து, இன்றைக்கு அநேகமாக எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதில் ஒரு சில கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் கூட, அந்த முடிவு ஏற்றுக் கொள்ளப்பட்டி ருக்கிறது. ஆகவே, இந்த மொழிப் பிரச்சினை சம்பந்தப்பட்ட வரையில், இன்றையதினம் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டி ருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், பாட மொழியைப் பொறுத்த வரையில் பல்வேறு கருத்துக்கள் இருந்து வருகின்றன. (கல்லூரிகளில்) ஆங்கிலம் பாட மொழியாக இருக்கிறது. ஆங்கிலம் பாடமொழி யாக இருக்கும் வரையில் வேறு பிரச்சினை இல்லை. ஆங்கிலத்தைத் தவிர்த்து வேறுமொழியில் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டு மென்று சொல்லும்போது, எந்த மொழியைப் பயன்படுத்துவது என்பதில் பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றன. அதிலே, ஒரு கருத்து, அகில இந்தியாவிலும் பாட மொழியாக இருக்கும் ஆங்கிலத்தை எடுத்து விடும்போது, ஒரு மொழிதான் பாடமொழியாக இருக்க வேண்டும். அது இந்தி மொழியாகத்தான் இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. அந்தக் கருத்து சரியான கருத்தல்ல.

ஆங்கிலத்தை நீக்கிவிட்டு, நம் நாட்டு மொழியிலேயே பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது, அது பிராந்திய மொழியாகத்தான் இருக்க வேண்டுமென்ற கருத்து ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஒரு சிலர் வேறு கருத்துக்களைச் சொல்லிவந்த போதிலும், அந்தந்த பிராந்திய மொழியாகத்தான் இருக்கவேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டது.

நிர்வாக மொழி ஒருபுறமிருக்க, பாடமொழி ஒருபுறமிருக்க, ஒரு பகுதிக்கும் இன்னொரு பகுதிக்கும் இணைப்பாக ஒரு மொழி இருக்க வேண்டியது அவசியம். தற்போது அந்த மொழி ஆங்கிலமாக இருக்கிறது. அதற்கு மேல், ஒருவருக்கொருவர் பேசித் தெரிந்து கொள்ள, நம்முடைய நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குச் செல்லும்போது மொழிப் பெயர்ப்பாளர்களைக் கொண்டு பேசிக் கொள்ள வேண்டிய நிலைமையைப் போல் இல்லாமல், இணைப்பாக ஒரு மொழி இருக்க வேண்டுமென்றும், ஆங்கிலம் போகின்ற காலத்திலே, வேறு ஒரு பொது மொழி இருக்க வேண்டுமென்ற காரணத்தால் இணைப்பு மொழியாக இந்தி இருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்.

இந்த முறையில் நாம் இன்றைக்கு மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடிவு செய்திருக்கிறோம். இந்த முறையில் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய முறையில்தான் லிங்விஸ்டிக் ப்ராவின்ஸை - மொழிவாரி மாகாணங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. இதுதான் இந்தத் துறையில் நாம் அடைந்திருக்கும் கட்டம்.

இணைப்புக்கு ஒரு சக்தி

இதற்கு மேலாக, இன்றைக்கு நாட்டை இணைக்கக் கூடிய அளவுக்கு மாபெரும் சக்தியாக இருப்பது, திட்டமிட்ட அடிப்படையில் பொருளாதார வளர்ச்சியை அடைவது என்பதுதான். இன்றைக்கு நாடு முழுவதும் திட்டத்தைப் பற்றி விவாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் 'அதிகமான அளவுக்குத் திட்டம் வேண்டுமென்று கேட்கக்கூய நிலைமை எங்கும் ஏற்பட்ருக்கிறது. சட்டசபையில் மட்டுமல்ல, சிறுசிறு கிராமங்களில்கூட விவசாயிகள், தொழிலாளர்கள், பாமர மக்கள் திட்டத்தின் பல்வேறு அம்சங்களைப் பற்றிப் பேசவும், விவாதிக்கவுமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இன்றைக்கு நாட்டை ஒன்றுபடுத்தக் கூடிய பெரிய பொருளாதார சக்தியாகத் திட்டம் விளங்குகிறது என்பதை வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். திட்டமானது

பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுவதாக இருப்பினும், மற்றத் துறைகளிலுங்கூட நாட்டை ஒன்றுபடுத்தக் கூடிய பெரும் சக்தியாக இன்றைக்கு விளங்குகிறது என்பதை உணருகிறோம். அந்த அடிப்படையில்தான் இன்றைக்குத் திட்டமிட முன்வந்திருக்கிறோம்.

நேற்றுத் திட்டத்தைப் பற்றிப் பேசும்போது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். திட்டம் என்பது பட்டியல் போட்டுக் காட்டுவதல்ல, ஒரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என்று கூறினார்கள். அதை நான் மிகவும் வரவேற்கிறேன். திட்டம் என்பது அடிப்படையான நோக்கத்தை, லட்சியத்தை அடைவதற்காக அமைத்துக் கொண்ட பாதையாக இருக்க வேண்டும். இன்னொரு கருத்தையும் அவர்கள் சொன்னார்கள். அந்த மாதிரி நோக்கத்துடன் திட்டமிடும்போது அதிலே ஏற்றத்தாழ்வுகள் இருக்கக்கூடாது. தனி மனிதனுக் கிடையேயோ பிராந்தியங்களுக்கிடையேயோ ஏற்றத் தாழ்வுகள் இருக்கக்கூடாது என்று எடுத்துப் பேசினார்கள். அதையும் நான் ஒப்புக் கொள்கிறேன்.

இதுதான் திட்டத்தினுடைய நோக்கம் என்று திட்டக் கமிஷன்கூட ஒப்புக் கொண்டிருக்கிறது. மத்திய சர்க்கார் ஒப்புக் கொண்டிருக்கிறது. திட்டத்தைப் பற்றி நம் சபையிலே வைக்கப் பட்டிருக்கும் அறிக்கையிலும் இந்தப் பொது நோக்கு ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு ஏற்றத்தாழ்வுகளை நீக்கவேண்டுமென்று சொல்லும்போது தனி மனிதர்களுக்கிடையே இருக்கக்கூடிய ஏற்றத் தாழ்வுகளை நீக்க வேண்டுமென்றால் பிராந்தியங்களுக்கிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளை நீக்காமல் முடியாது. அந்த முறையில்தான் திட்டம் வகுக்கப் பட்டிருக்கிறது.

எப்படி நாம் மூன்றாவது தேர்தலுக்குத் தயாராக இருக்கிறோமோ, அதே போன்று பொருளாதாரத் திட்டத்திலும் இரண்டு திட்டங்களை நிறைவேற்றிவிட்டு, ஓரளவு வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டு, இன்றைக்கு மூன்றாவது திட்டத்தை உருவாக்கி அதை நிறைவேற்ற முன் வந்திருக்கிறோம். இந்தத் திட்டமானது நாட்டை இணைப்பதில் பெரியதொரு சக்தியாக அமைந்து நாட்டை ஒன்றுபடுத்தக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக அரங்கில்

அதோடு மட்டுமல்ல - இன்றைக்கு ஒரு நாடு என்று சொல்லும்போது, அந்த நாடு தனித்து வாழமுடியாது. இன்றைக்கு உலக அரங்கில் ஏற்படும் நிகழ்ச்சிகள் காரணமாக எந்த நாடும் தனித்து இயங்க முடியாமல் உலக அரங்கில் பங்கு கொள்ள கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நாம் விரும்பினாலும் கூட இன்றைக்கு தனித்து வாழ முடியாது. அது இருக்கட்டும். இன்றைக்குப் பலம் பொருந்திய - ரொம்பவும் முன்னேறியிருக்கக்கூடிய - எந்த நாடுங்கூட, அமெரிக்காவை எடுத்துக் கொண்டாலும், ரஷ்யாவை எடுத்துக் கொண்டாலும், அவைகூட - எவ்வளவு பலம் இருந்தாலும், பொருளாதாரச் சக்தி இருந்தாலும் - தனித்து வாழ முடியாது. இன்றைக்கு எல்லா நாடுகளும் உலக அரங்கில் சேர்ந்து இயங்கியாக வேண்டியிருக்கிறது.

அந்த முறையிலே, உலக அரங்கிலே 14 ஆண்டுகளுக்குள், சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு நாம் சாதித்திருப்பது என்ன? நமது வெளிநாட்டுக் கொள்கை எந்த முறையில் அமைந்திருக்கிறது என்று பார்க்கும்போது, இன்றைக்கு இதைப் பற்றி கொஞ்ச காலத்திற்கு முன் நமக்குள் கருத்துவேற்றுமை இருந்தாலும் - பொதுவாக வெளிநாட்டுக் கொள்கை எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய முறையில் அமைந்திருப்பது மட்டுமல்ல, நல்ல முறையில் வெற்றி பெற்று வருகிறது.

சமீபத்தில் நமது நாட்டுப் பிரதமர், பெல்கிரேட் சென்றிருந்த போது, ரஷ்யா சென்றிருந்தபோது, இன்று அமெரிக்கா சென்றிருக்கும்போது, இன்றைக்கு எவ்வளவு உன்னதமான வெற்றியடைந்திருக்கிறது. நம் நாட்டின் பெருமை உலக அரங்கில் எந்த அளவு உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். இதற்குத் தனிப்பட்ட முறையில் நமது பிரதமர் பெரும் பொறுப்பு என்று இருந்தாலும், இது தனிப்பட்டவர் என்ற முறையில் ஏற்பட்ட சிறப்பு என்று மட்டும் எடுத்துக் கொள்ளக்கூடாது. இதற்கு முக்கிய காரணம் அவர்கள் உருவாக்கிய, பொதுவாக இருக்கக் கூடிய வெளிநாட்டுக் கொள்கையேயாகும்.

உலக அரங்கில் ஏற்பட்ட சிக்கல்களுக்குத் தீர்வு காணவும், நாடுகளுக்குள் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் நம் வெளிநாட்டுக் கொள்கை உதவியது என்று பார்க்கும்போது இன்றைக்கு உள்நாட்டிலே நாம் எடுத்த பல்வேறு முயற்சிகள், ஆற்றிய பல்வேறு சாதனைகள் ஒருபுறம் இருக்க, உலக அரங்கிலேயும் இன்றைக்கு இந்தியா என்று சொல்லக்கூடிய ஒரு நாடு, ஒரு ஒன்றுபட்ட

சக்தியாக, ஒன்றுபட்ட சமுதாயமாக இருந்து, அதனுடைய வெளிநாட்டுக் கொள்கை அமைந்து, உலக அரங்கில் நல்லதொரு விளைவைக் கொண்டுவர இயங்கிவருகிறது என்று பார்க்கிறோம். இவைகளெல்லாம் நாம் சாதித்த சாதனைகளின் அடிப்படையாக இருக்கக்கூடியவை.

அடிப்படைக் கருத்துக்களில் ஏதாவது கோளாறுகள் ஏற்பட்டனவா, தவறுகள் ஏற்பட்டு விட்டனவா, சிக்கல்கள் ஏற்பட்டனவா என்று பரிசீலனை செய்து பார்க்கும்போது, அடிப்படையான சாதனைகளால், அடிப்படையாக ஏற்படுத்தி யிருக்கக்கூடிய அமைப்புகளால், பல நிபுணர்கள் உலகத்தின் பல பகுதியில் இருப்பவர்கள் இதை அலசி ஆராய்ந்து பார்த்திருக் கிறார்கள். இதில் எந்தவிதமான குறைபாடும் இல்லை. இதில் எந்தவிதமான கோளாறுகளும் இல்லை என்றுதான் அவர்களும் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

புதிய பிரச்சினைகள்

இவ்வாறு அடிப்படையாக, நாம் தேசிய ஒற்றுமையை அதிகப்படுத்தக்கூடிய முறையிலே சாதனைகளைச் சாதித்திருந் தாலும், பல்வேறு அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தாலும், சில சக்திகள், ஆங்காங்கு நாட்டிலே இருக்கக் கூடிய நல்ல சூழ்நிலையைப் பாதிக்கக்கூடிய முறையிலே இயங்கி வந்திருக் கின்றன என்பதை ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்.

நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் காரணமாகவே இந்த சக்திகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பழைய காலம் மாதிரி அடிமைகளாகவே இருந்திருந்தால் இந்தப் பிரச்சினைகள் தோன்றியிருக்காது. சுதந்திரம் பெற்ற பிறகு பல காரியங்களைச் சாதித்ததன் காரணமாக, எடுத்த முயற்சிகளின் காரணமாக, அதிலிருந்து பல புதிய பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன என்று நாம் பார்க்கிறோம். அது வளர்ச்சியின் இயற்கை, வளர்ச்சியின் தத்துவம், வளர்ச்சியின் இயற்கை விதி என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

வளர்ச்சி காரணமாகவே பல பிரச்சினைகள் பொருளாதார மானாலும் சரி, தனி மனிதன் ஆனாலும் சரி தோன்றுகின்றன. பிரச்சினை இல்லாமலிருந்தால் வளர்ச்சி இருக்காது. பிரச்சினை இல்லாமல் வளர்ச்சி ஏற்படவேண்டுமென்று சொல்லுவது இயற்கைக்கு விரோதமானது. வளர்ச்சி என்றால் மாறுதல் ஏற்பட்டுத்தான் ஆகவேண்டும். அதற்கான பிரச்சினைகளும்

ஏற்பட்டுத்தான் ஆகும். பிரச்சினைகள் இல்லாது மாற்றங்கள் - முன்னேற்றங்கள் - ஏற்படவேண்டுமென்று சொன்னால், அது முடியாது.

ஆகவே நாம் எடுத்த முயற்சிகள் காரணமாகவே, நாம் சாதித்த சாதனைகள் காரணமாகவே, ஆங்காங்கு சில புதிய பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன. உதாரணமாக இன்றைக்கு மொழிப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளுங்கள். ஜனநாயக அடிப்படையில் நம் அரசாங்கம் நடைபெற வேண்டுமென்று சொன்னால் மொழி அடிப்படையில் நம் ராஜ்யங்களை மாற்றி அமைக்க வேண்டுமென்று நாம் முயற்சி செய்தோம். இது தவறான கருத்து என்று யாரும் சொல்ல முடியாது. இது பல ஆண்டுகளுக்கு முன் மகாத்மாஜி அவர்கள் வற்புறுத்தியது. இதிலே தனித் தனி மொழி ராஜ்யங்கள் அமைய வேண்டுமென்பதில் ஒரு சில கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இது முழுவதும் தவறு என்று யாரும் சொல்ல முடியாது, அதுவும் மொழிப் பிரச்சினை தீர எடுத்துக் கொள்ளும் நடவடிக்கை என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடியது. இந்தக் காரணத்தினால் இன்றைய தினம் பல பிரச்சினைகள் வந்திருக்கின்றன. அவை என்னென்ன பிரச்சினைகள்?

இப்போது நம் சென்னை ராஜ்யத்தை எடுத்துக் கொள்ளுங்கள். முன்பு ஆந்திரா பகுதி சேர்ந்திருந்தது. கன்னடப் பகுதி சேர்ந்திருந்தது. மலையாளப் பகுதி சேர்ந்திருந்தது. நம் தமிழ்நாடும் சேர்ந்திருந்தது. இது நான்கு மொழி ராஜ்யமாக அமைந்திருந்தது. அப்போது நான்கு மொழிகள் பேசுகிறவர்களுக்கும் பொதுவான ராஜ்யமாக அமைந்திருந்தது. இன்றைக்கு தமிழ்நாடு என்று பிரிந்தவுடனே, இங்கே கன்னடம் பேசுகிறவர்கள் இல்லாமல் போய்விடவில்லை - இருக்கிறார்கள். கன்னடம் பேசுகிறவர்கள் சிறுபான்மையாக இருக்கக்கூடிய நாடாகிவிட்டது, தமிழ்நாடு. மலையாளம் பேசுகிறவர்கள் சிறுபான்மையாக இருக்கக் கூடிய நாடு, தமிழ்நாடு. தெலுங்கு பேசுகிறவர்கள் சிறுபான்மையாக இருக்கக்கூடிய நாடு, தமிழ்நாடு. மொழிவாரி ராஜ்யம் அமைந்த காரணத்தினால் சிறுபான்மையினராகி விட்டார்கள் தெலுங்கு பேசக்கூடியவர்கள். சிறுபான்மையினராகி விட்டார்கள் கன்னடம் பேசக்கூடியவர்கள். சிறுபான்மையினராகி விட்டார்கள் மலையாளம் பேசக் கூடியவர்கள்.

ஆக, இந்தப் பிரச்சினை இங்கு வந்ததற்குக் காரணமே மொழிவாரி ராஜ்ய அமைப்புதான். இது இல்லாமலிருந்தால், இவர்களெல்லோரும் இங்கே தங்கள் மொழியும் ராஜ்யத்தின்

பொது மொழிகளுள் ஒன்று என்ற முறையிலே முன்பு இருந்த மாதிரியே இருந்து கொண்டிருப்பார்கள். இந்தப் பிரச்சினை ஏற்படுவதற்கு இது காரணமாக இருக்கிறது. அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு ஆங்காங்கு எல்லை வகுக்க வேண்டுமென்பதில் தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன. சில இடங்களில் அவைகள் இன்னும் தீராமல் கூட இருக்கின்றன. எல்லைக் கோடு எப்படிப் போட வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருக் கின்றன. இதனால் சர்ச்சைகள் ஏற்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல் மொழிப் பிரச்சினை காரணமாக சிறுபான்மை மொழியினர் இருப்பதால் அவர்களுடைய உரிமைகள் என்ன, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய தெலுங்கர்களின் அதிகாரங்கள் என்ன, உரிமை என்ன, அதேமாதிரி மலையாளிகள், கன்னடக் காரர்களின் உரிமைகள் என்னென்ன என்ற பிரச்சினை ஏற்பட்டி ருக்கிறது.

அஸ்ஸாம் நாட்டை இன்றைக்கு எடுத்துக் கொண்டால் அங்கே இருக்கக்கூடிய வங்காள மொழி பேசுகின்றவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது. அஸ்ஸாம் மொழி பேசுகின்றவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது, இரண்டு பேர்களுக்கும் மத்தியில் உள்ள தொடர்பு என்ன என்ற முறையில் இம்மாதிரி சிக்கல்கள் ஏற்படுகின்றன.

மொழிவாரி மாகாணங்கள் ஏற்பட்ட காரணத்தினால் தம் தம் மொழியின் பேரில் பற்று அதிகமாக ஏற்படுகின்ற நிலைமையும் ஏற்பட்டது. அதோடு, அது பற்றோடு இருந்துவிடாமல் வெறியாகவும் சில இடங்களில் மாறியது. மொழி வெறி காரணமாக கலவரங்கள் ஏற்படக்கூடிய நிலைமையும் ஏற்பட்டது. மற்ற இடங்களில் சிறுசிறு கலவரங்கள் ஏற்பட்டுக் கொண்டு இருந்தாலும், சமீபத்தில் அஸ்ஸாமில் மொழி அடிப்படையில் சில கலவரங்கள், மொழிப் பிரச்சினை மிகவும் சிக்கலான பிரச்னை என்று தோன்றக்கூடிய நிலையில் அங்கு ஏற்பட்டது மாத்திர மல்லாமல், பெரிய கலவரமாக ஏற்பட்டு, அதோடு ஆங்காங்கு குழப்பமான நிலைமையும் சிறு கலவரங்களும் ஏற்பட்டு, மொழிப் பிரச்சினை நாட்டுப் பிரச்சினையாகத் தென்படக் கூடியதாகி விட்டது.

பிளவுச் சக்திகள்

அதே மாதிரி இன்றைக்கு அதிகாரத்தை மக்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறோம் - 21 வயது வந்த ஆண்களிடத்திலும்

பெண்களிடத்திலும் ஒப்படைத்திருக்கிறோம். 21 வயது வந்த ஆண்கள், பெண்கள் எல்லோருக்கும் ஓட்டு உரிமை உண்டு என்று சொல்லும்போது அவர்களுடைய பெருவாரியான ஆதரவைப் பெற்றுத்தான் சட்டசபைக்கு வர முடியும், யார் சட்டசபையில் பெரும்பான்மையினராக இருக்கிறார்களோ அவர்கள்தான் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முடியும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம்.

எல்லோருக்கும் வாக்குரிமை கொடுத்தவுடனே அவர்களுடைய ஆதரவை எப்படிப் பெறுவது என்ற முறையில் பல்வேறு சிக்கல்கள் கிளம்ப ஆரம்பித்தன. ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று, அந்தப் பணியில் நாம் இப்போது ஈடுபட்டிருக்கிறோம். ஜாதியை ஒழிக்க வேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறோம். இருந்தாலும் எல்லோருக்கும் உரிமை - வாக்குரிமை - கொடுத்ததன் காரணமாக, எப்படிச் சட்டசபைக்கு வருவது, எப்படி அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்ற அடிப்படையில் புதிய சிக்கல்கள் ஏற்பட்டு, ஜாதி அடிப்படையில் ஜெயிக்க முடியுமா என்று ஒரு சிலர் நினைப்பது இயற்கைக்கு விரோதம் என்று சொல்ல முடியாது - ஆனால் தவறு என்று சொல்ல விரும்புகிறேன்.

அந்த அடிப்படையில் ஆரம்பித்து, ஜாதியை ஒழிப்பதற்குப் பதில், ஜனநாயக அடிப்படையில் எல்லோருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் இயங்க ஆரம்பித்தபோது, ஜாதி வேறு ரூபத்தில், அரசியல் ரூபத்தில், தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறது. அதற்கு ஜனநாயகத்தைக் குறை கூற முடியுமா - எல்லோருக்கும் வாக்குரிமை கொடுத்ததுதான் தவறு என்று சொல்ல முடியுமா? இப்போது போகக்கூடிய போக்கைத் தடுத்து அதைத் தவிர்க்க வேண்டுமென்று சொல்லுவதுதான் சரியாகும்.

அதோடு மட்டுமல்ல, மத அடிப்படையிலேயும் இன்றைக்குப் பிளவுச் சக்திகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்கு முஸ்லீம்கள் பிரிந்து போய் பாகிஸ்தான் அமைத்துக் கொண்ட போதிலுங்கூட, இன்னும் பல பகுதிகளிலே அவர்கள் வாழ்கிறார்கள். சில பகுதிகளிலே பெரும்பான்மையினராகவும் வாழ்கிறார்கள். ஜாதியின் அடிப்படையிலே, மதத்தின் அடிப்படையிலே ஓட்டு கேட்கப் படுகின்றது. அது சரியல்ல. இப்படி ஓட்டுக் கேட்கும்போது, சமூகத்திலே கலவரங்கள் ஏற்படுகின்றன. இதை விளக்கக்கூடிய முறையிலே ஜபல்பூரிலே இந்து - முஸ்லீம் கலவரங்கள் ஏற்பட்டன. இதைப்போல் இன்னும் வேறு சில இடங்களிலேயும் கலவரங்கள் ஏற்பட்டன.

ஆகவே, இன்றைக்கு மொழிப் பிரச்சினை ஜாதிப் பிரச்சினை, மதப்பிரச்சினை ஆகியவைகளின் அடிப்படையிலே ஆங்காங்கு கலவரங்கள் நிகழ்ந்து கொண்டு வருவதை நாம் பார்க்கிறோம். ஆனால், இதிலே நாம் எடுத்துக் கொண்ட முயற்சி தவறல்ல. அதன் காரணமாகப் பல புதிய போக்குகள், சக்திகள் கிளம்பியிருக்கின்றன. இத்தகைய சக்திகள் கிளம்புவது இயற்கையே. இந்தத் தீய சக்திகளை அடக்குவது எப்படி என்பதுதான், ஒழிப்பது எப்படி என்பதுதான் இன்றைக்கு நம் முன்னாலுள்ள பெரும் பிரச்சினை. முக்கியமாகத் தேர்தல் காலங்களிலேதான் இந்தத் தீய சக்திகள் அதிகமாகத் தலை தூக்குகின்றன. அப்படித் தேர்தல் காலங்களிலே ஏற்படக்கூடியது சரியான போக்கல்ல. இந்தப் போக்கு நாட்டைச் சீர்குலைக்கக் கூடியதே.

இந்த முறையிலே நாட்டில் சில கிளர்ச்சிகள் ஏற்பட்ட போதிலும், அவை சமுதாயத்தை எப்படிப் பாதிக்கின்றது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். இந்தச் சமுதாயம் எப்படி அமைகின்றது என்பதைப் பார்க்க வேண்டும். மக்கள் எப்படியோ, அப்படித்தான் சமுதாயம் உருவாகின்றனது. இந்த சமுதாயத்தை வருங்காலத்திலே அமைக்கக் கூடியவர்கள் நம் நாட்டிலே உள்ள குழந்தைகள், இளைஞர்கள் தான். இந்த இளைஞர்களை நாம் எப்படி உருவாக்குகின்றோமோ, அந்த வகையிலேதான் சமுதாயம் அமையப் போகின்றது. ஆனால் இப்போதுள்ள சமுதாயத்திலே இம்மாதிரியான பல நிகழ்ச்சிகள் அவர்களிடையேயும் பிரதிபலிக்க ஆரம்பித்துவிட்டது.

கல்வி நிலையங்களிலேயும் இந்த மொழிச் சண்டை, ஜாதிச் சண்டை, மதச் சண்டை ஆகியவை தலைதூக்க ஆரம்பித்திருக்கின்றன. இதன் காரணமாக நம்முடைய தமிழ்நாட்டிலே பெரிய நிகழ்ச்சிகள், பெரிய சம்பவங்கள் நடைபெறா விட்டாலும் வடக்கிலே பல சர்வகலாசாலைகள் மூடப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதே போல் இன்னும் சில மாகாணங்களிலேயும் இவ்வித நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. அதைப் பார்த்த இங்கும் ஒரு சில இடங்களிலே வேலை நிறுத்தம் போன்றவைகள் செய்யப் பட்டன.

இந்த விதத்திலே இங்கும் சமுதாயத்திலே பிற்போக்குச் சக்திகள், பிற்போக்கு நிகழ்ச்சிகள் தலைகாட்ட ஆரம்பித்திருக்கின்றன. வளர்கின்ற சமுதாயத்திலேயே இவ்வித கிளர்ச்சிகள் ஏற்படுமானால், தொடர்ந்து சமுதாயம் வளரும் போதும் இவ்வித மனப்பான்மைதான் வளர்ந்துகொண்டு போகும்.

கல்விப் பிரச்சினை மூலந்தான் நாட்டைச் சீர்படுத்த முடியும். அதற்காகத்தான் இதிலே முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்று நாம் நினைக்கிறோம். இந்த நிலையிலேயே எப்படி இதற்குத் தீர்வு காண்பது என்பதுதான் இப்போது பிரச்சினையாக இருந்து வருகிறது.

ஆகவே, அஸ்திவாரத்தைப் பலப்படுத்த வேண்டுமானால், அடிப்படையிலேயே இவ்வித பிளவுச் சக்திகளை வளர வொட்டாமல் தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்காகத்தான் இந்த மகாநாடு அவ்வப்போது கூட்டப்படுகின்றது. இதற்கு எப்படித் தீர்வு காணவேண்டுமென்பதுதான் முக்கியமாக நாம் யோசிக்க வேண்டியிருக்கிறது.

ஆக்கச்சக்தியும் அழிவுச்சக்தியும்

முதலிலே எடுத்துக் கொண்டால், ராஜயங்களிடையே இன்றைக்குப் பலத்த போட்டி இருந்து வருகிறது. ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய பிராந்தியங்களை, ராஜ்யங்களைப் பற்றித்தான் நினைக்கிறார்கள். அப்படி நினைக்கும்போது, அதன் காரணமாகப் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன.

இங்கு தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலே பார்ப்போ மானால், தமிழ்நாட்டிலே நான் மந்திரியாக இருக்கிறேன். என்னுடன் நீங்களும் இந்தச் சபையில் அங்கத்தினர்களாக இருந்து நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து பல அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்தித் தமிழ்நாட்டை நாம் வளப்படுத்த வேண்டுமென்று நினைக்கிறோம். அப்படி நினைப்பதிலே தவறு ஒன்றுமில்லை. அப்படி நினைக்காமல் இருந்தால்தான் தவறு. ஆனால் அவ்வாறு நினைக்கின்ற காரணத்தினாலே, மற்ற ராஜ்யங்களின் மேல் வெறுப்போ, துவேஷ மனப்பான்மையோ ஏற்படக்கூடாது. அப்படி ஏற்பட்டால், அது தான் சிக்கல் ஏற்படக்கூடிய நிலைமையை உண்டாக்குகின்றது. அப்படி ஒரு மனப்பான்மை ஏற்பட்டு இயங்குமானால், அப்போதுதான் நம் நாட்டின், நம் ராஜ்யத்தின் பேரில் நமக்கு இருக்கக்கூடிய ஆக்கச் சக்தியே, அழிவுச் சக்தியாகவும் ஆகிறது.

நாம் அப்படி நினைக்கும்போது, மற்றவர்களும் அப்படி நினைக்காமலா இருப்பார்கள்? அப்படி நினைக்கும்போது தான், இரண்டுக்கும் மோதல் ஏற்பட்டு, அதன் காரணமாக நாட்டை முன்னேற்ற வேண்டுமென்கிற எண்ணமே, அழிவுச் சக்தியாகவும் ஆகிவிடுகின்றது.

இதைப் போக்குவது எப்படி என்று பார்க்கும்போது, பலபேர் பலவிதமான பரிகாரங்களைச் சொல்கிறார்கள், அதிலே ஒரு சிலர், இப்படிப் பல பகுதிகளாக இருப்பதுதான் இதற்கெல்லாம் காரணம். ஆகவே, சம்ஷ்டி அடிப்படையில் இல்லாது இந்தியா பூராவுக்கும் ஒரே அரசாக ஏற்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். அதாவது டெல்லியிலே மட்டும் ஒரு அரசாங்கம் நடந்துவந்தால் போதும் என்று சொல்கிறார்கள்.

இன்றைக்கு நான் சொல்ல விரும்புகிறேன். உலகத்திலே நம்முடனேயே, நம் காலத்திலேயே பல நாடுகள் சுதந்திரம் பெற்று இன்றைக்கு இயங்கிக் கொண்டு வருகின்றன. அங்கெல்லாம் சமஷ்டி அடிப்படையிலே நடந்து கொண்டுவரும் அரசாங்கங்களையும் பாருங்கள். நம் நாட்டையும் பாருங்கள். நம் நாட்டிலே இந்தியாவானது, பல ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் தனியாக சட்டசபை ஏற்படுத்தி, தனித்தனியாக நிர்வாகம் ஏற்படுத்தி, பரவலான முறையிலே ஆட்சி நடைபெற்று வருகிறது. இப்படிப் பரவலான முறையிலே ஆட்சி நடக்கின்ற காரணத்தினாலேதான், நம்முடைய நாட்டிலே ஒரு உறுதியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எங்கெல்லாம் இது தேவையில்லை என்று எண்ணப்பட்டு, ஒன்றுபட்ட அரசாங்கம் அமைக்கப் பட்டனவோ, அங்கெங்கெல்லாம் இன்றைக்கு ஒரு குழப்பமான நிலைமை ஏற்பட்டுக் கொண்டு இருப்பதைக் காண்கிறோம்.

உதாரணமாக, இந்தோனேஷியாவை எடுத்துக் கொண்டா லும் சரி, கிழக்கு நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவைகளை எடுத்துக் கொண்டாலும், அங்கெல்லாம் இப்போது குழப்பமான நிலைமைதான் இருந்து கொண்டு வருகிறது. அதோடு மட்டுமல்ல, இன்றைக்குப் பாகிஸ்தானை எடுத்துக் கொண்டால், முதலிலே நம்மைப் பின்பற்றுவதாக இருந்தும், பின்னாலே ஒரு ராஜ்யமாக ஏற்படும் நிலைமை ஏற்பட்டதால், இப்போது என்ன ஆயிற்று? இப்போது முன்பிருந்த அரசாங்கம் மாறி, ராணுவ சர்வாதிகார ஆட்சியே அங்கு ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, இன்றைக்கு ஜனநாயக அடிப்படையிலே வாழ வேண்டுமானால், தொடர்ந்து அரசாங்கம் நடக்க வேண்டுமானால், அந்தந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய, அந்தந்தப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய சூழ்நிலைக்குத் தகுந்தபடி ராஜ்யங்களைப் பிரித்து அமைக்க வேண்டுமே தவிர, ஒன்றுபட்ட அரசாங்க (Unitary State) முறையில் அமைப்பது சரியான முறையல்ல என்பதை உலக நிகழ்ச்சிகள் நிரூபித்துக் காட்டியிருக்கின்றன.

இன்றைக்கு காங்கோவை எடுத்துக் கொண்டால், அங்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சிக்கலுக்கு ஓர் தீர்வு காண முடியாமல், ஒரு பெரும் போரே நடந்து கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்று பார்க்கும்போது, ஒன்றுபட்ட அடிப்படையில் ராஜ்யத்தை அமைக்க வேண்டுமென்பதேயாகும்.

அப்படியில்லாமல் பரந்த ஒரு நாடு, ஒரே ராஜ்யமாகத்தான் இயங்க வேண்டுமென்று, அந்த நோக்கத்தோடு இயங்கி வருமானால், அந்நாடு கண்டிப்பாகப் பல கஷ்டங்களுக்கு உள்ளாக நேரிடும் என்று திட்டவட்டமாக நாம் சொல்லலாம். பரந்த ஒரு நாட்டை, ஒன்றுபட்ட அரசாங்கமாக, ஒரே ராஜ்யத்தின்கீழ் கொண்டுவந்தால் நல்லது என்று சொல்லக் கூடியவர்கள் நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைக்க வேண்டுமென்று சொல்லக்கூடியவர்களாகவே இருப்பார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நல்லவேளையாக அந்தக் கொள்கையை உடையவர்கள் நம் நாட்டிலே சிறுபான்மையினராகத்தான், சிறு சக்தியாகத்தான் விளங்கி வருகிறார்கள். இது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் இதற்குத் தீர்வுகாண நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று சொல்லக் கூடியவர்களும் இருக்கிறார்கள். அதாவது மூன்று நான்கு ராஜ்யங்களைச் சேர்த்து ஒரு நாடாக பிரிக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். மற்றொரு சாரார், அப்படிக் கூடாது, தமிழ்நாடு மட்டும் தனியாகப் பிரிய வேண்டுமென்று சொல்கிறார்கள். எப்படி நாடு முழுவதும் ஒன்றாக ஒரு அரசின் கீழ் இருந்தால், அதனால் நாட்டிலே சீர்குலைவுகள் எல்லாம் ஏற்படுமோ, அதுபோலவே இப்படித் தனித்தனியாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லுபவைகளும் காலப் போக்கில் அழிந்துவிடும்.

தீர்வுக்கு வழி

அதிருஷ்டவசமாக இந்தச் சக்திகள், என்னுடைய கருத்திலே குறைவான சக்திகள். ஒரு சிலர் மட்டும் தான் இவ்வாறு பேசுகிறார்கள். இவ்வாறு நினைக்கிறார்கள். எப்படி ஒரே அரசின் கீழ் வருவது முடியாத காரியமோ அதே போல் நாட்டைப் பிரிப்பது என்பதும் முடியாத காரியம் என்பதை உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த இரண்டு சக்திகளுக்கும் மத்தியிலே சமஷ்டி அடிப்படையிலே அந்தந்தப் பிரதேசங்களுக்கு உரிமைகள் கொடுத்து, அந்தந்த பிரதேசங்கள் வளர்வதற்கு என்ன செய்ய

வேண்டுமென்ற அடிப்படையில் அதைப் பற்றி ஏதாவது பரிசீலனை செய்ய வேண்டுமென்றாலும், மத்திய அரசாங்க அமைப்பில், ராஜ்ய அரசாங்க அமைப்பில் அவைகளுக்குள்ளே உள்ள தொடர்புகளில் காலப்போக்கிலே மாறுதல் ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று சொன்னாலும் அது பரிசீலிக்கத்தக்க விஷயம்.

ஆனால், நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் முறையிலே ராஜ்யங்களையே எடுத்துவிட வேண்டுமென்று சொன்னாலும் சரி, அல்லது நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று சொன்னாலும் சரி, அது ஒப்புக் கொள்ளக்கூடியது அல்ல. நாடும் அதை ஒப்புக் கொள்ளாது என்ற கருத்தை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

இந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது, இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்கும் மத்தியிலே தீர்வு காணும்பொழுது, சமஷ்டி அடிப்படையிலே ஒன்றுபட்ட இந்தியாவாகத்தான் தொடர்ந்து நடத்திச் செல்ல முடியும்.

அதேமாதிரிதான் மொழிப் பிரச்சினையும், ஒரு பக்கம் இந்தி எல்லாவற்றிற்கும் வந்துவிட வேண்டுமென்ற வெறி, இன்னொரு பக்கம் இந்தி இந்தப் பக்கமே வரக்கூடாது என்ற எதிர்ப்பு வெறி. இந்த இரண்டுக்கும் மத்தியிலே நம்முடைய மொழி வளரக்கூடிய முறையிலே, உரிமைகள் பாதிக்கப்படாத வகையிலே, உரிமைகள் பாதுகாக்கப்படக் கூடிய முறையிலே, நாட்டிற்கு ஒரு பொது மொழியை ஏற்படுத்திக் கொள்ள முடியுமா, உலகத்தில் வேறு இடங்களில் இந்த மாதிரி நடந்திருக்கிறதா என்பதைப் பார்த்து நாம் அந்த முறையில் தீர்வு காண வேண்டும்.

இதிலும் இரண்டு கோடியிலும் இல்லாமல் மத்தியில் இருந்து சுமுகமான முறையில் தீர்வுகாணமுடியும். நிர்வாக மொழியிலே ஏற்பட்டிருக்கக்கூடிய ஒன்றுபட்ட கருத்து அதே மாதிரி பாட மொழியிலே நாம் எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஒன்றுபட்ட கருத்து, அதே முறையில் என்னென்ன மொழி படிக்க வேண்டும் என்பதிலும் எல்லோரும் உட்கார்ந்து பரிசிலனை செய்து மும்மொழிக் கொள்கையை ஒப்புக் கொண்டிருக்கிறோம்.

மொழிப் பிரச்சினையின் காரணமாக நாம் ஒன்றுபட்டு இருக்க முடியாது, அல்லது ஒரு மொழிதான் எல்லோர் பேரிலும் திணிக்கப்பட வேண்டும் என்ற முறையிலே நினைப்பது தவறு. நாடு ஒன்றாக இருக்கக்கூடிய முறையில் எப்படி ராஜ்யங்களை ஏற்படுத்தி, அவைகளின் வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறோமோ, அதேபோல வெவ்வேறு மொழிகள் வளருவதற்கு வாய்ப்புக் கொடுத்து அந்தஅந்த மொழிகள் அவைகளுக்குண்டான

உரிமைகளை ஆங்காங்கு பெற முடியும் என்ற முறையில் மொழிப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாட்டின் ஒற்றுமையைச் சிதறடிக்காமல், கலவரம் குழப்பம் ஏற்படாமல் அதற்கும் தீர்வு காண முடியும்.

இவ்வாறு பல்வேறு விஷயங்களிலே தீர்வு காண முடியும் என்று சொல்லும்பொழுது, திட்டத்தின் மூலம் பிரதேச ஏற்றத்தாழ்வுகளை நீக்க வேண்டும் என்று நினைக்கிறோம். தனி மனிதர்களுக்குள்ளே இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வுகளை நீக்க வேண்டும் என்று எண்ணுகிறோம். ஆனால் இவைகளெல்லாம் உடனடியாக மந்திர சக்தியால் அல்லது மாயாஜாலத்தால், ஒரே நாளில், ஒரே வருஷத்தில் ஏற்படக்கூடியவை அல்ல. தொடர்ந்து திட்டம் போட்டு அந்த லட்சியப்பாதையில் செல்லக்கூடியவர்களாக இருக்கிறோம்.

இப்பொழுது அதற்கு உடனடியாக எடுக்கக்கூடிய பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். அதுவும் பல அடிப்படையிலே எடுத்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய நாட்டில் தொழில்கள் வளரவேண்டும். அந்நிய நாடுகளை என்றைக்கும் எதிர்பார்த்து இருக்கக்கூடாது. நம்முடைய சக்தியைப் பெருக்கியாக வேண்டும். அதற்கு வசதியாக இருப்பதற்குக் கனரகத் தொழில்கள் ஏற்படுத்தப்படவேண்டும் என்று நடவடிக்கை எடுக்கிறோம்.

ஒருசில பகுதிகளில் அதிகமாகத் தொழில் வளர்ச்சி தற்போது ஏற்படுகிறது என்ற காரணத்திற்காக நாட்டைப் பிரித்துவிட வேண்டும் என்று சொன்னால் அதுவும் சரியல்ல. அல்லது பொருளாதார உயர்வுக்கு ராஜ்யங்களைப் பற்றி நாம் கவலைப்படக்கூடாது, எங்கே அதிகமான பொருள்கள் இருக்கின்றனவோ, எங்கே அதிக வசதி இருக்கிறதோ, அங்கே தொழில்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்கின்ற ஒரு வாதத்தையும் ஒப்புக் கொள்ள முடியாது. இரண்டுக்கும் மத்தியில் ஒரு முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த அடிப்படையில் முடிவு எடுத்து, நமக்கு வேண்டிய அடிப்படையான தொழில்களை இன்றைக்கு அமைத்துக் கொண்டு வருகிறோம். அதே நேரத்தில் பிராந்தியங்களுக்கிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளையும் நாம் நீக்கக்கூடும் என்ற முறையிலே முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறோம்.

முன்னேற்றம் அடைந்திருக்கக்கூடிய பகுதிகளையெல்லாம் ஒதுக்கித்தள்ளிவிட்டு, நாம் பிரிந்துவிட வேண்டும் என்ற ஒரு கருத்து சிலர் சொல்லிக் கொண்டிருப்பது. திராவிட நாடு பிரிந்துவர

வேண்டும் என்று எந்த அடிப்படையில் சொல்லுகிறார்கள்? வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்ற முறையில், அதாவது வளர்ந்த பகுதியை வெட்ட வேண்டும், தேய்ந்த பகுதியைப் பிரித்து வளர்க்க வேண்டும் என்கிறார்கள்.

அப்படியே திராவிட நாடு அமைகிறது என்று வைத்துக் கொண்டாலும், அதற்குள்ளே தமிழ்நாட்டைப் பார்க்கும்பொழுது, நான்கு பகுதிகளுக்குள்ளே தெற்குப் பகுதி, தென்கிழக்குப் பகுதி மற்ற பகுதிகளைவிட, வளர்ந்திருக்கிறது. ஆகவே இதிலிருந்து நாம் கத்தரித்துக் கொண்டு போய்விடுவோம், தமிழ்நாடு மட்டும் தனியாக இருக்கலாம் என்று சொல்லும் பிரிவினை மனப்பான்மை ஏற்படலாம். அதே மாதிரி கோவை ஜில்லா மற்ற ஜில்லாக்களைவிட அதிகமாக வளர்ந்திருக்கிறது. ஆகையினாலே கோவை மற்ற பகுதிகளிலிருந்து பிரிந்து போக வேண்டும் என்று சொல்லி, இப்படிப் பிரிவினை மனப்பான்மை வளர்ந்து கொண்டே போய், கடைசியிலே ஊருக்கு ஊர் போய், ஆளுக்கு ஆள் வரையிலே வந்து சேரும். பிரிவினை என்று ஏற்பட்டுவிட்டால், அது எங்குபோய் நிற்கும் என்று சொல்லமுடியாது.

ஒன்றுபட்ட முயற்சி

திட்டஅடிப்படையில் நம்முடைய நாட்டு வளர்ச்சியை நம்முடைய பகுதி வளர்ச்சியை நாம் அடைய முடியுமா, முடியாதா என்று பார்க்கிற பொழுது, திட்ட அடிப்படையில் அதற்குத் தீர்வு காணமுடியும் என்பதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் நிரூபித்துக் காண்பித்திருக்கிறோம்; மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் நிரூபித்துக் காண்பிக்கப் போகிறோம்.

ஒன்றுபட்ட இந்தியாவில், சமஷ்டி அடிப்படையில் திட்ட அடிப்படையில் பிரதேச ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்கான காரியங்களைச் சாதிக்க முடியும் என்பதைச் சாதித்துக் காண்பித்திருக்கிறோம். வெறும் வாயளவில் பேசாமல் சாதிக்க முடியும் என்பதைச் செயலில் நிரூபித்துக் காண்பித்திருக்கிறோம்.

திட்டமே வேண்டாம் என்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள். வேறு காரணத்திற்காக அவர்கள் திட்டம் வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். யோசித்துப் பார்ப்போமானால், நாம் திட்ட அடிப்படையில்தான் முன்னேற முடியும், திட்ட அடிப்படையில் தான் நாட்டினுடைய ஒற்றுமையை உறுதியாக்க முடியும். அந்த முறையில் தான் திட்டம் நடந்து வருகிறது என்று நான் முதலிலேயே வலியுறுத்திச் சொன்னேன்.

அதே மாதிரி தனிப்பட்ட நபர்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வு நீக்கப்பட வேண்டும் என்ற முறையிலேயும் முயற்சி எடுத்திருக்கிறோம். ஆனால், அது இப்பொழுது உடனடியாக ஏற்படுவதற்கு சாத்தியக்கூறு இல்லாமல் இருக்கிறது. ஏனென்று சொன்னால், தொழில்களை வைக்க வேண்டும் என்று சொல்லும் போது, தனியார் துறையை விட்டு, பொதுத் துறையிலே தொழில்களை அமைப்பதாக வைத்துக் கொண்டாலும், ஒரு சிலருக்கு அதிக சம்பளம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது, மற்றவர்களுக்குக் குறைந்த சம்பளம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இந்த ஏற்றத் தாழ்வு உடனடியாக நீக்கக் கூடியது அல்ல.

முப்பது - நாற்பது வருஷங்களாக கம்யூனிசப் பாதையில் சென்றிருக்கக்கூடிய ரஷ்யாவில்கூட ஏற்றத்தாழ்வு இன்னும் குறையவில்லை. பெரிய அளவில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. இன்றைக்குப் பெரிய பணக்காரர்கள் என்று சொல்லக்கூடிய ஒரு பகுதியினர்கள் இருக்கிறார்கள். சாதாரண சம்பளம் வாங்கக் கூடியவர்கள் பலர் இருக்கிறார்கள். அமெரிக்காவை எடுத்துக் கொண்டாலும், இன்றைக்கு கம்யூனிஸப் பாதையில் செல்லும் நாட்டைவிட அங்கே ஏற்றத்தாழ்வுகள் குறைவாக இருக்கின்றன என்பது புள்ளி விவரங்களிலிருந்து தெரிய வரும்.

பொருளாதார வளர்ச்சி அடிப்படையில், இத்தொழில் வளர்ச்சி அடிப்படையில், தானாகவே அடித்தளத்தில் இருக்கக் கூடிய மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்துதான் ஆகவேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பெரிய தொழில்கள் ஏற்படுத்தி பெரிய அளவில் உற்பத்தி அதிகரிப்பதற்கு, வளர்ச்சி ஏற்படுவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு, அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் வருஷம் ஒன்றுக்கு 65 லட்சம் கார்கள் உற்பத்திச் செய்கிறார்கள். 10,000 கார்கள் உற்பத்தி செய்கிறார்கள் என்றால் 10,000 கார்கள் வாங்கக்கூடியவர்கள் இருந்தால் போதும், அந்தத் தொழிலை நடத்த முடியும். ஆனால் வருஷம் ஒன்றுக்கு 65 லட்சம் கார்கள் உற்பத்தி ஆகிறது என்று சொன்னால், அந்த அளவுக்கு வாங்கக்கூடிய சக்தி சமுதாயத்தில் இருந்தால்தான், தொழிலைத் தொடர்ந்து நடத்த முடியும். தொழில் வளர்ச்சி ஏற்படும்பொழுது, பெரிய அளவில் உற்பத்தி ஏற்படும். அப்பொழுது தொழில் மட்டும் வளர்ந்து பிரயோசனம் இல்லை. வாங்கக்கூடிய சக்தி பெரும்பாலான மக்களிடையே, பரவலாக சமுதாயத்தில் ஏற்பட்டால்தான் அந்தத் தொழில் இயங்க முடியும்.

தொழில் வளர்ச்சி அடைய அடைய ஒரு சிறு பகுதியினர் பெரிய பணக்காரர்களாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள், பெரும் பகுதியினர் மேலும் மேலும் தரித்திரர்களாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்ற மார்க்ஸிய தத்துவம் இன்றைய தொழில் வளர்ச்சிக்கு உகந்தது அல்ல என்பதை உலக நிகழ்ச்சிகளும், தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கக்கூடிய நாடுகளும் இன்றைக்கு நமக்கு நிரூபித்துக் காண்பிக்கின்றன. இன்றைக்கு தொழில்வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்கின்ற முறையிலே தொழில் வளர்வதற்கு ஏற்பாடுகள் செய்துவருகிறோம். தொழில்வளர்ச்சி ஏற்பட ஏற்பட, தானாக சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் மாறித்தான் ஆக வேண்டும், அடித்தளத்திலுள்ள மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்துதான் ஆகவேண்டும். இன்றைக்கு அம்மாதிரி உயர்ந்து கொண்டு வருகிறது, உயர்ந்திருக்கிறது என்பதை நாம் காண்கிறோம்.

மக்களுடைய சக்தி, மக்களுடைய அறிவு எந்த அளவுக்கு இருக்கிறதோ, அந்த அளவுக்குத்தான், ஒற்றுமை சக்தியாக இருந்தாலும் சரி, பொருளாதார வளர்ச்சிச் சக்தியாக இருந்தாலும் சரி, அமையும். அதெல்லாம் அவரவர்களுடைய அறிவைப் பொறுத் திருக்கிறது. வளர்ச்சியைப் பொறுத்திருக்கிறது. அதனால்தான் நாம் கல்விக்கு முதல் இடம் கொடுத்திருக்கிறோம். நாட்டின் ஒற்றுமையை இன்றைக்கு உறுதிப்படுத்தும் முறையில் கல்வி முறையும் அமைய வேண்டும். ஆகவேதான் இந்த விஷயங்களெல்லாம் இந்த மகாநாட்டில் ஆராயப்பட்டு சில யோசனைகள் சொல்லப் பட்டிருக்கின்றன. தொடர்ந்து பல்வேறு துறையிலே செயல்பட்டு அந்த ஆலோசனைகளையெல்லாம் மேலும் மேலும் பரிசீலனை செய்து நாட்டினுடைய ஒற்றுமையை வளர்ப்பதற்கு நாம் என்னென்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி நாம் இன்றைக்கு முடிவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஒற்றுமையும் பிரிவினைவாதிகளும்

இதிலே, நாட்டின் ஒற்றுமையைப்பற்றி பேசும்போது, நாட்டுப் பிரிவினை அடிப்படையில் நினைக்கிறவர்கள் என்ன கருத்துக் களைச் சொல்ல முடியும் என்று சந்தேகம் ஏற்படலாம். நாடு ஒற்றுமையாகத்தான் இருந்து வந்திருக்கிறது, இனிமேலும் ஒற்றுமையாகத்தான் இருக்கப்போகிறது. ஒற்றுமை நீங்கிப்பிரியும் காலத்தில் அவர்கள் யோசனைகளுக்கு ஒருவேளை இடம் இருக்கலாம். ஆனால், இன்றைக்குச் சொல்ல வேண்டியது ஒற்றுமையாக இருக்கும் காலத்தில், ஒற்றுமை அடிப்படையில்

நாட்டை எப்படி இன்றைக்கு முன்னேற்றம் அடையச் செய்வது என்பது பற்றித்தான். அதற்கான யோசனைகளைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நாட்டை இன்னும் ஒற்றுமைப்படுத்த என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று சொல்ல வேண்டும். இதிலே பிரிவினையில் நம்பிக்கை இருக்கிறவர்களும் யோசனைகள் கூற இடம் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு கருத்தைப் பற்றியும் தெரிந்துகொள்ள விரும்புவார்கள். இதிலே, நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று சொல்லும் எங்கள் நிலைமை என்ன என்று கேட்கலாம். அதைப் பற்றியும் இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே என்னுடைய கருத்தில், அதைக் குற்றம் என்று சட்டம் செய்து, அதைக் குற்றமாக்க வேண்டியது அவசியம் இல்லை. இப்பொழுதே அதைக்குற்றம் என்று சட்டம் செய்திருப்பதாகச் சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். என்ன சட்டம் என்று படித்துக் கூடப் பார்க்காமல், நாட்டுப் பிரிவினை என்பதே குற்றம் என்று செய்திருக்கிறார்கள், என்று குறை கூறுகிறார்கள்.

அப்படி இப்பொழுது சட்டம் ஒன்றும் இல்லை. அப்படிச் சட்டம் செய்ய வேண்டும் என்பதும் எங்கள் கருத்தல்ல. எங்கள் கருத்து, அதைப் பற்றி மக்களே சரிசெய்து கொள்வார்கள் என்பதுதான், பொறுத்திருந்து பார்க்க வேண்டும். அதைப் பற்றி எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் இன்று எடுக்கவில்லை. அதைப் பொதுமக்களுக்கு விட்டுவிடலாம் என்று விட்டுவிடப் பட்டிருக்கிறது. அந்தச் சோதனையும் வருகிற பிப்ரவரி மாதத்தில் வர இருக்கிறது.

ஆகவே, எல்லாக் கட்சியினரும் தங்கள் யோசனைகளைச் சொல்லத் தயங்கவேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த அறிக்கையைச் சபைமுன் விவாதத்திற்கு வைக்கி றேன். இதில் எல்லோரும் பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். கட்சித் தலைவர் கள் மட்டும் கலந்து கொண்டு, அவர்கள் யோசனைகள் சொன்னதன் பிற்பாடு இதற்குப் பதில் சொல்லும் விஷயமல்ல. இருந்தாலும், ஏதாவது பதில் சொல்ல வேண்டியிருந்தால், எல்லோரும் தங்கள் தங்கள் கருத்துக்களைச் சொன்னபிறகு, நான் சொல்லுகிறேன். இது இன்றைக்கே முடிவு செய்யக்கூடிய காரியம் இல்லை. சொல்லப்படும் பல்வேறு கருத்துக்களையும் பரிசீலனை செய்து பார்க்க வேண்டிய விஷயம். திடீரென்று முடிவு எடுக்க முடியாது.

நாட்டை, ஒற்றுமை உள்ள நாடாக, செழிப்பு வளரும் மக்கள் வளம் பெருகும் நாடாக முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்ல எல்லோரும் முயற்சிகள் செய்ய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திக் கொண்டு, இந்தப் பிரேரணையைச் சபைமுன் வைக்கிறேன்.

● ● ●

சி.என். அண்ணாதுரை விவாத உரை

சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே,

நாடெங்கிலும் பேசப்பட்டு வருகிற, தேசீய ஒருமைப்பாடு என்கின்ற பிரச்சினைக்காகக்கூடிய ஒரு மாநாட்டின் நடவடிக்கை களைப் பற்றியகுறிப்பேட்டின்பேரில், இன்றைய தினம் இங்கே ஒரு விவாதத்தை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்திருக்கிறார்கள்.

நடைபெற்ற மாநாட்டிலே பல்லேறு கட்சிகள் அழைக்கப் பட்ட போதிலும், நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் அழைக்கப்படவில்லை என்பதைப் பல அங்கத்தினர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டினர். ஆனால் நான் அதை ஒரு குறையாக எடுத்துக் கொள்ளவில்லை என்பதை நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏன்னென்றால் தேசீய ஒருமைப்பாடு மாநாடு என்று அவர்கள் கூட்ட ஆரம்பித்தது, இன்று காலையிலே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்தின்படி பார்த்தால், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் நடவடிக்கையின் தொடர்ச்சியாக, மூன்றாவது கட்டமாக அது நடைபெற்றிருக்கிறது. நாட்டிலே இருக்கிற ஒரு ஆளும் கட்சியின் நடவடிக்கையிலே, இது ஒரு தனியான கட்டமாக அமைந்திருப்பதால், அதிலே நாங்கள் அழைக்கப்படாததைப் பற்றி உள்ளபடியே வருத்தப்படத் தேவையில்லை.

விளக்கம் என்ன?

ஆனால் தேசீய ஒருமைப்பாடு என்று எடுத்துச் சொல்லப்பட்டு வந்ததை, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே தேசீய இணைப்பு என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். வார்த்தைக்கு வார்த்தை நான் பொருள் பிரித்து பார்க்கிறேன் என்று யாரும் என்பேரில் வருத்தப்பட்டுக் கொள்ள வேண்டாம்.

ஒருமைப்பாடு' என்பதற்கும் 'இணைப்பு' என்பதற்கும் அடிப்படையிலே வித்தியாசம் இருக்கிறது. இணைப்பு என்பது தனித்தனி உருவங்களைப் படைத்த பல்வேறு உருவங்களை, ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக இணைத்து வைப்பது இணைப்பாகும். ஒருமைப்பாடு என்பது, தனித்தனியாக இருக்கிற உருவங்களாக இருந்தாலுங்கூட, அவைகளையெல்லாம் ஒன்றுகூட்டி ஒரு ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது, ஒருமைப்பாட்டின்பால் சேர்ந்ததாகும்.

இந்த மாநாட்டை நடத்தியவர்கள் தேசீய ஒருமைப்பாட்டை வளர்க்க விரும்பினார்கள் என்று ஏடுகளெல்லாம் எழுதின. நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இது தேசீய இணைப்பு என்றார்கள். இன்டெக்ரேஷன் என்பதற்கு அகராதியில் தரப்பட்டிருக்கிற பொருள் - துண்டு பட்டிருக்கிற பொருள்களை ஒரு பொருளாகக் குவிப்பது அல்லது சேர்ப்பது - என்பதாகும். ஆகவே, இந்த மாநாட்டை நடத்தியவர்கள் இன்டெக்ரேஷன் என்பதற்கான நல்ல விளக்கத்தையும், அதற்கும் முன்னமே நேஷனல் என்பதற்கான விளக்கத்தையும், எது நேஷனல் என்பதற்கான இலக்கணங்களையும், இந்தியாவில் உள்ளவர்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது ஒரே நேஷனைச் சேர்ந்தவர்கள் என்பதற்கான ஆதாரங்களையும் விரிவாகக் கொடுத்திருப்பார்களானால், விவாதம், கட்சி அரசியலுக்கு மட்டும் பயன்படாமல் இன்னும் சற்று உயிருள்ளதாக அமைந்திருக்கும்.

அதற்கு நம்முடைய துரைத்தனத்தார் தந்திருக்கிற இந்த ஏட்டோடு கூட, அதிலே கலந்து கொண்டவர்கள் அங்கே எடுத்துச் சொன்ன கருத்துக்களையெல்லாம் அவர்கள் தொகுத்துக் கொடுத்திருப்பார்களானால், அவரவர்கள் உள்ளத்தில் தேசிய ஒருமைப்பாடு என்பது என்னென்ன வகையிலே வடிவம் எடுத்தது என்பதை நாம் ஓரளவு தெரிந்து கொண்டிருக்கலாம். அதை அவர்கள் செய்யத் தவறிவிட்டார்கள்.

ஆனால், நம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற இந்த அறிக்கையைப் பார்க்கிற நேரத்திலே, இதில் முதல் இரண்டரை பக்கங்களில், இந்தியா என்பது பல்வேறு வகையான இனங்களையும், பல்வேறு வகையான மொழிகளையும் பேசுகின்ற மக்களையும் கொண்ட ஒரு முரண்பாடு நிறைந்த இடம் என்றாலும் அந்த முரண்பாட்டுக்கிடையே ஒரு ஒருமைப்பாட்டை ஏற்படுத்த, நெடுங்காலமாக இந்த நாட்டிலே முயற்சி செய்து, பலர் அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள் என்ற கருத்து வலியுறுத்தப் பட்டிருக்கிறது. அதற்கு இந்தியத் துணைக்கண்டத்தினுடைய

குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர். இராதாகிருஷ்ணன் அவர்கள் தம்முடைய அரிய உரையில் ஆதாரமாகக் காட்டியிருப்பதாவது:

'If you look into the Mahabharata, you will find there that almost all the representatives from the north and the extreme south are said to have been present at the Kurukshetra war.'

அரசியல் பிரச்சினைகளை விவாதிக்கின்ற நேரத்தில் பாரதக்கதையை ஆராயலாமா என்று கேட்டால், டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிடாமல் இருந்திருப்பாரானால், நானும் அதைக் குறிப்பிடத் தயக்கப்பட்டிருப்பேன். ஆனால் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களே இதை ஒரு அரசியல் பிரச்சினைக்கு ஆதாரம் அளிக்கக்கூடியது என்று எடுத்திருக்கிறார். நான் உங்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்வேன். இதிலே குறிப்பிட்டிருப்பதில் 'எக்ஸ்ட்ரீம் ஸௌத்' என்று இருக்கிறது. அங்கே வந்திருந்தவர்கள் தென்கோடியிலிருந்து வந்திருந்தவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்களே என்று நான் நம்முடைய சங்க இலக்கியங்களைப் பார்த்தேன். அப்படிப் பார்க்கிற நேரத்தில், அவர்கள் பாரதப் போரில் எந்தப் பக்கத்திலேயும் சேராமல், சண்டையில் ஈடுபட்ட இருவருக்கும் சோறு அளித்தார்கள் என்று நம்முடைய சங்க இலக்கியம் சொல்கிறது. அதிலே 'குருக்ஷேத்திரம்' என்ற அபாயகரமான வார்த்தையை டாக்டர் இராதாகிருஷ்ணன் உபயோகப்படுத்தியதிலே இருந்து, பாரத காலம் முதற்கொண்டு அடிதடிச் சண்டை நடந்து கொண்டு வந்ததென்பது, அதிலே ஆதாரமாக இருப்பதுதான் என்னைப் போன்றவர்களுக்குத் தெரிகிறது.

ஆனால், பலர் இந்தியத் துணைக்கண்டத்தை ஒன்றாக இணைக்க முயற்சி எடுத்துக் கொண்டார்கள். 'யூனிடி இன்டைவர்ஸிடி' முரண்பாடுகளுக்கிடையே ஒருமைப்பாட்டைக் காண விரும்பினார்கள் என்று குறிப்பிட்டிருப்பது அத்தனையும் எந்தெந்த நேரத்தில் எந்தெந்தப் பகுதியில் உள்ளவர்கள் வலிவு பெற்றிருக்கிறார்களோ அவர்கள் இந்தியா முழுவதையுமே தங்களுடைய ஒரு குடையின் கீழ்க் கொண்டு வரவேண்டும் என்பதற்காக முயற்சி எடுத்துக் கொண்டு, இக்காலத்தில் அமைக்கப்படுகிற சாம்ராஜ்ஜியங்களைப் போல், முன்னே சில சாம்ராஜ்யங்களை அமைத்தார்கள் என்பதைத் தவிர, தேசிய ஒருமைப்பாடு என்பதற்கு இன்று அளிக்கப்படுகிற இலக்கணத்தையொட்டி இந்தியத் துணைக் கண்டத்திலே அமைந்திருந்த ஒரு அரசை, அருள் கூர்ந்து எனக்குக் காட்டுங்கள்.

காலம் அளிக்கும் தீர்ப்பு

இங்கே குப்த சாம்ராஜ்யத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மௌரிய சாம்ராஜ்யத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அக்பருடைய மனப்பான்மையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அசோகனுடைய சாம்ராஜ்யத்தைப் பற்றி இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவை அத்தனையும் நர்மதையாற்றுக்கு மேலேயே தவிர, நர்மதையாற்றுக்குக் கீழே இல்லை என்பது வரலாறும் பூகோளமும் ஒரு சேரக் கூட்டிப் படிப்பவர்கள் நன்றாக உணர்ந்து கொள்வார்கள்.

ஆனால், அசோகன், அக்பர் இப்படிப்பட்ட பரந்த மனப்பான்மை படைத்தவர்கள் எந்தக் கோடியில் இருந்தாலும், அவர்களை வாழ்த்த வேண்டியதும் வணங்க வேண்டியதும் தமிழகத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல, தரணியில் உள்ள அனைவருக்குமே கடமையாகும். அந்த வகையிலே அசோகன் புகழ் பெற்றிருக்கிறார் என்றால், அந்த வகையிலே அக்பர் புகழ் பெற்றிருக்கிறார் என்றால், அவர்கள் துவக்கிய, அவர்கள் அமைத்த அரசு ஏன் நிலைக்கவில்லை, நிலைக்காததற்கு என்ன காரணம் என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

இன்றையதினம் காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரை நாங்கள் ஒரே பேரரசை அமைத்துவிட்டிருக்கிறோம் என்றும், அது அமைத்தது மாபெரும் சாதனை என்றும், அதைப் படிப்படியாக நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சாதனையாக எடுத்துச் சொல்லிக் கொண்டு வந்ததையும், அவர்கள் ஆராய்ந்து பார்ப்பார்களானால் இந்த வழிமுறைகளெல்லாம் அசோகருக்கும் அக்பருக்கும் தெரிந்திருக்காது என்றா கருதிக்கொண்டிருக்கிறீர்கள்? கனிஷ்கர் ஹர்ஷன் இவர்கள் அதை அறியமாட்டார்கள் என்றா எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்? அல்லது குப்த, மௌரிய சாம்ராஜ்யத்திலே இப்படிப்பட்ட இராஜதந்திர நிபுணர்கள் இருந்ததில்லை என்றா எண்ணுகிறீர்கள்?

இதையெல்லாம் யோசித்துப் பார்த்தால், அவர்கள் அத்தனைபேரும் எதை நம்பி ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை அமைத்து, கடைசியில் எது இல்லாததால் அந்த சாம்ராஜ்யம் அழிக்கப் பட்டதோ, அதைப் போலவே இன்றையதினம் நீங்கள் எதை நம்பி இந்த சாம்ராஜ்யத்தை அமைக்கின்றீர்களோ, அது எது இல்லையோ அதனால் அழிக்கப்படப் போகிறது என்பது காலம் அளிக்கும் தீர்ப்பாக இருக்கப் போகிறது.

பிப்ரவரியோடு தீராது

'பிப்ரவரி மாதத்திலே பார்', என்கிறார் நிதி அமைச்சர். பிப்ரவரி மாதத்தோடு பிரச்சினை தீர்ந்துவிடுவதில்லை. தேர்தலில் ஏற்படுகிற விளைவுகளையொட்டி உடனே இந்தப் பிரிவினைப் பிரச்சினையை விட்டுவிடுவார்கள் என்று நிதி அமைச்சர் அவர்கள் கருதுவார்களானால், அவர் பெரிதும் ஏமாற்றத்திற்கு உள்ளாவார்கள்.

இதைப் போலவே, கடுமையான சட்டத்தைக் கொண்டுவந்து நாங்கள் அடக்கமுடியும், ஆனால், பொறுத்திருக்கிறோம், 'மக்களே பார்த்துக் கொள்ளட்டும் என்று இருக்கிறோம்' என்று இருபொருள் படும்படியாக நிதி அமைச்சர் பேசுகிறார் என்றால் - நான் தெளிவாக அவருக்குச் சொல்கிறேன் - எங்களுடைய கொள்கைகளை நீங்கள் மதிக்காது இருக்கலாம். எங்களுடைய வாதங்களை நீங்கள் ஏற்றுக் கொள்ளாமலிருக்கலாம், ஆனால், எங்களுடைய தூய்மையான இருதயத்தைத் தயவு செய்து சந்தேகப்படாதீர்கள்.

நாங்கள் இந்தக் கொள்கையில் எங்களை ஈடுபடுத்திக் கொண்ட நேரத்தில் இழிமொழியும் பழிச்சொல்லும் எங்களை வந்து தாக்கும் என்று உணர்ந்த பிறகுதான் தெரிந்தெடுத்துக் கொண்டோம். அதை அடக்கப் போலீசும் படையாட்களும் பயன்படுத்தப்படும் என்பதை ஒரு துளியும் அறியாமல் அல்ல அந்த நேரத்தில் ஈடுபட்டது. இப்படிப்பட்ட, ஒரு பிரிவினைச் சக்தி என்று உங்களால் அழைக்கப்படுகிற சக்தியைத் தேர்தலில் இலட்சக்கணக்கான பணத்தைச் செலவழித்து ஒழித்துக்கட்டலாம் என்று திட்டமிடுவீர்கள் என்பதும் நாங்கள் அறியாததல்ல.

ஆனால், நாங்கள் கேட்கிற அந்தக் கோரிக்கை இவைகளுக் கெல்லாம் அப்பாற்பட்டது. இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது என்றால், நாங்கள் அத்தனை பேர்களும் எங்களுடைய இரத்தத்தைச் சிந்தி அடையவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். அந்த இரத்தமும் உங்கள் கரத்திலே இருக்கும் கத்தியால் வெளிப்பட வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகையால், கத்தி இருந்தால் கூர்மையாகத் தீட்டிக் கொள்ளுங்கள். சட்டம் இருந்தால் விரைவில் அமுலுக்குக் கொண்டு வாருங்கள்.

எப்படிப்பட்ட பயங்கரமான நடவடிக்கைகளிலே ஈடுபடுவதானாலும் அவைகளுக்கெல்லாம் சளைக்காமல் இருப்பதற்குக் காரணம் - தனிப்பட்ட முறையில் நாங்கள் பெரிய துணிச்சல்காரர்கள் என்பது அல்ல - நாங்கள் அந்த லட்சியத்தை அவ்வளவு பரிபூரணமாக நம்பிக் கொண்டிருக்கிறோம்.

'இது என்ன பயித்தியக்காரத்தனம்' என்று நிதி அமைச்சர் அவர்கள் கருதலாம். இது என்ன பயித்தியக்காரத்தனம் என்றுதான் சுயராஜ்யத்திற்காகப் போராடிய நேரத்திலும் பல பெரியவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். அது இன்றிருக்கும் பல காங்கிரஸ்காரர்களுக்கு விளங்காமலிருக்கலாம்.

நிதிமந்திரி திரு. சி. சுப்பிரமணியம்:- நீங்களே நினைத்தீர்கள்.

திரு. சி.என். அண்ணாதுரை:- நானும் நினைத்ததாக நம்முடைய நிதி அமைச்சர் சொல்கிறார். எனக்கும் திராவிடர் கழகத் தலைமைக்கும் ஏற்பட்ட கருத்து மாறுபாட்டுக்குக் காரணமே சுயராஜ்யத்தைப் பற்றி நான் கொடுத்த விளக்கத்திற்கும் திராவிடர் கழகத் தலைமைகொடுத்த விளக்கத்திற்கும் அடிப்படையில் வித்தியாசம் இருந்துதான் என்பதை நாடு அறியும். ஆனால், உலகம் சுற்றுகிற அமைச்சர் இந்தச் சின்ன விஷயத்தை அறியமாட்டார்.

ஆதாரமே இல்லை

இதிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையே பார்க்கட்டும். இந்தியா எந்தக் காலத்திலாவது ஒரே அரசியலமைப்பின் கீழ் இருந்ததுண்டா? அதற்கான ஆதாரங்கள் தரப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால் - இரண்டொரு சமஸ்கிருத ஸ்லோகங்கள் ஆங்கிலத்தில் போடப்பட்டிருக்கின்றன. அவற்றுக்குப் பொருள் விளங்கவில்லையே தவிர மற்றவைகளுக்கு நன்றாகப் பொருள் விளங்குகிறது. இந்தியா ஒரு அரசியலமைப்பின் கீழ் எந்தக் காலத்தில் இருந்தது என்பதற்கான ஆதாரங்கள் ஒன்றுமே இல்லை,

"He was impressed by th toleration of the people" என்று மக்களுடைய சகிப்புத் தன்மையை அவர் பாராட்டினார் என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். சகிப்புத் தன்மை இப்போதுதான் இருக்கிறது என்பது அல்ல. அந்தக் காலத்திலிருந்து இன்றுவரை, தமிழகத்தில் அந்தச் சகிப்புத் தன்மை எப்போதும் தலைநிமிர்ந்து நிற்கிறது.

வடநாட்டில் ஏற்படக் கூடிய கலகங்கள் இங்கே நடந்ததில்லை. அலிகாரில் ஏற்பட்டது போல, அஸ்ஸாமில் ஏற்பட்டது போல இங்கே ஏற்பட்டதில்லை. நேரு பண்டிதரை 90 நிமிடங்கள் பேசவிடாது ஆமதாபாத்தில் தடுத்து நிறுத்தியதைப் போல இங்கே நடைபெறுவதில்லை.

இது தமிழகத்திற்கே உள்ள தலைசிறந்த பண்பாடாகும். தமிழர்களுக்கே அத்தகைய பண்பாடு உண்டு. ஆனால் இதைத்

தவறாக அவர்கள் எடுத்துக் கொண்டு, தமிழர்கள் தானே, அடங்கிக் கிடப்பார்கள், என்ற எண்ணத்தில் நடந்து கொள்வார்களேயானால் இந்திய ஒற்றுமை என்ற பேச்சு எங்கே கொண்டுபோய்ச் சேர்க்கும் என்பதை நிதியமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அவர்களுடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு பெரியவரே என்னிடம் சொன்னார். 'நான் அங்கேயே நாட்டைப் பிரிப்பது அண்ணாதுரையல்ல, உத்திரப்பிரதேசக்காரர்கள்தான் தென்னாட்டுப் பிரிவினையைச் செய்துவிடப் போகிறார்கள் என்பதைச் சொல்லி வந்தேன்', என்று அந்தக் காங்கிரஸ் பிரமுகர் சொன்னார். நிதியமைச்சரவர்கள் அவர் யார் என்று என்னிடத்தில் கேட்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். கேட்காமலேயே அவருக்குத் தெரியும்.

இன்றைக்குக் காங்கிரஸ் வட்டாரத்தில் உள்ளவர்களே, குறிப்பாக டிடி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் பாராளுமன்றத்திலே " India, that is Bharath, Bharath that is U.P." என்றுக் குறிப்பிட்டிருக்கிறார். அவர் ஏன் இப்படிப் பேச வேண்டும்?

பெருமையா? சிறுமையா?

இன்றைய தினம் நமது நிதியமைச்சரவர்கள், இந்திய ஒருமைப்பாடு குறித்துப் பேசும்போது, பழைய சாதனைகளைப் பற்றி, யார் யார் எதையெதை விட்டுக் கொடுத்து விட வேண்டும் என்பதைப் பற்றிப் பேசினார். எல்லாச் சிற்றரசுகளையும் ஒன்றாகச் சேர்த்தது மாபெரும் சாதனை என்று குறிப்பிட்டுக் கொண்டார். உண்மையில் அவர் அதை அப்படிச் சொல்லிக் கொண்டது சர்தார் பட்டேலுக்கு பெருமையளிக்கக்கூடியதா அல்லது சிறுமையளிக்கக் கூடியதா என்பதை யோசிக்க வேண்டும்.

இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்த அத்தனை சிற்றரசர்களும் அன்றைய தினம் வெறும் ஜரிகைச் சட்டை குல்லா அணிந்த உல்லாசப் பேர்வழிகளாக இருந்த நேரத்தில் - குதிரையில் ஏறுவதற்கு அஞ்சி, குதிரையில் ஏறிவந்தவர்களைத் தூர இருந்து கண்டுகளித்த நேரத்தில் - மக்கள் புரட்சி செய்துவிட்டால் என்ன செய்வது என்று அரண்மனையைச் சுற்றி எட்டு மதில் சுவர்கள் எழுப்பிக் கொண்டு வாழ்ந்த நேரத்தில் - இப்படி உலுத்துப் போய், சீட்டுக்கட்டுராஜாக்களைப் போல் வாழ்ந்து கொண்டிருந்தவர்களை டில்லிக்கு அழைத்தவுடனே, போனது போகட்டும், மிச்சம் என்ன? என்று கை நீட்டியவர்களின் அரசுகளை ஒன்று சேர்த்தது பெரிய சாதனை என்றால் அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அதைப் பெரிய சாதனை என்றே வைத்துக் கொள்வோம். அதனால் நிதியமைச்சரவர்கள் சந்தோஷப்படலாம் என்றால் அதைப் பெரிய சாதனை என்றே சொல்கிறேன். அந்தப் பெரிய சாதனைக்கு சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு உறுதுணையாக இருந்தவர் வி.பி. மேனன் என்பதை யாரும் அதற்குள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

சிற்றரசுகளை ஒன்றாகச் சேர்ப்பதற்குப் பட்டேலுக்கு வலது கரம்போல இருந்தவர் வி.பி. மேனன். என்றைக்குமே இந்தியா ஒரு நாடாக இருக்க வேண்டுமென்பதில் அவருக்குள்ள ஆர்வம் குறைந்ததல்ல. இன்றையதினம் அவர் டில்லியில் நடந்த தேசீய ஒருமைப்பாட்டு மகாநாட்டைப் பற்றி - "It was a mountain that brought forth a mouse. One is forced to conclude that it was nothing more than a Congress election stunt. என்று. மலையைக் கெல்லி எலியைப் பிடித்தார்கள். காங்கிரஸ் கட்சி கையாள்கின்ற தேர்தல் தந்திரம் என்று சொன்னார்.

அவர் எங்களைப் போல் பிரிவினைக் கட்சியைச் சேர்ந்தவர் அல்ல. பதவிக் கிடைக்காத 'ப்ரஸ்ட்ரேஷனில்' பேசுகிறார் என்று சொல்ல முடியாது. அவர் மிகப் பெரிய பதவியெல்லாம் வகித்தவர். அவரே தேசிய ஒருமைப்பாடு மகாநாட்டைப் பற்றி இப்படிப் பேசியிருக்கிறார் என்றால், அதைக் கவனிக்க வேண்டும்.

ஆச்சாரிய கிருபளானி அவர்கள் 'பாவிகள் எல்லாம் ஒன்றாகக் கூடிப் பேசினார்கள், பரிகாரம் தேடுவதற்காக' என்று பேசியிருப்பதும் இந்த மகாநாட்டைப் பற்றித்தான். தேசீய ஒருமைப்பாட்டைப் பற்றி பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவரும் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் வி.கே. ராமசாமி முதலியார் அவர்களும் சில பல கருத்துக்களைச் சொன்னார்கள் என்றால் எங்களுக்காக மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சிக்கும் சொல்லியிருக்கிறார்கள்.

அதற்குக் காரணம் என்னவென்றால் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள்தான். இந்தியா முழுவதற்குமே ஒரே ஒரு சர்க்கார்தான் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். சிலர் தனித்தனியாகப் பிரிந்து போய்விடவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், நாங்கள் இரண்டுக்கும் நடுவில் போகிறோம் என்று அவர்கள் சொன்னார்களே, பொருளாதார அடிப்படையில், அரசியல் அடிப்படையில் எல்லாத் துறைகளிலும் அவர்கள் நடுவில் போகிறோம் என்று சந்து கண்ட இடத்தில் நுழைகிற தன்மைதான் - இந்த அவல நிலைக்குக் காரணம் என்று குறிப்பிட விரும்பு கிறோம்.

கூழும் மீசையும்

இது எந்தப் பிரச்சினையும் தீர்ப்பதற்கு பயன்படாது. பிரச்சினைக்குத் தீர்வாக அமையாமல் பிரச்சினையை ஒத்திப் போடுவதற்குப் பயன்படுமே தவிர, வேறு எவ்வித பயனும் கிடையாது. எந்தப் பக்கம் சாய்கிறதோ அந்தப் பக்கத்தில் சேர்ந்துகொள்ள இந்தச் கொள்கையை நீங்கள் தேர்ந்தெடுத்திருக் கிறீர்கள். உண்மையில் உங்களுக்கு இந்த இரண்டு கொள்கைகளிலும் நம்பிக்கை கிடையாது.

நான் உள்ளபடியே சொல்கிறேன், இந்தியா ஒரே ஒரு நாடாகத்தான் இருக்கவேண்டுமென்று சொன்னால், இந்த ஒருமைப்பாடு தேவையென்று சொன்னால், தமிழ்மொழி அதற்கு இடையூறாக இருக்குமென்றால் அதைக்கூட விட்டுக் கொடுத்தால் என்ன? தமிழ்மொழியினால் தேசீய ஒற்றுமை குறையும்- குலையும் என்று சொன்னால் தேசீய ஒற்றுமைக்காக அதைவிட்டுக்கொடுத்து விடுவார்களா? உங்களுக்கு சிலப்பதிகாரமும் வேண்டும்- மனுதர்மும் வேண்டும்! தேவநாகிரியும் வரவேண்டும், தமிழும் தேவை, கூழும் வேண்டும்- மீசையும் வேண்டும்! எத்தனை காலத்திற்கு இந்தப் போக்கு?

தேசீய கவுன்சில் கூட்டத்திலே நம்முடைய நிதியமைச்சரவர் கள், 'இந்தியை வரவிட மாட்டோம், எங்கள் தமிழ் மொழியை அழிக்க இடம் கொடுக்க மாட்டோம்', என்று சொன்னார். அதைத்தான் நான் நாட்டுப் பற்று, மொழிப் பற்று என்று கூறுகிறேன். அதுதான் இனவுணர்ச்சி, இந்த மொழிப் பற்று இருக்கிற வரையில், நாட்டுப் பற்று இருக்கிற வரையில், தமிழ் உணர்ச்சி இருக்கிற வரையில், இலக்கியம் இருக்கிற வரையில், 'தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கோர் குணமுண்டு' என்று நாமக்கல் கவிஞர் பாடிய கவிதா தத்துவம் உள்ளத்தில் இருக்கிற வரையில், எவ்வளவு தேர்தல் வந்தாலும், எங்களை அழித்து அடைத்துவிடாது, எவ்வளவு சட்டம் வந்தாலும் அழித்து விடமுடியாது.

தேர்தலும் திராவிட நாடும்

பிப்ரவரியில் பார்த்து விடலாம் என்கிறார் நமது நிதி அமைச்சர். பிப்ரவரியிலேயே பார்க்கலாம், தேர்தலைப் பொருத்தா எங்கள் கட்சியிருக்கிறது? அரசியல் வாழ்வு என்பது ஐந்து வருஷத்திற்கு ஒருமுறை அளிக்கப்படுகிற மரண சாசனமா?

தேர்தலில் தோற்றார் என்பதற்காக உள்துறை அமைச்சர் திரு. பக்தவத்சலத்தின் அரசியல் வாழ்வு அதோடு அழிந்து

போய்விடவில்லை. தேர்தலில் தோற்றதினால் திரு. கோபால் ரெட்டி அரசியல் வாழ்வைவிட்டு ஓடிப்போய்விடவில்லை. இன்று டில்லி அமைச்சராக இருக்கிறார். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அங்கே போகிற போது விட்டுக்கொடுப்பாரா மாட்டாரா என்று தெரியவில்லை. குமாரசாமி ராஜா தேர்தலில் தோற்றுப் போன பிறகுதான் கவர்னர் கிரீடம் அவரைச் சேர்ந்தது. தேர்தல் யாரையும் சாகடித்து விடவில்லை. ஆகவே, அந்த பூச்சாண்டியை எங்களிடம் காட்ட வேண்டாம் என்று நிதி அமைச்சர் அவர்களிடம் சொல்ல விரும்புகிறேன்.

இதுவரை நிதி அமைச்சராக இருந்தவர் ஆல மரத்தடியில் உட்கார்ந்து ஆரூடம் சொல்பவரைப்போல், யாரை மிரட்டிப் பேசுகிறார்கள்? அவருக்கு நிச்சயமாக சொல்கிறேன். எங்களுடைய நாட்டுப் பிரச்சினை தேர்தலோடு இணைக்கப்படவில்லை. தேர்தலோடு இணைக்கப்பட்டதல்ல திராவிட நாட்டு விடுதலை இயக்கம். தேர்தலுக்குப் பிறகும் - தேர்தலுக்குப் பிறகும் கட்சியின் கருத்து ஊடுருவி நிற்கும்.

வேண்டுமானால், அவர் வாதத்திற்காக இன்றைக்குத் தமிழ்நாடு கேட்பார்கள், நாளைக்குக் கோவையைக் கேட்பார்கள் என்று கேலி பேசுவதில் ஒன்றும் சிரமமில்லை. நான்கூடச் சொல்வேன் - இன்றைக்கு இந்திய தேசிய ஒற்றுமை என்பவர்கள் இமயத்தை எல்லைக் கோடாகச் சொல்வார்கள். நாளைக்கு மங்கோலியாவை எல்லைக்கோடாக ஏன் சொல்லக் கூடாது. மெசபொடோமியாவையும் சேர்த்துக் கொள்ளலாமே! சீனா பக்கத்திலும் ஏன் போகக்கூடாது? இப்படி நானும் கூடப் பேசிக் கொண்டே போகலாம்.

வந்த ஆபத்து

இன்றும் அவர்கள் இந்த தேசிய ஒருமைப்பாட்டுக்காகக் கூட்டப்பட்ட மகாநாடே தேசிய ஒருமைப்பாடு இல்லாததைக் காட்டவில்லை என்று சொல்கிறார்கள். இதுவரையில் எல்லா ஏடுகளும் எழுதிக் கொண்டு வந்ததையும், எல்லாத் தலைவர்களும் எடுத்துப் பேசிக் கொண்டு வந்ததும், நாட்டிலே ஒரு சீர்குலைவு ஏற்பட்டுவிட்டது, அதைச் சரிப்படுத்தத்தான் நாங்கள் இதைச் செய்கிறோம் என்று சொன்னார்கள். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பின்னால் அதைப் படிப்படியாக மாற்றிக் கொண்டு வந்ததைப் போல், இவ்வளவு வெடிப்பும் அடிப்படையில் இல்லை மேலேதான் இருக்கிறதென்று சொன்னார்கள். யாராவது கட்டட நிபுணரைக் கேளுங்கள். அடிப்படை சரியாக இல்லாமல் போனால்தான் மேலே வெடிப்பு ஏற்படுமே தவிர அடிப்படை

சரியாக இருந்தால் மேலே வெடிப்பு இருக்காது. ஆகவே மேலே வெடிப்பு இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் அடிப்படை சரியாக இல்லாததுதான்.

ஆகையால்தான், இந்தியா ஒரே நாடு என்று சொல்லப்படும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் அரசியல் சட்டமானது மிக விரைவிலே நிறைவேற்றப்பட்டதாகப் பெருமைப்பட்டுக் கொண்டார்கள் - வந்த ஆபத்தே அதிலேதான் இருக்கிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தியத் துணைக்கண்டத்தைப் பிரிட்டீஷ் ஏகாதிபத்தியம் தன்னுடைய பிடியிலேயிருந்து நீக்குவது என்று தீர்மானித்த நேரத்தில் இங்கே அரசியல் திட்டங்கள் பற்றிப் பேசப்பட வில்லையா? குக் திட்டம் பற்றிப் பேசப்படவில்லையா? ஐந்து ராஜ்யத் திட்டங்கள் பற்றிப் பேசப்படவில்லையா? அதிலிருந்து என்ன நமக்குப் புரிகிறது? இருக்கும்வரை ஒரே அமைப்பாக இருக்கவேண்டுமென்பதை மட்டுந்தான் நாட்டிலேயுள்ளவர்கள் கவனித்தார்கள் என்பது அல்ல. நீங்கள் சொன்னதற்கு மதிப்புக் கிடைத்ததா? அரசியல் தத்துவவாதிகள் அதை ஏற்றுக் கொண்டார் கள் என்றா கருதுகிறீர்கள்?

'பெடரேஷன்' என்று நிதியமைச்சரவர்கள் வாதாடினார்கள். பெடரேஷனுக்குள்ள இலக்கணத்தின்படி இந்திய பெடரேஷன் இருக்கிறதா? 'யூனியன் ஆப் இந்தியன் ஸ்டேட்ஸ்' என்று போடப்பட்டிருப்பதில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகார வரம்பைப் பார்க்கும்போது, நல்ல பெடரேஷன் என்றால் மிச்ச அதிகாரத்தைத் தான் (Residuary powers) அங்கே கொடுத்து விடுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றையதினம் மத்திய சர்க்காருக் கல்லவா அந்த அதிகாரம் இருக்கிறது?

தேசிய ஒருமைப்பாடு மகாநாட்டிலேகூட ஒற்றுமைக்கு வழி என்ன என்று கேட்கும்போது, கல்வியை "Concurrent subject" ஆக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "Education is strictly a state subject," ராஜ்ய சர்க்காருக்குத் தனியாக இருக்கின்றபோது ஒருவர் யோசனை சொல்கிறார் - அதை concurrent subject ஆக்கலாம் என்று. அதைப் போல்தான் It was felt that this link must ultimately be Hindi - இங்கே நிலைத்துப் போய்விட்டது. கடைசியாக இணைப்புச் சங்கிலி இந்திதான்.

இப்போது விழித்துக் கொண்டிருக்கிறார்கள், நன்றாகத் தூங்கட்டும் என்று சொல்லும் தன்மைக்கும் "... this link must ultimately be Hindi" என்பதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

தியாகம் செய்யும் துணிவு

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஆட்சியிலிருக்கும் வரையில் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவருந்தான், பாவம் - எத்தனை காலத்திற்குத்தான் சண்டைப் போட்டுக் கொண்டிருப்பார்கள்? என்னைப் போல் பதவிக்காக ஆசைப்படாமலோ, பதவியைப் பற்றி எண்ணிப் பார்க்காமலோ, மேலே ஆகாயம், கீழே பூமி என்று இருந்தால் பரவாயில்லை. அப்படி இருந்தால் இருப்பது ஒன்றும் போகாது.

நம்முடைய நிதி மந்திரி சற்றுத் துணிந்தால் உள்ளது அல்லவா பறிபோகும்? எப்படி அவர் அந்தத் தியாகத்திற்குத் தயாராக முடியும்? ஏற்கனவே பெரிய தியாகத்தைச் செய்து விட்டவர்களாயிற்றே அவர்கள். அவர் அந்தத் துணிச்சலுக்கு வரமாட்டார் என்பது பற்றி ஆச்சரியப்படவில்லை. ஆனால் துணிவு பெற்றிருப்பவர்களைத் தயவு செய்து இழிவாகக் கருதாதீர்கள். அவர்கள் அறிந்துதான், விளைவுகள் என்னென்ன ஏற்படும் என்பதைத் தெரிந்துதான் இதிலே ஈடுபட்டிருக்கிறார்களே தவிர, நீங்கள் கருதுகிறபடி சிறுபிள்ளைத்தனமாக இதிலே ஈடுபடவில்லை.

இங்கே இருக்கின்றவர்கள் ஏதோ நீங்கள் துப்பாக்கியைத் தூக்கியவுடன் அதை எதிர்த்து நிற்க முடியாதவர்கள் என்று கருதாதீர்கள். இருக்கின்ற உள்ளமே ஒன்றுதான். அது போகப்போவதும் ஒரு தடவைதான். அவ்வாறு போவது பிரிவினைப் பிரச்சினைக்காகப் போகட்டும் என்ற உணர்வில்தான் எங்கள் பக்கத்தில் இருக்கின்றவர்கள் இருக்கிறார்கள்.

அந்த உணர்வு எங்களோடு பிறந்தது. அவர் பழகும் இடத்தில் அப்படிப்பட்ட தியாகிகள் வரிசை ரொம்பவும் குறைந்து, மற்றவர்கள் அதிகமாக இருக்கும் நேரத்தில் அவர் காங்கிரஸ் கட்சியில் இருப்பதால் அந்தப் பக்கத்தில் இருக்கும் வீரமும் இன்றையதினம் அவருக்குப் புரியாது.

பெரிய நாடு ஏன்?

இன்னொன்றையும் நான் கேட்க விரும்புகிறேன். பெரிய நாடாக ஏன் இருக்க வேண்டும்? எதற்காக இருக்க வேண்டும்? ஒரு நாடு பெரிய நாடு, சின்ன நாடு என்பதற்கு என்ன அடையாளம் வைத்திருக்கிறார்கள்? ஒரு நாடு, இத்தனை மைல் நீளம், இத்தனை மைல் அகலம் இருக்க வேண்டுமென்ற கணக்கு இருக்கிறதா?

சிறுபிள்ளையை ஏமாற்றுவது போல், இரண்டு வெல்லக்கட்டியை எடுத்துக்கொண்டு இது பெரிதா, அது பெரிதா என்று ஏமாற்றும் தகப்பனைப் போல், 'இந்தியா' வரையில் காட்டி, இவ்வளவு இருக்க வேண்டுமென்கிறீர்களா? எந்த அர்த்தத்திலே பேசுகிறீர்கள்? "Economic viability," பேசுகிறீர்களா? "Military viability" பேசுகிறீர்களா? அல்லது "Political viability" பேசுகிறீர்களா? எதிலே பேசுகிறீர்கள்?

அப்படிப் பார்க்கப் போனால் ஒவ்வொரு நாட்டின் எல்லையும் அறிந்து இன்னின்ன அளவில்தான் நாடு இருக்க வேண்டும், அப்போதுதான் தேசீய நாடாகும் என்று சொல்லுங்கள். நம்முடைய பண்டித நேரு அவர்கள் அடுத்து ஐரோப்பாக் கண்டத்தில் நடக்கும் மகாநாட்டில் ஐரோப்பவிலுள்ள சிறு சிறு நாடுகளின் எல்லையைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லலாமே! அவருக்கு அந்த அலுவல் இல்லையென்றால் நம்முடைய நிதியமைச்சர் அங்கு போய் வந்து பழக்கமுள்ளவர் - சொல்லிவிட்டு வருவார். அவர்களும் கேட்டுக் கொள்ளுவார்கள்! உலகமே ஒன்றாக ஆகவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். உண்மை. 'என்னுடைய நாடு என்னிடத்தில், நாம் எல்லாம் சேர்ந்து ஒன்றாகலாம்'. யார் எல்லைக் கோட்டைக் கலைக்கிறார்கள்?

ஆகையால் இந்திய ஒற்றுமை, இந்தியா என்று சொல்வது கட்டுப்பட்டுப் போயிருக்கும் ஒரு இடத்தில் இருப்பதால் - ஆங்கிலத்தில் சொல்வதானால் "They are maintaining the Status-quo"- இருப்பதை ஆதரிக்கிறார்கள். ஆதரிப்பதிலே சுவை இருக்கிறது, பலன் இருக்கிறது. சில வேளைகளில் எளிதாகவும் இருக்கிறது. ஆனால், தேவைப்படுவதைக் கேட்பதில்தான் எரிச்சலை மூட்ட வேண்டிவரும், பலபேருடைய பகைவரும். பழிச்சொல் வரும். தேவைப்படுவதை கேட்பவர்கள், இருப்பதைக் கொண்டு திருப்தியடையமாட்டார்கள் என்பதை நான் நிதியமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

உலகத்தின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால், சிறிய நாடுகளால் உலகத்தின் பண்பாடு வளர்ந்திருக்கிறதா, பெரிய நாடுகளால் வளர்ந்திருக்கிறதா என்று பார்த்தால், உயர்தரமான தத்துவத்தை, இன்றும் போற்றத்தக்க நல்ல பண்பாட்டினை, கலையை, அரசியல் தெளிவை, இவை அத்தனையையும் ஐரோப்பா பெற்றிருந்தது. அந்த நாட்டிலுள்ள வரலாற்றின்படி, 'க்ரீக் சிட்டி ஸ்டேட்டி'லேயே தவிர ஐரோப்பாக் கண்டம் என்று வளர்ந்த பிறகு அல்ல.

சிறிய நாடும் பண்பாடும்

நம்முடைய நாட்டை எடுத்துக் கொண்டாலும், தமிழகம் தனியாக இருந்தபோதுதான் திருக்குறளை இயற்றிய வள்ளுவர்

பிறந்தார். அப்போதுதான் நம்முடைய நாட்டிலே அகமும் புறமும் இயற்றப்பட்டன. எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் அந்தக் காலத்திலேதான் தோன்றின. ஆகவே, விரிவாக இருந்தால்தான் அறிவு பரவும் என்று பொருளல்ல.

அதேபோன்று தான் சிறுநாடாக இருந்தபோதுதான் ரோம் நாட்டில் வல்லமை மிக்கோர் இருந்தனர். ஜூலியஸ் சீசருக்குப் பிறகு ரோமன் எம்பயர் - சாம்ராஜ்யமான பிறகு விரிவாகப் பல இடங்களில் வல்லமை குறைந்ததால் நாளாவட்டத்தில் உடைப்பட்டுப் போய்விட்டது என்பதைத் தான் நமக்கு உலக வரலாறு காட்டுகிறது. ஏன் உலக வரலாறு தரும் பாடத்திற்கு முரணாக அரசியல் அமைப்பை ஏற்படுத்திப் பார்க்க வேண்டும் அதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

சிறிய நாடுகள் இன்றையதினம் உலகத்தில் இல்லையா? சைபிரஸ் நாட்டின் அகல நீளம் எவ்வளவு? மால்டா தீவு எவ்வளவு சிறியது? அது தனியரசாக வேண்டுமென்று போராடிக் கொண்டில்லையா? இங்கிலாந்தின் பக்கத்திலுள்ள அயர்லாந்து தேசம் எதற்காகத் தனி நாடாக இருக்க வேண்டும்? இங்கிலாந்துடன் இணைந்திருந்தால் என்ன கஷ்டம்? அங்கு தோன்றிய தலைவர்கள் எல்லாம் தற்குறிகளா? பேசப்படும் பொருளும் வாதங்களும் அவர்கள் ஏற்ற தியாகமும் வீணுக்காகவா? இவைகளையெல்லாம் நீங்கள் நிச்சயமாக யோசித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைய தினம் ஐக்கிய நாடுகள் மன்றத்தில் 101 நாடுகள் இடம் பெற்றிருக்கின்றன. தனித் தனி நாடுகள், தங்களுடைய உறுப்பினர்களை - தங்கள் தங்கள் பிரதிநிதிகளை - ஐக்கிய நாடுகள் மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். என்றால் அத்தனை நாடுகள், தனிநாடுகளாக இருக்கின்றன என்பதுதான் அதன் உட்பொருளாகும். இதைப் பற்றி எடுத்துச் சொல்லுகிற நேரத்தில், நிதி அமைச்சர் அவர்கள் எங்களை இது மிகவும் சின்ன கூட்டம் என்கிறார்கள். உண்மை - இல்லை என்று யாரும் மறுக்கவில்லை. 150 பேர்களைப் பின்னால் வைத்துக் கொண்டிருக்கிற நிதி அமைச்சருக்கு முன்னால் 10-12 பேர்களை வைத்துக் கொண்டிருக்கிற நான், ஒரு பெரிய கூட்டம் என்று வாதாட முடியாது.

உள்நாட்டு யுத்தமா?

இனிமேல் நாட்டிலே பிரிவினையே கூடாது. உள்நாட்டு யுத்தமே வந்தாலும் கூடப் பிரிவினைக்கு ஒப்புக் கொள்ள முடியாது என்று பண்டித நேரு அவர்கள் பேசியிருப்பதை வைத்துக் கொண்டு கனம் சின்னதுரை அவர்கள் நாட்டை பிரிவினை செய்ய வேண்டும்

என்று சொல்லுகின்ற நாங்கள், உள்நாட்டு யுத்தத்தைத் துவக்கிவிடுவோம் என்று எண்ணிக் கொண்டு பேசினார்கள். நாங்கள் யாரும் அப்படி ஆரம்பிக்கப்போவதாக இல்லை. யார் யாரால், யாராலாகிலும் கொல்லப்பட்டால் இறக்கச் சித்தமாக இருக்கிறோமே தவிர, யாரையும் சாகடிக்க வந்தவர்களல்ல செத்த பிறகு.....

திரு ஏ. மாரியப்பன் :- இதை உங்கள் சரித்திரமே சொல்லுகிறதே.

திரு. சி.என். அண்ணாதுரை:- என்ன.... என்ன... சரித்திரம் படிக்க வேண்டுமா?... உன் கிட்டே கத்துக்கிறேன் அப்பா..... உன்கிட்டே கத்துக்கிறேன்.....

The Hon. Sri. C.Subramaniam : Sir, let this is not become a streat-quarrel.

Sri. C.N. Annadurai : I wish the Hon. Leader of the House controlled his own party-men instead of others.

Deputy Speaker : Order, order. The Hon. Member may continue his speech. I am here to control the proceedings in the house.

Sri. C.N. Annadurai : Sir, I am not concerned with the 'thorn' aimed at me. I am only concerned with the hon. Member's cutting the flow of my thought.

The Hon. Sri. C. Subramaniam : சரி பேசுங்கள்.

Sri C.N. Annadurai : So, the Hon. Minister, as the Leader of the House, is prepared to advice me only, and not his party-men?

The Hon. C. Subramaniam : The advice applies to both sides. But, as the Leader of a party the hon. Member Sri Annadurai has to set up a proper pattern and standard in the discussion. If he uses the singular from while addressing another hon. Members does he not expect it back himself?

Sri. C.N. Annadurai : Did I use the singular form?

The Hon. Sri. C.Subramaniam : Certainly the Hon. Member did.

Sri C.N. Annadurai : Olny when the Hon. Member opposite said that I should learn history or some such thing. I think I said like that and not other wise.

Sri. P.U. Shunmugam : rose.....

Deputy Speaker : Order, order. I appeal to the hon. Members to maintain discipline and order within the House. The hon. Member may continue his speech.

Sri. C.N. Annadurai : We shall forget that, sir.

The Hon. Sri C. Subramaniam : Very generous of you!

திரு. சி.என். அண்ணாதுரை:- உள்நாட்டு யுத்தத்தை நாங்கள் ஆரம்பிப்போம் என்று யாரும் தவறாக எண்ணிக்கொள்ளத் தேவையில்லை. இந்தியாவின் மிகப் பெரிய தலைவர் இப்படிப் பேசினார் என்றால், விரோதத்தை உண்டாக்கவதற்குப் பேசினாரே தவிர, நாங்கள் அல்ல உள்நாட்டுப் போரைத் துவக்கப்போவது. உள்நாட்டு யுத்தத்தைப் பற்றி மதுரையில் நமது நிதி அமைச்சர் அவர்கள் பேசியதைப் பார்த்தேன். அமெரிக்காவை நினைவு படுத்தி நாடு பிரியவேண்டுமென்று சொல்லி உள்நாட்டு யுத்தத்தை அமெரிக்காவில் நடத்தினார்கள் என்று சொன்னார்கள். அமெரிக்கப் போராட்டத்திற்கு அடிப்படை காரணம் ராஜ்ய சர்ககாருக்கும் மத்திய சர்க்காருக்கும் ஏற்பட்ட தகராறு அல்ல. அமெரிக்காவில் ஏற்பட்டஉள்நாட்டு யுத்தத்திற்கு காரணம், வடக்குப் பகுதிக்கும் தெற்குப் பகுதிக்கும் அடிமை வியாபாரப் பிரச்சினையில் ஏறபட்ட தகராறு காரணமே தவிர, ஒருவருக் கொருவர் ராஜ்ய அதிகாரத்திற்காக உள்நாட்டு யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை. அமெரிக்க வரலாற்றை - அமெரிக்காவிற்கே போய் வந்திருந்தாலுங்கூட - படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்காது என்று நினைக்கிறேன் - படித்துப் பார்த்து அடிமைப் பிரச்சினைக்கும் உள்நாட்டு யுத்தத்திற்கும் உள்ள தொடர்பை அறிந்து மற்றொரு இடத்தில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமெரிக்கா ஐக்கியப்பட்டதாகச் சொன்னாலும் அடிமைப் பிரச்சினை வரும்போது-நீக்ரோ பிரச்சினை வரும்போது வடக்கே இருக்கிறவர்களுடைய மனப்பான்மை வேறாக இருக்கிறது, தெற்கே உள்ளவர்களுடைய மனபான்மை வேறாக இருக்கிறது. ஆகையால் ரேஷியல் இன்டெக்ரேஷன்-இனங்களை எப்படி இணைப்பது-என்ற அந்த வேலையில் அவர்கள் இன்று ஈடுப்பட்டிருக்கிறார்கள்.

தனியாக இருந்ததைக் கேட்கிறோம்

அமெரிக்காவைக் காட்டி உள்நாட்டு யுத்தம் இங்கே நடக்கும் என்று சொல்வதைப்போல, நான் அமெரிக்காவையே ஆதாரத்திற்கு அழைக்கிறேன். அமெரிக்காவில் தோன்றிய உட்ரோ வில்ஸன்தான் "The principle of self-determination" - சுய நிர்ணய உரிமை ஒவ்வொரு பகுதிக்கும் வேண்டுமென்ற ஒரு முக்கியமான உண்மையை நாட்டுக்கும் உலகத்திற்கும் அளித்தார்கள். ஆகையால் அமெரிக்காவிலிருந்து எடுக்கக்கூடியது உள்நாட்டு யுத்தம் மாத்திரமல்லாமல், உட்ரோ வில்ஸன் பேசியிருக்கிற "The principle of self-determinaiton" சுய நிர்ணய உரிமை அதைப் பற்றியும் அவர்கள் எடுத்துக் கொள்ளலாம்.

ஆகையால் சுய நிர்ணய உரிமை என்ற அடிப்படையில் நாங்கள் தனி நாடு அமைய வேண்டும். நாம் தனிப்பட்ட பண் பாட்டுக்குச் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்தில், பிரிவினை என்று நீங்களாகத் தப்பு அர்த்தம் எடுத்துக்கொண்டு 'ஐயையோ உள்ளதிலிருந்து பிரிக்கலாமா' என்று நீங்களே எடுத்துக்கொண்டு அடிப்படையை ஆராய மறுக்கிறீர்கள்.

பொதுப்படையாகப் பேசும்போது கொச்சை மொழியில் பிரிவினை என்று சொல்லப்பட்டாலும், இருப்பதிலிருந்து பிரித்து எடுப்பது அல்ல. தனியாக இருந்ததை, யாரோ எடுத்துக் கொண்டு போய் இணைத்துவிட்டிருக்கிறார்கள். இந்த இணைப்பு நல்லதல்ல என்று தோன்றியிருப்பதால் அதிலிருந்து விலகவேண்டும். தனித்து இயங்க வேண்டும், தனி அரசாக வேண்டும் என்று சொல்லுகிறோம்.

அதைவிட்டு, உடனே பிரிவினையினால் ஏற்பட்ட பாகிஸ்தானைப் பார்ப்போம் என்று சொல்லுகிறார், நிதி அமைச்சர், பாகிஸ்தானைத்தான் பார்ப்போம். பாகிஸ்தான் பிரிவினையினால் ஏற்பட்ட பயங்கர சம்பவத்திற்குக் காரணம், ஏற்பட்ட சோகத்திற்குக் காரணம், பிரிவினையினால் ஏற்பட்டதல்ல - பிரிவினைக்குப் பிறகு இந்தியாவில் இருக்க வேண்டிய ஹிந்துக்கள் பாகிஸ்தானத்திலும் - பாகிஸ்தானுக்குச் சொந்தக்காரர் என்று நீங்கள் சொல்லுகிற முஸ்லிம்கள், இந்தியாவிலும் இருந்த காரணத்தினால் இந்த கலவரங்கள் ஏற்பட்டன. அங்கு ஏற்பட்டது பிரதேசப் பிரிவினையே தவிர மக்கள் பிரிவினை அல்ல.

இன்றைய தினம் திராவிட நாட்டுப் பிரிவினை வேண்டு மென்று சொல்லும்போது பத்து மைல் கூட்டினாலும் குறைத்தாலும் எந்த வெளிநாட்டுக்காரர்கள் உள்ளே வந்து அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்? இதனால் என்ன பயங்கரமான கலவரம் வந்துவிடும் என்று பயமுறுத்துகிறார்?

இங்கு கலவரம் வரும் என்று சொல்லும்போது, பார்வை தெரியாத குருடன் ஒரு குழந்தை செத்துவிட்ட வீட்டின் தெருத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு 'குழந்தை ஏன் செத்துவிட்டது' என்று கேட்டு, 'பால் குடித்து செத்துவிட்டது' என்று ஒருவன் சொல்ல, 'பால் எப்படி இருக்கும்' என்று அந்தக் குருடன் கேட்டு, 'அது கொக்குபோல் இருக்கும்' என்று கதை சொல்ல, 'கொக்கு எப்படி இருக்கும்' என்று குருடன் கேட்க, அதற்கு அவன் கையை வளைத்துக் காட்ட, அதைத் தடவிப் பார்த்த குருடன் 'இப்படிப் பட்டது தொண்டைக்குள் போனால் பிழைக்கவா பிழைக்கும்' என்று சொன்னதுபோல, பாகிஸ்தானை இதற்குக் காரணம் காட்டுகிறார்கள்.

சிலரது கருத்துக்கள்

வெள்ளைக்காரர்கள் ஆட்சி காலத்தில் இருந்து இந்திய தேசிய ஒற்றுமை என்று பேசப்பட்டது இல்லை என்று என்னைப் போன்றவர்கள் சொன்னால் நிதி அமைச்சர் நம்பமாட்டார். நிதி அமைச்சர் அவர்களால் நல்லவர்கள் என்று ஏற்றுக் கொள்ளக் கூடிய சிலருடைய கருத்துக்களிலிருந்து ஆதாரங்களை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

"At the time of shaking off the British yoke, there was a natural passion for emphasising the oneness of India. It was good and necessary but perhaps the North is rather overdoing it today.

As I see it, India having obtained her freedom from western domination is now beginning to feel the re-awakening of her many different areas. This is really a healthy sign or redawning self-expression and the Centre would do well to humble its pride and remember that this is only beggining of the redawning which unless accepted as a natural phenomenon and handled sympathetically will end in breaking up the very unity aimed at.

To go from the North right down to the South of India is like entering another World.

இதைச் சொன்னவர்கள், காந்தியாருடைய பிரதம சிஷ்யராக இருந்து வந்த மீரா பென் ஆகும் - அவருக்குக் கூடவா திராவிடப் பித்து பிடித்துவிடும்? அவர்கள் நாட்டை சுற்றிப் பார்த்தார்கள். சுயராஜ்யத்திற்குப் பிறகு - 10 ஆண்டுகளுக்குப் பிறகு - மக்களுடைய உள்ளுணர்ச்சியைப் பார்த்தால் புதிதான மன எழுச்சிப் பெற்றிருக் கிறார்கள் - தன்னைத் தான் அறிந்து கொள்ளத் தலைப்பட்டி ருக்கிறார்கள் என்று அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல - "Unity without willing co-operation between the groups and the Central power is worse than open separation" என்று சொல்லியிருக்கிறார்கள்.

நாங்களாகப் பிரிந்து போகலாம் என்று சொன்னால் குற்றம் சாட்டுகிறார்கள். இருந்துகொண்டிருக்க வேண்டும் என்று சொல்லுகிறவர்கள், நடந்துகொண்ட முறை என்ன? நம்மைத் தள்ளி விடுங்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் உலகத்திற்கே வழிகாட் டும் அளவுக்கு நாம் பண்போடு நடந்து கொண்டு வந்திருக்கிறோம்.

அஸ்ஸாம், வங்காளத்திலே நடந்த மொழிப் போராட்டத்தைப் பற்றி நமது நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை ஒரு ஆதாரமாக வைத்துக் கொண்டே ஒற்றுமை மனப்பான்மையை பெற முடியவில்லை என்று சொல்வது அவ்வளவு தெளிவான கருத்தல்ல. அவர்களுக்குப் பெற முடியவில்லை யென்றால், நமக்கும் அவர்களுக்கும் ஈராயிரம்

ஆண்டுக் காலமாக பண்பாட்டிலே வெவ்வேறு ஆதாரங்கள் காணப்படுகின்றன. அந்த ஆதாரத்தை இன்றையத் தினம் நடைமுறை அளவுக்குக் கொண்டுவந்து தேசிய ஒற்றுமைப்பாட்டுக்கு ஆதாரமாகக் காட்டுவது நல்ல அடிப்படையில் அல்ல.

இறுக்கிப் பிடிக்க முடியாது

தாகூர் பல அரிய கவிதைகள் பாடியிருக்கிறார். அதே போல் தேசியக் கவிஞராகிய பாரதியார் மிகச் சிறந்த கவிதைகளை நாட்டுக்கு இயற்றிக் கொடுத்திருக்கிறார். இவைகளைத் தவிர, வேறு ஏதாவது நல்ல கருத்துக்களையோ, கவிதைகளையோ எழுதி வைத்திருக்கிறீர்களா? இன்றைக்கு அவர்களைக் காட்டிலும் மேலான கவிதைகள் இயற்றக் கூடியவர்கள் இனி தோன்றப் போகிறார்களா? அப்படிப்பட்டவர்கள் யாரையேனும் நீங்கள் ஒளித்து வைத்திருக்கிறீர்களா? பண்டித ஜவஹர்லால் நேருவைக் காட்டிலும் நாட்டை நல்ல முறையில் இறுக்கிப் பிடிக்கக்கூடிய தலைவர்கள் யாரேனும் இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா? அப்படி ஒருவரும் இருப்பதாகத் தெரியவில்லை.

பண்டித ஜவஹர்லால் நேரு, முயற்சி செய்தால் நாட்டைப் பிரிக்காமல் இறுக்கி வைத்திருக்க முடியும். ஆனால் அவரே ஓரளவுக்கு நாட்டின் ஒற்றுமைக்காகவும், தர்மத்திற்காகவும், அனாவசியமான கிளர்ச்சி நாட்டிலே கூடாது என்பதற்காகவும், எல்லாவற்றையும் காட்டிலும் இயற்கைக்கு ஒவ்வாத முறையில் நடந்துகொள்வது நியதி அல்ல என்ற முறையில் நடந்து கொண்டு வருகிறார்.

இயற்கையான வரலாற்றுக்கு முன் இறுக்கிப் பிடிப்பதென்பது முடியாத காரியம். ஆகவேதான், இனியும் இறுக்கி வைத்துப் பிடிப்பதில் அவர் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. அந்த அடிப்படையில்தான் அவ்வப்பொழுது, அந்தந்த இனத்துக்கு ஒரு தனி அரசு அமைத்துக் கொடுத்துக் கொண்டு வருகிறார். ஆகவே அந்த முறையில் இதைக் கவனித்து ஆராய்ந்து பார்த்தால் ஒரு நல்ல முடிவைக் காணமுடியும்.

இந்தியன் யூனியன், அமைந்து இருக்கிறதென்று சொல்லப்படுகின்றது. இந்த இந்தியன் யூனியன், காமன்வெல்த்தில் ஒரு நாடாக இருப்பது போல், பல நாடுகள் பிரிக்கப்பட்ட பின்னருங்கூட, காமன்வெல்த்தில் எப்படி பல நாடுகள் அங்கம் வகித்துக் கொண்டு வருகிறதோ, அதைப் போல, நம்நாட்டிலும் ஆங்காங்கு தனி அரசுகள் ஏற்பட்ட பிறகும் காமன்வெல்த்திலே அங்கம் வகிக்கக்கூடிய நாடுகளாக அவைகளும் திகழலாம். அப்படி

ஒவ்வொன்றும் ஒரு உறுப்பினராகச் சேர்ந்து உலகம் பூராவும் ஒன்று என்று நினைக்கக்கூடிய வகையிலே சேர்ந்து கொள்ளலாம். ஆகவே பிரிந்து போகிறோம் என்று யாரும் கருதத் தேவையில்லை.

வரலாற்று அடிப்படை

நம்முடைய உரிமையை நாம் கேட்கிறோம். அதுவும் வரலாற்றின் அடிப்படையிலே, பண்பாட்டின் அடிப்படையிலே கேட்கிறோம். எங்களால் முடிந்தால் பெறுகிறோம். இல்லையென்றால் இந்த முயற்சியில் தோல்வி கண்டு மடிந்து போகிறோம். ஆனால் நாங்கள் மடிந்து போனாலும் இந்த உணர்ச்சி மட்டும் என்றைக்கும் மடிந்து விடாது என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெளிவாக திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நீங்கள் இதன் உண்மையை உணராத காரணத்தால் தான் இவ்வளவு தூரம் சொல்ல வேண்டியிருக்கிறது. இதற்காக ஒரு விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். இரண்டு நாடுகள் ஒன்றாக இணைந்து நல்ல முறையிலே ஆட்சி நடைபெற முடியுமா என்பதைச் சமீபத்திலே நடைபெற்ற சம்பவம் ஒன்றை எண்ணிப் பார்க்கும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன். 1958-லே எகிப்துக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய சிரியா என்ற நாடும் எகிப்தும் சேர்ந்து 'யுனைடெட் அராபிக் ரிபப்ளிக்' - அதாவது 'அராபிய தேசியம்' என்ற வகையில் இணைந்து ஆட்சி நடந்தது. அப்படி இரு நாடுகளும் ஒன்றாக இணைந்தபோது, நம் நாட்டுத் துணை ஜனாதிபதி அவர்களும், குடியரசுத் தலைவர் அவர்களும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பினர். பத்திரிகைகள் எல்லாம் தலையங்கங்கள் எழுதின. மூன்று ஆண்டு காலமாக சிரியா, எகிப்து ஆசிய நாடுகளிலே அராபிய தேசியம் என்ற பெயரிலே ஆட்சி நடந்தது. ஆனால் சிரியாவில் எகிப்தின் ஆதிக்கம்தான் நடைபெற்று வந்ததாம். நேற்றைய தினம் பிரித்துக் கொண்டார்கள்.

ஆகவே இரண்டு நாடுகள் ஒன்று சேர்ந்து ஆட்சி நடத்த முடியவில்லை என்பது இதிலிருந்து நன்கு தெரிந்த விஷயம். ஆனால் உதாரணத்திற்கு, சேர்ந்தவர்கள் பிரிவதற்கும், பிரிந்தவர்கள் சேருவதற்கும் சொல்ல வேண்டுமென்றால் நிரம்ப இருக்கின்றன. ஆகவே இந்த உதாரணத்தைக் காட்டி, அதை மறுக்கவோ அல்லது அந்த உதாரணத்தைக் காட்டி, இதை மறுக்கவோ செய்யலாம் என்று நினைத்தால் அது தவறான கருத்தாகும். அந்த ஆராய்ச்சிக்கு இப்போது நாம் இறங்கத் தேவையில்லை.

நேரம் வரும்

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். அவர்கள் சொன்னபோது நேரு அவர்களின் குரல் என் காதில் கேட்பது போல் தொனித்தது. அதாவது 'இனி பிரிவினை இல்லை' என்று சொன்னார். அப்படி அவர் சொன்னதிலிருந்து பார்க்கும்போது முன்பு ஏதோ ஒரு பிரிவினைக்கு வழி இருந்தது போலவும், அதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள் என்றும் ஊகிக்க முடிகிறது. எது எப்படியிருந்தாலும் என்றைக்காவது ஒரு நாள், சூழ்நிலை இவர்களை நிச்சயம் இணங்க வைக்கத்தான் போகின்றது. நாங்கள் அந்தச் சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்டு வருகிறோம். நேரம் வருகின்ற காலத்தில், அது தானாகவே பயனைக் கொடுக்கும். ஆனால் இன்றைக்கு இப்படிப் பேசிவிட்டு, இனி பிரிவினை கிடைக்காது என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது.

In age of Atomic bomb and the rapidly changing world, problems like that of Pakistan has no bearing and meaning.

நம்முடைய பண்டித நேரு அவர்கள் சொன்னதுதான் இது. அணுகுண்டு சகாப்தத்திலே அற்பத்தனமாக பகுதிகள் கேட்கிறார்கள் என்று சொல்லி, அதற்குப் பதிலாக இதிலே எவ்வித பவரும் இல்லை, மீனிங்கும் இல்லை என்று சொல்லப்படுகிறது. அதாவது இதிலே எவ்விதப் பொருளும் அர்த்தமும் இல்லையென்று சொல்லப்பட்டது. அதுமட்டுமல்ல, நிதி அமைச்சர் அவர்கள் மதுரையிலே பேசுகையில் பண்டித நேருவை நேரில் வைத்துக் கொண்டு பேசியிருக்கிறார்கள்.

"American who fought the Civil war to keep their Union together can appreciate how a proposal to divide the country is resented by vast numbers of the Indian people."

உள்நாட்டு யுத்தத்தை நடத்தியாகிலும் அமெரிக்கர் தங்களை, தங்கள் நாட்டைக் காப்பாற்றிக் கொண்டார்கள் என்பதை மட்டும் உணர்ந்துள்ளார்கள் என்று கருதுகிறேன். ஆனால் இங்கே மட்டும் ஒரு சிலரை அடக்கி விட்டால் போதும், மற்றவர்களைப் பற்றி எந்தவிதமான கவலையும் இல்லை என்று நினைக்கிறார்கள்.

நான் நம்பும் நேரு

இப்படித்தான் பண்டித நேரு அவர்களும் முதலிலே பேசினார். ஆனால் கடைசியில் பாகிஸ்தான் பிரச்சினை வலுவடைந்து, பாகிஸ்தான் தனியாகப் பிரிந்தது. இதுபற்றி பிறகு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஒரு பதில் சொல்வார் என்று

கருதுகிறேன். இதற்கு அமைச்சர் அவர்கள் ஒரு பதில் சொல்லக் கூடும். ஆனால் அது சரியல்ல. அதாவது வெள்ளைக்காரர்கள் இருந்தார்கள். அது நடந்தது என்று சொல்லக் கூடிய ஒரே ஒரு பதிலைத்தான் அவர்கள் வைத்திருக்கக் கூடும். ஆனால் வெள்ளைக்காரர்கள் இருந்தார்கள். அதனால் கொடுத்துவிட்டோம் என்று சொல்வதைவிட, நம்முடைய நண்பர் கனம்சின்னதுரை அவர்கள் சொல்வது போல் இவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்ற ஓர் எண்ணம் இருந்திருக்குமானால், இரத்தம் சிந்தியாவது இதைத் தடுத்திருக்க முடியும். ஆனால் அவர்களுடைய கொள்கை அது அல்ல என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

பாகிஸ்தான் பிரச்சினை வலுவடைந்தவுடன், "In this age of Atomic bomb, there is no place for Pakistan" என்று முன்பு பேசிய அதே நேரு அவர்கள்தான். "The congress position was that India should remain a National unit. But at the sametime if the population of a unit specifically declared that they would not be in the Common unit, then the Congress would not compel them to stay in the unit. Thus the Congress recognized the right of separation or self-determination." என்றார்.

நான் இந்த நேரு அவர்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். நமது நிதி அமைச்சர் அவர்கள், உள்நாட்டு யுத்தம் வந்தாலும் தடுத்துத் தீர வேண்டுமென்றார்கள். ஆனால் அப்படிப்பட்ட நேருவை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இப்போது நான் சொன்ன நேருவைத்தான் நம்புகிறேன்.

உரிமைக்கே மதிப்பு

காலம் தான் வரவேண்டுமென்ற அருமையான கருத்தைப் பண்டிதநேரு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இங்குள்ளவர்களோ, எங்கள் கட்சியிலே உள்ள முக்கியமான 10, 15 பேர்களை ஒழித்துக் கட்டிவிட்டால், பிரச்சினை தீர்ந்தது என்று நினைக்கிறார்கள். இத்தகைய அடக்குமுறையைத்தான் செய்ய வேண்டுமென்று இவர்கள் சொல்கிறார்கள்.

இந்தப் பிரச்சினை, இந்த லட்சியம் நாங்களாக எடுத்துக் கொண்டதல்ல. அல்லது உங்களைப் புண்படுத்த வேண்டுமென்றோ, விரோதித்துக் கொள்ள வேண்டுமென்றோ நாங்கள் ஏற்படுத்திக் கொண்டதல்ல.

உங்களிடத்திலே நட்பாக இருக்க வேண்டும். நேசமாக இருக்கவேண்டுமென்ற நல்லெண்ணம் எங்களுக்கெல்லாம் இருக்கிறது. உங்களுடன் ஒத்துழைத்து உங்களுடைய நல்லெண்ணத்தையும், மகிழ்ச்சியையும் நாங்களும் பெற வேண்டுமென்றுதான் நினைக்கிறோம்.

இப்போது நான் பேசுகின்ற அத்தனை பேச்சுக்களையும் காங்கிரஸ் உறுப்பினர்கள் எவ்வளவு அருவறுப்போடு கேட்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் அதையும் நான் தாங்கிக் கொள்ளுகிறேன். உங்களையெல்லாம் நான் மதிக்கிறேன். அதைவிட மேலாக நான் எங்கள் உரிமையை மதிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

• • •

சி. சுப்பிரமணியம் பதிலுரை

உதவி சபாநாயகர் அவர்களே!

திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் அவர்கள் கொஞ்சம் அதிக நேரம் எடுத்துக் கொண்டு விரிவாகப் பேசியதற்காக நான் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால் பலபேருக்கு எந்த அடிப்படையிலே இந்த இந்திய தேசீய ஒருமைப்பாடு கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொல்கிறார்கள் என்பதைப் பற்றி விளக்கம் இல்லாமல் இருந்தது. இதற்கு அவர்கள் இன்று விளக்கம் தந்து இருக்கிறார்கள்.

அவர் பேசாதது

இந்த விளக்கம், வரலாற்று அடிப்படையிலே திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள் தன்னுடைய உரையில் 'குருக்ஷேத்திரம்' என்று குறிப்பிட்டுச் சொன்னது முதல் அதிலேயிருந்து எடுத்து இன்றைக்கு இந்தியா ஒரு அரசியல் ஆட்சியின் கீழ் உள்ளது நல்லதா என்ற ஒரு கேள்வியைப் போட்டு, அதற்கு வரலாற்றிலே இந்தியா என்றைக்குமே ஒரு கொடியின் கீழ் இல்லாமல் இருந்திருக்கிறதென்றும், என்றைக்குமே ஒரு எல்லைக் கோட்டுக்குள் அடங்கி இருக்கவில்லையென்றும் எடுத்துச் சொன்னார்கள். இதற்கெல்லாம் வரலாற்றின் அடிப்படையிலே ஆதாரத்தை எடுத்துக் காண்பித்தார்கள்.

ஆனால் இவ்வளவு பேசிய அவர்கள், இன்றைக்கு இந்தியா ஒரே ஆட்சியின் கீழ் இருப்பதினால் என்னென்ன தடைகள், என்னென்ன குறைகள் நமக்கு இருக்கின்றன என்பதை மட்டும் பேசவில்லை.

உலக நாடுகளைப் பார்

என்றைக்கும் இல்லாத அரசியல் ஒற்றுமை, ஒரு அரசின் கீழ் எதற்காக இன்று வரவேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால்

உலகத்தில் இன்றைக்கு ஒன்றாக இருக்கக் கூடிய எந்த நாட்டையும் எடுத்துக் கொள்ளுங்கள். முதலில் பிரிட்டீஷ் நாட்டையே எடுத்துக் கொள்ளுங்கள். இன்றைக்கு பிரிட்டன் ஒரே அரசாங்கத்தின் கீழ் வருவதற்கு முன்னால் வேல்ஸ், ஸ்காட்லாந்து, இங்கிலாந்து ஒன்றாக இணைந்திருந்ததா? ஒரு பகுதியினர் இன்னொரு பகுதியினருடன் சண்டை போட்டுக் கொண்டுதான் இருந்தார்கள். ஒரு பக்கத்தில் இருக்கும் அரசர், இன்னொரு பக்கத்தில் இருப்பதைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சாம்ராஜ்ய அடிப்படையில் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்களே தவிர, ஒன்றுபட்டிருந்ததை அங்கு காண முடியாது. இன்றைக்கு அந்த நாடு ஒன்றாக இருந்து ஒரே அரசியலின் கீழ் நடைபெற்று வருகிற காட்சியைக் காண்கிறோம்.

ஆயிரம் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு பிரிந்து சண்டை போட்டுக் கொண்டிருந்த நிலை இருந்திருந்தாலும் பிரிந்து போக வேண்டும் என்ற ஒரு உணர்ச்சி ஒரு சிலருக்கு ஏற்பட்டாலும் கூட, ஒன்றுகூடி இருந்தால்தான் நல்லது என்று உணர்ந்து ஒன்று சேர்ந்ததால், அதன் காரணமாக இன்றைக்கு உலகத்தில் முன்னுக்கு வரக்கூடிய நிலைமையை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். அந்த நிலைமைதான் பிரிட்டனில் ஏற்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக ரஷ்யாவை எடுத்துக் கொள்வோம். ரஷ்ய வரலாற்றிலே முற்காலத்தில் அது ஒரு ஆட்சியின் கீழ் இருந்திருக்கிறதா என்று பார்த்தால், கிடையாது, நம் நாட்டிலாவது கலாச்சார ஒற்றுமை, பண்பு ஒற்றுமை மத ஒற்றுமை ஓரளவுக்கு இருந்து வந்திருக்கிறது. பரந்த அந்த நாட்டில் ஒரு இனத்திற்கும் மற்றொரு இனத்திற்கும் தொடர்பே கிடையாது. தொடர்பு எற்பட்டிருந்தால் சாம்ராஜ்ய அடிப்படையில், ரஷ்யன் 'எம்பையர்' என்ற அடிப்படையில் ஒரு சிலகாலத்தில் ஏற்பட்டிருந்தாலும், மற்ற காலத்தில் ஏற்படவில்லை. ரஷ்ய மக்கள் தொன்றுதொட்டு நாங்கள் பிரிந்து வாழ்ந்திருக்கிறோம். எதற்காக இன்று ஒற்றுமையாக ஒரே அரசியலின்கீழ் இருக்க வேண்டும் என்று கேட்க வேண்டிய நிலைமை இல்லை.

அதே மாதிரி அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் முதன் முதலில் தனித்தனி ராஜ்யமாக அமைந்திருந்தது. ஸ்டேட்டுகளில் வெவ்வேறு மொழிகள் பேசப்படும் பகுதிகள் ஐரோப்பாவிலிருந்து, பல நாடுகளிலிருந்து வந்தவர்கள் என்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் இன்று ஐக்கியப்பட்டு ஒரு நாடாக அமைந்து உலகத்திலேயே முதன்மை பெற்று விளங்குகிறது.

திராவிட நாடு எங்கே இருந்தது?

மனித சமுதாயத்தில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிற காலத்தில் நாமெல்லாம் வாழ்கிறோம். ஆரம்ப காலத்தில் குடும்பங் குடும்பமாக கூடியிருந்தால் போதும் என்று நினைத்திருக்கலாம். ஆனால் இன்று சமுதாயம் வளர்ச்சி அடைந்து கொண்டே வந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். ஆகையினாலே, தொன்றுதொட்டு வரலாற்றைப் பார்த்தால் நாடு பிரிந்திருந்தது. ஆதலால் அது இன்றும் பிரிந்துதான் இருக்க வேண்டும் என்கிற வாதம் பொருந்தாது என்பதை அவர்களுக்குப் பணிவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அப்படி அவர்களுடைய வாதத்தை ஒப்புக் கொண்டு எடுத்துக் கொண்டாலும், வரலாற்று அடிப்படையில் பார்த்தால் எந்தக் காலத்தில், 'திராவிட நாடு' ஒன்றாக, ஒரே அரசியலின் கீழ் இருந்திருக்கிறது?

வரலாற்றைத் திருப்பித் திருப்பிப் பார்ப்போமானால் வேண்டுமானால் ஒரு பக்கத்தில் விஜயநகர மன்னன் சில பகுதிகளை சேர்த்துக் கொண்டிருக்கலாம், இன்னொரு பக்கத்தில் சேர, சோழ அல்லது பாண்டிய மன்னன் வேறு சில பகுதிகளைச் சேர்த்துக் கொண்டிருக்கலாம். அந்த அடிப்படையில் ஒரு சில பகுதிகள் சேர்ந்திருக்கலாமே ஒழிய, திராவிட நாடு எக்காலத்திலும் ஒன்றாகச் சேர்ந்திருந்ததில்லை.

கேலி அல்ல

வரலாற்றில், தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டால், தமிழ்நாடு என்றைக்கு ஒரு அரசியலின் கீழ் இருந்திருக்கிறது? மூவேந்தர்கள் ஆண்ட நாடுதானே இது. அதன் காரணமாக வரலாற்றின் அடிப்படையிலே சேரநாடு, சோழநாடு, பாண்யடிநாடு, தொண்டைநாடு, கொங்குநாடு என்று பிரிக்கப் போகிறார்களா?

இதை, நான் கேலிக்காகச் சொல்லவில்லை. வரலாற்று அடிப்படையில் அவர்களைக் கேட்கிறேன்? என்றைக்குத் தமிழ்நாடு ஒரே அரசியலின் கீழ் இருந்தது? என்றைக்கும் மூவேந்தர்கள் ஆண்டு வந்தார்கள். ஒருவருக்கொருவர் சண்டைப் போட்டுக் கொண் டிருந்த நிலைமை இருந்ததே தவிர, ஒரே ஆட்சியின் கீழ் இருந்ததில்லை.

வரலாற்று அடிப்படையில், தனியாகப் பிரிய வேண்டும் என்று வாதம் செய்வார்களேயானால், திராவிட நாடு அமைந்திருக்கக் கூடிய காலத்தில், திரு. அண்ணாதுரை பிரதம மந்திரியாக உட்கார்ந்திருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

வரலாற்றில் என்றைக்கு இந்திய நாடு ஒன்றாக இணைந்திருந்தது. ஆகவே, திராவிடநாடு பிரிய வேண்டும் என்று சொல்லும்பொழுது, வரலாற்றின் அடிப்படையில் தமிழ்நாடும் பிரிந்துதானே இருந்தது. சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, கொங்குநாடு, தொண்டைநாடு என்று பிரிந்து தனித்தனி அரசாகத்தானே இருந்தது? எனவே, இதையெல்லாம் பிரித்துக் கொடுக்கத்தானே வேண்டுமென்று சொன்னால், அப்பொழுது திரு. அண்ணாதுரை அவர்கள் சோழ நாட்டைப் பிரித்துக் கொடுத்துவிடுவார்களா, பாண்டிய நாடு முதலியவற்றையும் பிரித்துக் கொடுத்து விடுவார்களா? அப்பொழுது அவர்களுடைய விடை என்னவாக இருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.

ஏமாற்ற முடியாது

இதிலே இருக்கக்கூடிய முக்கியமான கஷ்டம் இதுதான். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கேட்கிறார்கள், ஏன் இமயமலையை எல்லையாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று? நானும் கேட்கிறேன், ஏன் ஹைதராபாத்தை எல்லையாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று. இம்மாதிரி இரண்டு பக்கமும் வாதம் செய்யலாம்.

வரலாற்றை வைத்துக் கொண்டு யாரையும் ஏமாற்ற முடியாது. வரலாற்றின் அடிப்படையில் பார்த்தால், எந்தப் பகுதியும் சேர்ந்திருக்க முடியாது. நகரத்தோடு நகரமும் கிராமத்தோடு கிராமமும் சேர்ந்திருக்க முடியாது. ஊரோடு ஊர் சேர்ந்திருக்க முடியாது. பிறகு குடும்பமும் குடும்பமுங் கூடச் சேர்ந்திருக்க முடியாது என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

இன்றைக்கு மனித சமுதாயம் வளர்ந்து கொண்டே வளர்ச்சியடைந்து வருகிறது. பழைய காலத்தில் அவ்வாறு பிரிந்து இருந்தது, ஆகவே அதே முறையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திக் கொண்டிருப்பதில் பயனில்லை. இன்றைக்கு மனித சமுதாயம் வளர்ந்து கொண்டே போகிறது. இமயத்தைத் தாண்டுவது மட்டுமல்ல, நாம் வேண்டுமென்று சொன்னாலும், வேண்டாமென்று சொன்னாலும், ஒரு காலத்தில் தற்காலத்திய நாட்டு எல்லைகளெல்லாம் இருக்கப் போவதில்லை. அந்த முறையில் மனித சமுதாயம் வளர்ச்சியுற்று வருகிறது.

தமிழைத் தியாகம் செய்வதா?

இந்திய ஒற்றுமை என்று சொன்னால் அதற்காகத் தமிழைவிட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்களா என்று

திரு. அண்ணாதுரை அவர்கள் கேட்டார்கள். திராவிடத்தில் நான்கு மொழிகள் இருப்பதால், திராவிட ஒற்றுமை என்று வரும் பொழுது தமிழை விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். திராவிட ஒற்றுமைக்காக, தமிழ் மொழியைத் தியாகம் செய்வதற்கு தயாராக இருக்கிறார்களா? உயிரைக் கொடுப்பதற்குத் தயாராக இருப்பவர்கள், தமிழ் மொழியை விட்டுக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்கிற முறையில் சொல்ல முடியுமா?

ஆனால் அதற்கு அவசியம் இல்லை என்பதை விளக்க விரும்புகிறேன். பன்மொழி பேசுகிற நாடுகள் இணைந்திருக்க முடியும் என்பது எங்கள் கருத்து.

சந்தேகம் தீர்ந்தது

இதுவரையில் எனக்கு மனதில் கொஞ்சம் சந்தேகம் இருந்தது, எந்த அடிப்படையில் திராவிட நாடு வேண்டுமென்று நினைக்கிறார்கள் என்பதுபற்றி. இன்றைக்கு அது பற்றி விளக்கம் கொடுத்திருக்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள். அதற்காக அவர்களுக்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். மக்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். நாடு கடமைப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வரலாற்று அடிப்படையில், ஆயிரம், இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு இருந்த நிலைமையை எடுத்துச் சொல்லி, அந்த அடிப்படையில் வாழ விரும்புகிறோம் என்று சொன்னால், அதைப் பற்றி நான் என்ன சொல்லுவது என்பது எனக்குப் புரியவில்லை. மற்றவர்கள்தான், மக்கள்தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

பின்னோக்கிப் போவதா?

இன்னொன்று கூற விரும்புகிறேன். அந்தக் காலத்தில் வள்ளுவர் தோன்றினார். ஆகவே அந்த முறையில் வாழ விரும்புகிறோம் என்றால், அன்று இருந்த சூழ்நிலை வேறு, இன்று இருக்கும் சூழ்நிலை வேறு. அந்நிய நாட்டு ஆட்சி இருந்த காலத்தில் பாரதி தோன்றினார். அதற்காக அந்நிய ஆட்சி தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்ல முடியுமா? இந்தக் காலத்திலும் கலைஞர்கள், மேதாவிகள், நிபுணர்கள், அறிஞர்கள் தோன்றியிருக்கிறார்கள். ஏதோ ஒரு நிலையில் தான் இவர்கள் தோன்ற முடியும், ஆகையினால் அந்த நிலைக்குப் போக விரும்புகிறேன் என்று சொல்வது சரியல்ல.

வள்ளுவர் தோன்றிய சூழ்நிலையை வகுத்து, அந்த சமுதாயத்திலே வாழ விரும்புகிறார் தி.மு.க. தலைவர். அந்தக் காலத்தில் இருந்த அளவிலே, இருந்த சூழ்நிலையிலே அவர்கள் வளமாக, செழிப்பாக அன்றைக்கு வளர்ந்து வாழ்ந்திருக்கலாம். ஆனால், அன்றைக்கு இருந்த சூழ்நிலை வேறு. இன்றைக்கு இருக்கிற சூழ்நிலை வேறு. ஆயிரம், இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு இருந்த சூழ்நிலை வேறு. மனித சமுதாயம் மேலும் மேலும் வளர்ச்சி அடைந்து கொண்டே வந்துள்ளது. பின்னோக்கிப் போகக்கூடிய காலம் அல்ல இது, முன்னோக்கிப் போகக் கூடிய காலம் இது என்பதை திரு. அண்ணாதுரை அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், ஐ.நா.வுக்குச் சென்று திராவிட நாட்டுப் பிரிவினையைப் பற்றி வாதாடுவேன் என்று சொன்னதாகக் கேள்விப்பட்டேன். வரலாற்று அடிப்படையில், ஆயிரம் வருஷங்களுக்கு முன் இருந்த நிலையின் அடிப்படையில், திராவிட நாடு கேட்பதாகத் தயவு செய்து ஐக்கிய நாட்டுச் சபையில் சொல்லிவிடாதீர்கள். அங்கு போவதற்குள்ளாக வேறு ஏதாவது வாதத்தைத் தேடி வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திராவிட நாட்டிற்காக உள்நாட்டுக் கலகம் செய்யப் போவதில்லை என்று சொன்னார்கள். எனக்குத் தெரியாதா, யார் உள்நாட்டுக் கலகம் செய்யக் கூடியவர்கள் என்று. நேருஜி அவர்களிடமே சொன்னேன் அவர்களிடம் எனக்குப் பழக்கம் உண்டு, அவர்களெல்லாம் இப்படிச் செய்யக் கூடியவர்கள் அல்ல என்று. அப்படி வந்தாலும் சமாளிப்பதற்குத் தயாராக இருக்கிறோம், உள்நாட்டுக் கலகம் வரும் என்ற பூச்சாண்டிக்காக யாரும் பயப்படப் போவதில்லை.

உரிமை நிர்ணயம்

உரிமை, உரிமை என்று பேசுகிறார்கள். உரிமையை யார் நிர்ணயிப்பது? அதற்காகத்தான் நான் சொல்லுகிறேன். மக்கள் தீர்ப்பு அளித்தாக வேண்டும், மக்கள் தீர்ப்பு அளிப்பார்கள் என்று. அப்படி மக்கள் தீர்ப்பு அளித்தாலும் ஒப்புக் கொள்ள முடியாது என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சொல்லுகிறார்.

இன்றைக்கு மக்கள் முன்னிலையில் பிரிவினை அடிப்படையில் தேர்தலுக்கு வாருங்கள். பிரிவினையை ஒப்புக் கொள்ளாத ஒரு கட்சியோடு கூட்டு சேர்ந்து கொண்டு, திராவிடப் பிரிவினைப் பிரச்சினையை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு தேர்தலுக்கு நின்று

மக்களை ஏமாற்றக் கூடாது. திராவிட நாடு பிரிவினை அடிப்படையில், இன்றைக்கு தேர்தலுக்கு நிற்கட்டும். அதன் முடிவைத் தெரிந்து கொண்டு விடலாம்.

பிரிவினையை, திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்று மட்டுந்தான் விரும்புகிறது. மற்ற எந்தக் கட்சியும் பிரிவினையை ஆதரிப்பது கிடையாது. ஆகையினால், மற்ற எல்லோரும் சொல்லுவதெல்லாம் சரியல்ல, அவர்கள் சொல்லுவதெல்லாம் நியாயம் அல்ல, நான் ஒருவன் சொல்லுவது மட்டுந்தான் நியாயம் என்று சொல்லுவது சர்வாதிகாரத்திற்கு ஒக்குமே தவிர, நாட்டிலுள்ள ஜனநாயக முறைக்கு ஒத்துக் கொள்ளாது என்பதை வலியுறுத்துகிறேன்.

பதில் கூறுங்கள்

ஆகவே, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினர், நேருவுக்கல்ல பதில் சொல்ல வேண்டியது. மற்றவர்களுக்கு அல்ல பதில் சொல்ல வேண்டியது. அவர்கள் பதில் சொல்ல வேண்டியது, தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கு, தமிழ் நாட்டு இளைஞர்களுக்கு, தமிழ்நாட்டு மக்களுக்கு. அவர்கள் உங்கள் பக்கம் இருக்கிறார்களா என்று பாருங்கள். ஆதரவு இருக்கிறதா என்று பாருங்கள்.

மக்கள் ஆதரவு இல்லையென்றால், நீங்கள் மைனாரிடிதான் என்ற நிலைமை ஏற்படுமேயானால், பெரும்பாலான மக்கள், பிரிவினை எங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லும்போது, இன்றைக்கு இருக்கும் ஜனநாயக அடிப்படையில், பெரும்பாலான மக்கள்தான் தங்கள் உரிமையை என்ன என்று தீர்மானிக்க வேண்டும் என்று இருக்கும் நிலையில், நான் அறிஞன் நான் சொல்லுவதுதான் சரி என்று சொல்லுவது சரியல்ல.

மக்கள் சொல்லுவதுதான் சரி. நான் சொல்லுவது அல்ல, காமராஜ் சொல்லுவது அல்ல. அண்ணாதுரை சொல்லுவது அல்ல. தமிழ் மக்கள் சொல்லுவதுதான் சரி அந்த அடிப்படையில்தான் நான் சொன்னேன். தேர்தலைப் பற்றி ஏதோ சட்டசபையில் பதவியைப் பற்றியல்ல, இன்றைக்குப் பிரிவினைக் கருத்துக்கு தமிழ் மக்கள் எதிர்ப்பு பெருமளவில் என்றாலும், ஆதரிப்பவர்கள் ஒரு சிலர்தான் என்றாலும், திராவிட நாடு வந்துதான் ஆகும். மற்றவர்கள் சொல்வது சரியல்ல, என்று சொல்லுவது சரியல்ல.

ஒளிக்க வேண்டாம்

நாங்கள் சொல்வதுதான் சரி என்று ஒரு சிறுபான்மையோர் உரிமை கொண்டாடுவது ஜனநாயக அடிப்படையில் நடைபெறாது. அவர்கள் ஒரு சர்வாதிகாரியாக இருந்து ராணுவ உடையில் வந்து,

ஆட்சிச் செலுத்தி, மக்களை அடக்கி ஒடுக்கினால், அப்பொழுது அவர்கள், என்னுடைய சக்தி இருக்கிறது, நான் சொல்லுவதுதான் சரி என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால், நாம் இன்றைக்கு வாழ்வது ஜனநாயக அடிப்படையில். அதில் மக்கள் ஆதரவு இருந்தால்தான், ஒரு கட்சிக்கு அவர்கள் ஆதரவு இருந்தால் தான், ஒரு லட்சியத்திற்கு அவர்கள் ஆதரவு இருந்தால்தான், அதற்கு நாட்டில் இடம் உண்டு. இல்லையென்றால், அந்த லட்சியம் அழிந்து ஒழிய வேண்டும். அதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினரைத் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொள்ளுகிறேன். தயவு செய்து அதை மறைக்க வேண்டாம், ஒளிக்க வேண்டாம்.

பிரிவினை லட்சியத்தை எத்தனை பேர் ஆதரிக்கிறார்கள்? எத்தனை பேர் எதிர்க்கிறார்கள்? அந்தக் கணக்குப் போடும்போது, திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் எண்ணிக்கை சட்டசபையில் 15-லிருந்து 12-ஆகக் குறைந்த பிறகும், என்ன நிலை என்று பாருங்கள் என்று. இல்லை, இல்லை, நாங்கள் சொல்லுவது தான் சரி என்று மேலும் மேலும் சொல்லுவது, தமிழர்கள் ஒப்புக் கொள்ளாத விஷயம், மேடைக்கு வேண்டுமானால் உதவலாம். நாடக மேடைக்கு வேண்டுமானால் சரியாக இருக்கலாம். சட்டசபைக்கு அது ஒவ்வாது. மக்களுக்கு அது ஒவ்வாது. நான் ஓட்டுக்கு விட்டுப் பார்க்கலாம் என்று சவால் விடவில்லை. மக்கள் திராவிட நாட்டுப் பக்கம் இருந்தால், பெரும் பாலான மக்கள் இன்றைக்கு திராவிட நாடு வேண்டுமென்றால், இன்றைக்கு நான் அரசியலிலிருந்து விலகிக் கொள்ளத் தயார்.

என்ன வாய் இருக்கிறது?

திரு. அண்ணாதுரை அவர்கள் சொன்னார்களா. தியாகம் செய்வேன் என்று. தியாகம் செய்வேன் என்று வெறுமனே வாயால் சொல்லும் நிலைமையில்தான் இருக்கிறார்கள். கொஞ்சங்கூட தியாகத்தில் பழக்கம் இல்லாதவர்கள். நாங்கள் தியாகத் தீயில் குளித்து, தியாகத்தில் வாழ்ந்தவர்கள், எங்களுக்குத் தியாகத்தைப் பற்றிச் சொல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்ன வாய் இருக்கிறது? (குறுக்கீடு)

தியாகத்தில் வாழ்ந்தவர்கள் எவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பதாக எனக்குத் தெரியாது. இப்பேர்ப்பட்டவர்களா எங்களிடம் தியாகத்தைச் சொல்ல வருகிறார்கள்? யாரிடத்தில் அவர்கள் பேசுகிறார்கள்? தங்களையே உணராமல் பேசுகிறார்கள். மற்றவர்களை ஏமாற்றச் சொல்லும் வார்த்தைகளை இங்கும் சொல்ல வேண்டாம் என்று சொல்லுகிறேன். (குறுக்கீடு)

ஆமாம், ஆத்திரம்தான், நாட்டைத் துண்டு போட வேண்டும் என்றால் இதிலே இரண்டில் ஒன்றைப் பார்த்து விடுவோம், மக்கள் ஆதரவு யாருக்கு இருக்கிறது என்று. பலாத்கார அடிப்படையில் நான் இதைச் சொல்லவில்லை. மக்கள் ஆதரவு யாருக்கு இருக்கிறது என்று பார்த்து முடிவு செய்ய வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

மக்கள் முடிவு செய்யட்டும்

பண்டித ஜவகர்லால் நேருவை எடுத்துக் காட்டி self-determination-ஐ பற்றிச் சொன்னார்கள். பிப்ரவரி மாதத்தில் self-determination-ஐப் பார்ப்போம் என்று சொல்லுகிறேன். யார் திராவிட நாடு வேண்டும் என்று சொல்லுகிறார்கள். யார் வேண்டாம் என்று சொல்லுகிறார்கள் என்று பார்ப்போம். மக்கள் முடிவை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். நாங்கள் மக்கள் முடிவை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்று திராவிட முன்னேற்றக் கட்சித் தலைவர் வீண் வாதம் செய்கிறார். அந்த வாதம் இந்த நாட்டுக்கு ஒவ்வாத வாதம் என்று சொல்ல விரும்புகிறேன்.....

திரு சி. என் அண்ணாதுரை :- நம்முடைய நிதி அமைச்சர் இரண்டு நாளாகவே ரொம்ப சுறுசுறுப்புக் குறைந்து இருந்தார்கள். இன்றைய தினம் அவர் ஆத்திரத்தோடு பேசுகிறார்கள். ஆத்திரத்தோடு பேசுவது அழகாக இருக்கிறது. ஆனால் எண்ணிக்கொண்டு பேசும் எண்ணம் தவறாக இருக்கிறது. இன்றைக்கு மக்கள் தீர்ப்பு அளிக்காவிட்டாலும், ஒரு முறையல்ல, இன்னொரு முறை, இன்னுமொரு முறை என்று பார்ப்போம் என்றேன். மக்களை ராணுவ உடையில் மிரட்டுவேன் என்று அவர்கள் அஞ்ச வேண்டாம்.

திரு. சி. சுப்பிரமணியம் :- மிரட்டினாலும், அந்த உடையில் யார் இருக்கிறார் என்று தெரியும், பயப்பட மாட்டேன் என்று உறுதியைத் தெரிவிக்கிறேன்.

காரணங்கள் கூறுங்கள்

ஆகையினால், இந்த நாட்டுப் பிரிவினை உண்மையிலேயே உடனடியாக முடிவு செய்ய வேண்டியது என்று சொல்ல விரும்புகிறேன், அந்தப் பிரச்சினை ஒரு போராட்டமாகவே நடந்து கொண்டு இருக்கும் வரையில் வேறு காரியங்களில் நமது முழு கவனத்தைச் செலுத்த முடியாது.

இன்றைக்கு 'ஸ்டேடஸ்கோ' (status-quo) பற்றிச் சொன்னார்கள். இருப்பது இருக்கின்றபடியே இருப்பதற்கு என்ன காரணம் என்று கேட்டார்கள். ஸ்டேடஸ்கோ இருப்பதற்குக் காரணம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஒன்றுபட்ட நாடாக இருப்பதை, ஏன் பிரிக்க வேண்டும் என்பதற்குத்தான் அவர்கள் காரணம் கொடுத்தாக வேண்டும்.

சிறிய நாடா? பெரிய நாடா?

அன்று திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர், திட்டத்தைப் பற்றிப் பேசும்போது, பிரான்சின் வளர்ச்சிக்குக் காரணம் அது ஒரு சிறிய நாடாக இருப்பதுதான் என்று சொன்னார்கள். இன்றைக்கு ஐரோப்பிய நாடுகள் வளர்ந்திருப்பது எந்த அடிப்படையில்? சிறு நாடுகளாக இருப்பவைகளும், பெரிய சாம்ராஜ்யத்தை வைத்து வாழ்ந்தார்கள். சாம்ராஜ்யம் போனவுடன், இன்றைக்கு ஐரோப்பிய நாடுகளையெல்லாம் கூட்டுச் சேர்த்து ஒன்றாக இணைக்க முடியுமா என்று பார்க்கிறார்கள். பொருளாதார இணைப்பு மட்டுமல்ல. அரசியல் இணைப்பும்கூட. சிறிய நாடான பிரிட்டனும் பெரிய சாம்ராஜ்யம் இருந்ததால் தனித்து வாழ முடிந்தது. இன்றைக்கு சாம்ராஜ்யம் போய்விட்டது. ஒரு சிலர் வேண்டாம் என்றாலும், அவர்களும் இந்தக் கூட்டில் ஒட்டிக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் உணர வேண்டும். தொழில் புரட்சிக்குப் பிறகு என்ன நிலைமை என்று உணர வேண்டும்.

பிரிவினையும் வரலாறும்

பண்டித ஜவகர்லால் சொன்னார்கள். அணுசக்தி வந்த பிறகும், பழைய வாதங்களைச் சொல்வது சரியல்ல என்று. இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில். மாறுதல்கள், உற்பத்திச் சாதனங்கள் எந்த முறையில் இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சிகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆகவே, தயவு செய்து வரலாற்றைக் கூறி இந்தப் பிரிவினையைக் கேட்க வேண்டாம். நாம் அந்தக் காலத்தில் வாழவில்லை. இன்றைக்கு நாம் முன்னேற்றப் பாதையில் மாறுதலான சூழ்நிலையில், இன்னும் பொருளாதார மாறுதலை நோக்கிப் போகிறோம். பழைய முறையில், விவசாய அடிப்படையில் வாழ்க்கை நடத்தலாம் என்றோ, அதற்கும் முன்னால் இருந்த நாடோடி வாழ்க்கை நடத்தலாம் என்றோ அதையெல்லாம் எடுத்துக்காட்டி, அந்த முறையில் நினைப்பது சரியல்ல. நாடுகள்

ஒன்றாக்கப்பட வேண்டும், உலகமே ஒன்றாக்கப்பட வேண்டும் என்ற முறையில், உலகத்து நாடுகள் ஒன்றாக்கப்பட வேண்டும் என்ற முறையில், உலகத்து நாடுகள் போகின்றன. அந்தப் போக்கை மாற்றினால், உலக முன்னேற்றமே தடைபடும்.

ஆகவே, நான் சொல்லுகிறேன் - தாழ்மையாகச் சொல்லு கிறேன் - காரசாரமாகச் சொல்லவில்லை - அடிபணிந்து சொல்லு கிறேன். வரலாற்று அடிப்படையில் திராவிட நாடு அமைக்க முயலவேண்டாம்.

மொழியை விட்டுக் கொடுப்பதா?

இந்த நாட்டின் மொழியைத் தியாகம் செய்கிறோம் என்றும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஒன்றாக இயங்கும் நாடுகளிலும் பலமொழிகள் இருக்கின்றன. வேண்டுமானால், திராவிட முன்னேற்றக் கட்சித் தலைவருக்கு பாஸ்போர்ட் வாங்கித் தருகிறேன், அவர்கள் கொஞ்சம் உலகத்தைச் சுற்றிப் பார்க்கட்டும். ஒரு நாடாக நிலைப்பது எப்படி என்று உலகத்தில் கவனம் செலுத்துகின்றார்கள்.

அதற்காக, ஒற்றுமைக்காக, இந்தியைப் பூராவும் விட்டுவிடலா மென்று சிலரும், இன்னும் சிலர் பேசுவது போல் ஆங்கிலத்தைப் பூராவும் ஏற்றுக் கொள்ளலாமென்ற முறையிலும் பேசவேண்டிய அவசியம் இல்லை. நாட்டிலுள்ள எல்லோரும் புரிந்து கொள்வதற்கு ஒரு பொது மொழி அவசியம். அதற்காக நம்முடைய மொழியை யோ, அல்லது பண்பாட்டையோ விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது.

சமஷ்டி முறை ஏன்?

புதிதாக, சமஷ்டி முறை ஏற்பட்டது எதற்காக? வெவ்வேறு பகுதிகளிலே இருக்கிற மக்கள், வெவ்வேறு பண்புகளைக் கொண்ட மக்கள், வெவ்வேறு மொழிகளைக் கொண்ட மக்கள், இவர்களுக் கிடையே அரசியல் துறையிலே இணைப்பு ஏற்பட முடியுமா என்பதைப் பற்றி, மனித வளர்ச்சி அடிப்படையிலே, பண்பு வளர்ச்சி அடிப்படையிலே, ஆராய்ச்சி செய்து சமஷ்டியை ஏற்படுத்தி னார்கள். அதற்காக 2000 வருஷங்களுக்கு முன்பு இருந்ததையே இப்பொழுது கடைப்பிடிப்பதிலே அர்த்தம் இல்லை, பிரயோஜன மும் இல்லை.

உண்மையான சமஷ்டி என்று சொன்னால், மீதமுள்ள அதிகாரம் (Residuary Powers) ஸ்டேட்டில் தான் இருக்க வேண்டுமென்ற கருத்தை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்

சொன்னார்கள். ரெஸிடியுவரி பவர்ஸ் மத்திய அரசிடம் இருப்பதாலே சமஷ்டி அமைப்பில் குறைவு ஏற்பட்டு விடுவதில்லை.

விடுபட்டுப் போயிற்றா?

இந்திய அரசியல் அமைப்பைப் படித்துப் பார்த்தால், எனக்குத் தெரிந்தவரையில், எந்த அதிகாரமாக இருந்தாலும் சரி, அதைவிட்டுவிடவில்லை. ஒரு பட்டியலிலே இல்லாவிட்டால் இன்னொரு பட்டியலிலே போட்டிருக்கிறோம். எதிர்பாராவிதமாக ஒரு பட்டியலிலேயும் சேர்க்காது ஏதாவது அதிகாரம் இருக்குமேயானால், அதை மத்திய அரசாங்கத்திற்கு விட்டுவிட வேண்டுமென்று இந்திய அரசியல் சட்டம் சொல்லுகிறது. அது எந்த அளவுக்கு ராஜ்யங்களைப் பாதிக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

இந்தப் பட்டியல்களைப் பார்த்த பிற்பாடு, இவ்வளவு முக்கியமான அதிகாரம் விட்டுப் போய் இருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்குப் போயிருக்கிறது என்று சொன்னால், அதற்கு நான் பதில் சொல்லத் தயாராய் இருக்கிறேன். அன்றைக்கு உட்கார்ந்து பரிசீலனை செய்த அரசியல் நிபுணர்களுக்குத் தெரிந்தவரையில், வரையறுக்கப்படாத அதிகாரம் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே, இதை வைத்துக் கொண்டு, இது சரியான சமஷ்டி அல்ல என்று சொல்லுவது சரியல்ல.

பெரிய சாதனை

நமது வரலாற்றையே பார்ப்போம். நாம் பிரிட்டீஷ் ஆதிக்கத்தின் கீழ் வாழ்ந்து வந்தோம். அன்றைக்கு நாம் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, ஒன்றாக்கப் பட்டோம். ஒரு சில சமஸ்தானங்கள், சில மன்னர்கள், சிறு சிறு பகுதிகள் விடுபட்டிருந்தாலுங்கூட, வேறு என்ன பிரிட்டீஷ் ஆதிக்கத்தில் நடந்திருந்தாலும் கூட, பிரிட்டீஷார் இந்தியாவை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்தது ஒரு பெரிய சாதனை.

ஆனால், அன்றைக்கு ஏன் எல்லோரும் ஒரு குடையின் கீழ் இருக்க வேண்டுமென்று கேட்பதற்கு யாருமில்லை. வரலாற்றின் அடிப்படையிலே - ஒரு வருஷம் அல்ல. பத்து வருஷங்கள் அல்ல. நூறு வருஷங்கள் - பிரிட்டீஷ் ஆதிக்கத்தின் கீழ். ஒன்றுபட்ட இந்தியாவாக வாழ்ந்து வந்திருக்கிறோம், சுதந்திரம் பெறுவதற்கு முன்பாக. ஆனால் பழங்காலத்தில் திரு. அண்ணாதுரை அவர்கள் சொல்வதைப் போல், சாம்ராஜ்ய அடிப்படையிலே, தமிழ்நாட்டு மன்னர்கள் இமயமலை வரை தங்கள் ராஜ்யத்தைப் பரப்ப முயன்றார்கள். வடக்கேயுள்ள மன்னர்கள் கன்னியாகுமரி வரை செல்ல முயன்றார்கள். அது கைகூடவில்லை.

அவதாரங்களா?

சம்மதத்தின் பேரில் நமக்குச் சுதந்திரம் கிடைத்ததால் எந்தவிதமான குறையும் ஏற்படவில்லை. எந்தவிதமான உரிமையும் பறிபோய்விடவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உரிமை பறிபோய்விட்டது. அந்த உரிமையைக் காப்பாற்ற வந்திருக்கிறோம் என்று பேச வேண்டிய அவசியமே கிடையாது.

அன்றைக்குத் தமிழ் மக்கள் ஒப்புக் கொண்டுதான் தமிழ்நாடு இந்தியாவுடன் இணைந்திருக்கிறது. ஒப்புதலுடன் தான் இணைந்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு வடக்கே போயிருக்கக் கூடிய இரண்டு தி.மு. கழகப் பிரதிநிதிகளில் பிரிய வேண்டுமென்று சொல்வதிலேயும் கட்சி ஏற்பட்டுவிட்டது. ஒருவர்தான் பிரிய வேண்டுமென்று சொல்லுகிறார்! மற்ற தமிழ்ப் பிரதிநிதிகள் அத்தனை பேரும் இந்தியாவின் ஒற்றுமை நீடிக்கவே விரும்பு கின்றனர்.

எனவே, நம்முடைய உரிமையை வேறு யாரும் பறித்துக் கொண்டு போய்விடவில்லை. நாமே ஒப்புக் கொண்டுதான் இன்றைக்கு இந்திய யூனியனிலே இருக்கிறோம். யாரோ உரிமையைப் பறித்துக் கொண்ட மாதிரியும், தாங்கள் ஏதோ இதைக் காப்பாற்று வதற்காக அவதரித்த, 'அவதாரங்களோ' என்றுதிராவிடத் தலைவ ரோ, அவருடைய தம்பிகளோ பேசவேண்டிய அவசியம் கிடையாது (திரு. ஏ.கோவிந்தசாமி குறுக்கீடு.) நீங்கள் பேசுவது மட்டமானால், நான் பேசுவதும் மட்டமென்று எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்னொரு விஷயத்தைப் பற்றி திரு.வி.கே. ராமசாமி முதலியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதாவது, இந்தி இம்பொசிஷனைப் பற்றி-

திராவிடத்தின் பொது மொழி

திரு. சி.என். அண்ணாதுரை :- நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள், நான், தமிழ்நாடு தனி நாடாக இருந்த காலத்தைக் காட்டியதை வைத்துக் கொண்டு, அதே முறையிலே அமைக்க வேண்டுமென்று சொல்வதாகத் தப்பு அபிப்பிராயத்துக்கு வந்துவிட்டார்கள். நெடுங்காலத்திற்கு முன்பே தனி நாடாக இருப்பதற்குத் தகுதி பெற்றது என்பதற்கான காரணத்தைத்தான்,

வரலாற்றிலிருந்த ஆதாரத்தைக் காட்டினேனே தவிர, பண்டைக் காலத்தைப் போல் பட்டாடை அணிந்துகொண்டு, உடைவாளை வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. இந்தியா ஒன்றாக இருந்தால் தமிழை விட்டுக் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்லுவது, நீங்கள் எப்படி இந்திக்காக எதையும் விட்டுவிடத் துணிகிறீர்கள் என்று சுட்டிக்காட்டுவதற்காகச் சொன்னேனே தவிர, எங்களுக்காக அல்ல.

கனம் திரு. சி. சுப்பிரமணியம் :- நீங்கள் இவ்வாறு சொல்வீர்கள் என்றுதான். நானே குறிப்பு எழுதி வைத்துக் கொண்டிருக்கிறேன். அங்கே என்ன பதிவாகியிருக்கிறது என்பதைப் பார்க்கலாம். அவர்கள் என்னுடைய நிலையிலிருந்தால், இந்திய ஒற்றுமை வேண்டும் என்று நினைக்கக் கூடிய நிலையிலிருந்தால் இதற்காகத் தமிழையும் விட்டுக் கொடுப்பதற்குத் தயாராயிருப்பேன் என்று சொன்னீர்கள்.

திரு. சி.என். அண்ணாதுரை :- 'டபிள் நெகடிவ்' உபயோகப்படுத்துகிறீர்களே.

கனம் திரு. சி. சுப்பிரமணியம்:- டபிள் நெகடிவ் போட்டாலும் சரி, சிங்கள் நெகடிவ் போட்டாலும் சரி, தாங்கள் சொன்னதைத்தான் நானும் திருப்பிச் சொல்லுகிறேன். திராவிட நாடு ஒற்றுமைக்காக, தமிழை விட்டுக் கொடுக்கத் தயாராக இருப்பீர்கள் போலிருக்கிறது என்று கேட்டேன்.

திரு. சி.என். அண்ணாதுரை :- திராவிட நாடு ஒற்றுமையிலே தமிழ்மொழிப் பிரச்சினை வரவில்லை.

கனம் திரு. சி. சுப்பிரமணியம் :- ஏன் வரவில்லை? திராவிட நாடு நான்கு மொழிகள் பேசும் நாடாயிற்றே?

திரு சி.என் அண்ணாதுரை :- உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலம் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்படுமென்று நம்புகிறேன்.

கனம் திரு. சி. சுப்பிரமணியம் :- ஆங்கிலத்திற்குத்தான் நீங்கள் போவீர்கள். அப்பொழுது நான்கு மொழிப் பேசக்கூடியவர் கள் ஒன்றாக இருக்க முடியுமா? அப்படியானால், ஏன் ஏழு மொழிகள் பேசுகிறவர்கள், பத்து மொழிகள் பேசுகிறவர்கள் ஒன்றாக இருக்க முடியாது?

ஆதிக்கத்தின் அளவு

திராவிடத்திலே அந்நிய மொழியை ஏற்றுக் கொண்டால், ஏன் இந்தியாவின் ஒற்றுமைக்காக, வேறொரு மொழியைப் பொது

மொழியாக ஏற்றுக் கொள்ளக்கூடாது? ஆங்கிலம் என்ன இனிக்கிறதா? மற்ற மொழிகள் இனிக்கவில்லையா?

தமிழைப் பற்றி எனக்கும் அவருக்கும் ஒரே கருத்துத்தான். ஆனால், ஆங்கிலத்திலே அவருக்குத் தனி மோகம். எனக்கு அது இல்லை. அவருக்கு அது நெடுங்காலப் பழக்கம். ஆங்கில ஆதிக்கம் ஏற்பட்டது என்றால், அது நல்லது என்று அவர் நினைக்கிறார். நான், அந்த ஆதிக்கம் இருந்தாலும், எந்த அளவிற்கு அதை வைத்துக் கொள்ள வேண்டுமோ, அந்த அளவுக்குத்தான் வைத்துக் கொள்ளலாமென்று நினைப்பவன்.

தமிழுக்குப் பூரண உரிமை

தமிழுக்குப் பூரண உரிமை கொடுத்து அந்த அடிப்படையில் ஒன்றுபட்ட இந்தியாவிலே நாம் வாழ முடியுமென்று நான் கருதுகிறேன். தமிழை விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது. இந்தச் சபையிலே நடவடிக்கை நடத்துவதற்கு இந்தி வேண்டிய அவசியம் கிடையாது. அரசாங்க நிர்வாகத்தை நடத்த இந்தி வேண்டிய அவசியம் கிடையாது. ஆங்கிலமும் வேண்டிய அவசியம் கிடையாது.

ஆனால், இப்பொழுது இருக்கக்கூடிய நிலையில் ஆங்கிலத்தை ஓரளவுக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால், அந்த அளவுக்குத் தமிழ் வளரவில்லை என்பதால்தான். இன்று பட்டப் படிப்புக்குக் கூட நான் விரும்புவது தமிழ். திரு. அண்ணாதுரை வேண்டுமானால் ஆங்கிலத்தை விரும்பலாம்.

தமிழுக்கு உயர்வு ஏற்படவேண்டும், தகுதி ஏற்பட வேண்டும் என்று வாயளவில் சொல்வதோடு மட்டுமல்லாமல், அதற்கு முயற்சியும் செய்கிறேன். அவர்கள் நினைப்பது போல், திராவிட ஒற்றுமைக்காக இருந்தாலும் சரி, இந்திய ஒற்றுமைக்காக இருந்தாலும் சரி, தமிழைத் தியாகம் செய்து கொடுக்க வேண்டிய அவசியமில்லை. என்னைப் பொறுத்தவரையில், நான் தமிழைத் தியாகம் செய்ய மாட்டேன் என்றும் உறுதி சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தித் திணிப்பு இல்லை

அதற்கடுத்தபடியாக, இந்தித் திணிப்பைப் பற்றிச் சொன்னார்கள். திரும்பத் திரும்ப அதைப் பற்றிச் சொல்லியாய் விட்டது. அதைப் பொறுத்த வரையில் 1965-க்குப் பிற்பாடு ஆங்கிலமும், இந்தியும் தொடர்ந்து இருக்க வேண்டும். இந்தியைப் படிக்க முடியவில்லை, ஆங்கிலத்திலேயே நிர்வாகத்தை நடத்திக்

கொண்டிருக்கிறோம் என்று நான் சொல்லவில்லை. சில குற்றங்கள் நடைபெற்றிருக்கலாம். சில தவறுகள் நடைபெற்றிருக்கலாம்.

நான் முன்பு சொன்னது போல், தவறுகளை நீக்கிக் கொள்ள முயற்சி செய்ய வேண்டியதுதான். ஒன்றைச் செய்துவிட்டோம் என்பதற்காக அது தவறாக இருந்தாலும் அதையே தொடர்ந்து செய்து கொண்டு போகக்கூடாதுதான். கேரளாவில் முஸ்லீம் லீகுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது தப்பு என்றால் அதைத் திருத்தத் தயார். ஒரு தடவை செய்து விட்டோம் என்பதால், தொடர்ந்து அம்மாதிரியே செய்து கொண்டு போக வேண்டும் என்ற அடிப்படையில் அல்ல, நாங்கள் இயங்க விரும்புவது.

ஆகையால்தான், நாடு ஒற்றுமைப்பட வேண்டுமென்றால், அதற்கு என்ன காரியங்கள் செய்ய வேண்டுமோ அதைச் செய்யத் தயாராயிருக்கிறோம். தவறு செய்தாலும் அதைத் திருத்திக் கொள்ளாமல், ஒரு தடவை சொன்னது தான் முடிவு என்ற முறை யிலே நாங்கள் எண்ணுவது இல்லை. தவறுகள் ஏற்பட்டிருந்தால் அவைகளைத் திருத்திக் கொள்ளத் தயாராய் இருக்கிறோம் என்றுதான் சொல்லிக் கொள்கிறேன்.

எல்லோரும் ஏமாளிகளா?

கனம் திரு. அண்ணாதுரை அவர்கள் சொன்னார்களோ, மற்றவர்கள் சொன்னார்களோ ஞாபகம் இல்லை. இந்த ஒருமைப்பாடு மகாநாடு ஒரு தேர்தல் நாடகத்திற்காகப் போட்டது என்று சொன்னார்கள்.

டி.எஸ். ஆதிமூலம் :- 'ரிப்போர்ட்டிலே' இருக்கிறது என்று சொன்னார்கள்.

கனம். திரு. சி. சுப்பிரமணியம் :- கம்யூனிஸ்டுக் கட்சியி லிருந்து வந்தவர்கள், பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியிலிருந்து வந்தவர் கள், ஜன சங்கத்திலிருந்த வந்தவர்கள், சுதந்திராக் கட்சியிலிருந்து வந்தவர்கள் எல்லோரும் ஏமாளிகள் அல்ல. அத்தனைக் கட்சிப் பிரதிநிதிகளும் வந்திருந்தது எங்கள் தேர்தல் நாடகத்திற்கு என்று சொல்வார்களானால், அத்தனை கட்சிகளையும் ஏமாற்றக்கூடிய ஆற்றலும் அறிவும் எங்களுக்கு இருந்திருக்கிறது என்று ஆகிறது. அப்படியானால், நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தாரையும் ஏமாற்ற முடியாதா, என்ன? அப்படி ஒன்றும் ஏமாற்றக்கூடிய முறையில் அல்ல, நாங்கள் செய்தது. உண்மையிலேயே நாட்டில் ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும், நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் மகாநாடு கூட்டப் பட்டது.

வீண் பாதை வேண்டாம்

இதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். நான் கடைசியாக இங்கு ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாட்டிலே ஒரு புதிய சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்று விரும்புகிறோம். நாட்டிலே வறுமை, பிணி, அறியாமை இவைகளையெல்லாம் போக்க வேண்டும். ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்று நினைக்கிறோம். திராவிட நாடு அமைந்துதான் அதெல்லாம் வரவேண்டும் என்பது அல்ல. இன்றைக்கு உலக நிகழ்ச்சிகள், உலக அனுபவம், மனித அனுபவம் அம்மாதிரி இருக்கிறது.

ஆகவே, ஆகாத ஒன்றை, பலபேர் விரும்பாத ஒன்றை, ஒரு சில சிறுபான்மையினர் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்களே, அவர்கள் வீண் பாதையில் போய்க் கொண்டிருக்காமல், சக்தியையெல்லாம் ஒன்றுகூட்டினால், அதன் காரணமாக நாம் இன்னும் சிறந்த காரியங்களைச் சாதிக்க முடியும்.

வளமான சமுதாயம் அமைக்க....

நான் ஒப்புக் கொள்ளுகிறேன். இந்த எதிர்ப்பு இல்லாம லிருந்தால் காரியங்களை நாம் இன்னும் திறமையாகச் செய்ய முடியும். அப்பேர்ப்பட்ட சக்தியைக் கொடுக்க எல்லோரும் திரண்டு வாருங்கள் என்று நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அப்படி எல்லோரும் ஒன்றுபட்ட சக்தியைக் கொடுப்பதன் மூலமாகத்தான் தமிழ்நாட்டில் புதியதொரு வளத்தை ஏற்படுத்த முடியும், புதியதொரு சமுதாயத்தை ஏற்படுத்த முடியும். மக்களுடைய குறைகளைத் தீர்க்க முடியும். அவ்வாறு அல்லாது எதிர்க்கட்சியினர் பேசும்போது நாங்கள் அருவருப்புக் கொள்வதும், நாங்கள் பேசும்போது எதிர்க்கட்சியினர் அருவருப்புக் கொள்வதும், அதைப் பார்த்து மற்றவர்கள் கேலி செய்வதும் ஆகிய நிலைமை இல்லாமல், இன்றைக்கு மக்களுடைய விருப்பத்தை ஒப்புக் கொண்டு, பெரும்பான்மையான மக்களுடைய விருப்பம் தெரிந்ததற்குப் பிற்பாடு, உண்மையான முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டும்.

ஒன்றுபட்ட சக்தி

அப்பேர்பட்ட முன்னேற்றப் பாதையில் சென்று வாழ்க்கை வளப்பத்தைப் பெருக்குவதற்கு முன்வரவேண்டும். அப்படி முன்வந்து, தொடர்ந்து மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்ற நிலைமை இல்லாமல் கஷ்டப்படுகிற மக்களுக்குப் புது வாழ்வு ஏற்படும் முறையில் எல்லோருடைய சக்தியும் பயன்படவேண்டும் என்று நான் உண்மையாகக் கோருகிறேன்.

எதிர்க்கட்சியிலுள்ளவர்களின் சக்தியும் பயன்பட்டு, முன்னேற்றப் பாதையில் நாம் எல்லோரும் கைகோர்த்துச் செல்ல வேண்டும் என்பது தான் என்னுடைய விருப்பம், எங்களுடைய விருப்பம் என்றுதான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இந்த ஆகாத ஒன்றை, வேண்டாத பிரிவினை ஒன்றையே நினைத்துக் கொண்டு, வரலாற்றை நினைத்துக் கொண்டு ஆயிரம் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னால் இருந்ததையே நினைத்துக் கொண்டு இராமல், இன்றைய நிலையில் தி.மு. கழகத்தினரும் ஒன்று சேர்ந்து, ஒன்றுபட்ட சக்தியாக நாட்டிலே பல நல்ல காரியங்களைச் செய்வதற்கு முன்வரவேண்டும் என்று உண்மையிலேயே அடிபணிந்து மிகப் பணிவோடு, என்னால் எவ்வளவு பணிய முடியுமோ அவ்வளவு பணிவோடு சொல்வது மட்டுமல்ல - வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

- வெளியீடு: மனோன்மணி பதிப்பகம், சென்னை - 14.
முதற்பதிப்பு: 1962

உணர்ச்சி வெள்ளம்!

சுதந்திரத் திருநாள்

இதுவரைக்கும் சுதந்திர நாள் விழாக்களில் அமைச்சர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். அந்த அமைச்சர்கள் 1967 தேர்தலுக்குப் பிறகு பதவி நீங்கிய காரணத்தால் இந்தச் சுதந்திர விழா அமைச்சர்கள் இல்லாமலேயே நடைபெறுமோ என்ற அச்சம் இந்த விழாவின் மூலம் நீக்கப்பட்டிருக்கிறது.

யார் அமைச்சர்களாக வந்தாலும் - நாட்டின் சுதந்திர நாள் கொண்டாடப்படும். அந்த விழாவில் அமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள் என்பதைக் காட்டத்தான் சுதந்திர நாள் விழாவில் இந்த அமைச்சரவை கலந்து கொள்கிறது. நாங்கள் ஏன் சுதந்திர நாளைக் கொண்டாடுகிறோம் என்ற ஐயப்பாட்டிற்கு நான் தரும் இந்த எளிய விளக்கமாகிலும் புரியும் என்று நம்புகிறேன்.

இப்படியொரு சுதந்திரநாள் விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என்பது எனது இருபதாண்டுகால ஆசை. 1947-ஆம் ஆண்டே - அன்று நான் இருந்த கட்சித் தலைமைக்கு எதிராகச் சுதந்திர நாள் கொண்டாடப்பட வேண்டியதுதான் என்று எழுதிக் கோபதாபத்திற்கெல்லாம் ஆளாக்கப்பட்டேன். அப்போது சுதந்திர நாள் விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று எண்ணமிருந்தாலும், அப்போது கலந்து கொண்டிருந்தால் சாதாரண அண்ணாத்துரையாகத்தானே கலந்துகொள்ள வேண்டியதிருக்கும். ஆனால் இன்று முதலமைச்சர் என்ற முறையில் கலந்து கொண்டாலும், 20 ஆண்டுகால ஆசைக் கனவு நிறைவேறு கிறது என்ற மனநிறைவு எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

இந்தத் திருநாளில் - சுதந்திரப் போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்தோருக்கும் - உயிர்த்தியாகம் செய்யாவிட்டாலும் பல தியாகத் தழும்புகளை ஏற்று உயிர் வாழ்ந்து கொண்டு - வதைப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் எண்ணற்ற தியாகி களுக்கும் நமது மனம் நிறைந்த மரியாதையை - பேரம் பேசாத மரியாதையை - பயன் கருதாத மரியாதையைத் தெரிவிக்கிறேன்.

தென்னை மரத்தின் அடியில் (தாளில்) சாதாரணத் தண்ணீர் ஊற்றினாலும் - அதன் உச்சிச் சுவைமிக்க இளநீரைத் தருவது போல் அந்தத் தியாகிகள் எதையும் எதிர்பாராமல் பணிபுரிந்து - நம்மை யெல்லாம் தலைநிமிர்ந்து நடக்கச் செய்தார்கள். இத்தகைய தியாகிகளுக்கு மரியாதை செய்வதில் தி.மு. கழகம் என்றும் தயக்கம் காட்டியதில்லை. காட்டப் போவதுமில்லை!

நாட்டிலே ஆட்சி ஒரு கட்சியிடமிருந்து இன்னொரு கட்சியிடம் செல்லலாம். தலைமையிலே மாறுதல் வரலாம். ஆனால் சுதந்திரம் என்றென்றும் நிரந்தரமானது. சுதந்திரத்தைப் போற்றுவது பேச்சினால் மட்டுமல்ல, செயலினாலும் இருக்க வேண்டும், ஒரு நாளில் ஒரு விழாவில் மட்டுமல்ல! எல்லா நாட்களிலும் போற்றப்படுவது, விரும்பி வரவேற்கப்பட வேண்டியது.

யார் கட்டளையிட்டார்கள் சிதம்பரனாருக்கு-செக்கிழுக்கும் துன்பம் ஏற்கும் காரியத்தைச் செய்யச் சொல்லி? யாரும் கட்டளையிடவில்லை.

'திருப்பூர் குமரனுக்கு, போலீஸார் குண்டாந்தடியால் அடிப்பார்கள், ரத்தம் குபுகுபு என வரும் போ!' -என்று யார் கட்டளையிட்டார்கள்? யாரும் கட்டளையிடவில்லை!

உள்ளத்தில் ஏற்பட்ட ஓர் உணர்ச்சி-தூய உணர்ச்சி -தூய ஒரு நோக்கத்திற்காக அவ்விதம் செய்யச் சொல்லிற்று! அந்தத் தூய உணர்ச்சியை- தூய நோக்கத்திற்காக நாமும் பெறுவதற்குத்தான் இந்த விழா!

சுதந்திரம் பெறுவதுகூட எளிது, பெற்ற சுதந்திரத்தைக் காப்பது தான் பெரிது! அதற்காக நமது நினைப்பை - அறிவை - ஆற்றலை - வீர உறுதியை ஒப்படைக்க வேண்டும்.

சீனம் படையெடுத்த போது அந்த வீர உறுதியை இந்த நாடு காட்டியது. இந்த நாடு நம்முடையது, இந்த நாட்டுச் சுதந்திரம் காப் பற்றப்பட வேண்டியது - சுதந்திரத்தின் முழுப் பலன் எல்லா மக்க ளுக்கும் கிடைக்க வேண்டும் என உறுதி எடுக்கும் விழா இந்த விழா!

1947 ஆகஸ்ட் 15ஆம் நாளில் வந்த முதல் சுதந்திர நாள்-கணக்குத் தீர்த்த நாள்! நமக்கும் நம்மை ஆண்ட வேற்று நாட்ட வனுக்கும் - நமக்கும் நம்மை அடிமையாகக் கொண்டவனுக்குமுள்ள கணக்குத் தீர்த்த நாள்!

ஆனால், 1967 ஆகஸ்ட் 15 ஆம் நாளில் வந்த இந்த சுதந்திர தின விழா கணக்குப் பார்க்கும் நாள்! பெற்ற சுதந்திரத்தால் பெற்ற பயன் என்ன?-என்பது பற்றிக் கணக்குப் பார்க்கும் நாள் இந்த நாள்!

குழந்தை கருவிலிந்து வெளியாகிக் கீழே விழுந்ததும் கருப்பா, சிவப்பா -என்று பார்த்து அகமகிழ்வது முதல் கட்டம்! பிறர் எள்ளி நகையாடாதபடி துள்ளி விளையாடி-மழலை மொழி பேசி -அந்த மழலை குழலையும் விஞ்சக்கூடியது என்ற வள்ளுவர் மொழியை மெய்ப்பித்துக் காட்டுவது அடுத்த கட்டம். இந்தக் கட்டத்தில் தான் நாம் இருக்கிறோம்.

இப்படிப் பெரிய கணக்குப் பார்க்கும் இந்த வேளையில் சில்லறைக் கணக்கைப் பார்க்க என் மனம் ஒப்பவில்லை. அவர்கள் செய்வதைச் சில்லறைக் கணக்கில் மட்டும் சேர்க்கவில்லை. 1967-பிப்ரவரியிலேயே பைசல் செய்யப்பட்ட கணக்கு அது! சுதந்திரம் பெற்றோம். 20 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

நாம் அடிமையாயிருந்த காலத்தில்- வெளிநாட்டார், இந்தியா தங்கச் சுரங்கம் நிறைந்த நாடுதான். மாடு கட்டிப் போரடித்தால் போதாது என்று சொல்லி யானை கட்டிப் போரடித்த வளமிக்க நாடுதான். இருந்தாலும் அங்கே வறுமை இருக்கிறது. அறியாமை இருள் இருக்கிறது. இல்லாமை இருக்கிறது. போதாமை இருக்கிறது-காரணம் வெளிநாட்டார் ஆட்சியிருக்கிறது - என்று பிற நாடுகள் எல்லாம் நம்மிடம் பரிவு காட்டின.

ஆனால் சுதந்திரம் பெற்று 20 ஆண்டுக்காலம் ஆன பிறகு நம்மை நாமே ஆளாகிறோம் என்ற நிலை ஏற்பட்ட பிறகு-நான்கு பொது தேர்தல்களை நடத்தி- மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு ஏழ்மையும்-இல்லாமையும்-தீண்டாமையும்-கல்லாமையும் இருக்கிறது என்றால் முன்பு நம்மைப் பார்த்துப் பரிதாபப்பட்ட நாடுகள் எல்லாம் எள்ளி நகையாடத்தானே செய்யும்? ஆங்கிலேயன் தான் உன் வளர்ச்சிக்குத் தடை என்றாயே - அவன் போய் 20 வருடங் களாகி விட்டனவே, இன்னும் ஏன் வறுமையும், கல்லாமையும் அகலவில்லை என்று கேட்கமாட்டார்களா?

இதை உணருவோமானால் - அந்த நிலை போக்கப்பட வேண்டும் என்ற உறுதி பிறக்க - ஆண்டுக்கு ஒரு நாளாகிலும் - அனைவரும் கூடிக் கொண்டாட வேண்டிய நாளாக இந்தச் சுதந்திர நாள் இருக்க வேண்டாமா?

ராஜாஜி அவர்களிடம் சிறிது நேரத்திற்கு முன்பு பேசிக் கொண்டிருந்தேன். என்னுடன் முன்னாள் காங்கிரஸ் அமைச்சரும் மக்களவைத் தலைவருமான சஞ்சீவரெட்டி இருந்தார்.

அவரிடம் ராஜாஜி அவர்கள், இந்தச் சுதந்திர நாளையாகிலும் ஒரு கட்சிக்குச் சொந்தம் என்று ஆக்கிவிடாமல் நாட்டுக்குச் சொந்தம் என்றாக்கி - நாடே கொண்டாடும்படி இருந்திருக்கலாம் - என்று சொன்னார்.

அதற்குச் சஞ்சீவரெட்டி 'இருந்திருக்கலாம்' என்று கூறினார். நான் அந்தக் கேள்விக்கு எதுவுமே கூறவில்லை!

சுதந்திர நாள் ஒரு கட்சிக்கு மட்டும் உரியதல்ல

சுதந்திர நாள் என்பது கட்சி அடிப்படையில் அல்லாமல் நாடு முழுவதும் கொண்டாடப்படவேண்டியது. அப்படித்தான் பிற நாடுகளில் கொண்டாடுகிறார்கள். பாரிஸ் நகரில் அந்த நாட்டுச் சுதந்திர நாளை மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடு கிறார்கள்! பாடத் தெரிந்தவர்கள் மட்டுமல்ல - அந்த ஒரு நாளில் பாடத் தெரியாதவர்களும் நாட்டைப் பற்றிப் பாடுவார்கள்! எங்கெங்கும் விழாக் கோலம் இருக்கும்! மகிழ்ச்சி கொண்டாட்டம் இருக்கும் என்று ஏடுகளில் படித்திருக்கிறேன்.

ஆனால் இங்கு ஒரு கட்சிக்கு மட்டுமே உரியது சுதந்திர நாள் என்று ஆக்கப்பட்டுவிட்டது.

இரண்டாவது உலகப் போரில் அழிக்கப்பட்ட நாடுகளான ஜப்பானும் ஜெர்மனியும் - பெரும் தாக்குதலுக்காளான ரஷ்யாவும் மீண்டும் தங்களை வளர்த்துக் கொண்டு பிறருக்கும் உதவ முன்வரு கின்றன. இத்தனையையும் யுத்தம் நடந்து முடிந்த 15 ஆண்டுகளில் செய்து முடித்தார்கள். 15 வருடத்தில் மயானக் குழியிலிருந்து எழுந்து மாடியில் உலவுவது போன்ற உயர்நிலை அடைய முடிந்தது அந்த நாடுகளால்!

ஆனால் 20 ஆண்டுகளாகச் சுதந்திர நாடாக இருந்தோம். திட்டம் பல போட்டோம். இன்னும் வறுமையிலும் - இல்லாமை இருளிலும் உழல்கிறோம். இந்த வறுமையைப் போக்குவதும், அறியாமையைப் போக்குவதும் கூடத்தான் சுதந்திரப் போராட்டத்தின் கூறுகளாகும்.

ஏழை மக்கள் உரிமை பெற - தொழிலாளர் உரிமை பெற போராடுவது - சுதந்திரப் போராட்டத்தில் ஒரு கூறாகும்!

எல்லோரும் இந்நாட்டு மக்கள், எல்லோரும் ஓர் நிறை. எல்லோரும் இந்நாட்டு மன்னன் - என்ற குறிக்கோளுக்காகப் பாடுபடுவதும் - சுதந்திரப் போராட்டத்தின் குறிக்கோளாகும்.

● ● ●

சமாதானத்துக்கு ஓர் அரங்கு

நைல்நதிக் கரையிலும் இஸ்ரேலை யடுத்துள்ள பாலைநிலத்திலும் போர்மூண்டு கொஞ்ச காலத்துக்குள்ளாகவே நாம் ஐ.நா. தினத்தைக் கொண்டாடுவது விந்தையல்ல. ஆனால் அதில் ஆழ்ந்த கருத்து இருக்கிறது. ஐ.நாவுக்குப் பக்கபலமாக இருந்து அதற்கு உறுதியும் ஆதரவும் தேடுவதில் நாம் உறுதியாகயிருப்பதை இது காட்டுகிறது. ஏனென்றால் உன்னத லட்சியமுள்ள ஒரு நிறுவனத்தை அதன் தோல்விகளைக் கொண்டு குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. அந்த நிறுவனத்தின் அடிப்படை உணர்ச்சியைக் கொண்டும் அதன் மூலம் ஏற்படும் நம்பிக்கையைக் கொண்டும்தான் அதை அளவிட வேண்டும், ஐக்கிய அரபுக் குடியரசுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே மோதல் ஏற்படாமல் ஐ.நா. வால் தடுக்கமுடியவில்லை என்பதும், வியட்நாம் போரை முடிவுக்குக் கொண்டுவர அதனால் இயலவில்லை என்பதும் உண்மையே! ஐ.நா. செயலற்றுவிட்டது என்று நிரூபிப்பதற்குச் சில சம்பவங்களை எடுத்துக்காட்ட முடியும். அத்தகைய சம்பவங்களைச் சிலர் எக்களிப்போடும் வேறு சிலர் வேதனையோடும் சுட்டிக் காட்டவும் செய்கிறார்கள். ஆனால் எங்கேயாவது மோதலோ வலுத்தாக்குதலோ துவேஷமோ இருந்தால் உலக மக்களெல்லோரும் ஐ.நா.வையே நினைத்துக் கொள்கிறார்கள் என்பது முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய விஷயமாகும். இது ஓர் அற்புத உண்மை. ஏனென்றால், பல நாடுகளைச் சேர்ந்த மக்களின் இதயத்தில் நம்பிக்கை ஒளியை ஊட்டும் ஸ்தாபனமாக ஐ.நா. விளங்குவதை இது காட்டுகிறது. உலக மக்கள் ஐ.நா. ஸ்தாபனத்தைச் சமாதானத்துக்கும் நல்லுணர்வுக்குமான ஒரே கருவியாகவும், போரையும் ஆக்கிரமிப்பையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நம் வசம் உள்ள ஒரே நிறுவனமாகவும் கருதுகிறார்கள். ஐ.நா.வுக்குத் தோல்வி ஏற்படும்போது நம்மில் பலருக்கு உண்டாகும் கோபமும் வேதனையுமே அந்த நிறுவனத்துக்குக் கொடுக்கப்படும் மிகச் சிறந்த பாராட்டாகும். போரைத் தவிர்த்து அமைதியை நிலைநாட்டு வதற்கும், ஆக்கிரமிப்பை ஒழித்து நீதியை நிலைநிறுத்துவதற்கும், கொடுங்கோலனின் முன்னேற்றத்தை முடிவுக்குக் கொண்டு வரவும் உலகத்துக்கும் ஒரு நிறுவனம் தேவை என்பதே இதன் கருத்து. நான் விரும்பும் பலன் ஐ.நா. மூலம் கிடைக்காமல் போகும்போது நமக்குக் கோபமும் வேதனையும் உண்டாவதற்கு இந்த உயர் நம்பிக்கை தான் காரணம். உலக அமைதியும் நல்லுணர்வும் மிகமிக அவசியம் என்பதில் நமக்குள்ள நம்பிக்கையை வலுப்படுத்திக் கொள்வதன் மூலம் ஐநா.வை வலுவாக்க வேண்டும். இதற்காகவே ஐ.நா. தினம் கொண்டாடுகிறோம். கலைஞன் வாசிக்காவிட்டால் கூட, யாழ்

யாழ்தான். அது போலவே, பட்டை தீட்டாவிட்டாலும் வைரம் வைரம்தான். உன்னதக் குறிக்கோளுடன் இன்று நம் வசம் உள்ள ஒரே நிறுவனம் ஐ.நா.வாகும். அதன் தோல்விகளும் பலவீனங்களும் அந்த நிறுவனத்தின் அவசியத்தையோ, முக்கியத்தையோ குறைக்கவில்லை. குறைக்கவும் முடியாது. அதே சமயம், சுற்றிலும் விபரீத எண்ணங்களும், அணு ஆயுதங்களும், பேராசைக் கண்களும், ஆக்கிரமிப்பு நோக்கமும் கொண்ட நாடுகள் வஞ்சகப் பேச்சாலும் மிரட்டலாலும் மற்ற நாடுகளை அடிமைப்படுத்த நினைக்கும் நாடுகள் நிறைந்திருக்கையில் இந்த நிறுவனம் அமைதிக்காகவே திட்டமிட்டு அமைதிக்காகவே விண்ணப்பம் விடுக்கிறது என்றால் இந்தக் காட்சி எல்லோருக்கும் பெருமதிப்பைக் கொடுப்பதாகும். படைக்கலங்களும், படை அணிவகுப்புகளும், படைத் தலைவர் களும், ராஜதந்திரிகளும், அணுகுண்டுகளும், ஹைட்ரஜன் குண்டுகளும் நிறைந்த ஓர் உலகத்தில் ஐ.நா. செயலாற்றி வருகிறது. வினோதமான காட்டுமிராண்டி நாடுகளில் ஞானிகள் அவதிப்படுவது போல் ஐ.நா. அவதிக்கும், அவமானத்திற்கும், அவதூறுக்கும், தூஷணைக்கும் இலக்காகிறது. ஆயினும், காட்டு மிராண்டியை நாகரிகப்படுத்துவதற்கும் கோபக்காரர்களைச் சாந்தப்படுத்துவதற்கும், பேராசைக்காரர்களை ஒரு கட்டுக்குள் கொண்டுவருவதற்கும், இவர்களுக்கெல்லாம் அமைதியும் நீதியும் நிறைந்த வழியைக் காட்டுவதற்கும், ஐ.நா. விடாமல் முயன்று வருவது குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். தனது முயற்சிகள் அனைத்திலும் ஐ.நா. வெற்றி அடைந்துவிடவில்லை.

ஐ.நா.வைக் கேவலமாக நடத்தும் தென்னாப்பிரிக்கா, ரொடீஷியா, போர்ச்சுகல் போன்ற நாடுகள் சிலவும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் ஐ.நா. பின்வாங்க மறுக்கிறது. மனித மனத்தில் இயல்பாக உள்ள கண்ணியத்தைத் தூண்டுவதற்கு அது நம்பிக்கையோடு முயன்று வருகிறது. அரியதொரு சேவை ஆர்வத்துடன் இந்த நிறுவனம் சென்ற 22 ஆண்டுகளாக உலக சமாதானக் கொடியைத் தூக்கிப் பிடித்து வந்திருக்கிறது.

ஐ.நா. முதன் முதலில் நிறுவப்பட்டபோது நெடிய நோக்கில்லா மக்கள் உலக சமாதானத்துக்கு ஒரு நிறுவனம் ஏற்படுவது என்ற கருத்தையே ஏளனம் செய்திருக்கக்கூடும். பழைய சர்வதேசச் சங்கம் தோன்றி மறைந்த வேதனைமிக்க கதையின் நினைவுகள் அப்போது நிழலாடிக் கொண்டிருந்தன. சர்வதேசச் சங்கம் தோல்வியடைந்திருந்துங்கூட நிதானமும், ஆத்மீக உணர்வும் கொண்டு பெரியோர்கள் இரண்டாவது உலகப் போரால் சீர்குலைந்திருந்த ஓர் உலகத்தில் ஐ.நா. ஸ்தாபனத்தை நிறுவுவதற்குக் கூடினார்கள் என்றால் அது வியப்புத்தரும் விஷயம்தான்.

உண்மையில் ஐ.நா. பல நாடுகளின் தலைநகரங்களுடைய சிதைவுகளின் மேல் நிறுவப்பட்டதாகக் கூடச் சொல்லலாம். பிணங்களும், நடைப் பிணங்களும், ஊனமுற்றோரும், அங்கஹீன முற்றோரும், பார்வை இழந்தவர்களும், அனாதைகளும் இத்தகையதொரு சூழ்நிலையிலேயே இது உருப்பெற்றது. நீதியின் இறுதி வெற்றியிலிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையைத் தவிர வேறு எதுவும் அவர்களுக்கு இந்தத் திட்டத்தைத் துவக்குவதற்காகத் தைரியத்தையும், விவேகத்தையும் கொடுத்திருக்க முடியாது. புயலால் கொந்தளிக்கும் கடலிலே அபாயம் நிறைந்த ஒரு பிரயாணத்தை மேற்கொள்வது போலிருந்தது அது. கப்பல் சிதைவதைத் தவிர வேறு வழியேதும் இல்லாத நிலை. ஆம், பொங்கும் அலைகளையும் கடல் நீரின் பலமான போக்கையும், தைரியத்துடன் எதிர்த்து நின்று, உதவி தேவைப்படுவோருக்கு நம்பிக்கையும் ஆறுதலையும் கொடுத்து இந்தக் கப்பல் இருபத்திரண்டு ஆண்டுகளாகக் கடலிலே பிரயாணம் செய்து வருகிறது. இந்த ஸ்தாபனத்திற்குப் பாதகமான அம்சங்களையும், அதைச் சூழ்ந்து இருக்கும் அக்கறையின்மை யையும் கருத்தில் கொண்டுதான் இதை மதிப்பிட வேண்டும். இப்படி செய்தால்தான் சரியாக மதிப்பிட முடியும்.

தாக்குவதற்கோ, தாக்குதல்களை எதிர்ப்பதற்கோ எப்போதுமே நாடுகள் ஆயத்தமாக இருக்கக்கூடிய நிலையிலே தூதுவர்களுடன் உளவாளிகளையும் அனுப்பத் தயாராக இருக்கும் நிலையிலே எல்லைகளைத் தகர்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் தலைநகரங்களில் ஆடம்பரமான வரவேற்புகளுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கும் நிலையிலும், உலகம் இன்று இருக்கிறது. இந்த நிலையிலும் அந்த பிரம்மாண்டமான கட்டிடத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் தேசியக் கொடிகள் பறந்து கொண்டிருக் கின்றன. சம கௌரவத்தோடு பறக்கின்றன. பல்வேறு நாடுகளாக இருப்பினும் ஒரே உலகத்தைச் சேர்ந்தவை, தனித்தனியாக வாழ்கின்ற போதிலும் பொதுவான குறிக்கோளைக் கொண்டவை, பொதுநலனுக்காகத் திரட்டுவதற்கென வளமும் வலிமையும் கொண்டவை. மனிதனை மேலும் மகிழ்ச்சியுள்ள நிறைவாழ்வு வாழச் செய்யும் அச்சத்திலிருந்தும், பஞ்சத்திலிருந்தும், நோயிலிருந்தும், அறியாமையிலிருந்தும், வன்முறையிலிருந்தும், காட்டுமிராண்டித் தனத்திலிருந்தும் விடுபடச் செய்யவும் சுருங்கச் சொன்னால் மனிதனுக்கு உரியது எதுவோ அதைக் கொடுக்க ஒரு மனிதன் என்ற கௌரவத்தைக் கொடுக்கும் பொதுவான - சிறப்பான பணிக்காகப் பல்வேறு நாடுகளின் தனிப்பட்ட ஆற்றலை ஒன்று சேர்க்கும் பொருட்டுப் போரை ஒழித்து அமைதியை நிலைநாட்டி, நட்பையும் தோழமையையும் உருவாக்கி வளர்த்து ஒருவருக்

கொருவர் உணர்ந்து மதித்து, நடக்கக்கூடிய வகையில் உலகையே மேலும் சிறப்புறச் செய்யும் புனிதமான பணியில் பங்கு வகிப்பவை என்று உலகுக்குப் பறைசாற்றுகின்றன. மனிதனை மிருகமாக்குவதும், சோலைவளங்களைப் பாலைவனங்களாக்குவதும், நகரங்களைச் சிதைவுகளாக்குவதும், சுபிட்சத்தை வறுமையாக்குவதும் ஆக்கிரமிப்பாளரைத் தவிர வேறு யாராகத்தான் இருக்க முடியும்? இத்தகையதொரு ஆக்கிரமிப்பாளரைக் கண்டுபிடிப்பதுதான் ஐ.நா.வின் நோக்கம். ஏனென்றால், அவன் தனது உருவத்தையும், சொல்லையும் மாற்றக்கூடிய கபடமானவன். அவனைக் கண்டு பிடித்து, வெளிக் கொணர்ந்து மற்றவர்களின் நல்லெண்ணத்தால் கிடைக்கும் ஆற்றலைச் சேர்த்து அவனை இந்த முயற்சியிலிருந்து தடுக்கும் பொருட்டு ஐ.நா. விழிப்புடன் இருக்க வேண்டும். இது எளிதான காரியமல்ல. அபாயங்கள் பல நிறைந்த ஒரு வேலை. ஆற்றலும் தியாகமும் தேவைப்படும் ஒருவேலை இது. தோல்விகளும், கண்டனமும், குற்றச்சாட்டுகளும் இருந்தும் கூட இந்தப் போராட்டத்தை ஏற்று நடத்த படைவீரர்கள் இருக்கிறார் கள் என்பதை இதன் 22 ஆண்டுக்கால வாழ்க்கை தெளிவாக்குகிறது. நல்லுள்ளங்களுக்கு இது நம்பிக்கை அளித்திருக்கிறது. காலஞ்சென்ற போப் ஜான், உள்ளத்தில் உவகையுடன் கூறியிருக்கிறார். ஐ.நா. ஸ்தாபனத்தின் பணிகளில் பிரம்மாண்டமான அளவுக்கும் அவற்றின் புனிதத் தன்மைக்கும் ஏற்ப இந்த ஸ்தாபனத்தின் அமைப்பும் அது பின்பற்றும் வழிமுறைகளும் வளர வேண்டும் என்பது தான் நமது மனப்பூர்வமான விருப்பம். ஒவ்வொரு மனித னும் மனிதன் என்ற முறையில் தனக்குள்ள கௌரவத்திலிருந்து உருவாகும் உரிமைகளைப் பயனுள்ள விதத்தில் பாதுகாக்கும் தன்மையை இந்த ஸ்தாபனத்தில் காணக்கூடிய நாள் வரக்கூடும்.

மனிதனின் நன்னெறிகளை மறுக்கிறது போர். அறிஞர்களும் ராஜதந்திரிகளும், கவிஞர்களும், மதக்குருக்களும், எல்லாவற்றிற்கும் மேலாக வெற்றி நடை போட்டு வரும் படைத் தளபதிகளும் போரைக் கண்டிக்கிறார்கள். போர் கொடியது என்றும், மனித கௌரவத்தை மறுக்கிறது என்றும் அவர்கள் கண்டனம் செய்கிறார்கள். இருப்பினும் போருக்குப் பின் போர் ஏற்பட்டது. ஏனென்றால், போர்க் களத்தைவிடச் சிறந்ததொரு அரங்கு இருக்கவில்லை. தகராறைத் தீர்ப்பதற்கு வேட்டுச் சத்தத்தைவிடச் சிறந்ததொரு வாக்குவாதம் இருக்கவில்லை. தகராறைத் தீர்த்து உரிமையை நிலைநாட்ட வேறு வழி பிறக்கவில்லை.

ஐ.நா. ஸ்தாபனம் இன்றைய அரங்காக விளங்குகிறது. இது முற்றிலும் போதுமானது என்று சொல்ல முடியாது. ஆனால் பேச்சுக்களினாலும் அதன்படி நடந்து செயல்புரிவதனாலும்

போரைத் தவிர்த்துத் தகராறைத் தீர்ப்பதற்கான ஒரே அரங்காக இருக்கிறது. உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் தங்களைப் பிரிக்கும் பிரச்சினைகளை ஆராய்கிறார்கள். உலக மக்கள் முன் தங்கள் நிலையை எடுத்துக் கூறுகிறார்கள். மனிதர்களைக் கொலை செய்வதற்குப் பதிலாகத் தங்கள் நிலைக்காக வாதாடுகிறார்கள்.

உறுப்பு நாடுகள் தங்களுக்கிடையே உண்டான உறவு முறைகளில் பின்பற்ற வேண்டிய நெறியை ஐ.நா. வகுக்கிறது.

தகராறுகளைத் தீர்ப்பதற்காக ஐ.நா. ஸ்தாபனம் சமாதானத் தூதுவர்களை அனுப்புகிறது. உறுப்பு நாடுகள் தகராறுகளைத் தீர்ப்பதற்காக இந்த முறையை ஏற்றுக் கொண்டுள்ளன என்பதே வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனென்றால், போரை ஒழிக்க வேண்டும் என்பதைக் கொள்கையளவிலாவது ஏற்றுக் கொள்ள உறுப்பு நாடுகள் ஆயத்தமாக இருப்பதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது.

மனப்பூர்வமாக உணர்வு இல்லாமை, வல்லரசு மண்டலங் களின் செல்வாக்கு, உறுதியின்மை, உறுதி கொள்வதில் காலதாமதம் ஆகியவை இந்த முறையைக் குலைத்துப் போர் மூளச் செய்கின்றன. ஆனால், ஐ.நா. வலுப்படுத்தப்படுமேயானால் உலக மக்கள் அனைவரும் அதன் நன்னெறிகளுக்குப் பக்கபலமாக நிற்பார்களே யானால் அமைதிக்காகப் போராடுமாறு தங்கள் நாடுகளை வற்புறுத்துவார்களேயானால், இதனால் ஏற்படக்கூடிய விபரீத விளைவுகளைப் பெருமளவு குறைக்க முடியும்.

ஐ.நா.வை வலுப்படுத்தி அதற்குப் பக்கபலமாக நிற்குமாறு ஒவ்வொருவருக்கும் வேண்டுகோள் விடுப்பதற்காகவே இன்றைய தினத்தைக் கொண்டாடுகிறோம். மதிப்புக்குரிய டாக்டர் ராதாகிருஷ்ணன் சுட்டிக் காட்டியிருப்பதைப் போல புதிதாய் உருவாகிவரும் உலக சமுதாயத்திற்கு ஆத்மாவை, மனச்சாட்சியைக் கொடுக்க முடியும் என்று ஐ.நா. நம்புகிறது.

ஆனால், ஐ.நா. ஸ்தாபனம் போரைத் தடுத்து அநீதியை ஒழிக்கும் திறமையுள்ள ஸ்தாபனமாக மாறவேண்டுமென்றால், ஒரு தடவை உட்ரோ வில்சன் குறிப்பிட்டுள்ளது போல அது இமைப்பொழுதும் உறங்காத கண்ணாக இருக்க வேண்டும். எங்கும் விழிப்புடனும் கவனத்துடனும் இருக்கும் கண்ணாகத் திகழ வேண்டும்.

ஐ.நா. ஸ்தாபனம் வலிமையற்றது. ஆதலால் அதைப் பராமரிக்க வேண்டாம் என்று வாதாடுவது, அந்தக் கண்ணையும் குருடாக்குவதற்கு ஒப்பாகும். பிறகு இருளில் அலைந்து திரிந்து

அழிவைத்தான் வரவேற்க வேண்டியிருக்கும். ஐ.நா.வின் அவசியத்தைச் சுட்டிக் காட்டுவதற்கு அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஸ்ரீ ஐஸன்ஹோவர் கூறியதைவிட வேறு எதைத்தான் ஆதாரமாகக் காட்ட முடியும்? வெற்றிக் கொடி நாட்டிய வீரரான அவர் கூறுகிறார். படை பலத்தைப் பயன்படுத்தித் தேசத் தகராறுகளைத் தீர்க்கலாம் என்று ஐ.நா. ஸ்தாபனம் எப்போதாவது ஒப்புக் கொண்டுவிட்டால் அப்போது அந்த ஸ்தாபனத்தின் அடிப்படையையும், உலக முறைமை ஒன்றை உருவாக்குவதற்கான நமது சிறந்த நம்பிக்கையையும் அழித்திருப்போம் - அது எல்லோருக்குமே அழிவாகத்தான் இருக்கும்.

ஐ.நா.வின் உடன் பிறந்த குறைகளையும், பிறகு சேர்ந்த குறைகளையும் நன்கு உணர்ந்திருந்த பண்டித ஜவஹர்லால் நேரு, ஐ.நா.வுக்காக மிகப் பலமாக வாதாடினார். ஐ.நா.வின். இயல்பை மாற்ற முயன்றால் அமைதிக்காகப் பாடுபடும் மேலும் வலுவான ஒரு அமைப்பை இதனால் உருவாக்க முடியாது. ஏற்கனவே இருக்கும் சிறந்த ஒரு அமைப்பைக் குலைப்பதாகத்தான் அதற்குப் பொருள். இதற்குப் பதிலாக வேறு எதையும் உருவாக்க முடியாது.

ஆதலால்தான் இந்த ஸ்தாபனத்தை வலுப்படுத்தி உள்ள விவகாரங்களில் அதிகாரம் படைத்த ஒரு அமைப்பாக மாற்ற வேண்டுமே ஒழியப் போர் வெறியர்களின் வெறியாட்டத்தை அழிக்கக்கூடிய நிலையில் உலகை விட்டுவிடவேண்டாம் என்று சிந்தனையாளர்கள் அனைவரும் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறார்கள். ஐ.நா. தலைமைக் காரியதரிசி ஊதாண்ட் கூறியிருப்பதைப் போல எவ்வளவு வலிமை இருப்பினும், எவ்வளவு செல்வம் கொழிப்பினும் எந்த ஒரு நாடும் இன்று தன்னிறைவு பெற்றதாக இருக்க முடியாது.

தனித்து வாழ்வதோ, மற்ற நாடுகளின் சிதைவுகளுக்கு மேல் இருப்பதோ சாத்தியமல்ல என்பதைப் பல நாடுகளும் இப்போது உணர்ந்துள்ளன. மற்ற நாடுகளுடன்தான் வாழ முடியும். மனித சகோதர உணர்வு என்னும் நன்னெறியை ஏற்று அதன்படி நடந்தால்தான் இது சாத்தியமாகும்.

ஐ.நா. ஸ்தாபனம் பலவீனமாக இருந்துங்கூடப் பல பகுதிகளில் போரைத் தடுத்திருக்கிறது. தகராறுகளைப் பரவ விடாமல் தடுத்திருக்கிறது. அமைதியைத் துரிதமாக நிலைநாட்டி யிருக்கிறது. ஆத்திரமடைந்த நாடுகளுக்கு ஆறுதல் சொல்லி அமைதியூட்டுவதற்காகக் காவல் நிலைகளையும் திட்டங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது. இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையேயும், ஸிரியாவுக்கும் ஜோர்டனுக்கும் இடையேயும் ஐ.நா.

அமைதிக் கண்காணிப்பு ஸ்தாபனம் 1949ஆம் ஆண்டிலிருந்து கண்காணித்து வருகிறது. சைப்ரஸ் வாழ் கிரேக்கர்களுக்கும், சைப்ரஸ் வாழ் துருக்கியர்களுக்கும் இடையே 1964ஆம் ஆண்டிலிருந்தே 4,000 பேர் கொண்ட அமைதிப் பராமரிப்புப் படை சமாதானத்தை நிலைநாட்டி வருகிறது. காஷ்மீரில் போர் நிறுத்தத்தோடு நெடுகிலும் ராணுவப் பார்வையாளர் குழு இருக்கிறது.

இவ்வாறாக இந்த ஸ்தாபனம் படிப்படியாகத் தனது மதிப்பை நிரூபித்து வருவதையும், விவேகமுள்ள எல்லாருடைய விசுவாசத்தை ஈர்த்து வருவதையும் காணலாம். உறுப்பு நாடுகளின் ஆதரவுடன் இயங்கிவரும் ஐ.நா. ஸ்தாபனம் சமாதான லட்சியத்துக்காகத் தனது அளவற்ற திறமைகளையும் ஆதார வசதிகளையும் பயன்படுத்து வதற்கு மனிதன் வகுத்துள்ள மிகச் சிறந்த சர்வ தேச ஒத்துழைப்பு ஸ்தாபனமாகும் என்பதைக் காலம் எடுத்துக் காட்டியிருக்கிறது.

இந்த ஸ்தாபனத்தின் தடுப்புச் சக்தியானது நமது ஆதரவைப் பெற்றுவிட்டிருக்கிறது. சுகாதாரம், கல்வி, மனித உரிமைகள், சுதந்திரம் ஆகியவற்றுக்கான பல்வேறு பிரிவுகள் மூலம் இந்த ஸ்தாபனத்துக்குள்ள குணப்படுத்தும் சக்தியானது நமது அன்புக்குப் பாத்திரமாகி விட்டிருக்கிறது.

போதிய ஆதார வசதிகள் படைத்திராத நாடுகளுக்கு உதவி புரிந்து வழிகாட்டுவதற்காகவும் அவற்றை வளப்படுத்துவதற்காகவும் அண்டை நாடுகளும் சரி, எங்கே இருக்கும் நாடுகளும் சரி, எல்லா வாழ்க்கைத் துறைகளையும் சேர்ந்த நிபுணர் குழுக்களை அனுப்பி வைக்கின்றன. எங்கெங்கே தேவை இருக்கிறதோ அங்கெல்லாம் மனிதனின் துன்பத்தை, அது உடலை வாட்டும் துன்பமாக இருந்தாலும் சரி, மனத்தில் ஏற்படும் இன்னலாக இருந்தாலும் சரி, அதை அகற்றுவதற்கும் குறைப்பதற்கும் ஒழிப்பதற்கும் கைகொடுத்து உதவத் தயாராயிருக்கும். ஏழை மக்களுக்கு இயற்கை அன்னை அதன் செல்வங்களைக் கொடுக்கும்படிச் செய்வதற்கும் கிரகித்துக் கொள்ளக் கூடியவர்களுக்கு வீரத்தைப் புகட்டுவதற்கும், நலிந்த மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதற்கும் எல்லோருக்கும் மனிதாபிமானத்தையும் காண்பிப்பதற்குத் தயாராயிருக்கும் ஐக்கிய நாடுகள் குழுவைக் காணலாம்.

ஐ.நா. ஸ்தாபனத்தின் சமாதானங்காணும் முயற்சிகளில் ஆர்வமில்லாதவர்கள் கூட, மேம்பாடு குன்றிய, மேம்பாடடைந்து வரும் நாடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அது புரிந்து வருகிற பணியைப் பாராட்டத்தான் செய்கிறார்கள்.

சில சமயங்களில் ஐ.நா.வின் சாதனைகள் விஷயத்தில் நமக்குப் பூரண திருப்தி ஏற்படாவிட்டால்கூட ஐ.நா.வுக்கு அதன் எல்லா முயற்சிகளிலும் நாம் தொடர்ந்து ஆதரவளித்து வந்திருக்கிறோம். ஏனென்றால் 'ஜவஹர்லால் நேரு கூறியிருப்பது போல, ஐ.நா. ஸ்தாபனம் பலவீனமடைந்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம் நாம் பலவீனமாயிருப்பதுதான், நாடுகள் பலவீனமாயிருப்பதுதான். அவை கொள்கை பலமற்றவையாய் இருப்பதுதான். அவை நேர்மையற்றவையாய் இருப்பதுதான் என்பதை நாம் உணருகிறோம். நமது மன உறுதியும் பலமும் மட்டுமே மனித குலத்தின் இந்த நம்பிக்கைக்கு, உலக நீதியின் அரணுக்கு உயிர்நாடியாக இருக்க முடியும். இந்நாட்டிலுள்ள நாம் ஐ.நா. வைப் பலப்படுத்த உத்தேசித்திருக்கிறோம். எனவேதான் இந்தக் கொண்டாட்டம். எனவேதான் இந்த வேண்டுகோள். ஐ.நா.வை நன்கு உணர்ந்து கொள்ளும்படி மக்களுக்கு உதவுங்கள். இந்த ஸ்தாபனத்தின் பின்னணி வரலாறு, அமைப்பு ஆகிய விவரங்கள், அனைத்தையும் மக்கள் அறிந்து கொள்ளும்படி செய்து விட்டால், சமாதானத்தையும், நீதியையும், இணக்கத்தையும், மகிழ்ச்சியையும் மக்கள் மறக்க முடியாத ஒருவகை லட்சியத்தையும் பிரச்சாரம் செய்யும் துணிவுடைய, ஆனால் தோல்வியடையாத இந்த ஸ்தாபனத்தையும் அதில் பொதிந்துள்ள கொள்கையையும் எல்லோரும் பின்பற்றி, அதை மனிதகுலத்துக்கான மாபெரும் அன்பளிப்பாக வாழ்த்தி வரவேற்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. தமிழர்களாகிய நமக்கு, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்' என்பது நமது கவிஞர் பாடி இதைத்தான் கற்பித்தார். ஆகையால், நாம் இந்த ஸ்தாபனத்துக்கு உறுதுணையாக நின்று வழிவழியாய் வந்த லட்சியத்தை எய்துவதில் உதவி புரிவோம்.

• • •

சுருங்கிய உலகம்

முன்பெல்லாம் காசிக்குப் போகிறேன், திருப்பதிக்குப் போகிறேன் என்பார்கள். இப்படி இருந்த இந்த நாட்டில் வாரத்துக்கு வாரம், மாதத்துக்கு மாதம் அமெரிக்கா போகிறேன் - ரஷ்யாவுக்குப் போகிறேன் என்று கூறப்படுவதைக் கேட்கிறோம். நம்நாடு எந்த அளவு முன்னேறியுள்ளது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

காசிக்குப் போகிறவர்களிடம் மறக்காமல் கங்கா தீர்த்தம் கொண்டு வாருங்கள் என்பார்கள். பழனியாயிருந்தால் பஞ்சாமிர்தம் கொண்டு வரும்படிச் சொல்லுவார்கள்.

ரஷ்யாவுக்குப் போகும் நமது நண்பர்களிடம் நாம் என்னென்ன கேட்போம். எப்படி அந்த நாட்டில் ஆட்சி அமைந்துள்ளது? அங்கு மாநகராட்சிகள் எப்படி அமைந்துள்ளன? எப்படி அந்த நாட்டுக் குழந்தைகள் எந்த அளவு மகிழ்ச்சியோடு இருக்கின்றனர்? இதையெல்லாம் தெரிந்து கொள்ள நாம் விரும்புவோம்.

உலகம் எப்படி நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள நம்மிடம் நிரம்ப ஆர்வம் உள்ளது.

பக்கத்து வீட்டுக்காரன் எப்படி இருக்கிறான் என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாதது பழைய காலப் பழக்கம். இன்று நெடுந்தூரத்து நாடுகளானாலும் அங்கே மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை நேரில் தெரிந்து கொள்ள விழைகிறோம். அந்த நாட்டில் என்னென்ன விந்தைகள் உள்ளன என்பதை அறிய விரும்புகிறோம். அத்தனை ஆர்வம் உள்ளது.

முன்னாள் மேயர் முனுசாமி ஏற்கனவே ரஷியாவுக்கு சென்று வந்தவர். சிட்டிபாபுவும் அயல் நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார். கழக அமைப்புச் செயலாளர் என்.வி.நடராசன் தற்போது மலேசியா பயணம் மேற்கொண்டுள்ளார்.

பாராளுமன்றக் கழக உறுப்பினர் மனோகரன் இரண்டு முறை ஆப்பிரிக்கா நாடுகளைச் சென்று பார்த்துவிட்டு வந்துள்ளார். மற்றொரு பாராளுமன்ற உறுப்பினரான ராஜாராமும் உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று வந்துள்ளார். நானும் ஜப்பான் வரை சென்று வந்திருக்கிறேன். அங்கு காணுகின்றவற்றை - தெரிந்தவகையில் புகுத்தலாம் என்பது நம்மவர்கள் தெரிந்து சொல்ல இந்த அயல்நாட்டுப் பயணங்கள் துணையாக இருக்கும்.

உலகம் சுருங்கிவிட்டது

உலகம் சுருங்கி வருகிறது. உலக நாடுகள் நெருங்கி வருகின்றன.

25 வருடங்களுக்கப்பால் மிஞ்சிப் போனால் 50 வருடங்களுக்கப்பால் இங்கிருந்து சந்திர மண்டலத்துக்கு ஒருவர் போகிறார். அவருக்கு வழியனுப்பு விழா என்று இதே இடத்தில் நிச்சயம் நடக்கும். நாடுகள் மட்டுமல்ல, அண்டங்கள் ஒன்றை ஒன்று நெருங்கி வரும் காலம் இது.

ரஷ்யா என்றாலே குனிந்தவன் நிமிர்ந்து நிற்பான். அழுது கொண்டிருப்பவன் முகத்தில் புன்முறுவல் பூக்கும். பாட்டாளி தனக்கொரு நாடு அமைந்ததாக நினைப்பான். உலகத்துக்கே புதிய செய்தியை புதிய நடைமுறையைக் கொடுத்த நாடு ரஷ்யா.

அப்படி இந்த நாடு புகழெய்திடக் காரணம் என்ன? கொடுங்கோன்மையை வீழ்த்திப் பயங்கரப் புரட்சிக்குப் பின் பாட்டாளிகளது அரசை அவர்கள் அமைத்தார்கள். அப்படி அரசு அமைத்தபிறகு மக்களோடு நெருக்கமான தொடர்பு கொண்டு தோழமை உணர்ச்சியோடு செயல்பட்டனர். வீணையொன்று நல்ல நாதம் தரவேண்டுமென்றால் அதன் நரம்புகளில் சில அறுந்தும், சில வளைந்தும் இல்லாமல் எல்லாமே ஒரு சீராக இருக்க வேண்டும் - அறுந்தும் வளைந்துமிருக்குமானால் எந்தப் பெரிய வித்துவான் ஆனாலும் வாசிக்க இயலாது.

சீராக இருந்து நல்ல நாதம் எழுப்பும் வீணையைப் போல ரஷியாத் தலைவர்கள் ஒற்றுமையாக இருந்து, ஜார் கொடுங் கோன்மையை ஒழித்துப் புதிய அரசை நிறுவினர். நினைத்தாலே பொசுக்கிவிடும் கொடுங்கோன்மை அது.

சோவியத் நாட்டுக்கும் நமக்கும் நிறைந்த தோழமை நிலவுகிறது. பெரிய தொழில் திட்டத்துக்கு நிரம்ப ஒத்துழைத்து வருகிறார்கள். அவர்களது ஒத்துழைப்போடு அரக்கோணத்துக்குப் பக்கத்தில் பெரிய தொழிற்சாலை ஒன்று ஏற்பட இருக்கிறது. அவர்களிடமிருந்து நமக்கு நல்ல ஒத்துழைப்புக் கிடைத்து வருகிறது.

தோழர்கள் செல்லவிருக்கும் வெளிநாடு அன்னிய நாடே என்றாலும், நம் அன்பைப் பெற்ற தோழமை நாடு.

● ● ●

உண்மையை உணர்ந்திருந்தால் ஊர்ச் சண்டை ஏது?

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய ஜைன நெறியை நல்ல முறையில் பாதுகாத்து, அந்த நெறியிலேயே நடப்பது மட்டுமல்லாமல் மற்ற சமுதாயத்தினரும் அந்த நெறியிலே நடந்து வாழ்ந்து சிறக்க வேண்டுமென்பதிலே அக்கறை காட்டுகின்றவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மகாவீரர் போதித்த தத்துவங்கள் நல்ல மார்க்கங்களாகும் - நல்ல நெறிகளாகும்.

'ஐம்புலன்களை அடக்கு' - 'பொருள்களின்மீது ஆசை வைக்காதே' என்றெல்லாம் இங்கு எழுதியிருப்பதைக் காண்கிறேன். இந்த உண்மைகளையெல்லாம், உண்மையிலேயே உலகில் உள்ளோர் அறிந்து உணர்ந்திருப்பரேயானால், சண்டைச் சச்சரவு கள் ஏற்பட்டிருக்காது. ஐக்கிய நாடுகள் மன்றமும் தேவைப் பட்டிருக்காது.

மனித சமுதாயத்தை வழிநடத்தும் மார்க்கங்கள் எல்லாம் நான்கு மாடிக் கட்டிடங்களாக உள்ளன என்றாலும், இரண்டு மூன்று மாடிகளுக்குத்தான் ஒழுங்கான பாதைகள் அமைக்கப் பட்டுள்ளன. மூன்றாவது மாடியிலிருந்து அடுத்த மாடியைப் பார்த்தால், தொங்குகிற நூல் ஏணியில் ஏறிச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது.

ஜைன மதத்தை அறிந்த அறிஞர்களிடமும், பெரியவர் களிடமும் எனக்கு நெருங்கிய தொடர்பும், பழக்கமும் உண்டு. ஜைன சமயம் பற்றிப் பல தடவை நாங்கள் விவாதித்திருக்கிறோம். அப்போது நான் வருத்தப்பட்டேன். நெறிகள் சரியில்லை என்பதால் அல்ல! இந்த நெறிகளை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு நாம் வளர்ந்து கொள்ளவில்லையே என்பதுதான் அதற்குக் காரணம். அந்த நெறிகளுக்கு ஏற்ற வளர்ச்சி இல்லையே என்ற குறை இருப்பதால், அந்த நெறிகளை எல்லாம் மறந்துவிட வேண்டும் என்ற நான் கூறமாட்டேன்.

வேலூரில் 35 ஆண்டுகள் பணிபுரிந்த ஒரு வெள்ளைக்காரர் ஓய்வு பெற்ற காலத்தில் தாயகம் செல்லவிருந்த பொழுது, வழியனுப்பு விழாவுக்கு என்னையும் அழைத்திருந்தார்கள். எவ்வளவோ மைல்களுக்கு அப்பாலேயிருந்து வந்து - வேற்றுநாட்டுக்காரராக இருந்தாலும் விழுமிய தொண்டராக - பிறர் பயனடையும் மருத்துவ நிலையங்களையும் கல்விக் கூடங்களையும் அரண்மனைகளையும் கட்டித் தந்து பணிபுரிந்தவர்களாயிற்றே என்ற கருத்தில், அமெரிக்காவிற்குச் செல்லவிருந்த அந்தக் கிருத்துவரை வழியனுப்பச் சென்றேன்.

அப்போது வேலூரிலிருந்து இந்து மதத்தைச் சார்ந்த ஒருவரிடமிருந்து எனக்கு மிரட்டல் கடிதம் வந்தது. 'கிருத்துவரை வழியனுப்பும் விழாவிலே கலந்து கொள்ள வந்தால் நாங்கள் கறுப்புக் கொடி காட்டுவோம்!' என்று அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது. எங்கள் கட்சிக் கொடியிலே கறுப்புத்தான் இருக்கிறது என்று அப்போது வேடிக்கையாகச் சொன்னேன்.

எவ்வளவோ தூரத்திற்கு அப்பாலிருந்து வந்தவர்கள் என்றாலும் அயலவர்கள் என்றாலும் அவர்கள் செய்த நல்ல காரியத்தைத் தமிழக மக்கள் வரவேற்க வேண்டும். அது போன்ற காரியங்கள் செய்யவும் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஜைன மதத்தைச் சேர்ந்தவர்களும் மருத்துவமனைகளையும், கல்லூரிகளையும் ஏற்படுத்தி, ஈட்டிய பொருளை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்துவதைக் கண்டு மகிழ்ச்சியடை கின்றேன்.

நான் பிறந்த காஞ்சிபுரத்திலும், அதைச் சுற்றிய சிற்றூர் களிலும் ஜைன மதத்தைச் சேர்ந்த மக்கள் இருக்கிறார்கள். அவர்களுடன் எனக்குத் தொடர்பு உண்டு.

'இந்த மார்க்கம் தமிழர்களுக்கே உரிய மார்க்கம்' என்று கூட, தமிழ் ஆய்ந்த வல்லுநர்கள் சிலர் கூறுகின்றனர். ஆகவே, இந்த மார்க்கத்தில் எனக்குத் தொடர்பும் ஈடுபாடும் உண்டு.

வழிகாட்டிகள் இருந்தும் வாழ்வில் முன்னேறவில்லை நாம்

உலகத்திலேயே நம்முடைய நாட்டில் தான் பெரும் பெரும் மகான்கள் - வழிகாட்டிகள் தோன்றி இருக்கின்றார்கள். நான்கூடச் சில சமயம் நினைத்துப் பார்ப்பேன் - இப்படிப்பட்ட பெரியவர்கள் தோன்றாமல் இருந்திருக்கலாம். அவர்கள் தந்த அந்த நல்ல சிந்தனைகள் தோன்றாமல் இருந்திருக்கலாம் என்று. பெருமைக் குரிய வழிகாட்டிகள் பலர் இருந்தும் கூட நாம் இந்த அளவுக்குக் கெட்டுப் போயிருக்கிறோமே உயர்ந்த நிலையில் இல்லையே என்பதால் தான், அப்படிக் கருதத் தோன்றியது.

இதுபோன்ற வழிகாட்டிகளே தோன்றாத நாடுகளில், எவ்வளவோ முன்னேறி இருக்கிறார்கள் - வளர்ச்சி அடைந்திருக் கின்றார்கள். ஆனால், வழிகாட்டிகள் இருந்தும் - அவர்கள் வழிநடத்திச் செல்பவர்களாக இருந்தும் நாம் முன்னுக்கு வரவில்லை! காரணம், நாம் சொல்பவர்களாக இருந்தோம் - செய்யத் தவறி விட்டோம்! ஆகவே, இனிமேல் சொல்வதுடன் செய்து காட்டவும் வேண்டும்.

புத்தர் சொன்னார் - சித்தர் கூறினார் - மகாவீரரும், முகம்மது நபியும், காந்தியடிகளும், இராமலிங்க அடிகளும் சொன்னார்கள் என்று தான் சொல்கிறோமே தவிர, அவற்றை செய்து காட்டுகின்றோமோ?

அவர் அப்படிச் சொன்னார் - இவர் இப்படிச் சொன்னார் என்று கூறிவிட்டு, நீ என்ன செய்யப் போகிறாய் என்றால் விழித்து நிற்போரைத்தான் நாம் பார்க்கின்றோம்!

ஆகவே, சொல்லுவதோடு மட்டும் நில்லாமல் செய்தும் காட்ட வேண்டும். அப்போதுதான் அந்த நன்னெறிகளை உணர்ந்தவர்கள் ஆவோம்!

மகாவீரர், ஆண்ட அரசர்களையும் - அண்டி உயிர் வாழ்ந்த ஆண்டிகளையும் - பெரும் பணக்காரர்களையும் - சிரமப்பட்டு பிழைத்த ஏழைகளையும் - உயர்ந்தோர் என்று சொல்லிக் கொண்டோரையும் தாழ்ந்தவர் என்று கூறப்பட்டோரையும்

தமக்குப் பின்னே வழி நடத்திய மாமனிதர் பின் செல்லவும் அவர் விட்டுச் சென்ற நல்ல காரியங்களை நாமும் கடைப்பிடித்து ஒழுகி, அதன் மூலம் நல்ல வாழ்க்கை வாழவும் வேண்டும்.

நான், நல்ல வாழ்க்கை என்று கூறியது, தாம் மட்டுமல்லாது பிறரும் உலகத்தில் மகிழ்ச்சியடையக் கூடிய அளவில் வாழவேண்டும் என்பதைத்தான் நல்வாழ்வு எனக் கருதி மக்கள் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று குறிப்பிடுகிறேன்.

● ● ●

காக்கும் கரங்கள்

நமது பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவளிக்கும் திட்டத்துக்கு அமெரிக்க அறநிறுவனமான 'கேர்' அளித்து வருகிற உதவியை நான் மதித்து வரவேற்கிறேன். நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் நல்லுறவு பலமடைந்து அதன் விளைவாக பல தொழிற்கூடங்களும் மருத்துவமனைகளும் ஏற்பட்டுள்ளதைப் பார்க்கிறோம்.

கல்வித்துறைக்கும் அவர்களது உதவியால் நல்ல ஊக்கம் அளித்து வருகிறார்கள்.

இந்த நல்ல நாளும், நடக்கின்ற நிகழ்ச்சிகளும் அத்தகைய நல்ல கருத்துக்களை நம் மனதில் உண்டாக்கட்டும்.

நலிந்தோருக்கு உதவுவது என்ற பொது நலத் தத்துவத்தினடிப் படையில் அமெரிக்கர்கள் இந்த உதவிகளைச் செய்து வருகிறார்கள். ஒரு பக்கத்திலே நலிவும் மறு பக்கத்திலே வளமும் என்ற நிலை இருக்குமானால் அது உலகம் முழுவதும் பரவும்.

நாம் இங்கே திரைப்படங்களுக்கும் காக்கும் கரங்கள் என்று பெயரிடுகிறோம். அமெரிக்க மக்கள் தங்களது கரங்களை காக்கும் கரங்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குமுன்னதாக தங்கள் கரங்களை வலிவுள்ள கரங்களாக ஆக்கிக் கொண்டிருக் கிறார்கள்.

வலிவுள்ள கரங்களால்தான் பிறரைக் காக்கவும் முடியும். எனவே நாம் முதலில் நமது கரங்களை வலிவுள்ள கரங்களாக ஆக்கிக் கொள்வோம். அப்போது பிறரை நாமும் காக்க முடியும்.

கரங்கள் எந்த அளவு வலிவுள்ளவையாக இருக்கின்றனவோ அந்த அளவு உள்ளம் மென்மையானதாக இருக்க வேண்டும்.

நானும் திரைப்படத்திலே, ஈஸ்வரன் இரும்புப் பெட்டிக்கும் இதயத்துக்கும் சம்பந்தம் வைப்பதில்லை என்று எழுதினேன்.

நம்முடைய நாட்டு ஈஸ்வரன் ஒருவேளை அப்படியிருக்கலாம். ஆனால் அமெரிக்க மக்களுடைய பணத்துக்கும் அவர்களது இதயங்களுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு இருப்பதைப் பார்க்கிறோம்.

அமெரிக்க மக்களும் ஆரம்ப காலத்திலே நம்மைப் போலத்தான் இருந்தார்கள். இப்போது உள்ள வலிவு ஆப்ரகாம் லிங்கன் காலத்தில் இருந்ததில்லை. காடுகளாகவும், பள்ளத்தாக்கு களாகவும், சதுப்பு நிலமாகவும் தானிருந்தது. ஆதிநாள் அமெரிக்கா.

இன்று அந்நாடு பொன் கொழிக்கும் பூமியாக உள்ளது. தாங்கள் தேடிப் பெற்ற செல்வத்தைத் தேக்கி வைத்து உலகில் பரவிடச் செய்கிறார்கள்.

எவ்வளவு விரைவாக நாம் அந்த வலிவைப் பெறுகிறோமோ அந்த அளவு நமது தன்மானம் தரணியில் உயரும்.

அந்த வலிவினைத் தேடிக் கொண்டு நம் கரங்களைக் காக்குங் கரங்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

இன்று நம் கரங்கள் கேட்கும் கரங்களாக இருக்கின்றன. நாம் அரிசி, நிதி கடன் கேட்பவர்களாக இருக்கிறோம்.

இந்த உண்மையை உணர்ந்து, இந்தச் சவாலை ஏற்று தன்னிறைவுப் பாதையில் - தன்மானப் பாதையில் நாம் வேகமாக நடைபோட வேண்டும். அந்தப் பாதை நீண்ட நெடியது. அதில் நடக்க நம்மை நாம் தயாராக்கிக் கொள்ள வேண்டும்.

நல்ல மனிதர்களாய், நற்குணமுடையோராய், புகழ் ஓங்கி எல்லா வகை ஏற்றமும் பெற்றத்தக்கவர்களாய் நமது சிறார்கள் வளர வேண்டும்.

● ● ●

சீர்திருந்தும் கூவம்

வெகுகாலமாகவே துர்நாற்றம் பிடித்த ஆறு என்று ஏசப் பட்டுவந்துள்ள இந்த ஆறு இன்று மிகுந்த பாக்கியம் செய்துள்ளது. எந்த ஒரு ஆற்றுக்கும் இப்படி ஒரு சேர ஐந்து மந்திரிகள் சென்றதில்லை. அழுக்காற்றை நல்ல நீரோடும் ஆறாக ஆக்கும் திட்டத் துவக்கத்துக்கு ஐந்து மந்திரிகளும் வந்திருக்கிறார்கள்.

தமிழகத்தின் பல பகுதியிலிருந்தும் இங்கு புதிதாக வந்து போகக் கூடியவர்கள் அவரவர் ஊர் சென்றதும் இந்த ஆற்றின்

துர்நாற்றம் பற்றியே பேசுவார்கள். 10 - 15 ஆண்டுகளுக்கு முன் இதுதான் அன்றாடப் பேச்சுக்களில் ஒன்றாக இருந்திருக்கும்.

புறப்படுகிற இடத்தில் தூய்மையாகவே புறப்படுகிற இந்த ஆறு அலைந்து வளைந்து அழுக்கைச் சேர்த்துக் கொள்ளுகின்றது.

கடலோடு போ என்று நகர மக்கள் அதைவிரட்டுகிறார்கள். கடல் அலைகளோ நீ இங்கே வராதே என்று விரட்டுகின்றன. ஆக இந்த பலமான போராட்டம் பலகாலமாகவே நடைபெற்று வருகின்றது.

இதற்கொரு முற்றுப்புள்ளி வைக்கக் கூடிய ஒரு திட்டத்தை பொறியியல் வல்லுநர்கள் தந்திருக்கிறார்கள்.

அதன்படி இத்திட்டம் நிறைவேறியதும் அது தரக்கூடிய எழில் தோற்றத்தைத் தான் வரைபடமாக்கி இங்கே வைத்திருக் கிறார்கள். கிடைப்பதற்கரிய கற்பனை அல்ல. உண்மை நிலையாக இது உருவாகும். இந்தத் திட்டம் சீரோடும் சிறப்போடும் நடைபெறும்.

தேம்ஸ் நதிக் கரையினிலே

மற்ற மாநகரங்களிளெல்லாம் இத்தகைய இயற்கை வசதி அதாவது நகருக்கு மத்தியில் ஆறு ஓடுவதை பெரும் வாய்ப்பாக கருதுகிறார்கள்.

தேம்ஸ் நதிக்கு லண்டன் மாநகர மக்கள் அளித்துள்ள முக்கியத்துவம் பற்றி அங்கு போய்வந்தவர்கள் சொல்லவும் படித்தும் அறிந்திருக்கிறேன்.

உல்லாசமாக உலாவரத்தக்க பூங்காற்று வீசுகின்ற பூங்காக்கள் நிரம்பிய கரைகளை அந்த ஆறுகள் பெற்றிருக்கின்றன.

அப்படிப்பட்ட இயற்கை அழகைக் கொண்ட இந்த நதி சென்னை நகரினுள் ஊடுருவிப் பாய்கிறது. மக்கட்தொகை நிரம்பிய பகுதிகளின் வழியே இந்நதி ஊடுருவி வருவதை இந்த வரைபடத்தை உற்றுநோக்கினால் தெரியும்.

சிலகாலம் வெள்ளக்காடாகவும், சிலகாலும் சேறும் சகதியும் மிகுந்ததாகவும் ஒழுங்கின்றி இருக்கும்.

சிலகாலமாகவே இதைச் சீரமைப்பது பற்றிப் பேசப்பட்டு நிபுணர்களால் திட்டங்கள் தீட்டப்பட்டு வந்துள்ளன.

கூவம் சீரமைப்பு பற்றி விவாதிக்கக் கூடிய கூட்டமொன்றில் நானும் பங்கேற்றதாக எனக்கு நினைவு.

வேறு காரியங்களில் அரசு ஈடுபட வேண்டியிருந்ததால் இதனைக் கவனிக்க இயலாமற் போனது. மேலும் இதை புறாக்கூட்டிலேயே போட வேண்டாம் என்றே நாங்கள் வந்ததும் இதை நிறைவேற்றத் தீர்மானித்தோம்.

கருணாநிதியின் ஆர்வம்

முதல் பட்ஜெட் தயாரிக்கும் போதே இந்தத் திட்டத்துக்குப் பணம் ஒதுக்கும்படி என்னுடைய தம்பி கருணாநிதி என்னைத் துளைத்துக் கொட்டி விட்டார் - ஒதுக்கியிருக்கிறேன் என்று சொல்லியும் திருப்தியடையாமல் அது பட்ஜெட்டில் இருக்கிறதா என்று பார்த்தபின்னரே திருப்தி அடைந்தார்.

இவ்வாறாக இப்போது ரூபாய் 2 கோடி அளவுக்கு செலவிடத்தக்கதாக ஒரு திட்டம் வகுக்கப்பட்டு இன்று அதன் கால்கோள் விழாவும் நடைபெறுகிறது.

தமிழகத்தில் மிகச் சிறந்த திறம் படைத்த நிபுணர்கள் இருக்கிறார்கள். குறைந்த செலவில் இத்திட்டத்தை நிறைவேற்றித்தர அவர்கள் முயலவேண்டும். தொகைதான் ஒதுக்கியாகிவிட்டதே என்று இருந்திடாமல் குறிப்பிட்டத் தொகையைக் காட்டிலும் குறைந்த செலவில் நிறைவேற்றித் தர வேண்டும். இதன் மூலம் அவர்களுக்கு நிறைந்த புகழ் வந்தடையும்.

இப்படியும் ஒருஆறா?

பார்க்கிற வெளிநாட்டாரெல்லாம் இப்படி ஒரு ஆறு இந்த ஊரில் இருந்ததா? என்று கேட்கும்படியாக அமைய வேண்டும்.

இதற்குமுன் இந்த ஆறு இப்படி இருக்கவில்லை. நாங்கள் இதனை இப்படி திருத்தி அமைத்திருக்கிறோம் என்று பெருமிதத்துடன் கூறுகிற நிலைமை இருக்க வேண்டும்.

நம்முடைய நாட்டில் இயற்கையின் எழிலை அழிக்கும் பழக்கமுடைய மனிதர்கள் உண்டு. நல்ல பூங்காவை இருக்க விடமாட்டார்கள். அதை அழிப்பதிலே அவர்களுக்கொரு தனி இன்பம்.

நல்ல கட்டிடம் இருந்தால் கரியால் அதன் சுவர்களில் கிறுக்கி வைப்பார்கள். நல்ல வாய்க்கால் ஓடினால் கல்லையும் மண்ணையும் அதில் தள்ளி நீர் ஓடாதபடிச் செய்துவிடுவார்கள். இப்படிப்பட்ட விந்தை மனிதரை வேறு எந்த நாட்டிலும் பார்க்க முடியாது.

எழிலும் பயனும் ஒரு சேர அமைந்த சீரிய திட்டம் இது. இதனோடு இணைந்த பக்கிங்காம் கால்வாய் சீரமைப்புத் திட்டம் வாணிபத் துறையில் ஆந்திரத்துக்கும் தமிழகத்துக்கும் நெருக்கமான தொடர்பு ஏற்படுத்த உதவும். அந்த கால்வாயும் பலவருடங்களாகத் தூர்வாராமல் விடப்பட்டதால் படகுப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது. போக்குவரத்திலேயே நாவாய் போக்கு வரத்தே செலவு குறைந்தது. பக்கிங்காம் கால்வாய் சீரமைப்புத் திட்டம் பற்றியும் பொதுப்பணி அமைச்சர் கோடிட்டுக் காட்டினார்.

நகருக்கு எழில் தோற்றத்தையும் வாணிபப் பெருக்கையும் அளித்திடக் கூடியது இந்தத் திட்டம்.

இத்திட்டத்தை நிறைவேற்றி சென்னையைச் சிங்கார திருநகராக்குவது நமது கடமை!

● ● ●

சீர்மிகு சீரணி

வீட்டுக் கிணற்றிலே நீர் இறைத்துக் கொடுக்க முடியாதவர்களும் கூட தேர் இழுக்கச் செல்வார்கள்.

தேர் இழுக்க முடியாதவர்கள் தங்கள் கைகளில் பெரிய விசிறிகளைப் பிடித்துக் கொண்டு தேர்வடத்தைப் பிடித்து இழுப்பவர்களுக்கு விசிறுவார்கள். காற்றுவராது. சில நேரங்களில் விசிறி தேர் இழுப்பவரின் முதுகைத் தாக்கும். விசிறியது போதும் நிறுத்து என்று சொல்லுவார்கள்.

ஊருக்குழைப்பது என்ற இயற்கைப் பண்பை ஒன்றுபடுத்த வேண்டும். இன்னின்ன பணிகளை மேற்கொண்டால் நல்ல பலன்களைக் காணலாம் என்ற உணர்வை ஊட்ட வேண்டும். தேவையான கருவிகளைக் கொடுக்க வேண்டும். சரளைக் கற்கள் - உருளைகள் கிடைக்கவில்லையென்றால் அவை கிடைக்கச் செய்ய வேண்டும். இவைகளுக்கெல்லாம் சர்க்கார் அதிகாரிகள் ஒத்துழைக்க முன்வரவேண்டுமென நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நேரு இத்தகைய பொதுநலத் தொண்டு குறித்துக் கனவு கண்டார். 20 வருடமாக மக்கள்தான் உழைத்திருக்கிறார்கள். காரணம் தெரியாமலே உழைத்திருக்கிறார்கள். யாருக்காக உழைக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளாமலே உழைத்திருக்கிறார்கள். பலனென்ன என்று தெரியாமலே உழைத்திருக்கிறார்கள்.

நமக்காக நம் குடும்பத்துக்காக உழைக்க வேண்டும், மீதமிருக்கும் நேரத்தில் ஊர் நன்மைக்காக உழைக்க வேண்டும்.

இருவண்ணக் கொடியைக் கையில் பிடித்து 'திராவிட முன்னேற்ற கழகம் வாழ்க! திராவிட முன்னேற்றக் கழகம் வளர்க'

என்று குரலெழுப்பிச் செல்வதற்காகச் சீரணிப் படை அமைய வில்லை. இப்படையைக் கொண்டு தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டிய நிலையில் தி.மு.கழகம் இல்லை. அப்படியென்றால் 1966-ல் அல்லவா இதனை ஆரம்பித்திருக்க வேண்டும்.

ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற பின்னர் இதைச் செய்திருப் பதற்குக் காரணமே மக்கள் நலப் பணிக்காகத்தான்.

எந்தச் சாரார் ஆயினும் சரி, எந்த மக்களாயினும், என்ன குறையாயினும் என்னிடத்திலோ என் நண்பர்களிடத்திலோ தாராளமாக வந்து சொல்லலாம். நாங்கள் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

நான் இங்கே உட்கார்ந்திருக்கும்போது உங்கள் சட்டையிலே பூச்சி இருக்கிறது - தட்டி விடுங்கள் என்று பக்கத்தில் இருப்பவர்கள் சொல்வாரானால், இது எனக்குத் தெரியாதா? என்றா கேட்பேன்? சில நேரங்களில் சிறிய விஷயங்கள் கூடத் தெரியாமல் போகலாம்.

கோட்டையிலே வீற்றிருக்கும் எங்களுக்கு மக்களின் குறைகள் என்னென்ன என்று தெரிந்துவிடும் என்று எண்ணியிருந்து விடாமல் அப்போதைக்கப்போது உள்ள குறைகளை எடுத்துக் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அப்படிக் கூறும்போது ஒவ்வொரு நாணயத்துக்கு உபகரணங்கள் இருப்பது போல ஒவ்வொரு நாணயத்துக்கும் இரண்டு பக்கங்கள் உண்டென்பதை மனதிற் கொண்டு கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர்த் தட்டுப்பாடு இயற்கையாக ஏற்பட்ட ஒன்றாகும். ஐந்தாறு லட்சம் பேர் வாழ்ந்த சென்னைக்கென்று வகுக்கப்பட்டது. இப்போதுள்ள தண்ணீர்த் திட்டம். இப்போது 22 லட்சம் பேர் இந்நகரில் வாழ்கிறார்கள்.

நாகரிகமான ஓரளவு வசதியோடு கூடிய வீடுகளில் வாழக்கூடும், மாளிகைகளில் மற்றொரு லட்சம் பேர் இருக்கக்கூடும். நாலு குடித்தனம் ஐந்து குடித்தனம் என்றுள்ள வீடுகளில் ஐந்தாறு லட்சம் பேர் இருப்பார்கள். மற்றுமுள்ளோர் எங்கெல்லாமோ வாழுகிறார்கள்.

நான் யாரையாவது அழைத்து அந்தக் கூவம் நதியோரம் போய் குடியிரு என்றால் என் கன்னத்தில் அறைவான். ஆனால் யாரும் சொல்லாமலே அங்கே அவர்களாகவே வாழுகிறார்கள். நாற்றமாயிற்றே என்றால் ஏதோ ஒரு நாளில் அரை மணி கால் மணி அப்படியிருக்கும் என்கிறார்கள். இவர்கள் இப்படி குடியிருப்புக்காக வேண்டி இருக்கும் நாற்றத்தையும் இல்லை என்கிறார்கள்.

இவர்களது குடிசைகளை வெளிநாட்டார் பார்த்தால் நம்மைப் பற்றி மிகத் தாழ்வான கருத்தைக் கொள்வார்கள். ஆகையினால் தான் கூவத்தின் நாற்றத்தைப் போக்கி சேற்றை வாரி கூவத்தை எழிலுடையதாகச் செய்திட திட்டமிட்டுள்ளோம்.

லண்டனுக்கு நான் போனதில்லை. போய் வந்தவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். லண்டன் நகருக்கு அழகைக் கூட்டுவது அந்நகரின் பெரும் பகுதியில் ஊடுருவிச் செல்கிற தேம்ஸ் நதி என்பதாகும். அதுபோல கூவம் சென்னை நகரின் மையப்பகுதியில் இருக்கிறது. ஏனோ இந்த எளிய திட்டம் என்னைவிடப் பெரியவர் கள் - வல்லவர்கள் ஆண்ட நாட்களிலே செய்யப்படாமலே இருந்தது. எளிய காரியம் தானே என்று இருந்துவிட்டார்கள் போலும். நாங்கள் சின்னவர்களென்பதால் சிறிய விஷயங்க ளெல்லாம் என் கண்ணுக்குப் படுகிறது. கூவம் ஆற்றைச் சுத்தப்படுத்தும் அப்பணியின் மூலம் நோய் நொடிகள் நீங்கும். சுகாதாரம் ஓங்கும்.

இதைப் போலவே காவிரி நீர்த் திட்டம் நீண்ட நாட்களாகப் பேசிப் பேசி நிறுத்தப்பட்டதே தவிர நடைமுறைக்கு வரவில்லை.

நண்பர் முனுசாமி அதைச் சொன்னார். அதையும் அவர் காமராஜரிடம் தான் முதலில் சொன்னார். காவிரித் திட்டத்தின் பயன்கள் பற்றி முனுசாமி பேசியதைக் கேட்ட காமராஜர்.. 'நீ என்ன வக்கீலா?' என்று அவரைப் பார்த்துக் கேட்டார்.

காவிரி தண்ணீர்த் திட்டம் நிறைவேற்றப்பட யிருப்பது மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்றாகும்.

காவிரித் தண்ணீர் இங்கே வருவதில் ஒரு பொருத்தம் இருக்கின்றது. காவிரிக் கரையில் காவிரித் தண்ணீரைக் குடித்து வாழ்ந்தவர்கள் தான் இப்போது இப்பகுதியில் குடியேறியிருக் கிறார்கள்.

அவர்களைத் தேடி வருகிறது காவிரி நீர்.

தண்ணீர் இந்நகரில் நிரம்பத் தேவையிருக்கிறது. பல புதிய தொழில்களுக்கும் தேவையான தண்ணீரும் கிடைக்கும்.

எங்கள் தொழிற்சாலைக்கு 2 லட்சம் காலன் தண்ணீர் கொடுக்க இயலுமா என்று கேட்கிறார்கள். நம்மால் முடியவில்லை யென்றால் வேறு எந்த மாநிலத்தில் தங்கள் தொழிலை துவக்கலா மென்று பார்க்கிறார்கள். தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் கொடுக்கிறோமென்றால் பணம் வாங்கிக் கொண்டுதான் கொடுக்கிறோம்.

இதுபோல சென்னைத் துறைமுகத்துக்கு வருகிற கப்பல்களுக்கும் தண்ணீர் நிரம்பத் தேவைப்படுகின்றது. போதுமான தண்ணீர் இருந்தால் நாமும் கொடுக்கலாம். இப்படி விலைக்கு விற்பதன் மூலம் மட்டும் வருடத்துக்கு ரூபாய் ஒரு கோடிவரை வருமானம் கிடைக்கும். இப்போது பணத்தைச் செலவிட்டு நாம் செய்தாலும் கிடைக்கிற வருவாயைக் கொண்டு அதைச் சரிகட்டலாம் என்பதோடு இந்தக் காவிரி நீர்த் திட்டம் இன்னும் பத்தாண்டுகளில் லாபகரமானதாகவும் ஆகிவிடும்.

• • •

நூல்கள் இன்னும் தேவை

உலகத்தமிழர் மாநாட்டிற்கு வந்த தமிழ்ப்பற்று கொண்ட தமிழன்பர்களுக்குத் திருவாரூர் தியாகராசன் இங்கு ஒரு அரிய விருந்து கொடுத்தார்.

அதே திருவாரூரைச் சார்ந்த தம்பி கருணாநிதி எழுதிய சிலப்பதிகார நாடகக் காப்பிய வெளியீட்டு விழாவும் இங்கே நடைபெறுகிறது.

கருணாநிதி பேசும்போது நாங்கள் இருவரும் திருவாரூரைச் சார்ந்தவர்கள் என்று கூறினார்.

நம்முடைய நண்பர் பக்தவத்சலம் அவர்கள் தானும் சேர்ந்து கொள்ள வேண்டும் என்று நான் பெண் எடுத்தது திருவாரூர் என்று சொல்லித் தாமும் திருவாரூரைச் சார்ந்தவர் என்று கூறிக் கொண்டார்.

அவர் வேறு ஒன்று கூறுவார் என்று எதிர்பார்த்தேன். தியாகராசனும் கருணாநிதியும் திருவாரூர் என்று கூறியது போல் - விழாவுக்குத் தலைமை தாங்குகின்ற அவரும் நானும் தொண்டை மண்டலத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறுவார் என எதிர் பார்த்தேன். திருவாரூரிலும் தஞ்சையிலும் பிற பகுதிகளிலும் இருக்கும் தியாகராசன் போன்றவர்கள் தொண்டை மண்டலத்தி லிருந்து சென்றவர்கள்தான். நெடுங்காலத்திற்கு முன்பே அவர்கள் சென்றதால் பந்தங்கள் அறுபட்டிருக்கலாம். ஆனால் இப்படிப் பலரைத் தொண்டை மண்டலம் அனுப்பிக் கொடுத்திருக்கிறது என்பதும் சோழ நாடு பலரை இங்கு அனுப்பிக் கொடுத்திருக்கிறது என்பதும் தமிழ்நாட்டினுடைய வரலாறாக இருந்திருக்கிறது.

யார் எந்த நாட்டைச் சார்ந்திருந்தாலும் அவர்கள் தமிழர்கள் என்ற முறையில் நாமெல்லாம் பெருமைப்படவேண்டும்.

தமிழ் மொழியின் மாண்பைப் பற்றி நாம் மட்டுமல்ல அனைத்து நாட்டு அறிஞர்களும் இங்கு வந்து எடுத்துரைத் திருக்கிறார்கள்.

இத்தகைய ஏற்றமிகு தமிழ் மொழிக்கு நாம் சொந்தக்காரர்கள் என்ற பெருமித உணர்ச்சி நமக்கு இயற்கையாக வரத்தான் செய்யும்.

அந்த மொழியின் ஏற்றத்திற்கு ஏற்ற அளவில் நாம் ஏற்றம் பெற்றிருக்கிறோமா என்பதுதான் ஐயப்பாடே தவிர அந்த மொழியினுடைய ஏற்றம் குறித்து ஐயப்பாடு கிடையாது.

தமிழிலுள்ள காப்பியங்களும் செய்யுள் நூல்களும் எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்றால் உருவத்திலேயும் நாடக வடிவத்திலேயும் கட்டுரை வடிவத்திலேயும் பல நூல்கள் நமக்குத் தேவைப்படுகின்றன.

அந்த வகையில் தம்பி கருணாநிதி சிலப்பதிகாரத்தை நாடக உருவில் தந்திருக்கிறார். தமிழ் கற்ற அனைவரும் இதனைப் பாராட்டுவார்கள். தம்பி கருணாநிதியின் சிறந்த தமிழ்நடை அனைவரும் உணர்ந்தது.

அவர், சில விஷயங்களைப் பற்றியும் - சில போக்கைக் கண்டித்தும் எழுதுகிற தமிழாக இருந்தால் கூட படிக்கும் போது - கண்டிக்கப்பட்டவர்கள் கூட அதைப் படிக்கிறபோது நன்றாகத் தான் இருக்கிறது. ஆனால் நம்மைத் தவறாகப் புரிந்து கொண்டல்லவா எழுதியிருக்கிறார் என்று கருதிக் கொண்டிருப் பார்களே தவிர அவரது தமிழ் நடையிலே குற்றம் கண்டிருக்க மாட்டார்கள் - அவரது நடையில் இலக்கிய அறிவும் கலைத் திறனும் இருக்கும். அவர் இந்த நாடகக் காப்பியத்தை எழுதுவதற்கு முற்றிலும் பொருத்தமானவர்.

கருணாநிதியின் தமிழ் நூலை ஆங்கிலத்தில் நண்பர் டி.ஜி. நாராயணசாமி நல்லமுறையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த் திருக்கிறார்கள்.

செய்யுள் வடிவமாக இருக்கும் சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியமாக ஆக்கிய பிறகு அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது, அதிலும் செய்யுள் உருவில் தருவது என்பது கடின மானது. ஆனால் அச்சுவை கெடாமலும் பயன் மிகுந்தும் காணப் படுகிற அளவில் ஆங்கிலத்தில் இந்நூல் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது.

இன்னும் கருணாநிதி தமிழ்ப்பெருங் காப்பியங்களை நாடகங் களாக ஆக்கித் தரும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதில் பெருமைப்படுகிறேன்.

இப்படிப்பட்ட தமிழின் பெருமைபற்றி மாநாடுகளில் கூடிப் பேசுவதில் மட்டும் திருப்தியடையாமல் தமிழ் இலக்கியத்தின் கருத்துக்களை எல்லா மக்களும் உணரத்தக்க விதத்தில் இனிய - எளிய நூல்களாக்கி வெளியிடுவதில் முனைந்து நிற்க வேண்டும். அந்தக் காரியத்தில் ஈடுபட்டுள்ள கருணாநிதியை மீண்டும் வாழ்த்துகிறேன்.

ஆங்கில மொழிபெயர்ப்பு நூலைப் பெற்றுக் கொண்ட ஆஸ்திரேலியா நாட்டைச் சார்ந்த நண்பர் ஜோர் தான் அணிந்திருந்த தமிழ் உடையைப் பார்த்தால் அவரும் திருவாரூரோ என்று எண்ணும் அளவில் இருந்தது.

தமிழ்நூலைப் பெற்றுக் கொண்ட இலங்கை அமைச்சர் திருச்செல்வத்தின் துணைவியார் திருமதி. திருச்செல்வம் இலங்கையைச் சார்ந்தவர் என்பதைவிட இலங்கையிலுள்ள தமிழன்பர் குடும்பத்தைச் சார்ந்தவர் எனலாம்.

தமிழர் என்று அவர்களை நான் சொல்வதுகூட அவர்கள் நாட்டு அரசியலில் அருவெறுப்பையும் அச்சத்தையும் உண்டாக்கிவிடுமோ? என்பதால் அப்படிக் கூறத் தயக்கப்பட்டேன். இலங்கை வெளிநாடு என்றாலும் நமக்கும் அவர்களுக்கு இடையே இருப்பது இருபது மைல் தொலைவுதான்!

வாடைக் காற்று கொஞ்சம் வேகமாக அடித்தால்கூட அந்தக் காற்று இந்தப் பக்கம், இந்தக் காற்று அந்தப் பக்கம் என்ற நிலையில் இருப்பவர்கள். அப்படி அடிக்கிற அந்தக் காற்றும் நல்ல காற்றாக இருக்க வேண்டும் என்பதுதான் நமது கவலை.

சிலப்பதிகார நாடகக் காப்பியத்தை ஆக்கிதந்த தம்பி கருணாநிதிக்கு மீண்டும் நமது நன்றி.

● ● ●

சீக்கியர் மாண்பு

குருகோவிந்த சிங்கின் 301வது பிறந்தநாள் புனிதத் தன்மையுடைய நாளாகும்.

சமூகத்தாரிடையே தோழமையையும் உறுதியையும் வளர்த்ததோடு சீக்கிய சமூகம் பிறருக்குப் பணி செய்ய வேண்டுமென்பதையும் போதித்தது.

அமிர்தசரசில் உள்ள சீக்கியக் கோயிலுக்கு நான் 3-4 தடவைகள் போயிருக்கிறேன். அந்தக் கோவிலுக்குள் சென்று வரக் கூடிய எவரும் சீக்கிய மதத்திடம் மிகுந்த மரியாதையுடனே

திரும்புவர். அத்தனை நேர்த்தியாகவும் சுத்தமாகவும் அக்கோயில் வைக்கப்பட்டுள்ளது.

அக்கோயிலுக்குச் சென்றிருந்தபோது அங்கே நான் ஒரு காட்சியைக் கண்டேன். நன்றாக உடுத்தியிருந்த ஒருவர் அக்கட்டிடத்தின் தாழ்வாரங்களை எல்லாம் சுத்தம் செய்ததோடு அங்கிருந்த காலணிகளையெல்லாம் துடைத்துச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார். ஏனென்று நான் அவர் அருகில் சென்று கேட்டேன். பண்புகள் எல்லாவற்றிலும் தன்னடக்கமே மிக உயர்ந்த பண்பு என்பதைச் செயலால் உணரவே இவ்வாறு செய்கிறேன் என்று அவர் சொன்னார்.

சீக்கிய மதமானது மக்கள் அமைதி கிடைக்காதா என்று கேட்டு வாழ்க்கையின் மீதே வெறுப்புற்று இருந்த காலத்தில் தோன்றியது.

தங்களது மக்கள் ஒரு சமுகமாகக் கூடிப்பிணைந்து வாழவும் மக்கட்சமுதாயத் தொண்டினுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவுமே சீக்கிய சமயம் தோன்றிற்று - சீக்கியர் கடின உழைப்பாளிகள். நான் இங்குமட்டுமல்லாமல் தூர கிழக்காசிய நாடுகளில் கண்டவரை சோம்பேறி என்று சொல்லிடத் தக்க ஒரு சீக்கியரையேனும் காணமுடியவில்லை.

பணி தனக்கென மட்டுமல்லாமல் சமூக முழுமையும் அதன் மூலமும் நாடு முழுமையும் பயனடைய வேண்டும் என்ற மனோ நிலையுடனே அவர்கள் பணி செய்கின்றனர். தமிழர்களாகிய நாங்களும் அத்தகைய உயர்ந்த கோட்பாடுகள் உடையவர்களாயிருந் தோம். சமுதாயத் தொண்டே தமிழர் பண்பாட்டின் மையமாக விளங்கிற்று.

இதனால் தான் தமிழகம் சீக்கியர்களை அனைத்துச் செல்கின்றது. சீக்கியப் பிரமுகர் எங்கள் குழந்தைகளெல்லாம் இங்கேதான் பிறந்தன என்றார்! ஒன்றைச் சொல்கிறேன் குழந்தைகள் மட்டுமல்ல, பேரன்களும், கொள்ளுப் பேரன்களும் இங்கேயே பிறக்கட்டும். அக்குழந்தைகளெல்லாம் சுவாசிக்கிற முதல் காற்று தமிழ்மணங் கமழும் காற்றாக இருக்கட்டும். தமிழ் மண்ணில் அவர்கள் தவழட்டும். நிரந்தரமாக இங்கேயே இருக்கலாம். வேறு சில சமுகத்தாரைப் போல கவலைகொள்ளத் தேவையில்லை.

சீக்கியர் வீரம்

சீக்கிய நெறி சுரண்டலை அனுமதிப்பதில்லை. பிறர் உழைப்பின் பலனைக் கொண்டு வாழுவதை அனுமதிப்பதில்லை. எனவே சீக்கிய நண்பர்களின் உறவு தமிழ் மக்களுக்கு மதிப்பளிக்கும்

ஓர் உறவாகும். என்றேனும் ஒருநாள் தமிழ், சீக்கிய பண்பாடுகள் இணைந்தியங்கிட வகை காண்போம்.

சீக்கிய மக்களது வீரம் போற்றற்குரியது. நாட்டின் எல்லையிலே அவர்கள் வீரத்தோடு எதிர்த்து நின்றிரா விட்டால் என்ன நிகழ்ந்திருக்கும் என்று எண்ணவே இயலவில்லை. சீக்கியரது வரலாறு புகழுடையதாக இருந்திருப்பின் அவர்களது வருங்காலமும் மேலும் சிறந்த புகழுடன் இருக்கும்.

தமிழக அரசு அவர்களுக்கு ஏதேனும் உதவியாக இருக்க முடியுமென்றால் அதைச் செய்திட நான் தயங்க மாட்டேன். சீக்கிய சமயத்தின் மீது எனக்குள்ள உயர்மதிப்பே இதற்கு காரணம்!

அமிர்தசரஸ் கோயிலின் மாடங்களிலே உள்ள ஓவியங்களைப் பார்த்திருக்கிறேன். சீக்கிய சமுகமானது எத்தனை துன்பங்களைத் தாங்கி இன்னல்களைக் கடந்து வந்துள்ளது என்பவற்றையெல்லாம் அந்த ஓவியங்கள் சித்தரிக்கின்றன. அயரா உழைப்பின் மூலம் அவர்கள் இன்றைய மேம்பாடான நிலையை அடைந்தார்கள். தற்காலத் தமிழ் மக்களும் சீக்கியரைப் போன்ற நல்ல பண்புகளைப் பெற வேண்டுமென நான் விழைகிறேன்.

தமிழர் சமயம்

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதே பண்டைத் தமிழ் மக்களின் சமய நெறியாக இருந்தது. சாத்திரச் சடங்குகள் அங்கிருக்கவில்லை. மூடப்பழக்க வழக்கங்கள் இருந்ததில்லை. சீக்கியர் நெறியைப் போலவே தமிழர் நெறியிலும் விக்கிரகங்களுக்கு இடமில்லாதிருந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இங்கே வந்ததாகக் கற்பனை செய்து பார்த்தால் இங்கே இருந்த சமயமும் ஒன்றாகவே இருப்பதை அறிவோம்.

கடவுள் பக்தி இல்லாத என்னை இங்கு அனுமதித்தது பற்றி இங்கு நாளை எவரேனும் கேட்கக்கூடும். மனிதன் மற்றெல்லா வற்றுக்கும் முதன்மையானவனாகவும் கடவுளைத் தவிர வேறு எவருக்கும் மனிதன் அடிமையாகிடத் தேவையில்லை என்றும் சமயம் கூறுமானால் நான் நூற்றுக்கு நூறு சமயவாதியே, இதைவிட்டு தனி மனிதருக்குள் கீழ்சாதி மேல் சாதி என்று ஏற்றத்தாழ்வுகளைக் கற்பிக்கக்கூடியதாக சமயம் இருக்குமானால் அது நடவாது.

மனிதனைப் பாகுபாடு செய்வதிடுவதே கடவுள் நெறி என்று எவரேனும் சொல்லுவார்களானால் நான் நாத்திகனே என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். சமய நெறி என்பது புனிதமானது, உண்மையானது, மனிதாபிமானமுள்ளது. அடக்க உணர்வை

நூல் காப்பகம்
நகர், விருத்தாசலம் -

சோதிப்பது என்றால் என்னை சமயத்துக்கு அப்பாற்பட்ட வனென்று எவரும் சொல்லிவிட இயலாது. என்னை நாத்திக னென்று கூறுவார்க்கு நான் கூறவிரும்புவது இதுதான்.

இந்தியா ஒன்றுபட்டிருக்க வேண்டும். அதன் வலிவு வெல்லற்கரியதாக இருக்க வேண்டும் என்று நாமெல்லாம் விரும்புகின்றோம். இந்த ஒற்றுமையை ஏற்படுத்துவதெப்படி. சட்டத்தின் மூலமோ, கட்டளையின் மூலமோ, குடியரசுத் தலைவரின் உத்தரவின் மூலமோ ஒற்றுமையை ஏற்படுத்திவிட முடியாது. ஒற்றுமை என்பது உள்ளம் சம்பந்தப்பட்ட ஒன்றாகும். நமது எண்ணங்கள் ஒன்றிணைந்திட செயல்பட வேண்டும். வெறும் உதட்டளவுப் பேச்சினால் ஒற்றுமை வந்துவிடாது.

ஒற்றுமையை வளரும் பசுஞ்செடிக்கு நிகராகக் கருதி ஒரு சீராகத் தண்ணீர்விட்டுப் பேணி வந்தால் மட்டுமே அது வளரும். அதைவிட்டுத் தண்ணீரும் வெந்நீரும் மாற்றி மாற்றி ஊற்றினால் செடியின் நிலை என்னவாகும்? தமிழக அரசு கொண்டுள்ள மொழிக் கொள்கையைச் சென்னைவாழ் சீக்கியர் ஆதரிப்பதாக உள்ளது - சங்கத் துணைத்தலைவர் குறிப்பிட்டார். அது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். இங்கே தமிழ்நாட்டில் பொதுவாகவே ஒரு தப்பெண்ணம் நிலவுகிறது. வடக்கேயிருந்து வருகிறவர்களெல்லாம் இந்தி தனியொரு ஆட்சி மொழியாவதை ஆதரிப்பவர்கள் என்ற எண்ணமே. அது சரியல்ல - சீக்கிய மக்கள் தங்கள் குர்முகி மொழியை எந்த அளவு நேசிக்கிறார்கள் என்பதையும் அறிவேன் - அதேபோல அசாம் மொழி எப்படி அசாமியர்களால் நேசிக்கப்படுகிறதென்பதையும் அறிவேன்.

• • •

தமிழுக்குத் தொண்டாற்றியவர்

பல்லாண்டு காலமாகப் பன்மொழிப்புலவரிடம் நெருங்கிப் பழகியவன் என்ற வகையிலும் - அவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டை அறிந்தவன் என்ற முறையிலும் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஆசிரியராக இருந்து பணியாற்றிய காலத்தில் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்ட வரையில் இன்றைய தினம் அவர் தமிழுக்குத் தொண்டாற்றுகின்ற பலவழிகளையும் அறிந்து பாராட்டுகிறேன்.

மற்ற நாடுகளில் அறிவாளர்கள் ஒன்று சொன்னால் அதை அங்கே ஏற்றுக் கொள்வதற்கு ஒருவரோடொருவர் போட்டிப் போட்டுக் கொள்வார்கள். ஆனால் நமது நாட்டைப் பொறுத்தவரை ஒருவரை அறிவாளியென்று சொன்னால் 'என்ன

அறிவு பெரிய அறிவு' என்று தன் அறிவைக் காட்டுபவர்கள் இருக்கிறார்கள். வெளிநாடுகளைப் போல் எழுத்துத் துறை - பேச்சுத்துறை - வேறு எந்தத் துறையானாலும் உற்சாகமாக ஈடுபடுவது மிகக் கடினம்.

இத்தகைய கடினமான தொண்டை முப்பது முப்பத்தைந்து ஆண்டுகட்கு முன்பிருந்தே அப்பாதுரையார் அவர்கள் தொடங்கி பணியாற்றி வருகிறார்கள்.

அவர் வாழ்க்கை பூஞ்சோலையல்ல - வறுமைச் சூழலிலே தன் குடும்பச் சூழலை அமைத்துக் கொண்டிருப்பவர். அவர் நினைத்திருந்தால் பல்கலைக் கழகத் துணை வேந்தராகும் அளவுக்கு இன்று தன்னை உயர்த்தியிருக்கக் கூடும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. எந்தெந்த விதங்களில் - தமிழுக்குத் தொண்டாற்ற லாம் - எந்தெந்த வழிகளில் தமிழ் நாட்டுக்குப் பணியாற்றலாம் என்று எண்ணி அந்தந்த நேரங்களில் அருந்தொண்டாற்றியவர்.

இசைக் கச்சேரியில் பலவிதமான இசை வகைகளை ஏற்ற இறக்கத்துடன் பாடினாலும் சுதிக்குள்ளே நின்று பாடுவது போல தமிழ்த் தொண்டுக்குள் நின்று பல துறைகளில் தொண்டாற்றியவர்.

மேல்நாடுகளில் ஒருவர் ஒரு புத்தகம் எழுதினால் அந்த ஒரு புத்தகத்தில் வரும் வருவாயைக் கொண்டே தன் வாழ்நாளைச் செப்பனிடும் அளவுக்கு வசதியிருக்கிறது.

ஒருவர் எழுதிய புத்தகத்தின் வருவாயைச் செலவழிப்பதற்காக அதுவும் ஓராண்டு காலம் ஓய்விலிருந்து அதைச் செலவழிப்ப தற்காகத் தென்னமெரிக்காவில் சென்று வாழ்ந்தாராம்.

இங்கு ஒருவர் ஒரு புத்தகம் வெளியிட்டால் உடனே வேறு வீட்டிற்குக் குடிபுக வேண்டியிருக்கிறது, கடன் தொல்லைக்காக!

பன்மொழிப் புலவருக்கு மணிவிழா கொண்டாடுகிறோம் - ஆனால் அவரது கருத்துக்கள் நம்மிடம் இருக்கிறதா என்றால் இல்லை. திரு.வி.க.வைப் பற்றிய மறைமலையடிகளாரைப் பற்றிய குறிப்புகள் இல்லை. அவர்களது குறிப்புகளை மறந்துவிட்டால் மரபு என்பது கிடைக்காது. மரபு என்பது தமிழகத்தைப் பொறுத்தவரை மறதியென்று ஆகிவிட்டது. மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் நம்மிடமில்லை.

ஏதேனும் ஒரு புத்தகத்தில் கரிகாலனைப் பற்றியே செய்தி வருகிற இடத்தில் ஒரு நட்சத்திரக் குறியிட்டிருப்பார்கள்.

அதற்கு விளக்கம் கடைசிப் பக்கத்தில் இருக்கும். அதுவும் கரிகாலன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான் என்று

சொல்வாரும் உண்டு - கரூரைத் தலைநகராக்கினான் என்று இயம்புவாரும் உண்டு என்று எழுதியிருக்கும்.

இப்படிப்பட்டவற்றையெல்லாம் நீக்கி வரலாற்று ஆசிரியர்களை உள்ளடக்கி கல்வெட்டு மூலமாகவும் - ஏடுகள் மூலமாகவும் உள்ள கருத்துக்களை ஒன்று திரட்டி வரலாற்றை உருவாக்கி தமிழ் நாட்டாருக்கு வழங்க வேண்டும். வெளிநாட்டுக் காரர்கள் யாராவது கேட்டால் இதோ எங்கள் தமிழக வரலாறு என்று கொடுக்க நம்மால் முடியாது.

இங்கிலாந்து நாட்டில் இதேபோல் ஒரு மாநாடு நடந்தால் இதோ எங்கள் வரலாறு என்று காட்ட அவர்களால் முடியும். ஜெர்மன் நாட்டிலே நடந்தால் அவர்களால் காட்ட முடியும். அப்படிப்பட்ட வரலாற்றை நாமும் காட்ட அப்பாதுரையார் போன்றவர்களை வைத்துச் செயல்பட வேண்டும்.

இந்தி எதிர்ப்பு என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப் பட்ட ஒன்று. இன்று இந்தி எதிர்ப்பில் தீவிரம் காட்டுவது போலவே அன்றும் தீவிரமாக ஈடுபட்டவர் அலமேலு அம்மையார் ஆவார்கள்.

இந்தி எதிர்ப்பு மறியலைத் தொண்டை மண்டலத்துளுவ வேளாளர் பள்ளிக் கூடத்திற்கு எதிரில், நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க மறியலில் ஈடுபட்ட தியாகியென்று அலமேலு அம்மையாரைக் குறிப்பிட்டால் மிகையாகாது.

எவ்வளவு அலைவீசினாலும் மேல் தளத்திலே நிற்கும் கப்பல் தலைவன் போல அவர் கொளுத்தும் வெயிலையும் பாராது எரிக்கும் சூட்டிலே நின்று கொண்டிருந்தார் அப்படிப்பட்ட அவர்கள் இன்னும் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து தமிழுக்கும் - தமிழ்நாட்டுக்கும் தொண்டாற்ற வேண்டும்.

• • •

அழுத்தக்கார மனிதர்

பக்தவத்சலனார் அவர்கள் இந்திய அரசியலிலும் குறிப்பாகத் தமிழக அரசியலிலும் தம்முடைய வாழ்வை அர்ப்பணித்துக் கொண் டவர். நாட்டில் 50 வருட வரலாற்றில் அவர்கள் இடம் பெற்று இருக்கிறார்கள். அவருடைய தனிப்பட்ட பண்பைப் பாராட்டுவதை விட அவர் வாழ்ந்த காலத்தில் உள்ள நிலைமையைப் பாராட்டி னால் அவரை நாம் உணர்ந்து இருக்கிறோம் என்று பொருள்.

அவரோடு ஒத்த கருத்துள்ளவர்கள் பாராட்டுவதைவிட ஒத்துக் கொள்ளாதவர்கள் பாராட்டுவதுதான் ஜனநாயகத்தின் சிறப்பு ஆகும்.

அவர் ஒரு கட்சியை சேர்ந்தவர். நான் ஒரு கட்சியைச் சேர்ந்தவன். இருவரும் தனித்தனி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும் பெரியார் காங்கிரசிலிருந்து பிரிந்தார். பெரியாரிட மிருந்து நாங்கள் பிரிந்தோம். காங்கிரசில் இருந்து பிரிந்த இயக்கம்தான் மற்ற இயக்கங்கள். மூலத்தில் எல்லோரும் ஒன்றுதான்.

பழைய காலத்தை நினைவு படுத்தக்கூடிய பெரியவர்களில் ஒருவராக நம்மிடம் பக்தவத்சலம் இருக்கிறார் என்பது பெருமைக்குரியது ஆகும்.

அப்படிப்பட்ட பெரியவர்கள் என்று ராஜாஜி - பெரியார் - காமராஜர், பக்தவத்சலம் போன்றவர்களைக் குறிப்பிடலாம். அவர்கள் மறைந்தால் பல விஷயங்கள் வெளியே வராமலே போய்விடும். இவர்கள் எல்லோருக்கும் தமிழ் நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை இருப்பது பாராட்டுக்குரியது ஆகும். இந்தப் பெரியவர்கள் எல்லாம் இன்னும் பல ஆண்டுகள் நம்மிடத்திலே இருந்து பல நல்ல கருத்துக்களைச் சொல்லி தமிழ் நாட்டின் எதிர்காலத்தை உருவாக்க உதவ வேண்டும். பக்தவத்சலம் அவர்களுடைய குடும்பம் நிலச்சுவான்தார் குடும்பம்.

சமுதாயத்தில் உயர்ந்த வகுப்பு என்று ஒப்புக் கொள்ளப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தார். மேட்டுக்குடியில் பிறந்தவர் என்றாலும் அவருடைய முன்னோர்கள் தேசியத்தில் பற்றுள்ளவர் களாக இருந்தார்கள் என்று கேள்விப்பட்டு இருக்கிறேன்.

எங்கள் ஊருக்கு பக்தவத்சலம் அவர்கள் தன்னுடைய தந்தையோடு வரும்போது தான் பார்த்து இருக்கிறேன். அப்போ தெல்லாம் வெகு அடக்கத்தோடு வருவார். எனக்கும் அவருக்கும் பத்தாண்டு காலமாக நெருங்கிய தொடர்பு உண்டு. ஆனால் பத்திரிகையில் வரும் விஷயங்களைப் பார்த்து எடைபோடுகிறார் களே தவிர எங்களுக்குள்ள நட்பைச் சிலர் புரிந்து கொண்டது இல்லை. சட்டமன்றத்தில் பணியாற்றியபோது நான் கூறிய பலவற்றை அவர் மறுத்திருக்கிறார். அவர் கூறியவற்றை நான் மறுத்து இருக்கிறேன்.

எந்தப் பண்டத்தை எடுத்தாலும் தூற்றி நல்லதை எடுக்கிறார்கள்.

நாம் கூட தூற்றுகிறோம். மாலை நேரத்தில் ஒருவரை ஒருவர் தூற்றிக் கொள்கிற நேரத்தில் தேவையற்றதைத் தள்ளிவிட்டு நல்லதை எடுத்துக் கொள்ள முயற்சித்தால் பலன் உள்ளதாக இருக்கும்.

யார் மீதும் எனக்கு எந்த நேரத்திலும் வெறுப்பு இருந்தது இல்லை.

பகை உணர்ச்சி கூடாது.

அவரவர்கள் தங்கள் கொள்கைகளை வலியுறுத்துவதில் ஈடுபட்டாலும் அதிலே பகை உணர்ச்சி தேவை இல்லை. பக்தவத்சலம் சட்டமன்றத்தில் இருந்த காலத்திலேயே எங்களோடு இருந்த காலத்தில்தான் அதிகமாக மகிழ்ச்சி அடைந்து இருக்கிறார். அவருக்குள்ள பெரிய குணம் அவர் ரொம்ப அழுத்தக்காரர் என்று சொல்வார்கள். சட்டமன்றத்தில் நாங்கள் மணிக்கணக்கில் பேசுவோம். அதிலே சில இடங்களில் கோபத்தை வெளிப்படுத்து வோம். வேண்டுகோளைத் தெரிவிப்போம். எல்லாம் முடிந்த பிறகு பக்தவத்சலம் அவர்கள் என் நண்பர்கள் சொல்லியன ஏற்றுக் கொள் வதற்கு இல்லை என்று ஒரு வரியில் சொல்லி விடுவார். அப்போதும் அவர் கசப்பு உணர்ச்சியை காட்டியது இல்லை.

மேடையில் நாங்கள் இருவரும் பேசிக் கொண்டு இருந்த பொழுது கைத்தட்டலும் சிரிப்பொலியும் எழுந்தது. எதையோ காணக்கூடாத காட்சியை கண்டது போல ஜனநாயகத்தில் பல கட்சிகள் இருக்கும். இருக்க வேண்டும்.

சர்ச்சில் பிரதமராக இருந்து ஒருமுறை தேர்தலில் தோற்றபோது அட்லி பிரதமராக வந்தார். வழக்கப்படி பிரதமர் பத்தாம் எண்ணுள்ள வீட்டுக்கு குடிபோனபோது, பழைய பிரதமர் சர்ச்சிலின் மனைவி அந்த வீட்டின் அமைப்புகளை எது எது எங்கெங்கு இருக்கும் என்று விளக்கிக் கூறுகிறார். அந்த மனப்பான்மை நமக்கு வராது என்று கருதினால் நாம் ஜனநாயத் திற்கு லாயக்கில்லாதவர்கள் என்றாகிவிடும்.

அட்லியும் - சர்ச்சிலும் ஒரே மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றபொழுது மற்றவர்களுக்கு விவாதத்துக்கு உரியதாக இருந்தது. இருவரும் செல்வதை முறியடிக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் தடுக்கப்பட்டு இருவருமே அந்த மாநாட்டில் கலந்து கொண்டார் கள். ஜனநாயகத்தில் அந்த நாடு எவ்வளவு சிறந்து இருக்கிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

இதுபோன்ற விழா மட்டுமல்லாமல் பொதுவாக முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

கருத்து வேறுபாடுகள் இருப்பினும் ஒருவரை ஒருவர் மதிக்கும் ஜனநாயகப் பண்பு வளர்வதற்கு காங்கிரஸ் தலைவர்கள் உதவ வேண்டும்.

சைவர்களும் - வைணவர்களும் சண்டையிட்டுக் கொண்ட நிலை போய் இப்போது இருவரும் ஒரே வீட்டில் குடி இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட உணர்வை உருவாக்க முன்நிற்க வேண்டும். பக்தவச்சலம் தம்முடைய கட்சிக்கு மட்டும் அல்லாமல் எல்லாக் கட்சிக்கும் கருத்துக் கூறும் ஆற்றல் பெற்றவராவார்.

பைபிளைப் படித்து விடுவதாலே நாம் கிறிஸ்தவர்களாகி விடுவது இல்லை. காங்கிரஸ் தலைவர்களாக இருப்பவர்கள் தான் காங்கிரஸ் வரலாற்றை படிக்கவேண்டும் என்பதில்லை. எனக்குத் தெரிந்த வரை காங்கிரசிலே இருப்பவர்களை விட, நாங்கள் அதிகமாக அறிந்து இருக்கிறோம். ஏன் என்றால் எந்த இடத்தில் ஓட்டை இருக்கிறது என்பது அப்போதுதான் தெரியும்.

நான் பொறுப்பு ஏற்றதும் தனித் தனியாக டைரி எழுத ஆரம்பித்தேன். இப்போது ஒரு டைரிதான் மிஞ்சி இருக்கிறது. ஐந்து டைரி எங்கே என்று தெரியவில்லை. டைரி எழுதி எனக்குப் பழக்கம் இல்லை. அந்தப் பழக்கம் இல்லாததால் தான் தமிழ்நாட்டின் முழு வரலாறு நமக்குக் கிடைக்கவில்லை. திருவள்ளுவர் எந்த ஊர் என்று இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை.

டாக்டர் வரதராஜலு - திரு.வி.க. போன்றவர்கள் வரலாறு சரியாக எழுதப்படவில்லை. பக்தவத்சலம் அவர்களின் நாற்பது - ஐம்பது வருட காலமாக தொடர்பு கொண்டிருந்த அரசியல் வரலாற்றை உருவாக்கினால் படிப்பகத்திற்கு சிறந்த நூல் கிடைக்கும்.

● ● ●

எதிர்நீச்சலடித்த இரட்டையர்

பெருந்தன்மையோடு கூடிய பொதுவாழ்வு வெற்றியையன்றி வேறெதையும் தந்திடாது.

அறிவுத் தெளிவுக்கும் வாழ்க்கைப் பணியில் உறுதிக்கும் இவ்விரட்டையர் முன் உதாரணமாகத் திகழ்கின்றனர்.

இவ்விரட்டையரது அறிவாழம் மிக்க புலமையிலும் இவர்களது தருக்க நியதிகளிலும் ஐயப்பாடு என்பது எவருக்குமிருக்காது. இவ்வாறிருப்பினும் அனைவரும் இவர்களை பின்பற்றுவதில்லை.

ஆற்றில் எதிர்நீச்சலடித்து சுழல்தனைச் சந்தித்து மேல்நோக்கிச் சென்றுள்ள இவர்கள் அவ்வாறு செய்தது வீரபிரதாபங்களுக்காக அல்ல. அறிவுத் தெளிவோடு தாங்கள் கொண்ட கொள்கைகளில் உறுதியோடு தாங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ள பாதையில் அவர்கள் திடமாகவே சென்றுள்ளனர். எனினும் அவர்கள் வெற்றியையே தழுவி இருக்கிறார்கள்.

ஆற்காடு சகோதரர்கள் என்றழைக்கப்படும் இரட்டையர் தமிழகம் தந்த உரம் மிகுந்த வல்லவர்கள். இந்தியாவின் மேதைகள் - உலகறிந்த சான்றோர் - இந்த நூற்றாண்டின் உலக மேதைகளுள் சிலராக மதிக்கப்படுவர்.

இவ்வுலகிலே பெரிய மனிதர் என்ற பெயரெடுக்கத் தாம் கொண்ட கொள்கைகளிலிருந்து விலகிடுபவர் உண்டு. ஆனால் சர்.ராமசாமியோ ஓராயிரம் களம் கண்டவர்.

டாக்டர் லட்சுமணசாமி மருத்துவத்திலும், கல்வியிலும் சிறந்தவர். மருத்துவம் மனித உடலைப் பாதுகாக்க - கல்வி மனித மனத்தைப் பாதுகாக்க என்ற வகையில் அவரது பணி பயன்பட்டு வருகிறது. உறுதியான உடலில் தூய்மையானதொரு மனம் - இந்த அவசியத்தை பல்லாயிரவர் உள்ளங்களில் பதிய வைத்தவர் அவர்.

அரசியற் புயலில் அவர் சிக்கிக் கொள்ளவில்லையென்றாலும் தூரத்தே நின்று அரசியலைக் கவனித்து அதை அமைதிப்படுத்துவதில் அவர் ஈடுபட்டார்.

இவ்விரட்டையர் தங்கள் அலுவல் யாவிலும் கடைப்பிடித்த பண்பாடும் நாகரிகமும் தனிச் சிறப்பானவை.

அந்நாட்களில் நடந்த அரசியல் விவாதங்கள் மிக நேர்த்தியானவை. பிரச்சினைகளும் - சாதனைகளுமே விவாதிக்கப்படும். அந்த விவாதத்துக்கப்பால் தோழமை உணர்வே அங்கு மிகுந்திருக்கும்.

இந்நாட்களில் அத்தகைய விவாதங்கள் நிகழ்த்தப்படுகின்றனவா? பிரச்சினைகளைப் பற்றிப் பேச எழுகின்ற நாமே பிரச்சினைகளாக மாறிவிடுகிறோம். அந்த அளவுக்கு நாம் குன்றி விட்டோம்.

இத்துணைக் கண்டம் அதன் ஜனநாயக வாழ்வின் இருபதாம் வயதினைக் கடந்து கொண்டிருக்கிறது. சர். ராமசாமி போன்ற பெரியவர்கள் இந்த ஜனநாயக வாழ்வை முறைப்படுத்திட முன் வந்தால்தான் ஜனநாயகம் தழைத்தோங்கும். இல்லையேல் அழிவுப் பாதையை நோக்கி இட்டுச் செல்வதாகவே இருக்கும்.

ஜனநாயகம் என்பதால் சாதாரணத் திறமையுடையவர்கள் அரசியலை வழி நடத்திச் சென்றால் போதுமென்று எண்ணுவதோ சொல்வதோ கூடாது. உரம் மிக்க வல்லவர்கள் தேவை. வழி நடத்தும் ஆற்றல் உள்ளவர்கள் தேவை. எனவே 81 வயதிலும் வலிமையுள்ளவர்களாக 81 வயதாகியும் உடல் உறுதியோடு 81 வயதில் 50 ஆண்டைய செறிந்த அனுபவங்களையும் கொண்ட இவ்விரட்டையரது வழிகாட்டுதல் நமக்குத் தேவை. வருங்காலத்

தலைமுறையினரது நன்மை கருதி தங்களது செறிந்த அனுபவங் களை அவர்கள் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் சுயசரிதையை இவர்கள் இருவரும் எழுதிட வேண்டுகின்றேன். அப்படி எழுதப்பட்டால் அது இவ்விருவரது வாழ்க்கையைப் பற்றியதாக மட்டுமிராது. இவர்கள் வாழ்ந்த காலத்தைப் படம்பிடித்துக் காட்டிடும் உன்னதமானப் புகழ்மிக்க அத்தியாயமாக அது விளங்கும்.

நான் எடுத்துக் கூறும் கொள்கையில் எனக்கு நம்பிக்கை உண்டு. இதில் மற்றவர்களும் நம்பிக்கை வைக்கும் காலம் வரும்வரை நான் காத்திருக்கத் தயார். அந்தக் காலம் வரும்வரை விளைவுகளையும் ஏற்கத் தயார் என்று கென்னடி கூறியது போல அதே உறுதியுடன் சர். ராமசாமி விளங்கி வருகிறார்.

ஆங்கிலக் கல்வியின் அவசியம் பற்றிய அவரது கருத்துக்களை இப்போது இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களும், ஏற்றுக் கொள்கிறார்கள். ஆங்கிலத்தின் இடத்தில் இந்தி இத்தனை அவசரக் கோலத்தில் திணிக்கப்படுவது கூடாதென்று அவர்கள் சொல்கிறார்கள்.

இவ்விரட்டையரது வாழ்வு மகத்தானது. மகோன்னதமானது. சூட்டினை ஏற்படுத்தாது. ஆனால் ஒளியினை உமிழும்.

இவர்களது சேவை இன்னும் நாட்டுக்குத் தேவை. சந்தைச் சதுக்கத்தில் வந்து நின்றுதான் மக்களை இவர்கள் வழிநடத்த வேண்டுமென்பதில்லை.

தாங்கள் இருக்குமிடத்துப் பலகணியில் நின்றபடியே இவர்களால் மக்களுக்கு வழிகாட்டிட முடியும்.

இவர்கள் நிறை வாழ்வு வாழ்வார்களாக.

● ● ●

இனிய மனிதர்

காஞ்சி மணிமொழியாருக்கு 60 வயதாகி விட்டது என்று நண்பர்கள் கூறியபோது இவ்வளவு வயதாகிவிட்டதா என்று மலைத்துப்போய் விடுவோம். காரணம் அத்தகைய இளமைத் தோற்றத்துடன் இருப்பவர்.

இதுவரை நாட்டுக்கு அவர் எந்தவிதமான தொண்டாற்றி னாரோ அதே தொண்டைத் தொடர்ந்து ஆற்றி - எந்தவிதமான இலட்சிய நாட்டைக் காணவேண்டும் என்று கனவு கண்டாரோ - அதைக் காணும்வரை இடைவிடாது பாடுபட வேண்டும் என்று

அவரை வேண்டுவதுதான் நாம் அவருக்கு தெரிவிக்கும் பாராட்டு! அதைத்தான் அவர் எதிர்பார்ப்பார்.

இத்தனை வயதாகிவிட்ட பிறகு நம்மிடம் அவர் எதிர்பார்ப்பது எதுவும் இருக்காது. ஏனெனில் இளமையிலேயே அவர் எதிர்பார்க்கவில்லை. கழகம் எந்தவிதமான கட்டளை யிட்டாலும் அதை நிறைவேற்றியவர் மணிமொழியார். தடியடி படுவதுதான் தமிழ்காக்கும் முறை என்றால் - தடியடி படத் தயாரானார்! சிறை செல்வது தான் செந்தமிழ் காக்கும் வழி என்றால் சிறை செல்லத் தயாரானார்! காடு மேடு சுற்றிப் பிரச்சாரம் செய்வதுதான் தமிழின் பெருமையை உணரச் செய்யும் வழி என்றால் அப்படிக் கடுமையான பிரச்சாரத்தைச் செய்யத் தயாரானார். ஏடுகளை வெளியிடுவது தான் இன்தமிழை வளர்க்கும் பணி என்றால் - அவர் ஏடுகளை நடத்தியிருக்கிறார். இதழ்களை வெளியிட்டிருக்கிறார். மாநாடுகளைக் கூட்டியிருக்கிறார். தமிழ் ஆர்வத்தைக் காட்டியிருக்கிறார்.

இப்படிப்பட்டவர்களால் தான் மிகச் சாதாரணமானவர் களால் துவக்கப்பட்ட தி.மு. கழகம் அரசாளும் பொறுப் பேற்றிருக்கிறது.

முஸ்லிம் பெருங்கவிஞர் இக்பால் ஒரு கவிதை மூலம் கூறினார்.

சிட்டுக் குருவிகள் வல்லூறைப் போல் கொத்தும் திறனற்றவை. கூர்மையான நகமற்றவை. வல்லூறை விட பலத்தில் குறைந்தவை.

ஆனால் ஒரு காலம் வரும். சிட்டுக்குருவிகள் வல்லூறை வெல்லும் காலம் வரும்! பாமர மக்கள் பாராளும் காலம் வரும்!

- என 25 ஆண்டுகளுக்கு முன்னரே அவர் பாடினார்.

சிட்டுக்குருவிகள் வல்லூறை வென்றதுபோல் பாமரர்கள் இப்போது பாராள்கிறார்கள்.

சிட்டுக்குருவிகள் வல்லூறை வென்றது மட்டுமல்ல சிட்டுக் குருவிகள் ஆட்சியை எப்படிக் கவிழ்ப்பது என்று வல்லூறுகள் யோசித்துக் கொண்டிருக்கின்றன இப்போது!

இந்தச் சிட்டுக் குருவிகளை ஆட்சிக்கு வரவிடாமல் தடுக்கும் ஆற்றலே கூட வல்லூறுக்கு இல்லாத போது - அதைக் கவிழ்ப்பது எப்படி?

கவிழ்ப்பேன் எனப் பேசுவது ஆசையின் விளைவே தவிர ஆகக் கூடிய காரியமல்ல! நாங்கள் ஆட்சிப் பெறுப்பேற்ற பிறகும் நாம் சிட்டுக் குருவிகள் தான் என்பதை மறக்கவில்லை! அதை

மறந்தால் - நாங்கள் கவிழ்ந்தோம்! அதை மறக்காதவரை நாங்கள் கவிழ மாட்டோம்.

மந்திரிப் பதவியில் நாங்கள் இருப்பதால் ஏதோ மகிழ்ச்சி யோடிருக்கிறோம் என்று காங்கிரஸ்காரர்கள் நினைக்க வேண்டாம்!

தேர்தலுக்கு முன்பே கூட நான் கூறியிருந்தேன், நாங்கள் ஆட்சிப்பீடம் ஏறவேண்டும் என்பதில் எங்களுக்கு அவசரமில்லை. மக்கள் ஆணையிட்டால் வருகிறோம். பொறுத்திரு, இன்னும் ஐந்தாண்டு காலம் என்றாலும் பொறுத்திருக்கத் தயார் என்றுதான் கூறினேன்.

ஆனால் நாட்டு மக்களுக்குத்தான் அவசரம்! ஆகாத ஆட்சியை எத்தனை நாளைக்குத்தாங்கிக் கொள்வது? இருளில் எத்தனை நாள் தவிப்பது? உதய சூரியன் ஒளி என்று கிடைக்கும்? - என்று ஏங்கிய மக்கள்தான் எங்களுக்கு ஆணையிட்டார்கள். ஆளுகிறோம்!

முன்பு (1938-ல்) நடந்த இந்தி எதிர்ப்பு ஊர்வலங்களைப் பற்றிச் சொன்னால் உங்களுக்கே கூச்சமாக இருக்கும்.

சென்னை நகரின் மத்தியப் பகுதியில் மயிலை சிவமுத்து என்ற ஒரு பெரியவர் - அவரது தமக்கையார் - அவருக்குத் துணையாக டாக்டர் தருமாம்பாள் ஆகியோர் இன்னும் சிலர்!

இப்படிப் பல்போன பெரியவர்கள் பத்துப்பேர். மீசை முளைக்காத எங்களைப் போன்றவர்கள் ஐந்து பேர். மீசை முளைத்த வாலிபப் பருவமுடைய மணிமொழியார் போன்றவர்கள் ஐந்து பேர், ஆக 20 பேருடன் மெல்லிய குரலில் இந்தி ஒழிக! இந்தி ஒழிக! என்று ஒலியெழுப்பிச் செல்வோம்.

எங்கள் ஊர்வல ஒலியைக் கேட்டு, வீட்டுக்குள் இருப்பவர்கள் வெளியே வந்து பார்க்க மாட்டார்கள். ஏனென்றால் நாங்கள் கொடுக்கும் குரல் வீட்டைக் கடந்து, வீட்டுக்கூடத்திற்குக் கூடச் செல்லாது!

அப்படி எங்களுக்குள் பேசிக் கொள்வதுபோல் இந்தி வேண்டாம் என்று குரல் கொடுப்போம்! இந்தி ஒழிக, என்று உரத்த குரலில் கூறினால் ஆயிரம் பேர் சேர்ந்து கொண்டு ஏன் இந்தி ஒழிய வேண்டும் என்று மிரட்டினாலும் மிரட்டுவார்கள்.

ஆனால் இன்றுள்ள நிலைமை வேறு. இந்தி வாழ்க - என்று கூறுவதற்கு இந்திக்காரரே கூச்சப்படுகிறார்.

• • •

பிறந்த பொன்னாட்டை மறக்கக் கூடாது

எவரும் தான் பிறந்த மண்ணை மறப்பது கூடாது. வெங்கட்ராமனும் மறக்கமாட்டார் என்றே நம்புகிறேன். இந்த மண்ணோடுள்ள உறவுதான் நின்று நிலைத்திருக்கக் கூடியதாக இருக்கும். தமிழ்நாட்டின் தேவைகளையும், அவசியங்களையும் உணர்ந்துள்ள அவர் இதுகாறும் ஏற்பட்ட தவறுகளைச் சரி செய்து தமிழகத்துக்கு நீதி கிடைத்திடச் செய்யவேண்டும்.

தமிழகத்தைச் சேர்ந்த நாம் கொடுத்து புகழெய்தியவர்கள். வாங்கிப் பழகியவர்கள் அல்ல. நாம் கேட்பது பொருளாதார நியாயமே - அரசியல் நியாயம் கோரவில்லை.

இயற்கைக் கனிப் பொருள்கள் கிடைக்குமிடத்தில் தொழில்கள் துவக்கப்பட வேண்டுமென்ற கோட்பாடே கல்லூரிப் பொருளாதார வகுப்பில் படித்திடும் ஆரம்பப் பாடம். இந்த வகையில் தான் சேலம் உருக்காலை திட்டத்தை வலியுறுத்துகிறோம்.

ஒருவர் புகழெய்திவிடுகிறார் என்பதால் இந்த ஆரம்பப் பொருளாதாரப் பாடத்தை மறந்து விட இயலுமா?

இதே வகையில் தான் தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டம் பற்றியும் வலியுறுத்துகிறோம்.

நாட்டின் வரலாற்றில் பரபரப்பானதொரு காலம் இது. இந்தியாவின் கூட்டமைப்பு அரசியல், பல்வேறுபட்ட கட்சிகளில் ஆட்சிகள் ஆங்காங்கு அமைந்துள்ளதால் - இயங்க முனைந்துள்ள காலம் இது. இத்தகைய நேரத்திலே வெங்கட்ராமன் டில்லி செல்கிறார்.

பல்வேறு கட்சிகளிடையேயும் ஒன்றுபட்ட உணர்வையும், தோழமையையும் உருவாக்குவதில் அவர் பணி அவசியப்படும். இத்தகையதொரு தோழமை உணர்வை ஏற்படுத்துவதில் தமிழகம் வெற்றி கண்டுள்ளது. இன்றைய விழாவே அதற்கொரு சான்று.

ஒரு கட்சியை மற்ற கட்சி தாழ்வாய்ப் பேசுவது ஜனநாயகம் அல்ல. இத்தனை நாள் ஆட்சி செலுத்தினீர்கள். இதுவரை போதும். எங்களிடம் ஆட்சியை விடுங்கள். இன்னும் வேகமாகக் காரியங்களை நிறைவேற்றுகிறோம் என்று கூறுவதே ஜனநாயகமாக விளங்கும் தத்துவம்.

தமிழகத்திலே நாம் இவ்விஷயங்களில் உறுதியாக இருக்கிறோம்.

டாக்டர் லட்சுமணசாமியின் வாழ்க்கையே சிறந்த ஒரு எடுத்துக்காட்டு. அவரது வாழ்நாளில் எத்தனைவிதமான அரசியல்

லாபங்கள் அவரைத் தேடி வந்திருக்கும். அதற்கெல்லாம் அசைந்து கொடாமல் என்வழி நான் செல்கிறேன் என்று இருந்துவிட்டார். அலைபாயும் கடலில் திசை காட்டும் கருவியில் பார்வையைச் செலுத்தியபடி கலம் செலுத்தும் தேர்ந்த மாலுமிபோல் டாக்டர் லட்சுமணசாமி இருந்துள்ளார்.

நாம் நமது குறிக்கோள்களில், நமது அரசியலில் உறுதியுடையவர்களாக இருக்கிறோம். அரசியல் ஸ்திரத்தன்மையும், உண்மை உணர்வும் இங்கு மிகுந்துள்ளது. மற்றவர்கள் நம்மிட மிருந்து பெறவேண்டிய பாடங்களில் இதுவும் ஒன்று.

இதையெல்லாம் நான் கூறக் காரணம், நண்பர் வெங்கட் ராமனிடம் இந்தக் குணங்கள் நிரம்ப உண்டு என்பதாலேயாகும். இந்தக் குணங்கள் எங்கு தேவைப்படுகிறதோ அந்த இடத்துக்கு வழங்குகிறோம், வெங்கட்ராமனை அங்கு அனுப்புவதன் மூலம்.

அவர்களிடமிருந்து நாம் பெறுவதெல்லாம் இங்கிருந்து அவர்கள் வரியாக எடுத்துச் சென்றதில் ஒரு பகுதியே.

நான் இனி ஒவ்வொரு மாதமும் கையில் ஒரு பட்டியலோடு டில்லியில் வெங்கட்ராமன் அறைக் கதவைத் தட்டுவதாக இருக்கிறேன்.

அப்படித் தட்டத் தேவையில்லை, கதவுத் திறந்தேயிருக்கு மென்கிறார் வெங்கட்ராமன். கதவு திறந்தேயிருந்தாலும் தட்டி விட்டுத்தான் உள்ளே நுழைய வேண்டுமென்பது ஆங்கிலேய முறை.

நாம் கொடுக்கும் திட்டங்களைத் திட்டக்குழுவின் சக உறுப்பினர் முன்வைத்து நமக்கு நியாயம் கிடைக்கச் செய்வார்கள் என்று நம்புவோமாக!

வெங்கட்ராமன் தமது பதவியில் சிறப்பாகச் செயலாற்றும் பரிவு செலுத்துவோம் - தமிழ் மக்களின் நல்லெண்ணமே அவருக்குச் சிறந்த பக்கப்பலமாக இருக்கும்.

● ● ●

ஏழைகளின் இதயத்தலைவர் ஜீவா

அருமைத் தலைவர் ஜீவாவின் புதல்வி உஷாதேவியின் இந்த மணவிழாச் செய்தி பத்திரிகைகளிலே வெளிவரும்- போது அந்தச் செய்தியைப் படிக்கின்ற அனைவரும் மணமக்களை வாழ்த்து வார்கள். இந்த மணவிழா தமிழகம் முழுமைக்கும் மகிழ்ச்சி அளிக்கும் மணவிழாவாகும். காரணம், தமிழகத்திலுள்ள எல்லா மக்களின் நன்மதிப்பைப் பெற்று, குறிப்பாக ஏழை எளியமக்களின்

இதயங்களில் இடம் பெற்றவர் ஜீவாவாகும். அத்தகைய ஒப்பற்ற தலைவரின் புதல்வியின் திருமணத்தைத் தமிழகத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்கள் இல்லத்தில் நடைபெற்ற மணவிழாவாகக் கருதி மகிழ்வார்கள்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் பெறாத பேற்றை இந்த மணமக்கள் பெற்றிருக்கிறார்கள். காரணம், இந்த விழாவை பெரியார் அவர்களே முன்னின்று நடத்துகிறார்கள்.

நான் கூட பெரியாரிடம் வரும்போது மணமான பின்னர் வந்தேன். எனக்குக் கூட அந்த பாக்கியம் கிடைக்கவில்லை.

ஒரு பெரிய குடும்பத் தலைவர் தனது இல்லத்தில் நடைபெறும் விழா நிகழ்ச்சியின் போது அமர்ந்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருப்பார். அதோ அவன் என் மூத்தமகன் டாக்டர்! இவன் இரண்டாவது பையன் வக்கீல். அவன் மூன்றாவது பையன் என்ஜினியர் என்று அவர்கள் ஓடியாடி வேலை செய்யும் போது பக்கத்திலிருப்பவர்களிடம் கூறிப் பூரிப்பார்.

அதே போலத்தான் பெரியார் அவர்கள் இங்கே பூரித்த நிலையிலிருக்கிறார்கள். இந்த மணவிழவில் பல்வேறு கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் ஓடியாடி வேலை செய்ததைப் பார்த்து எல்லோரும் என் மக்கள்தான். நம்மாலே பயிற்சி அளிக்கப்பட்டவர்கள்தான் என்று பெரியார் பெருமைப்படுவார்.

இந்தப் பெருமை உலகில் வேறு எந்தத் தலைவருக்கும் கிடைத்ததில்லை. பெரியார் அவர்கள் தமிழ் போல என்றும், இளமையோடு இருந்து எந்தக் குழந்தையும் தப்பிப் போகாமல் - அவர்கள் எந்தக் கட்சியில் எந்தத் துறையில் இருந்தாலும் அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சிக்கு மெய்யாகத் தொண்டாற்றும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும் - பார்த்துக் கொள்வார்.

என் பொதுவாழ்வில் நான் ஏற்றுக் கொண்ட ஒரே தலைவர் பெரியார். நான் அவரிடமிருந்து பிரிந்து சென்றபோது ஒன்றைக் குறிப்பிட்டேன்.

நான் புதிய தலைவரைத் தேடி அய்யா அவர்களிடமிருந்து பிரிந்து செல்லவில்லை என்று குறிப்பிட்டேன். அதே நிலையில் தான் இன்றும் இருக்கிறேன்.

குன்றக்குடி அடிகளார் இங்குப் பேசினார். அவர் எத்தனையோ மணமக்களை வாழ்த்திப் பேசியிருப்பார். ஆனால் அவருக்குத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் எண்ணம் ஏற்பட்டிருக்காது.

● ● ●

அதேபோல அடிகளார் கம்பீரமாகக் காட்சியளிப்பதைப் பார்த்து எந்த வாலிபருக்கும் அவரைப் போல் துறவியாக வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டிருக்காது. அவரவர்கள் உள்ள கொள்கைப்படி நடப்பதும் என்ன நெறிமுறைகள் இருக்கின்றவோ அவற்றை நிறைவேற்றுவதைக் கடமையாகக் கொண்டு நடத்துதலும் வேண்டும். நாம் வெவ்வேறு இலட்சியத்தில் சென்றாலும் ஒரு இலட்சியத்திற்கு வருபவர்கள்.

பெரியாரவர்களோடும் மற்றவர்களோடும் தம்முடைய லட்சியத்தை விட்டுக் கொடுக்காது பழகினாலும் தம்மைச் சந்தேகப்படுவதாக அடிகளார் குறிப்பிட்டார்கள். அதை அவர் குறிப்பிட்டபோது பெரியார் அவர்களுடன் அரித்துவாரத்திற்குச் சென்றது நினைவுக்கு வந்தது.

மாலை நேரங்களில் பெரியார் கங்கை நதி தீரத்தில் உலாவச் செல்வார். வெண்தாடிப் பளபளக்க மஞ்சள் நிற சால்வை போர்த்திக் கொண்டு பெரியார் முன்னே செல்வார். அவர் எனக்குக் கம்பளிக் கோட்டு வாங்கித் தராததால் குளிர் தாங்காமல் நான் கைகளை இறுக்கக் கட்டிக் கொண்டு அவர் பின்னாலேயே போவேன்.

இந்தக் காட்சியைப் பார்த்தவர்கள் பெரியார் அவர்களைப் பெரிய சாமியார் என்றும், என்னைச் சின்னச்சாமியார் என்றும் கருதிவிட்டார்கள். பெரிய சாமியாருக்கு இருக்கின்ற சக்தியில் சீடருக்குக் கொஞ்சமாவது இருக்காதா என்று கருதி என் காலிலும் பலர் விழுந்து கும்பிட்டார்கள்.

இங்கே நாங்கள் வேறு விதமாக கருதப்பட்டாலும் அரித்துவாரத்திலிருந்தவர்கள் எங்களைச் சாமியார்களாகவே கருதிவிட்டார்கள். அதேபோல் சிலர் சந்தேகப்படுவது இயல்பு.

நெடுந்தொலைவு போன மகன் திரும்பத் தந்தையைப் பார்க்க வரும்போது கையில் கிடைத்ததை வாங்கி வந்து தருவான். அதேபோல் இன்று பெரியாரைப் பார்க்க வந்த நானும் ஒரு அன்புப் பரிசை - கனியை - ஏதோ என்னால் இயன்றதைக் கொண்டு வந்திருக் கிறேன்.

சுயமரியாதை இயக்கத் திருமணங்களை நடத்திச் சாதி ஒழிப்புக்காகப் பெரியார் பாடுபட்டு வருகிறார். பகுத்தறிவுத் திருமணங்களும் கலப்புத் திருமணங்களும் நாட்டில் ஏராளமாக நடைபெற்றிருக்கின்றன. இந்தத் திருமணங்களைச் செல்லுபடி யாக்கச் சுயமரியாதைத் திருமணச் சட்டம் கொண்டுவரப் போகிறோம் என்ற நல்ல செய்தியை - அன்புப் பரிசை - கனியைப் பெரியாரிடம் அளிக்கிறேன்.

• • •

மனித இனத்தின் ஊதியம்

உலகில் புகழ் வேண்டாம் என்று கூறுபவர்கள் மூன்று வகைப்படுவர். ஒன்று - புகழ் நமக்கு வராது என்று தெரிந்து கொண்டிருப்பவர்கள். இரண்டு - தேவைக்கு மேல் புகழைச் சேர்த்து வைத்திருப்பவர்கள். மூன்று - புகழின் பயனை அறியாதவர்கள்.

ஆனால், ஈதல், இசைபட வாழ்தல் (புகழுடன் வாழ்தல்) ஆகியவைதான் மனித உயிருக்கு ஊதியம் என்று ஈராயிரம் ஆண்டு களுக்கு முன் வள்ளுவப் பெருந்தகை கட்டளையிட்டிருக்கிறார்.

அத்தகைய புகழ்வாழ்வை மேற்கொண்டவர் ராசா சர்முத்தையாச் செட்டியார் அவர்கள். நான் அவருடன் பலதுறைகளில் சேர்ந்து பணியாற்றியிருக்கிறேன், வணிகத் துறை ஒன்றைத் தவிர. ஒரே அரசியல் கட்சியில் (ஜஸ்டிஸ் கட்சியில்) நாங்கள் அங்கம் வகித்திருக்கிறோம். என்னை அந்தக் கட்சியின் சார்பில் சென்னை கார்ப்பரேஷனுக்கு நிறுத்தி வைக்க கட்சியின் மேலிடத் தலைவர்கள் கூடிப் பேசினர்.

அப்போது சிலர், அண்ணாதுரை தேர்தலில் ஈடுபடும் அளவுக்கு வசதியான குடும்பத்தில் பிறக்கவில்லை என்ற ஆட்சேபம் தெரிவித்தார்கள். ஆனால் முத்தையா செட்டியார் அவர்கள்தான் இதுபோன்ற கண்ணோட்டம் இனிக்கூடாது. வாலிப வயதில் பொதுத் தொண்டில் ஆர்வம் இருப்பவர்கள்தான் இனித் தேர்தலில் நிற்க வேண்டும். ஆகவே அண்ணாதுரையை நிறுத்தலாம் என்று வாதாடினார். எதிர்கால அரசியல் எப்படி உருவெடுக்கும் என்பதை அப்போதே அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

அதுமட்டுமல்ல! இந்தி புகுத்தப்பட்ட நேரத்தில் வசதியான குடும்பத்தில் பிறந்திருந்தாலும், சென்னையிலுள்ள தங்கச்சாலையி லிருந்து ஐலண்டு மைதானம் வரை தமிழ்க் கொடியைத் தோளில் சுமந்து கொண்டு நடந்தார்.

இந்தத் தமிழ் இயக்கம் படிப்படியாக வளர்ந்து நாட்டை ஆள்கிற கட்சியாக வளர்ந்திருக்கிறது.

அன்று கொடி துவக்கியவர் என்ற முறையில் இப்போது பங்கு கேட்காத பண்பை - பெருந்தன்மையை நான் நினைத்து நினைத்துப் பெருமைப்படுகிறேன்.

தமிழ்ஆர்வம் - இந்திக்கு எதிர்ப்பு - மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் ஆகியவற்றை அவரது புதிய நண்பர்கள் எதிர்பார்த் தார்கள். பழைய நண்பர்கள் பயந்தார்கள். ஆனால் அந்தக் கொள்கைகளை அவர் கைவிடவில்லை.

இதைப்பற்றி ஒருமுறை காங்கிரஸ் அமைச்சர் என்னிடம் அவரை எங்கள் கட்சிக்கு அனுப்பினீர்களே தவிர - உங்கள் கொள்கைகளுடன்தான் அனுப்பினீர்கள் என்று கூறினார்.

ஜனநாயகத்தில்தான் இப்படிப்பட்ட கருத்துவேற்றுமை இருந்தாலும், ஒத்துப்போகும் பண்பு இருக்கும். எல்லோரும் ஒரே கருத்துடன் இருப்பதல்ல சமத்துவம்.

ஒரே செடியில் பூத்தாலும் மலர்கள் அளவில் பெரியதும் சிறியதுமாகத்தானே இருக்கும்.

ஒரே மரத்தில் காய்த்தாலும் கனிகள் அளவில் பெரியதும் சிறியதுமாகத்தான் இருக்கும்.

ஒரே பழத்தில் ஒரு பக்கம் புளிப்பும் - மறுபக்கம் இனிப்பும் இருப்பதுண்டு.

இதைப் பற்றிக் கூறவந்த பேரறிஞர் வாங்கி சமத்துவம் என்பது ஒரே தன்மையுடன் இருப்பது அல்ல! என்றார்.

பலவிதமான கருத்துக்கள் இருந்தாலும் - ஒத்துப் போகும் பண்பு இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் ஜனநாயகம் இயங்குகிறது.

என் கருத்துக்கு நான் எவ்வளவு மதிப்புத் தருகிறேனோ அவ்வளவு மதிப்பு, பிறருடைய கருத்துக்கும் தரவேண்டும்! என் கருத்தை வலிவுபடுத்தும் வாதங்களை பிறர் எவ்வளவு தூரம் கேட்க வேண்டும் என்று நினைக்கிறோமோ அவ்வளவு தூரம் அவர்களது வாதத்தையும் கேட்க வேண்டும்.

இந்த அடிப்படையில்தான் பல நாடுகளில் அரசியல் முறை நடைபெறுகிறது. அந்த முறை இங்கே வரவேண்டும்.

- முதல் பதிப்பு: 1972, வெளியீடு: அறிவுப்பண்ணை.

புன்னகை

தோழன் : சித்தார்த்தரே! சிந்தை நொந்தவர் போல் நீர் இருப்பானேன்? உமக்கென்ன குறை? நீரோ கீர்த்தி வாய்ந்த மன்னரின் மகன். சாம்ராஜ்ய சித்திரம் உமக்கு மனோரம்மியமான தான மாளிகை இருக்கிறது. சிங்காரத் தோட்டமிருக்கிறது. அதோ பாரீர், நீலப்பட்டாடை அணிந்த மயிலாள் பச்சைக்கம்பளி மீது நடனமாடுகிறாள். குயில் கூவுகிறது. மயிலின் சாயல், குயிலின் இனிய குரல், தென்றல் போன்ற குணம் கொண்ட தர்மபத்தினியும் செல்வக் குழந்தையும் உமக்கு உள்ளனர். இவ்வளவும் இருக்க நீர் ஏன் முக வாட்டத்துடன் இருக்கிறீர்கள். சந்திரனுக்குக் களங்கம் உண்டு. உமக்கு அதுவுமில்லை. ரோஜாவில் முள்ளுண்டு. உமது வாழ்க்கை முள்ளில்லாத ரோஜாவாயிற்றே. சுருதியுடன் சேர்ந்த சங்கீதம் போன்று உள்ள உமது வாழ்க்கையில், வசீகரம் இருக்க காரணமிருக்கிறதே தவிர விசாரத்துக்குக் காரணம் இல்லையே, அரண்மனை உம்மை அழைக்கிறது. மணிமுடி உமக்குச் சித்தமாக இருக்கிறது. கொலு மண்டபத்தில் மந்திரி பிரதானிகள், இளவரசர் இன்றையத் தினம் சிம்மாதனமேறுவார் என்று ஆவலோடு காத்துக்கொண்டிருக்கின்றனர். வாழ்க்கை உம்மிடம் கொஞ்சி விளையாடுகிறதே. வலிய அணையும் சுகத்தைப் பெற்றும், வாட்டம் உமக்கு ஏன்?

சித்தார்த்தர் : நண்பா? என் சிந்தனையைக் கெடுத்து விட்டாய். நீ விவரித்த வசீகரங்கள் என்னை வாத்சல்யத்துடன் வரவேற்கின்றன. குதூகலமூட்டப் பலருண்டு. ஆனால் சந்திரனைக் கருமேகம் பிடித்து மறைப்பதுபோல் என் வாழ்க்கை வசீகரத்தை ஒரு வாட்டம்

வதைக்கிறது. சந்திரன் மேகத்தை மிரட்டி அடித்து விட்டு மினுக்கிக்கொண்டு, வரக் கண்டிருக்கிறேன். ஆனுல் நானோ வாட்டத்தினிடமிருந்து விடுதலை பெறுவது முடியாத காரியம்.

தோழன் : இளவரசே! சோகத்தின் காரணமென்ன? மன்னிக்க வேண்டும். மதனனின் கணைகள்...

சித்தார்த்தர் : சீச்சி! என் மனைவியின் அன்பெனும் கேடயத் தின் முன்பு, அக்கணைகள் கூர் மழுங்கிக் கீழேவிழும். என்னை வதைப்பது அதுவல்ல.

தோழன்: வேறு காரணம் யாதாக இருக்கும்?

சித்தார்த்தர் : மல்லிகையும் மனோரஞ்சிதமும் தூவித்தானிருக் கிறது பஞ்சணையின் மீது. தென்றல் வீசுகிறது. நிலவு நடனமாடு கிறது! யாழ் ஒலிக்கிறது ஆம்! இவ்வளவையும் நுகர்ந்து இன்பத்தில் ஈடுபட ஆவலோடு பஞ்சணைக்கருகில் சென்றுல் மலரணை மீது மங்கை இல்லை. சீறும் நாகமிருக்கிறது என் வாழ்க்கைப் பஞ்சணையில். சீறும் நாகத்தை நான் கண்டேன். கலக்கம் ஏற்படாதோ? கூறு.

தோழன் : சீறும் நாகம் எங்கே?

சித்தார்த்தர் : எங்கேயா? எங்கும் அதனைத்தான் காண்கிறேன். சுகம், போகம், ஆட்சி, அன்பு, இவைகள் தவழும் வாழ்க்கைப் பஞ்சணையில். படுத்துக் கொண்டிருப்பது, வறுமை, மூப்பு, நோய், மரணம் என்னும் நாலு தலைகள் கொண்ட நாகம், அதனைக்கண்ட பிறகு எனக்கு வாழ்க்கைப் பஞ்சணையில் படுக்க மனமில்லை.

தோழன்: இதைத்தான் கூறினீரா? நன்று! நன்று! பால்போல் காயும் நிலவு சிலநாள் தேயும்,இருளும், ஒளியும், இன்ப துன்பமும் இயற்கைதானே? இதனை மாற்ற நாமா அதிகாரிகள்? சுகம் கிடைக்கும் போது அதனை நுகருவது, துக்கம் நேரிடும் காலையில் சகித்துக்கொள்வது என்பதைத்தவிர வேறு வழி ஏது?

சித்தார்த்தர்: புதுவழி காண்பேன். போகங்களைத் துறந்து அரசை விட்டு நீங்கி, அலைந்து, திரிந்து, இன்பமும், துன்பமும், பிணைந்துள்ள முடியை அவிழ்த்து விடும் ''வித்தை''யைக்கறபேன். அந்தப் புரத்து அலங்காரியும் வேண்டாம். அரச போகமும் வேண்டாம். உண்மை உணரும் வேலையில் ஈடுபடுவேன். தவசிகளை அடுப்பேன். அவர் தம் கருத்துக்களை செவிமடுப்பேன். நாலுதலை நாகத்தை நசுக்குவேன்.

புத்தருக்கும் அவரது தோழருக்கும் மேலே தீட்டியுள்ளது போன்ற பேச்சு நடந்திருக்கக் கூடும். இளவரசர் துறவியாகும் முன்னம் தமது தோழருடன் கலந்து பேசியிருப்பார். இல்லையேனும் அவருடைய மனத்திற்குள்ளாகவேனும் இத்தகைய கருத்துப்போர் நடைபெற்றுத்தான் இருக்கும். இறுதியில் சித்தார்த்தர் துறவுகோலம் பூண்டார்! புத்தரானார்.

கருணை ததும்பும் பார்வையால் அவர் கசடர்களின் கல் மனதையும் கரைத்தார். புன்சிரிப்பால் புரோகிதரின் பொச்சரிப்பைப் பொசுக்கினார். அன்பினால் ஆரியப்புரட்டல்களைப் புறமுதுகிட்டு ஓடச்செய்தார். கொலையை வேள்வியென்றும், குருட்டுத் தனத்தைச் சாத்திரமென்றும், ஆபாச ஆட்டங்களை ஆண்டவன் பணி என்றும் சாதிச்சனியனை கடவுள் கட்டளை என்றும் கூறி மக்களைச் சிறைப்படுத்திய பார்ப்பனீயத்தைப் புத்தரின் புரட்சி மூலைக்கு விரட்டி விட்டது. புத்த மார்க்கம் வஞ்சக வர்த்தகரை வீழ்த்திற்று ஆனுல்...

இந்தியாவில் தோன்றிய புத்த மார்க்கம் இந்தியாவில் இல்லை! சீனநாட்டில் இருக்கிறது! புத்தரின் மறைவுக்குப் பிறகு, புதருக்குள் மறைந்திருந்த ஆரிய அரவம் வெளிக்கிளம்பி மீண்டும் தனது விஷப் பல்லுக்கு வேலை தேடிக் கொண்டது. புத்தமதம் இந்தியாவிலே இடம் பெற்று இருந்திருப்பின், நாட்டு நிலையும் மக்கள் நிலையும் இப்போது இருப்பதைப்போல இருந்திருக்கும்!

அன்று சுதேசமித்திரன் எழுதியது. பாரதத்தாய் ஈன்றெடுத்த புத்தபகவான் உபதேசமொழிகளே சீனர் பின்பற்றும் ''மதம்'' இன்று, கோபாலகிருஷ்ணரின் லீலைகளுக்கு மதிப்பைத் தரும் மித்திரனுக்கு இந்த வாசகங்களை எழுதும் போது துக்கமோ, வெட்கமோ ஏற்பட்டிருக்காது. பெருமையும் பூரிப்பும் உண்டாகி இருந்திருக்கும். புத்தரின் புரட்சி வேகத்தை நாடு கடத்தியவர்கள் நமது மூதாதையர்கள் என்ற எண்ணம் ஆசிரியருக்கு பூரிப்பையும் பெருமையையும் அளிக்கும். ஆனுல் பார்ப்பனீயத்தால் பாழான நமக்கோ படிக்கும்போது வெட்கமும துக்கமும் பிறக்கிறது. ஆரியச் சேற்றில் ஓர் சீரிய செந்தாமரை பூத்தது! அது சீனச் சீமைக்கு சென்றுவிட்டது. பூத்த இடத்தில் மீண்டும் ஆரியச்சேறே இருக் கிறது. புத்த மார்க்கம் காட்டிய வழி செல்ல மறந்தோம்! வெட்கம்! துக்கம்!

புத்தர் தமது அரசைத் துறந்தவர் மட்டுமல்ல,அவரது மார்க்கமும், அவரைப் போலவே இந்தியாவை விட்டு வெளியேறி சீனம் சென்றுவிட்டது.

இன்று '' பாரதத்தாயின் பிள்ளையான புத்தர் தந்த பொன் மொழிகளைச் சீனர் போதனையாகக் கொண்டு வாழ்கின்றனர்'' என்று கூறிய மித்திரன் அந்தப் பொன்மொழிகள் பிறந்த நாட்டிலேயே ஏன் நிராகரிக்கப்பட்டு விட்டன என்பதற்குக் காரணங்கூறுமா?

காசிக்கு அருகே, சாரநாத் என்ற இடம் இருக்கிறது அழகிய பாட்டை! வழியில் பெரும்பகுதியில் ஒரு வேப்பமரம் அதன் பக்கத்திலே ஒரு மாமரம் என்று பாதை அமைந்திருக்கிறது. சித்தார்த்தர் உலகில் கசப்பும், இனிப்பும் ஒன்றை ஒன்று பின்னிக் கொண்டு நிற்பதைக் கண்டாரல்லவா? சாரநாத்தில் உள்ள புத்தர் கோட்டத்திற்குச் செல்லும் பாட்டையில் இதனை நமக்கு எடுத்துக்கூறுவது போல, வேம்பும் மாவும் ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக நின்று காட்சி தருகின்றன. கோட்டத்தை நெருங்குகையில், வேம்பு இல்லை மாமரங்களே உள்ளன. சித்தார்த்தர் இன்பமும் துன்பமும் உள்ள வாழ்க்கைப் பாதையைக் கடந்து அறிவு உதயம் பெற்றதும் துன்பம் துடைக்கப்பெற்று ஈடிலா இன்பம் பெற்றார் என்று கூறுகிறார்களே அதைச் சித்தரிப்பதுபோல், புத்தர் கோட்டத்தையணுகும்போது பாட்டையில் இனிய மாமரங்கள் மட்டுமே உள்ளன. புத்தர் கோட்டத்திலே ஜப்பான் சர்க்கார் தானமாகத்தந்த '' மணி'' தொங்குகிறது. கோட்டத்தை அடுத்தாற் போல் சீனச் செல்வர் ஒருவர் புத்தர் கோட்டமொன்று புதியதாக அமைத்துக் கொண்டு இருக்கிறார்! அங்கு புத்த விக்ரகம் சீன உருவத்துடன் காணப் படுகிறது. சாரநாத்தில் சார்ந்த புத்தர் போதனை பல புரிந்தார். ஆனால் இன்று சாரநாத் பக்த கோடிகள் தேடிச் செல்லும் இடமாக இல்லை. அதை அடுத்துள்ள காசியே புண்ணிய க்ஷேத்திரமாக இருக்கிறது.

''பாரதத்தாய் ஈன்றாள் : பராமரிக்கவில்லை நான் வேறு வீடு சென்றேன் '' என்று சாரநாத்தில் உள்ள புத்த உருவம் கூறுவதுபோல், அந்த அநீதியைக் கேட்க ஆண்மையில்லையே உங்களுக்கு என்று கேலி செய்வது போல். புன்னகை புரியக் கண்டேன். ''அரச குடும்பத்தினர் நீர்! புத்தரானீர்! உம்மையே பாடுபடுத்திற்றே பார்ப்பனீயம்? என்னை அது என்ன செய்யுமோ'' என்று புத்தரிடம் கூற எண்ணி னேன். பெரியார் ஈ.வே. ராமசாமி அவர்கள் என்னுடன் இருந்தார். நேரமாகிவிட்டதை உணர்ந்து தமது கைத்தடியைக் கீழே தட்டினார். சிந்தனையிலாழ்ந்து இருந்த நான் விழித்துக் கொண்டேன். காற்று அடித்துக்கொண்டிருந்தது. அந்த வெண்ணிறத்தாடி அசைந்து கொண்டிருந்தது. மீண்டும் புத்தரை நோக்கினேன் ''உம்மை பார்ப்பனீயம் நாடு கடத்தி இருக்கிறது ஆனால் நீர் அன்று மூட்டிய

புரட்சியை அடியோடு ஆரியம் ஒழித்து விடவில்லை. அதோ பாரீர். பார்ப்பனீயத்தின் வைரி!'' என்று புத்தரி டம் பெரியாரைப் பற்றி நான் கூற வில்லை. என் மனதில் எண்ணிக்கொண்டேன். அதையும் அறிந்து '' நன்று! நீதி நின்று வெல்லும். ஆனால் நிச்சயம் வெல்லும் '' என்று என்னை நோக்கி சாரநாத் புத்தர் கூறினது போன்றிருந்தது அந்தப் புன்னகை;

★★★

வெற்றிவிழா!

முப்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பொது மக்கட்குப் பரிதாபத்திற்குரியவர்கட்காகப் பேசித்தமிழரை தட்டி எழுப்பத் தவறாது உழைத்து, தாடி முளைக்காத காலத்திலே துவக்கிய அந்த அரும்பணியை தாடி வெளுத்துக் காட்சி தரும் இன்று வரை அயராமல் ஆற்றிவரும் அஞ்சாநெஞ்சினர்.

எங்கும் எதிர்ப்பு எத்திக்கிலும் ஏசல்! மேடை ஏறினால் ஜோடிக்காளைகள் கூட்டத்துள் துரத்தி விடப்படும். துடுக்கர் கூட்டம்! கல்லடி! சொல்லடி! இவ்வளவுக்கும் இடையே நின்று எதிர்ப்புக் கண்டு அஞ்சாது, என் உரிமை என் மனதிற்பட்டதைக் கூறுவது என்று எக்காளமிட்டுவரும் ஒரு இணையில்லாத் தலைவர்.

ரிஷியானாலும் என்ன, தவசியானாலும் என்ன, வழி காட்டியானாலென்ன, வைகுண்டவாசியானாலென்ன, வண்ட வாளங்களை வெளியிட்டே தீருவேன். வந்தது வரட்டும்; வறண்ட மதியினர் வந்தனம் செலுத்த மாட்டார்கள்என்பதற்காக, வஞ்சகரின் அடிபணிவதா? அதுவா வீரத்தொண்டாற்ற விழைபவரின் கடமை என்று சொல்லித் தியாகத் தீயிலே குதித்துத் தமிழருக்கு புதுவாழ்வு தந்த தந்தை.

நாடு முழுவதும், நான்கு ஜாதிகள் நான்முகன் கட்டளை என்று நம்பி, அதிலே திராவிட மக்களாம் நாம், நாலாம் ஜாதி பார்ப்பனருக்குச் சேவை செய்யத் தோன்றியவர் என்று எண்ணி ஏமாந்திருந்த நேரத்தில் ''ஜாதி ஏதப்பா? அது எத்தர் செய்து வைத்த சூதப்பா! நான் கூறுவது தப்பா என்று யோசித்துப் பதில் கூறப்பா!'' என்று முழக்கமிட்டு முறுக்கேற்றித் திராவிட முரசு ஒலித்திடச்செய்த ஒப்பற்றத் தலைவர்.

எட்டு முறை சிறை சென்ற தீரன். தமிழரின் தீரத்தைப் பாடி ஆச்சாரியார் ஆட்சியைச் சாடி, அறுபதாம் ஆண்டிலே வெஞ்சிறைப்

புகுந்த வெற்றி வீரன். வாலிபர் தோழன். வற்றாத பகுத்தறிவின் காவலன்.

இனத்தை அறியாது அதன் இயல்பும் தெரியாது மதம் எதுவென்று உணராது, ஆரிய மதத்தைக் கொண்டு மக்களை அடிமை கொண்ட விதம் தெரியாமல், நமது மக்கள் நினைப்பு கெட்டு நிம்மதியற்றுக் கிடந்த நேரத்தில், வெள்ளத்தை எதிர் நீச்சலால் கடந்து, வீரப்பணி புரிந்து, நம்மை நாம் உணரவும், நமது இனம் இதுவெனத் தெரியவும், அதன் விடுதலைக்குப் பாடுபடவும், அந்தப்போரிலே பிணம் ஆனாலும் சரி கவலையில்லை என்ற உறுதியை நாம் பெறவும் உழைத்த உத்தமன்.

மதக் குருமார்களும், மடத்து அதிபரும், கோயில் குருக்களும், ஆளும் வர்க்கமும், ஐஸ்வரியம் பெற்றோரும் அவரை எதிர்த்தனர். ஆற்றல் அரண் அமைத்துக்கொண்டு, அறிவெனும் வாளேந்தி, உழைப்பென்னும் புரவியேறி, தமிழகத்திலே உலவி, ஆரியக்காட்டை அச்சம், தயை, தாட்சண்யமின்றி அழித்தொழிக்கும் பெரியார் தமக்கு எதிரிடையாக அமைக்கப்பட்ட எதிர்ப்பு முன்னணியைக் கண்டு, எஃகு உள்ளம் கொண்ட நமக்கு இந்த எதிர்ப்பு எம்மாத்திரம் என்று கூறி களத்திலே போரிட்டபடி, மாண்டாலும் மாள்வேனேயன்றி கனபாடிகளின் காட்டுக் கூச்சலைக் கேட்டு, வீட்டுக்கோடி ஒளிய மாட்டேன் என்று மொழி புகன்று இனம் வாழ வழியமைத்துத் தந்தார். அவர் காணாத களம் இல்லை! வெற்றி காணுத போர் இல்லை, வீணரின் உரை அவரை விரட்டியதில்லை.

அவருக்கு இக்கிழமை 68-ம் ஆண்டு.

இந்தக் கிழமையை விழாவாகக் கொண்டாடும் தோழர்கள் பெரியாரின் பெருந்தொண்டினைப்பற்றி பேசிவிட்டுப் பெருமூச்செறிவர் - ஏன்? இலேசாக- தமது தோழர்கள் உள்ளத்திலேயேகூட ஒரு சந்தேகம்- கொஞ்சம் சஞ்சலம் உண்டு - அதாவது இந்த உழைப்பு தக்கதோர் வெற்றியைத் தந்து விட்டதா, அல்லது சூதகரின் சூழ்ச்சியின் காரணமாக உழைப்பு வீணாகி விட்டதா என்ற எண்ணம்.

பத்திரிக்கைப் பாராட்டுதல், பாமாலை, பூமான்களின் பவுன்மாலை, சர்க்கார் தரும் பட்டம் பதவி மாலை ஆகியவைகளை வெற்றிச்சின்னமெனக் கொள்வதாயின், பெரியார் வெற்றி பெற்றவரல்ல. ஆனுல் வாலிப உள்ளங்களின், நன்றி கலந்த அபிஷேகமே வெற்றிக்கான சின்னம் எனில் பெரியார் பெரு

வெற்றியை நெடு நாட்களுக்கு முன்னதாகவே பெற்று விட்டார் என்று திடமாகக் கூறலாம்.

சட்டசபைக்கு அழைத்துக் செல்லமாட்டார். பட்டம் வாங்கித்தரமாட்டார் . பதவியில் நம்மை உட்கார வைக்கமாட்டார். பணம் காசு தர மாட்டார். ஒரு பாராட்டுரை கூட வழங்கமாட்டார் என்பதை அனுபவபூர்வமாகத் தெரிந்திருந்தும், ஆயிரமாயிரம் இளைஞர்கள் அவருக்குத் துணை நிற்பது வேறு எங்கும் காண முடியாத அற்புதம்! பெரியாரின் பெரும் வெற்றி அது. வாலிபர்களைத் தன்பக்கம் இழுத்துவிடும் ஒரு வகை ''அபின்'' இருக்கிறது. அந்த குறுகுறுப்பான பார்வையிலே கொச்சை மொழியிலே பச்சை பட்டவர்த்தனமாக இருப்பதைக் கூறிடும் பேச்சிலே இந்த ''அபின்'' எண்ணற்ற பத்திரிக்கைகளின் பிரசார பலத்தையும் விட மேலானது. எத்தனையோ வாலிபர்களை வாழ்க்கைப் பூந்தோட்டத்தில் இருந்து, போர்க்களத்திற்கு இழுத்து வந்துவிட்டது.

பிற கட்சியாளர்கள் குறிக்கோள் மட்டும் கொண்டவர்களல்ல, நடைமுறைக்கான அன்றாட வேலைத்திட்டமும் உடனடியாக நடத்தியாக வேண்டிய வேலைத்திட்டமும் உடையவர்கள். எனவே அவர்களுக்கு இலாப நட்டக் கணக்கு பார்த்துக் கொள்ள அதற்கு ஏற்றபடி திட்டத்தைத் திருத்த மாற்ற புதுப்பிக்க வசதி உண்டு. பெரியார் துவக்கி நடத்தி வரும் கட்சிக்கு உடனடி வேலைத்திட்டம் என்று ஒன்றுமில்லை. உழைத்து மெருகேற்றி அந்த மெருகு ஏறினதன் பலனாக பிறகு சமூகமே ஓர் புதிய பயனுள்ள தோற்றம் அளிக்க வேண்டும், இலாபநஷ்டக்கணக்குப் பார்க்க முடியாது. வசதி கிடையாது. கதிர் தோன்று முன்புவரை, புல்லுக்கும் நெல்லைக் தரப்போகும் பச்சைக்கும், பார்க்கும்போது வித்தியாசம் தெரிய முடியாதல்லவா? அதுபோல கதிர் காணுமுன் கணக்குப் பார்க்க முடியாது. வெறும் பச்சை என்றெண்ணிடுவோர் ஏமாளிகள்- கதிர் முளைக்க வேண்டும் என்று நினைப்பவர் கோமாளிகள், பெரியாரின் உழவுமுறையை மட்டும் தெரிந்து கொண்டால் போதாது. வயலிலே இருப்பது ஆறு மாதப் பயிரல்ல ஒரு 'தலைமுறைப்பயிர்' - பல தலைமுறைகளாகக் கறம்பாகக் கிடந்த வயலிலே உள்ள பயிர். அறுவடைக்குக் காலம் பிடிக்கும்!

இடைக்கால சர்க்கார்-? நாம் சட்டசபை? இல்லை; பத்திரிக்கை பலம்?- தத்துவம் குழவிநிலை அமைப்பு, முடிச்சேறின கயிற்றின் நிலை. முறுக்கேறின கயிறல்ல, பிரசாரம், காட்டு வெள்ளத்தின் முறை கொள்கைகளா? வோட்டுப்போடும் விதமானவை.

நாம் இவைகளை மறைக்கத் தேவையில்லை- சொல்வதிலே குற்றமும் இல்லை - கூச்சமும் வேண்டாம். ஏன் எனில் சஞ்சலத்துக்கும் அப்பால், நாம் சந்தோஷப்படும் அளவுக்கு நமக்கு வெற்றி இருக்கிறது.

இவ்வளவு இடையூறுக்கிடையே நாம் பணியாற்ற முடிந்தது.

இடையூறுகள் ஒழிந்தால்? எண்ணும்போதே பெருமூச்சு புன்னகைக்கு இடம் தரும். எண்ணிப் பாருங்கள்;

நாம் மேற்கொண்ட வேலை, ''ஆயிரங்காலத்துப்பயிர்'' என்பார்களே அது போன்றது. எனவேதான் உடனடியாகக் கண்ணுக்குத் தெரியக்கூடிய மற்ற கட்சிக்காரர்கள் காட்டுவது போன்ற ' அன்றாட வெற்றிகள் நமக்கு இல்லை. ஆனல், நாம் அடைந்து உள்ள வெற்றி, கறம்பைத்திருத்தி வயலாக்கி இருக்கிறோம் - ஆம் ! சூழ்நிலையை மாற்றி இருக்கிறோம். மனப்போக்கை மாற்றியிருக்கிறோம். 'எதிரிகள்' என்று தவறாக எண்ணிக்கொண்டிருக்கும் பலர், நமது கொள்கைகளின் வக்கீல்கள்! நீ மட்டுந்தானா? நான் என்ன ஆரிய அடிவருடியா? உனக்குத் தானா சீர்திருத்த ஆர்வம்? நாங்களென்ன குளத்தங்கரை குப்பன்களோ! உனக்குத்தானா சுயமரியாதை வேண்டும்! நாங்கள் அதனை விரும்பாதவர்களோ? நீ மட்டும்தானா வடநாட்டின் படையெடுப்பைத் தெரிந்து கொண்டவன்? நாங்கள் அறிய மாட்டோமா? இவைகள் காங்கிரஸ்-கம்யூனிஸ்ட் வட்டாரங்களிலே இருந்து கிளம்பும் வார்த்தைகள். வார்த்தைகளை வீசிவிட்டு கூடவே இரண்டோர் கற்களையும், தீப்பந்தம், திராவகம், கத்தி முதலியவற்றையும் கூடத்தான் வீசுகிறார்கள். ஆனால் சூழ்நிலை மாறிவிட்டது. கொள்கைக்கு அவர்களும் ஒப்புக்கொண்டனர் என்பதைத்தானே இந்நிலை காட்டுகிறது. இது பெரியாரின் பெரும்வெற்றி. எனவே நண்பர்கள் ஆயாசப்படவோ, ஏன் ஆயாசப்பட வேண்டும்? எல்லாம் சரி ஆனால் எங்கே பலன் என்று கேட்கவோ தேவையில்லை.

அதுவே பெரியார் வாரவிழாக் கொண்டாடும்,அன்பர்களுக்கு நாம் தரும் செய்தி.

வெற்றி பெற்றாயிற்று. பெரியார் பெருந்தொண்டு பயன் தந்தாகி விட்டது - என்று உறுதியுடன் கூறலாம். மகிழ்ச்சியுடன் சொல்லலாம். பெரியாருக்கு உளம் கனிந்த நன்றியை தெரிவிக்கலாம். தெரிவிப்பதுடன் பெரியாரே! தாங்கள் அரும் பெரும் உழைப்பினுல் உண்டாக்கி வைத்த சூழ்நிலையை நாங்கள் இனி பயன் படுத்துவோம், தங்களுக்கு மேலும் தொல்லை நிறைந்த வேலை தர

மாட்டோம். இந்தச் சூழ்நிலையை ஏற்படுத்தத் தாங்கள் ஒருவரால் மட்டுமே முடியும். உண்டாக்கினீர்கள். இனி நடக்கவேண்டிய காரியம், கிடைத்த சூழ்நிலை கெடாதபடி பாதுகாத்துக் கொள்வதுடன், அன்றாட வேலைகள் உடனடித் திட்டங்கள் ஆகியவற்றைச் செய்வது, அதனை நாங்கள், தாங்கள் மகிழும் வண்ணம் செய்து முடிப்போம்'' என்று உறுதிகூறி அவருக்கு மனதில் 'வெற்றி கிட்டி விட்டது! இனி வேலை நடக்கும்! அதற்கான அருமை மக்கள் உள்ளனர் என்ற மகிழ்ச்சியுடன் கலந்த நம்பிக்கை பிறக்குமாறு செய்திடுவது தான் பெரியார் வார விழாவின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டுமே தவிர ''விடுதலை'' குறிப்பிட்டது போலவே தோழர் அர்ஜுனன் அவர்களின் அறிக்கையைப் போலவே ''நிதி அல்ல முக்கியமானது. இன்னமும் நமது செவியில் ஒலித்தபடி இருக்கிறது. திருச்சியில் திரண்டு வந்த 40 ஆயிரம் மக்களுக்கு சந்தோஷத்தால் நர்த்தனமாடும் விதமாகப் பெரியார். '' அப்படியும்'' இப்படியுமாக, வீடு வாங்கியும் அதனையே இலாபத்திற்கு விற்றும், செட்டாகச் செலவு செய்தும், இப்படி எல்லாம் கொஞ்சம் பணம், ஒருபத்து நாற்பது ஆயிரம் ரூபாய் சேர்த்துத்தான் வைத்திருக்கிறேன். யாருக்கு? கட்சிக்குத்தானே என்று கூறினதும் அது கேட்டு மக்கள் ஆனந்த ஆரவாரம் செய்ததும் ஆகவே கட்சிக்கு நிதி திரட்டித்தான் ஆக வேண்டும். பெரியார் விழாவின் முக்கிய வேலை அதுதான் என்று நிதியை முன்னணியில் நாம் நிறுத்தவில்லை. நாம் கூறுவது, நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். வீணுக்கு உழைத்தோ மில்லை. விசாரப் பட வேண்டியதில்லை என்பதை விளக்க வேண்டும் என்பதுதான்.

அது மட்டுமல்ல, நம் பெரியாரின் பெரும் தொண்டின் பலனைப் பெற்று, சூழ்நிலையை மாற்றிக்கொண்டோம். இனி சூழ்நிலையை மாற்றும் வேலை மட்டும் அல்ல நமக்கு வேறோர் 'கட்டம்' ஆரம்பமாகிறது நமது இயக்கத்துக்கு என்பதை அறிய வேண்டும்.

சுரங்கத்திலிருந்து சிரமப்பட்டு தங்கத்தைத் தோண்டி எடுத்தாகிவிட்டது. பெரியாரின் பெரு வெற்றி இது. எடுத்துப் பார்க்கும்போது ''பாறை'' போலத்தான் தோன்றும். அடுத்த கட்டம், வெட்டி எடுக்கப்பட்ட பாறை உருவில் உள்ளதை 'ரசாயன' 'விஞ்ஞான' முறைப்படி உடைத்து, பிரித்து, துடைத்துத் '' தங்கம்'' என்று சகலரும் தெரியும்படிச் செய்வதுடன், அதனுல் பயனுள்ள பணிகள் செய்து காட்டவேண்டும். சுரங்கத்திலிருந்து பொன்னை வெட்டி எடுத்து வரும் காரியம் ஆபத்தானது. சிரமமானது. அதற்கு அலாதியான திறம் முறை வேண்டும். கருவிகளும் அதற்குத்தனி.

பெரியாரிடம் இவைகளுக்கான திறம் ஏராளம். அவரால் முடிந்தது. நமது நன்றி அதற்காக.

ஆனல் வெட்டி எடுத்துக்கொண்டு வந்த தங்கத்தைப் பதம் செய்ய பக்குவம் செய்ய முறை செய்ய கருவி வேறு, செய்ய வேண்டிய பொறுப்பையும் பெரியாரிடமே தருவது நமது கையாலாகாத் தனத்தைக் காட்டிக் கொள்வதாகும். மீண்டும் மீண்டும் மேலும் மேலும் சுரங்கம் தோண்டும் வேலையையே செய்யும்படி பெரியாரைத் தூண்டிக் கொண்டிருப்பதும் நன்றி கெட்ட செயலாகும்.

எனவே, 'விஞ்ஞான ரசாயன' முறைப்படி பாறை உருவிலுள்ள பொன்னைப் பதமாக்கும் பணியை மற்றவர்கள் மேற்கொள்ள வேண்டும். மேற்கொள்ளும் போது சுரங்க வேலைக்காக பெரியார் கையாண்ட அதே முறைகளும் கருவிகளும் இருக்க வேண்டும் என்று எண்ணுவது கிடைத்த பொற்கட்டியைக் கொடுக்கும் விதமாக முடியும்? முறையும் கருவியும் வேறுதான் இதற்கு . இதனை உணர்ந்து புதுப்பணியினை மேற்கொள்வோம். நீர் கவலையற்று களிப்பதுடன், நம்பிக்கையுடன் எங்கள் வேலையைக் கவனித்துக் கொண்டு, தட்டிக்கொண்டு பெருமையுடன் எங்களைப் பார்த்துக் கொண்டு இருங்கள் என்று இந்த விழாவன்று நாம் பெரியாருக்குக் கூறவேண்டும்; அதுவே அவருக்கு நாம் காட்டவேண்டிய மரியாதை. முறையாகுமேயொழிய, மேலும் மேலும் போராட்டம் வருகிறது- பெரியார் நம்மை நடத்திச் செல்வார்- என்று இன்னும் கூறி அவருக்கு நாம் இந்த வயதிலும், சுரங்க வேலையும், சூறாவளியில் உழலும் வேலையும் தந்து, மேலும் அவருடைய உழைப்பை உறிஞ்சும் காரியத்தில் இறங்குவதாக இருக்கக்கூடாது.

ஒரு பெரிய இயக்கம் பல பத்திரிக்கைகளின் துணையுடன் கட்டுக்கோப்புள்ள விதமாக உள்ள அமைப்பின் பக்க பலத்துடன், சாதிக்கக் கூடியதைவிட மேலான, மகத்தான, வெற்றியை சூழ்நிலையை மாற்றி அமைக்கும் அடிப்படைக் காரியத்தைப் பெரியார் ராமசாமி தனது 30 - ஆண்டுத் தொண்டினால், பெற்றார்- நமக்கு அளித்தார்- அதனால் நாம் பயன் பெற்றோம்- நமது நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்- பணிவும் அன்பும் கலந்தது.

துன்புறும் எளியோர் துயரது தீர்ந்து
இன்புறும் வண்ணம் உண்மை இயம்ப
அஞ்சுவோன் வீரன் ஆகான்; மற்றும்
உற்ற துரைத்தால் ஊறும் பழியும்

மற்றும் பல்லினல் வந்திடுமென்று
மெய்மையைக் காக்கும் விரதம் விடுத்து
பொய்யுரைப் போரைப் புவிதனி லென்றும்
அடிமை யென்றே அறைந்திடு வோமே.

★★★

அந்த ஜூலை பதினான்கு

குமுறிக் கிடந்தக் கூட்டம் கொடுங்கோலை எதிர்த்தது 'வனவாசம்' செய்த மக்கள் வாளேந்தி நின்றனர்

லண்டனும், மாஸ்கோவும், பாரிசும், வியன்னாவும் அந்தக் திருநாளை எழுச்சியுடன் கொண்டாடின! பெர்லின் நகரிலே வெற்றி விளைவு! கோபுர உச்சியிலே கெம்பீரமாகப் பறக்க விடப்பட்டது அந்தத் திருநாட்டின் கொடி! பல்வேறு நாட்டவரும் தத்தமது நாட்டின் நன்னாளெனக் கொண்டாடும் விதமாக அமைந்தது ஜூலை 14-ந் தேதி எனும் புரட்சித்திருநாள்! ஜூலே 14 உலக வரலாறு ஏட்டிலே உன்னதமான இடத்தைப் பெற்றுவிட்டது. அந்நாளே வீர பிரஞ்சு மக்களின் வெற்றி நாள்! எதிரி நாட்டின் மீது போரிட்டுப் பெற்ற வெற்றியா? இல்லே! கொடுமையை எதிர்த்து, அன்றுவரை குமுறிக்கிடந்த கூட்டம். அந்நாள் வரை அடக்குமுறையினல் தாக்கப்பட்டு அடிமைப்பட்டு ' இம்மென்றால் சிறைவாசம்' ஏன் என்றுல் வனவாசம் என்ற நிலையிலே சிக்கிச் சிதைந்து, நசுக்கப்பட்டன. நாதியற்றுக் கிடந்த மக்கள் நிமிர்ந்து நின்று, புனல் சொரிந்து கண்களினின்றும் கனலைக் கக்கி, பெருமூச்சை நிறுத்திப் பெருமுழக்கங் கிளப்பி, தக்கர்களின் தாளைத் தொட்டுக் கிடந்த கரங்களிலே வாளேந்தி, விடுதலை! விடுதலே என்ற புரட்சி கீதம் பாடிக்கொண்டு படைபோல் திரண்டு, இடிபோல் ஆர்ப்பரித்து புயலெனக் கோபத்தை வீசி, போக போகத்திலே புரண்டு, பொதுமக்களைப் பொதிமாடுகளாக்கி அரசியலைக் கொடுமைக் கருவியாகக் கொண்டு, மக்களைக் கசக்கிப் பிழிந்து, அவர்தம் மானத்தை மண்ணெனக்கருதி, மிதித்து, செருக்கு நிறைந்த சீமான்கள் எதேச்சதிகாரம் செய்து வந்ததை ஒரே அடியில், ஒரே நாளில், ஒரே பெரும் புரட்சியிலே அடித்து நொறுக்கி உருத்தெரியாதபடி அடித்த நாள் அந்த ஜூலே 14.

எல்லோரும் இந்நாட்டு மன்னர்! வலியோர் சிலர் எளியோர்தமை வதையே புரிகுவதா? மகராசர்கள் உலகாளுதல் நிலையாம் எனும் நினைவா? என்ற முழக்கம் கிளம்பிய நாள்! முகாரி

முடிந்து அடாணா ஆரம்பமான நாள்! மாடப்புறா வல்லூரைத் துரத்திய நாள்! மன்னர்மருண்ட நாள்! சீமான்களின் தலை சிதறிய நாள்! மதுக்கிண்ணமேந்திய மனோஹரிகளின் இதழ் தரும் சுவையிலே இகத்தின் ரசத்தைக் கண்டு, பரலோக ரசம் பாதிரிமாரின் கைவசம் இருக்கிறது. கேட்டால் கிடைக்கும். அதற்காகத் தேடி அலைவானேன் என்று மதோன்மத்தர்கள், அரண் செல்லப் பிள்ளைகள் ஆணவ சொரூபங்கள் ஆடிப்பாடிக் கிடந்த கோலத்தை வேரறுத்த நாள்! ஓடப்பரெல்லாம் உதையப்பராகி விலங்கு பூட்டப்பட்டு வேதனையை அடைந்த கரங்களிலே வீரவாள் ஜொலித்த நாள்! விடுதலை நாள்! வீரரின் வெற்றித்திருநாள்! வெறியரின் வீழ்ச்சி நாள்!

மக்களை மாக்களாகிய இடம்
மண்மேடாயிற்று

விழா! உலகெங்கும், ஊரெங்கும், உணர்ச்சியுள்ளவருக் கெல்லாம் உத்தமநாள். அந்த ஜூலை 14-ந் தேதி வீதிகளிலே களம்! வீடுகளே பாசறை! கையில் கிடைத்ததெல்லாம் ஆயுதம்! காணும் கொடுமைகளெல்லாம் தவிடுபொடி! திட்டம் உண்டா? தீட்ட நேரமில்லை! மந்திராலோசனை உண்டா? அதற்கான மனப்பான்மை இல்லை. சமயமறிந்து நடக்க வேண்டும் என்ற எண்ணமாவது உண்டா? இத்தருணம் தவறினால் மறுதருணம் வாய்ப்பரிது என்று யாவரும் கூறின நேரம் அது! அணிவகுப்பு? இல்லை அவனைக் கேள்! இவனைப்பார்! அவளைக் கூப்பிடு, என்ற பேச்சு இல்லை! வேறு என்ன உண்டு! வெட்டு! குத்து! இடி! கொளுத்து! கொல்! இந்த சப்தமே எங்கும்! மாளிகைகள் இடிந்து சரசரவென சரியும் சப்தம்! கட்டிடங்களிலே தீ மூட்டி விட்டதால் கிளம்பும் சப்தம்! இவைகளை மீறிக்கொண்டு பாஸ்டிலி ! பாஸ்டிலி! என்ற பெருஞ்சப்தம்! ஆம் ஜூலை 14 பாஸ்டிலி தினம். பயங்கர பாஸ்டிலி படு சூரணமான தினம்! பதைத்தெழுந்த பாமர மக்கள் தங்களை அதுவரை பயங்கரமான கொடுமைகளுக்கு ஆளாக்கிவைத்த பாதகச்சிறைகூடமான பாஸ்டிலி இடித்துத்தூளாக்கி மண்மேடாக்கிய நாள்! அந்தச்சிறைச்சாலையைச் சீற்றங்கொண்ட மக்கள் சிதறடித்த நாளையே இன்றுபாரிஸில் மட்டுமல்ல பெரிலினில், மாஸ்கோவில், லண்டனில், பல்வேறு நகர்களிலே கொண்டாடுகிறார்கள். ஜூலை 14-ந் தேதி பிரான்சு நாட்டு மக்கள் தங்கள் நாட்டிலே இருந்த பயங்கரச் சிறைச் சாலையான பாஸ்டிலியைத் தகர்த்தனர் என்ற போதிலும் அந்நாளைக் கொண்டாடும் உரிமை எனக்குமுண்டு! என்று கூறிக்கொள்ளாத நாடு இல்லை! ஒரு நாட்டின் நாள் உலகப்பொது நாள் ஆகிவிட்டது!

பாஸ்டிலி பிரான்ஸில் வீழ்ந்தது என்ற உடனேயே ஒவ்வொரு நாட்டிலேயும் உணர்ச்சிப் பொங்கி எழுந்தது. ஏன்! பாஸ்டிலி பிரான்சு நாட்டு சிறைக்கூடம். பாரிசில் கட்டப்பட்டிருந்த பாதகக்படுகுழி! பாமரரை சித்ரவதை செய்யும் சிறைக்களம்! அது அன்று அழிந்தது, அந்தச்செய்தி உலகெங்கணும் கொடுமைக்கு ஆளாகி இருந்த மக்களுக்கெல்லாம் தத்தம் நாட்டிலே உள்ள பாஸ்டிலிகளும் தொலையும் நாள் வந்துவிட்டது என்ற ஆவேசத்தை ஊட்டிற்று. அக்கிரமக்காரரை, விழித்தெழுந்த மக்கள் வீரத்தால் வீழ்த்தினர் என்று கேட்டதும், நாட்டுக்கருகே உலாவிய புலி கொல்லப்பட்ட செய்தி கேள்விபட்டதும், நாட்டிலே ஒவ்வொரு வீட்டிலும் மகிழ்ச்சி உண்டாவதுபோல் உலகிலே நாகரீக உணர்ச்சிப்படை அனைவருக்கும் ஓர் மகிழ்ச்சி எழுச்சி . ஒழிந்தது , பாஸ்டிலி கொடுமை ஒழிந்தது என்று பல்வேறு நாட்டவரும் கூறினர். பாஸ்டிலியின் அழிவு பிரான்சிலே மட்டுமல்ல பல்வேறு நாடுகளிலேயும் நாசத்தைக் கக்கிக்கொண்டிருக்கும் நயவஞ்சகரின் ஆட்சி வீழ்ந்துவிடும் . விழும் நாள் விரைவிலே உண்டு என்ற எண்ணத்தை ஊட்டும் இலட்சிய வாடையாகிவிட்டது! அந்தப் பிரான்சுப் புரட்சி. பிரபஞ்சப்புரட்சிக்கு பேராசிரியராக வரவேற்கப்பட்டது ஜூலை 14. ஒரு நாட்டிலே இருந்த ஒரு சிறைக் கூடத்தின் வீழ்ச்சி நாள் அல்ல. செல்வச் செருக்கு எனும் சிறைக்கூடம் எங்கெங்கு காணப்படுகிறதோ அங்கெலாம் வீழ்ச்சி, இறுமாப்புக்கு இறுதி எச்சரிக்கை விடுத்திடும் வீரம் விழிப்புற்ற நாளாயிற்று.

பூவையரின் போகத்தில்
புரண்டு கிடந்த பூபதிகள்

ஏ! மனிதப்பதரே! மண்டியிட்டு வாழவேண்டிய மாமிசப் பிண்டமே! அடிமையே! கட்டளையிடுகிறேன். யோசிக்கிறாயே, என்ன? நட என்று கூறுகிறேன், நிற்கிறாயா இன்னமும் என்று எக்காளம் மிகுந்திருந்த காலம். மன்னனோ சீமான்களின் சதுரங்கக்காய்; சீமான்களோ சிருங்காரிகளின் சிறுவிரலிலே, பெருநெறியைக் கண்டவர்கள். சிருங்காரிகளின் ஆயுதங்களோ சிற்றிடை, சிவந்த அதரம் கனிரசக்கலசங்கள், கீதக்குரல், நடனநடை, - இந்நிலையிலே. பஞ்சம் பசி தீர்த்துக்கொள்ளும் பாமரரின் உயிர் குடித்து, பாவையர் வாழ்வார் பாதிராத்திரிப் பசியை அடக்கும் பாதகத் தொழிலுக்குத் தங்களைதத்தம் செய்து. வரிகொடுப்பவர்கூலி மக்கள். கேளிக்கை தேடி அலைவர் சீமான்கள்! ஒய்யாரியின் ஓயாச்சிரிப்பு! உல்லாசியின் சல்லாபம்! இவையே கலை! கட்டழகியின் கண்ணைக் கண்டே காவியம் தீட்டப்படும்.

கோமளவல்லியின் கொவ்வை இதழுக்கு
காத்திருந்த கோமான்கள்

சீமான்களிடம் வரிகேட்கும் 'சிறுமதி' மன்னருக்குக் கிடையாது! பூமான்களின் புன்னகை போதாதா அரண்மனைக்கு ஒளிதர! பஞ்சைப்பயல்களால் வரி தருவதை தவிர வேறென்ன தரமுடியும். நாட்டை ஆளும் பாரத்தை நாதன் துணைகொண்டு, தாங்கும், மன்னருக்கு எனவே ஏழை பராரியானவன் பராரி பட்டினியால் சாவான் கொவ்வை இதழுக்காக எதையும் தருவான்! இதுவே பிரான்ஸ்; பாஸ்டிலி வீழ்ச்சிக்கு முன்பு.

ஆயுள் பூராவும்
அங்கத்தின் மீது அக்கினிக்குழம்பு

''இப்படியும் வதைவதா?'' என்று கேட்கும் துணிவு எவருக்கேனும் பிறந்தால் பாஸ்டிலி! அரண்மனையிலே செல்வாக் குள்ள யாருடைய கோபமாவது எவன் மீதேனும் பாய்ந்தால் பாஸ்டிலி! வரிக்கொடுமை பற்றிப் பேசினால் பாஸ்டிலி! சீமான்களின் சீற்றம், அந்த சிறைச்சாலைக்குத் தான் பாமரரைத் துரத்திற்று! அங்கே இருந்தது என்ன? இரும்புக் கம்பியும் கம்பளிப்போர்வை மட்டுந்தானா? இல்லை! பகலிலே இரவு! பாதாளத்திலே அறைகள்! காற்று, வெளிச்சம் தண்ணீர், உணவு தாராளமாக உண்டா? இல்லை சித்திரவதை எவ்வளவு அதிக நாட்களுக்கு செய்ய முடியுமோ அவ்வளவு காலம் கைதியின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் படி பார்த்துக் கொள்ளவேண்டும். பாஸ்டிலி என்ற பெயரைக் கேட்ட உடனேயே பயத்தால் 'அலறுவர்' அங்கே போனவன் திரும்பி வருவது உண்டா? அக்கினிக்குழம்பிலே போட்டாலாவது அரை நொடியிலே சாவது நிச்சயம். அதுவரைதான் வேதனை, பாஸ்டிலிலே ஆயுள் பூராவுமல்லவா அக்கினிக்குழம்பு அங்கெல்லாம் ஊற்றப்படும் என்று கூறி கதறுவர். விசாரணையின்றி, மன்னிப்பின்றி, அங்கம் பழுதானாலும் கேட்பாரின்றி உடல் அழுகித் தானாக உலர்ந்து உயிர் ஒவ்வோர் துளியாக பிரியத்தொடங்கி அவன் எலும்புக்கூடாகி, கண்பார்வை இழந்து, கைகால் முடக்கப்பட்டு, உடலிலே கடித்துக் கொண்டிருக்கும் உண்ணியை ஓட்டவும் சக்தியற்று, அவனைக் கண்ணால் பார்ப்பதே பார்ப்பவனுக்குத் தண்டனை என்று கூறத்தக்க உருவமாக மாறி, மரணத்துக்குத் தவம்கிடந்து பிறகு மண்ணிலே புதைவான்! அந்தப் பயங்கர பாஸ்டிலியிலே வாலிபன் வயோதிகனானான்! வீரன் வெறியனானான்! புத்திமான் பித்தனானான்! வடிவழகன் அழுகு நோயனானான்! அடக்கு முறையின் முழு மூளைத்திறமும்

உபயோகிக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட இடம் அந்த பாஸ்டிலி, கனத்த சுவர்கள், அவைகள் அணைத்துக்கொண்டு ஆழமான அகழிகள், இரும்புப் பலகைகளாலான கதவுகள், இமை கொட்டாது காவல் புரியும் கொடியவர்; இது பாஸ்டிலி; எவ்வளவு அநீதி இழைக்கப்பட்டாலும் கூட ஏன் என்று கேட்க எவரும் துணியார்! அவர்களின் செவியிலே பாஸ்டிலி என்ற சத்தம் விழுந்ததும், அந்தப் பாஸ்டிலி வீழ்ந்த ஜூலை 14-ல் அவனி களிப்படையாது இருக்குமா?

பதினாறாம் லூயி, பிரான்சை ஆண்டு வருகிறான். பட்டத்தரசியின் சுண்டு விரலுக்குக் கிட்டே வருபவருக்கே அரண்மனை தயவு! மக்கள் உள்ளமோ கொதித்தது . ஆனால் எரிமலை வெடிக்கத் தொடங்கவில்லை. பாஸ்டிலி என்று பயம்! எரிமலைக்கு மேல் மூடியாகக் கிடந்தது. காதகனின் கருணையைக் காசுக்கு விற்கும் தரகர்கள், காமத்தால் கருத்தழிந்த சீமான்கள்! கவலையால் கருத்துக்குழம்பிய மக்கள்!

சீமான்களோ வரி செலுத்தவில்லை. வரி கேட்கும் நெறியே தவறு. சீமான் என்ற பட்டத்துக்கே வேறு என்னதான் அர்த்தம். சாதாரணமானவனும் வரிக்கட்டுவது. சீமானும் வரி கட்டுவதா? பண்ணே உண்டு. பாடுபட கூலிகள் உண்டு. அவர்கள் தேடிக்குவித்த பொருளை ஆடிப்பாடி செலவிடப் பாரீஸ் உண்டு. செல்வவான்கள் உண்டு. அன்னக்காவடிகளுக்குப் பட்டினி உண்டு, ஏழு லட்சத்து ஐம்பதினாயிரம் மக்கள் கொண்ட பாரிசில், பசியோ பசி என்று பதறிய மக்களே பெரும்பான்மையினர். 1774-ல் இந்தப் பிரான்சுக்கு மன்னனானான் பதினாறாவது லூயி, பட்டத்தரசி மேனாமினுக்கி! அவளைச்சுற்றி ஜொலித்த மாதர்கள், உடல் குலுக்கி ஊரை அழிக்கும் உல்லாசிகள். அரண்மனையிலே ஆனந்த அமளி. வெளியே வேதனைப்புயல், இந்நிலை எப்படி இருக்கமுடியும்? அரண்மனை யிலே சுரண்டிப் பிழைக்கும் சுந்தரிகளும் சோம்பித் திரியும் சொகுசுக்காரரும் நடனமாடினர்.

பணம், பரிபாலனச் செலவுக்கு அதிலும் பளிங்குக் கிண்ணத்திலே பலவித மது ஊற்றி வைரமோதிரக் கையினால் பொன்னாடைப் பூமகனுக்கு பூரிப்புடன் தரும் விருந்து வைபவங்கள் நடைபெறவேண்டும். அத்தகைய பரிபாலனச் செலவுக்குப் போதுமா? பாவையர் மீது சீமான்கள் கொண்ட மோகத்தைப்போல பணம் வளருமா? பணம் இருக்கும். இடம் மாளிகையில், பண்ணைகளில் அவர்களோ மன்னரின் அன்புக்குப் பாத்திரமான வர்கள். வரி தரும் வேலை கிடையாது, ஏழை மட்டுமே தந்து எந்த

அரசாங்கத்தால் நடத்த முடியும்? பணம் இல்லை பரிபாலனச் செலவிற்கு!

தூங்கிக் கிடந்த மக்கள் தோள்தட்டி நின்றனர்!

சர்க்காரை சீர்திருத்த முயன்றவர்களில் ஒருவர் பிரான்சை படம் பிடித்தார். '' பிரான்ஸ், ஒரு ராஜ்யம் அல்ல. பலப்பல தனித்தனி ராஜ்யங்களின் கதம்பம்! ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லை. எல்லாவற்றிற்கும் பொதுவான நிர்வாக யந்திரமில்லை. பல வட்டாரங்கள் வரி செலுத்துவதே இல்லை. சில வட்டாரங்கள் வரி செலுத்தி செலுத்தி வறண்டு விட்டன. பணக்காரர்களுக்கு வரிச்சுமை மிக மிக இலேசாக இருக்கிறது. ஏழையின் இடுப்பே முறிகிறது. சீமான்கள் அனுபவிக்கும் அதிகார பாத்யதையால் சமுதாய அமைப்பிலே சம எடை கெட்டு விட்டது. மிக மிக மோசமான ராஜ்யம், ஊழல் அமோகம், சரி, படம் பிடித்தது சரிதான். ''ராஜ்யம் மோசமாக இருக்கிற காரணத்தால்தானே உம்மை அமர்த்தினோம். ''ஒழுங்குப்படுத்த'' என்று யாரேனும் கூறிவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சிப்போலும் அந்த ஆசாமி பிரான்ஸின் நிலைமையைக் கூறிவிட்டு ''இன்றுள்ள நிலையிலே இந்த ராஜ்யத்திலே ஆட்சி செய்வது ஆகாத காரியம்'' என்று தீர்மானமாகக் கூறிவிட்டார். ஐரோப்பாவின் பூந்தோட்டம் பிரான்சு! அங்கு பணம் இல்லை துரைத்தனம் நடத்த. பணம் படைத்த சீமானுக்கோ மனமில்லை வரி செலுத்த! அந்தச் சிறு கூட்டத்தை அடக்கவோ திறனில்லை மன்னனுக்கு? மதியுரைக்க மந்திரியில்லை! மக்களுக்கு பாஸ்டிலி இருந்தது!

பிரான்ஸ் நாட்டு ராஜரீகத்தை நடத்த முடியாது! என்று கூறியும் விட்டார் ஒரு பிரமுகர்; மன்னர் ஏதேதோ செய்து பார்த்தார். மந்திரிகளைப் புதிது புதிதாக நியமித்தார். அவர்கள் புதுப்புது திட்டங்கள் தீட்டினர். பலன் இல்லை ! கடைசியில் கதி கலங்கிய காவலன் புயலைத் துணைக்கு அழைத்தான்! மக்கள் மன்றத்தைக் கூட்டினான். மக்கள் மன்னரால் கைவிடப்பட்டுக் கிடந்த மக்கள்- கூடினர்! கவலை தோய்ந்த முகத்தினருக்கும், கொஞ்சம் களிப்புப் பிறந்தது. மக்களை மன்னர் நாடுகிறார்! ஏன்? நாம் எல்லோரும் இந்த நாட்டு மன்னர் என்ற தத்துவம் கோழை நெஞ்சிலே குடைந்து சென்றது, நிமிர்ந்து நின்றான்! தூங்கின போதும் தோள்தட்டு என்ற உணர்ச்சி உரைத்தது. குகையை விட்டு புலி கிளம்புவதுபோல் கிளம்பினர்.

எரிமலை குமுறத் தொடங்கிற்று! மக்கள் மன்றத்தினர் துதைத்தனம் நடத்தும் திட்டம் தயாரித்தனர்! விடுதலை என்ற மையிலே புரட்சி என்ற பேனாவைத் தோய்த்து எடுத்து, சீறிடும் சீமான்களைக் கண்டு சிரித்தனர், மன்னனை, மறந்தனர். அரசாளப் பிறந்தவர் அவர் மட்டுமா? பிரான்ஸ் நாட்டவர் அனைவருமே அரசாளப் பிறந்தவர்கள் என்று ஆர்ப்பரித்தனர். 1789 - ஆம் ஆண்டு ஜூன் பத்தாந்தேதி மக்கள் மன்றம் ''தேசிய மகாசபை இது இந்நாட்டுக்குத் தக்கதோர் ஆட்சி முறைத்திட்டம் வகுத்து அமுலுக்கு கொண்டு வரா முன்பு, இந்தச் சபை கலையாது'' என்று கூறி விட்டது. அரண்மனையிலே மன்னன், அன்னக்காவடிகள் அரசாள நாங்கள் வழி அமைத்துத் தருகிறோம் என்று கூறுகின்றனர் வெளியே.

அரண்மனைக்குள்ளே ஆர்ப்பாட்டக்காரர் கூடினர் அரசனுக்குத் தூபமிட்டனர். அதிகார வெறியை ஏவிவிட்டனர்! துருப்புகள் பவனி வரத் தொடங்கின . புயல் வலுத்தது!

''போக்கிரிகளைச் சுட்டுத் தள்ள வேண்டும்.''

''காலாடிகளிடம் நாட்டை விட்டு வைப்பதா? ''

'' பிடித்துத் தள்ள வேண்டும் பாஸ்டிலியில் ''

''துருப்புக்களுக்கு உத்தரவு பிறப்பித்தால் வெறி நாய்களை சுட்டுத் தள்ள மாட்டார்களா? ''

'' மன்னனை மதிக்காமல் மமதையோடு கூவும் இந்த மக்களைக் கண்டு நாம் சும்மாயிருப்பதா?''

''மானம் போகிறதே''

'' பரம்பரை கௌரவம் பாழாகப் போகிறதே''

''கிளம்புவோம், சிதறடிப்போம்,'' சீமான்கள் சிலர் கூடினர் அரண்மனையில், ஆணவத்தை இதுபோல் கக்கினர் கடைசி முறையாக! ஆளத்தெரியாத மன்னன் மக்களின் ஆத்திரக்கடலைக் கடக்க இந்த மண் குதிரை மீது ஏறிக்கொண்டான். மக்களைக் கூட்டிய மன்னன் பிறகு அவர்களைக் கடுமையான முறையினாலே அடக்குவது என்ற விபரீத எண்ணம் கொண்டான். புயலை எதிர்த்தான்! சீறும் நாகத்தின் முன்பு சிறுபிள்ளையாட்டமாடினான்.

மக்கள், மன்னரின் படை கிளம்புவது கண்டனர் கையில் கிடைத்ததையெல்லாம் தூக்கினர். 1789 ஜூலை 14-ந் தேதி போர்க்கோலம் பூண்ட மக்கள் எங்கே பாய்ந்தனர். பாஸ்டிலி! மன்னன் அடக்கு முறையைத் துவக்கத் துணிந்தான் என்று

தெரிந்ததும், மக்கள் மனதில் தோன்றிய முதல் எண்ணம் பாஸ்டிலி பாஸ்டிலிதான். நம்மைப்போன்ற ஏழைகளைச் சீமான்களின் ஏதேச்சதிகாரத்தை எதிர்க்கத் துணிந்தவர்களைக் கொடுமை செய்யும் இடம். நாமும் சிக்கிக்கொண்டால் அந்தப் பாழும் சிறைச்சாலைக்கு இழுத்துச் செல்லப்படுவோம். யாரால் சகிக்க முடியும் இந்த இம்சையை? அந்தோ எவ்வளவு பேரை இம்சித்த இடம், அந்தப் பாஸ்டிலி ஒழிக! ஒழிக கொடுமை!! என்று புரட்சி முழக்கமிட்டது அந்த புரட்சி கீதம் எழுப்பிய நாள்தான் ஜூலை 14!

புரட்சிப்புயல் பாஸ்டிலியைத் தூள் தளாக்கியது எங்கனும் வெற்றி முழக்கம் கேட்டது. அந்த வெற்றி முழக்கத்தை எழுப்பிய நாள்தான் ஜூலை 14!

★★★

இதோ திராவிடத் தந்தை

''கோர்ட்டாரவர்கள் தாங்கள் திருப்தி அடையும் வண்ணம் எவ்வளவு அதிக தண்டனையைக் கொடுக்க முடியுமோ அவைகளையும் பழிவாங்கும் உணர்ச்சி திருப்தி அடையும் வரைக்கும் எவ்வளவு தாழ்ந்த வகுப்பு கொடுக்க உண்டோ அதையும் கொடுத்து இவ்வழக்கு விசாரணை நாடகத்தை முடித்து விடும்படி வணக்கமாகக் கேட்டுக் கொள்கிறேன், எவ்வளவு நியாயமான லட்சியத்தை அடையவேண்டுமானால் அதற்காக கஷ்ட நஷ்டங்கள் அடைதல் என்னும் விலைகொடுக்க வேண்டுமாதலால் அவ்வாறு வேண்டிக்கொள்கிறேன்.

காளையல்ல பேசினது, கிழவர்; எனவேதான் காளைகள் ஆயிரமாயிரம், அவருடைய குரல் கேட்டு குதூகலிக்கின்றன.

ஒரு மாலை - மூன்றரை மணியிருக்கும் - முகத்தில் ''ஈ ஆடாது'' உட்கார்ந்திருக்கிறுர் மாஜிஸ்திரேட். பசி தெரியாமல் பார்த்த கண்களை நீக்க முடியாமல், தமிழர்கள் குடும்பங் குடும்பமாக உள்ளனர் கோர்ட்டுக்கு உள்ளேயும் வெளியேயும். சட்டம் ஒரு புறம் - சமர் மற்றோர் புறம் - ஆச்சாரியார் ஓர்புறம் - பெரியார் இராமசாமி ஒருபுறம். கட்டாய இந்தி முறைத்துப் பார்க்கிறது - கன்னித் தமிழ் எழிலுடன் எதிர்நோக்குச் செலுத்துகிறது. . தண்டனை தரும் அதிகாரம் அவர்களுக்கு - தமிழைக் காக்கும்

உரிமையைத் தாங்கிக் கொண்டிருக்கிறார் பெரியார். நடப்பது காங்கிரசாட்சி - சம்பவமோ, சிறைக்கு மக்கள் தலைவனை அனுப்புவதாக இருந்தது. பெரியார் பேசினார் விடுதலை வீரர்களின் மொழியிலே, விலை கொடுப்பேன் உரிமைக்காக என்றார். எடு சட்டத்தை, கொடு தண்டனை; முடி இந்த நாடகத்தை என்று முழக்கமிட்டார். வயது என்ன? அறுபதாம் கலியாணப்பருவம்! பேச்சிலேயோ தீ; போக்கோ முறுக்கேறின தலைவருடையது. ஏன்? தமிழகம் அவர் பக்கம் நின்றது.

மாஜிஸ்திரேட் என்ன சொல்லப்போகிறார்? எமது தலைவரின் நிலை என்ன ஆகும்? கூண்டிலே சிங்கம். கும்பலாகத் தமிழர் நின்று பார்க்கின்றனர்! அரியணை மீதோ ஆச்சாரியார் என்று வருந்தினர் மக்கள், வாய் திறந்தார் மாஜிஸ்திரேட்.

''2 வருஷம்'' என்றார்.

இரண்டாண்டுகளா? எமது தலைவருக்கா? இந்தி வேண்டாம் என்பதற்கா? இரும்பிலே இதயம் செய்து அமைத்துக் கொண்டனரோ ஆட்சியாளர்கள்! கரும்பினும் இனிக்கும் எமது தமிழைக் காத்திட கிளம்பினதற்காக இத்துணை கடுந்தண்டனை - என்று எண்ணித் திகைத்தனர் தமிழர். திகைப்புண்ட தமிழரின் செவியில், மாஜிஸ்திரேட் மேலும் சில சொல் கூறியது வீழ்ந்தது.

''2 வருஷம் தண்டனை; அதோடு அபராதம் 2000 ரூபாய் - கட்டத் தவறினுல் மேற்கொண்டு ஒரு வருஷம்.''

1938- ஆம் ஆண்டு டிசம்பர் 6-ந் தேதி மாலை 3.25 க்கு தலைவர் பெரியாருக்கு 3 வருடத் தண்டனை விதிக்கப்பட்டது- வெடிகுண்டு வீசியதற்காக அல்ல. தமிழ் வேண்டும், தமிழருக்கு - இந்தியை கட்டாயப் பாடமாக்கக் கூடாது என்று சொன்னதற்கு.

திகைத்த தமிழரை ஒரு முறை நோக்கினார். திக் விஜயம் செய்யும் மாவீரன் முறையில், கண்ணீர் திவலைகளைக் கண்டார். சால்வையை இழுத்துப் போட்டுக் கொண்டார். ஒரு புன்சிரிப்புடன் பேசினார் பக்கம் சென்றவரிடம் '' நான் இப்போது ஒரு கைதி!'' என்று.

ஆம்! தமிழர் தலைவரை கைதிக் கோலத்திலே கண்டனர் அன்று. அவருக்கு எட்டாவது முறை. தமிழர்கள் அந்தக் கைதிக்காக கண்ணீர் விட்டனர். குழந்தைகள் முதியவர் போலாயினர். முதியவர் குழந்தைகளென 'கோ' வெனக் கதறினர்.

பெரியார் இராமசாமி 5544-ம் நம்பர் கைதியானார். சென்னைச் சிறை புகுந்தார். வெளியே தமிழர் தம் தலைவனுக்காக உருகினர். சிறையோ புதிய 'கௌரவம் ' பெற்றது. செந்தமிழ் நாட்டுச் சிங்கம்- எங்கள் ஈ.வே.ரா. தங்கம் - வந்தார் வந்தார் - என்று சிறையிலே கீதம் கிளம்பிற்று. ஆம்! சிறைக்கு வெளியே மட்டுமா, உள்ளேயும் இருந்தது பெரியார் பெரும்படை!

வழக்கு மன்றத்திலே அவர் ஆற்றிய வீர உரை அவர் வாழ்க்கையின் திறவுகோல் எதுவென்பதைக் காட்டுவதாகும்.

லட்சியத்தை அடைய கஷ்ட நஷ்டம் அடைதல் எனும் விலை கொடுத்தாக வேண்டும் - என்றார். ஆம்! கொடுத்திருக்கிறார் எட்டு முறை சிறை சென்றது மட்டும், அல்ல விலை.

எந்த மக்களின் சார்பாகப் போகிறாரோ, எந்தத் தமிழ் இனத்துக்காக தளராது உழைக்கிறாரோ, அதே இன மக்களின் கேலிக்கண்டனம், சந்தேகப்பார்வை, இழிமொழி இவைகளைப் பல்லாண்டுகளாக பெற்று இருக்கிறார் - ஆனால் பாதையிலிருந்து வழுவியதில்லை.

விலை கொடுத்தார் ஓர் சிறந்த லட்சியத்திற்காக! என்ன அந்த லட்சியம்? அதனைத்தமிழர் அறிதல் வேண்டும். அவருடைய விழா கொண்டாடப்படும் இந்நாள் அவரே பேசுகிறார் - கேளுங்கள், அவருடைய இலட்சியம் என்னவென்பது தெரியும் - அது உங்கள் இலட்சியம் என்பதை உணர்வீர்கள்.

''திராவிடர்களின்'' தமிழர்களின் நிலைமையைத் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்கள், முதலாவது திராவிட நாடு தனிநாடு என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

திராவிட நாடு தெளிவாக ஒரு தனிப்பட்ட சமூகத்தை யுடையது. திராவிட மொழியான தமிழ்மொழி எத்தனை பிரிந்திருந்தும், ஆரியரோடு சம்பந்தப் படாமல் ஒரு தனிப்பட்ட இனமாக இருப்பதற்குத் தமிழ்மொழியின் தன்மைக்கு நான் வந்தனம் செலுத்துகிறேன்.

திராவிட நாடு தன்னுடைய சுதந்திரத்தை விட்டுக் கொடுக்க மறுப்பதே தொன்றுதொட்டு வடநாட்டிற்கும், திராவிட நாட்டிற்கும் நடந்த சண்டைக்குக் காரணம்.

சூதாட்டத்தில் காய்களை உருட்டுவது போல் சில மனிதர்களை உருட்டிவிட்டு திராவிட நாட்டுப் பிரிவினையை அடைய முடியாது. திராவிட இனத்திலுள்ள ஒவ்வொருவனும்

விடுதலை பெற வேண்டுமென்று முழுமனதுடன் தீர்மானித்தாலே திராவிட நாடு இலகுவில் பெறமுடியும்.

ஒருவனுடைய நாட்டில் வேறு ஒருவன் வந்து ஆதிக்கம் செய்யும் படியாகவும், நாட்டுக்குடையவனை சூத்தரனாகவும், கீழ்ஜாதியாகவும் செய்திருக்கும், செய்துவரும் ஆட்சி எப்படிப்பட்ட தானாலும் அது கொடுங்கோன்மை ஆட்சியேயாகும்.

இன்று நமக்குத் திராவிடர் என்கிற பெயரே இல்லை. தமிழர் என்கிற பெயரே இல்லை. சூத்திரர், தீண்டப்படாதவர், நாலாம் ஜாதி, ஐந்தாம் ஜாதி என்கிற பெயர்கள் தான் இருக்கின்றன. சரியா? இது உங்களுக்குச்சம்மதமா? இது மாற்றப்பட வேண்டாமா? அதற்காவன செய்ய வேண்டாமா?

இதைச்செய்வதை விடவா, மந்திரி பதவி, வைசிராய் மெம்பர் பதவி, ஆலோசனையாளர் பதவி, கவர்னர் பதவி ஆகியவைகள் பெரிதும் அவசரமும் அவசியமுமானவையா என்று கேட்கிறேன்.

முதலில் சமுதாயத்தில் பிறவியின் பேரால் உள்ள பேதங்களை ஒழிக்க வேண்டும். அதுவே இந்நாட்டின் சமதர்மத்திற்கு முதல்படி யாகும். அதனாலேயே பொருளாதார சமதர்மமே மனித சமூக சாந்திக்கு மருந்து என்று கருதியிருக்கும் நான் சமுதாயத்தில் வாழ்க் கையில், சமதர்மத்தை முக்கியமாய் வலியுறுத்தி வருகின்றேன்.

நம் நாட்டில் இன்று ஜாதி பேதங்கள் ஒழிந்து மக்கள் யாவரும் பிறவியில் சமம் என்கின்றதன் சமதர்ம முயற்சியே முதலில் செய்ய வேண்டியதாய் இருக்கிறது.

சமூகத்தில் மேல் ஜாதி, கீழ் ஜாதி, அடிமை ஜாதி என்பவைகள் இருப்பதோடு ஆண் பெண் தலைமைகளில் உயர்வு தாழ்வு இருந்து வருகிறது. இவை தவிர, ஏழை, பணக்காரன், முதலாளி, தொழிலாளி தன்மையும் இருந்து வருகிறது. இவற்றுள் சில இயற்கையாக ஏற்பட்டதாகவும், சில முயற்சியால் செய்கையால் ஏற்பட்டதாகவும் இவ்வளவுக்குக் காரணம் மனிதன் அல்லவென்றும், சொல்லப் படுகிறது. இவற்றையே மேல்நிலையில் உள்ளவனும் கீழ் நிலையில் உள்ளவனும் நம்பிக் கொண்டிருக்கிறன். இந்த மூடநம்பிக்கைதான் வெகு காலமாக மனித சமூகத்தில் எவ்வித மாறுதல்களும் ஏற்படுத்துவதற்கில்லாமல் துடித்துக் கொண்டு வருகிறது.

இந்த மாபெரும் சனியனான ஜாதிபேதத் தொல்லைகள் மனித சமூகத்தைவிட்டு தொலைய வேண்டுமானால் மனிதனுக்கு விஞ்ஞான அறிவும், நாட்டில் விஞ்ஞான வளர்ச்சியும் தேவை.

கஷ்டமானதும் இழிவானதுமான வேலை செய்பவர்கள் எல்லாம் கீழ்ஜாதியாகவும், சுகமாகவும் மேன்மையாகவும் உள்ள வேலை செய்பவர்கள் மேல் ஜாதியாகவும், ஒரு வேலையும் செய்யாமல் ஊரார் உழைப்பில் வயிறு வளர்த்துக்கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டு வஞ்சித்துத் திரிகிறவர்கள் மகா மகா மேல் ஜாதியாகவும், ஏற்பட்டதற்குக் காரணம் விஞ்ஞான அறிவில்லாததே.

மேனாட்டிலே இம்மாதிரித் தொல்லை அநேகமாகத் தீர்ந்து விட்டது.

விஞ்ஞான வளர்ச்சி காரணமாக சமத்துவம் அந்தச் சமூகத்தில் உண்டாக மார்க்கம் ஏற்பட்டு விட்டது. நாம் என்ன கூறினாலும் இனிமேல் நமது சந்ததியார் பழைய தொழில்முறை, ஜாதிமுறைத் திட்டத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது உறுதி.

''எனக்குத் தொழிலாளர்களிடம் உண்மையில் அன்பும், பக்தியும், கவலையும் வேறெதையும் விட அதிகமென்பதை உண்மைத் தொழிலாளர்கள் 15, 16, வருடமாகத் தொழிலாளருடன் பழகுபவர் அறிவர். ''

காதினிக்கப் பேசுபவர்களைக் கண்டு தொழிலாளர்கள் மயங்குவது அறிந்து பெரிதும் வருந்துகிறேன். 15 ஆண்டுகட்கு முன்பு நாகையில், ரயில்வே வேலை நிறுத்தம் நடந்த போது அதிலே கலந்துகொண்டு பாடுபட்டு அதற்காக நான் சிறைசென்றதை அக்காலத் தலைவர்கள் உணர்வார்கள்.

தொழிலாளர்களின் விடுதலையே தமிழர்களின் விடுதலை, பார்ப்பனரல்லாதாரின் விடுதலையாகும்.

ஒருகாலத்தில் இங்கிலாந்தில் அந்நிய நாட்டுத் துணி கட்டினால் 30 பவுன் அபராதம் விதிக்கச் சட்டம் இயற்றினார்களாம். அவர்களுடைய நெசவுத் தொழிலை விருத்தி செய்ய இச்சட்டத்தை ஏற்படுத்தி இருந்தனர். இன்று நம்மில் 100க்கு 60, 70 பேர் ஆமதாபாத் துணிகளை அணிந்திருப்பதைப் பார்க்கிறோம்; பெண்களும் ஆமதாபாத் சீலைகளைக் கட்டுகிறார்கள்.

ஆமதாபாத் முதலிய வெளிநாட்டு அதாவது திராவிட நாடு அல்லாத நாட்டுத்துணிகளை நாம் தடுத்து விட்டால் நமது கைத்தொழில் வளர்ச்சி அடையும். கைத்தறி நெசவாளர்களின் துன்பம், வறுமை, கஷ்டம் ஒழிந்து விடும்.

எந்த மனிதனும் மற்றொரு மனிதனுக்கு உபகாரியாகவும் கடைசிபட்சம் தன்னால் மற்றவனுக்கு துன்பம் தராதவனாகவும்

இருப்பதே பெரிய ஒழுக்கம், மதம் என்று சுயமரியாதை இயக்கத்தார் கருதி இருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் ஒழுக்கத்தைப் பற்றி ரஷ்ய புரட்சிவீரர் லெனின் பொதுவுடமைச் சிறுவர்கள் கூட்டத்தில் பேசிய பேச்சை உங்களுக்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதாவது : '' பொதுவுடைமைக்காரர்களுக்கு ஒழுக்கம் இல்லை என்று நம் எதிரிகள் சொல்கிறார்கள். அது தவறு. நாம் தான் சமூகத்தின் உண்மையான ஒழுக்கங்களைக் கையாள்வதோடு மற்றவர்களையும் ஒழுக்கமாக நடவுங்கள் என்று கட்டாயப்படுத்து கிறோம். அதற்கு பொதுடைமை ஒழுக்கம் என்று பெயர். நம்முடைய ஒழுக்கத்திற்கும், மதவாதிகள், பணக்காரர்கள் ஒழுக்கத்திற்கும், வித்தியாசமுண்டு, அவர்களது ஒழுக்கங்கள் ஏழை மக்களுடையவும், பாமர மக்களுடைவும் கண்களில் மண்ணைப்போட்டு பலன் அனுபவிப்பதற்கு ஆக ஏமாற்றஞ் செய்கிற சூழ்ச்சிகளேயாகும். நமது ஒழுக்கமெல்லாம் ஒருவனுல், ஒருவன் ஏமாற்றப்படாமலும், ஒருவனுல் ஒருவன் வருத்தப்படாமலும் இருக்கும்படியானவை களாகும். பாட்டாளி,ஏழை மக்களுடைய, நன்மையையே பிரதான மாகக் கருதுவதுதான் நமது ஒழுக்கம்'', என்று லெனின் சொன்னார். சுயமரியாதைகாரர்களாகிய நாமும் தனிப்பட்ட எந்த வகுப்பா ருடையவும், சுயநலத்துக்கு மாத்திரம் பயன்படும் எந்த ஒழுக்கத்தை யும் ஒப்புக்கொள்ளாமல் எல்லாமக்களுக்கும் எந்த வகுப்பாரா னாலும்,எந்த நிலையிலுள்ளவர்களானாலும், எந்த மதக்காரரா னாலும், யாவருக்கும் ஒன்றுபோல் பயன்படும் படியான காரியங் களையே நாம் ஒழுக்கம் என்கிறோம். இதனால் சுயநலத்தையே பிரதானமாகக் கருதி கற்பித்துக்கொண்ட ஒழுக்கங்களை உடைத் தெறிவது சுயமரிமரியாதைக்காரர்கள் கடமை என்பது விளங்கும்.

வயது சென்ற பெரியார்கள், மானமற்ற செல்வப்பித்தர்கள், பதவிப்பித்தர்கள், நிலை எப்படியோ இருக்கட்டும். வாலிபர்களாகிய நீங்கள் உறுதியுடனும், துணிவுடனும், நம்பிக்கையுடனும் முன்வாருங்கள். ஒரு பத்து வருடத்திற்குள் பெரியதொரு சமுதாயப்புரட்சி நடத்தி மானமும் விடுதலையும் பெற்றுவிடலாம்.

'' நான் ஒரு எதிர் நீச்சுக்காரன். என்ன காரணத்தாலோ நம் நாட்டு மக்களின் பெரும்பான்மையான அபிப்பிராயத்துக்கு, நான் மாறுபட்டவனாக இருந்து வருகிறேன். பழமையைப் பாராட்டுவது, நமது மக்களுக்கு ஒரு பெருமையாய் காண்ப்படுகிறது. நானோ பழைய பித்தை வெறுக்கிறவனுக இருக்கிறேன் அதனாலேயேதான் வெகுபேர்களால் வெறுக்கப்படுகிறேன். ஆனாலும் அறிவாளிகள்

சீக்கிரம் என்பக்கம் திரும்பி விடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.''

அவருடைய நம்பிக்கை வீண் போகவில்லை! அறிஞர் உலகு இன்று அவர் உரையை மறுப்பதில்லை! வீரர் உலகு அவர் செயலை பாராட்டவோ, துணை செய்யவோ தயங்கவில்லை! வாலிப உலகு சம உரிமைப்போர்ப் படையை அமைக்கத் தவறவில்லை, வீணர் என்ன கத்திடினும், அவருடைய நம்பிக்கை வீண் போக வில்லை என்பது தெளிவாகக் காட்டும் பல அறிகுறிகள் தோன்றி விட்டன.

அவர் எதிர் நீச்சுக்காரர்தான்! ஆனால் அதிலே அவர் வெற்றி பெற்று விட்டார்.

''மகா பாவி! புராதனகால ஏற்பாட்டைக் குறை கூறுகிறானே! வாய் புழுக்காதோ! ரௌரவாதி! நரகமன்றோ கிடைக்கும் ''

'' கர்ஜிக்கட்டும் கண்டிக்கட்டும்! கவலையே வேண்டாம். எத்தனையோ பேர், இதுபோல் முன்பெல்லாம் கத்தினர். கண்டது என்ன? அபஜெயம்! அதேதான் இவனுக்கும். என்னதான் அசகாய சூரனாக இருக்கட்டும். நமது பழைய கால ஏற்பாட்டோடு மோதிக் கொண்டால், அபஜெயம் நிச்சயமன்றோ!''

'' ஏன் இந்த வீண் வேலை! இப்போது பழையகால ஏற்பாடு கள், என்ன உள்ளன. லோகம் மாறிண்டிருக்கு ஆச்சார அனுஷ்டா னாதிகள் கால வேகத்தாலே அடியோடு மாறிவிட்டன. செத்த பாம்பை அடிக்கிற மாதிரி,ஏதற்காக இவர் ஜாதி குலம் ஆச்சாரம் சாஸ்திரம்னு கண்டித்துக் கொண்டு இருக்கணும்? அனாவசியம்!''

''அவர் சொல்வது உண்மை; நிச்சயமாய் பேதம் ஒழிந்து போகத்தான் வேணும். எல்லோரும் சகோதர பாவத்தோடு வாழத்தான் வேண்டும். அதுதான் சிலாக்கியம். ஆனால், அவசரப்படக்கூடாது. மெள்ள மெள்ள நடக்க வேண்டிய காரியம்.''

''யார் இப்போது, பலஜாதி பலகுலம் இருக்க வேணும்னு வாதாடுவா! அதெல்லாம் ஒழியத்தான் வேணும் அதற்காகத் தான் சுயராஜ்யம் வரவேணும்னு சொல்றா பெரியவா. அதுக்காகத்தான் தற்சமயம் பாடுபட வேண்டும். சுயராஜ்யமே வந்தானதும் ஜாதி பேதம் முதலிய சனியன்களைத் தொலைக்கிற காரியந்தான் செய்தாகவேணும். நடக்காமலாபோகும், நிச்சயமாக நடக்கும். ''

சாபம், கோபம், கேலி, சமாதானம் சமரசம் என்று படிப்படியாக பழமையின் காவலர், பேசி வந்த விதத்தை மேலே பொறித்திருக்கிறோம். இந்த மாறுதல், பெரியாரின் வெற்றி! அதற்கான விலையைக் கொடுத்து அந்த வெற்றியை அவர் பெற்றார்.

அவருடைய இலட்சிய பூமியில் இல்லாமை, போதாமை, அறியாமை இருக்காது.

திராவிட நாடு திராவிடருக்கே என்ற ஒரு வாக்கியத்துள் அடங்கி இருக்கும் கருத்துக்களை, அவருடைய மொழியின் மூலம், ஓரளவு விளக்கி உள்ளோம். அந்த 'இலட்சிய பூமியை அடைய, அவர் பாடுபட்டுவரும் பாடும், கொடுத்த விலையும் சமான்யமல்ல.

அஞ்சா நெஞ்சுடன் அறிவுக்காகப் போராடும் ஆற்றல் மிக்க பெரியார் வாழ்க! என்று இன்று தமிழகம் வாழ்த்துகிறது.

★★★

விதைக்காது விளையும்

விதைக்ககாது விளையும் கழனி எப்படி இருக்க முடியும்?ஏன் முடியாது? உழைக்காது வாழும் மனிதர்கள் வாழும்போது விதைக்காது விளையும் கழனி ஏன் இருக்காது? உழைக்காது வாழும் மனிதர்கள் இருப்பது மட்டுமல்ல. ஊரையே ஆட்டிவைக்கும் அரசனையே ஆட்டிப்படைக்கும் மனிதர்களும் இருந் திருக்கிறார்கள், இருக்கிறார்கள். அரசன் உழைப்பது இல்லையே தவிர, ஊர்க்கோபத்துக்கும் வேறு வேந்தரின் படையெடுப்புக்கும் அஞ்சி வாழ வேண்டும். மன்னன் ஆளப்பிறந்தான் என்ற எண்ணம் மக்கள் மனதிலே ஆழப்பதிந்திருக்கும் வரையிலேதான் மன்னன் மனதிலே மணிமுடி தரித்து வாழமுடியும். கோபமோ குமுறலோ கொப்பளித்தால், கோல் உடையும். ஒரு அரசு போனால் மற்றோர் அரசு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அவன் இருக்கமுடியாது. முடி கவிழ்ந்தால் பிறகு மீண்டும் சிரம் ஏறும் என்றும் உறுதியாகக் கூற முடியாது, ஆனால் அரசர்களுக்கு இருக்கும் இந்த ஆபத்துங்கூட தங்களை அண்ட முடியாதபடியான அரண் அமைத்துக் கொண்டு ஆண்டிக் கோலத்திலே இருப்பினும் அரச போகத்தையும், அனாயாச மாக பெறக்கூடிய நிலை பெற்று நெடுங்காலமாகவே அந்த நிலை குலையாமல் பார்த்துக்கொண்டு வாழும் கூட்டம் ஒன்று இருக்கிறது.

ஆச்சரியமான பல உண்மைகள் உலகில் உண்டு. பெரியதோர் யானை; பித்துப் பிடித்ததுபோல் ஓடும். எதிர்ப்பட்டோரையும் தாக்கும். அதன் கலக்கத்துக்கும், கோபத்துக்கும் காரணம் புரியாமல் மக்கள் திகைப்பர். கடைசியில் பார்க்கப்போனால், அதன் காதிலே

புகுந்து கொண்ட சிறுவண்டு செய்த சேட்டையால் குன்றென உடல் படைத்த கரி அங்ஙனம் ஆடி அலைந்து, ஆபத்தையும் உண்டாக்கிற்று என்பது தெரியவரும். மிருகங்களிலே மட்டுமென்ன? மனிதர்களிலேயும் இந்த விசித்திரம் உண்டு. வீராதி வீரன் ஆயிற்றே இவன் எப்படி ஒரு வீணனிடம் அடங்கிக் கிடக்கிறான் என்று ஆச்சரியப்படுவோம், சில சம்பவங்களைக் காணும்போது. ஆனுல் கொஞ்சம் ஆராய ஆரம்பித்தால் தெரிந்துகொள்வோம். ஒரு துடியிடைக்கு அந்த வீணன் தூது போகிறவன் என்ற சூக்ஷமத்தை, நமக்கு அவள் ஒரு மாது; அவன் ஒரு வீணன். ஆனால் அந்த வீராதி வீரனுக்கோ அவள் இன்பம்: அந்த வீணன் இன்பபுரிக்கு அவளை அழைத்துச் செல்பவன்; எனவே இன்பபுரியில் குடியேறிய வீரன் யாரால் அந்த இன்பபுரிவாசம் அவனுக்கு கிடைத்ததோ, அவனை வீணன் என்று எப்படிக் கருதுவான்; அவன் மற்றவர்களுக்கெல்லாம் வீணன்தான்! அவனுக்கு அப்படியல்லவே! விலை மதிக்கொணாத இன்பத்தையன்றோ அவன் அந்த வீரன் பெறும்படி செய்தான். இந்த 'மர்மம்' சுலபத்திலே வெளிவரக் கூடியதல்ல. சொன்னாலும் பலர் நம்பமாட்டார்கள். ஆனால் இப்படிப்பட்ட ஏதாவது ஒரு மர்மம் இருந்தாலொழிய வீராதி வீரர் பலர், மிகச்சாமானியர்களிடம் அடங்கி நடப்பதன் இரகசியம் தெரிந்து கொள்ள முடியாது போய்விடும்

★ ★ ★

வரலாற்றிலே வேந்தர் பலர் சேடிகளிடமோ, சேனுதிபதிகளிடமோ, சிரித்த முகத்திடமோ கூரிய வாளிடமோ, ஆசையாலோ பயத்தாலோ, அடங்கி விட்டதற்கு ஆதாரம் இருக்கிறது. இவைகூட ஆச்சரியமில்லை. கூரியவாளோ, குளிர்மதிப்பார்வையோ கூட இல்லாமல் நிமிர்ந்த பார்வையுடன் உள்ள ஒரு சிறு கூட்டத்திடம் மன்னாதி மன்னர்கள் மண்டியிட்டு இருக்கிறார்கள். மக்களின் சீற்றத்தைப் பற்றிக் கூட அவர்கள் அவ்வளவு அதிகமாகக் கவலைப்படமாட்டார்கள். அந்தச் சிறு கூட்டத்தின் சீற்றத்திடம் அவர்கள் மிக மிக அஞ்சுவார்கள். ஏனெனில் இந்த மக்களின் சீற்றத்தைக் கிளப்பவும், நிறுத்தவும் வேறு மன்னர்கள் விரோதத்தை ஏவவும், சிநேகத்தை வாங்கித்தரவும், அந்தக் கூட்டத்தினால் முடியும். ஒருபுலிக்கு இருக்கும் வலுவை அளவிட்டுக்கொண்டு, அதற்குத் தகுந்தபடி ஆயுத பலத்தைத் தேடிக் கொள்ளலாம். ஆனால் பல புலிகளை ஏவி விடக்கூடிய காட்டரசனின் வலுவு எந்த அளவு என்று எப்படி கணக்கிட முடியும். அதிலும் சுகபோகத்தையும்; சொந்த நலனையும் பாதுகாத்துக் கொள்வதிலே அக்கறை

கொண்டுவிட்டால் அந்த சுகபோகத்தின் சுவையிலே இலயித்து விட்டால்; அதனை இழக்க துளியும் மனம் வராத நிலையிலே, அந்தச் சுகபோகத்தை அழித்து விடுவதற்கான சக்தியைப் பெற்றவர்களிடம் அடிமையாகித்தானே தீரவேண்டும். இரும்புப் பெட்டியில் உள்ள எண்பது லட்சத்திலே ஆசை இருக்கும்வரையில் இடுப்பிலே தொங்கிய பெட்டிச்சாவியைப் பெற்ற மகனைவிட அதிக பிரியமாகவும் ஜாக்கிரதையாகவும் கவனித்துக்கொள்வது சகஜம்தானே!

★ ★ ★

அரசே அவந்தி நாட்டு மன்னன், அழகில் மன்மதன் - அறிவில் பிரகஸ்பதி - செல்வத்தில் குபேரன் - என்று எடுத்துச் சொல்லவும், ''அவந்தி நாட்டு மன்னனாக உள்ளவன் அழிவின் சின்னம், அரசு பலம் அவனுக்கு, அக்கிரமமே அவனுக்கு அமிர்தம், அபலைகளை அழிப்பதே அவனுக்கு ஆனந்தம்!'' என்று கூறவும் முடியும், எவ்விதம் கூறினாலும் கேட்கவும் நம்பவும் நம்பிக்கையின் பலனாக அவந்தி நாட்டுக்காவலனை அழிப்பது அறச்செயலாகும், என்று துணியவும், வங்க கலிங்க காம்போஜம் முதலிய நாட்டுமன்னர்கள் தயாராக இருக்கிறார்கள் என்றால் இவ்வளவு மன்னர்களை ஏவும், நாவலிமை படைத்தவனை அவந்தி நாட்டவன் எப்படி அலட்சியமாகக் கருத முடியும். அதிலும் இந்தச் செல்வாக்குப் படைத்தவன் தன்னைப்போல் ஒருமன்னன் என்றுல் பொறாமையால் தூண்டப்பட்டு இங்ஙனம் தூற்றுகிறான், பேராசையால் பிதற்றுகிறான் என்று கருதலாம். சொல்பவனோ சொர்ண சிம்மாசனத்தின் மீது இல்லை. கமண்டலமெடுத்துக் கொண்டு காடு சுற்றும் நிஷ்காம கர்மிக் கோலத்திலே காணப்படுகிறான்; சாந்தம்குடி கொண்ட மனம்! தேஜஸ் தழுவும் முகம்! தவத்தால் இளைத்த தேகம்! நீண்ட ஜடை, பற்று அற்ற நிலையைக் காட்டும் பார்வை. இவ்விதமான கோலத்திலே உள்ளவன் கூறும்போது, எப்படி அவனை பொறாமைக்காரன் என்றோ பேராசை பித்தன் என்றோ கூற முடியும்? இவ்விதமான சிக்கலான நிலைமையிலேதான் பண்டைய நாட்களிலே நமது மன்னாதி மன்னர்கள் மாவீரர்களைக் கொண்ட படைகளின் தலைவர்கள் ''சிறு கூட்டத்திடம்'' அடிமைப்பட்டனர்; அந்தப் பரம்பரை அடிமைத்தனம் இன்னும் போவதில்லை! முடியும் நம்மவர் சிரத்தினின்றும் போய்விட்டது. ஆனால் நம்மவர் அந்தச் சிறு கூட்டத்திடம் சிக்கிச் சீரழிந்தே வருகின்றனர். தப்பும் மார்க்கம் தெரியாமலும் திகைக்கின்றனர்.

★ ★ ★

ஏசுநாதருக்கு அமோகமான செல்வாக்கு ஏற்பட்டது. அவருடைய வார்த்தை வேதமாகிவிட்டது. ஐரோப்பாவெங்கும் ஏசுவின் விசுவாசிகள் அவதரித்தனர். அவருடைய புகழ் எங்கும் அதிகமாயிற்று. ரோமாபுரி ராஜ்யாதிபதியிடம் தங்கக் கோபுரங்கள் அமைக்கப்பட்ட மாளிகைகள், தோல்வியறியாத துருப்புகள், தொகை தொகையாகத் துதி பாடகர்கள்! பவனிவந்தான். பராக்குக் காரர்கள் உடன்வர! மக்கள் கண்டனர். களித்தனர். ஆனால் மறந்தனர்; ஏசுவைப் புகழ மறக்கவில்லை; கோலாகலமாகக் கொலு வீற்றிருந்த தால், '' பிரதானியர்கள் விருது பாடினர். ஆனால் நாட்டின் நானாபாகுடி புகுந்தது. ஏசுவின் சீடர்களிலே யூதாஸ் ஒருவன் மற்றகங்களிலுமிருந்து வந்த ஒற்றர்கள் அங்கும் ஏசுவின் செல்வாக்கு ஓங்குவதைக் கூறினர். கொலுமண்டபத்திலே இவர்களுக்கு ஏசுவின் மொழி பரவுவது கண்டு மகிழ்ச்சி. புதிய மார்க்கம் நிலைக்கிறது. சன்மார்க்கம் மேலோங்குகிறது. என்பதால்! தாங்கள் போற்றும் இலட்சியம் நாடெங்கும் பரவுவது கண்டு, பேரானந்தம், யூதாசும் ஆனந்தப்பட்டான். ஆனால் வேறு காரணத்துக்காக மற்றவர் களுக்கு 'இஷ்டபூர்த்தி' ஆயிற்றே என்ற திருப்தி யூதாசுக்கு மகிழ்ச்சி தான். ஆனால் அடங்காத பசி, இனிமேல்தான் தன்னுடைய ஆசை ஈடேற வேண்டுமென்ற ஆவல். அவனும், மற்றச்சீடர்கள் போலவே இரவு பகலாக ஏசுவுக்குத் தொண்டு செய்தான் - மற்றவர்கள் சன்மார்க்கம் தழைக்க வேண்டும் என்பதற்காக உழைத்தனர். - யூதாஸ், தன் குருதேவரின் புகழ் ஓங்கி, செல்வாக்கு வளர வேண்டும், பிறகு அதனை ஆதாரமாகக் கொண்டு ஐரோப்பா விலே பெரியதோர் அரசு அமைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு வேலை செய்தான்.

ஏசுவின் சொல்கேட்டு லட்சக்கணக்கான மக்கள் எதையும் செய்வர் என்ற நிலை பிறந்ததும் யூதாஸ், ரோம் சாம்ராஜ்யத்தைவிட ரம்மியமானதோர் ராஜ்யத்தை அமைத்துவிட வேண்டும். ஏசுவுக்கு முடிசூட்ட வேண்டும் என்றான். அலெக்ஸாண்டர் படை பலத்தால், அரசு அமைத்தான், அரசர்கள் பலப்பலர், செய்துள்ளனர். அதுபோல குருதேவர் ஏசு, களம்புக வேண்டியதுமில்லை; ஒரு வார்த்தை கூறினால் போதும். ஐரோப்பாவின் ஏகச்சக்ராதிபதியாகி விடலாம். அவ்வளவு அபாரமான செல்வாக்கு அவருக்கு உண்டு என்பதை யூதாஸ் அறிவான். அவன் எண்ணத்தையும் அறிவார். அறிந்தபோது சொன்னார். ''என் ராஜ்யம் இந்த லோகத்திலே அல்ல'' என்று. பிறகு யூதாஸ் ஏசுவைக் காட்டிக்கொடுத்தான். ஏசு அரசு அமைக்க விரும்ப வில்லை. காரணம், அவருடைய நோக்கம் அரசு அமைப்பதைவிட சிலாக்கியமானது, தூய்மையானது. அவர் நிரந்தர அரசு அமைத்து

விட்டார். பல அரசுகள் அவருடைய நிரந்தர ஆணைக்குத் தாமாக அடங்கி நடக்க முன்வந்தன.

பிற்காலத்தில் யூதாஸ் நினைப்பிலே, இங்கு பல ஜடாதாரிகள் உலாவினர். அவர்கள் தத்தமது குருமாருக்குள்ளே அமோகமான செல்வாக்கைக் கண்டு ஏன் நமது குருதேவர் கொற்றவனாகக்கூடாது. ஏன் கோலாகல வாழ்வில் இருத்தலாகாது. அரசுகள் கண்டு அஞ்சும் ஆற்றலைப் படைத்தும்,ஏன் தானோர் அரசு அமைக்காதிருக்கிறார் என்று எண்ணி ஆத்திரப்பட்டதுண்டு. அந்தக் குருமார்கள் ஏசு சொன்னது போல ''என் ராஜ்யம் இந்தப் பூலோகத்தில் இல்லை'' என்று ஞானோபதேசம் செய்யவில்லை. எவ்வளவு பித்தம் இந்த சீடனுக்கு. அரசு அமைக்காமலும், அமைத்த அரசு அழியாது பாதுகாக்க அல்லும் பகலும் பாடுபட வேண்டிய தொல்லை துளியு மின்றி, தூக்கமின்றிக் கிடந்த ராஜ்யத்தைக் கட்டிக் காவல் புரியும் பல காவலர்களை ஏவலராகப் பெற்றுள்ள இந்நிலையைச் சாமான்ய மென்று எண்ணுகிறானே இந்த ஏமாளி என்று எண்ணிச் சிரித்தனர்.

அந்தக் குருதேவர்கள் அரசுகள் அமைக்கவில்லை. ஆனால் ஏசு சொன்னதுபோல, இந்த அரசு அல்ல என் இலட்சியம் என்று ஞான மார்க்கம் பேசவுமில்லை. அரசுகளை ஆட்டி வைத்தனர். காய்ச்சி வைத்த பாலைப் பருகினர். அதிலே கற்கண்டு பொடி குறைவு என்று குறை கூறிக்கொண்டு! அரைத்து வைத்திருந்த சந்தனத்தை உடலெங்கும் அப்பிக் கொண்டனர். அரைத்த முறை அவ்வளவு சரியில்லை என்று கூறிக்கொண்டு, கோலம் துறவுதான்; ஆனால் குறைவற்ற இன்பத்தைக் கேட்டுப் பெற்றனர்.

ஏசு ராஜ்யம் வேண்டேன்.ஏனெனில் என் இலட்சியம் மனித சமாஜத்திலே தர்மராஜ்யம் ஏற்படுத்த வேண்டுமென்பதே என்றார். இந்தக் குரு தேவர்களும் ராஜ்யம் வேண்டாம் என்றனர். ராஜ்யம் கூடாது என்பதற்காக அல்ல. ராஜ்யாதிகாரிகள் தமக்குச் சேவை செய்யும் போது நாமே ராஜ்யம் அமைத்துச் சிரமப்படுவானேன் என்பதற்காக. பொது நலம் என் இலட்சியம். ஆகவே சுயநல நோக்கமாகிய இராஜபோகம் வேண்டேன் என்றார் ஏசு! இங்கே குருமார்கள் ராஜ்யம் வேண்டாம் என்று சொன்னது சுயநலம் கூடாது என்ற பெருநோக்கத்துடன் அல்ல, ராஜ்யத்தை ஆள்வதால் கிடைக்கக் கூடிய சுகத்தை அந்த ராஜ்யத்தை ஆள்வதற்காக எடுத்துக்கொள்ள வேண்டிய சிரமமுமின்றி அடையவேண்டும் என்பதற்காக, விதைக் காது விளையும் கனி இருக்க, விதைத்தால் மட்டுமே விளையக்கூடிய கழனியை யார் விரும்புவர்? இத்தகைய குருமார் கூட்டமே

பண்டைய நாட்களிலே கொற்றவர்களை எல்லாம் இங்கே ஆட்டிப் படைத்திருக்கிறது. அந்தச்சிறு கூட்டமே ஆரிய அதிகாரப்படி ரிஷிகள் 'தவசிகள்' முனிவர்கள் என்று அழைக்கப் பட்டது.

அயோத்தியிலே அரசாண்ட தசரதன் தன் ராஜ்யத்தின் பாது காப்புக்காகப் பயங்கரமாகப் போர் புரிந்தான். மற்ற மன்னர்களும், ஆனுல் வசிஷ்டன், தன்னுடைய குரு ஸ்தானத்துக்காகச் சிரமப்பட்ட தில்லை. எந்த காரியத்துக்கும், வசிஷ்டரின் ஆலோசனை கோரப் பட்டது. அவ்வளவு நிலை . 'வசிஷ்டர்' பெற்றது வாள் பலத்தாலா? இல்லை! அவருடைய நா அசைந்தால் எத்தனையோ நாட்டுப் படைகள், தசரதன் மீது போருக்குக் கிளம்பிவிடும்! எந்த ராஜ்யத் திலும், அவர் ' குரு ஸ்தானம்' பெற முடியும். எந்த அரசனையும் தன் ஒளி வழிக்கொண்டு செல்ல முடியும். ஆகையினாலேதான் அந்தச் சிறு கூட்டத்தைச் சார்ந்தவர்கள் அவசியமற்ற தொல்லை வேண்டா மென்று கருதி, அரசுகளை ஆளும் பொறுப்புள்ள காரியத்தைத் தானே மேற் போட்டுக் கொள்ளாமல், மற்றவர்களை அந்தப் பொறுப்பு என்ற பாரத்தைச் சுமந்துகொள்ளச் செய்து அவர்களுக்குப் பக்கத்தில் இருந்துகொண்டு ''அரசே! இப்படிச் செய்வதே முறை! இது தகாது!'' என்று உபதேசித்துக் கொண்டும் எச்சரிக்கை செய்து கொண்டும் வாழ்ந்தனர். அரசர்கள் அரசுகளை ஆண்டனர். ஆரிய குருமார்கள், அரசுகளை ஆண்டுவந்தனர். இந்த முறை அயோத்தி அரசியலில் மட்டுமா? எங்கும்! அந்நாள் மட்டுமா! இந்நாளும் இப்போதும் திருவிதாங்கூரின் திவான்ஜீக்குத் திருப்புகழ் பாடும் அளவுக்கு மன்னருக்குப் பாடுகிறுர்களே! திவனுடைய திருக்கல்யாண குணங்களைப் பாராட்டுகிற அளவுக்கு மன்னருக்கு உண்டா? மன்னரும் இருக்கிற பெருமைகளில் ஒன்ருகவன்றோ, மதியூகியும் வீரருமான சச்சிவோத்தமர் சர்.ஸி.பி. இராமசாமி ஐயரைத் திவானாகக் கொண்டிருக்கிறுர் என்ற செய்தி கூறப்படுகிறது. இந்தச் சூக்ஷ்மம், அந்த நாள் தொட்டுத் தெரியும் அந்தச் சிறு கூட்டத்துக்கு. ஆகவேதான், அன்றுமுதலே, அரசர்களாகி விடுவதைவிட, அரசர்களை ஆட்டிவைப்பது மேல் என்ற தந்திரத்தைக் கையாண்டனர். அரண்மனை வாசியைத் தாசனாகக் கொள்வது யுத்தம் என்று கருதினர். முக்கனி தேடி அலைவதைவிட, தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாகக் கூட்டித் தருவதற்குத் தக்கதோர் சீடனைப் பெற்று விடுவது அல்லல் இல்லாத ஆனந்தமல்லவா? அது அவர்களுக்குத் தெரியும். அந்த நாட்களிலே, ஆஸ்ரமங்களிலே, யூதாஸ்போல இருந்த சந்தேகிகளின் எண்ணத்தைக் குருமார்கள்

எப்படிப் போக்கினர் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம்.

கங்கைக்கரை! ஆங்கோர் ஆஸ்ரமம்! பிரவாகத்தின் சத்தம். அதனுடன் போட்டியிடுவது போன்ற வேதவுரு மற்றோர்புறம்! இயற்கை எழில், புள்ளிமான் துள்ளி விளையாடுகிறது! குயிலின் கீதம், மயிலின் நடனம்! மரக்கிளைகளெல்லாம் மதுரத்தைப் பொழிந்து கொண்டு விதவிதமான பட்சிகள். ஒரு சிறு பரிவாரம் வேதத்தைப் பாராயணம் செய்து கொண்டு. அவர்களுக்கு ஒரு குரு. இகத்தில் லயிக்காமல் பரத்தைப் பற்றிய எண்ணத்தில் ஈடுபட்டனர். அவர் உடலில் பொன்னாபரணமோ, சிரத்தில் மணிமுடியோ கிடையாது. ஆஸ்ரமத்தருகே இரத, கஜ, துரக, பதாதிகள் கிடையாது. சீடர்களிடம் வாள் வேல் கிடையாது. உடலிலே தழும்பு கிடையாது! உள்ளத்திலேயோ, உலகின் முதல்வனை உணர வேண்டும். அதற்கு என்ன வழி என்பதன்றி வேறு கவலை கிடையாது. அதே நேரத்தில், டில்லியில் மகோன்னதமான மாளிகை, அதற்கருகே பாசறை, அங்கே போர் பயிற்சியிலே ஈடுபட்ட பல்லாயிரவர்! அவர்கள் உடலில் தழும்புகள், மாளிகைக்குள்ளே மன்னன்! அவன் முன் பல்வேறு நாட்டு ஒற்றர்கள். அவர்களிடம் தத்தமது பார்வையிலே விடப்பட்ட பிரதேசங்களிலே உள்ள பூபதிகளின் படைபலம் நோக்கும் நிலைமை ஆகிய தகவல்களைத் தரும் ஓலைகள்! இந்த இரு இடங்களிலே எங்கு இருந்தவருக்குச் சுகம்? ஆஸ்ரமத்தின் மீது ஆஸ்ரமம் படை எடுக்காது! சதுர்க் கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு அரண்மனையைத் தரைமட்டமாக்க அதே சமயத்திலே, வேறோர் அரண்மனை சதி ஆலோசனை மண்டபமாக மாறி இருக்கும்! ஆஸ்ரம வாழ்வு' அரண்மனை வாழ்வு இரண்டிலே எது விதைக்காது விளையும் கழனி?.

கங்கைக் கரையிலே, (கங்குபட்டர்) காகபட்டர் என்ற குரு கொலுவீற்றிருக்கிறார் ஆசிரமத்தில்! அவருக்குக் கவலை ஏது? டில்லியிலே அதே போழ்து அவுரங்கசீப் இருக்கிறார். அரண்மனை யிலே அவருக்கு எவ்வளவு அல்லல், தொல்லை, ராஜகிரியில் ஒரு அரண்மனை. அதைச்சுற்றிலும் அசகாய சூரர்கள், அவர்களின் தலைவர் சிவாஜி. அவர் அரண்மனைக்குள்ளே இருக்கிறார். அவருடைய நினைப்பு முழுவதும் அவுரங்கசீப்பின் படைபலத்தின் மீது! அவுரங்கசீப்பின் எண்ணம் யாவும் மலர்ந்த மராட்டியம் டில்லிவரை பரவுகிறதே என்பதே பற்றி! இரு இடங்களிலும் இருந்த படை வீரர்களின் பேச்சு, இன்னின்ன போது இன்னின்ன ஆபத்துக்கள், இப்படி இப்படித் தப்பினோம் என்பது பற்றி

கண்ணிழந்த தம்பி, கை இழந்த அண்ணன், காலிழந்த மாமன், உயிரையே இழந்த உத்தமர்கள் இவர்களைப் பற்றியே பேச்சு, நடந்த சண்டைகள், இடிந்த கோட்டைகள், ஒடிந்த உள்ளங்கள், அழிந்த குடும்பங்கள் ஓடிய இரத்த வெள்ளம்; இவை பற்றிய உடையாடல் மட்டுமா? இனிவர இருக்கும் இன்னல், மூள இருக்கும் போர், அதிலே ஏற்படஇருக்கும் ஆபத்து இவை பற்றியும் பேச்சு. ஓயாத தொல்லை! தீராத கவலே. தழும்பு நிரம்பிய சடலம்! இவை அரண்மனைகளிலே, ஆஸ்ரமங்களிலே. எரியாத அகில் தேயாத சந்தனம் இருக்கக்கூடும். புரியாத மந்திரங்களை உச்சரிக்கும் மதி நிறையாத சீடர்கள் உலவக்கூடும்! வாழ்க்கையின் வேதனையோ, மாற்றானின் விரோதமோ இராது. அது மகிழ்ச்சி மாளிகை! அரண்மனையோ மனதை மருட்டும் இடம்! எனவே தான் கங்குபட்டர் டில்லியிலே இருந்த அவுரங்கசீப்பைப் போலவோ, ராஜகிரியில் இருந்த சிவாஜியைப் போலவோ மணிமுடி தரித்துக் கொள்ளும் மன்னனாக இருக்கும் தொல்லையான பதவியைத் தேடவில்லை. மாறாக மணிமுடி தன்முன் மண்டியிடச் செய்தார்!

'' குருதேவா!குதிரை வீரர்கள் யாரோ வருவது தெரிகிறதே! ''

''வரட்டுமே! இங்கே எந்தக் கோட்டை இருக்கிறது; அவர்கள் தாக்க, பிடிக்க. போரிடுவதற்கு இதுவா இடம்? இது பூஜா மடம்! இங்கே வருபவன் பூஜைக்கு வருவான்; வேறு காரியத்திற்கு இதுவா இடம்!''

'' எந்த நாட்டவரோ?''

''யாராக இருந்தால் என்ன? நாம் என்ன ஒரு நாட்டுக்கு அரசரா, மற்ற நாடுகளைப்பற்றி சந்தேகிக்கவோ, பயப்படவோ?'' சஞ்சலப் படும் சீடனைத் தேற்றிவிட்டு, குரு சாவதானமாகத் தன் காரியத்தைப் பார்க்கிறார். குதிரை வீரர்கள் ஆசிரமத்துக்குக் கொஞ்சம் தொலைவிலேயே குதிரைகளை விட்டுக் கீழே இறங்கி பயபக்தி யுடன் நடந்துவருகிறுர்கள். குதிரைகளை மரத்திலேயே கட்டிவிட்டு, ஆச்சிரமத்துக்குள் நுழைந்து, கங்குபட்டர் முன் வணங்கிப் பணிவுடன் கூறுகிறுர்கள்; ''குரு தேவா! தாங்கள் தயைகூர்ந்து ராஜகிரி எழுந்தருள வேண்டும். மராட்டிய வீரர் சிவாஜி தங்கள் தரிசனத்துக்காகவும் தங்கள் யோசனையை ஒரு முக்கியமான விஷயம் பற்றிக் கேட்கவும் ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறுர்'' என்று கூறுகின்றனர். இந்த நிலையில் அரண்மனையில் அரசனாக வேண்டும் என்ற எண்ணம் உப்புச்சப்பற்றது என்று யாருக்குத்தான் தோன்றாது! மாவீரன் சிவாஜி. மராட்டியத்தின் மாணிக்கம். மொகலாய

சாம்ராஜ்யமே அவன் பெயரைக் கேட்டு கொஞ்சம் நடுங்குகிறது. அவன் தன் வாள் பலத்தால் ஒரு அரசு அமைத்திருக் கிறான். அவனுடைய கட்டளையை எதிர்பார்த்து இலட்சக்கணக்கானவர்கள் உள்ளனர். அவன் பொருட்டு களத்திலே உயிரைவிட்டவர் பல்லாயிரவர். மராட்டியம் மனைதோறும் ஓர் மாவீரனைத் தந்தது. அப்படிப்பட்ட சிவாஜி. அழைக்கிறார் கங்குபட்டரை. '' தரிசனம் தருக! யோசனே அருளுக!'' என்று அவருடைய வேண்டுகோளைத் தாங்கிக் கொண்டு வீரர் இருவர் வந்துள்ளனர். வெற்றிக்களை முகத்தில் வீச, அது சமயம் கங்குபட்டர் தமது சீடர்களைப் பார்த்திருக்கமாட்டாரா? அந்தப் பார்வையின் பொருள் என்ன? 'எதற்கடா மண்டுகளே! நமக்கு அரசு? அரசாள்பவன் நமது அடிப்பணியச் சித்தமாயிருக்கும்போது நான் ஏன் அரசமைக்க வேண்டும்'' என்பதுதானே?

''என்னடா இது , தவளே மாதிரி கத்திண்டிருக்கே?''

''யஜுர்!''

''எந்தச்சனியனுவது இருக்கட்டும்! மனதிற்குள்ளே சொல்லிக் கொள்ளேன். மகாபெரிய ஞானஸ்தராகப் போகிறுரோ? அப்படித் தான் பிரகஸ்பதி ஆகிவிடுவதாகவே வைத்துக்கொள், என்ன பலனைக் காணப்போகிறுய்? ஆஹா ஊ ஹுன்னு கூவினதுதான் மிச்சம் வா! கொஞ்சநேரம்போய் விசாந்தியாய் உலாவிக் கொண்டிருப் போம்; சரி வா போவோம். நேக்குக் கொஞ்சம் தலையை வலிக்கிறது'' இதுபோல் சீடர்கள் பேசியிருப்பர். கங்கைக்கரையிலே உலாவும்போது,உலக விவகாரங்கள் ஊர் ஏளனம் பல்வேறு நாட்டு நடவடிக்கைகள் பற்றி பேசிக்கொண்டிருக்கும் போது, அவர்களுக்கு அரண்மனேகள், அங்கு வாழ்வுக் குஷி இருப்பது முதலியன பற்றிய நினேப்பு வரத்தானே செய்யும்! '' சாமான்யர்களெல்லாம் எவ்வளவு சம்பத்துடன் வாழ்கிறா, அவர்களுக்குச் சகலமுந் தெரியாது. அவாளெல்லாம் அரண்மனைகளிலே வாசஞ் செய்கிறா. நந்தவனங்களிலே உலாவிண்டு அப்சரசு போன்ற ஸ்திரீ ரத்தினங்களோடு சரசமாடிண்டு, சௌக்கியமா, உல்லாசமா காலங்கழிக்கிறா?'' என்று கூறிப் பெருமூச்சு விடுவார் ஒரு சீடர். 'ஆம்! அதனாலென்னடா? அதற்குத்தான் ராஜபோகம்னு பேர்!' என்று மற்றவன் பதில் கூறுவான். சஞ்சலப்படும் ரங்குவை கங்குபட்ட ரிடமே இழுத்துவிட்டு விடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். உரையாடல் எப்படியிருக்கும்? கங்குபட்டர் தன் சீடன் அசடனாக இருப்பதைக் கண்டு பரிதாபப்பட்டு அவனுக்கு விளக்கம் பிறக்க உபதேசிப்பார்.

கங்கு: டே ரங்கு! என்னடா இது அரண்மனையிலே வாழ்கிறாளே, அப்சரசுகளே உலாவுகிறாளே என்று ஏதேதோ பேசிக் கொண்டிருந்தாயாமே?

ரங்கு: இல்லை ஸ்வாமி! ராஜாதி ராஜாக்கள் அனுபவிக்கும் போகமிருக்கே, அதைப்பற்றி அடியேன்...

கங்கு: ஆமாம் ராஜபோகம்னே அதற்குப் பெயர் இருக்க! விளக்கம் எவ்வளவு கூறினோம்? அரசபோகத்திலே ஆசைகொண்ட சீடனுக்குத் திருப்தி ஏற்படாது; ஆகவே, அரசபோகத்தைவிட ஆசிரியருக்குள்ள யோகம் சிலாக்கியம் என்பதை நடவடிக்கையிலே காட்டவேண்டும் என்று எண்ணிய கங்குபட்டர், '' அசடே! உன் சந்தேகத்தைப் போக்குகிறேன் ராஜகிரி நகரிலே! '' என்று கூறிவிட்டு அழைத்துச் சென்றிருப்பார்.

கங்கைக்கரையிலே இருந்தவர்கள் அரசர்களை அடிபணியச் செய்யும் நிலையில் இருக்கும்போது அவர்கள் ராஜகிரியில் அரண்மனையில் உலாவும் அரசராகப் பிறக்கவில்லையே; அல்லது அரசன் ஆகவில்லையே என்று கவலைப்படக் காரணம் உண்டா? நமது வார்த்தையை ஆசீர்வாதத்தை! கட்டளையை - எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் - சிவாஜி. நாம் இஷ்டப்பட்டால் மட்டுமே அரியாசனம் ஏறமுடியும். அவனிடம் அரசு இருக்கிறது. அரசைக் காப்பாற்றிக்கொள்ளும் ஆற்றலும் இருக்கிறது. இருந்தும் நான் யார் ஒரு ஆரியன்! அசகாய சூரன்! வாள் உண்டு அவனிடம். ஆனால் என் வார்த்தை அவனுக்குக் கிடைத்தால்தான் அவன் மன்னனாக முடியும்! என்று அந்த ஆரியன் எண்ணாதிருப்பானா? எண்ணும்போது அந்த உள்ளத்திலே எவ்வளவு ஆனந்தம் ஏன்? ஆணவம் பிறந்திருக்கும்! ஆற்றங்கரையிலே ஆரியன் உலாவும் அதே நேரத்தில் அரண்மனையிலே உலாவும் சிவாஜியின் மனதிலே எவ்வளவு சோகம்- சஞ்சலம் சந்தேகம் பிறந்திருக்கும். ''அவர் என்ன சொல்கிறாரோ- ஆசீர்வதிப்பரோ - முடியாது'' என்று எண்ணிக் கவலையில் மூழ்கியிருப்பான். இவன் சிரத்திலே முடி இருக்கும் ஆரியன் அனுமதித்தால், இந்த நிலை கிடைக்கும்போது ஆரியன் ஏன் அரசப்பதவியை அலட்சியமாகக் கருதமாட்டார்கள்?

''பாரடா மண்டு, பார்! பார்! நமக்கு நடக்கும் இந்த ராஜோபசாரத்தை! ராஜகிரியில், யார் இப்போது உண்மையான ராஜா! என் முன்பு வீழ்ந்து வணங்குபவன் ஒவ்வொருவனும் அசகாய சூரன், யுகத்திலே ஜெய வீரன், எதிரிக்கு மார்காட்டத் தயங்காத தீரன், ஆனுல், இவர்களின் தலைவன் இனி நமக்குச் சீடன்!'' என்று

ராஜகிரியிலே வரவேற்கப்பட்ட வைபவத்தின் போது ஆரியக்குரு எண்ணாமலிருப்பானா! வீராதி வீரனானாலும் வேதியருக்கு அடங்கியே தீரவேண்டும், என்ற வேத நீதியை வேதியர் புகுத்திய நியதியை, வரணாஸ்ரம முறையை, சனாதனச் சட்டத்தை, அந்தச் சமயம் அவர் போற்றாது இருந்திருப்பாரா? அந்தச் சட்ட மல்லவா ஆஸ்ரமவாசியை அரண்மனைக்கே அதிகாரியை நியமிக்கும் உயர்தர அதிகாரியாக்கி வைத்தது, படைவீரனும் இராஜியை படைபலம் அற்றவனிடம் பணியவைத்தது. வாள் ஏந்திய வீரனைத் தன் தாள் பணியச் செய்தது மனுவின் மகிமையால் அல்லவா, மண்டலாதிபதி மண்டியிடுகிறான் என்று எண்ணி அந்த மறையோன் மகிழ்ந்திருப்பான். 'அசடே! அரசு வேண்டும் அரசனாக வேண்டும் என்று அற்பத்தைத் தேடாதே. அரசகளை ஆட்டிவைக்கும் அதிகாரம் நம்மவரிடம் இருக்கும் வழியைநாடு. அதற்கான புராதன இதிகாசாதிகளைப் பரப்பு! மக்களை அவைகளிலே நம்பிக்கை கொள்ளும்படி செய்! அரசர்கள் பிறகு உன் அடிமைகள்! அரசபோகத்தை அடையலாம். அதற்கான பொறுப்பும் உன்னை அண்டாது. ஆரியனை! அரசனாக வேண்டும் என்று ஆசைபடாதே, அரசன் ஆரிய தாசனாக வேண்டும் என்று ஆசைப்படு. அதற்காக வேத புராண இதிகாசங்களைப் பரப்பும் காரியத்தை விடாமல் செய்!'' என்று கங்குபட்டர் தமது சீடர்களுக்குப் கூறாது இருப்பாரா? அவ்வளவு நாட்களுக்கு முன்பு இருந்தவரின் எண்ணம் கிடக்கட்டும். நமது கண்முன்னே உள்ள ஆச்சாரியார், இப்போது கூறுகிறாரே, ''பிராமணர்கள் தங்கள் குடும்பத்திலே கட்டாயம் ஒரு பிள்ளையை வேதம் படிக்க அனுப்பி விடவேண்டும்'' என்று ஏன் கூறுகிறார் அது போல்? அவருக்குத் தெரியும் விதைக்காது விளையும் கழனி என்று!!

★★★

வேமன்னா

மூடநம்பிக்கையை எதிர்த்து, நடத்தப்பட்ட புரட்சி. கலைத் துறையிலே, அடிக்கடி நடை பெற்றிருக்கிறது. ஆந்திர நாட்டிலே அதற்கு அடிபணிய மறுத்து, சிந்தனைச் சுதந்திரத்திற்குப் பாடுபட்ட பெரியோர்களில் வேமன்னா மிக முக்கியமானவர், அவர், மதத் தரகர்களின் மாயாவாதத்தைக் கேட்க மதிமயங்கியவர்களின் ஏமாளித்தனத்தையும் கண்டித்தார். ஜாதிமத பேதத்தைச் சாடினார். சமரச கீதத்தையும் பாடினார். புரட்சி அவருக்கு அப்படி! அச்சமின்றி அவைகளைக் கண்டித்தார். மதத்தின் பெயர் கூறிக்கொண்டு சடங்கு,

சாஸ்திரம் சம்பிரதாயம் என்று பழமையை பிடித்துக் கொண்டு, பாழ்படும் பாமர மக்களைத் தட்டி எழுப்ப எளிய இனிய கவிதை களைப் பொழிந்தார்.

''இன்ன அவதாரமெடுத்தவனே! இவ்வளவு உயரம் இருப்போனே! இரண்டு மனைவிகள் உடையவனே! மலையைத் தூக்கியவனே! மாடு ஏறினோனே'' என்ற முறையிலே, கடவுளின் உருவம், திருவிளையாடல் ஆகியவற்றையே பாடலாகக் கேட்ட மக்களுக்கு, வேமன்னாவின் பாட்டுக்கள் வெடிகுண்டுகள் போலிருந்தன. உண்மையிலேயே, வேமன்னாவின் பாடல்களின் போக்கு, மூடக்கொள்கை கோட்டைகளைத் தாக்கித் தகர்த்திடும் வெடிகுண்டுகள்தான். அவருடைய கவிதைகள், கடவுளைக் குறித்துக் கபடர்கள் கட்டிவிட்ட மட்டரகமான கதைகளைக் குப்பை மேட்டுக்குக் கொண்டு சென்றன! தொழுது கிடந்தவர்களை, அவர் தமது கவிகளைப்பாடி மூடக்கொள்கைகளின் புரட்டை விளக்கி, மக்களை விடுதலை அடையச் செய்தார். அவருடைய கவிதைகளிலே அறிவுமணமும் புரட்சித்தீயும் கலந்து இருந்தன. அவ்வளவுடன் அகராதியைத் துணை கொண்டோ, புலவர்களிடம் பாடம் கேட்டோ மட்டுமே புரிந்து கொள்ளக்கூடியதான, கடின நடையாக அமையாமல் படித்ததும் பாமரரும் எளிதில் உணர்ந்த கொள்ளக் கூடிய நடையாக இருந்தது. எனவே வேமன்னாவின் கவிதை, புலவர்களின் பூசலுக்கேற்ற ஏடாகவோ, பூஜை அறைக்குகந்த நூலாகவோ, பயனற்றுப் போகாமல் சாதாரண மக்களுக்கும் பயன்படக்கூடிய, சத்துள்ள ஏடாயிற்று. பூசி மெழுகுவதும், புறங்கூறிப் பார்ப்பதும் பல பொருளுக்கு இடமிருக்கச் செய்வதன் மூலம், உண்மைப் பொருளை மறைப்பதுமான வேலையை வேமன்னா வெறுத்தார். மனதிலே பட்டதை வெட்டொன்று துண்டு இரண்டென வெளியிட்டார். வெகுண்டனர் பழமைவாதிகள். பாமரரோ பயன் பெற்றனர். விடுதலை வீரனாம் வேமன்னாவின் கவிதை நுழையாத வீடில்லை. அவருடைய வாதத்தை மறுத்துரைக்க எந்தப் புலவருக்கும் துணிவில்லை! தன்மானத்தீயைப் பரப்பிக் கொண்டிருந்தார். மெய்யறிவொளி மன்னன் வேமன்னா.

உரிமைப்போர் உணர்ச்சி மிகுந்து விடுதலை வேட்கை அதிகரித்து, எதையும் ஆராய்ந்தறிய வேண்டுமென்ற ஆர்வம் மிகுந்திருக்கும் இந்நாளிலே, நாம் மிகச் சுலபமாக ''ஜாதி இல்லை! மதபேதம் ஒரு தொல்லை! கடவுள் பேரைக் கூறி சிலர் ஏய்ப்பர். கேளாதீர் அவர் சொல்லை! பிறப்பினால் உயர் வு தாழ்வு இல்லை'' என்று கூறிவிடுகிறோம். பழமையைக் குட்டுகிறோம். இன்னும்

சிலர் நமது பிரசார வேகத்தைக் கண்டு, பீதி கொள்கின்றனர். மக்களின் மனம் புண்ணாகும் என்று சொல்கின்றனர்., ''மெள்ளச் சொல்லு'' கொஞ்சம் கொஞ்சமாகச் சொல்லு'' என்று நிதானம் பேசச் செய்கின்றனர். இன்னும் சிலர் '' எப்படி அந்தக் காலப்பெரியவர் களின் முறைகளைக் கண்டிக்கலாம்? இன்று நேற்று ஏற்பட்டதா, அந்தமுறை?'' என்று பழமைக்குப் பரிந்து பேசுகின்றனர்.

வேமன்னா 500 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர். அந்த நாளிலே அவர், இன்று நாம் கூறும் புரட்சி உரைகளை, அஞ்சாது அயராது எடுத்துக் கூறினார் என்பதை நாம் அறியும்போது, நாம் ஆச்சரியப்படுகிறோம். அவர் எவ்வளவுபெரிய வீரர் என்பதை உணர்ந்து வியப்படைகிறோம். விஜய நகர சமஸ்தானாதிபதிகளால்; வளர்க்கப்பட்டு மத ஆதிக்க மூடபக்தி ஆந்திரத்திலே கொழுத்ததை வரலாற்றிலே காணலாம். அப்படிப்பட்ட ஆந்திரத்திலே ஒரு வேமன்னா தோன்றி அஞ்சா நெஞ்சினராக நின்று மூலக்கொள்கை களைக் கண்டித்தாரென்றால், அது வெறும், ''விவேகி'' என்ற பட்டத்தை மட்டுமல்ல, ''வீரர்'' என்ற விருதையும், வேமன்னா பெற யோக்கிதையுள்ளவர் என்பதே விளங்குகிறது. பேச்சுச் சுதந்திரமும் எழுத்துச் சுதந்திரமும் அணியாக உள்ள அரசு இப்போது உண்டு. அன்றோ அப்படியில்லை. மூடநம்பிக்கையைக் காரசாரமாகக் கவிபாடிக் கருவறுக்கக் கடும் போரிட்டார் வேமன்னா.

அவர் கொண்ட வீடு, அரச குடும்பத்தவர் வழித்தோன்றல் என்றும், ரெட்டியார் வகுப்பென்றும், இளமையிலேயே மெய் யறிவுப் பிரசாரத்திலே ஈடுபட்டுத் துறவியாகி குண்டூர் மாவட்டப் பகுதியிலும் மற்றைய இடங்களிலும் வாழ்ந்தார் என்பதன்றி விரிவான வரலாறு கிடைக்காமல் போய்விட்டது. கர்ண பரம்பரைக் கதைகள் உண்டு. ஆனல் குறிப்பான வரலாறு இல்லை அவரைத் தெரிந்து கொள்ள. வரலாறு இல்லையே என்பது பற்றிய கவலை தேவையில்லை. ஏனெனில் அவருடைய கவிதைகள், நமக்கு அவரை நன்கு காட்டுகின்றன. ஏறக்குறைய 300 கவிதைகள் மிஞ்சியுள்ளன.

''இருட்டறை தன்னிலே இட்ட கல்லை
எட்ட நின்று பூசை செய்யும் மட்டிகளே!''

உள்ளிருக்கும் நாதன் தன்னை உணராதது ஏனோ?'' என்று கேட்கிறார் வேமன்னா! இருட்டறை கோவில். அதிலே இட்டகல், சாமி! இதை தொழுதவர் அறிவிலிகள்! ஏன்? ஆண்டவனுக்குக் கோவில் வெளியே இல்லை; உள்ளமே அவனுக்கு உறைவிடம்! இது வேமன்னாவின் கவிதை! ஒவ்வொரு கோயிலுக்கு எத்தனை

''மகத்துவங்கள்'' கற்பிக்கப் பட்டிருக்கின்றன! இதை நம்பிக் கொண்டு எத்தனைபேர் ''யாத்திரை'' போகிறார்கள்! இதனால், பரம்பரையாக எவ்வளவு பேர் பிழைக்கின்றனர்! இந்தப் பிழைப்பின் வாயிலே, மண் போடுமல்லவா, வேமன்னா சதகம்!

''அட முட்டாளே! அங்கே போய்க் கல்லைக் கும்பிடுவானேன்? ஆண்டவன் தான் உன் உள்ளத்தில் இருக்கிறானே!'' - என்று கேட்கும்போது, அது பாமர மக்களின் மனதிலே பாய்கிறது. முதலிலே கொஞ்சம் யோசிக்கத் தொடங்கியதும், 'ஆமாம்! வேமன்னா சொன்னது உண்மைதான்!' என்று உணருவர், அத்தகைய உயர்ந்த கவிதை அவருடையது.

பல தெய்வ வணக்கத்தையும், ஜாதிபேதத்தையும் வேமன்னா கண்டித்துப் பாடியுள்ளவைகளிலே, ஒரு சிலவற்றைக் கீழே பொறித்துள்ளோம். படித்து இன்பம் பெறுக.

மூடக்கொள்கைக்கு எதிர்ப்புணர்ச்சி ஆந்திரத்திலே இருக்கிறது. இன்றும் இருக்கிறது. 'வேமன்னா வாழ்ந்த நாட்டிலே ஈரோட்டு விதை' எளிதில் பலன் தரும்! எள்ளளவும் சந்தேகம் வேண்டாம். காவி அணிந்தவர்களைக் கண்டால் இன்று, சர்வ சாதாரணமாகக் கேலி செய்யுமளவு, மக்களிடை மதி மலர்ந்திருக்கிறது என்ற போதிலும் '' என்னமோ யார் கண்டார்கள்! என்னமோ சித்து விளையாடக் கூடியவராக இருக்கவும் கூடும்! யோகாசனத்திலே நிபுணராக இருப்பர்'' என்று, பாமரர் மனதிலே, ஒரு சபலம் தட்டுவதும் இருக்கிறது. இப்படிப்பட்ட மக்கள் வேமன்னாவின் காலத்திலே, இன்று இருப்பதைவிட எவ்வளவோ அதிகமான அளவு காவியிடம் மதிப்பு வைத்திருப்பர். வேமன்னா, அந்தக் காலத்திலே காவி வேடதாரிகளைக் கண்டித்திருக்கும் பாடல்கள் பல! நிரம்ப நெஞ்சழுத்தம் இருந்திருக்க வேண்டுமல்லவா? அதற்கு வேமன்னா வீசும் வெடிகுண்டுகளைப் பாருங்கள்.

''பரிவுடன் நீரில் மூழ்கிப் பட்டையாய் நாமம் சாற்றி
அரியநற் காவியாடை யன்புடன் பூண்டு நன்றே
அரிசனம் உடலிற் பூசும் அரிவையர் வதனங்கண்டால்
உரமிலாராகித் தான் கொள் உறுதியும் இழப்பர் வேமா.?''

மனக்கண்முன் வருகிறானல்லவா. பட்டை நாமப் பூச்சுக்காரன்! அவனுடைய சேட்டையைத்தான் கேட்டிருப்பீர்களே. பாருங்களேன் மேலும், அவன் வேமன்னாவிடம் சிக்கிப் படுகிறபாடு எப்படியாயிருக்கிறது என்று.

'' காவி சேராடை தன்னைக் கண்ணியமுடனே பூண்டு
மேவிய யோகி போன்று மேதினி தன்னிற்றோன்றி
பாலிய ஆசை என்னும் பற்றற்றுத் திரிகின்றோனே
தாவிலா தோங்கும் கள்ளச் சன்யாசி யாவன் வேமா.''

சுமை தாங்கிகளே! - என்று கேலி செய்கிறார். காவி உடையினரை! கேளுங்கள் இந்தப் பாட்டை.

'' புத்தகம் சடையும் தண்டம்
புலியின்தோல் கமண்டலத்தை
இத்தரை யோர்கள் காண
ஏற்றமாய்ச் சுமப்பர் என்றும்
சுத்தம் உள்ளத்தில் இன்றிச் சுமந்து
இவைதிரியின் மேலாம்
முத்தியிற் கூடல் உண்டோ
முன்னிடின் இவர்கள் வேமா''

விடுகிறாரா இத்தோடு! இல்லை. அந்தச் சுமை தாங்கிகளைப் பிடித்திழுத்து வந்து, நம்முன் நிற்க வைத்து அவர்களின் மொட்டைத் தலையிலே குட்டுகிறார்! பாருங்கள் வேடிக்கையை!

'' காட்டினில் இலைகள் தின்றும்
காஷாயம் மெய்யில் பூண்டும்
நாட்டமாய் தலையில் மொட்டை
நலமெனச் செய்தும் என்ன?
ஏட்டையாய் மொட்டை செய்யின்
எண்ணங்கள் மொட்டையாமோ?
வேட்டலை அகற்றின் மேன்மை
மேவிடும் மேலாய் வேமா!''

''சுமை தாங்கியே! இதென்ன கோலம்? ஏன் காஷாயம் தரித்தாய்? ஏன் மொட்டை அடித்துக் கொண்டாய்?'' என்ற கேள்விக்கு, மொட்டைச்சாமி என்ன பதிலளிப்பான் ! ''மோட்சம் போக இக்கோலம் கொண்டேன்'' என்று கூறுவான், வேமன்னா, ''தலையை மொட்டை அடித்துக் கொண்டாயே தவிர, ஆசையை விட்டாயா? அலைகிறாயே அலையும் மனதை அடக்கக் கற்றுக் கொண்டாயா? இச்சையற்றால் மேன்மை வந்து சேருமே! இப்படி மழுங்க மொட்டை அடித்துப் பயன் என்ன?'' என்று கேட்கிறார். பரிதாபம்! அந்த வேட்டைக்காரன் என்ன பதில் கூற முடியும்! 'சாயம் வெளுக்கவே சங்கரா' என்றுதான் அழவேண்டும்:

'' உடலினில் நீறு பூசிச் சடைகளைப்
புனையி னும்தன்
உடையனாம் பரனைக் காணும் உரிமையை
எய்தான் எய்தான்
கடலினைக் கொண்டும் சாத்தின்
பலம் உறும் கதவு அதுவாமோ
திடமுறின் சிந்தை தன்னில் சீருறப்
பெறலாம் வேமா!''

''மனதை அழுக்கேறச் செய்யாதே! திட மனது பெறு அதுதான் சீருற வழி, இந்த வேடமல்ல, '' என்று உபதேசிக்கிறார், அந்த உண்மை யுணராது காவி பூண்டவர்க்கு.

அத்தகைய காவி வேடதாரிகளுடன் சேராதீர் என்று மக்களுக்கு வேமன்னா மதி புகட்டுகிறார்.

''சாமியார் எனக் கூறிக்கொள்ளும் வேடதாரிகள் சிலர்
திரமிலாச் செல்வம் தன்னைத் திரமென மனதில் எண்ணி
உரமிலா மனிதர் தம்பால் உறுபொருள் பறிப்பர் இந்த
தரமிலா மோசம் செய்யும் சழக்கரை சாரேல் வேமா.''

காணிக்கை கேட்கும் சாமியார்களும், பாத பூஜை செய்து 'பிச்சை' இடும் சீடர்களும் கேட்கவேண்டும் இப்பாடலை.

மக்களிடம் பணம் கேட்பர், அந்த சாமியர்கள்! எப்படிப்பட்ட மக்களிடம்? உரமிலா மனிதரிடம், மனவலிவில்லாத மாந்தரிடம், பணம் எப்படிப்பட்டது? உரமில்லாதது! பாழான பணத்தைப் பாமரரிடமிருந்து பறிப்பர், சாமியார்கள் என்று கூறிக் கொள்பவர்கள். அவர்களை வேமன்னா கடிந்துரைப்பதைக் கேளுங்கள், ஆண்டி வேடம் பூண்டு, அகப்பட்டவரிடம் பொருள் பறிக்கும் அவர்கள் வேமன்னாவிடம் வெகு பாடுபடுகிறுர்கள்! '' இந்தக் கயவர்களிடம் சேராதே!'' என்று வேமன்னா மக்களுக்குப் புத்தி புகட்டுகிறார்.

தீர்த்த யாத்திரை போவது, மூர்த்தி ஸ்தலங்களைத் தரிசிப்பது, என்ற வழக்கத்தை வேமன்னா சாடுகிறார் பலமாக இவைகளால் ஒரு பலனுமில்லை என்று விளக்குகிறார். மோட்சம் போக அது மார்க்கமல்ல என்று இடித்துரைக்கிறார். பாருங்கள் பாட்டை.

'' காசியும் மதுரை தானும் காஞ்சியும் கயை பிரயாகை
பேசிடும் அயோத்திதானும் பிறங்கிடும் சேதுதானும்
நேசமாய் உடலின் உள்ளே நிலவிய தன்மை பாரார்
ஆசையாய் நதிகள் தேடி அலேவது ஏன் மாந்தர்வேமா''

உருவ வழிபாட்டை வேமன்னா உரமாகக் கண்டிக்கிறார். ''கல்லாலான உருவத்தை கடவுளென்று தொழுகிறாயே. என்ன மதி இது?'' என்று கேட்கிறார், நையாண்டி செய்கிறார்.

'' சிலைதனைக் கொண்டு மாந்தர் சீருறக் கோயில்கட்டி
சிலைதனை வேறென்றுஉள்ளே சிவன் எனத் தெரியவைத்து
சிலைதனைச் சேவை செய்யின் சிறந்திடும் பலன் என் காண்பர்,
சிலைதனைவிட்டு உன்னுட் சீவனைத் தேடாதோர் வேமா!''

'' கற்களைக் கொண்டு வந்து சின்னபின்னமாக்கி
சிற்பிசெய் திட்ட பிம்பம் சிறந்ததாய் கோயி லுள்ளே
பொற்புற நாட்டி என்றும் போற்றிடு மனித ருற்ற
சற்குணம் என்னவென்று சொல்லுவேன் வேம மேலோய்''

சிலைதனைப் பதுமை செய்து செகத்துள்ளோர் புகழவைத்து
அலகிலா பூசை செய்வோர் அறிவிலா மாந்தர் இந்த
உலகுறும் பிராணிதன்னில் உண்மையாய் சிவனும் நிற்க
அலைதல் ஏன் பிராணி தன்னில் அன்புறாது இவர்கள் வேமா

என்றெல்லாம் கேட்கிறுர். அவசியமற்ற அர்த்தமற்ற காரியத்திலே ஈடுபடும் மக்கள் அறநெறி அறியாதிருப்பது கண்டு வெகுண்ட வேமன்னா.

கறவனற் கோயிற்சென்றுங் கவலை புரிதலன்றித்
திறமுறும் புத்தி கொண்டு தேவனைப் பாரான்.''

என்றும் எச்சரிக்கிறார்.

இங்ஙனம் விவேகமற்று வீணாட்டத்திலே, மக்கள் ஈடுபட்டு பாழ்படுவதன் காரணம் என்னவென்று வேமன்னா சிந்திக்காமல் போகவில்லை. ''தீர்த்தமாடினால் திருஅருள் கிடைக்கும். யாத்திரை செய்தால் மோட்சம் கிடைக்கும், கோயிலிலே சென்று உருவ வழிபாடு செய்தால் கோரிய பலன் கிடைக்கும்'' என்றெல்லாம் பாமர மக்களைப் பூசுரர் தூண்டி விட்டதாலேயே, மாந்தர் இந்த மயக்கத்தில் வீழ்ந்தனர் என்பதைக் கண்டறிந்து அத்தகையவர்களைக் கண்டித்திருக்கிறார்.

''பதியினில் பலரும் கூடிப்பல மந்திரங் கூறி வாழ்த்தி
சதிபதி என்ன உள்ளம் சம்மதத்தாலே சால
விதிகளை அறிந்து சேர்க்க விதவையாய் போவதென்னோ?
மதியின லாயின் இது மாமோச மாகும் வேமா.''

விதியின் போக்கை உணர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு திருமணத்துக்குப் பொருத்தம் பார்த்து வைக்கிறார்களே, அவர்கள்

ஜாதகம் பார்த்து ஏற்பாடு செய்கின்ற கலியாணம், செய்து கொண்டவர்களிலே எவ்வளவோ பேர் விதவைகளாகி விடுகிறார்களே, ஏன் என்று எண்ணிப்பார், ஆராய்ந்து பார்த்தால் இது மகாமோசம் என்பதைத் தெரிந்துகொள்ளலாம் என்பதே மேலே உள்ள பாடலின் கருத்து.

பாடுபடும் குலத்தைப் பழிப்பவர்களைவிட உழைக்கும் இனமே மேலானது என்று கூறுகிருர். அம்மட்டோ தீண்டாதார் என்று ஓர் கூட்டத்தினரை கூறிக்கொடுமை செய்வதைக் கண்டு மனம் நொந்து வேறு பாடல்களைப் பாடுகிறார்.

'' ஏற்றத்தாழ்வு என்று உள்ளத்தில் எண்ணி எந்நாளும் தக்க
ஏற்றத்தாழ்வு என்று உள்ளத்தில் எண்ணி
தூற்றுவார் பறையா கிட்டேல் 'தூரப்போ' என்று பாரில்
சாற்றிடின் இவர்கள் நன்மை சார்வரோ, வேம மேலோய்.''

''பறையரைக் கண்டு கண்டு பல நிந்தை சொல்வதென்ன?
முறையறும் இந்த வார்த்தை மொழிகின்ற மாந்தர் தாமும்
பறையரும் ஒன்றே யாவர், பண்போடும் இவர் உள்ளத்தில்
உறைதலோடு ஒளிந்து நின்று ஊரைப்பவன் வேமா.''

யாவரும் ஒன்று என்ற கொள்கையைக் கூறுவதோடு நிறுத்தவில்லை.

வேமன்னா உயர்குல உரிமை பேசியவர்களைத் தாக்கியபோது ஆச்சரியமாகத்தான் இருந்திருக்கும். ஆனால்! வேமன்னா, தன் வார்த்தையை, ஆராய்ந்து பாராது அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறவில்லை. ''யார் எதைச் சொன்னாலும் கேட்கும் தலையாட்டியாக வேண்டாம். ஆர அமர யோசித்துப்பார். அறிவை துணைக்கு அழை'' என்றும் நயவுரை கூறினார்.

கேளுங்கள் இந்தக் கவிதையை.

'' கேட்டிடு பலர் எதைச் செப்பினும்
கேட்ட உடனே துரிதம் கொளேல், கேள் விபரங்கள்
கேட்டு அதன் விபரம் அறிந்ததன்
கேட்குதல் எவன், அவனே மனிதன் கேட்டியோ வே மே'

''மனிதன் சிந்தித்து முடிவுக்கு வரவேண்டும். சந்தேகம் இருந்தால் தெளிவு கேட்க வேண்டும். இவர் கூறுவதைக் கேட்கக் கூடாது. அவர் சொல்வதைக் கேட்கக்கூடாது என்று எண்ணலாகாது. **எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு** என்பதுணர வேண்டும். கோல்முன் கூத்தாடும் குரங்கு, அங்குசத்துக்கு அடங்கும் யானை, கடிவாளத்திற்குக் கட்டுப்படும் குதிரை, கயிற்றுக்கு அடங்கும் எருது, எலும்புதுண்டுக்கு அடிமைப்படும் நாய் மிருகங்களின் சுபாவம். ஆசை பயம் இரண்டிலே எதிலேனும் ஒன்றுக்கு கட்டுப்பட்டுக் கிடப்பது; பகுத்தறிவு கிடையாமையால்! மனிதா நீயும் அப்படி இராதே; சிந்தித்துப்பார். ஆராய்ந்து முடிவு செய்!'' என்று அறிவுறுத்திஞர் வீர வேமன்னா.

★★★

குரலப்பர் மாறிவிட்டார்

''சேட் கங்காரம் பெரிய மோசக்காரன்- ஊர் சொத்தை அடித்து உலேயில் போட்டுக் கொள்கிருன்.- கசக்கிப் பிழிந்து காசு திரட்டு கிறான் - நமது கரும்புக்கொல்லையில் தன் காளையைவிட்டு மேயவைத்துப் பாழாக்குகிறான். - நமது தோட்டத்து அரும்புகளைக் காலால் மிதித்து அழிக்கிறான். கனி குலுங்கும் தோட்டத்திலே கடுவனை ஏவுகிறான் - சேச்சே! அவனுடைய அக்கிரமத்துக்கு ஒரு அளவே இல்லை! அவனுடைய ஆதிக்கத்துக்கு, அட்டகாசத்திற்கு நாம் ஆட்பட்டிருக்க வேண்டும். நம்மவர்களிடம், சேட் கங்காராமுடைய கெடுமதியை எடுத்துச் சொல்லி அவர்களுக்கு ரோஷமும், மானமும் ஏற்படச் செய்யவேண்டும். இதிலே காலதாமதமே கூடாது, காரியம் அடியோடு கெட்டு விடுவதற்குள் நாம் கடமையைச் செய்தாக வேண்டும்.''

எனக்குக் களிப்பு சொல்லி முடியாது. ஏனெனில் சேட் கங்காராமின் கொட்டம் அடக்கப்பட வேண்டும் என்பதிலே எனக்கு ஏற்கனவே ஆர்வம் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. என்னைப்போலவே எண்ணுவதுடன், என்னைவிட மிகுதியாக ஆர்வம் காட்டி அனைவருக்கும் எழுச்சியூட்டும் முறையில் வீரம் பேசிட, கூவம் குரலப்பன் வந்தது களிப்பு கண்டதால், ஏற்படாமலிருக்குமா.

சேட் கங்காராமுக்கும் கூவம் குரலப்பனுக்கும் நேசமும் பாசமும் அதிகம் என்று எண்ணிக் கொண்டிருந்தால் நம்முடன் கூடிப்பணியாற்ற குரலப்பன் வரமாட்டார் என்று நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில் இந்த ஆர்வமூட்டும் பேச்சு எழும்பியது; சுவையுள்ள பேச்சு, பயன் மிகுதியும் ஏற்படும் என்றுதான் நம்பினேன்.

களத்தூரானும், கூவம் குரலப்பனும் ஒன்றுகூடி விட்டார்கள். இனி ராட்டினம் ராஜப்பன் மட்டுந்தான் சேட் கங்காராமுக்கு துணை-என்று பலரும் பேசினர்.

சேட் கங்காராமின் கொட்டம் அடக்கப்பட வேண்டிய அவசர அவசியத்தை விளக்க, கூவம் குரலப்பனுடன் நான் கூட்டுப் பணியாற்றி வந்தேன். நாட்கள் உருண்டோடின. களத்தூரான் சொல்லுவதைத் தான் குரலப்பனும் சொல்லுகிறார் - இத்தனைக்கும் குரலப்பன், சேட் கங்காராமுடன் பல காலம் பழகியவர் தான்!- இருவரும் சேர்ந்து இப்போது சேட் கங்காராமின் குட்டு உடைக்கிறார் என்று அனைவரும் பேசிக் கொண்டனர்.

நான் சேட் கங்காராமின் ஆதிக்கம் ஒழிய வேண்டும் என்று சொல்லுவேன். போதாது! நண்பர் களத்தூரான் சொல்லுவது போதாது - ஆதிக்கம் மட்டுமல்ல, சேட் கங்காராமே இங்கிருந்து ஒழியவேண்டும் என்று குரலப்பர் முழக்கமிடுவார், எனக்கு ஒரே குதூகலம்.

சேட் கங்காராம் கூடக் கலங்கிப்போனார் என்ற கேள்வி.

இந்த களத்தூரான்தான், ரொம்ப நாளாக என்னை எதிர்த்துப் பேசுகிறான்- என்னிடம் சிரித்துப் பேசி வந்தான் குரலப்பன். இந்த ஆசாமியுமல்லவா களத்தூரானுடன் கூடிக்கொண்டான். போறாத வேளை! - முணுமுணுத்துக் கொண்டானாம் சேட்.

சேட் கங்காராமை மட்டுமல்ல, என்னுடன் கூடிக்கொண்டு குரலப்பர் கோயிலூரான் கொடுமை மடத்தூராரின் மடமை இவைகளையெல்லாம் கண்டித்துப் பேசுவார்.

இங்ஙனம் இருந்துவந்த குரலப்பர், திடீரென்று ஒருநாள் சேட் கங்காராமை கண்டித்துப் பேசுவது வீண் அனாவசியமாகக் குரோதம் மூட்டும் காரியமாகும். சேட் கங்காராம் அக்கிரமம் செய்கிறார் என்று கதைக்கும் களத்தூரான், கோவையான், கோங்கூரான், கொல்லத்தான் ஆகியோரின் 'குரலாம்'- ஆமாம்! 'குப்புறப்படுத்தும் கூறுவேன்'- என்று பேச ஆரம்பித்தார், நான் திகைத்துப் போனேன்.

குரலப்பரின் இந்த மன மாறுதலுக்கு காரணம் புரியவில்லை.

சேட் கங்காராமின் சேட்டைகள் அப்படியே இருந்தன. சொல்லப் போனால் வளர்ந்து வந்தன. எனினும் குரலப்பரின் பேச்சும் அடியோடு மாறிவிட்டது.

கோயிலூரார் மீது கோபித்துக் கொண்டு இந்த களத்தூர்க் கும்பல் காட்டூர் செல்கிறார்கள் என்றார்.

மடத்தூரானிடம் மல்லுக்கு நிற்கும் இந்த மாபாவிகள், வேற்றூரானிடம் சேர்ந்து கொண்டார்கள் என்றார். எனக்கு என்ன காரணம் இந்த மாறுதலுக்கு என்பதே புரியவில்லை; திகைத்துப் போனேன்.

களத்தூரானும் குரலப்பனும் பிரிந்துவிட்டார்கள் என்று முப்புரியானும் சேட்டும், பேசிக்கேலி செய்தனர்... கைகொட்டி சிரித்தார்.

சில நாள் திகைப்பு இருந்தது- பிறகு சரி, இடையே கிடைத்த உதவி, இம்மட்டும் தான் நிலைத்தது. இனி நமது வேலையைத் தொடர்ந்து நாம் செய்ய வேண்டியதுதான் என்று உறுதி கொண்டேன் - பணியில் ஈடுபட்டு வரலானேன்.

சேட் கங்காராமை எதிர்த்து ஒழிக்க வேண்டும் என்று முழக்கமிட்டு வந்த குரலப்பன் மாறி விட்டதற்கான காரணம் மெள்ள மெள்ளத்தான் தெரிந்தது.

சேட் கங்காராமை பலரும் எதிர்க்கிறார்கள் - பத்தோடு பதினொன்றாக இருந்து கொண்டு நாமும் எதிர்த்தால் நாம் வெளியே தெரிவது எப்படி! ஆகவே சேட்டுடன் கூடிக் கொள்வோம் - அப்போது பலருடைய பார்வையிலும் பளிச்செனப்படலாம் என்பது ஒரு காரணம்!

மற்றொன்று சேட் கங்காராம் தன்னுடைய கொல்லைக்காவல் வேலைக்குக் குரலப்பரையே நியமித்து விட்டார்.

கொல்லைக்காவல் வேலை என்பது வெளியே தெரியாம லிருக்க வேண்டும் என்பதற்காக குரலப்பர் ''எல்லைக் காவல்'' என் வேலை என்று சொல்லிக்கொண்டு வருகிறார்.

எல்லை எதுவானாலும் எனக்கென்ன, என் கொல்லைக்குக் குரலப்பர் காவல் இருக்கிறார் - தொல்லை விட்டது என்று சேட் கங்காராம் நம்பிக்கொண்டிருக்கிறார்- காவல் கடும்புயலாவது தெரியாமல்.

குறிப்பு - குறும்பென்றும் தெரியவில்லை, புத்தி கூர்மை யென்றும் தெரியவில்லை. ஆபீஸ் சிறுவன் இதையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறுகிறான்.

''முதலாளித்துவத்தின் சுரண்டற் கருவிகளான பாங்குகள், இன்ஷுரன்ஸ் கம்பெனிகள், கப்பல் தொழில் ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவைகளில் கூட வடநாட்டு மூலதனம் முற்றுகையிட்டுள்ளது.

தமிழகத்தின் பெரிய பெரிய தொழில்கள், வாணிகம் ஆகியவற்றில் மட்டுமின்றி சினிமா, சிற்றுண்டிச் சாலை, நகைக்கடை, கடிகாரக் கடை, செருப்புக்கடை, உடைக்கடை, போன்ற சின்னச் சின்ன வாணிப நிலையங்களை கூட வடநாட்டார் நடத்தி வருகின்றனர். தமிழன் என்ற உணர்ச்சியயோடு, சென்னை 'சீன' பசாரில் ஒரு முறை சுற்றிப் பார்த்தால், இந்த உண்மை விளங்கும்; அப்போது ஆத்திரத்தால் நமது செந்நீர் கொதிக்கும்; துக்கத்தால் கண்ணீர் பெருகும். இதனல்தான் நாம் வடநாட்டு ஆதிக்கம் ஒழிய வேண்டும் என்கிறோம்'' - தமிழ் முரசு.

இதற்கும் நான் எழுதியதற்கும் என்னடா சம்பந்தம் பயலே! என்று நான் கேட்கிறேன்.

வேளைக்கு ஒரு விதமாக மாறிவிடுபவர்களைப் பற்றி வேடிக்கை கதை எழுதினீர்களே! இதோ நிஜமாகவே ஒரு சம்பவம். ம.பொ.சி.யின் முன்னுள் கருத்து அவருடைய முரசு இதழில் இருப்பது. இன்று அவருடைய கருத்துதான் தெரியுமே நமக்கு. ஆகவே தான் இதைக் கொடுத்தேன் என்கிறான்.

★★★

பாரதி பாதை

எட்டயபுரத்திலே, தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியாருக்கு, அழகிய மண்டபம் அமைத்துச் சீரிய முறையில் விழா நடத்தினர்.

பரங்கியாட்சியை ஒழித்தாக வேண்டுமென்ற ஆர்வத்தீ கொழுந்து விட்டெரியும் உள்ளத்துடன் வாழ்ந்தவர் பாரதியார். தாயகத்தில் உலவத் துரைத் தனத்தார் தடைவிதித்ததால் புதுவையில் தங்கிப் புதுப்பாதை வகுத்தார் பாரதியார்.

அவருக்குக் 'காணிக்கை' செலுத்த ஆட்சி அலுப்பையும் பொருட்படுத்தாது, ஆச்சாரியார் வந்தார்- ஆயிரக்கணக்கான தமிழர்கள் கூடினர். இசைவாணர்கள்- கலைவாணர்கள்- எழுத்தாளர் கள் பற்பலர்.

'கல்கி' ஆசிரியர் இப்பணியினைத் திறம்பட நடத்தி முடித்தார். விழாச் சொற்பொழிவுகளில், நாவலர் பாரதியார், சிவஞான கிராமணியார், ஜீவானந்தம், நாமக்கல்லார், எழுத்தாளர் சங்கத் தலைவர் பெ.தூரன் ஆகிய பலரும் கலந்து கொண்டனர்.

நண்பர் சிவஞானம் பெருமிதத்துடன் கூறினார். 'அதிகாரமற்ற கரம் அஸ்திவாரக்கல் நாட்டுகிறதே என்று முன்பு ஆயாசப்பட்டேன்.

இன்றோ, ஆளும்கரம், மணி மண்டபத்தைத் திறந்து வைத்து கண்டு அகமகிழ்ந்தேன்'' என்று. உண்மை, வங்கமாளும் ஆச்சாரியார் மணிமண்டபத்தைத் திறந்தார். வறுமையாளராகக் கவனிப்பா ரற்று, நாடு கடத்தப்பட்டு, நலிவுற்றிருந்த பாரதியாருக்கு நாடு முழுவதும் கொண்டாடும் அளவினதான விழா நடந்தேறியது.

பாரதியாரின் கவிதைத்திறன் அதனாலாய பயன், மறுக்க முடியாதன. பாரதியாரின் தனிப்பண்புகளை, அவரை அந்நாளில் அறிந்தவர்கள் கூறிடக் கேட்டால், புது உலகு காண விழைபவர்களின் அகமெல்லாம் மகிழும். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், பாரதியாரைக் குறித்துப் பேச ஆரம்பித்தால், அவர்களுடைய கண்களில் ஓர் புத்தொளி தோன்றிடக் காணலாம்.

பாரதியாரின் காலம் வேறு; இக்காலம் வேறு. எனவே இன்றுள்ள எண்ணங்களை எல்லாம் அவர் அன்றே ஆய்ந்தறிந்து கூறியிருக்க வேண்டுமென்றோ, நாம் எடுத்துரைப்பதும், வரலாற்று உண்மையான ஆரிய திராவிடப் பிரச்சினையை அவர் கூறியிருக்க வேண்டுமென்றோ நாம் எதிர் பார்ப்பதற்கில்லை. அவருடைய பாடல்களிலே பல இடங்களில் அவர் ஆரியர் என்ற சொல்லை உயர்த்தியேதான் பாடி இருக்கிறார். அந்தக் காலம் நாமெல்லாம் பள்ளிகளில் 'ஆரிய மத உபாக்கியானம்' எனும் ஏட்டினைப் பாடமாகப் படித்தகாலம், நம் தலைவர். தமிழ் நாட்டுக் காங்கிரசிலே பெருந்தலைவராக இருந்த காலம்.

ஆரியர் - திராவிடர் பிரச்சினை, ஓர் ஆராய்ச்சி வரலாறு. இதனை நாம் பாராதியாரிடம் காண்பதற்கில்லை.

ஆரியம் என்பது, ஓர் வகைக் கலாச்சாரம் - வாழ்க்கை முறை.

திராவிடம், அதுபோன்றே. தனியானதோர் வாழ்க்கை முறை.

இது இன்று விளக்கமாக்கப் படுவதுபோல, பாரதியாரின் நாட்களில் கிடையாது.

பல ஜாதி- பல தெய்வ வணக்கம் - பற்பல விதமான மூட நம்பிக்கைகள் - தெய்வத்தின் பெயர் கூறித் தேசத்தின் பொருளைப் பாழாக்கும் கேடு- இவைதாம் ஆரியம்!

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' இது திராவிடம்.

இரண்டிலே எது நல்லது? எந்தக் கலாச்சாரத்துக்கு நீர் ஆதரவு தருவீர்? என்று பாரதியாரைக் கேட்க, யாருக்கும் வாய்ப்பில்லை. கேட்டிருந்தால், நிச்சயமாக அவர் திராவிடக் கலாச்சாரத்தையே

விரும்பியிருப்பார், அவருடைய பாடல்களில் - பிற்காலப் பகுதி களில் - இந்தச் சூழ்நிலை இருக்கக் காணலாம்.

பாரதியார் விஷயத்தில் பகுத்தறிவுவாளர்களுக்குள்ள மதிப்பு, பரம்பரை வழக்கப்படி அவர் தேவியின் வரப்பிரசாதம் பெற்றதாலோ, முனிவர் அருளாலோ, பஞ்சாட்சர உபதேசப் பலனாலோ, பாட ஆரம்பித்தார் என்று அருட்கவியாக்காது விட்டார்களே, அதுதான்.

நாமகளைத் துதித்தார் - நாலைந்து ஆண்டு - பயன் இல்லை பிறகோர் நாள், 'அம்மே! இனி நான் உயிர் வாழேன்' என்று கூறி, நாவை அறுத்துக் கொள்ளக் கிளம்பினார்; உடனே களுக்கென ஓர் சிரிப்பொலி கேட்டது. அம்மை பிரசன்னமாகி, 'பாலகா! பாடு!' என்றாள். உடனே அவர் பாடலானார். பாடினார், பாடினார், பார் முழுதும் பாடல் பரவும் வரை பாடினார் என்று, பாரதியார் புராணம் காட்டாதவரையில், நமக்கெல்லாம் மிகக் களிப்பு. நமக்குக் களிப்பு என்பது மட்டுமல்ல, பாரதியாருக்கே உண்மையில் பெருமை, அவர் நாமகள் பூமகள் அல்லது வேறோர் தேவனின் அருள் பெற்றவரல்ல; அவர் ஓர் கவி, சிந்தனையில் பட்டதைச் செந்தமிழில் கவிதை யாக்கினவர் என்பதனால் தான்.

கூடுமானவரையில், பாரதி விழாச் சொற்பொழிவாளர்கள் அவருடைய அருமை பெருமைகளை எடுத்துரைக்கையில் 'புராணம்' பேசாதிருந்ததுபற்றி நாம் மகிழ்கிறோம், அன்பு ஆசிரியர் மட்டும், பாரதியாரை ஓர் 'முனிவர்' என்று கூறினார். ஆனால் அதற்கும் அவர் வழக்கமான பொருள் கூறத் துணியார்.

பாரதியாருக்குள்ள பெருமை, முதலில் இது. மற்றோர் பெருமை, அவர் தம்முடைய நாட்களிலே, மற்றவர்களைவிட வேகமாக முன்னேற்றக் கருத்துக்களைப் பாடி அதன் பயனாக அவருடைய சமூகத்தாராலே வெறுக்கப்பட்டு ''பார்ப்பன மேதை கள்'' என்போரால் அலட்சியப்படுத்தப்பட்டு, வறுமையில் வாடி, அன்னிய ஆட்சியாளரின் அடக்குமுறைக்கு ஆளாகி, அல்லலை அனுபவித்து, அந்த அல்லலால் மனம் உடையாமல், நோக்கம் மாறாமல் அரைக்க அரைக்க மணக்கும் சந்தனமானாரே, அந்தப் பண்பு.

அவருடைய பண்பு ஜாதிக் கட்டுகளை உடைத்தெறியக் கூடியதாக இருந்தது என்பது அவருடைய கவிதைகளிலே, பல ரகமான இடங்களிலே தெரிகிறது.

அவருடைய நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் அந்த நாட்களில் நையாண்டி செய்யப்பட்டது. இன்று, அவருக்கு மகாகவி என்ற பட்டம் தரவும் பளிங்கு மண்டபம் கட்டவும் தமிழகம் முன்வந்தது! கவிஞரைப் போற்றும் மாண்புக்கும் அதைக் கவர்ச்சிகரமான முறையிலே நடத்திக் காட்டிய கல்கியின் திறமைக்கும், நமது பாராட்டுதல்.

''பாரதி மண்டபத்தை, விழாவுக்காகப் போடப் பட்டபந்தல் மறைத்துக் கொண்டிருக்கிறது'' என்று ஆச்சாரியார் பேசினார்.

மண்டபத்தைப் பந்தல் மறைக்கிறது!

மண்டபத்தை மட்டுமல்ல! தேசீயக் கவிதைகள் என்ற ஒரு பகுதியை மட்டுமே பெரிதாக்கி நாட்டிலே பரப்பிக் காட்டுவதால் பாரதியாரின் முழு உருவம், மக்களின் கண்களுக்குத் தெரிய வொட்டாதபடி மறைக்கப்படுகிறது!

பாரதியார் தோத்திரப் பாடல்கள் பல பாடினார். ஆனால் தேவார திருவாசகமும், திருவாய் மொழியும், பாடியான பிறகு பாடினார். எனவே அவருடை ய கவிதைகளிலே, தோத்திரப் பகுதி முக்கியமோ, அவருடைய பெருமைக்குச் சான்றோ ஆகாது, வைதீகர்களின் நோக்கத்தின் படியே கூட.

பாரதியார் வேதாந்தப் பாடல்கள் பல பாடியுள்ளார், ஆனால் அவருக்கு முன்னர் தாயுமானாரும் வள்ளலாரும் பாடிவிட்டனர். எனவே அந்தப் பகுதியும் பழம் பதிப்புப் போன்றதுதான்.

அவருடைய நாட்டுப்பற்று பாடலே, அவருடைய கவிதை களில் மிக முக்கியமான - மற்றக் கவிகள் பாடாத காலத்திற்கேற்ற பலன் அளித்த பகுதி.

விடுதலைப்போர் புரிய அவருடைய கவிதைகள் தக்க கருவியாயின. எனவே தான் வெள்ளையன் வெளியேறிய விழாவுக்கு அடுத்ததாக, பாரதி மண்டபத் திறப்பு விழா நடைபெற்றது.

ஆச்சாரியார் சொன்னார், ''அன்னிய ஆட்சியை எதிர்த்து இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பல கவிகள் பாடல்கள் இயற்றினர். தமிழர்களுக்குத் தமிழ்க் கவிதானே பயன்பட முடியும்? பாரதியார் அந்த வகையிலே தமிழருக்குப் பயன் பட்டார்'' என்று.

ஆகவே பாரதியாரின் பக்திப் பாடல் வேதாந்தப்பாடல் இவைகளை விட, நாட்டுப்பற்றுப் பாடலே மகத்தான பலன் தந்தது; விழாக் கொண்டாடின அன்பர்கள் இந்த பகுதியைத் தான்

விளக்கினார்கள் விஸ்தாரமாக. மதுரை முஸ்லீம் தோழர் ஒருவர், ''பாரதியாரின் பாடல் ஆங்கிலேயரை ஒட்டிய அணுகுண்டு'' என்று கூறினார். தமிழகத்திலே காங்கிரசின் வெற்றிக்குப் பாரதியார் பாடல் மிகமிகத் தாராளமாகப் பயன்பட்டது, பயன்படுத்திக்கொண்டு பாராளும், அளவு உயர்ந்த பலர், பாரதியாரை ஏதோ ஓர் சமயத்திலே மட்டும் எண்ணுவதுடன் இருந்தனர். இக்குறையைப் போக்கி கவிஞரின் நினைவுக் குறியாக ஓர் அழகிய மண்டபத்தை அமைத்தார் கல்கி.

ஆச்சாரியார் சொன்னரே பந்தல் மண்டபத்தை மறைக்கிறது என்று. அதுபோல, பாரதியாரின் தேசீயப் பாடல்களை மட்டுமே பரப்பிய காரணத்தால், நாட்டவருக்குப் பாரதியாரின் முழு உருவமும் தெரியவில்லை! இனியாவது தெரியுமா என்றால், தெரியச் செய்தாலொழியத் தெரிவதற்கில்லை என் றே கூறலாம்.

''ஆடுவோமே பள்ளு பாடுவோமே!''

''வந்தே மாதரம் என்போம்''

''செந்தமிழ் நாடென்னும் போதினிலே''

''தாயின் மணிக்கொடி பாரீர்''

''ஜெய ஜெய பாரத''

இப்படிப்பட்ட பல தேசீயப் பாடல்களை, நாட்டு மக்களின் செவிக்கும் சிந்தனைக்கும் கொண்டு வந்துள்ளார் பாரதியார். அவ்வளவுதானா? பாரதியாரின் முழு உருவம், அதுவல்ல! அடிமை நிலை, போக வேண்டும் என்ற கோபநிலையில் உள்ள பாரதி அது. ஆனால் அதைத் தாண்டி, நாட்டு உள் நிலை, மக்கள் மனநிலை இவைகளைக் கண்டு மனம் நொந்து வேதனைப்படும் பாரதி இருக்கிறார்! மக்களின் மந்த மதியினைக் கண்டு, அவர்களைத் திருத்த வேண்டும் என்ற ஆவல் கொண்டு துடிக்கும் பாரதியார் இருக்கிறார். நாடு எப்படி எப்படி இருக்கவேண்டும்? சமூகம் எவ்வண்ணம் அமைய வேண்டும்? என்ற இலட்சியம் கூறும் பாரதியார் இருக்கிறார்! தேசீயப் பாரதியின் உருவம் இத்தனை பாரதிகளை மறைக்கிறது. ஆச்சாரியார், பந்தல் மண்டபத்தை மறைக்கிறது என்று கூறினாரே அதுபோல!

பெரிய பந்தல் விழாவுக்காக, மண்டபமோ கவியின் பெருமைக்குரிய சின்னம். விழா முடிந்ததும் பந்தலைப் பிரித்து விடுவார்கள் - மண்டபம் நின்று அழகளிக்கும். அதுபோல, பாரதியாரின் 'தேசீயக் கவிதை' அன்னியரை ஓட்டும் அரும்

பணிக்காக மட்டுமே அமைவது. அந்தக் காரியம் முடிந்தால், இனி அந்தப் பந்தலுக்கு அவசியமில்லை. அவசியமில்லாததால் அது எடுபடும். அது எடுபட்ட பிறகுதான். பாரதியாரின் மனம் தெரியும். பாரதியாரின் முழு உருவம் தெரிய, அவருடைய கவிதா சக்தியின் முழுப் பயனையும், பெற அப்போதுதான் முடியும்.

இனியும் மேடைகளில் ஏறி, ' தாயின் மணிக்கொடி பாரீர்'' போன்ற தேசபக்திப் பாடல்களை மட்டுமே பாடிப் பயனில்லை.

தாயின் மணிக்கொடி பார்க்கிறோம்; இங்கே காயும் வயிற்றையும் காண்பீர் என்று, மக்கள் முழக்க மிடுவர்! எனவே, எந்தப் பகுதியை மட்டும் அதிகமாகப் போற்றி நாட்டுக்கு எடுத்துரைத்து வந்தார்களோ, அந்தத் தேசீயப் பாடல் பகுதிக்குள்ள பயனும், ஜொலிப்பும் இனி இராது! ஆகவே, பாரதி பயன் இல்லையா? அல்ல, அல்ல! பயனுள்ள பகுதி, பலரறியாப் பாரதி! மறைக்கப்பட்ட பாரதி இனிதான் மக்களுக்குத் தெரியவேண்டும் . தேசீயக் கல்விக்கு அப்பால் நின்றார் அந்தப் பாரதி! அந்தப்பாரதி ஆங்கிலேயனை ஆரியப் பூமியிலிருந்து விரட்டும் பாரதி மட்டுமல்ல! நாட்டைவிட்டு கேட்டினை எல்லாம் ஓட்ட வேண்டுமென்று, கூறும் பாரதி! மேடைகளிலே இதுவரை நிறுத்தப்படாத பாரதி! தேசபக்தர்களின் நாவிலே நின்று இதுவரை நர்த்தனமாடாத பாரதி! மறைந்திருக்கிறார். பொன்னாலான பெட்டிக்குள் முத்து மாலை இருப்பது போல! அந்தப் பாரதியை நாம் அறிமுகப்படுத்தினால், விழாக் கொண்டாடியவர்களிலே பலருக்கு முகமும் அகமும் சுருங்கக்கூடும். ஆனால் அந்தப் பாரதி நெடு நாட்களுக்கு மறைந்திருக்க முடியாது. வெளிவந்தாலோ இன்று அவரை புகழ வந்திருக்கும் பலரே, நிந்திக்கக்கூடும்! இதோ அந்தப் பாரதி-பந்தலால் மறைக்கப்பட்டுள்ள மண்டபம்!

பண்டைப் பெருமை - பழங்கால மகிமை- அந்த நாள் சிறப்பு-என்றெல்லாம் பேசுகிறார்களே, அவர்களை நாம் எவ்வளவு கௌரவமாகத் தானே கேட்கிறோம். ''ஐயா! பழைய காலத்தைக் கட்டிப் பிடித்தழுகிறீரே இது சரியா'' என்று.

பலருக்குத் தெரியாத முழுப்பாரதி, அவர்களை இலேசில் விடவில்லை! மூடரே என்று அவர்களை விளிக்கிறார் அவர்களை,

''முன் பிறந்தோர் காரணத்தாலே
மூடரே, பொய்யை மெய்யெனலாமோ?
முன்பெனச் சொல்லும் காலமதற்கு
மூடரே ஓர்வரை துறையுண்டோ?

மூன்று கோடி வருடமுன்பே!
முன்பிறந்த தெண்ணிலாது புவிமேல்
மொத்த மக்களெலாமுனிவோரோ?
நீர் பிறக்குமுன் பார்மிசை மூடர்
நேர்ந்ததில்லை என நினைத்தீரோ?
பார் பிறந்து தொட் டின்று மட்டும்
பலபலப்பல பற்பல கோடி!
கார்பிறக்கு மழைத்துளி போல
கண்ட மக்கள னைவருள்ளேயும்
நீர் பிறப்பதன் முன்பு மடமை
நீச்சத்தன்மை இருந்தனவன்றோ?''

பழமை விரும்பி, என்ன எண்ணுவான் பாரதியாரைப் பற்றி?

''சென்றதினி மீளாது மூடரே நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர்; சென்றதனைக் குறித்தல் வேண்டா
இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நெஞ்சில்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக்கொண்டு
தின்றுவிளை யாடி இன்புற் றிருந்து வாழ்வீர்.
தீமையெல்லாம் அகன்று போம் திருப்பி வாரா.''

மற்றுமோர் சாட்டை, வெந்ததைத் தின்று வாயில் வந்ததைப் பேசுபவர்களுக்கு வகையாகத் தருகிறார் பாரதி ''சென்றது இனி மீளாது'', மூடரே! மனுதர்மம் இருந்ததே! அரசுகளில் ஆதிக்கம் இருந்ததே! நமது வலக்கரத்திலே அக்கினி இருந்ததே! நம்மைக் கண்டதும் மற்றவர்களுக்கெல்லாம் பயபக்தி இருந்ததே! இவையெல் லாம் இன்று இல்லையே! மீண்டும் கிடைக்கப் பெறுவோமா? என்றெல்லாம் எண்ணி ஏங்காதீர்! ''சென்றது இனி மீளாது!'' என்று திட்டமாகக் கூறுகிறார். ''கூறுகிறேன் கேளுங்கள் மூடர்களே!'' என்று இடித்துரைத்துப் பேசுகிறார். இந்தப் பாரதி மேடையிலே தோன்றாத பாரதி!

'' செத்தபிறகு சிவலோகம் வைகுண்டம்
சேர்ந்திடாலெமென்றே எண்ணியிருப்பர் பித்தமனிதர்''

★★★

''சாதிக்கொடுமைகள் வேண்டாம்- அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்''

★★★

''அரும்பும் வியர்வை உதிர்த்தும் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே
பெரும்புகழ் உமக்கே இசைக்கின்றேன் நான்
பிரமதேவன் களையிங்கு நீரே''

★★★

''பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லை என்றால்
பின்னிந்த உலகிலே வாழ்க்கை இல்லை!''

தேசியக் கவிஞரால் மறைக்கப்பட்டுள்ள புரட்சிக் கவிஞர் தெரிகிறார். இன்னும் தெளிவாக!

''நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால் ''

என்று சோகிக்கிருர் பாரதி! ஏன் நிலை கெட்டுவிட்டது! தேசியக் கவியாக மட்டும் இருப்பின், பரங்கி பிடித்தாட்ட பாரதநாடு பரிதவித்தது என்று மட்டும் கூறுவார். ஆனால் பலருக்குத் தெரியவிடாதபடி மறைக்கப்பட்டிருக்கும் முழுப் பாரதி பேசுவதைக் கேளுங்கள்.

''அஞ்சி அஞ்சிச் சாவார் -இவர்
அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே!
வஞ்சனைபேய்க ளென்பார்-இந்த
மரத்திலென்பார் அந்த குளத்திலென்பார்!
துஞ்சுது முகட்டிலென்பார்! மிகத்
துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார்!
மந்திரவாதியென்பார் -சொன்ன
மாத்திரத்திலே மனக் கிலிபிடிப்பார்!
யந்திர சூனியங்கள்- இன்னும்
எத்தனை யாயிரம் இவர் துயர்கள்!''

★★★

சாடுகிறார், சாடுகிறார், மூட நம்பிக்கைகளை;

'' கொஞ்சமோ பிரிவினைகள்? -ஒரு
கோடி யென்றுல் அது பெரிதாமோ?
ஐந்துதலைப் பாம்பென்பான்- அப்பன்;
ஆறுதலை யென்று மகன் சொல்லிவிட்டால்,
நெஞ்சு பிரிந்திடுவார் பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்!''

இங்ஙனம் சமுதாயத்திலே உள்ள கேடுகளை - மனதிலேயுள்ள தளைகளை - மூடக் கொள்கைகளைத் தாக்குகிறார், தமது கவிதா சக்தியைக் கொண்டு!

'பாரதியாரா?' என்று ஆச்சரியத்துடன் நாடு கேட்கும். அவர் சொன்ன அத்தனையும் சொல்லப் போனால் ஆனால் அந்தப் பாரதியாரை அரும்பாடுபட்டு மறைத்திருக்கிறுர்கள்;

''பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே!''

என்ற ஒரு வரியைக்கூட அவர் சொன்னதாகச் சொல்ல அஞ்சி மறைத்தனர். அருந்தமிழ் நாட்டவர்தான் பாரதியாக அந்தச் சமுதாயத்தை மேலும் என்னென்ன கூறினுர் என்று தெரிந்தால் தானே, பாரதியாரின் முழு உருவம் தெரியும்?

''இந்நாளிலே பொய்மைப் பார்ப்பார்-அவர்
ஏது செய்தும் காசு பெறப்பார்ப்பார்!
பிள்ளைக்குப் பூ நூலாமென்பான்! -நம்மைப்
பிச்சுப் பணம் கொடெனத் தின்பான்!
பேராசைக் காரனடா பார்ப்பான்! - ஆனால்
பெரிய துரை என்னில் உடல் வேர்ப்பான்!
யாரானாலும் கொடுமை செய்வான்!- பணம்
அள்ளி இடவில்லையெனில் வைவான்!''

மகாகவி பாரதியின் வாக்கு, ''பேராசைக்காரனடா பார்ப்பான்!'' என்பது . மேடைகளில் கேட்டதுண்டா? பாரதி திறப்புவிழாக் கூட்டங்களிலே இந்தப் பாரதி தெரிந்தாரா? இல்லை! அவர் மறைந்து இருக்கிறுர். மண்டபம் பந்தலால் மறைக்கப் பட்டிருப்பது போல! விழா முடிந்தது! பந்தலும் பிரிக்கப்பட்டது; மண்டபம் தெரிகிறது என்பதுபோல, வெள்ளையர் வெளியேறும் விழா முடிந்தது! இனி தேசீயக் கவிதை அலங்காரத்தைக் கடந்து நிற்கும், பாரதி காண விரும்பிய புது சமுதாயம்.

''ஏழையென்றும் அடிமையென்றும்
எவனுமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்போர்
இந்தியாவில் இல்லையே!''

என்ற இலட்சியம் ஈடேறி நிலைபெற்ற சமுதாயம், மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கமில்லாத சமுதாயம், பழமை மோகத்தில் படியாத சமுதாயம், காசியில் பேசுவதை காஞ்சியிலுள்ளோர் கேட்பதற்கான கருவி செய்யும் சமுதாயம், அத்தகைய சமுதாயத்தைக் காண விரும்பிய பாரதி நிற்கிறார். ஆனால் அவரைப் பந்தல் மறைத்துக் கொண்டிருக்கிறது! அவரை நாட்டுக்கு தெரிய விடாதபடி செய்வதில் பலருக்கு இலாபம் இருக்கிறது. எனவே தேசீயக் கவி மட்டுமே தெரியவேண்டும் என்று எண்ணி ஏற்பாடுகள் செய்வார்! ஆனுல், அந்த எண்ணமும் ஈடேறுவதில்லை. மக்களுக்குத் தெரிய ஒட்டாது அவர்கள் மறைத்துவைத்துள்ள பாரதியார் உண்மையில் மறைந்துவிடவில்லை. அதோ பாடுகிறார் கேளுங்கள்.

''இருட்டறையில் உள்ளதடா உலகம் ஜாதி
இருக்கின்ற தென்பானும் ...''

இது பாரதிதாசன் குரல் அல்லவா? என்பீர்கள். ஆம்! பாரதிதாசன்தான், அவர்தாம், மணிமண்டபத்தை விட விளக்கமாக முழுப் பாரதியைத் தமிழகத்துக்குத் தரும் அரும் பணியாற்றுகிறார். அவரிடம் நாங்கள் முழு பாரதியாரைக் காண்கிறோம்; களிக்கிறோம்; வாழ்த்துகிறோம் .

''அச்சம் தவிர்
ஆண்மை தவறேல்
உடலினை உறுதி செய்
எண்ணுவ துயர்வு
ஏறுபோல் நட
ஒற்றுமை வலிமையாம்
ஔடதம் குறை
கற்ற தொழுகு
கால மழியேல்
குன்றென நிமிர்ந்து நில்
கூடித்தொழில் செய்
கைத்தொழில் போற்று
கொடுமையை எதிர்த்து நில்
சரித்திரந் தேர்ச்சிகொள்
சாவதற் கஞ்சேல்
சூரரைப் போற்று
சோதிடம் தனையிகழ்
தெய்வம் நீ என்றுணர்
தையலை உயர்வுசெய்
தொன்மைக் கஞ்சேல்
நினைப்பது முடியும்
நூலினைப் பகுத்துணர்

00350

நெற்றி சுருக்கிடேல்
பிணத்தினைப் போற்றேல்
புதியன விரும்பு
பேய்களுக் கஞ்சேல்
போர்த்தொழில் பழகு
முனையிலே முகத்துநில்
மேழி போற்று
யாரையும் மதித்துவாழ்''

இவை பாரதியாரின் புதிய ஆத்திச்சூடி! புதிய பாதை பாரதி பாதை! தேசிய மணி மண்டபத்தோடு முடிந்து விடுவதல்ல. அதற்கும் அப்பாலுள்ள சமதர்மபுரிக்குப் போவதற்கு அமைந்தப் பாதை; அந்தப் பாரதி பாதையை அமைத்துக் கொண்டிருக்கும் அரும்பணி யாற்றும் நாம் பாரதியார் பெற்ற சிறப்புக் கண்டு பெருமையடைவ துடன் பாரதியாரின் முழுஉருவமும் மக்களுக்குத் தெரியச் செய்யும் காரியத்தையும் மேற்கொண்டுள்ளோம், பாரதி காட்டிய பாதையை நாடு நன்கு அறியவேண்டும்! பரங்கியை ஓட்டுவது மட்டுமல்ல அது. நாட்டின் கேட்டுக்குக் காரணமாக உள்ள அனைத்தையும் ஓட்டிப் புதிய சமூக அமைப்பாக்கும் பாதை! அந்தப் பாரதி பாதையை நாம் போற்றுகிறோம்!

தமிழ் நூல் காப்பகம்
00350
தமிழ் நகர், விருத்தாசலம் - 606 001.

நான் கண்ட தலைவரும் கொண்ட தலைவரும்
பெரியார் ஒருவரே !

தமிழ் அரசி வெளியீடு